பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

சி. சுப்பிரமணிய பாரதி

பதிப்பு
டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

186

பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம் -

[இரு பாகங்கள் இணைந்தது]

சி. சுப்பிரமணிய பாரதி

பதிப்பு:
டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

வெளியீடு
ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்
2, மாடல் ஹவுஸ் லேன்,
சி. ஐ. டி. நகர்,
சென்னை - 600 035.

நூல் விவரம்

மகாகவி பாரதியாரின் 125ஆம் பிறந்த நாள்
தொடக்க ஆண்டை யொட்டி இந்த நூல்
மறு அச்சு செய்யப்பட்டது

முதற் பதிப்பு	:	முதல் பாகம் 1918 இரண்டாம் பாகம் 1920
மறு பதிப்பு	:	9 நவம்பர் 2004
மறு அச்சு	:	11 டிசம்பர் 2006
நூலாசிரியர்	:	சி. சுப்பிரமணிய பாரதி
நூலின் வடிவம்	:	1/8 டெம்மி
பக்க அளவு	:	416 பக்கங்கள்
அச்சுப் புள்ளி	:	11.5
அச்சுத் தாள்	:	18.6 கிலோ மேப் லிதோ
கட்டமைப்பு	:	கெட்டி அட்டைக் கட்டு
அச்சுக் கோப்பு	:	என்ட்ரஸ்ட் இன்ஃபோ ஸொல்யூஷன்ஸ் (பி) லிட், சென்னை - 600 018.
அச்சிட்டது	:	நாதன் & கம்பெனி சென்னை - 600 042

விலை : ரூ. 130-00

இந்த நூல்

பழைய - அரிய நூல்களை மறுபதிப்புச் செய்யும்

தமிழக அரசாணை

நிலை எண் 372, கல்வித் துறை, நாள் 20-4-1992-ல்

வெளியிடப்பட்ட திட்டத்தின்கீழ்

தமிழ்நாடு ஆவணக் காப்பக

க.எண். 4929 / ஆநூ / நாள் 20-10-2004

தேதியிட்ட அனுமதிக் கடிதப்படி மறுபதிப்புச்

செய்யப்பட்டுள்ளது.

காணிக்கை

பாரதியாரின் அருமையான புலமைத் திறத்திலும்
ஆழ்ந்தகன்ற அறிவுத் திறத்திலும்
பரிபூரண நம்பிக்கை வைத்து
பாரத ஜன சபையின் சரித்திரத்தை
எழுதத் தூண்டி ஊக்கப்படுத்திய
ஏ. ரெங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கு
இந்த நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.

மறு பதிப்பிற்கான
பதிப்புரை

என்னுடைய அறுபத்தைந்தாம் ஆண்டு பிறந்த நாளை யொட்டி மகாகவி பாரதியார் மொழிபெயர்த்து எழுதிய பாரத ஜன சபை (காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்) என்னும் மகிமை கொண்ட நூலை மறுபிரசுரம் செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்; அதை எனக்குக் கிடைத்த பாக்கியமாகவும் கருதுகிறேன்.

என் அருமை நண்பரும், பாரதி நூல்களைப் பதிப்பித்து வருகிறவருமான பாரதி ஆய்வாளர் சீனி. விசுவநாதன் அவர்கள் பதிப்பித்து வரும் கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் தொகுதிகளைப் படித்து வந்தபொழுது எனக்குள் ஓர் ஆசை பிறந்தது.

கால வரிசையிலான பாரதி படைப்புகளில் காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றியும், காங்கிரஸ் தலைவர்களைப் பற்றியும் நிறைய விஷயங்கள் இருப்பதைக் கண்டேன்.

நாட்டு மக்களிடையே சுதந்திர தாகத்தை ஊட்டிய காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பற்றியும், அந்த இயக்கத்திற்காகத் தம் உடல், பொருள், ஆவி - இவற்றை அர்ப்பணம் செய்த உத்தமத் தலைவர்களைப் பற்றியும் பாரதி எழுதி யுள்ளவற்றை மட்டும் தொகுத்து ஒரு தனி நூலாக வெளியிட்டால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நான் நினைத்தேன்.

என்னுடைய எண்ணத்தை நண்பர் சீனி. விசுவநாதன் அவர்களிடம் தெரிவித்தேன்.

அதற்கு அவர் "பாரதியார் காங்கிரஸ் சபையின் சரித்திரத்தை மொழிபெயர்த்து எழுதி யுள்ளார். 1885ஆம் ஆண்டு முதல் 1904ஆம் ஆண்டு வரைக்குமான இருபது வருடக் காங்கிரஸ் நடவடிக்கைகள் இரு பாகங்களாக வெளிவந்துள்ளன. ஆவணக் காப்பகத்தில் நூல் பிரதிகள் உள்ளன; நூல் பிரதிகளைப் பெற்று நீங்களே மறுபிரசுரம் செய்தால் நன்றாக இருக்கும்" என்று புதிய யோசனையைப் பதிலாகச் சொன்னார்.

அவருடைய பதிலில் எனக்குச் சமாதானம் ஏற்படவில்லை. பாரதி எழுதிய காங்கிரஸ் சரித்திரமும் கால வரிசையில் வெளிவருவதையே நான் விரும்பினேன்.

ஆனால், அவரோ விடாப்பிடியாகக் கால வரிசையில் காங்கிரஸ் சரித்திரம் இடம் பெற மிகவும் கால தாமதமாகும் என்றும், கால தாமதத்தைத் தவிர்க்கவும், நீண்ட காலமாகப் பாரதி ஆய்வாளர்களிடையே நிலவும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டியும் என்னையே பதிப்பிக்கும்படி வற்புறுத்திச் சொல்லிவிட்டார்.

எனக்கோ தர்ம சங்கடமான நிலை.

என்னுடைய குடும்ப நண்பர் 'தூர்தர்ஷன்' ஏ. நடராஜன் அவர்களிடம் இதைப்பற்றிக் கலந்து பேசினேன்.

அவரும் "சீனி. விசுவநாதன் சொல்வதும் நல்ல யோசனைதான். தயக்கம் வேண்டாம். உங்கள் வழக்கப்படி பிறந்த நாளின்போது, நூல் வெளிவருவதையே விரும்புகிறேன்" என்று சொன்னார்.

நானும் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல், பாரதி எழுதிய காங்கிரஸ் சரித்திரத்தைப் பதிப்பித்து வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

பாரத ஜன சபை நூலின் இரு பாகங்களையும் ஆவணக் காப்பகத்திலிருந்து பெற்றேன்.

நல்ல - பழைய நூல்கள் பொது மக்களைச் சென்றடைய வழி செய்யும் பொருட்டு, தமிழக அரசு அறிமுகப்படுத்தி யுள்ள மறுபதிப்புத் திட்டத்தின்கீழ் வெளிவரும் நூல் - பாரத ஜன சபை (காங்கிரஸ் மகாசபை சரித்திரம்) ஆகும்.

இந்த நூல் மற்ற நூல்களைப் போல்வது அன்று. நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட சரித்திரத்தை எடுத்துச் சொல்லும் நூல் ஆகும்.

காங்கிரஸ் சபை எப்படி உருவானது; அந்தச் சபையின் இலட்சியங்கள் யாவை என்பனவற்றை விளக்கும் ஆவண நூலும் ஆகும்.

இந்த நூல் மிகச் சிறப்பாக வெளிவர எல்லா வகையிலும் துணைபுரிந்த அருமை நண்பர் சீனி. விசுவநாதன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரிய நூலை வெளியிட எனக்கு அனுமதி யளித்த தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி சிறப்பு ஆணையர் அவர்களுக்கும், ஆவணக் காப்பக நூலக நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்மக்கள் இதுபோன்ற நல்ல நூல்களை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இளம் சந்ததியார் சரித்திரங்களை நன்கு படித்து, நாட்டுக்குத் தங்களாலான சேவைகளைப் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன். நன்றி.

அன்பன்

நல்லி குப்புசாமி செட்டி

முதற் பதிப்பின் முகவுரை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்தை நம் தாய்மொழியாம் இனிய தமிழ் மொழியில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல் எளிதான காரியமல்ல. ஆயினும், அக் காரியத்தைக் கூடிய வரையில் குற்றங் குறைகளின்றி நிறைவேற்றுவிப்பது நமது கடமை யென்றே கருதினோம்.

அவ்விதமே நிச்சயித்து அதைத் தொடங்குந் தறுவாயில் பாரத மாதாவின் அருளினால் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியின் அருமையான புலமையும், ஆழ்ந்த அறிவும் இக் காரியத்திற்கு உற்ற துணையாக அடையப் பெற்றோம். ஆகவே, இந் நூலை இயற்றும் பொறுப்பை அவர் மேற்கொண்ட பின்னர் பிரசுரிக்கும் கடமை மட்டில் நமக்கு ஏற்பட்டது. இச்சமயம் பாரத ஜன சபை சரித்திரத்தின் முதற் பகுதியைப் பிரசுரிக்கலானோம்.

இப் பிரசுரத்திற்குப் பிரத்தியேகமான முன்னுரை எழுதவேண்டிய அவசியமில்லை யென்றே நினைக்கிறோம்.

நமது நாட்டின் நன்மையை நாடும் எல்லோரும், நம்மவரில் நிரந்தர க்ஷேமத்தையும் நல்வாழ்வையும் கோரும் அனைவரும், இச் சரித்திரத்தைப் படித்து நம் ஆன்றோர் செய்து வந்த தேச சேவையை நன்குணர்ந்து, தாம் நடத்த வேண்டிய கடமைகளையும் ஆராய்ந்தறிந்து, நமது பாரத பூமி மேன்மேலும் சிறப்புற்றோங்குமாறு நடந்து கொள்ளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாரென்பதே நமது பிரார்த்தனை.

சுதேச மித்திரன் பத்திராதிபர்

பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

முதல் பாகம்

சுதேசமித்திரன் பவர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

 [விலை ரூபா 1]

பொருளடக்கம்

பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

பீடிகை

தமிழ்நாடு தவமுடையது; ஏனெனில், பாரத ஜன சபையின் முதற் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைத் தமிழ் நாட்டுத் தலைவராகிய ஸ்ரீ சுதேச மித்திரன் ஜி. சுப்பிரமணிய அய்யர் கொண்டு வந்தார்.

1885ஆம் வருஷம் டிஸம்பர் மாஸம் 28, 29, 30 என்ற தேதிகளிலும் பம்பாய் நகரத்தில் கோகுலதாஸ் தேஜ்பால் ஸம்ஸ்கிருத கலாசாலையின் பெரிய மண்டபத்தில் நமது பாரத ஜன சபையின் முதற் கூட்டம் கூடிற்று. இதன் செய்திகளை எழுது முன்னே சிறிது பூர்வ கதை சொல்லுகிறோம்.

காங்கிரஸ் சபையின் உத்யோகஸ்தருடைய அறிக்கைகளில் இந்த சபையின் உற்பத்தி தெளிவாகக் கூறப்படவில்லை. 1885ஆம் வருஷம் மார்ச்சு மாஸத்திலே, அவ் வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகையின்போது பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளினின்றும் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சபை நடத்த வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது என்று மாத்திரம் "உத்தியோக அறிக்கை"யில் உற்பத்தி கூறப்படுகின்றது.

யாராலே நிச்சயிக்கப்பட்டது? எந்த ஊரிலே? என்ற விஷயங்களைப் பற்றி "உத்தியோக அறிக்கை" - அதாவது மேற்படி சபையின் கார்யஸ்தர்களாலே பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கையில் யாதொரு தகவலும் கிடைக்கவில்லை.

ஸ்ரீமதி அன்னிபெஸன்ட் காங்கிரஸ் சபையின் சரித்திரத்தை எழுதி யிருப்பதில், இந்தக் குறை ஒருவாறு தணிக்கப்படுகின்றது. அதிலிருந்து இந்த மகத்தான பீஜத்தை விதைத்தவர்களின் பெயர் சில தெரிய வருகிறது.

அவர்களில் முக்கியமாக ஏ.ஓ. ஹ்யூம் என்ற ஆங்கிலேயர் ஒருவர். திவான்பஹதூர் ரகுநாத ராவ், நீதி மணி அய்யர் (ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர்) இன்னும் பலரும் கலந்திருந்தனர். ஹ்யூம் என்ற ஆங்கிலேயர் வடநாட்டு ஹிந்து ஸந்யாஸிகளின் உபதேசம் பெற்றவர். மிஸஸ் பெஸன்ட் எழுதி யிருக்கும் புஸ்தகத்தில் அடையாற்றிலே தியஸாபிகல் சங்கத்துக் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் சிலரே பின்னிட்டு இவ் விஷயமாக யோசனை யெடுத்தனரென்று கூறப்படுகிறது. அது எப்படியாயினும் ஹிந்து தேசத்தின் நன்மையை ஆதிமுதல் காத்து வருவோராகிய சில யோகிகளின் அருள் இந்த சபையின் ஆரம்பத்திற்கு ஆதாரமாக இருந்ததென்று கூறுதல் தவறாகாது.

அப்பால் "அறிக்கை" சொல்லுகிறது: "அங்ஙனம் சபை கூடுவதற்குப் புனா நகரமே தகுதியான மத்திய ஸ்தலமென்று கருதப்பட்டது."

ஆரம்பத்திலே இந்த சபைக்குக் "காங்கிரஸ்" என்ற பெயர் வைக்கவில்லை. "பாரத ஜாதீய ஐக்ய சங்கம்" என்று பெயர் வைத்தார்கள். இது கூடவேண்டுமென்று சுற்றுக் கடிதம் அனுப்பினார்கள். வங்காளம், பம்பாய், மதராஸ் என்ற மூன்று மாகாணங்களிலுமுள்ள ராஜீய தந்திர நிபுணர்கள் பிரதிநிதிகளாக வரலாமென்றும், அவர்களுக்கு இங்கிலீஷ் பாஷை தெரிந்திருக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

அந்தக் "கான்பரன்ஸின்" நோக்கம் என்னவென்றால், சுற்றுக் கடிதம் சொல்லுகிறது:

இந்தக் "கான்பரன்ஸின்" நேரான நோக்கங்கள் இரண்டு:

1. தேச விருத்திக்கு மிகவும் உண்மையுடன் பாடுபடுவோ ரெல்லாரும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுதல்.

2. அடுத்த வருஷத்தில் நம்மவர் செய்யத் தகுந்த ராஜீய முயற்சிகளை வாதிட்டு நிச்சயித்தல்.

இவை யிரண்டும் "நேர்" நோக்கங்கள். இனிப் பக்க நோக்கம் எதுவென்றாலோ - "சுதேசீயப் பார்லிமெண்ட் சபை பின்னே ஏற்படுவதற்கு இந்தக் கான்பரன்ஸ் ஒரு விதையாகும்" என்று அக் கடிதத்திலேயே தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆஹா! பார்த்தீர்களா நமது முன்னைத் தேசாபிமானிகளின் தீர்க்க திருஷ்டியையும் அவர்கள் நெஞ்சிலே ததும்பிய ஆவலையும்! சுதேசீயப் பார்லிமெண்ட் சபைக்கு ஆதாரம். இப்போதும் அப்படியே. "புனா நகரத்தில் ஸார்வஜனிக சபைக் காரராகிய ஸ்ரீமான் சிப்ளோங்கார் முதலியவர்கள் உபசார சங்கமாக அமைந்து இவ் வருஷத்துக் கான்பரன்ஸ் நடப்பதற்கு வேண்டிய ஸகல ஆயத்தங்கள் செய்ய இணங்கி யிருக்கின்றனர்."

இந்த ஸ்ரீமான் சிப்ளோங்கார் பெரிய தேசாபிமானி. இவருடைய கதை பின்னே ஸமயம் வரும்போது சொல்லப்படும். இங்ஙனம் ஏற்பாடு செய்தவண்ணம் அந்தக் கான்பரன்ஸ் அவ் வருஷம் புனாவில் நடக்க இடமில்லாமல் போய்விட்டது. புனாவிலே வாந்தி பேதி உக்ரமாக இருந்தது. ஆதலால் பம்பாயிலே நடத்தலாமென்று கடைசியாகத் தீர்மானம் செய்தார்கள். இதனிடையே இந்தப் பரிஷத்துக்குக் ''காங்கிரஸ்'' என்ற பெயர் வைக்க வேண்டுமென்றும் தீர்மானமாய் விட்டது.

❖

முதல் காங்கிரஸ்

1885ஆம் வருஷம் டிஸம்பர் 27-ந் தேதி யன்று காலையில் பிரதிநிதிகள் எல்லாரும் கோவாலியா தடாகத்துக் கருகே ஸம்ஸ்க்ருத கலாசாலையின் பெரிய மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். கோகுலதாஸ் தேஜ்பால் கலாசாலை மண்டபத்தில் அவர்களுக்கு நல்வரவு கூறும் பொருட்டு ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் முதலிய சில ஆங்கிலேயர்களும் நகரத்து ஸ்ரீமான்களில் வேறு பலரும் வந்தனரென்று தெரிகிறது.

மறுநாள் டிஸம்பர் 28-ந் தேதி யன்று முதற் கூட்டம் கூடிற்று. வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. முதல் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப்பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரிது.

அந்தக் கூட்டத்தில் எழுபத்திரண்டு பேர் பிரதிநிதிகள். இன்னும் இருபது முப்பது பேர் "நண்பர்" - அதாவது சர்க்கார் உத்தியோகஸ்த ராகையால் சபை விவகாரங்களை பஹிரங்கமாகக் கலந்து வாதிக்காமல், சும்மா கேட்டுக் கொண்டிருந்து வேண்டியபோது "புத்திமதி" சொல்லும் வகுப்பின ரென்பதாக அறிக்கை கூறுகின்றது.

ஆகவே சர்க்கார் உத்யோகத்திலிருந்த தேசாபிமானிகள் இப்போதைக் காட்டிலும் முதல் காங்கிரஸ் சபையில் எத்தனையோ மடங்கு அதிக நெருக்கம் காட்டின ரென்பதில் சந்தேகமில்லை. அவ்வித உத்யோகஸ்த "நண்பர்"களாய் வந்தவரிலே சிலரின் பெயர்களை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

திவான்பஹதூர் ரகுநாத ராவ் (மதராஸ் கலெக்டர்); மஹாதேவ ரானடே (சட்டசபை மெம்பர்; புனா ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜி); லாலா வைத்யநாத் (ஆக்ரா); கெ. சுந்தர ராமய்யர்; ராமகிருஷ்ண கோபால பண்டார்கர் - முதலியோர்.

இவர்களில் ஒருவர் மாத்திரம் சபை வாதங்களில் கொஞ்சம் கலந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருடைய பெயர் சொல்லப்படவில்லை.

இனிப் பிரதிநிதிகள் எழுபத்திரண்டு பேருக்கு மேலே இருக்கலா மென்றும் - ஆனால், எழுபத்திரண்டு பெயர்கள் மாத்திரமே பதிவுப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டன வென்றும் "உத்யோக அறிக்கை" தெரிவிக்கிறது.

அறிக்கையில் மேற்படி எழுபத்திருவர் பெயர்களும் கூறப்படுகின்றன. இங்கு இம் மாகாணத்திலிருந்து சென்ற சில விக்யாதி யுடைய நாமங்களை மாத்திரம் குறிப்பிடுகிறோம். ரங்கைய நாயுடு, மணி அய்யர், அநந்தாசார்லு, ஜி. சுப்பிரமணிய அய்யர், வீரராகவாசாரியார், சிங்காரவேலு முதலியார், பீடர்பால் பிள்ளை, சபாபதி முதலியார், கேசவ பிள்ளை.

மற்ற மாகாணங்களிலிருந்து:

தாதாபாய் நவுரோஜி, காசிநாத தெலங்கர், மேட்டா, வாச்சா, மலபாரி, சந்தவர்க்கர், முன்ஷி, கங்காப்ரஸாத் வர்மா, உமேசசந்திர பானர்ஜி, நரேந்திரநாத ஸேன், ஆகர்கார், சிப்ளோங்கார் முதலிய பின்னர் பிரக்யாதி பெற்ற பல கனவான்களும் பிரசன்னமா யிருந்தனர்.

எழுபத்திரண்டு பிரதிநிதிகளின் ஊரும் தொகையும் பின்வருமாறு:

கராச்சி 2; விரம் கிராமம் 1; ஸூரத் 6; புனா 8; கல்கத்தா 3; ஆக்ரா 2; காசி 1; ஸிம்லா 1; லக்நவ் 3; அலஹாபாத் 1; லாகூர் 1; அம்பாலா 1; ஆமதாபாத் 3; பம்பாய் 18; சென்னை 8; பெர்ஹாம்பூர் 1; மசூலிப்பட்டணம் 1; செங்கற்பட்டு 2; தஞ்சாவூர் 1; கும்பகோணம் 1; மதுரை 1; திருநெல்வேலி 1; கோயமுத்தூர் 1; சேலம் 1; கடப்பை 1; அநந்தபூர் 1; பல்லாரி 1.

பம்பாய் சபை கூடின ஸ்தலம்; ஆகவே ஸ்தல ப்ரதிநிதிகள் 18 பேர். அதுதான் மேற்படி ஜாப்தாவில் உயர்ந்த தொகை. அடுத்தபடியிலே சென்னையும் புனாவும் நிற்பது காண்க. தமிழ் நாட்டின் ஊர்களைக் கணித்திடுக.

முதலாவது காங்கிரஸ் விவகாரங்கள்

டிசம்பர் 28, பகல் பன்னிரண்டு மணிக்கு கோகுலதாஸ் தேஜ்பால் ஸம்ஸ்க்ருத கலாசாலை மண்டபத்தில் பிரதிநிதிகளும் பிறரும் வந்து கூடினர்.

வங்காளத்துக் கீர்த்தி மிகுந்த பாரிஸ்டர் உமேசசந்திர பானர்ஜி அந்த சபையிலே அக்ராஸனம் வஹிக்கவேண்டு மென்று ஏ. ஓ. ஹ்யூம் ப்ரேரணை செய்ய, அதைக் காசிநாத தெலங்கரும், நீதி மணி அய்யரும் ஆமோதித்தனர். சபையார் அங்கீகரித்தனர். அங்ஙனமே உமேச பாபு அக்ராஸனம் வஹித்தார்.

முதல் காங்கிரஸ் சபாநாயகரின் பிரசங்கம்

ஸ்ரீமான் உமேச சந்திர பானர்ஜி பின்வரும் உபந்யாஸம் புரிந்தார்:

சபையோர்களே, தேச பக்தர்களே,

நவீன காலத்தில் பாரத தேச சரித்திரத்தில் முதல் முறை கூடும் இந்த ஜன சபையின் நாயகம் எனக்குக் கிடைத்தது என் ஜன்மத்தில் ஒரு பெரிய கௌரவமென்று மதிக்கிறேன்.

சபையைச் சுற்றி நோக்குகையில் பம்பாய், கராச்சி, ஆமதாபாத், சூரத் முதலிய பம்பாய் மாகாணத்து முக்கிய ஸ்தலங்கள் பலவற்றினின்றும் பிரதிநிதிகள் வந்து வீற்றிருக்கக் காண்கிறேன். சென்னை, சேலம், கோயமுத்தூர் முதலாக சென்னை மாகாணத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள்.

வங்காளத்திலிருந்து பிரதிநிதிகளாக வரக்கூடியவரில் சிலர் இறந்தும் சிலர் நோய்கொண்டும் பலவித துரதிர்ஷ்டங்கள் நேர்ந்துவிட்டபடியால் இப்போது வந்திருக்கும் எனது நண்பர்களும்

நானும் தொகை குறைவாக இருந்தாலும் படித்த சுதேசிகள் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகளாகையால் எங்களுடைய தொகைக் குறையை க்ஷமித்து எங்களை நன்கு மதிக்கும்படி வேண்டுகிறேன். அப்பால் லாஹோர், லக்நவ், ஆக்ரா, அலஹாபாத், காசி என்ற நகரங்களின் பிரதிநிதிகளைக் காண்கிறேன்.

இவர்களில் ஒவ்வொருவரும் விசாலமான செல்வாக்குடைய ராஜீய தந்திர சங்கங்களாலே தெரிந்தனுப்பப்பட்டோர்; விவகாரங்களில் கலந்து வாதிடுவோராகிய இப் பிரதிநிதிக ளன்றியும், நமது சபையின் "நண்பர்" என்ற ஸ்தானத்திலே பல கீர்த்தி பெற்ற ராஜாங்க உத்யோகஸ்தர்களும் வந்து நமது சபையின் கௌரவத்தை மிகுதிப்படுத்துவது கண்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

மாகாணப் பிரதிநிதிகள் மாத்திரமே யல்லாது, ராஜீய சபைகள் அனேகமாக எல்லாவற்றிற்கும் ஓரிரு பிரதிநிதிகள் இங்கு வந்திருப்போரினிடையே கணிக்கலாம். மேலும் "இந்தியன் மிர்ரர்", "ஹிந்து", "இந்தியன் ஸ்பெக்டேடர்", "ட்ரிப்யூன்" முதலிய பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் வந்து கூடியிருப்பதைப் பார்க்கும்போது, பெரிதும், எந்நாளும் நினைத்திருக்கத் தக்கதுமாகிய இந்த சபை தேச முழுமையின் பொது உணர்ச்சியிலே விளைந்த கனி யென்பது முடிவாக ருஜுப்படுகிறது.

காங்கிரஸ் சபையும் பார்லிமெண்ட் சபையும்

பாரத பூமியில் நமக்குத் தெரிந்த சரித்திரத்தின் கால அளவுக்குள்ளே இதுபோல் முக்கியமும் பொதுமையும் உள்ள சபை எப்போதுமே கூடியதில்லை யென்பது நிச்சயம். இது பாரத தேசத்துக்குப் பரிபூர்ணமான பிரதிநிதி. இங்கிலாந்தில் "காமன்ஸ் சபை" (பார்லிமெண்ட்) மெம்பர்கள் சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுக்கப்படுவது போல், நம்மை ஜனங்கள் அனுப்பவில்லை யென்பது மெய்தான்.

ஆனால், உள்ளத்தின் உணர்ச்சிகளும், விருப்பங்களும், அவசரங்களும் ஒரே மாதிரி இருப்பது கொண்டு ஒருவன் பிறருக்காகப் பரிந்து பேச உரிமை யுடையோன் ஆவான் என்பது மெய்யானால், நாம் பாரத மஹா ஜனங்களுக்கு நியாயமான

வக்கீல்க ளென்பதிலே சந்தேகமில்லை. நம்மை நாமே நியமித்துக்கொண்டு வந்தோ மென்று சொல்லிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அது சரியில்லை.

ஏனென்றால், இந்த சபை நடக்கப் போவதாக இந்தியாவின் எல்லா மாகாணங்களிலும் வருஷ முழுமையும் செய்தி பரவி வந்தது.

எல்லா இடங்களிலும் இச் செய்தி ஜனங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி விளைவித்து, நம்மை விதிப்படி சீட்டுப் போட்டெடுக்கா விட்டாலும், பொதுச் சபைகள் நம்மை அனுப்பி யிருப்பதனால் நாம் நேரான பிரதிநிதிகள்.

இங்ஙனம் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளிலே பலர் பலவிதமான துக்க ஸம்பவங்களால் வரமுடியாது போயினமை பற்றி வருந்துகிறேன். எல்லாரும் வந்திருந்தால் இன்னும் விசேஷமாக இருக்கும்.

காங்கிரஸ் சபையின் நோக்கங்கள்

இந்த மஹத்தான ஜாதீய ஸங்கத்தின் நோக்கங்களும் கருத்துக்களும் யாவை யென்று சென்ற சில வாரங்களாக ஜனங்கள் அடிக்கடி கேட்கும் கேள்விக்கு மறுமொழி கூற இதுவே தகுந்த ஸமயமென்று தோன்றுகிறது. அந்தக் கேள்விக்கு ஸம்பூரணமான விடை என்னாலே சொல்ல முடியாது. ஒரு தனி உபந்யாஸகன் பேச்சிலே தெரிவதைக் காட்டிலும், இனி நடக்கப்போகிற விவாதங்கள் முழுவதையும் கேட்டால் மாத்திரமே நமது சபையின் நோக்கங்கள் அதிகத் தெளிவாகப் புலப்படும். எனினும், சுருக்கமாக, ஜன சபையின் நோக்கங்களைப் பின்வரும் பிரிவுகளாகக் கொள்ளலாம்.

1. நமது தேசத்தின் நன்மைக்காகப் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் வெவ்வேறு பகுதிகளில் பாடுபடுவோர் எல்லாரும் ஒருவருக் கொருவர் சந்தித்துப் பழகி நட்பு மிருதியாகும்படி செய்தல்.

2. தேச பக்தர்களுக்குள்ளே ஜாதி, மத, மாகாண பேதங்களால் ஏற்படக் கூடிய அஸூயைகளை யெல்லாம் நேரான சிநேஹப் பழக்கத்தால் மாற்றி நமக்கு மிகவும்

அன்பரான லார்ட் ரிப்பன் அதிகாரத்தின்போது நம்முள்ளே தோன்றிய தேசீய ஒற்றுமை உணர்ச்சிகளை ஒருங்குகூட்டி மேன்மேலும் வளரச் செய்தல்.

3. இந்தியாவில் கல்வி கற்ற கூட்டத்தார் நமது முக்யமான ஜன ஸமூஹ விவகாரங்களில் எவ்விதமான தீர்மானங்கள் உடையோர் என்பதை அறிந்து பதிவு செய்தல்.

4. பொது ஜன அனுகூலங்களைக் கருதி நமது ராஜ தந்திரிகள் இனிவரும் பன்னிரண்டு மாஸங்களிலும் செய்யத் தகுந்த காரியங்களையும், செய்யும் நெறிகளையும் தீர்மானம் செய்தல்.

காங்கிரஸ் சபையும் பிரிட்டிஷ் ஆட்சியும்

அஸூயை யில்லாத புத்திமான்கள் மேற்படி நோக்கங்களைக் குறித்து எவ்விதமான ஆக்ஷேபமும் செய்ய இடமில்லை. எனினும் நம்மைப் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு விரோதமாகச் சூழ்ச்சிகள் செய்யும் ராஜ விரோதிகளின் கூட்டமென்று சில கனவான்கள் ஞானக் குறைவினால் சொல்லிவிட்டனர்.

நேற்று நமது பிரதிநிதிகளுக்குள்ளே ஸாதாரணமாக இந்த விஷயத்தைக் குறித்து ஸம்பாஷணைகளும் வாதங்களும் நடந்ததிலிருந்து நான் சொல்லப் போகிற வார்த்தை எனது கருத்து மாத்திரமன்று. இங்கு வந்திருக்கும் ஒவ்வொரு கனவானுடைய கருத்தும் அதுவே யென்பதை நன்கறிவேன்.

நானும் இங்கு சூழ்ந்திருக்கும் எனது நண்பர்களும் செலுத்துவதைக் காட்டிலும் அதிகமாகப் பிரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் உண்மையுடனும் உறுதியுடனும் நல்லெண்ணம் செலுத்துதல் வேறு யார்க்கும் அரிது.

பிரித்தானியா நமக்கு அனுகூலமாக எவ்வளவோ செய்திருக்கிறாள். அதன் பொருட்டாக அவளிடம் நன்றி யுடையோம்; ஸமாதானம் ஏற்படுத்தினாள். ரயில் போட்டாள். மதிப்பிடற் கரிய நலமாகிய மேற்குத் திசைக் கல்வியையும் தந்தாள். இது போதாது. இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும்.

கல்வியும் செல்வமும் பெருகப் பெருக ஜனங்களுக்கு ராஜ்ய விஷயங்களிலே அதிக நுட்பமான காட்சியும் ராஜ்ய முன்னேற்றத்தில் அதிகத் தீவிரமான ஆவலும் தோன்றும்.

ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் ஆட்சி முறையைப் பற்றி எவ்விதமான கொள்கைகள் உடையாரோ அதே விதமான கொள்கைகளின்படி இங்கும் அரசாட்சி நடக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இந்த விருப்பத்துக்கும் பிரிடிஷ் ராஜாங்கத்தினிடமுள்ள பூர்ண விசுவாஸத்துக்கும் விரோதமில்லை.

அரசாட்சியின் அஸ்திவாரத்தை விசாலப்படுத்தி ஜனங்களுக்கு அதனில் நியாயமாக உரிமையுள்ள அதிகார அம்சம் கிடைக்க வேண்டு மென்றே நாம் கேட்கிறோம். நமது சபையில் நடத்தப் போகும் விவாதங்கள் நமக்கு அனுகூலங்கள் விளைக்குமாறுபோலே அதிகாரிகளுக்கும் நலந்தரு மென்று நம்புகிறேன்.

இங்ஙனம் உமேசசந்திரர் பேசினார்.

பின்னர், வருஷஞ் செல்லச் செல்ல காங்க்ரஸ் சபாநாயகரின் உபந்யாஸங்கள் எவ்வளவோ நீட்சி மிகுந்து செல்லுகின்றன. ராஜ்ய அபிவிருத்திக்குரிய இலக்கியத்தில் சேரவேண்டுமென்றே கருதிச் செய்யப்பட்ட உபந்யாஸங்க ளாதலால் பிந்திய வருஷத்துப் பிரசங்கங்கள் மிகவும் விஸ்தாரமாக இயல்கின்றன.

ஆனால், உமேச சந்திரர் அவ்விதமான நோக்கமின்றி வெறுமே சபையை ஆரம்பித்து விடும் பொருட்டாக மேற்படி உபந்யாஸம் புரிந்தனர். எனினும், காங்கிரஸ் சபையின் இலக்கியத்திலே இவர் பிரஸங்கத்துக்குள்ள ஸ்தானம் முதல் வகுப்பைச் சேர்ந்தது. எங்ஙனமெனில், அவர் ஜீவ வாக்கியத்தைக் கூறிவிட்டார். "ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் எவ்வித அரசியல் வேண்டுகிறார்களோ அதே விதமான அரசியல் நாமும் வேண்டுகிறோம்" என்றார்.

இதுவே காங்க்ரஸ் சபையின் லக்ஷ்யம். இது நிறைவேறும் பொருட்டாகவே இன்றைக்கும் அந்த ஸபை ஸ்வராஜ்யம் கேட்கிறது.

கல்கத்தாவில் "பிரிட்டிஷ் - இந்திய" சங்கத்தாரிடமிருந்தும், அங்கு சில தினங்களின் முன்பு கூடிய மாகாண சபையாரிடமிருந்தும், ஆஸாமில் ஆனந்தமோஹன வஸுவின் அக்ராஸனத்தின் கீழே கூடியதொரு பொதுக் கூட்டத்தி லிருந்தும் காங்க்ரஸ் சபையின் நோக்கங்களை ஆதரித்து அனுதாபத் தந்திகள் வந்தன.

வேறு பல இடங்களிலிருந்தும் கடிதங்களும் தந்திகளும் கிடைத்தன. முதலாவது காங்க்ரஸ் சபாநாயகராகிய உமேச சந்திர பானர்ஜி வங்காளி; கிறிஸ்தவர்; பாரிஸ்டர் பரீக்ஷை தேறினவர். அவருடைய பெண்ணை ஒரு ஆங்கிலேயனுக்கு விவாகம் செய்து கொடுத்தார். அந்தப் பெண் இங்கிலாந்தில் இப்போது மிருக்கிறாள்.

இந்த விவரத்தை ஏன் சொல்ல வந்தோ மென்றால், காங்கிரஸ் சபைக்கு ஜாதி மத பேதங்கள் இல்லை யென்றும், பாரத தேசத்து ஸகல ஜனங்களுக்கும் அந்த ஸபை பொது வென்றும் விளக்கும் பொருட்டாக. பின்னே பல ஐரோப்பியரும் இந்த சபைக்கு நாயகராக நியமனம் பெற்றிருத்தலால் நாம் சொல்வதற்கு மிகவும் பலமான ருஜு. பாரத தேசத்துக்கு விடுதலை வேண்டுதல் இந் நாட்டில் பிறந்த எல்லாருக்கும் பொதுவான கடமை. அது மனுஷ்ய ஜாதியின் முதல் அவசியம்.

முதல் காங்கிரஸ் தீர்மானங்கள்

*1885*ஆம் வருஷம் டிஸம்பர் *28, 29, 30*ஆம் தேதிகளில் பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் சபையிலே செய்யப்பட்ட தீர்மானங்களும், அவற்றைக் கொணர்ந்தோர் பெயர்களும் பின்வருமாறு:

I. முதல் தீர்மானம்:

இந்தியாவின் அரசியல் நெறியை இங்கும் இங்கிலாந்திலும் பரிசோதனை செய்வதாக வாக்குக் கொடுத்தபடி, அதற்காக ஒரு ராஜ விசாரணைக் கூட்டம் (ராயல் கமிஷன்) நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்தக் கூட்டத்தில் பாரத ஜனப் பிரதிநிதிகளுக்கு இடம் தர வேண்டுமென்றும்,

அக் கூட்டத்தார் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சாக்ஷி விசாரணை நடத்த வேண்டு மென்றும் இந்த ஜன சபை சிபார்சு செய்கிறது.

பிரேரித்தவர் : ஜி. சுப்பிரமணிய அய்யர் (சென்னை)
ஆமோதித்தோர் : பிரோஸ்ஷா மேத்தா (பம்பாய்)
நரேந்திரநாத ஸேன் (கல்கத்தா)

II. இரண்டாவது தீர்மானம்:

இந்தியா மந்திரி சபையின் இப்போதுள்ள வடிவத்தை அழித்துவிட வேண்டும். அதுதான் எல்லாச் சீர்திருத்தங் களுக்கும் அஸ்திவாரம் என்று இந்த ஜன சபை கருதுகிறது.

பிரேரகர் : சிப்ளோங்கார் (புனா)
ஆமோதித்தோர் : அநந்தாசார்லு (சென்னை)
கோஷால் (அலஹபாத்)

III. மூன்றாந் தீர்மானம்:

ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் சரியான தொகை - வைஸ்ராய் சட்டசபையிலும், மாகாண சபைகளிலும் சேர்க்க வேண்டும்; வட மேற்கு மாகாணங்களிலும் பஞ்சாபிலும் மாகாண சபைகள் ஏற்படுத்த வேண்டும்; பணத் திட்டங்களை மேற்படி சபையாரின் ஆலோசனைக் குட்படுத்தவேண்டும்; அரசாட்சியின் எல்லாக் கிளைகளையும் பற்றிச் சபையார் நிர்வாஹ உத்யோகஸ்தரைக் கேள்விகள் கேட்க இடம் கொடுக்க வேண்டும்;

பெரும்பகுதி (மெஜாரிடி) செய்யும் தீர்மானத்தை மாற்றும் உரிமை அதிகாரிகளுக்கு உண்டாயினும், அதன் பேரில் பெரும் பகுதி அனுப்பும் ஆக்ஷேபங்களை ஏற்றுக் கவனிக்கும்படி காமன்ஸ் சபை (இங்கிலீஷ் பார்லிமெண்ட்)யில் ஒரு சாசுவதக் கமிட்டி ஏற்படவேண்டும் என்று இந்த ஜன சபை அபிப்பிராயப்படுகிறது.

ப்ரே. : தெலாங் (பம்பாய்)
ஆமோ.: மணி அய்யர் (சென்னை)
தாதாபாய் நவுரோஜி (பம்பாய்)

IV. நான்காந் தீர்மானம்:

ஆட்சி வகுப்புக்களில் முதல் நியமனங்களுக்காக இப்போது இங்கிலாந்தில் நடக்கும் போட்டிப் பரீக்ஷைகளை இனிமேல், *1860*ஆம் வருஷத்து இந்தியா மந்திரி சபைக் கமிட்டியின் கொள்கைப்படி ஸமகாலத்தில் இரண்டு தேசங்களிலும் நடத்த வேண்டும்;

இரண்டு பரீக்ஷைகளும் இயன்ற வரை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்; பரீக்ஷை தேறினோரின் ஜாப்தாவில் இரண்டு தேசத்துப் பெயர்களையும் ஒன்றாகத் திறமைக்குத் தக்கபடி அடுக்கிப் பிரசுரம் செய்ய வேண்டும்;

இந்தியாவில் தேறுவோரை மேற் படிப்புக்காக இங்கிலாந்துக் கனுப்பலாம்; உசிதமானால், அங்கே அவர்களை மேலும் பரீக்ஷைகளுக் குட்படுத்தலாம்;

குற்றேவல்களைத் தவிர மற்றெல்லா முதல் நியமனங்களுக்கும் ஸர்க்கார் இஷ்டப்படி அறிவு, குணம், சரீரம் மூன்றிலும் தகுந்த நிபந்தனைகள் செய்து, இந்தியாவிலே போட்டிப் பரீக்ஷைகள் நடத்த வேண்டும்;

'ஒப்பந்த ஸிவில் ஸெர்விஸ்' என்ற பரீக்ஷைக்கு பிரவேச வயதின் உச்ச எல்லை இருபத்து மூன்றுக்குக் குறையாமல் உயர்த்தி வைக்க வேண்டும் என்று இந்த ஜன சபை வேண்டுகிறது.

ப்ரே. : தாதாபாய் நவுரோஜி (பம்பாய்)
ஆமோ.: வீரராகவாசாரியர் (சென்னை)
டி.எஸ். ஹ்வொய்ட் (சென்னை)

V. ஐந்தாம் தீர்மானம்:

நாட்டு ராணுவச் செலவை அதிகமாக்க நினைத்தல் அநாவசியம்; தேச கால நிலைமைகளை உத்தேசிக்க மிகை என்று இந்த ஜன சபை கருதுகிறது.

ப்ரே. : ரங்கய்ய நாயுடு (சென்னை)
ஆமோ.: தீன்ஷா எதுல்ஜீ வாச்சா (பம்பாய்)
தயாராம் ஜேட் முல் (கராச்சி)

VI. ஆறாம் தீர்மானம்:

ராணுவச் செலவை உயர்த்த வேண்டினால் மற்றச் செலவுகளைக் குறைக்க வேண்டும்; இல்லாவிடில் சுங்கத் தீர்வைகளை மறுபடி உயர்த்தலாம்; அல்லது "லைஸென்ஸ்" (அனுமதித்) தீர்வையினின்றும் இப்போது விலக்கப் பட்டிருப்போர் ஆகிய உத்யோகஸ்தர், அல்லாதார் என்ற இரு திறத்தாரையும் அத் தீர்வைக் குட்படுத்தலாம்;

ஆனால் எல்லோர் விஷயத்திலுமே அத் தீர்வைக்குரிய வரும்படி அளவின் கீழெல்லை இயன்ற வரை உயர்ந்ததாக இருக்க வேண்டும்;

மேலும், இந்தியாவின் கடனுக்கு பிரித்தானியா தானும் உத்தரவாதி யென்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்கிறது.

ப்ரே. : யாஜ்நிக் (பம்பாய்)
ஆமோ.: ஸ்வாமிநாதய்யர் (தஞ்சாவூர்)
வெங்கட சுப்பராயுடு பந்துலு (மசூலிப்பட்டணம்)

VII. ஏழாம் தீர்மானம்:

வட பர்மாவைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ளக் கூடாது; துரதிர்ஷ்ட வசத்தால் ஒருவேளை அதைக் கவர்ன்மெண்டார் சேர்த்துக்கொள்ள விரும்பினாலும், பர்மா முழுதையும் இந்தியா வைஸ்ராயின் எல்லையினின்று முழுதும் பிரித்து இலங்கைத் தீவுபோலே ஒரு குடியேற்ற நாடாகச் செய்துவிடவேண்டும் என்று இந்த ஜன சபை அபிப்பிராயப் படுகிறது.

ப்ரே. : பிரோஸ்ஷா மேர்வான்ஜீ மேத்தா (பம்பாய்)
ஆமோ.: க்ருஷ்ணாஜீ லக்ஷ்மண் நூல்கார் (புனா)

VIII. எட்டாம் தீர்மானம்:

இங்கு செய்த தீர்மானங்களை ஒவ்வொரு மாகாணத்திலு முள்ள ராஜ்ய சங்கங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அவை பிரசங்கங்கள் முதலிய கருவிகளால் இத் தீர்மானங்களில் கண்ட விஷயங்களிலே அனுகூலம் கிடைப்பதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

ப்ரே. : முரளீதர் (அம்பாலா)
ஆமோ.: துருவன் (ஸூரத்)

IX. ஒன்பதாந் தீர்மானம்:

அடுத்த வருஷத்துக் காங்கிரஸ் கல்கத்தாவில் கூட வேண்டும்; 1886-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 22-ந் தேதி செவ்வாய்க்கிழமை சேர்ந்து அன்றும் அடுத்த இரு தினங்களும் நடைபெற வேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

ப்ரே. : ஏ. ஓ. ஹ்யூம் (ஸிம்லா)
ஆமோ.: மணி அய்யர் (சென்னை)

முதல் காங்கிரஸ் முற்றிற்று.

❖

இரண்டாம் காங்கிரஸ்

இது கல்கத்தாவில், 1886ஆம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் கூடிற்று. இதில் ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி அக்கிராஸனம் வகித்தார். இந்த மஹானுடைய பெருமையை அறியாதார் யாருமில்லை. பிரிட்டிஷ் உத்யோகஸ்தர் இந்தியாவைத் தாறுமாறாக அரசாட்சி செய்து இதை ஏழைகளின் வளர்ப்பிடமாகவும், நோய்க் களஞ்சியமாகவும் செய்து விட்டார்க ளென்றும், அதற்கு ஸ்வராஜ்யமே மருந்தென்றும் பல நூல்க ளெழுதியும், உபந்யாஸங்கள் செய்தும் ஸ்தாபனம் செய்தார். பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மெம்பராக இருந்தார். பிரிட்டிஷ் ஸம்பந்தத்தில் உண்மையாக நம்பிக்கை வைத்திருந்தார். பிரிட்டிஷ் கொடி நமது நாட்டில் பறக்கக் கூடாதென்ற எண்ணம் அவருக்கு லவலேசமேனும் கிடையா தென்பதைப் பின்வரும் உபந்யாஸத்தில் விரிவாகக் காணலாம்.

ஆனால், பிரிட்டிஷ் கொடியின்கீழே நமக்கு ஸ்வராஜ்யம் வேண்டு மென்று சொல்லி ஸ்வராஜ்ய மென்ற பதத்தை ஸம்ஸ்க்ருத ரூபத்திலேயே இங்கிலிஷ் பாஷையிலும் வழங்கிக் காங்க்ரஸ் மேடை மீதிலே முதல் முதல் 1906ஆம் வருஷத்தில் முழங்கினவர் இவரே.

1886ஆம் வருஷத்தில் இவர் செய்த உபந்யாஸத்தையும், பின் 1906ஆம் வருஷத்தில் அதே கல்கத்தா நகரத்தில் இவர் மறுபடி காங்கிரஸ் சபாநாயகராய்ச் செய்த உபந்யாஸத்தையும் ஒப்பிட்டு நோக்கினால் நமது தேசத்தாரின் ராஜரீகப் பார்வை இந்த இருபது வருஷங்களினிடையே எவ்வளவு விசாலப் பட்டதென்பதை அறியலாம்.

இங்ஙனம் விசாலமடைந்ததற்கு ஆதார புருஷராக இருந்தோரில் தாதாபாய் நவுரோஜியே முக்யமானவர். இவருக்கு "அரும் பெருங் கிழவனார்" என்பதொரு பட்டம்.

சபாநாயகரின் உபந்யாஸம்

கல்கத்தாவில் நடந்த இரண்டாவது கூட்டத்தில் சபாநாயகரான ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி பேசியதின் சாராம்சம் பின்வருமாறு.

என்னை இந்த ஸ்தானத்தில் உயர்த்தியது பற்றி நன்றி கூறுகிறேன். இரண்டே தினங்களுக்கு முன் இந்த சபையின் தலைமை ஏற்கும்படி என்னை வேண்டியபோது நான் மிகவும் (தயக்கத்)துடன் அங்கீகாரம் செய்தேன். எனது குற்றங் குறைகளைப் பொறுக்க வேண்டும். இந்த ஜன சபை கூடியது பாரத தேச சரித்திரத்தில் மிகவும் முக்யமான செய்திகளில் ஒன்றாம்.

விக்கிரமாதித்தன் முதலிய ஹிந்து ராஜாக்களின் அற்புத ராஜ்ய காலங்களிலேகூட இந்தமாதிரிக் கூட்டம் ஸாத்யமில்லை. அப்போது வெவ்வேறு மாகாணங்களிலுள்ள ஹிந்துக்களேனும் இங்ஙனம் ஒன்றுகூடி ஒரு. ஜாதியாகப் பேசி யிருப்பார்களா! ஹிந்து சக்ரவர்த்திகளைக் காட்டிலும் மஹமதியர் அதிக விசாலமான பூமியை ஆண்டனரென்று நினைக்கிறேன். அவர்களுடைய ஆட்சியின்போதும் இப்படிப்பட்ட கூட்டம் கூட இடமுண்டா? எல்லா ஜாதிகளும், இனங்களும் ஒரே பாஷை பேசுவோராய், ஒரே வித உயர்ந்த நோக்கங்க ளுடையோராய் இங்ஙனம் கூடி யிருப்பார்களா?

நாம் இங்கே எதன் பொருட்டுக் கூடி யிருக்கிறோம்? நம்முடைய எதிர்காலத்தில் மேன்மைப்படுவோமா, வீழ்ச்சி பெறுவோமா என்ற விஷயத்துக்கு ஆதாரமான கேள்விகளை ஆராய்ச்சி செய்யும் பொருட்டாக வந்து கூடினோம். இங்ஙனம் கூடுதல் நமக்கு பிரிட்டிஷ் ராஜ்யமொன்றிலேதான் ஸாத்யப்படும். இப்படி ராஜ்யம் கிடைத்தது நம்முடைய அதிர்ஷ்டம். இங்கிலாந்தின் ராணியும் ஜனங்களும் ஆளும் ஆட்சி நாகரிகத்துக்குத் தூண்டுதலிடக் கூடியது. இதன் கீழே கூடினோம்.

நம்மைத் தடுப்பாரில்லை. பயமில்லாமல், திகைப்பில்லாமல், மனதில் உள்ளதை இஷ்டப்படி பேசலாம். நான் இப்போது தெளிவாக ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த ஜன சபை ராஜத் துரோகத்தையும் கலகத்தையும் வளர்க்கும் கூட்டமா? (அன்று; அன்று) பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு இஃதொரு ஸ்திரமான அஸ்திவாரக் கல் அன்றோ? (ஆம். ஆம்)

நமக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள சம்பந்தம்

இங்கிலிஷ் ராஜ்யத்தினிடம் நாம் பூரான அன்பும் ஆதரவும் கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்த நன்றிகளை யெல்லாம் மறக்கமாட்டோம். அவர்கள் நமக்குக் கொடுத்த கல்வியினால் ஒரு புதிய ஒளி பெற்றோம்.

ஜனங்களுடைய நன்மைக்காக ராஜாவே யொழிய ராஜாவுக்காக ஜனங்க ளில்லை யென்ற பாடம் அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். ஆசியாவின் கொடுங்கோன்மையாகிய இருளுக்கிடையே ஆங்கிலேய நாகரிகத்தின் விடுதலை ஒளி நமக்குக் கிடைத்தது. (கரகோஷம்) ஆனால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நாம் சொல்வதை உண்மையென்று நம்புகிறார்களா என்பது கேள்வி.

நமது விசுவாஸத்தை அவர்கள் அங்கீகரிக்கிறார்களா? அங்கீகரிப்பாரும் சிலர் நம் அதிகாரிகளில் உளர் என்பதை ருஜூப்படுத்தச் சிறந்த ஸாக்ஷ்யம் இருக்கிறது. லார்ட் ரிப்பன் சொல்லியதுபோலே "எது இந்தியாவுக்கு நன்மையோ அதுவே இங்கிலாந்துக்கும் நன்மை" என்பதை அவர்கள் அறிகின்றனர்.

இங்கிலீஷ் படித்த வகுப்பினரைப் பற்றி ஸர் பார்ட்டில் ப்ரேர் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் சொல்லிய அபிப்பிராயத்தைக் கேளுங்கள். அவர் இந்த தேசத்து ஜனங்களிடம் நெருங்கின பழக்க முடையவர்.

அவர் சொன்னார்: "நான் போகுமிடமெல்லாம் இங்கிலீஷ் கவர்ன்மெண்டின் வழியைப் புகழ்ந்து பேசி அதை இந்தியா சுதேசிகளின் இயற்கைக் குணங்களுடன் ஒட்டி வைப்போர் யாரெனில் ஆங்கிலம் படித்த சுதேசிகளே யாவர்" என்கிறார்.

இது நம்முடைய உண்மைக்கு ஸாக்ஷி. ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கு மிடையே நாமே உண்மையான மத்யஸ்தரென்று நாம் சொல்வதற்கு இஃதொரு பலம். இப்போது இந்தியா கவர்மெண்டாரின் வாக்யத்தையே எடுத்துக் காட்டுகிறேன்.

இந்தியா மந்திரிக்கு அனுப்பிய அறிக்கை யொன்றில் (1880 ஜூன் 8) கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள்:

> "நாம் ஆயுத பலம் காட்டவேண்டிய அவசிய மில்லாமலே ஜனங்கள் நமது ராஜ்யத்தை அங்கீகாரம் செய்து கொள்ளுகிறார்கள். இதன் காரணங்கள் எவை யென்றால், நாம் ஸமாதானத்தைக் காப்பாற்றுகிறோம்; நீதி செலுத்துகிறோம்; தேசத்துக்கும் ஜனங்களுக்கும் பலவித லௌகிக நன்மை செய்திருக்கிறோம்; இன்னும் செய்கிறோம்; இந்தியாவிலும் வெளியிலேனும் நமதிடத்தை வஹிக்கக்கூடிய பலமுள்ள ராஜ்யம் வேறில்லை" என்கிறார்கள்.

இதனால் இப்போதுள்ள நிலைமையில் ஸமாதானத்தைக் காக்கவும் எதிர்கால அபிவிருத்தியை உறுதியாக்கவும் வல்லது ப்ரிடிஷ் ராஜ்யம் ஒன்றுதான் என நாம் நம்புவதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது ருஜுவாகிறது. இது பொது ஜனங்களைப் பற்றிக் கூறியது.

இனி இங்கிலீஷ் படித்த வகுப்பினருக்கு விசேஷ உரை சொல்லப்பட்டிருப்பதைக் கேளுங்கள். மேற்படி ஸர்க்கார் அறிக்கை கூறுகின்றது:

> "இந்தியா ஜனங்களில் இங்கிலீஷ் படித்தவர்களின் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இவர்களுடைய புத்திக்கு நிச்சயமாகவே ப்ரிடிஷ் ராஜ்யத்தைப் புரட்டிவிட வேண்டுமென்ற கொள்கை முற்றிலும் விரோதமானது. அங்ஙனம் செய்தால் மஹா கொடூரமான அராஜகமும் குழப்பமும் ஏற்படுமென்பதை இவர்கள் அறிவார்கள்."

ஆகவே நம்மிடம் அதிகாரிகள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்ற உறுதியுடன் நாம் நிர்ப்பயமாக, ஸமாதான நிதானமாக மரியாதையுடன், இஷ்டப்படி நமக்கு

வேண்டியதைக் கேட்கலாம். பிரிடிஷார் நமக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் அதிகம் எவ்வளவோ செய்தால்தான் அவர்களுடைய பெருந்தொழில் நிறைவேறிய தெனத் தகும்.

மஹாராணியின் ராஜ்யத் திருவிழா

அடுத்த வருஷம் நமது நல்ல ராணி - சக்ரவர்த்தினியின் ஆட்சி தொடங்கி ஐம்பது வருஷங்கள் முடியும் திருவிழா. இதையே காங்கிரஸ் தனது முதல் தீர்மானத்துக் குரிய விஷயமாகத் தெரிந்தெடுத் திருக்கிறது. காருண்ய மஹாராணிக்கு மகிழ்ச்சிகள் தெரிவிக்கிறோம்....

காங்கிரஸ் சபையும் ஆசாரத் திருத்தமும்

இந்த ஜன சபை ஆசாரத் திருத்தத்தைப் பற்றிய விஷயங்களையும் கவனிக்க வேண்டு மென்றும், அங்ஙனம் செய்யாதிருத்தல் நமக்கொரு பழி யென்றும் சிலர் தூற்றுகிறார்கள். ஆசாரத் திருத்தம் அவசியமென்பதை நான் மிகவும் நன்றாக அறிவேன். ஆனாலும், கனவான்களே, ஒவ்வொரு விஷயத்துக்கும் தகுந்த காலம், தகுந்த இடம், தகுந்த சந்தர்ப்பம், தகுந்த மனிதர் - இவை யெல்லாம் தனித் தனி யுண்டு. (கரகோஷம்)

நாம் ராஜரீகக் கூட்டத்தார். நமது ராஜரீக ஆசைகளை ஆள்வோரிடம் தெரிவிக்கும் பொருட்டு நாம் கூடினோம். ஆசாரத் திருத்தங்களை விவாதம் செய்ய நாம் கூடவில்லை. நாம் இவற்றைப் புறக்கணிப்பதாக நீங்கள் குறை கூறுவீராயின், காமன்ஸ் சபையார் கணித சாஸ்த்ர, வேதாந்த சாஸ்த்ரங்களின் ஸூக்ஷ்ம விசாரணை நடத்தவில்லை யென்று அந்த சபையார்மீது குறைகூற லொக்கும். மேலும் இங்கு ஸகல ஜாதி ஹிந்துக்களும் உளர். ஒரே மாகாணத்து ஹிந்துக்களுக்குள்ளே ஆசார விவகாரங்கள் மிகவும் வேற்றுமைப்படுகின்றன.

மேலும் இங்கு மஹமதியரும் பல வகுப்புக் கிறிஸ்தவரும், பார்ஸிகளும், சீக்கரும், ப்ராம்ம ஸமாஜத்தாரும் பிறரும் சேர்ந்திருக்கின்றனர். பாரத ஜாதியைச் சேர்ந்த எல்லா வகுப்பு

மனிதரும் இங்குளர். தனித் தனி வகுப்புக்களுக்கு அவசியமான ஆசாரத் திருத்தங்களை எல்லா வகுப்புக்களுக்கும் பொதுவான இந்த ஸபை எப்படி வாதிக்கும்? நமது வகுப்பைத் தவிர மற்றொரு வகுப்பின் வீட்டு வழக்கங்களையும், ஆசாரங்களையும், உணர்ச்சிகளையும், தப்பெண்ணங்களையும் நாம் எவரும் உணரமாட்டோம். அந்தந்த வகுப்பிற்குரிய சீர்திருத்தங்களை அந்தந்த வகுப்பினர் செய்து கொள்வதே பொருந்தும்.

தேசீய ஜன சபை தேச முழுமைக்கும் பொதுவான விவகாரங்களைக் கவனிக்கும். ஆசாரத் திருத்தங்கள் முதலிய வகுப்பு விவகாரங்களை வகுப்புக்கள் கவனிக்க வேண்டும். இந்த தேசீய ராஜ்ய சபை ஆசாரச் சீர்திருத்த விஷயங்களை வாதிக்காதபடியால், இங்குள்ள பிரதிநிதிகள் ஆசாரத் திருத்த விஷயத்தில் ராஜ்ய விஷயங்களுக்கு ஸமமான அல்லது அதிகமான சிரத்தை பாராட்டவில்லை யென்று நினைத்துவிடக் கூடாது. இந்தப் பிரதிநிதிகளின் வகுப்பினர் ஆங்கங்கே தத்தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ள முயலாதிருக் கிறார்க ளென்றும் கருதலாகாது. ஒவ்வொரு வகுப்பிலும் உயர்ந்த நிலைமை பெறவேண்டி எத்தனை கஷ்டமான பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன என்பதைக் கண்ணும் செவியும் திறந்த மனிதன் எவனும் எளிதாக உணரலாம். நமக்குக் கிடைத்திருக்கும் உயர்ந்த கல்வியினால் இந்தப் பயன் விளைந்திருப்பது ஸஹஜமே.

இங்கிலாந்தினிடம் நம்பிக்கை

சென்ற காங்கிரஸ் சபையின் தொழிலைக் குறித்துச் சுருக்கமாகக் கொஞ்சம் சொல்லுகிறேன். சென்ற வருஷம் இந்த மாஸம் காங்கிரஸ் சேர்ந்ததற் கப்பால் கொஞ்சம் அபிவிருத்தி கிடைத்திருக்கிறது. நாம் நியாயமான விஷயத்தைக் கேட்டால், சீக்கிரமாக இல்லாவிட்டாலும், மெதுவாகவேனும் பிரிடிஷ் கவர்ன்மெண்ட் கொடுக்கத்தான் செய்யு மென்பதற்கு இஃதொரு ருஜு. ஆதலால் இங்கிலாந்தின் ஹ்ருதய சுத்தத்தை நம்பி நாம் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும். நியாயமும் நீதியுமானதை எவ்வளவு நஷ்டப்பட்டும் இங்கிலீஷ் ஜாதி செய்து தனது யோக்யதையை நிலைநிறுத்திக் கொள்ளும்.

சென்ற ஜன சபையில் நாம் ஒரு "ராயல் கமிஷன்" நியமிக்க வேண்டுமென்று முதலாவது பிரார்த்தனை செய்துகொண்டோம். இங்கிலாந்திலுள்ள அதிகாரிகள் ஒரு "ராயல் கமிஷன்" ஏற்படுத்த மனமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அங்ஙனம் செய்தால் இங்குள்ள அதிகாரிகளுக்குக் கஷ்டம் உண்டாகுமாம். இங்குள்ள கவர்ன்மெண்டாரின் கவுரவத்துக்கும் அதிகாரத்துக்கும் ஹானி நேரிடுமாம். இங்ஙனம் சொல்லுதல் இங்குள்ள அதிகாரிகளுக்கு அவமரியாதை யென்று நினைக்கிறேன். இப்போதுள்ள வைஸிராய் லார்ட் டப்ரின் ஆட்சித் தொழிலில் மிகுந்த அனுபவ முடையவர். ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை ஆளத் தெரிந்தவர்.

ஒரு விசாரணைக் கூட்டம் வந்து இங்கு விசாரணைகள் செய்வதனாலே இவர் பயந்துபோய் விடுவாரா? பார்லிமெண்ட் சபையின் கமிட்டி யொன்று நியமித்து இங்கிலாந்தில் ஸாக்ஷ்யம் விசாரிப்பதாகச் சொல்லுகிறார்கள். அது போதாது. அந்தக் கமிட்டி இந்திய விஷயங்களை நேரே கண்ணால் பார்க்க முடியாது. காதாலே கேட்கத்தான் முடியும். எனினும் இப்படி ஒரு கமிட்டியாவது நியமிக்கப் போவதாகச் சொல்லி யிருப்பது நமக்குச் சற்றே ஸந்தோஷம்.

வடமேற்கு மாகாணங்களுக்கும் பஞ்சாபுக்கும் சட்டசபை கொடுக்க வேண்டுமென்று நாம் ஒரு தீர்மானம் செய்தோம். அந்த விஷயத்தில் கொஞ்சம் அபிவிருத்தி நடந்திருக்கிறது. ஸமீபத்தில் கவர்ன்மெண்டார் வடமேற்கு மாகாணங்களுக்குச் சட்டசபை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களின் விஷயத்திலும் நமதாசையை நிறைவேற்றுவார்க ளென்று நம்புகிறோம். நான்காவது தீர்மானம் உத்யோக விஷயங்களைக் குறித்தது. இதிலும் நாம் சற்றே முன்னேற்றம் பெற்றுத்தான் இருக்கிறோம். ஏற்கெனவே உத்யோக விசாரணைக் கூட்டம் நியமனமாய் விசாரணை நடந்து வருகிறது. நமக்கு ஏதேனும் செய்யத்தான் வேண்டு மென்ற எண்ணம் அதிகாரிகள் உண்மையாகவே கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு மேற்படி கமிஷன் ஏற்படுத்தியது தக்க ருஜுவாகும். இந்த விஷயத்தில் நமக்கு வைஸ்ராய் மாத்திரமே யல்லாமல், இந்தியா மந்திரியும் அனுகூலமாகவே இருக்கிறார்கள்.

இந்தியா மந்திரியின் தீர்மானம் சொல்லுகிறது:

"இந்த விசாரணைக் கூட்டத்தின் நோக்கம் யாதெனில், அரசாட்சி உத்யோகங்களில் இந்தியா தேசத்து சுதேசிகளை அதிகமாகவும், மேலான பதவிகளிலும் நியமிக்க வேண்டு மென்று அவர்கள் செய்யும் பிரார்த்தனைகளுக்கு முழு நியாயம் கிடைக்கும்படி ஒரு ஆலோசனை செய்து முடிக்க வேண்டும்" என்கிறது.

இந்தியா தேசத்து சுதேசிகளின் வேண்டுதல்களுக்குத் தகுந்த நீதி செலுத்த வேண்டு மென்ற கொள்கை தமக்கிருப்பதாகத் தலை அதிகாரியே சொல்லுவதைப் பார்த்தீர்களா? அந்த விசாரணைக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். நாம் கேட்பதெல்லாம் நியாய மென்றும், யாரும் அங்கீகரிக்கத்தக்க தென்றும் எல்லாருக்கும் தெளிவுறக் காட்ட முடியு மென்றே நம்புகிறோம்.

நம்மை ஆள்வோரின் கருத்து

ப்ரிட்டிஷ் அதிகாரிகளின் கருத்தை விளக்குவதற்கு மற்றொரு ருஜூ காட்டுகிறேன். ஐம்பத்து மூன்று வருஷங்களுக்கு முன்னே, சுதேசிகளுக்குத் தம்முடைய உரிமைகள் இன்னவென்று சரியாகத் தெரியாமலிருந்த காலத்தில், இங்கிலிஷ் ராஜ தந்திரிகள் தாமாகவே இந்தியா விஷயத்தில் அனுஸரிக்கத் தக்க வழி யொன்று நிர்மாணஞ் செய்து கொண்டனர்.

அதைப்பற்றி நீண்ட விவாதம் நடந்தது. எல்லாச் சார்புகளினின்றும் அதைப் பரியாலோசனை செய்தனர்.

ஜனங்களுக்கு ராஜரீக அதிகாரம் கொடுப்பதனால் ஆபத்து விளையு மென்பதையும், ஜனங்களுக்குத் திறமை போதா தென்பதையும் மற்றும் பலவிதமான ஆக்ஷேபங்களையும் யோசனை பண்ணிப் பார்த்தார்கள்.

கடைசியாக உறுதியான ஸம்சயத்துக் கிடமில்லாத தெளிவான பாஷையில் ப்ரிடிஷ் ஆட்சி நீதி வழியையே அனுஸரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து விட்டனர். மனுஷ்ய ஜாதியின் ஆறிலொரு பங்கினராகிய பாரத தேசத்தாரை மேன்மைப் படுத்துவதே சரியான வழி யென்று கொண்டார்கள்.

பாரத தேசம் அவர்களுடைய கையில் ஈசன் சுமத்திய பொறுப்பென்றுணர்ந்து, மிஸ்டர் மக்காலே சொல்லியதுபோலே "கடமையின் தெளிவான பாதை"யில் நடக்கத் துணிந்தனர்.

பாரத தேசத்து ஜனங்கள் பிரித்தானியாவின் அடிமைகளாய், ப்ரிடிஷ் உத்யோகஸ்தர் முன்னே அற்பத் தனமான முகஸ்துதி பேசுவோராய் நிற்கவேண்டு மென்பது தமது நோக்கமில்லை யென்றும், பாரத தேசத்தார் விடுதலை பெற்று ஸ்வராஜ்யம் நடத்தச் சக்தி யுடையவராக ஆகவேண்டு மென்பதே தமது விருப்பமென்றும் அப்போது மக்காலே சொன்னார். (கரகோஷம்) இந்த ராஜ்ய தந்திரமே 1833ஆம் வருஷத்தில் கைக்கொள்ளப்பட்டது.

அந்த வருஷத்தில் ஏற்பட்ட சட்டத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

> "மேலே குறிப்பிட்ட ப்ரதேசங்களின் சுதேசிகளிலே எவனும், அங்கு குடி யிருக்கும் ப்ரிடிஷ் குடி எவனும் தன் மதம், பிறப்பிடம், சந்ததி, நிறம் என்பவை காரணமாகக் கம்பினியாரின் கீழே எவ்விதமான உத்யோகம், ஸ்தானம் அல்லது நியமனம் பெறுவதற்கும் தகுதி யற்றவன் ஆகமாட்டான்." (கரகோஷம்)

அவ்வளவுதான் இப்போதும் கேட்கிறோம். ஐம்பது வருஷங்களுக்கு முன்பு நாம் வேண்டுமென்று கேட்கத் தெரியாம லிருந்த காலத்தில் அவர்களாகவே வாக்குக் கொடுத்த விஷயத்தை இப்போதாவது யோக்யமாக அனுஷ்டானத்தில் கொண்டு வரவேண்டு மென்பதை மேற்படி விசாரணைக் கூட்டத்தாரிடமும் ஸர்க்காரிடமும் வற்புறுத்திக் கூறுகிறோம். (கரகோஷம்)

மகாராணியின் ராஜ விளம்பரம்

பின்பு 1857-ம் வருஷத்தில் நமது நாட்டில் குழப்பங்கள் நடந்தன. அதில் ப்ரிடிஷாருக்கு வெற்றி உண்டாயிற்று. கஷ்டங்களை விலக்கிப் பகைவரை எல்லாம் அடக்கி விட்ட பின்பு ப்ரிடிஷார் பண்டுபோலே மேலான நல்லெண்ணங்களை உடையவராய் நமக்கு அற்புதமான ராஜ சாஸனம் கொடுத்தனர்.

அந்த ராஜ ஸ்ரீமுகம் நமக்கு 1833-ம் வருஷத்து சாஸனத்தைக் காட்டிலும் அருமையானது. ஆங்கிலேயருடைய சரித்திரத்தில் "மாக்நா கார்த்தா" என்ற மஹா சாஸனம் எப்படியோ நமக்கு அப்படி இது. இந்தப் புகழ்மிக்க ஸ்ரீமுகத்தின் வாக்யங்களை இப்போது திரும்பக் கூறுதல் அவசியமில்லை. அது உங்கள் உள்ளத்தில் வரையப்பட்டுளது. அந்த ஸ்ரீமுகம் 1833ஆம் வருஷத்தில் நிச்சயிக்கப்பட்ட வழியை உறுதி பண்ணியது மாத்திரமே யல்லாமல், மேலும் போகிறது.

நாம் இப்போது வேண்டுவன, இனி வேண்டக் கூடியன எல்லாவற்றுக்கும் ஆதாரங்கள் மேற்படி ஸ்ரீமுகத்தின்கண்ணே உள. இப்போது விசாரணை செய்யும் கமிஷனுக்கும் ஸர்க்காருக்கும் முன்னே போய் நின்றுகொண்டு நாம் மேற்படி ஸ்ரீமுகத்தைத் திருப்பச் சொல்ல வேண்டியதே நம்முடைய கடமை. நமக்கு வேண்டிய தெல்லாம் வெகு ஸ்பஷ்டமான பாஷையில் ஏற்கெனவே இந்த சாஸனத்தின் மூலமாக வாக்குக் கொடுத்தாய் விட்டது. அதில் சொல்லிய உதாரமான வரங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதே நாம் இப்போது செய்யும் பிரார்த்தனை.

இந்த விஷயத்தைக் குறித்து நான் எவ்வளவு நேரம் பேசின போதிலும் என் மனதில் உள்ளதை யெல்லாம் வெளியிட்டுக் கூறுதல் அரிது. ஆதலில் இத்துடன் நிறுத்துகிறேன்.

சட்டசபைகளை விசாலித்தல்

சட்டசபைகளில் ஜனப் பிரதிநிதிகளைக் கூட்டி அவற்றைச் சீர்திருத்தி விசாலமாக்க வேண்டுமென்பதாகச் சென்ற வருஷத்தில் நாம் மற்றொரு தீர்மானம் செய்துகொண்டோம். இதில் மற்றோரடி எடுத்து வைக்கப் போகிறோம்.

பிரதிநிதி அம்சம் சட்டசபையில் சேர்ப்பது எங்ஙனம் ஸாத்திய மென்பதைக் காட்டி நாம் ஓர் ஆலோசனை தயார்செய்து ஸர்க்கார் பார்வைக்குக் கொடுக்கப் போகிறோம். பிரதிநிதி அமிசம் சேர்ந்தால் அதில் ஸர்க்காருக்கே நன்மை உண்டு. எங்ஙன மெனில்,

இப்போது சட்டங்கள் நமக்குத் திருப்தி இல்லாமல் இருந்தால் நாம் கேவலம் ஸர்க்காரைப் பழித்து முணுமுணுக்கிறோம். சட்டசபைகளில் நம்மவரும் சிலர் இருந்தபோதிலும் அவர்களிடத்திலேகூட நாம் முகாந்தரம் கேட்க பாத்தியதை இல்லாதவர்களாக இருக்கிறோம். அவர்கள் நம்முடைய பிரதிநிதிகள் அல்லர். ஆகவே வேண்டாத சட்டங்களில் நமக்குண்டாகும் அதிருப்தியிலிருந்து கவர்ன்மெண்டார் தப்ப வழியில்லை.

நம்முடைய பிரதிநிதிகள் கூடி யிருந்து பிழை செய்து நமக்கு விருப்ப மில்லாத சட்டங்கள் செய்தால், அதிலிருந்து விளையும் ஜன கோபத்தினின்று ஸர்க்காருக்குத் தப்ப வழி உண்டு. "ஹோ, நாங்கள் என்ன செய்வோம்? இதோ உங்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், உங்களுடைய விருப்பங்களையே அவர்கள் தெரிவித்ததாக நினைத்தோம், அதனாலே சட்டத்தை உறுதி செய்தோம். எங்கள் மேலே குற்றமில்லை" என்று சொல்லி நழுவி விடலாம். அப்படி யில்லாமல் கேவலம் ஆங்கில உத்யோகஸ்தர் எத்தனை கல்வி, கேள்வி, அறிவுக் கூர்மை உடையோராயினும், அன்றி வானத்திலிருந்து நேரே குதித்து வந்தவர்களாக இருந்தபோதிலும், நமது ஜனங்களுடைய மனதிலுள்ள நோக்கங்கள் நமக்கு விளங்குவதுபோலே அவர்களுக்கும் விளங்க ஹேதுவில்லை. நம்முடைய எண்ணங்களை வெளியிட நம்முடைய பிரதிநிதிகள் இருந்தால், நமக்குத் திருப்தியான சட்டங்கள் கிடைக்கும். நமக்கு எது திருப்தி தருவதோ அதுவே ஸர்க்காருக்குத் திருப்தி தருதல் வேண்டும். நமக்கு எது நல்லதோ அதுவே அவர்களுக்கும் நல்லது.

பார்லிமெண்டில் பிரதிநிதி

இதிலிருந்து நமக்குப் பார்லிமெண்ட் சபையிலும் பிரதிநிதிகள் வேண்டுமென்ற செய்தி ஞாபகத்துக்கு வருகிறது. இங்குள்ள ஆட்சியின் வடிவமும், குணமும் பார்லிமெண்ட் சபையோரின் தீர்மானப்படியே நிச்சயிக்கப்படுகின்றன. என்ன விஷயமாயினும் சரி, சட்டசபையோ உத்யோக விஷயமோ - எதுவாயினும்,

பார்லிமெண்ட் சபையார் இப்போதுள்ள விதிகளை மாற்றினா லொழிய எவ்விதமான சீர்திருத்தத்துக்கும் வழி யில்லை. யாதேனுமொரு விஷயத்தைக் குறித்து இந்த தேசத்தாரின் கருத்து யாதென்பதை அறிவிக்க அங்கே நமது தேசத்தவர் ஒருவரு மில்லை. இந்த விஷயத்தைச் சில பார்லிமெண்ட் மெம்பர்களே என்னிடம் குறிப்பிட்டுக் காட்டினர். இந்தியாவின் ஜனங்களுக்கு யதார்த்தமான பிரதிநிதி ஒருவர்கூட இல்லாமல் இருப்பது பார்லிமெண்ட் சபைக்கே ஓர் ஊனமென்பதை அவர்கள் நெடுங்காலமாக உணர்வதாகக் கூறினர்.

இந்தியாவின் வறுமை

நமது தேசம் வறுமையில் மூழ்கியிருப்பது பற்றி வருந்துகிறோ மென்பது நாம் இங்கு பேசப்போகிற விஷயங்களில் முக்யமானது. நாம் உத்யோகங்கள் வேண்டுமென்று கேட்பது இங்கிலிஷ் படித்த சிலருடைய திருப்திக்காக மாத்திரமே யென்று பலர் கருதுகிறார்கள். இதை நீங்கள் நேரே ஆராய்ச்சி செய்தால், நம்மவர் மேல்ஸ்தானங்கள் பெறுவதினின்றும் ஜனங்களுடைய தரித்திரம் குறைய ஹேது வுண்டாகுமென்பதை எளிதில் உணர்வீர்கள். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஸர் எவெலின் பேரிங் என்பவர் "இந்தியா ஜனங்கள் மிகவும் கொடுமையான வறுமையிலே வருந்துகிறார்கள்" என்று சொன்னார். இப்போதுள்ள அரசிறை மந்திரியும் அந்த வார்த்தையைத் திரும்பச் சொல்லி யிருக்கிறார். நமது கஷ்டங்களின் மூலாதாரங்களில் இது முக்யமான தென்ற விஷயம் கவர்ன்மெண்டார் புத்தியில் புலப்பட்டு வருவது நமக்குச் சற்றே அனுகூலந்தான்.

1880ஆம் வருஷம், ஜனவரி மாதம் 26ஆம் தேதி இந்தியா மந்திரி நாணய சம்பந்தமான விவாதத்தி னிடையே பொக்கிஷ மந்திரிக் கனுப்பிய ஓலையில் எழுதி யிருக்கும் சில வார்த்தைகளைப் பார்க்கும்போது அதிகாரிகள் விஷய நிலைமையை அறிந்துகொண்டு தீர்ப்புக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடனேதான் இருக்கிறார்க ளென்றும், தீக்கோழிபோலே கண்ணை மூடிக்கொள்ளவில்லை யென்றும் தெளிவாகிறது. இந்தியாவின் வறுமையை நான் ஆரம்பத்தில் உலகறியக் கூறி

அன்னிய உத்தியோகஸ்தரின் நியமனம் அவ் வறுமைக்குள்ள காரணங்களில் ஒன்றென்று காட்டியபோது என்னைப் பலர் பரிஹாஸம் செய்தார்கள். இப்போது அதனை அதிகாரிகளே அங்கீகாரம் செய்கிறார்கள். மேலே குறிப்பிட்ட ஓலையின் கண்ணே இந்தியா மந்திரி பின்வருமாறு கூறுகிறார்:

"தீர்வை விஷயத்தையும் ஸர்க்கார் வரும்படிக்குள்ள ஆதாரங்களின் விஷயத்தையும் யோசிக்கும்போது இந்தியாவின் நிலைமை வெகு விசித்திரமானது. ஜனங்கள் பழைய வழக்கங்களைக் கைக்கொண்டு புதுமைகளை விரும்பாதோர்; ஆதலால் புதுத் தீர்வை போடும் விஷயத்தில் மிகவும் அதிருப்தி காட்டுகிறார்களென்ற ஒரு காரணத்தால் மாத்திரமன்று; ஆட்சியின் குணமும் ஒரு காரணம். அது அன்னியர் வசத்தில் இருக்கிறது. எல்லா முக்ய உத்யோகங்களையும் அன்னியர் வஹிக்கிறார்கள். சேனையிலும் அதிகத் தொகையாக இருக்கிறார்கள்.

தேசத்தின்மீது சுமத்தப்பட்ட பிறர் ஆட்சியின் பயனாக ஏற்படும் பெரும் செலவை வகை செய்யப் புதிய தீர்வை போடுவோமானால், அதில் அதிருப்தி யுண்டாய் ராஜாங்கத்துக்கு விபத்து நேரிடும். இந்தியாவின் அரசாட்சியில் சம்பந்தமற்றோராய் அதன் இயல் யறியாதிருப்போர் இந்தச் செய்தியை உணரார். அந்த ஆட்சிக்குப் பொறுப்பாளிகள் நெடுங்காலமாகவே அந்த விபத்தைப் பெரிதாகக் கருதி யிருக்கின்றனர்" என்கிறார்.

நூறு வருஷங்களாக ப்ரிட்டிஷ் ராஜ்யம் நடந்த பின்னும் இந்தியா தேசத்தார் இத்தனை ஏழைகளாக இருப்பதன் காரணமென்னவென்று ஆங்கிலேய ஜனங்களின் பொது ஹ்ருதயம் கேட்கும். இங்கிலாந்திலுள்ள "பஞ்ச்" என்பதொரு விகடப் பத்திரிகையிலே ஜான் புல் (அதாவது இங்கிலீஷ்காரன்) படம் போட்டு "அட! இந்தியாவில் புதையல் இருக்கிறதென்று நினைத்தேன்! அவள் (இந்தியா) இத்தனை பிச்சைக்காரி என்று தெரியாதே!" என்று அவன் சொல்லி வியப்பதாக வரையப் பட்டிருக்கிறது.

இந்தியாவின் பிரமாண்டமான செல்வம் என்ற கற்பனை

இந்தியாவில் அளவற்ற புதையல் மறைந்து கிடப்பதாக எண்ணுதல் பெருந் தவறு. சட்டசபைகளில் நமது பிரதிநிதிகளுக் கிடம் கொடுத்தால், அவர்கள் நமது செல்வத்தையும் க்ஷேமத்தையும் வேரறுக்கும் காரணங்கள் எடுத்துக்காட்டி அவற்றைத் தீர்ப்பதற்குரிய மருந்தை அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நமக்கேற்பட்ட நன்மைகளும் ஆள்வோரின் மேலான கொள்கைகளும் மேன்மேலும் வறுமையாகிய படுகுழியில் நமது தேசம் அழுந்திக் கொண்டே போனால் விழலாய் விடும். ஒரு காலத்தில் என்னை எல்லாரும் அழுமூஞ்சி யென்று சொல்லிப் பழித்தனர்.

இப்போது நமது நாட்டின் வறுமையை அதிகாரிகளே ஒப்புக்கொள்ளுகிறார்கள். எனவே, நாடு முழுதும் பரவி யிருக்கும் வறுமையையும் அதனை நீக்குவதற்கு அவசியமான முதற் படிகளையும் பற்றிய நம்முடைய கொள்கைகளை எடுத்துரைத்தல் இந்த ஜன சபையின் உரிமையும் கடமையும் ஆகும். இந்தியாவுக்கு க்ஷேமம் பண்ணவேண்டுமென்ற எண்ணம் இங்கிலாந்தின் ஹ்ருதயத்தில் உண்டு. நாம் போதுமானபடி உரத்த குரலில் போதுமான விடாமுயற்சியுடன் கேட்போமானால் நமது பேச்சு வீண் போகாது. (நீண்ட கரகோஷம்)

முடிவுரை

இன்னும் மூன்று தினங்களுக்குள்ளே இந்த ஜன சபை முன்பு வேறு பல விஷயங்களும் விவாதத்துக்கு வரும். பிரதிநிதிகளின் பெயர்களைக் கொண்டும், எனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டும் ஆலோசனைகளை யெல்லாம் அவர்கள் நிதானத்துடன் நடத்துவார்க ளென்று நிச்சயமாக நம்புகிறேன். தாம் வாழும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் அனுகூலங்களை அறிந்திருப்பார்களென்று கருதுகிறேன்.

நம்முடைய க்ஷேமத்துக்கு அவசியமென்று நாம் எந்த விஷயத்தைக் காட்டினாலும் அதை அதிகாரிகள் செய்து கொடுக்க மனமுடையவராக இருத்தல் நம்மை நமது தொழிலில்

உற்சாகப்படுத்துதற் குரிய செய்தியாம். இன்னும் அதிக வார்த்தைகள் கூறி உங்களை இங்கு நெடு நேரம் தாமதிக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை.

சென்ற வருஷம் வாதிக்கப்பட்ட அம்சங்களில் எத்தனை அபிவிருத்தி கிடைத்திருக்கிற தென்பதை உங்களுக்குச் சற்றே அறிவித்து விட்டேன். சென்ற வருஷத்துத் தீர்மானங்களிலும் இவ் வருஷம் நாம் செய்யப்போகிற தீர்மானங்களிலும் கண்ட அம்சங்களில் இன்னும் அதிக முன்னேற்றம் நிகழ்ந்திருப்பதாக நாம் அடுத்த வருஷக் கூட்டத்தில் மகிழ்ச்சி கொண்டாட இடமிருக்கு மென்று நம்புகிறேன்.

நமக்கு நாம் உண்மையாக இருந்தால் நமக்கு ராஜாங்கத்தார் கொடுத்திருக்கும் மேலான கல்விக்கும், நமது பெருந்தன்மைக்கும் குறைவின்றி நாம் நடந்துகொண்டால், நமக்குக் கொடுத்திருக்கும் பேச்சு சுதந்திரத்தைக் கொண்டு நாம் பயமின்றிப் பேசுவோமானால், கவர்ன்மெண்டார் நம்முடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து நாம் செய்யும் நியாயமான வேண்டுகோள்களுக்கு இணங்குவார்க ளென்றே பெரும்பாலும் எதிர்பார்க்கலாம்.

இந்தச் சுருக்கமான ப்ரஸங்கத்தை முடிக்கு முன்னே என்னை இந்த உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தது பற்றி உங்களுக்கு மற்றொரு முறை நன்றி செலுத்துகிறேன்.

பிரதிநிதிகளின் பெயரால், நம்மெல்லோருக்கும் அன்புடன் நல்வரவு கூறி உபசாரம் செய்த நமது வங்காளத்து ஸஹோதரருக்கு மீட்டு மொரு முறை நல்லுணர்ச்சி தெரிவிக்கிறேன்.

ஒரு குறிப்பு

முதல் ஜன சபைக் கூட்டத்தை நாம் சற்றே விஸ்தாரமாக வர்ணித்ததுபோலே இரண்டாம் கூட்டத்தை வர்ணிக்கவில்லை. ஆனால், பிரதிநிதிகள் வருஷந்தோறும் அதிகரித்துக்கொண்டே போனார்கள் என்பது மாத்திரம் இங்கே அவசியம் தெரிவிக்க வேண்டிய விஷயம். காங்கிரஸ் சபையின் முக்கியத் தன்மை அதிகப்பட்டு வந்தது.

இனி அடுத்த வருஷத்து ஸபாநாயகராக வந்த ஸ்ரீமான் தியாப்ஜியின் உபந்யாஸத்தை நீங்கள் படிக்கும்போது அதில் “1885-ம் வருஷத்தில் பம்பாயில் கூடிய கூட்டத்துக்குச் சுமார் நூறு பிரதிநிதிகள் வந்தனர். அடுத்த 1886-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய கூட்டத்துக்குச் சுமார் நானூற்று நாற்பது பிரதிநிதிகள் வந்தனர். இந்த வருஷம் சென்னைப் பட்டணத்து சபைக்கு அறுநூறு பிரதிநிதிகளுக்கு மேலாக வந்திருக்கிறோம்” என்று அவர் சொல்லுவதைக் காண்பீர்கள்.

தேச ஜனங்கள் வருஷம் ஏற ஏற ஜன சபையில் அன்பையும் ஆதரவையும் மேன்மேலும் காட்டிச் சென்றனர். அதற்கிணங்கவே காங்கிரஸ் விஷயத்தில் ராஜாங்கத்தாருடைய மதிப்பும், விரோதிகளுடைய பயமும், கோபமும் மிகுதிப்பட்டுக் கொண்டு வரலாயின.

மேலும் இந்த 1886ஆம் வருஷத்து ஜன சபைக் கூட்டத்தில் உபசரணைக் கமிட்டிக்குத் தலைமை வகித்த ஸ்ரீமான் பண்டித ராஜேந்த்ரலால் மித்ரர் செய்த உபந்யாஸத்தில் காணப்படும் வாக்ய மொன்று இங்கு முக்யமாகத் தெரிவிப்பதற்குரியது. “நாம் எல்லோரும் ஒரே ராஜரீக பந்தத்தால் கட்டுண்டிருக் கிறோம். நாம் ஒரே ஜாதி” என்றார் ராஜேந்த்ரலால் மித்ரர்.

இரண்டாவது ஜன சபைக் கூட்டத்தில் செய்த தீர்மானங்கள்

I. முதல் தீர்மானம்:

மஹாராணியின் ஆட்சியில் 50 வருஷம் ஆனதற்காக வாழ்த்து

மஹாராணியின் அனுகூலமான, என்றும் மறப்பரிய, கீர்த்தி மிக்க ஆட்சியில் ஐம்பது வருஷம் முடிவுபெற்றதைக் குறித்துச் சக்ரவர்த்தினியிடம் கடமைப்படி உண்மையான மகிழ்ச்சிகள் தெரிவிப்பதுடன், பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளினின்றும் பிரதிநிதிகள் வந்து கூடிய இந்த ஜன சபை ப்ரிடிஷ் ராஜ்யத்தின்மீது அவள் இன்னும் பல பல வருஷம் ஆள வேண்டுமென்று வாழ்த்துகிறது.

II. இரண்டாம் தீர்மானம்:

இந்தியாவின் வறுமையும் பிரதிநிதி ஏற்பாடுகளும்

பாரத ஜனங்களில் பெருந் தொகையாரின் வறுமை வளர்ந்து கொண்டு போவதை இந்த ஜன சபை அனுதாபத்துடனும், மிகுந்த கலக்கத்துடனும் நோக்குகிறது; இந்த விஷயத்தை கவர்ன்மெண்டார் புறக்கணிக்கவில்லை யென்றும் சில பரிஹாரங்கள் தேடிக்கொண்டுதான் வருகிறார்க ளென்றும் இந்த ஜன சபை அறியுமே யாயினும் பிரதிநிதிகள் நியமித்து ராஜ்யம் நடத்துவதே ஜனங்களின் நிலைமையைச் சீராக்குவதற்கு மிகவும் முக்யமான ஸாதகமென்ற தனது பலமான கொள்கையை இந்த ஜன ஸபை குறிப்பிடுகிறது.

III. மூன்றாம் தீர்மானம்:

சட்டசபைகளை விசாலித்தல்

1885ஆம் வருஷத்துக் காங்கிரஸ் சபையின் மூன்றாவது தீர்மானத்தை இந்த ஜன சபை மீண்டும் பலமாக உறுதி செய்வதுடன், அதில் கண்டபடி கவர்னர் ஜெனரல் சட்டசபையையும், மாகாண சபைகளையும் சீர்திருத்தி விசாலமாக்குதல் இந்தியா - இங்கிலாந்து ஆகிய இரண்டு தேசங்களுக்கும் ஒருங்கே அனுகூலமென்ற தனது நம்பிக்கையையும் தெளிவாக அறிவித்துக் கொள்ளுகிறது.

IV. நான்காந் தீர்மானம்:

சில யோசனைகள்

முக்யமான மேற்கூறிய மூன்றாம் தீர்மானத்திலுள்ள சீர்திருத்தத்தை நிறைவேற்றுகையில் கவர்ன்மெண்டார் பின்வரும் யோசனைகளில் காணும் நமது கருத்துக்களை விவரமான பரீக்ஷையின் மேல் அவர்களுக்குத் தோன்றக்கூடிய மாறுதல்களுடன் அனுஸரிக்கத் தகும் என்று இந்த ஜன சபை அபிப்பிராயப்படுகிறது. இவ் விஷயத்தில் ஜன சபையின் யோசனைகள் பின்வருமாறு:

1. வைஸ்ராய் சபையிலும் மாகாண சபைகளிலும் சபையாரின் தொகையைத் தகுந்தபடி அதிகப்படுத்த வேண்டும்; அங்ஙனம் விரிவு பெற்ற சபையின் மெம்பர்களில் பாதிக்குக் குறையாமல்

ஜனங்களாலே சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். உத்தியோகஸ்தர் நாலில் ஒரு பங்குக்கு மேற்படாமல் 'உத்யோக மெம்பர்கள்' ஆக இருக்கலாம். உத்யோகஸ்தர் – அல்லாதார் என அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட ஸாதாரண மெம்பர்களின் தொகையும் நாலில் ஒரு பங்குக்கு மேலே போகக்கூடாது.

2. மாகாண சபைகளுக்கு மெம்பர் எடுக்கும் உரிமை அதனை அறிவுடனும் ஸ்வாதீனத்துடனும் செலுத்தக் கூடியவராக முதற் பார்வையிலேயே தோன்றும் வகுப்புக்களுக்கும் மனிதருக்கும் மாத்திரமே கொடுக்கலாம். வங்காளத்திலும் பம்பாயிலும் சட்டசபையாரை முனிஸிப்பாலிடிகள், ஜில்லா சபைகள், வியாபார சங்கங்கள், யூனிவர்ஸிடிகள் – இவற்றின் மெம்பர்கள் எடுக்கலாம் அல்லது கல்வியிலும், உடைமையிலும் தகுந்த மதிப்புடையவர்களைத் திரட்டித் "தெரிந்தெடுப்போர் மண்டல" மொன்று அமைக்கலாம். சென்னையில் சட்டசபையாரை ஜில்லா போர்டுகள், வியாபார சங்கங்கள், யூனிவர்ஸிடிகளின் மெம்பர்கள் தெரிந்தெடுக்கலாம் அல்லது மேற்படி சபைகளால் குறிக்கப்பட்டோர் பாதியும், ஸர்க்காரால் நியமிக்கப்பட்டோர் பாதியுமாக ஒரு தொகுதி செய்து அத் தொகுதியார் எடுக்கும்படி வைக்கலாம். வடமேற்கு மாகாணங்களிலும் பஞ்சாபிலும் சட்டசபை மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் பொருட்டாக முனிஸிபாலிட்டி, ஜில்லா போர்டுகளால் குறிக்கப்பட்ட மெம்பர்களும் ஆறில் ஒரு பங்குக்கு மேற்படாமல் ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மெம்பர்களும் சேர்ந்த ஜாப்தா வொன்று அமைக்கலாம். ஆனால், இப்போது நகர சபைக்கு மெம்பர்கள் தெரிந்தெடுப்பதில் உள்ள விதிகளே ஜில்லா போர்டுகளுக்கும் உபயோகிக்க வேண்டும்.

விவசாயிகளும் ஜில்லா சபைகளுக்கு மெம்பர் எடுக்கும் உரிமை பெற வேண்டும். இந்த விதிகள் வெவ்வேறு மாகாணங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு வகையில் ஏற்படுத்தலாம். ஆனால், என்ன விதிகள் ஏற்பட்டாலும், தேசத்தில் எல்லா வகுப்புக்களுக்கும் எல்லாப் பெரிய இனங்களுக்கும் திருப்திகரமான பிரதிநிதி அனுஷ்டானம் ஸ்தாபனமாக வேண்டும்.

3. வைஸ்ராய் சபையில் ஜனப் பிரதிநிதிகளை மாகாண சபைப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்க வேண்டும்.

4. எந்த சபையிலும் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், ராஜாங்கத்தால் நியமிக்கப்பட்ட மெம்பர்களும் யாருமே அந்த மெம்பர் ஸ்தானத்தை ஒட்டி எவ்விதமான ஸர்க்கார் சம்பளமும் வாங்கக் கூடாது. ஆனால், ஏற்கெனவே ஸர்க்காரிடம் இதர கார்யங்களுக்காகச் சம்பளம் அல்லது படி பெறுவோர் இந்த மெம்பர் ஸ்தானத்தை ஒட்டி அதை விலக்க வேண்டிய அவசியமில்லை. எல்லா மெம்பர்களுக்கும் ஸ்தானத்தை ஒட்டின அளவிற்கு யாத்திரைச் செலவுகள் கொடுக்க வேண்டும்.

5. தெரிந்தெடுக்கப்பட்டோர், நியமிக்கப்பட்டோர் என்ற இரண்டு வகையிலும் சபையில் ஸ்தானம் பெறும் உரிமை இந்தியாவில் வாஸம் செய்யும் எல்லாருக்கும் ஜாதி, நிறம், குலம், மதம் என்ற பேதங்களைக் கருதாமல் கொடுக்க வேண்டும்.

6. எல்லாச் சட்டங்களையும் இந்த சபையாரின் சோதனைக்குட் படுத்த வேண்டும். பணத் திட்டங்கள் உள்பட எல்லாப் பண விவகாரங்களும் - அவை தீர்வை யேற்றம் கருதினாலும், கருதாவிடினும் - இந்த சபை முன்பு காட்ட வேண்டும். அவற்றை இந்த சபையார் சோதிக்க வேண்டும்.

உத்யோக மெம்பர்களிடத்தில் - அல்லது குறிப்பிட்ட இலாகாவுக்கு அதிகாரி யென நிற்கும் தனி மெம்பரிடம் - சரியானபடி முன்னறிக்கை கொடுத்துவிட்டு எந்த மெம்பரும் ஆட்சியின் எந்த இலாகா விஷயமாகவும் தனக்கிஷ்டமான கேள்வி போடலாம். பின்னே சொல்லப் போகிற விதிவிலக்கை நீக்கி மற்றப்படி யெல்லாம் பிரதிநிதிகளின் கேள்விக்கு உத்யோகஸ்தர் உத்தரம் சொல்ல வேண்டும். விஷயத்தைத் தெரிந்து கொள்வதற் கவசியமான தஸ்தாவேஜுகளின் பிரதிகளும் கொடுக்க வேண்டும்.

உத்தரத்தின் மேல், சபையார் மேற்படி கேள்வியை ஆலோசனை செய்து வாதிக்க வேண்டும். அதன் மீது பெரும் பகுதியாருக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி தீர்மானங்கள் பதிவு செய்ய வேண்டும். ஆனால், விசாரணைக் கிடமான விஷயம்

அன்ய ராஜ்ய சம்பந்தங்களைப் பற்றியேனும், படை வகுப்பைப் பற்றியேனும் அல்லது வேறெந்த வகைகளிலும் கேட்ட தகவல் கொடுப்பதனால் பொது நன்மைக்கு ஹானி நேரிடுமென்று நினைக்கும்படியும் இருக்குமானால், அதிகாரிகள் அதைத் தெரிவித்து ஜவாப் கொடுக்க மறுத்துவிடலாம்.

7. சபையில் பெரும் பகுதி செய்யும் தீர்மானத்தைப் புறக்கணிக்கும் உரிமை அதிகாரிகளுக் குண்டு.

ஆனால், இந்த உரிமையைச் செலுத்தும் பொழுதெல்லாம் அங்ஙனம் செலுத்தும்படி நேரிட்ட முகாந்தரங்களை ஒரு மாதத்துக்குள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

புறக்கணித்தோர் மாகாண அதிகாரிகளானால் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு விவரமான முகாந்தரம் தெரிவிக்க வேண்டும். இந்தியா கவர்ன்மெண்டாரே புறக்கணித்தோரானால் அவர்கள் விஷயத்தை யெல்லாம் விஸ்தாரமாகத் தாம் திரஸ்கரிக்க நேர்ந்த காரணத்துடன் எழுதி இந்தியா மந்திரிக்கு முகாந்தரம் அனுப்ப வேண்டும்.

புறக்கணிப்புற்ற பெரும் பகுதியார் இந்தியா கவர்ன்மெண்ட், இந்தியா மந்திரி மூலமாக ஆக்ஷேப விண்ணப்பம் கொடுத் தனுப்பினால், அதை ஏற்றுக்கொண்டு விசாரணை செய்யவும், வேண்டிய தஸ்தாவேஜுகளையும் தகவல்களையும் தருவிக்கவும், பெரும் பகுதிக்குச் சார்பாகவேனும் எதிராகவேனும் தகுந்த ஸாக்ஷிகளை விசாரிக்கவும், பிறகு முழுப் பார்லிமெண்ட் முன்னே அதைப் பற்றி அறிக்கை கொடுக்கவும் உரிமை யுடையதாகப் பார்லிமெண்ட் சபையில், சென்ற வருஷத்து மூன்றாம் தீர்மானத்தில் சிபார்சு செய்தபடி, ஒரு சாசுவதக் கமிட்டி நியமிக்கப்பட வேண்டும்.

V. *ஐந்தாம் தீர்மானம்:*

விசாரணைக் கூட்டம் நியமிக்க

சென்ற வருஷத்து மூன்றாந் தீர்மானத்திலும் இவ் வருஷத்து நான்காந் தீர்மானத்திலும் கேட்டபடி, இந்தியாவில் பரீக்ஷார்த்தமான பிரதிநிதி ஏற்பாடுகள் செய்வதற்கு, மிகச் சிறந்த வழி எது என்பதைக் குறித்து விஸ்தாரமான விசாரணை நடத்த, ஒரு கமிஷன் விசாரணைக் கூட்டம் நியமிக்கும்படி

இந்தியா மந்திரியிடம் அனுமதி பெறுமாறு, வைஸ்ராய்க்குத் தீவிரமான விண்ணப்பங்கள் அனுப்பச் சொல்லி, இந்த ஜன சபை நாட்டிலுள்ள பொது சபைகளையும் சங்கங்களையும் ப்ரார்த்தனை செய்கிறது.

VI. ஆறாம் தீர்மானம்:

கீழே பெயர் கூறப்பட்டவர்கள் சேர்ந்து ஒரு தொகுதியாய் உத்யோக பப்ளிக் ஸர்விஸ் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்து நமது சபை முன்னே தமது யோசனைகளை அறிக்கையிட வேண்டு மென்று இந்த ஜன சபை நியமிக்கிறது.

1. தாதாபாய் நவுரோஜி (பம்பாய்)
2. மணி அய்யர் (சென்னை)
3. ப்யாரி மோஹன் முகர்ஜி (கல்கத்தா)
4. ஜி. சுப்பிரமணிய அய்யர் (சென்னை)
5. மதிலால் கோஷ் (கல்கத்தா)
6. ஸுரேந்திரநாத் பானர்ஜி (கல்கத்தா)
7. கங்காப்ரஸாத வர்மா (லக்நவ்)
8. ராம்காளி சவுதரி (காசி)
9. குருப்ரஸாத் ஸேன் (பாட்னா)
10. பண்டித ப்ராணநாத் (லக்நவ்)
11. முன்ஷி காசிப்ரஸாத் (அலஹபாது)
12. நவாப் ரிஜா அலிகான் (லக்நவ்)
13. ஹமீத் அலி (லக்நவ்)
14. லாலா கன்யாலால் (அம்ரிதஸரஸ்)
15. கங்காதர ராவ் மாதவ சித்நாவிஸ் (நாக்பூர்)
16. ரஹிம்துல்லா ஸயானி (பம்பாய்)

VII. ஏழாம் தீர்மானம்:

ஆறாவது தீர்மானத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டியார் நமது பார்வைக்குக் கொண்டுவந்த அறிக்கையை இந்த ஜன சபை அங்கீகாரம் செய்துகொள்ளுகிறது.

காங்கிரஸ் கமிட்டியாரின் அறிக்கை

ஆட்சி உத்தியோகங்களின் விஷயமாக, ஜன சபையில் ஓரறிக்கை தயார் செய்துகொண்டு வரும்படி நியமிக்கப்பட்ட கணமாகிய நாங்கள் நேற்றுக் கூடிய கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களை ஒரேமனமாக அங்கீகாரம் செய்தவண்ணம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

1. பகிரங்கப் போட்டிப் பரீக்ஷை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலத்தில் நடத்த வேண்டும்.

2. இந்த ஸம காலப் பரீக்ஷைகளுக்கு மஹாராணியின் குடிகளில் எல்லாப் பகுதியாரும் அபேக்ஷகராக வரலாம்.

3. தேறினோரின் ஜாப்தாவில் இரண்டு நாடுகளையும் கலந்து திறமைக்குத் தக்கபடி பெயர்களை அடுக்கிப் போட வேண்டும்.

4. பரீக்ஷா பாகங்களில் அராபி, ஸம்ஸ்க்ருத பாஷைகளுக்குள்ள முக்கியத் தன்மையை ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

5. பகிரங்கப் போட்டிப் பரீக்ஷைக்குத் தகுதியான பிள்ளைகளின் பிராயம் 19-க்குக் கீழே போகக் கூடாது. ஸர் ஸி. ஏச்சிஸன் சொல்லியபடி 23-க்கு மேலும் போகக் கூடாது.

6. ஸம காலம் பரீக்ஷைகள் ஏற்படுத்திய பிறகு இப்போதுள்ள "கட்டளை - உத்தியோகப்" பரீக்ஷையை ரத்து செய்து விடலாம்.

7. இப்போது நடக்கும் விதிகளின்படி "கட்டளை ஸிவில் ஸர்விஸ்" நியமனங்கள் செய்வதிலேகூட, ஒப்பந்த மில்லாத உத்தியோக வகுப்பினருக்கும், திறமையின் ருஜுக் காட்டும் மற்ற கார்யஸ்தருக்கும் அவ்வித உத்தியோகங்கள் திறக்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்த உத்தியோகங்களில் முதல் நியமனங்களைத் தவிர மற்றப்படி படிப்பு வேண்டிய நியமனங்களுக் கெல்லாம் போட்டிப் பரீக்ஷைகள் வெவ்வேறு மாகாணங்களில் வைத்து அந்தந்த மாகாணங்களில் உள்ள மஹாராணியின் இயற்கைக் குடிகள் மாத்திரமே அந்தப் பரீக்ஷைகளுக்குப் போகும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரால் கேட்கப்பட்ட கேள்விகளில் உள்ள முக்யாம்சங்களுக்கு மேலே உத்தரம் சொல்லி யிருக்கிறோம். இன்னும் விஸ்தாரமாக இவ் விஷயத்தைச் சோதனை செய்ய நேரமில்லை.

(கையொப்பம்)

தாதாபாய் நவுரோஜி
கணத் தலைவர்

VIII. எட்டாந் தீர்மானம்:

ஜூரி விசாரணையை விசாலப்படுத்துதல்

ஜூரி விசாரணை முறைமை இப்போது வழக்கத்தில் இல்லாத பிரதேசங்களிலும் வழக்கப்படுத்துவதில் யாருக்கும் தீங்கு நேராது என்று இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

IX. ஒன்பதாந் தீர்மானம்:

ஜூரி விசாரணை

ஜூரிகளின் தீர்ப்பு உறுதியில்லாதபடி செய்து 1872ஆம் வருஷத்தில் ஜூரி விசாரணை விஷயத்தில் ஏற்படுத்திய புது விதி நாட்டுக்குப் பெருந் தீங்கு விளைவிப்பதால் ஜூரிகள் செய்யும் விடுதலைத் தீர்ப்புக்களை ஹைகோர்ட்டாரும், ஜில்லா கோர்ட்டாரும் மாற்றலாமென அவ் வருஷத்தில் அவர்களுக்குப் புதிதாகக் கொடுபட்ட அதிகாரங்களை உடனே ரத்து செய்துவிட வேண்டும் என்று இந்த ஜன சபை நினைக்கிறது.

X. பத்தாந் தீர்மானம்:

இங்கிலாந்தில் உள்ள "சமயோசித நீதி வரம்புச் சட்ட"மும் இந்தியா விவகார நீதி (ப்ரோஸிஜர் கோடும்) கடுமையான வழக்குகளில் குற்றம் சாற்றப்பட்டோர் வழக்கை ஜில்லா (ஸெஷன்ஸ்) கோர்ட்டுக்கு ஒப்படைக்கும்படி கேட்கலாம் என்பதொரு நியதி இங்கிலாந்தில் "சமயோசித நீதி வரம்புச் சட்டத்"தில் காணப்படுவதுபோலே, இந்தியாவிலும் விவகார

நீதியில் ஓரம்சம் சேர்க்கவும், அதன்படி சிறையோலை (வாரன்ட்) வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்த்ரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா கோர்ட்டுக்கு ஒப்படைக்கும்படி கேட்க இடம் கொடுக்கவும் வேண்டும் என்று இந்த ஜன சபை ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறது.

XI. பதினொன்றாம் தீர்மானம்:

நிர்வாஹ இலாகாவையும் நீதி இலாகாவையும் பிரித்தல்

எந்த இடத்திலும் நிர்வாஹ, நீதி அதிகாரங்கள் ஒரே புருஷன் வசம் இருக்கக் கூடாதபடியாக அந்த இரண்டு இலாகாக்களையும் முற்றிலும் பிரித்துவிட வேண்டும்.

இந்தச் சீர்திருத்தம் மிகவும் அவஸர மென்பது ஸகல ஜனங்களுடைய கொள்கை. ஆதலால் இதைச் சிறிதேனும் தாமஸ மில்லாமல் செய்ய வேண்டும். இதனால் சில மாகாணங்களில் அதிகச் செலவு நேர்ந்தாலும் பெரிதில்லை என்று இந்த ஜன சபை அறிவித்துக் கொள்ளுகிறது.

XII. பன்னிரண்டாம் தீர்மானம்:

பாரத தேசக் காப்புப் படை

ஐரோப்பாவில் பொது ஸமாதான நிலை மிகவும் குழப்பமெய்தி இருப்பதாலும், இந்த தேசத்து ஜனங்களைச் சரியானபடி தயார் செய்து வைத்தால் ஏதேனும் சண்டைகள் நேருமிடத்து இவர்களால் பிரித்தானியாவுக்கு அளவற்ற உதவி செய்ய முடியு மாதலாலும், இந்த தேசத்தாரைக் காப்புப் படையில் உசிதமான விதி நிபந்தனைகளின் கீழே சேரும்படி இடங் கொடுத்து ஸர்க்காரை ஆபத்திலிருந்து காக்க வழிவிடும்படி இந்த ஜன சபை வேண்டுகிறது.

XIII. பதின்மூன்றாந் தீர்மானம்:

சாசுவதக் காங்கிரஸ் கணங்கள்

முக்யமான ஸ்தலங்களில் சாசுவத ஜன சபை கமிட்டிகள் ஸ்தாபிக்க வேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயித்துக் கொள்ளுகிறது.

XIV. பதினான்காந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

நமது ஜன சபையின் மூன்றாங் கூட்டம் 1887ஆம் வருஷம் டிசம்பர் மாசம் 27-ந் தேதியன்று சென்னப்பட்டணத்தில் கூடவேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

XV. பதினைந்தாந் தீர்மானம்:

காங்கிரஸ் தீர்மானங்களைப் பற்றி

நமது தீர்மானங்களின் பிரதிகளை சபையோடு கூடிய ராஜ ப்ரதிநிதிக் கனுப்பி, அவற்றுள் முதல் தீர்மானத்தை மஹாராணிக்குத் தெரிவிக்கும்படிக்கும், எல்லாத் தீர்மானங்களையும் இந்தியா மந்திரிக்கு அனுப்பும்படிக்கும், மேலும் வைஸ்ராய் தாமே தமது நிர்வாஹ சபையாருடன் கலந்து மேற்படி தீர்மானங்களுக்கு அனுகூல முடிவு செய்யும்படிக்கும் வைஸ்ராயை வணக்கத்துடன் ப்ரார்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

இரண்டாவது காங்க்ரஸ் முற்றிற்று

❖

பாரத ஜன சபையின் மூன்றாவது கூட்டம்

மூன்றாவது சபை 1887ஆம் வருஷத்தில் டிஸம்பர் மாஸத்தில் சென்னப்பட்டணத்தில் கூடிற்று. அந்த வருஷம் மே 1-ந் தேதியிலே சென்னையில் ஒரு உபசார கணம் தயாராய் விட்டது. அதற்குத் தலைவர் ராஜா ஸர் டி. மாதவராயர். உபசார கணத்தில் எல்லா ஜாதி ஹிந்துக்களும், மஹமதியர்களும், சுதேசிக் கிறிஸ்தவரும், யூரேஷியரும் கூடி யிருந்தனர். 10,000 பேர் வாஸம் செய்தால், அந்த ஊரில் ஒரு கிளைக் கணம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழில் காங்கிரஸ் வினா விடை என்றொரு புஸ்தகத்தில் 30,000 பிரதிகள் போட்டு "ஹிந்து" பத்திரிகை உதவிப் பத்திராதிபர் ஸ்ரீமான் வீரராகவாசார்யர் ஜனங்களுக்கு வழங்கினார்.

உபசார கணத்தின் செலவுக்கு மைஸூர் ராஜா, திருவாங்கூர் ராஜா, கொச்சி ராஜா முதலாக ஓரணாக் கூலிக்காரர் வரை ஸகல வகுப்பினரும் பணம் கொடுத் துதவினர். 3000 ஜனங்கள் கூடி இருக்கும்படியான பெரிய பந்தல் போட்டார்கள்.

760 பிரதிநிதிகள் இந்த ஜன சபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டோர். அவர்களில் 607 பேர் மாத்திரமே வந்திருந்தனர். திருப்பதி மஹந்து, தர்பங்கா மஹாராஜா, காசீநாத் தெலாங் முதலிய பல பெரிய மனிதர் அனுதாபத் தந்திகள் அனுப்பினர்.

ரானடே வந்திருந்தார். பிரதிநிதியாக வரவில்லை. ஸர்க்கார் அதிகாரியானபடியால் வெகுமே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீமான் பத்ருதீன் தியாப்ஜி ஸாஹெப் என்ற மஹமதிய கனவான் அக்ராஸனம் வஹித்தார். இவர் பம்பாய் மஹமதியக் கூட்டத்தில் பெரிய ப்ராமாணிகராகவும், அந்த நகரத்து அஞ்ஜுமான்-இ-இஸ்லாம் சபைக்குக் காரியதரிசியாகவும் இருந்தபடியால் மஹமதியர் சேரவில்லை யென்பதிலிருந்து காங்கிரஸ் சபைக்கு ஜனப் பிரதிநிதித் தன்மை குறைகிறதென்று பேசின சிலர் இவர் அக்ராசனம் வஹித்தது முதல் அந்த விவகாரம் கையேறா தென்பதை உணர்ந்துகொண்டார்கள்.

ஹிந்து - மஹமதிய ஐக்கியம் பிற்காலத்தில் கோகலே, வெட்டர்பர்ன், ஜின்னா, அஹமதாபாத் ராஜா, ஆனி பெஸான்ட், மஹமதாலி முதலிய மஹான்களின் முயற்சியால் உறுதியாயிற்று.

ஆனால், 1887ஆம் வருஷத்திலேயே அந்த ஐக்கியமாகிய விருக்ஷத்துக்கு பலமாக விதை வைத்தவர் பத்ருதீன் தியாப்ஜி ஸாஹெப்.

சபாநாயகரின் ப்ரசங்கம்

மூன்றாவது ஜன சபையின் தலைவர் பத்ருதீன் தியாப்ஜி பின்வருமாறு பிரசங்கம் செய்தார்:

ராஜா ஸர் டி மாதவ ராயரே, கனவான்களே, இந்த மஹத்தான ஜன சபைக்கு என்னைத் தலைவனாக்கி மேன்மைப்படுத்தியதற்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்தப் பெருமையை நீங்கள் எனக்குத் தந்தது பற்றி இறுமாப்படைகிறேன்; பாரத தேசத்தார் தாம் ஒருவனுக்குச் செய்யக்கூடிய பெருமைகளில் இது முதன்மையான தன்றோ?

பம்பாய் முதலிய இடங்களில் பெரிய பெரிய பொதுக் கூட்டங்கள் பார்த்திருக்கிறேன். ஆனால், இது மாதிரி எங்குமே பார்த்தது கிடையாது. இது புதிது. இதில் ஒரு நகர் அல்லது ஒரு மாகாணம், ஒரு வகுப்பு அல்லது ஒரு கக்ஷியின் பிரதிநிதிகளன்றி

பாரத தேச முழுமையினு முள்ள எல்லா மாகாணங்களுக்கும், கக்ஷிகளுக்கும், ஜாதிகளுக்கும், வகுப்புகளுக்கும் பிரதிநிதிகள் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

கனவான்களே, முதல் ஜன சபை பம்பாயிலும் இரண்டாவது சபை கல்கத்தாவிலும் நடந்தபோது நான் அவற்றில் கலந்து விவகரிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காமல் போயிற்று. எனினும் அவ்விரண்டு ஜன சபைகளில் நடந்த செய்திகளை யெல்லாம் நான் மிகவும் ஜாக்கிரதையாகப் படித்துப் பார்த்தேன். அவற்றில் விளங்கும் சாதுர்யத்தையும், மேதையையும், வாக்கு விலாஸத்தையும் கண்டு நாம் எல்லோரும் இறுமாப்படையத் தகும். (கரகோஷம்)

நமது பிரதிநிதித் தன்மை

கனவான்களே, மேற்பகுதியில் கூறப்பட்ட சாதுர்யம் முதலிய குணங்களுடன் இந்த சபையின் விவாதங்களில் நிதான குணமும் சேர்ந்து விளங்குமென்று நம்புகிறேன். ராஜரீக ஞானத்தாலும் அனுபவத்தாலும் நிதான குணம் ஏற்படுகிறது. வருஷம் ஏற ஏறக் காங்கிரஸ் சபையின் மஹத்வம் மிகுதிப்பட்டு வருதல் நம் மனைவருக்கும் மகிழ்ச்சி விளைவிக்கத்தக்க செய்தி.

1885-ல் பம்பாயில் நடந்த முதற் கூட்டத்திற்கு இந்தியாவின் பல பகுதிகளினின்றும் ஏறக்குறைய 100 பிரதிநிதிகள் வந்திருந்தனர். நமது மஹத்தான ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரதிநிதிகளாக இரண்டாவது ஜன சபைக் கூட்டத்துக்கு 440 பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவ் வருஷத்து ஸபையில் சுமார் 600 பேருக்கு மேல் வந்திருக்கிறோம். எனவே நமது சபை உண்மையான பிரதிநிதித் தன்மை யுடைய தேசீயப் பொதுக் கூட்டமென்று ருஜுவாகிறது.

பிரதிநிதி யாட்சியில் பரீக்ஷார்த்தமாக நமக்குச் சில அமிசங்கள் தரவேண்டுமென்று நாம் செய்யும் பிரார்த்தனைக்கு ஸர்க்கார் இணங்கினால் இங்கு வந்திருக்கும் உங்களிலே பெரும்பாலோர் சட்டசபைகளில் பிரதிநிதிகளாக விளங்குவீர்கள் என்பதில் ஐயமில்லை. (கரகோஷம்)

ஜன சபையும் மகம்மதியரும்

மஹமதியப் பெருவகுப்பினர் சென்ற இரண்டு வருஷத்துக் கூட்டங்களிலும் கலக்காமல் இருப்பது நமது ஜன சபையின் பிரதிநிதித் தன்மைக்கு பங்கமென்று சிலர் சொல்கிறார்கள். சில மஹமதியர் மாத்திரமே அங்ஙனம் சில அசாசுவதமான முகாந்தரங்களை ஒட்டி விலகி யிருந்தனர்.

எனினும் இந்த வருஷத்துக் காங்கிரஸ் சபை விஷயத்தில் அந்த தூஷணை சொல்லுவதற்குச் சிறிதேனும் ஹேதுவில்லை யென்று நம்புகிறேன்.

என்னுடைய சொந்த அபிப்பிராயம் மாத்திரமே யன்றி பம்பாய் அஞ்ஜுமான் இஸ்லாம் சங்கத்தின் காரியதரிசி யென்ற ரீதியிலும் நான் சொல்வது யாதெனில், பாரத தேசத்து ஹிந்து, மகம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள் என்ற வகுப்பினருடைய நிலைமையை உத்தேசித்தாலும், இதுவரை அவர்களுக்கிடையே நிகழ்ந்து வந்திருக்கும் பரஸ்பர ஸம்பந்தங்களை உத்தேசித்தாலும் எந்தக் காரணம் பற்றியும், பொது நலத்தைக் கருதிய காரியங்களில், எல்லாரும் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய விவகாரங்களில், சிலருள்ளே ஒரு பகுதி மாத்திரம் பிரிந்து நிற்கத்தக்க யாதொரு ஹேதுவுமில்லை.

இதை பகிரங்கமாக அறிவிக்கும் பொருட்டாகவே நான் என் உடம்பு சொஸ்தமில்லாத நிலைமையில் இந்த சபையின் கண்ணே அக்ராசனம் வஹிக்க உடன்பட்டேன். பம்பாய் மாகாணத்திலுள்ள நாங்கள் இந்தக் கொள்கையைத்தான் அனுஸரிக்கிறோம்.

இனி வங்காளம், சென்னை, வடமேற்கு மாகாணங் களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளின் தொகையையும் குணத்தையும் ஸ்தானத்தையும் கருதுமிடத்தே பாரத தேச முழுமையிலும், சிற்சில முக்யஸ்தர் தவிர, மற்றப்படி மகம்மதியர் அத்தனை பேரும் என்னுடைய கொள்கையையே தழுவி நிற்கிறார்கள் என்று நம்ப இடமுண்டாகிறது. (கேள், கேள் - கரகோஷம்)

ராஜ விசுவாசம்

அப்பால் ஸ்ரீமான் பத்ருதீன் தியாப்ஜி இந்தியாவில் இங்கிலீஷ் படித்த வகுப்பினரை ராஜத் துரோகிகள் என்று கூறுதல் தவறென்று பேசுகிறார்.

பிரிட்டிஷ் ராஜ்யத்தின் அருமை பெருமைகளை இங்கிலீஷ் படித்த வகுப்பினர் அறிந்ததுபோலே இதர வகுப்பினர் அறிய நியாயமில்லை யென்பதை எடுத்துக் காட்டுகிறார்.

நல்ல ரஸ்தாக்கள், ரயில் பாதைகள், தந்தி, தபால் ஆபீஸ், பள்ளிக்கூடம், காலேஜ், யூனிவர்ஸிடி, ஆஸ்பத்திரி இவற்றால் விளையும் நன்மைகளை கிருஷிகர் அறிவதைக் காட்டிலும் இங்கிலீஷ் படித்த வகுப்பினரே நன்றாக அறியக் கூடுமென்பதாகத் தெரிவிக்கிறார்.

"நாளை - அதைக் கடவுள் தடுப்பாராக - ருஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இந்த ராஜ்யத்தின் ஆதிக்கத்தை வேண்டிய போராட்டம் ஏற்பட்டால், ருஷிய ராஜ்யத்தைக் காட்டிலும் இங்கிலீஷ் ராஜ்யம் சிறந்ததென்ற விஷயம் யாருக்குத் தெரியும்? படித்த வகுப்பினருக்கா? பாமரருக்கா?" என்று வினவுகிறார்.

பின்பு நம்மை ராஜத் துரோகிகளென்று சொல்வோர் தாமே பிரிட்டிஷ் ஸர்க்காருக்குப் பெரிய தூஷணை ஏற்படுத்துகிறார்க ளென்கிறார்.

ஒரு தேசத்தில் படித்தவர்கள் - சரித்திரம், ராஜ்ய சாஸ்திரம் தெரிந்தவர்கள் - அத்தனை பேரும் ராஜத் துரோகிக ளென்றால், அந்த ராஜ்யமே சுத்த மோசம்; ஒன்றுக்கும் உதவாத ராஜ்யம் என்று அர்த்தமாம். அந்த ராஜ்யத்துக்கு இகழ்ச்சி ஏற்படுமே யன்றிப் படித்த கூட்டத்தார் இகழ்ச்சிக் குரியராக மாட்டா ரென்பதைக் காட்டுகிறார்.

ஆனால், நாம் ராஜத் துரோகிகள் அல்லோமென்றும், பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு இங்கிலிஷ் படித்த சுதேசிகளே சரியான பலமென்றும் முடிவுரை சொல்லுகிறார்.

காங்கிரஸ் சபையும் ஆசாரத் திருத்தமும்

இந்த ஜன சபை ஆசாரத் திருத்த விஷயத்தை ஊக்கத்துடன் விவகரிக்கவில்லை யென்று குற்றங் கூறுதல் பிழையென்று தாதாபாய் நவுரோஜி சொல்லியதை, தியாப்ஜி ஸாஹப் எடுத்துக்காட்டி அதற்கு முகாந்தரம் தாதாபாய் நவுரோஜி சொல்லியதைத் தாம் மேலும் விளக்கிக் கூறுகிறார்.

ஆசாரத் திருத்த விஷயம், வெவ்வேறு ஜாதி, வெவ்வேறு மதம், வெவ்வேறு வகுப்பு, வெவ்வேறு மாகாணத்துக்கு வெவ்வேறு மாதிரி. ஜன சபை எல்லாருக்கும் பொது. ஆதலால் இதில் எல்லாருக்கும் பொதுவான ராஜ்யத் திருத்த விஷயத்தை மாத்திரம் விவகரிப்பதே பொருந்து மென்று காட்டுகிறார்:

> உங்களுடைய ஆராய்ச்சிக்குப் பல விவகாரங்கள் கொண்டு வரப்படும். அவற்றை விவாதிப்பதில் எல்லோருக்கும் கவுரவ முண்டாகத்தக்க தோரணையுடன் விவாதிப்பீர்களென்று நம்புகிறேன். மேலும் கேட்பதில் நிதானமும், ஆக்ஷேபிப்பதில் நியாயமும், வார்த்தைகளில் யதார்த்தமும், முடிவுகளில் தர்க்க வலிமையும் காண்பிப்பீர்களானால் ராஜாங்கத்தார் தயவுகூர்ந்து கவனித்து நியாயம் செலுத்துவார்கள் என்பதில் ஸந்தேகமில்லை.

இறந்தோர்

பம்பாயில் அட்வளேயை இழந்துவிட்டோம். கல்கத்தாவில் கிரிஜா பூஷண் முக்கர்ஜி இறந்து போய்விட்டார். இவ் விருவரும் ஜன சபை விஷயத்தில் உண்மையுடன் பாடுபட்டோர்.

மேலும் ஸிந்து நாட்டில் சுதேசீயத்தை ஸ்தாபனம் செய்தவராகிய தயாராம் ஜேட்மல், மஸூலிப்பட்டணத்து தேசாபிமானி சிங்கராஜு வேங்கட சுப்பராயுடு இவ் விருவரையும் யமனுக்குப் பறிகொடுத்தோம். இவர்களை ஸ்மரிக்கிறோம். இந்த நாமங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். இவர்களுடைய திருஷ்டாந்தங்களைப் பின்பற்றுவோம்.

முடிவுரை

பல பல இடங்களிலிருந்து நமக்கு அனுதாப மகிழ்ச்சிக் கடிதங்களும், தந்திகளும் வந்து குவிந்திருக்கின்றன. தந்திகளில் மாத்திரம் அறுபதே சொச்சம் என் முன்பு கிடக்கின்றன. நம்முடைய முயற்சியில் ஐரோப்பியரும் கலந்து உதவி செய்தால் அவர்களுக்கும் நல்லது; நமக்கும் நல்லது

என்று தியாப்ஜி ஸாஹப் கூறி முடித்தனர். (கரகோஷம்)

சென்னையில் கூடிய மூன்றாம் காங்கிரஸ் தீர்மானங்கள்

I. முதல் தீர்மானம்:

ஜன சபையின் வடிவம்

"கீழே பெயர் குறிக்கப்பட்ட கனவான்கள் சேர்ந்த கமிட்டி (கணம்) ஒன்று ஏற்பாடு செய்து ஜன சபைக்கு ஓர் ரூப நிர்ணயம் அமைப்பதற்கு இப்போது என்ன விதிகள் செய்யலா மென்பதை ஆலோசனை செய்து ஜன சபையார் முன்னே நாளது 30-ம் தேதியில் அறிக்கை செய்யும்படி நியமிக்க வேண்டும்" என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

கணம்

1. ராம்ஜோஷி
2. சந்தாவர்க்கர்
3. மீர்ஹுமாயூன்ஜா
4. ஹாஜி மஹமத் அப்துல் ஷகூர் பாத்ஷா ஸாஹப்
5. மணி அய்யர்
6. டப்ளியூ எஸ். கான்ட்ஸ்
7. ரங்கய்ய நாயுடு
8. ஸுரேந்திரநாத் பானர்ஜி
9. த்ரைலோக்ய நாத மித்ரர்
10. காளீசரண பானர்ஜி
11. குருப்ரஸாத் ஸேன்
12. ஸாளிக் ராம்ஸிங்

13. ராம்காளீ செளதுரி
14. ஹபீஸ் அப்துல் ரஹீம்
15. ராம்பால் ஸிங்
16. மதன்மோஹன் மாளவீயர்
17. கங்காப்ரஸாத் வர்மா
18. விஷ்ணு நாராயண தார்
19. ஹமீத் அலி
20. முரளீதர்
21. ஸத்யாநந்த அக்நிஹோத்ரி
22. த்ருவர்
23. உமேசசந்த்ர பானர்ஜி
24. நரேந்த்ரநாத ஸேன்
25. எர்ட்லி நார்ட்டன்
26. டன்ஜய கோவிந்த ஷோம்
27. ஈசுவரீலால் ஸர்க்கார்
28. ஜி. சுப்பிரமணிய அய்யர்
29. தாஜி அப்பாஜி கரே
30. சாமிநாதய்யர்
31. ஸபாபதி முதலியார்
32. ஏ. ஓ. ஹ்யூம்
33. விஜயராகவாசார்யர்
34. கோவிந்த பக்ஷ்
35. கரந்தீகார்.

II. இரண்டாந் தீர்மானம்:

சட்டசபைத் திருத்தம்

வைஸ்ராய் சபையையும் மாகாண சபைகளையும் (1885-ம் வருஷத்தில் கூடிய முதல் ஜன சபைக் கூட்டத்தில் மூன்றாவது தீர்மானத்திலும், இரண்டாம் (1886) ஜன சபைக் கூட்டத்தில் மூன்றாவது தீர்மானத்திலும் கூறியபடி) விசாலப்படுத்திச் சீர்திருத்த வேண்டுமென்று இந்த ஜன சபை மீட்டும் வற்புறுத்துகிறது.

III. மூன்றாந் தீர்மானம்:

நிர்வாஹ, நீதி இலாக்காக்களைப் பிரிவு செய்தல்

இரண்டாம் (1886) ஜன சபைக் கூட்டத்தின் பதினொன்றாம் தீர்மானத்தில் கூறியபடி நிர்வாஹ அதிகாரமும் நீதி அதிகாரமும் ஒருவர் கையில் இராதபடி முழுதும் பிரித்துவிட வேண்டுமென்று இந்த ஜன சபை பிரார்த்தனை செய்கிறது.

IV. நான்காந் தீர்மானம்:

ராணுவ சேவகம்

மஹாராணியின் பாரத பிரஜைகள் மிகவும் ராஜ விசுவாஸ முடையவர்க ளென்பதை உத்தேசித்தும், மஹாராணியின் ஸ்ரீமுகத்தில் கண்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியும் ராணுவ ஸேவகத்தின் மேற்பதவிகள் இந்த தேசத்தாருக்குத் திறக்கப்பட வேண்டும். சட்டப்படி இந்தியா சுதேசிகள் ஓர் ஸேனையில் உத்தியோகஸ்தராக வேலை பெறுவதற்குள்ள பயிற்சியும் கல்வியும் பெறத்தக்க ராணுவக் கலாசாலைகள் இந்த நாட்டில் ராஜாங்கத்தார் வைக்க வேண்டும் என்று இந்த ஜன சபை வேண்டுகிறது.

V. ஐந்தாந் தீர்மானம்:

இரண்டாம் (1886ஆம் வருஷத்து) ஜன சபைக் கூட்டத்தில் 12ஆம் தீர்மானத்தில் கூறியபடி இந்தியாவில் (வாலண்டீர்) காப்புப்படை சமைக்க வேண்டும் என்று இந்த ஜன சபை வேண்டுகிறது.

VI. ஆறாந் தீர்மானம்:

ஆதாயத் தீர்வைக்கு வருமானக் கீழெல்லை

வருமானத் தீர்வை வஸூல் செய்வதில் பொதுப் படையாகவும், பிரதானமாக 1000 ரூபாய்க்குக் குறைந்த வரும்படிகளின் விஷயத்திலும் இப்போதுள்ள அனுஷ்டானங்கள் மிகவும் அதிருப்திக்கிடமாக இருப்பதால், 1000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானங்களுக்கு மாத்திரமே தீர்வை போடத் தகும்.

இதனால் அரசிறையில் நேரும் குறைகளுக்கும், பிற பணத் தொல்லைகளுக்கும் நிவர்த்தி வேண்டினால் அரசாட்சிச் செலவைச் சிக்கனம் செய்ய வேண்டும்.

இது ஸாத்யப்படாவிட்டால் பஞ்சுச் சரக்குகளில் உயர்ந்த தினுசுகளுக்கு மறுபடி இறக்குமதித் தீர்வை போட வேண்டும் என்று இந்த ஜன ஸபை அறிக்கை யிடுகிறது.

VII. ஏழாந் தீர்மானம்:

தொழிற் கல்வி

ஜனங்களின் வறுமையை உத்தேசித்து தேசத்தின் நிலைமைக் கேற்றபடி தொழிற் கல்வி முறை விஸ்தாரமாக அமைக்கவும், தேசத் தொழில் ஸாமான்களை அரசாட்சிக் காரியங்களுக்கு வழங்கி உள் நாட்டுக் கைத்தொழில்களை உற்சாகப்படுத்தவும், நாட்டுத் தொழிலாளிகளின் திறமையையும் பயிற்சியையும் இப்போதைக் காட்டிலும் அதிகமாக உபயோகப்படுத்தவும் ராஜாங்கத்தாரைத் தூண்ட வேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

VIII. எட்டாந் தீர்மானம்:

ஆயுதச் சட்டத்தை ஒழித்தல்

ஜனங்களின் ராஜ பக்தியையும், இப்போது வழங்கும் ஆயுதச் சட்டம் (1878ஆம் ஆண்டு பதினொன்றாங் கட்டளை) விளைக்கும் கஷ்டங்களையும், இந்த நாட்டு ஜனங்களுக்கு அது ஒரு அடாப்பழி ஊட்டும் விஷயத்தையும் உத்தேசித்து மேற்படி சட்டத்தின் நான்காம் அத்யாய நிபந்தனைகளையும், இன்னும் அவசியமானால் பிற அம்சங்களையும் மாற்ற வேண்டும். எங்ஙனமெனில், குறிப்பிட்ட மனிதன் அல்லது வகுப்பினரை மாத்திரம், இந்தியா கவர்ன்மெண்டார் அல்லது அவர்களிடம் இவ் விஷயத்தில் அதிகாரம் பெற்ற ஸ்தல அதிகாரிகள் ஆயுதம் தரிக்காதபடி தடுக்கலாம். ஆனால், அப்படித் தடுத்ததற்குச் சரியான காரணங்கள் எழுதிப் பிரசுரம் செய்ய வேண்டும். மற்றப்படி எல்லா ஜனங்களும் ஆயுதம் தரிக்க இடம் கொடுக்க வேண்டும் என்று இந்த ஜன சபை வேண்டுகிறது.

IX. ஒன்பதாந் தீர்மானம்:

காங்கிரஸ் ரூப நிர்மாணத்தை ஆலோசனை
செய்ய ஒரு கணம்

முதல் தீர்மானப்படி நியமிக்கப்பட்ட கணத்தார் யோசனை செய்து கொடுத்திருக்கும் விதிகளைப் பற்றிய ஆலோசனை அடுத்த வருஷக் கூட்டத்திற்குத் தள்ளி வைத்து விடவேண்டும்; இடையே இந்த விதிகளை நாட்டிலுள்ள சாசுவத ஜன சபைக் கமிட்டிகளுக்கு அனுப்பி இயன்ற வரை அவற்றை அனுஷ்டிக்கும்படியாகவும், வருஷ இறுதியில் தமக்குத் தோன்றும் மேல் யோசனைகளுடன் அவற்றைப் பற்றி ஜன சபையாருக்கு அறிக்கை யனுப்பும்படியாகவும் பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

X. பத்தாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

நமது ஜன சபையின் நான்காங் கூட்டம் 1888 டிஸம்பர் 26-ல் அலஹபாத்தில் கூடவேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

XI. பதினொன்றாந் தீர்மானம்:

மேற்கூறிய தீர்மானங்களை யெல்லாம் ஸபா ஸஹிதர் ராஜ ப்ரதிநிதிக்கு அனுப்பி அவற்றை இந்தியா மந்திரிக்கு அனுப்பும்படிக்கும், தன் சபையாருடன் தயவுகூர்ந்து ஆலோசனை செய்யும்படிக்கும் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

இங்ஙனம் 1887-ல் சென்னையில் கூடிய மூன்றாம் ஜன சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள் முற்றுப் பெற்றன.

மேற்கண்ட தீர்மானங்களில் இரண்டாந் தீர்மானத்தை ஸுரேந்த்ரநாத் பானர்ஜி பிரேரணை செய்தார். அவர் பிரேரணை செய்யும்போது புரிந்த பிரஸங்கத்தினிடையே "ஜன சபையின் கொடியை விரிக்கிறோம். அதிலே பொன்னெழுத்துக் களால் 'பிரதிநிதி யாட்சி வேண்டும் பாரத தேசத்துக்கு' என்றெழுதி யிருக்கிறது—" என்றார்.

அந்தத் தீர்மானத்தை இரண்டாவது ஆதரித்துப் பேசியவர் ராஜா ஸர் டி. மாதவ ராயர். அவர் சொன்னதாவது: "பிரதிநிதி ஆட்சி வேண்டுமென்ற கொள்கையைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மறுக்கமாட்டார்கள்; அவர்களால் மறுக்கவும் முடியாது" என்றார். ஓரிரண்டு வருஷங்களுக்குள் பிரதிநிதி ஆட்சி கிடைத்து விடுமென்பதாக திவான் மாதவ ராயர் அப்போது நம்பினார். அதாவது 1887-ல் இன்னும் நமக்குப் பிரதிநிதி ஆட்சி கிடைக்கவில்லை யென்பதை ஸ்ரீமதி அன்னி பெஸண்ட் தமது "பாரத பூமி விடுதலைக்குப் பட்ட பாடு" என்ற நூலில் ஆச்சர்யத்துடன் வருந்திக் கூறுகிறார்.

ஐந்தாந் தீர்மானத்தைப் பற்றி ஸ்ரீ சங்கரன் நாயர் பேசினார். ராஜ்யங்களின் குழப்ப நிலையையும், இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேரிடக் கூடுமென்பதையும் எடுத்துக் காட்டி "இந்தியாவின் நாகரீகத்தை வடநாட்டுக் கொள்ளைக் காரர் அழித்துவிட இடங் கொடுக்கலாமா?" என்று ஸ்ரீ சங்கரன் நாயர் கேட்டார். (காப்புப் படை நமது ஜனங்கள் சேர்ந்து அமைக்கப்பட வேண்டுமென்பது ஐந்தாந் தீர்மானம்)

ஸ்ரீ சங்கரன் நாயர் சொன்னதாவது:

"சண்டை வரும்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு ஜயம் உண்டாகக் கடவது என்று பிரார்த்தனை செய்து கொள்ளும் சுதந்திரம் மாத்திரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்ஙனம் நாம் ஜபம் பண்ணுவதனால் நமக்கேனும் அவர்களுக்கேனும் அதிகப் பயனுண்டென்று தோன்றவில்லை. நாம் இப்போது அனுபவிக்கும் ஸமாதானம், நாம் படை தூக்காமலே, நம்மிடமிருந்து பறிபோக நேரிட்டால் என்ன செய்வோம்?

இந்தியா தன்னையும் அவர்களையும் உதவிசெய்து காக்காவிடின், சண்டையின் விளைவு யாதாகு மென்பதை ஆங்கிலேயரே சொல்ல வலி யற்றிருக்கிறார்க ளென்பதை உத்தேசிக்குமிடத்து, நமது நிலை சஹிக்க முடியாததாகிறது. இப்போது நம்முடைய உதவி பெறுமாறு இங்குக் காப்புப் படை சமைப்பார்க ளென்றும், பின்னிட்டுப் பச்சாத்தாபப்பட இடம் வைத்துக்கொள்ள மாட்டார்க ளென்றும், நம் பொருட்டாக மாத்திரமே யன்றி, அவர்கள் பொருட்டாகவும் நம்புகிறோம்.

நேற்று ருஷியரும் துருக்கிஸ்தானத்தாரும் பகைவராக இருந்தனர். இப்போது துருக்கிஸ்தானிகளுக்கு ருஷியரே ஆயுதங்கள் கொடுத்துத் தம் பொருட்டாகப் பழக்குகிறார்கள். ருஷியருடன் நேற்று யுத்தம் செய்த துருக்கிஸ்தானிகளுக்கு ருஷியரிட முள்ள விசுவாஸத்தைக் காட்டிலும் நமக்கு ஆங்கிலேயரிடமுள்ள விசுவாஸம் குறைவா? ஆபத்து ஸமயத்தில் நமது ராஜ பக்தியை நம்ப இடமில்லையென்று சொல்லுவோர் பொய்யே சொல்லுகிறார்கள்"

என்றார்.

அந்தக் காலத்தில் ருஷியா படையெடுத்து வருமென்ற திகில் பரவி யிருந்தது. அதை யொட்டிப் பிரதிநிதிகள் மிகவும் ஆத்திரத்துடன் பாரத சேனை சமைக்க வேண்டுமென்று கூவினார்கள்.

தொழிற் கல்வியைப் பற்றிய ஏழாந் தீர்மானத்தை ஒட்டிப் பேசியவர்களில் தஞ்சாவூர் மூக்கண்ணாசாரி ஒருவர். ஸ்ரீமான் மூக்கண்ணாசாரியர் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினார்:

"நமது தேசத்தில் ஆலைகளும் தொழிற் கூட்டங்களும் ஏற்பட்டால் இப்போது யாதொரு வழியுமின்றி உடம்பிலே உயிரை நிறுத்த வழி தெரியாமல் தியங்கித் தவிக்கும் ஏழைகளுக்கெல்லாம் யோக்யமாக உழைத்து ஜீவனம் செய்ய வழி உண்டாகும்.

கனவான்களே, இந்தியாவின் கலைகளும் தொழில்களும் அபரிமிதமாக விருத்தி யடைந்து ஸர்க்கார் அதிகாரிகளே ஒப்புக்கொள்ளும் கணக்குப்படி இப்போது நாளொன்றுக்கு ஒருவேளைகூட முழு ஆஹாரம் கிடைக்காதபடி கஷ்டப்படும் நானூற்றைம்பது லக்ஷம் ஜனங்களுக்கு, ஒருவேளை ஆகாரமேனும் கிடைக்கக்கூடிய காலம் எப்போது வருமோ தெரியவில்லையே"

என்று மூக்கண்ணாசார்யர் கூறி வருத்தப்பட்டார்.

இந்த விஷயத்தைப்பற்றி "பாரத பூமி விடுதலைக்குப் பட்ட பாடு" என்ற தமது காங்கிரஸ் சரித்திர நூலில் இந்த நூலைக் குறித்து இனிப் பேசும் போதெல்லாம் 'அன்னிபெஸன்ட் எழுதிய ஜன சபைக் கதை' என்ற பெயர் வழங்குவோம்.

ஸ்ரீமதி அன்னிபெஸன்ட் ஆங்கில பாஷையில் ஷெல்லி யென்ற கவிராயன் விடுதலைத் தெய்வத்தை நோக்கி எழுதிய பாட்டொன்றிலிருந்து பின்வரும் வரிகளைப் பெயர்த்தெழுதி யிருக்கிறார்:

ஷெல்லியின் பாட்டு

(விடுதலைத் தெய்வமே)

"உழைப்பவர்க் கெல்லாம் உணவு நீ யாவாய்
ஆங்கில நாட்டில் இன்று நாம் காணும்
சோற்றுப் பஞ்சம், சுதந்திர தேவியே –
நின்னுடை இன்னருள் நிலவு நாடுகளில்
தோன்றா தம்ம, தோன்றா தம்ம."

என்பது.

இதிலே, "ஆங்கில நாட்டில்" என்பதைப் "பாரத நாட்டில்" என்று அன்னிபெஸன்ட் மாற்றி வாசிக்கும்படி சொல்லுகிறார்.

அதன் பிறகு ஆயுதச் சட்டத்தை ரத்து செய்துவிட வேண்டு மென்ற ஏழாந் தீர்மானத்தைக் குறித்து விவாதம் நடந்தபோது "தீவிரமான, ஜ்வாலா மயமான வாதம் அனேக மணி நேரம் நடைபெற்ற" தென்று காங்கிரஸ் அறிக்கை தெரிவிக்கிறது.

"ஐரோப்பியர், யூரேஷியர், நீகிரோவர், ஹாட்டன்டாட் ஜாதியார், பிஜித் தீவினர் - இந்தியாவின் மீது கடலின் அலைகள் கொண்டு மோதிய பூமண்டலத்து எந்தக் கழிமக்களும் - இந்நாட்டில் வந்து ஆயுதந் தரிக்கலாம். இந்த நாட்டிலே பிறந்த நாம் மாத்திரம் தரிக்கக் கூடாதா?" என்று காங்கிரஸ் அறிக்கை ஆத்திரத்துடன் வினவுகிறது.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரணை செய்தவர் மிஸ்டர் சபாபதி முதலியார். இந்தச் சட்டம் நமக்குப் பெரிய அவமான மென்பதையும், இதனால் பயிர் செய்யும் குடிகளுக்குப் பெரிய கஷ்டங்கள் விளைகின்றன என்பதையும், காட்டு மிருகங்களும் கள்ளரும் நம்மைக் கொல்லாதபடி தடுக்க ஆயுதங்கள் அவசிய மென்பதையும் மிஸ்டர் சபாபதி முதலியார் எடுத்துக் கூறினார்.

அந்தத் தீர்மானத்தை ஸ்ரீஜத் விபினசந்திர பாலர் ஆமோதித்துப் பேசினார்.

விபினசந்திரர் சொன்னார்:

> "என்மட்டில் எனது உருக்குப் பேனாவும் கருக்கு நாவும் போதும். வேறு ஆயுதம் எனக்கு வேண்டாம். ஆனால், இந்த ஆயுதச் சட்டத்தால் பல்லாயிரம் ஜனங்கள் ஆணும் பெண்ணும் வருஷந்தோறும் புலி சிறுத்தைகளுக் கிரையாகி மடிகிறார்கள். இனியேனும் ஜனங்கள் அவ்வாறு சாகாமல் காப்பாற்றும் பொருட்டு அந்தச் சட்டம் ஒழிய வேண்டுமென்று கேட்கிறேன். மேலும் அந்தச் சட்டம் கொள்கையில் பிழையானது; பயனில் தீயது; ராஜாங்கத்துக்குத் தற்கொலைச் செய்கை போன்றது; ஆதலாலும் அதை ஒழிக்க வேண்டுமென்று கேட்கிறேன்"

என்றார்.

சென்னை கவர்னர் லார்ட் கன்னிமரா என்பவரும், நகரத்து நாட்டாண்மை சவலை ராஜா ராமஸாமி முதலியாரும், பாரிஸ்டர் நார்ட்டனும் பிரதிநிதிகளுக்கு விருந்து செய்வித்தனர்.

சென்னையில் அதிகாரிகள் ஜன சபையிடம் அனுகூல சிந்தைதான் காட்டினார்கள். அடுத்த வருஷந்தான் அலஹபாத் கூட்டத்தை ஆரம்பிக்கு முன்னேயே தடுத்து விடவேண்டும் என்று சில்லரை அதிகாரிகள் பெரு முயற்சி செய்தார்கள். அந்தக் கதை அடுத்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

மூன்றாம் ஜன சபைக் கூட்டத்தின் சரித்திரம் முற்றிற்று.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

நான்காம் அத்தியாயம்

நான்காம் ஜன சபைக் கூட்டம்

நமது ஜன சபையின் நான்காம் கூட்டம், அலஹபாத்தில் 1888 டிஸம்பர் 26-ந் தேதி பிற்பகல் இரண்டு மணிக்குக் கூடிற்று. உபசார கணத் தலைவராகிய ஸ்ரீமான் பண்டித அயோத்யா நாதர் செய்த நல்வரவுப் பிரசங்கத்தில் அவ் வருஷம் காங்கிரஸ் கூடாதபடி தடுக்க அதிகாரிகள் செய்த முயற்சிகளை யெல்லாம் எடுத்துக் கூறினார்.

அலஹபாத் லெப்டினென்ட் கவர்னர் ஸர் ஆக்லன்ட் கால்வின் அதை வெகு ஜீமூதமாக எதிர்த்தார். அதே வருஷத்தில் வைஸ்ராய் லார்ட் டபரின் தன் உத்தியோகத்தை விட்டுப் போகும்போது தனக்குச் செய்யப்பட்ட விருந்தொன்றில் ஜன சபை ராஜத் துரோகமான முயற்சி யென்று பழிசாற்றி விட்டுப் போனார்.

அலஹபாத்தில் உபசார கணத்தார் முதலாவது குஸ்ரோ பூங்காவனத்தில் காங்கிரஸ் சபை கூட அனுமதி பெற்றனர். பிறகு அந்த அனுமதி ரத்து செய்யப்பட்டது.

அப்பால் ஏப்ரல் மாதத்தில், கோட்டைக் கருகே யுள்ள தரிசு நிலத்தை வாடகைக்கு வாங்கினார்கள்.

பிறகு நான்கு மாஸங்களுக்குப் பின் கோட்டை அதிகாரிகள் வாடகைப் பணத்தை உபசார கணத்துக்குத் திரும்ப அனுப்பி சுகாதார முகாந்தரங்களை ஒட்டி அங்கு சபை கூடக் கூடாதென்று தெரிவித்து விட்டார்கள்.

மூன்றாவது தரம் பாசறையின் எல்லைக்குள் சில நண்பர்களின் வீடுகளை வாடகைக்கு வாங்கினர். அந்த இடம் 'பயோனீர்' என்ற ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையின் வீட்டுக்கு ஸமீபத்திலிருந்தபடியால் அந்தப் பத்திராதிபருக்குக் கஷ்ட முண்டாயிற்றாம்!

மறுபடியும் ஏதோ வீண் முகாந்தரம் சொல்லி அதிகாரிகள் அங்கு சபை கூடலாகாதென்று தடுத்து விட்டார்கள்.

சபை கூடும் தினத்திற்கு ஏழு வாரங்களின் முன்பு, நம்மவர் இடம் கிடையாமல் தத்தளிப்பதைக் கண்டு அதிகாரிகள் மிகவும் ஸந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையிலே, லக்நௌ நகரத்தில் குடியிருந்த நவாப் ஒருவருக்குச் சொந்தமான பெரிய மாளிகையும் தோட்டமும் வெளியும் அலஹபாத்தில் காலியாக இருந்தன. ரஹஸ்யமாக உபசார கணத்து மெம்பர் ஒருவர் கையில் பணத்தை எடுத்துக்கொண்டு லக்நௌ நகரத்துக்குப் போய் அந்த மாளிகைக்குக் குடிக்கூலிச் சீட்டு எழுதி வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

அந்த மாளிகையின் பெயர் லவ்தர் மாளிகை. அதற்கடுத்த வீட்டில் லெப்டினன்ட் கவர்னர் ஸர் ஆக்லன்ட் கால்வின் குடி யிருந்தார். அவருக்கு சிரமந்தான். என்ன செய்யலாம்? வாடகை வீட்டுக்குள் சீட்டு ஸஹிதமாகப் பிரவேசித்துவிட்ட உபசார கணத்தாரை எப்படி வெளியே துரத்துவது?

பந்தல் அலங்காரம் சொல்லி முடியாது. தர்பங்கா மஹாராஜா 5000 பேர் சேர்ந்திருக்கத்தக்க ஷாமியாநா (கூடாரம்) இரவல் கொடுத்தார். மேலும் வரிசை வரிசையாகக் கூடாரங்கள் போட்டு ஒரு சிறு நகரம்போலே யாக்கி அதில் பிரதிநிதிகள் வந்து கூடினர். அந்த வருஷத்தில் ஜன சபைக்கு நேர்ந்த இடுக்கண்கள் பல. முந்திய வருஷம் சென்னப் பட்டணத்து ஜன சபைக் கூட்டத்துக்குப் போகக் கூடாதென்று வடநாட்டில் ஒரு ஜில்லா கலெக்டர் தடுத்தும் கேட்காமல் போனதற்காக ஒருவரிடம் 20,000 ரூபாய் நன்னடக்கை ஜாமீன் வாங்கினார்கள். இதே ஸமயத்தில் பஞ்சாபில் ஒரு ஜில்லாவில் மாத்திரம் ஒரு வருஷத்திற்குள் சுமார் 5000 அல்லது 6000 பேரிடம் நன்னடக்கை ஜாமீன் வாங்கப்பட்டது.

எல்லா இடுக்கண்களையும் புறக்கணித்து பாரத ப்ரமநிதிகள் சபை கூடினர். இங்கிலாந்திலிருந்து சபைத் தலைமை வஹிக்கும் பொருட்டாக மிஸ்டர் ஜார்ஜ் யூல் என்ற ஆங்கிலேயரை வரவழைத்திருந்தார்கள்.

சபாநாயகர் பிரசங்கம்

1888 டிஸம்பர், அலஹபாதில் கூடிய ஜன சபைக் கூட்டத்தின் சபாநாயகராய் ஸ்ரீமான் ஜார்ஜ் யூல் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:

கனவான்களே,

சிறிது காலத்துக்கு முன்பு என்னை இந்த ஜன சபையில் அக்கிராஸனம் வஹிக்கும்படி கேட்டுக்கொண்டபோது நான் சற்றே தியங்கினேன். எதிர்பார்க்காதது மாத்திரமே யன்றி இத்தகைய கௌரவத்துக்குத் தகுதியும் என்னிடமில்லை.

எனினும் பொருட்டாக்காமல் அங்கீகாரம் செய்துகொள்வோ மென்றால் வேறொரு ஆக்ஷேபமும் தோன்றிற்று. அஃதென்ன வென்றால், என்னுடைய தொண்டை சிறிது. உங்கள் சபையோ பெரிது. எனிலும் உங்கள் ஜன சபையினிடம் எனக்குள்ள அன்பின் மிகுதியால் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு இங்கு வந்தேன்.

சட்டசபைகளின் திருத்தம்

உங்கள் முன்னே எத்தனையோ தீர்மானங்கள் ஆலோசனைக்கு வரும். அவை யெல்லாம் ஒவ்வொன்றும் முக்கியமான சீர்திருத்தங்களைப் பற்றினவே யாம். அவை யெல்லாம் நமது அவசியங்களையும், விருப்பங்களையும் உத்தேசங்களையும் நன்கு தெரிவிப்பன.

ஆனால், அவை யனைத்தினும் முக்கியமான சீர்திருத்தம் யாதெனில் சட்ட சபைகளைப் புதுப்பித்தல். ஆதலால் இன்று என் பிரஸங்கம் முழுதிலும் இந்த ஒரே விஷயத்தைக் குறித்துத்தான் பேசப் போகிறே னென்பதை உங்களிடம் வினயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியா மசோதாவின் கதை

1858ஆம் வருஷத்தில் இந்த தேசத்தின் ஆட்சி கும்பினியாரிட மிருந்து ராஜ வம்சத்தாருக்குக் கைமாறியபோது லார்ட் பால்மெர்ஸ்டன் முதல் மந்திரியாக இருந்தார். அவர் காமன்ஸ் சபையிலே கொண்டுவந்த மசோதாவுக்குப் பின்னிட்டு 'முதல் இலக்கம் இந்தியா மசோதா' என்று பெயர் உண்டாயிற்று. இந்த மசோதாவின் முக்கியமான கருத்தென்னவென்றால், இந்தியாவின் ஆட்சி நடத்தும் பொருட்டு சபையுடன் கூடிய ராஜப் பிரதிநிதி ஒருவர் இந்தியாவிலும், லண்டனில் எட்டுப் பேர் சேர்ந்த சபையுடன் கூடிய ஒரு இந்தியா மந்திரியும் நியமிக்கப்படுவர். இந்த இரு திறத்தாரும் இரு வேறு கிளைகள். சில விஷயங்களில் பரஸ்பரச் சார்பில்லாத தனிப் பொறுப்புக்களை உடையோர். இரு திறத்தாரின் செய்கைகளையும் நியந்தாவாக இருந்து பார்லிமெண்ட் சபை மேற்பார்வை நடத்தவேண்டும். ஆனால், இந்த மசோதாவை ஆக்ஷேபித்தவர்கள் இதில் இந்தியா ஜனங்களின் பிரதிநிதிகளுடைய பேச்சே இல்லாமல் இருப்பதை ஒரு குறையாக எடுத்துக்காட்டினர். அப்போது பார்லிமென்டில் எதிர்க்கக்ஷித் தலைவர் மிஸ்டர் திஸ்ராஎலி இருந்தார். அந்த மசோதாவில் அரசாட்சி செய்வோருக்குச் சரியான மேல் தடைகள் ஏற்படுத்தவில்லை யென்பதை அவர் எடுத்துக் கூறி ஆக்ஷேபித்தார்.

இங்கிலீஷ் ராஜ்யத்தில் இந்தியா ஜனங்கள் தமக்குள்ள குறைகளை எடுத்துக் கூறி நிவர்த்திகள் செய்ய வேண்டினால், அதற்கு அந்த மசோதாவில் எவ்விதமான புகலும் காட்டாமல் இருப்பது இங்கிலீஷ் ராஜ்யத்தின் ஸம்ரக்ஷணா சக்திக்கே ஒரு களங்கமாகு மென்றார். இந்த மசோதா வந்து சில தினங்களுக்குள் வேறொரு விவகாரத்தின் சம்பந்தமாக லார்ட் பால்மெர்ஸ்டன் அதிகார மிழந்து விட்டார்; லார்ட் டென்பி முதல் மந்திரியானார். காமன்ஸ் சபையில் மிஸ்டர் திஸ்ராயெலி முதன்மை வஹித்தார்.

இவர்கள் கொண்டுவந்த மசோதாவுக்கு 'இரண்டாம் இலக்கம் இந்தியா மசோதா' என்ற பெயர் உண்டாயிற்று. முன்பு பால்மெர்ஸ்டன் குறிப்பிட்ட லண்டன் சபையில் அவர் சொல்லியதுபோல் எட்டுப் பேர் இருந்தால் போதாதென்றும்,

பதினெட்டுப் பேர் இருக்க வேண்டுமென்றும் இந்தப் புதிய மசோதா சொல்லிற்று. அந்தப் பதினெட்டுப் பேரில் பாதிப் பேர் தெரிந்தெடுக்கப்பட்டவராய் எதிலும் ஸர்க்கார் ஸம்பந்த மில்லாதவர்களாக வேண்டும்.

அதாவது ஸர்க்கார் நடப்புக்களை எதிர்த்துக் கண்டனை செய்யக்கூடியவர்களாக வேண்டும்.

ஆட்சி நடத்துவதற்குத் தெரிந்தெடுத்த பிரதிநிதிகள் அவசியமென்ற ஜன ராஜ்யக் கொள்கையையும், ஒருவாறு இந்தியாவின் ஆட்சி முறைமையில் நுழைக்க வேண்டுமென்ற எண்ணம் தமக்கிருந்தபடியால், இந்த யோசனை செய்ததாக மிஸ்டர் திஸ்ராயெலி நடிப்புக் காட்டினார். ஆனால், இந்தியாவில் ஸமாதான நிலைமை இல்லாமல், இந்தியா ஜனங்களின் பிரதிநிதிகளுக்கு அரசாட்சித் தொழிலிலே ஸ்தானம் கொடுக்க இடமில்லை யென்றும், இந்தியாவிலுள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தராலும், இங்கிலாந்தில் சில நகரத்தாராலும் தெரிந்தெடுக்கப்பட்ட மாஜி ஆங்கிலோ இந்திய உத்தியோகஸ்தரும், வியாபாரிகளுமே அங்ஙனம் பிரதிநிதி யாட்சிக் கொள்கைக்குப் பிரதியாக நியமிக்கத் தகுந்தவர்களென்றும் அந்த மசோதாவில் கூறப்பட்டது.

இது இந்தியா ஜனங்களைக் கேலி பண்ணுகிற மாதிரியே யாமென்றும், அவர்களுக்கு ரொட்டி கொடுப்பதுபோலே காட்டிக் கல்லைக் கொடுத்தல் நியாயமில்லை யென்றும், இந்த மாதிரிப் பிரதிநிதிகளால் இந்தியாவுக்குத் தீங்கு விளையுமே யன்றி நன்மை விளையாதென்றும் பலர் எடுத்துக்காட்டி அந்த மசோதாவை மிகமிகப் பழித்து நகையாடிக் கொன்று விட்டனர்.

லார்ட் ஜான் ரஸ்ஸலின் சிபார்சுப்படி அந்த மசோதாவை வாபஸ் வாங்கிக்கொண்டு, பின் மூன்றாம் யோசனை கொண்டு வந்தனர். இதுதான் இப்போது அனுஷ்டானத்தில் உள்ளது. இது சாசுவதமாக இருக்க வேண்டுமென்ற கருத்துடன் செய்த ஏற்பாடன்று. இந்தியா ஜனங்களுக்குக் கல்வி விருத்தி உண்டாக்கி சரியான பிரதிநிதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கத் தகுந்த காலம்

வரும் வரை, ஒரு சொற்ப கால யோசனையாக இதை அனுஷ்டிக்க லானார்கள். இதன்படி இந்தியாவில் சட்டம் செய்யவும், நாடாளவும் ஒரு ராஜ ப்ரதிநிதியும் அவருக்கொரு சபையும் உண்டு. இவர்களைக் கடிவாளம் போட்டு வைத்திருக்கும் பொருட்டாக லண்டனில் 15 பேர் கூடிய சபை. இந்த சபையார் இந்தியா மந்திரியின் மூலம் மந்திரி சபைக்கு ஜவாப்தாரி. மந்திரி சபை பார்லிமெண்டுக்கு உத்தரவாதி.

இந்தச் சட்டம் இப்போது வேலைசெய்கிற மாதிரி

இந்தியாவிற் கொரு பிரதிநிதி சபை இல்லாவிடினும், அதன் ஸ்தானத்தில் பார்லிமெண்ட் இருந்து இந்தியா அரசாட்சியை மேற்பார்வை யிட்டு வருமென்றும், இந்தியா ராஜாங்கத்துக்கு மேற்கூறிய மூன்று படிகளான கட்டுப்பாடுகள் இருந்தமையால் இங்கு நிஷ்கண்டக ராஜ்யம் நடக்காமல், இந் நாட்டோர் நன்மை தீமைகளைக் கவனித்து நியாயம் நடத்த இடமுண்டாகுமென்றும் கருதினார்கள். இந்தியரின் குறைகள் நீங்க வழி பிறக்குமென்று நம்பினர். பார்லிமெண்ட் சபையார் தமது காரியத்தில் மிகவும் உற்சாகத்துடன் புகுந்தனர். தெய்வத்தினால் தம்மீது சுமத்தப்பட்ட பொறுப்பென்று இந்தியாவைப் பார்லிமெண்டார் கருதப் போவதாகச் சொன்னார்கள்.

இப்போது அனுஷ்டானத்திலோ யாதொரு கட்டுப்பாடும் இல்லை. இந்தியா கவர்ன்மெண்டாரின் செய்கைகளை இந்தியா மந்திரியின் சபை மீட்டும் சோதனை பண்ணலாமென்றும், இந்தியா மந்திரி திரஸ்காரம் பண்ணலாமென்றும், கடைசித் தீர்ப்புச் சொல்லும் சுதந்திரம் பார்லிமெண்ட் சபைக்குண்டென்றும் செய்த ஏற்பாடு 1870ஆம் வருஷம் வரையிலும் வழங்கி வந்தது.

1870-ல் ஆர்கைல் ட்யூக் (பிரபு) இந்தியா மந்திரியாக இருந்தார். அவருக்கும் வைஸ்ராய் ஆகிய லார்ட் மேயோவுக்கும் நடந்த விவாதத்தில் இங்கிலிஷ் மந்திரி சபையாரின் இஷ்டப்படி எல்லாம் நடக்க வேண்டுமென்று மேற்படி சட்டத்துக்குப் புதிய அர்த்தம் காட்டிவிட்டார். பெரும்பாலும் இதுபோன்ற சட்டங்கள் பல அர்த்தம் தோன்றும்படியாகவே சமைந்திருத்தல் இயல்பன்றோ?

இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எதிலும் ஸ்வாதீன அதிகாரம் கிடையாதென்றும் இந்தியா மந்திரிக்குக் கேவலம் திரஸ்கார அதிகாரம் மாத்திரமில்லை யென்றும் ஸர்வ அதிகாரங்களும் உண்டென்றும் பொருள் காட்டினார்.

ஸ்ரீமான் ஜார்ஜ் யூல் சொல்லுகிறார்:

மேலும் "தெய்வம் பார்லிமென்டார் கையில் கொடுத்த பொறுப்பைப் பார்லிமெண்டார் மறுபடி தெய்வத்தின் கையிலே எறிந்து விட்டார்கள். இந்தியாவின் அரசாட்சியிலுள்ள ஊழல்களை நீக்க யாதொரு வழியுமில்லை. இந்தியாவின் அன்னிய வியாபாரம் 150,000,000 பவுன் (ஒரு வருஷத்திற்கு) அளவுக்கு ஏறிவிட்டது. அதாவது, 1837-ல் பிரித்தானியாவின் வியாபாரம் இருந்த நிலைமைக்கு வந்துவிட்டது.

மேலும் ஐம்பது வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு (பிரித்தானியாவில்) அரசிறை வருமானம் 47,200,000 பவுன். அதில் ஒற்றைக் காசுகூட ஜனப் பிரதிநிதிகளின் உத்தரவில்லாமல் வசூல்செய்வது மில்லை, செலவிடுவது மில்லை. சென்ற வருஷத் திட்டப்படி இந்தியா கவர்ன்மெண்டுக்கு வருமானம் 77,000,000 பவுன். வைஸ்ராய் சபையார் தவிர வேறெவருக்கும் இதன் வசூல், செலவுகளில் அபிப்பிராயம் சொல்லும் அதிகாரம் கிடையாது.

இங்கிலாந்தில் 1881-ம் வருஷத்திலிருந்த பள்ளிக்கூடங்கள், மாணாக்கர்களின் தொகை இப்போது இந்நாட்டி லிருக்கிறது. எல்லாரும் சீட்டுப் போட்டுப் பிரதிநிதி தெரிந்தெடுக்கும் சுதந்திரம் பெறக்கூடிய யோக்கியதை அடையவில்லை என்பதைக் கொண்டு ஏற்கெனவே அந்த யோக்கியதை உடையவர்களுக்கு அந்த சுதந்திரம் கொடுக்காமல் இருப்பது சரியன்று. நாட்டில் ஸகலருக்கும் நீராவி யந்திரம் ஓட்டத் தெரியவில்லை யென்ற காரணத்தைக் கொண்டு ஓட்டத் தெரிந்தவர்களையும் ஓட்டக்கூடாதென்று தடுக்கலாமா?

அறுநூறு வருஷங்களுக்கு முன்பு இங்கிலிஷ் ஜனங்கள் மஹா பாமரராக இருந்த காலத்தில் அவர்களுக்கிருந்த உரிமை யளவு நாம் இப்போது கேட்கிறோம்!

இந்தச் சட்டசபைத் திருத்தம் ஏற்பாடு செய்வதைப்பற்றி ஆலோசனை செய்வதற்காக ஸர் சார்லஸ் ஏச்சிஸன், ஸர் ஸ்டுவர்ட்பேலி, மாதவ ராவ், பத்ருதீன் தியாப்ஜி, உமேசசந்த்ர பானர்ஜி இத்தனை பேர் சேர்ந்த தொகுதி சமைத்து பம்பாய் அல்லது சென்னை கவர்னரை அக்கிராஸனாதிபதி யாக்கலாம். நாம் கேட்பது மிகவும் சொற்பம். இது கொடுத்தால் போதும். இங்கிலாந்துக்கும் இந்த தேசத்துக்கும் உள்ள தொடர்பு அதனால் மிகுதிப் படுமென்றும் நீடித்து நிற்கும்.

நான்காம் ஜன சபைக் கூட்டத்தில் அக்ராஸனபதி ப்ரஸங்கம் முற்றிற்று.

அலஹாபாதில் 1888-ல் கூடிய ஜன சபையின் நான்காங் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள்

I. முதல் தீர்மானம்:

சட்டசபைத் திருத்தம்

1885, 1886ஆம் வருஷம் ஜன சபைக் கூட்டங்களின் மூன்றாந் தீர்மானங்களிலும், 1887ஆம் வருஷம் இரண்டாவது, நான்காவது தீர்மானங்களிலும் கண்டபடி வைஸ்ராய் சட்டசபையையும் மாகாண சட்டசபைகளையும் விசாலமாக்கிச் சீர்திருத்த வேண்டுமென்றும், பஞ்சாபிலும் ஒரு மாகாண சபை ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும் இந்த ஜன சபை பிரார்த்திக்கிறது.

II. இரண்டாந் தீர்மானம்:.

ஸம காலப் பரீக்ஷை

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையில் குறிப்பிட்ட அனுகூலங்களை மகிழ்ச்சியுடன் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறோ மாயினும், இந் நாட்டில் அரசாட்சி உத்தியோகங்களுக்கு பஹிரங்கப் போட்டிப் பரீக்ஷை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரேகாலத்தில் நடக்கும்படி செய்யும் வரை இந்தியா ஜனங்களுக்கு முழு நியாயம் ஏற்படா தென்பதை இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

III. மூன்றாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ இலாக்காக்களைப் பிரிவு செய்தல்

1886ஆம் வருஷம் பதினொன்றாந் தீர்மானத்திலும், 1887ஆம் வருஷம் மூன்றாந் தீர்மானத்திலும் கண்டவாறு நீதி, நிர்வாஹ அதிகாரங்கள் எங்கும் ஒரே மனிதன் வசமில்லாத வண்ணமாக அந்த இரண்டிலாகாக்களையும் முற்றிலும் பிரித்துவிட வேண்டுமென்று இந்த ஜன சபை பிரார்த்திக்கிறது.

IV. நான்காந் தீர்மானம்:

ஜூரி விசாரணை

ஜூரி விசாரணை முறைமையை இப்போது வழங்காத இடங்களிலும் வழக்கத்துக்கு வரும்படி பரப்ப வேண்டுமென்ற 1886ஆம் வருஷம் எட்டாந் தீர்மானத்தையும், ஜூரிகளின் தீர்ப்பை ஜில்லா நியாயாதிபதியும் உத்தம நியாய ஸ்தலத்தாரும் மாற்றலாமென்று 1872-ல் செய்யப்பட்ட புது விதியை ரத்துசெய்து விடவேண்டுமென்ற 1886ஆம் வருஷம் ஒன்பதாந் தீர்மானத்தையும், சிறையோலை (வாரன்ட்) வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா நியாயஸ்தலத்தில் விசாரிக்கும்படி கேட்க இடங்கொடுக்க வேண்டுமென்ற 1886ஆம் வருஷம் பத்தாந் தீர்மானத்தையும் இந்த ஜன சபை வாசித்து ஆலோசனை செய்து மறுபடி ஊர்ஜிதப்படுத்துகிறது.

V. ஐந்தாந் தீர்மானம்:

போலீஸ் இலாகா

இப்போதுள்ள போலீஸ் அனுஷ்டானங்கள் அதிருப்திக் கிடமாகவும் ஜனங்களுக்குக் கொடுமையாகவும் இருக்கின்றன என்பது இந்த தேசத்து ஜனங்களின் பொது நம்பிக்கை யாதலால், மேற்படி விவகாரம் முழுவதையும் விசாரித்துச் சீர்திருத்தும் பொருட்டாக மிகவும் விரைவில் உத்தியோகஸ்தர் - அல்லாதார் இரு திறத்து மெம்பர்களும் சேர்ந்த விசாரணைக் கூட்டமொன்று நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன சபை வேண்டுகிறது.

VI. ஆறாந் தீர்மானம்:

ராணுவ விவகாரங்கள்

நமது தேசத்தாருக்குச் சேனையில் உயர்ந்த ஸ்தானங்கள் கொடுத்து, நம்மவரின் பயிற்சிக்காக இந் நாட்டில் ராணுவ கலாசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்ற 1887ஆம் வருஷம் நான்காந் தீர்மானத்தையும், ஐரோப்பாவின் நிலைமை குழப்பமாக இருப்பதால் இங்கு நம்மவர் சேர்ந்த காப்புப் படையொன்று சமைக்க வேண்டுமென்ற 1886ஆம் வருஷம் பன்னிரண்டாந் தீர்மானத்தையும், அதே கருத்துள்ள 1887ஆம் வருஷம் ஐந்தாந் தீர்மானத்தையும், 1878ஆம் வருஷத்து 1182ஆம் கட்டளை ஆகிய ஆயுதச் சட்டத்தை ரத்து செய்து இந்த நாட்டார் இஷ்டப்படி ஆயுதந் தரிக்க இடங்கொடுக்க வேண்டுமென்ற 1887ஆம் வருஷம் எட்டாந் தீர்மானத்தையும் பார்வையிட்டு இந்த ஜன சபை மறுபடி ஊர்ஜிதப்படுத்துகிறது.

VII. ஏழாந் தீர்மானம்:

ஆப்காரி, சுங்க இலாகா

ஆப்காரி, சுங்க இலாக்காக்களின் இப்போதுள்ள அனுஷ்டானங்களால் இந்த தேசத்தில் லாகிரி வஸ்துக்களின் உபயோகம் மிகுதிப்பட்டு விட்டதை உத்தேசித்து ஜனங்களுக்குள் லாகிரி வழக்கத்தைக் குறைக்க ஹேதுவான திருந்திய முறைமையை அனுசரிக்க வேண்டுமென்று இந்த ஜன சபை விரும்புகிறது.

VIII. எட்டாந் தீர்மானம்:

வருமானத் தீர்வை வசூல்

பொதுப்படையாக வருமானத் தீர்வை வசூல் விஷயத்திலும் - முக்கியமாக 1000 ரூபாய்க்குக் குறைந்த வருமானங்களின் விஷயத்திலும் - இப்போதுள்ள வசூல் முறைமை மிகவும் அதிருப்திக்கிடமாக இருப்பதால் 1000 ரூபாய்க்குக் குறைந்த வருமானங்களுக்குத் தீர்வை கிடையாதென்று விதிக்கும்படி இந்த ஜன சபை வேண்டுகிறது.

IX. ஒன்பதாந் தீர்மானம்:

கல்வி : பொதுக்கல்வியும் தொழிற் கல்வியும்

பொதுக் கல்வியையும் தொழிற் கல்வியையும் எல்லா ஜாதைகளிலும் வளர்த்தல் ராஜாங்கத்தாருடைய முதற் கடமை யென்பது இந்த ஜன சபையின் அபிப்பிராய மாதலாலும், கல்வி விஷயத்தைக் குறித்து இந்திய கவர்ன்மெண்டார் சிறிது காலத்துக்கு முன் செய்துகொண்ட தீர்மானம் ராஜாங்கத்தின் கல்விச் செலவைக் குறைத்துப் பாடசாலைகளின் மீது கவர்ன்மெண்டார் செலுத்தும் மேற்பார்வையையும் குறைக்க வேண்டுமென்ற நோக்கமுடையதாகத் தோன்றுகிறபடியாலும், இப்போதுள்ள கல்விச் செலவை மிகுதிப்படுத்த வேண்டும் அல்லது குறைக்காமலேனும் இருக்க வேண்டுமென்றும், எல்லாவிதமான பாடசாலைகளின்மீதும் சர்க்கார் மேற்பார்வை இருக்குமிடத்து அதை மாற்றக் கூடாதென்றும் இந்த ஜன சபை வேண்டிக் கொள்ளுகிறது.

X. பத்தாந் தீர்மானம்:

தொழில் விசாரணைக் கூட்டம்

இந்த நாட்டு ஜனங்களின் வறுமையையும், உள் நாட்டுத் தொழில்களை உற்சாக மூட்டுவதின் அவசியத்தையும், தேசத்தின் இப்போதுள்ள அறிவு நிலையில் தொழிற் கல்வி விஸ்தாரமாகச் சமைப்பதில் உள்ள சிரமத்தையும் கருதி, இந் நாட்டின் கைத்தொழில் நிலைமையைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கலப்பு விசாரணைக் கூட்டம் நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன சபை கருதுகிறது.

XI. பதினொன்றாந் தீர்மானம்:

காங்கிரஸ் தீர்மானங்களின் விஷயம்

நமது தீர்மானங்களை யெல்லாம் வைஸ்ராய்க்கு அனுப்பி அவர் அதை தயவுடன் கவனிக்கும்படிக்கும் மேலும், இந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்கள் பெரும்பாலும் மஹாராணியின் 1858ஆம் வருஷத்து ஸ்ரீமுகத்தை ஆதாரமாகக் கொண்டன.

ஆதலால், அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்றும், இந்தத் தீர்மானங்களின் விஷயத்தில் எதைப்பற்றியேனும் விசாரணை நடத்துதல் அவசியமென்று தோன்றினால் அவ்வித விசாரணை கூடிய சீக்கிரத்தில் பார்லிமெண்டின் விசாரணைக் கமிட்டி யொன்றின் மூலமாக நடத்திவைக்க வேண்டுமென்றும் இந்த ஜன சபை செய்யும் பிரார்த்தனை ஸஹிதமாக இத் தீர்மானங்களை வைஸ்ராய் இந்தியா மந்திரிக்கு அனுப்பும் - படிக்கும் பிரார்த்திக்க வேண்டுமென்று இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

XII. பன்னிரண்டாந் தீர்மானம்:

இந்தியாவில் வியபிசாரத்தை ராஜாங்கத்தார் திட்டம் பண்ணுதல்

இந்தியாவில் வியபிசாரத்தைப் பற்றிய ராஜாங்கத் திட்டத்தின் விதிகளையும் சட்டங்களையும் முற்றிலும் ரத்து செய்து விடும் பொருட்டாக, இங்கிலாந்தில் செய்யப்பட்டு வரும் முயற்சிகளை இந்த ஜன சபை அனுதாபத்துடனும் சிரத்தையுடனும் கவனித்து வருகிறது; இங்ஙனம் செய்யும் உதவிக்கு நன்றி செலுத்துவதுடன் இந்த விஷயத்தில் தன்னால் இயன்ற உதவி செய்ய விரும்புவதாக இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

XIII. பதின்மூன்றாந் தீர்மானம்:

நழுவ விடத்தக்க தீர்மானங்கள்

இந்துப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் அல்லது மஹமதியப் பிரதிநிதிகள் அத்தனை பேரும், (அல்லது சற்றுக் குறைய அத்தனை பேரும்) சேர்ந்து எந்தத் தீர்மானங்களுக்கு ஆக்ஷேபஞ் சொல்லுகிறார்களோ அவற்றை விஷயாலோசனைக் கமிட்டிக்குக் கொண்டுவரக் கூடாது; அவற்றைப்பற்றி ஸபாநாயகர் பிரசங்கத்தில் விவகரிக்கவும் கூடாது; ஒரு தீர்மானம் ஆலோசனைக்கு வந்து பாதி தூரம் விவாதம் நடக்கும்போது மேற்கண்டபடி ஆக்ஷேபம் பிறக்குமானால் அந்தத் தீர்மானத்தை அப்படியே நழுவ விட்டுவிட வேண்டும் என்று இந்த ஜன சபை தீர்மானம் செய்து கொள்ளுகிறது.

XIV. பதினான்காந் தீர்மானம்:

சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களில்
சாசுவத நிலவரித் திட்டம்

சென்னை, பம்பாய் முதலிய மற்ற மாகாணங்களிலும் (வங்காளத்தில் இருப்பதுபோல்) நிலவரி வசூலின் சாசுவதத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்து சாசுவதக் காங்கிரஸ் கமிட்டிகளிடம் ஆலோசனை கேட்டெழுதி, அவரவர் வட்டத்தின் நிலைமைக்குத் தக்கபடி மேற்படி விஷயத்தைப் பற்றி 1889ஆம் வருஷத்து ஜன சபைக்கு அறிக்கை யனுப்பும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

XV. பதினைந்தாந் தீர்மானம்:

உப்புத் தீர்வை

உப்புத் தீர்வையை அதிகப்படுத்தியதில் ஏழைகளின் சுமை அதிகக் கஷ்டமாவதாலும், ராஜ்யத்திற்கு ஆபத்து ஸமயங்களில் உபயோகப்படக்கூடிய ஒரே தீர்வை வழியை ஸமாதானமும் செழிப்புமுள்ள காலங்களில் போட்டு விழலாக்குதல் தவறென்றும் கருதி மேற்படி விஷயத்தில் தான் அதிருப்தி கொண்டிருப்பதாக இந்த ஜன சபை அறிவிக்கிறது.

XVI. பதினாறாந் தீர்மானம்:

அடுத்த ஜன சபை

நமது கூட்டம் ஐந்தா முறை அடுத்த வருஷம் (1889) டிஸம்பர் 26-ல் பம்பாய் மாகாணத்தில் கூடவேண்டு மென்றும், பம்பாய் நகரத்திலா புனாவிலா என்பது பின்னிட்டு நிச்சயித்துக் கொள்ளத் தகுமென்றும் இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

XVII. பதினேழாந் தீர்மானம்:

பொதுக் காரியதரிசி நியமனம்

வரும் வருஷத்துக்கு ஜன சபையில் பொதுக் காரியதரிசியாக மறுபடி மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூமையே நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

நான்காம் ஜன சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

இந்த வருஷத்துக் காங்கிரஸ் (நான்காம்) கூட்டத்தில் ஒரு விசேஷமென்னவென்றால் காங்கிரஸ் பொதுப் பிரதிநிதிகள் கூட்டத்துக்கு முன்னே விஷயங்களை ஆலோசனைக்குத் தயார் செய்து கொண்டு வரும் பொருட்டு - அதாவது "தீர்மானங்கள்" தயார் செய்துவர ஒரு விஷய பூர்வாலோசனைக் கமிட்டி நியமனம் செய்யப்பட்டது.

தேச முழுதும் வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டம் மேற்படி கமிட்டிக்கு இத்தனை மெம்பர்கள் தயார்செய்து கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்தார்கள்.

இந்த வருஷத்திலேதான் ஜன சபை மேடையின் மீது லாலா லாஜ்பத் ராய் முதல் தடவை உபந்நியாஸம் புரிந்தார்.

சட்டசபைத் திருத்தத் தீர்மானத்தை அனுஸரித்துப் பேசுகையில் ஸ்ரீமான் ராமஸாமி முதலியார் புதுச்சேரி முதலிய ப்ரெஞ்ச் இந்தியா ஊர்களில் எல்லாப் புருஷருக்கும் வாக்குச் சீட்டு சுதந்திரம் இருப்பதை விவரமாக எடுத்துக்காட்டி, அவ்வூர்களில் இருப்போரும் நாமும் பந்துக்களாக இருக்க, அவர்கள் ஏறக்குறையப் பரிபூர்ண விடுதலை நிலைமையில் வாழும்போது, நாம் சாதாரணப் பிரதிநிதி யனுஷ்டானத்தின் முதற் படிகளை அனுபவிக்கவும் தகுதியற்றோ மென்பது வெறும் பொய் யென்பதை எடுத்துக்காட்டினார்.

இரண்டாந் தீர்மானத்தைக் குறித்து மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன் பேசுகையில் இந்தியாவுக்குச் செய்த வாக்கு தத்தங்களை இங்கிலாந்து நிறைவேற்றாமல் விட்டதுபற்றி ஆங்கிலேயரான தமக்கு வெட்கமுண்டாவதாகக் கூறினார்.

அப்படி வாக்குத் தவறியதை ஆர்கைல் ட்யூக் ஒப்புக் கொண்டதையும், லார்ட் லிட்டன் இந்தியர் ஆசைகளில் "வஞ்சிக்கப் பெற்றனர்" என்று சொல்லி யிருப்பதையும் மிஸ்டர் நார்ட்டன் மேற்கோள் காட்டினார். போலீஸ் இலாகாவைப் பற்றிய தீர்மானத்தை அனுஸரித்துப் பேசுகையில் லக்நவ் நகரத்துப் "பஞ்ச்" பத்திராதிபர் முன்ஷிஸஜ்ஜத் ஹுஸேன் "போலீஸாரால் திருடருக் கேற்படும் கஷ்டங்களைக் காட்டிலும்

யோக்கியமான ஜனங்களுக்கு அதிகக் கஷ்டங்கள் விளைகின்றன. வீட்டில் களவுபோகிற ஹிம்ஸையைக் காட்டிலும் அதைப் போலீஸார் விசாரணை செய்கையில் அதிக ஹிம்ஸை உண்டாகிறது" என்றார்.

ஆயுதச் சட்டத்தை ரத்து செய்யும்படி பேசினவர்கள் மிகவும் ஆத்திரத்துடன் பேசினார்கள். "ஒரு தேசத்தார் அத்தனை பேரையும் ஆண்மை யில்லாதவராகச் செய்யக் கூடாது; அங்ஙனம் செய்தல் ஸாத்யமுமில்லை" என்பதை மிஸ்டர் மேத்தா காட்டினார்.

ஆலி மஹமத் பீம்ஜி சொன்னதாவது: "நான் ஒரு அமெரிக்கா பூர்வ ஜாதியானை இன்று வேலைக்காரனாக வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அவன் ஆயுதந் தரிக்கலாம். அந்த அதிகாரம் எனக்கில்லை. இப்படி எந்த தேசத்திலேனும் நடக்குமோ?" என்றார்.

காங்கிரஸ் கூட்டத்தின் நான்காந் தினத்தன்று இங்கிலீஷ் மந்திரி கிளாட்ஸ்டன் பிறந்த நாளாகையால் ஜன சபை மேற்படி மந்திரிக்கு அன்று வாழ்த்துத் தந்தி அனுப்பிற்று.

பாலிய ஐரோப்பிய சிப்பாய்களுக்கென்று 2000 இந்திய வியபிசாரி ஸ்திரீகளுக்கு மேலாகவே கவர்ன்மெண்டார் தயார் செய்து கொடுக்கும் வழக்கத்தினால் அந்தச் சிப்பாய்களுக்கே தீமை யுண்டாகிற தென்றும், அவர்களை விவாகம் செய்து கொள்ளத் தூண்டுவதே சரியான வழி யென்றும் காப்டின் பானன், காப்டின் ஹியர்ஸே என்ற இரண்டு ஐரோப்பிய ராணுவ உத்யோகஸ்தர்கள் ஜன சபையின் 13-ம் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் எடுத்துக் கூறினர்.

"ஜன சபைக்குப் பிதா" என்ற பட்டம் பெற்ற மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூம் மறுபடி பொதுக் கார்யதரிசியாகும்படி செய்து நம்மவர் அந்த ஐரோப்பிய உபகாரியிடம் கொண்டிருந்த அன்பைத் தெரிவித்தனர்.

நான்காம் ஜன சபைக் கூட்டத்தின் சரித்திரம் முற்றிற்று.

4-ம் அத்தியாயம் முற்றிற்று.

ஜன சபைச் சரித்திரம்

ஐந்தாம் அத்தியாயம்

ஐந்தாங் கூட்டம் – பம்பாய் – 1889

1889 டிசம்பர் 26-ல் ஐந்தாம் கூட்டம் பம்பாயில் கூடிற்று. ஸர் ஆல்பெர்ட் ஸாஸூன் என்பவர் விட்டுக்கொடுத்த நிலத்தின்மீது பெரிய மண்டபம் கட்டினார்கள். அதில் 6000 பேர் கூடினர். அவர்களில் 1913 பேர் பிரதிநிதிகள். ராஜாக்கள் முதல் பாதிரிமார் வரை எல்லாவிதமான தொழில் நிலை, பதவிகளின் பிரதிநிதிகளும் வந்தனர்.

அந்த வருஷம் இங்கிலாந்தில் பார்லிமெென்ட் சபை மெம்பரும், ஸர்வ ஜனோபகாரியும், கீர்த்தி பெற்ற நாஸ்திகவாதியும் ஆகிய சார்லஸ் ப்ராட்லா என்பவர் ஜன சபைக் கூட்டத்துக்கு வந்தபடியால் அவரைக் கண்டு அவருடைய புகழ்பெற்ற வாக்கு விலாஸத்தை அனுபவிக்க வேண்டுமென்ற அவாவினால் பிரதிநிதிகளும் மற்றோரும் முன் வருஷங்களைக் காட்டிலும் அதிகமாகச் சேர்ந்தனர். இது ஒரு காரணம்.

மற்றொரு காரணம் யாதெனில், நாட்டிலேயே ஜன சபையின் செல்வாக்கு மிகவும் ஏறிப்போய் விட்டது. அலஹாபாத்தில் அதிகாரிகள் ஜன சபையை மூச்சைப் பிடித்துக் கொல்ல வேண்டு மென்று விரும்பியதுபோல் பம்பாயிலே விரும்பவில்லை. பம்பாய்க் கூட்டத்தில் மாஜி ஸிவில் ஸர்விஸ் உத்யோகஸ்தரும் பின்னிட்டு ஜன சபைக்காக இங்கிலாந்தில் எவ்வளவோ பாடுபட்டவருமாகிய ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அக்ராஸனம் வஹித்தார்.

பார்ஸி பிரோஸ்ஷா மேத்தா இவ் வருஷம் உபசார கணத் தலைவர். இந்த மேத்தாவே பின்னிட்டு நிதான - தீவிரக் கக்ஷி பேதங்களில் மிகவும் ஸம்பந்தப்பட்டவர். இவருடைய சரித்திரம் போகப் போக அறிவிக்கப்படும்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அக்ராஸனம் வகித்துப் பின்வரும் உபந்யாஸம் புரிந்தார்.

அக்ராஸனாதிபதி பிரசங்கத்தின் ஸாரம்

கனவான்களே,

உங்களிடம் மிகவும் உள்ளன்புடனே நன்றி தெரிவிக்கிறேன். நீங்கள் எனக்குச் செய்த பெரிய கௌரவத்தையும், என்னை சபாநாயகனாக வேண்டுகையில், என்னைப் பற்றிக் கூறிய புகழ்ச்சி யுரைகளையும் பெரிதும் நன்கு மதிக்கிறேன். 25 வருஷ காலம் உங்களிடையே குடி யிருந்தேன்.

உங்களிடம் எனக்குள்ள நல்லெண்ணத்தை ஏற்கெனவே அறிவீர்கள். இந்த இருபத்தைந்து வருஷங்களாக உங்களுடைய உப்பைத் தின்றேன். என் உயிருள்ள வரை உங்களுக் குழைப்பேன். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் ஒருங்கே நன்மை பயக்கக்கூடிய உங்கள் ப்ரயத்தனங்களில் கலக்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தது பற்றி மிகவும் ஸந்தோஷப்படுகிறேன்.

இங்கிலாந்தில் இந்தியாவின் விவகாரங்கள்

நான் உங்கள் நாட்டைவிட்டுப் பிரிந்து சென்று மூன்று வருஷங்கள் ஆயின. இந்த மூன்று வருஷத்தில் இந்தியாவின் நன்மைக்காக இங்கிலாந்தில் செய்யப்பட்ட காரியங்களைப்பற்றி மாத்திரமே நான் பெரும் பகுதி பேசப் போகிறேன்.

நாம் முக்கியமாக வேண்டும் விஷயம் யாது? இந்தியா விவகாரங்களைப் பார்லிமென்ட் சபையார் மேற்பார்க்க வேண்டுமென்பது நமது பெரு நோக்கம். அது கிடைத்தால் மற்றதெல்லாம் நேராய்விடும். இந்தியாவின் அரசாட்சி நெறியைப் பற்றி ராஜ வம்சத்தாரும் பார்லிமென்ட் சபையாரும் சில தெளிவான கொள்கைகள் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

அந்தக் கொள்கைகள் நமக்குத் திருப்தி தரக்கூடியன என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் மேற்படி கொள்கைகளை அனுஷ்டானத்தில் காட்டுமிடத்தேதான் ஸங்கடம் ஏற்படுகிறது.

இங்குள்ள அதிகாரி வர்க்கத்தினரின் லாபத்துக்கும் இந்தியாவில் தீர்வை செலுத்தும் குடிகளின் க்ஷேமத்துக்கும் பரஸ்பர விரோதமாக இருக்கிறது.

நான் ஸிவில் ஸர்விஸ் ஜாதியைச் சேர்ந்தவனே. என்னுடைய பிதா 1807-ல் உங்கள் நாட்டு ராஜ்ய உத்யோக (ஸிவில் ஸர்விஸ்) கூட்டத்தில் சேர்ந்தார். பிறகு என் தமையன் வந்தார். அவர் சிப்பாய்ச் சண்டையில் மடிந்தார். பிறகு நான் வந்தேன். எனவே மேற்படி ஸிவில் ஸர்விஸ் ஜாதியிடம் நான் மிகுந்த அபிமான முடையவன். அதன் திறமைகளையும் யோக்யதைகளையும் நான் நன்றாக அறிவேன். அதன் பேருழைப்பு முதலிய நற்குணங்களை ஒப்புக்கொள்ளுகிறேன். அதிலுள்ள புருஷர்மீது நான் குற்றங் கூறவில்லை. அனுஷ்டானமே பிழை யென்று சொல்லுகிறேன்.

இந்தியாவில் தீர்வை செலுத்தும் குடிகளுக்கு வேண்டியன எவையெனில் ஸமாதானம், சீர்திருத்தம், சிக்கனம் என்ற மூன்றும். இம் மூன்றும் ஐரோப்பிய உத்யோகஸ்தருக்கு ஸரிப்படாது. ராணுவ உத்யோகஸ்தருக்குச் சண்டையிலே உற்சாகம்.

ஸமாதானத்தில் அவர்களுக்கு ருசி யில்லை. அரசியல் உத்யோகஸ்தரோ சிக்கனத்தை விரும்ப வழி யில்லை. ஏனென்றால் சிக்கனம் பண்ணுவதென்றால் அவர்களுடைய சம்பளம் குறையும். அவர்கள் சீர்திருத்தத்தையும் விரும்பவில்லை. சீர்திருத்தம் செய்தால் அவர்களுடைய அதிகாரத்துக்குக் குறைவுண்டாகும். (நகைப்பும் கரகோஷமும்)

பார்லிமென்ட் சபையின் மேற்பார்வை

இந்தியா விஷயத்தில் பார்லிமென்ட் சபையின் மேற்பார்வை வரவரச் சீர்கெட்டு வந்திருக்கிறது. இந்தியா விவகாரங்களைப்பற்றி இங்கிலாந்தில் நிர்ப்பக்ஷபாதமான மேற்பார்வை சமைக்கவேண்டு மென்று நூறு வருஷங்களுக்கு முந்தியே எட்மன்ட் பர்க் சொன்னார்.

மிஸ்டர் பாக்ஸ் கொண்டுவந்த இந்தியா மசோதா சட்டமா யிருந்தால், அந்த நோக்கம் நிறைவேறி யிருக்கும். இந்தியாவிற்கு ஸம்பந்த மில்லாத இங்கிலிஷ் கக்ஷிச் சண்டைகள் காரணமாக அந்த மசோதா விழுந்து போய்விட்டது. நாளுக்கு நாள் சீர்கெட்டுக் கொண்டே போயினும் 1858-ம் வருஷத்தில் இந்தியா சட்டம் செய்த வரை அத்தனை மோசமில்லை.

அது முதல்தான் நம்முடைய துரதிர்ஷ்டங்கள் பலமடைந்தன. அதற்கு முந்தி இரண்டு விதக் காப்புகள் இருந்தன. முதற் காப்பு யாதெனில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் அதிக உரிமைபெற்ற வியாபாரக் கூட்டத்தா ராதலால் அவர்களை மிகவும் மிஞ்சவிடக் கூடாதென்று அவர்களிடம் பார்லிமெண்ட் சபையாருக் கிருந்த பொறாமை. மற்றொரு காப்பு யாதெனில் கம்பெனியார் முப்பது வருஷங்களுக் கொருமுறை தமது ஸந்நதைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்பதாக ஏற்பட்டிருந்த விதி.

ஒவ்வொரு தடவை புதுப்பிக்கும்போதும் இந்தியா ஜனங்களின் குறைகளைப் பற்றிப் பார்லிமெண்ட் சபையில் கடுமையான சோதனை செய்தனர். அப்போது கும்பினியார் தம் அரசாட்சி முறையை நியாயங் காட்டி ஆதரிக்க நேர்ந்தது. ஒவ்வொரு விசாரணையின்போதும் இந்தியா ஜனங்களுக்குச் சில புதிய சீர்திருத்தங்களும் அனுகூலங்களும் உண்டாயின.

இப்போது மேற்படி இரண்டு விதமான காப்புகளு மில்லை. முன்பு ஸம்சயத்துக்கிடமாக இருந்த உத்யோகஸ்தர் இப்போது இந்தியா மந்திரி சபையாகிய மூலஸ்தானத்திலே போய் உட்கார்ந்து விட்டனர். அவர்கள் இந்தியாவில் செய்த தீர்மானங்களைப் பின் அவர்களே இந்தியா மந்திரி சபையிலிருந்து மேற்சோதனை போடுகிறார்கள். இவ்விதமான மேற்பார்வை வெறுங் கேலி; வஞ்சனை; கண் மயக்கம். வேறொன்றுமில்லை.

முப்பது வருஷங்களுக் கொருமுறை விசாரணை நடந்த முறைமை நின்றுபோனது மிகப் பெரிய தீமையாயிற்று. இந்தியாவில் சீர்திருத்தக்காரர் பார்லிமெண்ட் விசாரணை வேண்டும் வேண்டுமென்று கூவியும் இப்போது நடக்க வழியில்லை.

முன்பு இந்தியா தேசத்தார் கேட்காமலே வலிய விசாரணை நடந்து வந்தது. போன தடவை விசாரணை 1854-ல் நடந்தது. பழைய அனுஷ்டானப்படி பார்த்தால் ஏற்கெனவே மற்றொரு விசாரணை ஐந்து வருஷங்களுக்கு முன்பு நடைபெற்றிருக்க வேண்டும்.

இங்கிலாந்தில் இந்தியாவுக்கு விரோதிகளின் கூட்டுறவுகள்

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் பின்னும் சொல்லுகிறார்:

இங்கிலாந்தில் இப்போது பலச் சேர்க்கைக ளெல்லாம் நம்முடைய எதிரிகளின் வசத்தில் இருக்கின்றன. இந்தியா மந்திரி சபை நமக்கு விரோதம். லண்டன் பத்திரிகைகள் நமக் கனுகூலமில்லை. இந்தியாவில் பழகின பார்லிமென்ட் மெம்பர்களும் அதிகாரிகளுக்குச் சார்பாகவே யிருக்கிறார்கள். எனிலும் நாம் அதைரியப்படக் கூடாது. ஏனென்றால் காலசக்தி நமக்கு அனுகூலம். புதிய ஜனாதிகாரக் கொள்கைக ளெல்லாம் சுதேசீய நாட்டங்களுக்குத் துணையாகும்.

லண்டனில் ஜன சபைக்குச் சார்பாக உழைப்போர்

லண்டனில் காங்கிரஸ் சபைக்குக் கிளைத் தொகுதி யொன்று நீங்கள் ஏற்படுத்தியது மிகவும் நன்றாயிற்று. அது உங்கள் கருத்துக்களை இங்கிலாந்தில் பரப்பி வருகிறது. ஏற்கெனவே காங்கிரஸ் விஷயம் இங்கிலாந்தில் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்து வந்தது. அத்துடன் இந்தக் கிளைத் தொகுதி தனது கார்யதரிசியாகிய மிஸ்டர் வில்லியம் டிக்பியின் இடைவிடாத உழைப்பினால் உங்களுக்குப் பார்லிமெண்டில் பேசவும் பொது ஜனங்களின் முன்னே உபநயஸிக்கவும் பல நண்பர்களைச் சேகரித்து வருகின்றது.

பார்லிமென்டிலே இந்தியாவுக் கனுகூலமான கக்ஷி யொன்றேற் படுமென்று நம்புகிறேன். இங்கிருந்து உங்களுக்குள் கவுரவமும் அனுபவமுடைய சில ஜனத்தலைவர்கள் நமது பொதுக் காரியதர்சியுடன் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போய் அங்கு

ஜனங்கள் முன்னே உபந்யாஸங்கள் செய்ய எண்ணி யிருப்பது கேட்டு மிகவும் ஸந்தோஷ மடைகிறேன். அதனால் நல்ல பயனுண்டா மென்பதில் ஐயமில்லை.

ஆங்கிலேயரும் ஜன சபையும்

ஜன சபை விஷயத்தில் அவநம்பிக்கைப்படும் ஆங்கிலேயரிடம் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜன சபையை ஏற்படுத்தினோர் பிரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் மிகுந்த பற்றுதலுடையவர்கள். இதை விட்டு ருஷியாவின் ஆட்சிக் கீழ்ப் புகுவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். இங்கிலீஷ் ராஜ்யம் நாகரீகமானது. ருஷியர் ஆட்சி கொடுங்கோன்மை. ருஷியர் நம்மீது படையெடுத்து வரவேண்டுமென்ற உத்தேசங்கள் கொண்டிருப்பதைப்பற்றி நான் ஒரு இந்திய நண்பருடன் பேசிக் கொண்டிருக்கையிலே அவர் சொன்னார்:

> "இந்தியா ருஷியரின் கீழ்ப்பட்டால் உங்களுக்குக் கஷ்டமில்லை. நீங்கள் கப்பல்களில் ஏறிக் கொண்டு தொலையிலே உள்ள உங்கள் நாட்டுக்குச் சென்று ஸௌக்யமாக வாழ்வீர்கள். நாங்கள் ஸகல சுதந்திரங்களையும், நாட்டையும், எதிர்காலத்து நம்பிக்கையையும் இழந்து வருந்துவோம்"

என்றார்.

ஆனால், வெறும் வாய்ச் சொல் அதிகப் பயன்படாதென்றும் செய்கைகளில் அந்த அபிமானத்தைத் தெரிவித்தால் மாத்திரமே நம்பலாமென்றும் சிலர் கூறலாம்.

இந்தியாவின் மீது படையெடுக்க வேண்டு மென்று யோசனைகள் செய்யும்போதெல்லாம் ருஷிய சேநாபதிகள் அங்ஙனம் தாம் படையெடுத்து வருகையில் இந்தியர்கள் ஒரு பக்கம் கிளம்பிக் கலகம் நடத்துவார்க ளென்றும், அதுவே தமது வெற்றிக்கு முக்கிய உதவியாகுமென்றும் நம்பி யிருக்கிறார்க ளென்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயம். 1885-ல் அவர்கள் இந்த யோசனையைக் கொஞ்சம் ப்ரயோகம் பண்ண உத்தேசித்து இந்தியர்கள் என்ன செய்கிறார்கள் பார்ப்போமென்று தாம் படையெடுப்பதுபோலே நடித்துக் காட்டினார்கள்.

அப்போது இந்தியாவில் கலகம் தோன்றி யிருந்தால் நமது நிலைமை பலஹீனப்பட்டிருக்கும். ருஷியர் பெரிய மகிழ்ச்சி கொண்டாடி யிருப்பார்கள்.

ஆனால், இங்கிலாந்தின் கஷ்ட தசையை இந்தியா தனக்கு அனுகூல தசை யென்றெண்ணவில்லை. சுதேசீயப் பத்திரிகைகள் பெருங் கூச்சலிட்டு இங்கிலாந்துக்குப் பண உதவியும் ஜன உதவியும் செய்ய வேண்டுமென்று கூவ, நாடு முழுதும் நமக்கனுகூலமான கிளர்ச்சி யுண்டாயிற்று. பாறைகளையும், மேடுகளையும் உணர்த்துவோன் கப்பலின் மீகானுக்கு விரோதி யன்று. நண்பனே யாவான். அதுபோல் ஆங்கிலேயரின் ஆட்சியிலுள்ள குற்றங்களைக் காட்டிச் சீர்திருத்தங்கள் வேண்டுவோரை ஆங்கில ஆட்சிக்கு நண்பராகக் கருத வேண்டுமே யல்லாது பகைவராகக் கருதக்கூடாது.

காங்க்ரஸ் சபையார் கேட்கும் குறைச்சலான சீர்திருத்தங்களை நாம் செய்து கொடுத்தால் இந்தியாவில் திருப்தியும் செழிப்பும் மிகுதிப்படும். அதனால் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் அஸ்திவாரங்கள் உறுதி யடையும். ஆங்கிலேய வியாபாரிகளும் நம்முடன் சேர்ந்து பாடுபடலாம். தேசம் செழிப்படைந்தால் அவர்களுக்கே நல்லது. நமது தலைவராகிய தாதாபாய் நவுரோஜி இந்த விவகாரத்தை நன்றாக எடுத்துக்காட்டி யிருக்கிறார். ஆஸ்த்ரேலியா குடியேற்ற நாட்டார் வருஷ மொன்றுக்குத் தலைக்கு 17 பவுன் அல்லது 18 பவுன் பெறக்கூடிய பிரிட்டிஷ் ஸாமான்களை விலைக்கு வாங்குகிறார்கள்.

ஏழை இந்தியாவோ தலைக்கு பதினெட்டு பென்ஸ் வீதம் பிரிட்டிஷ் ஸாமான்களை வாங்குகிறது. இந்தியாவில் விவசாயிகளின் கடன் தொலைந்து உழைப்பு மிகுதியாய் க்ஷேமமடைவதற்குரிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டால், அதிலிருந்து பிரிட்டிஷ் வியாபாரத்துக்கு அபரிமிதமான லாபமுண்டாகும்.

இந்தியாவில் தலைக்கு ஒரு பவுன் வீதம் ஸாமான்கள் வாங்கும்படி செய்தால் இந்தியாவிற்கு இங்கிலாந்து அனுப்பும் ஏற்றுமதிகள் மற்றெல்லா ஏற்றுமதிகளிலும் அதிகமாய்விடும்.

ஆதலால் ஆங்கில வியாபாரிகள் காங்கிரஸ் சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் எங்களுக்குத் துணை புரிந்தால் அவர்களுடைய வியாபாரம் நன்றாகப் பலிதமடைந்து மேன்மேலும் பெரிதாகப் பொங்கி வரும்.

சார்லஸ் ப்ராட்லாவுக்கு வாழ்த்து

சட்டசபைச் சீர்திருத்த மசோதா விஷயத்தை நீங்கள் மிகவும் ஆவலுடன் கவனிப்பீர்களென்று நம்புகிறேன். இதைப்பற்றிப் பேசுகையில் எனக்குச் சார்லஸ் ப்ராட்லாவின் ஞாபகம் வருகிறது. இங்கிலாந்தில் நமது காரியத்துக்குப் பெரிய பலமாக நின்று பாடுபட்டு வரும் சார்லஸ் ப்ராட்லா இக்காலத்துக்கு ஒரு சார்லஸ் மார்ட்டல் போலாவர். இவருடைய பெயரை ஸ்வாதீனத்துக்கும் பலத்துக்கும் ஜயத்துக்கும் பிரதி பதமாகக் கருதத்தகும். அறியாமை, அஸூயை, கொடுங்கோன்மை என்ற கோட்டைகளின் அஸ்திவாரங்கள் குலுங்கும்படி இவர் சம்மட்டி அடிகள் அடித்திருக்கிறார். இவர் இங்கு வந்தது இந்தியாவுக்கு பாக்கியம். இனி உங்கள் ஆலோசனைகள் தொடங்குக. உங்களுடைய ஆலோசனைகள் பலிதமானால் அதிலிருந்து மஹாராணிக்கும் அவளுடைய ராஜ்யங்களுக்கும் பத்திரமும், பெருமையும், க்ஷேமமும் மிகுதிப்படுமென்று நிச்சயமாக நம்புகிறேன்.

ஐந்தாம் ஜன சபைக் கூட்டத்தில் சபாநாயகரான ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் செய்த உபந்நியாஸம் முற்றிற்று.

5-ம் ஜன சபையின் தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

ப்ராட்லாவுக்கு உபசாரப் பத்திரிகை

பார்லிமெண்ட் மெம்பராகிய சார்லஸ் ப்ராட்லாவுக்கு இங்கு நமது சபையில் உபசாரப் பத்திரிகை வாசிக்க வேண்டுமென்றும் அப் பத்திரிகையை ஆதாம், பிரோஸ்ஷா மேத்தா, உமேசசந்திர பானர்ஜி மூவரும் கூடி எழுதிக் கொடுக்க வேண்டு மென்றும் இந்த ஜன சபை தீர்மானம் செய்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

சட்டசபைத் திருத்தம்

வைஸ்ராய் சட்டசபையையும் மாகாண சபைகளையும் சீர்திருத்திப் புதிதாக அமைக்கும் பொருட்டுக் கீழே சுருக்கமாகக் காட்டி யிருக்கும் யுக்தியை இந்த ஜன சபை அங்கீகாரம் செய்து கொள்வது மன்றி மேற்படி யுக்தியை அனுஸரித்துக் காமன்ஸ் சபை முன்னே ஒரு மசோதா தயார் செய்துகொண்டு வரும்படி சார்லஸ் ப்ராட்லாவைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்கிறது.

யுக்தி

1. வைஸ்ராய், மாகாண சட்ட சபைகளின் மெம்பர்களில் பாதிக்குக் குறையாமல் தெரிந்தெடுத்த பேர்; காற் பங்குக்கு மேற்படாமல் உத்தியோகஸ்த மெம்பர்கள்; பாக்கி கவர்ன்மெண்டார் நியமனம் என்று சமைக்கத் தகும்.

2. ஸர்க்கார் தீர்வைக்காக ஏற்படுத்தி யிருக்கும் ஜில்லா வகுப்புக்களே தெரிந்தெடுத்தல் விவகாரங்களுக்கும் ஆதாரப் பகுதிகளாகக் கருதத் தகும்.

3. 21 வயதுக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் குடிகள் எல்லாரும் பின்னிட்டு தீர்மானித்துக் கொள்ளவேண்டிய விதப்படி சிற்சில யோக்கியதைகள் உடையவராகவும், சிற்சில குறைகள் இல்லாதவராகவும் இருப்பின் அவர்கள் தெரிந்தெடுப்போர் அல்லது சீட்டாளிகள் எனத் தகும்.

4. ஒவ்வொரு ஜில்லாவின் மொத்த ஜனத்தொகையில் 10 லக்ஷத்துக்குப் பன்னிரண்டு பிரதிநிதிகள் வீதம் அந்தந்த ஜில்லாவிலுள்ள சீட்டாளிகள் தெரிந்தெடுத்து அந்தப் பிரதிநிதிகள் சேர்ந்த ஒன்று அல்லது (இட வேற்றுமைகளுக்குத் தக்கபடி) பல நியமகச் சங்கங்கள் ஸ்தாபிக்கத் தகும். அந்தப் பிரதிநிதிகள் இன்னின்ன யோக்கியதை உடையவராகவும் இன்னின்ன குறை இல்லாதவராகவும் இருக்க வேண்டுமென்பது பின்னிட்டு நிச்சயித்துக் கொள்ளப்படும்.

5. இங்ஙனம் அந்தந்த நியமகச் சங்கங்களின் அதிகார வரம்புக்குள் அடங்கிய எல்லா ஜில்லாக்களாலும் தெரிந்தெடுக்கப் பட்ட எல்லாப் பிரதிநிதிகளும் கூடி, வைஸ்ராய் சட்டசபைக்குத் தத்தம் வரம்பிலுள்ள மொத்த ஜனத்தொகையில் 50 லக்ஷத்துக்கு ஒரு மெம்பர் வீதமும், தத்தம் மாகாண சட்டசபைக்கு மேற்படி மொத்த ஜனத்தொகையில் 10 லக்ஷத்துக்கு ஒரு மெம்பர் வீதமும் மெம்பர்கள் தெரிந்தெடுக்க வேண்டும்.

பார்ஸிகள், ஹிந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்தவர் என்ற நான்கு பகுதிகளில் ஏதேனுமொன்று ஜனத்தொகையில் குறைவு பட்டிருக்கும் மாகாணங்களில், மொத்த ஜனத்தொகையிலே அந்தப் பகுதியின் ஜனத்தொகை எவ்வளவு குறைந்ததோ, அவ்வளவுக்கு மேலே மொத்த மெம்பர்களின் தொகைக்கு அப் பகுதி மெம்பர்களின் தொகை குறையக்கூடாது. தெரிந்தெடுப்ப தெல்லாம் சீட்டுப் போட்டே நடைபெறவேண்டும்.

3. மூன்றாந் தீர்மானம்:

பல திரட்டு

கீழே குறித்த விஷயங்களைப் பற்றி முந்திய கூட்டங்களில் செய்த தீர்மானங்களை இந்த ஜன சபை மறுபடி ஊர்ஜிதப்படுத்துகிறது.

1. எந்த இடத்திலும் நீதி, நிர்வாக அதிகாரங்கள் ஒரே மனிதன் வசத்தில் இல்லாதபடியாக மேற்படி இரண்டு இலாகாக்களையும் முழுதும் பிரிவு செய்தல்.

2. ஜூரி விசாரணை இப்போது வழக்கத்தி லில்லாத இடங்களிலும் அதனை வழக்கப்படுத்தல்.

3. 1772-ல் ஜூரிகளின் தீர்ப்பை மாற்றலாமென்று புதிதாக ஹைகோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை ரத்து செய்து விடுதல்.

4. சிறையோலை (வாரண்ட்) வழக்குகளில் குற்றஞ் சாற்றப் பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா கோர்ட்டார் விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்க அதிகாரங் கொடுத்தல்.

5. இப்போது போலீஸ் இலாகா நிர்வாகம் மிகவும் அதிருப்திக்கு இடமாக இருப்பதால் அதைச் சீர்திருத்துதல் மிகவும் அவசியமென்பது.

6. பாரத தேசத்தார் ராணுவ உத்தியோகங்கள். பெறும்படி இந் நாட்டில் அவர்களைப் பயிற்ற ராணுவ கலாசாலைகள் ஸ்தாபித்தல்; ஆபத்து சமயங்களில் ராஜாங்கத்தாருக்கு உதவி செய்யும்படி பாரத தேசத்தார் சேர்ந்த (வாலண்டீர்) காப்புப் படைகள் சமைத்தல்.

7. வருமானத் தீர்வை வஸூல் விஷயம் விசேஷமாக 1,000 ரூபாய்க்குக் குறைந்த வரும்படிகளின் விஷயம் மிகவும் அதிருப்திக்கிடமாக இருப்பதால் 1,000 ரூபாய்க்குக் குறைந்த வரும்படிகளுக்குத் தீர்வை கிடையாதென்று விதித்தல்.

8. கல்வியின் எல்லாக் கிளைகளிலும் ராஜாங்கத்துச் செலவைக் குறைக்கலாமென்ற உத்தேசங்களை விட்டு, மிகுதிப் படுத்துதல் அவசியமென்பதும்; அக் கிளைகளில் மிகப் பிரதானமாகியவற்றில் ஒன்றான தொழிற் கல்வியை வளர்க்கும் பொருட்டாக, தேசத்தின் தற்காலத் தொழில் நிலையைக் குறித்து விசாரணை செய்வதற் கொரு மிசிர விசாரணைக் கூட்டம் நியமிக்க வேண்டுமென்பது.

9. பரிபூர்ண ஸமாதானமுள்ள இக்காலத்தில் சில தினங்களின் முன்னே உப்புத் தீர்வையானது அதிகப்படுத்தியது அநீதியும் அதந்திரமுமாதலால், இதை உடனே குறைத்துவிட்டு, அதனால் அரசிறையில் நேரும் குறைவை நிரப்பும் பொருட்டு விலைக்குத் தக்கபடி லேசான இறக்குமதித் தீர்வை போட வேண்டுமென்பது.

10. தேசத்தின் ராணுவச் செலவை மேன்மேலும் அதிகப்படுத்தாமல் குறைக்க வேண்டுமென்பது.

4. நான்காந் தீர்மானம்:

கெய்ன், ஸ்மித் என்ற இரண்டு பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு நன்றி

காமன்ஸ் சபையில் மெம்பர்களான கெய்ன், ஸ்மித் இருவருக்கும், மேலும் அந்த ஸபையில் இந்தியா சுங்க விவகாரத்தைப்பற்றி நடந்த விவாதத்தில் அவர்களுடன் சேர்ந்து

பேசிய மற்ற மெம்பர்களுக்கும் இந்த ஜன சபை நன்றி தெரிவிக்கிறது. மாகாண கவர்ன்மென்டார் ஆப்காரி, சுங்க இலாகாக்களில் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் பற்றி மகிழ்ச்சி பாராட்டியும் இவ் விஷயத்தில் காமன்ஸ் சபைத் தீர்மானத்தை மேற்படி கவர்ன்மென்டார் நிறைவேற்றுவதில் கால தாமஸம் செய்யக் கூடாதென்று இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஸம காலப் பரீக்ஷைகள்

இந்தியாவில் உத்தியோகப் போட்டிப் பரீக்ஷைக் குரிய வயதை 19-லிருந்து 23 ஆக்கியதன் பொருட்டாக மஹாராணியின் கவர்ன்மென்டாருக்கு நன்றி செலுத்துகிறோ மாயினும், ராஜாங்க உத்தியோகங்கள் சம்பந்தமான மற்ற அம்சங்களி லெல்லாம் மேற்படி கவர்ன்மென்டார் செய்திருக்கும் உத்தரவுகளைக் கண்டு நாடு முழுவதும் அதிருப்தி பரவி யிருக்கிற தென்பதை இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது;

பாரத தேசத்தாரை முன்னிருந்த நிலைமையிலும் கேடு கெட்ட நிலைமையில் சேர்த்ததே அந்த உத்தரவுகளின் பொதுப் பயனாயிற் றென்பதையும், பாரத ராஜ்ய ஆட்சிக் கிளைகள் யாவற்றிற்கும் உரிய எல்லாப் பரீக்ஷைகளையும் இப்போது இங்கிலாந்தில் மாத்திரம் நடத்தும் நியதியை மாற்றி இரண்டு தேசங்களிலும் நடத்தினால் மாத்திரமே இந்தியாவுக்கு நியாயஞ் செய்த தாகுமென இந்த தேச முழுதும் நம்புகிற தென்பதையும் இந்த ஜன சபை மீட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

ஆயுதச் சட்டத்தை மாற்றுதல்

ஜனங்களின் ராஜ விசுவாஸத்தையும் 1871 வருஷத்துப் பதினொன்றாம் கட்டளையாகிய ஆயுதச் சட்டம் இப்போது செலுத்தப்படும் மாதிரியில் ஜனங்களுக்கு விளைவிக்கும்

கஷ்டங்களையும், இதனால் ஜனங்களுக்கொரு அடாப்பழி நேர்வதையும் கருதி இந்தச் சட்டத்தின் விதிகளைப் பல அம்சங்களில் மாற்ற வேண்டும்;

எங்ஙனமெனில், ஆயுதங்களின் உடைமைக்கும் தரித்தலுக்கும் ஏற்பட்ட எல்லா நிபந்தனைகளும் இந் நாட்டில் வாழ்வோர், யாத்திரை செய்யப் பிற நாடுகளினின்றும் வந்தோர் முதலிய எல்லாருக்கும் பொதுவா யிருக்க வேண்டும்;

காட்டு மிருகங்கள் குடி புகுந்து வழக்கமாக மனிதரையும் கால்நடைகளையும் பயிரையும் அழிக்குமிடங்களில் ஆயுதங்கள் வைத்திருக்கவும் தரிக்கவும் அனுமதி உத்தரவுகள் தாராளமாகவும் பொதுப்படையாகவும் வழங்கப்பட வேண்டும்;

இவையும் மேற்படி விதிகளின்படி வழங்கப்படும் மற்றெல்லா அனுமதி உத்தரவுகளும் ஒரேயடியாகக் கொடுத்துவிட வேண்டும்;

மாகாண எல்லை முழுதிலும் அவை உபயோகப்படவும், கெட்ட விதத்தில் உபயோகப்படுத்தினதாக ருஜு ஆனாலொழிய மற்றப்படி அந்த உத்தரவுகள் மீட்கப் படாதன ஆகவும், வருஷத்துக் கொருமுறை அல்லது இரு முறை புதுப்பிக்கும் அவசிய மில்லாதன ஆகவும் வேண்டும்; இவ் வேண்டுதல்களை இந்த ஜன சபை ராஜாங்கத்தாரிடம் அறிவித்துக் கொள்ளுகிறது.

7. ஏழாந் தீர்மானம்:

சாசுவத நிலவரித் திட்டம்

ஸர்க்கார் நிலத் தீர்வை விஷயத்தில் ஒரு நிச்சயமும் ஸ்திரத் தன்மையும் உண்டாகும்வண்ணம் பொதுவாக இல்லா விட்டாலும் குறைந்த பக்ஷம் ஜனத்தொகை நிறைந்தனவும் நன்கு பயிர் செய்யப்பட்டனவும் ஆகிய பிரதேசங்களிலேனும் சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுத்தும் விஷயத்தை மீட்டும் கால தாமஸம் செய்யாமல் ராஜாங்கத்தார் ஆலோசனை புரிய வேண்டுமென்று இந்த ஜன ஸபை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

வெள்ளி விஷயம்

வெள்ளியின் விலையிலும் பரிவர்த்தனை மதிப்பிலும், வீழ்ச்சி உண்டா யிருப்பதால், கைத்தொழிற் காரியங்களில் வெள்ளி அழிவதைப் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் எவ்வாற்றாலும் தடைகள் புரிதல் அனுசித மென்றும், மஹாராணியின் மந்திரிகளிடம் பல முறை தெரிவித்தபடி இந்தியாவுக்கு நீதி செய்ய வேண்டுமென்பது மாத்திரமே யன்றி, மஹாராணியின் பாரத, ஆங்கிலப் பிரஜைகளின் அனுகூலங்களைக் கருதித் தந்திர சாஸ்திர ரீதியாகவும் தகட்டுத் தீர்வைகளை உடனே ஒழித்துவிடவேண்டு மென்றும், சுத்த வெள்ளி யென்று காண்பிக்கும் சுத்த முத்திரை போடும் விஷயத்தை அவரவர் இஷ்டப்படி விட்டுவிட வேண்டுமென்றும் இந்த ஜன சபை ஆங்கிலேய கவர்ன்மெண்டாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

இந்தியா வரவு செலவுத் திட்டமும் காமன்ஸ் சபையும்

பார்லிமெண்ட் சபையிலே, இந்தியா வரவு செலவுத் திட்ட அறிக்கைக் கமிட்டியிடம் ஒப்புவிக்கும் பொருட்டாக ஸபாநாயகர் நாற்காலியை விட்டெழு முன்னே, இந்தியாவின் ஆட்சியிலுள்ள குறைகளை மெம்பர்கள் சபையின் முன்பு தெரிவித்துக் கொள்ளலாமென்று வைத்திருந்த விதியை பாரத தேசத்து ஜனங்களின் அனுகூலங்களைக் கருதி மறுபடி வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும்;

இந்தியா வரவு செலவுத் திட்ட அறிக்கையைக் காமன்ஸ் சபையார் கவனிக்கும் தேதியானது அவ் விஷயத்தை நன்றாக வாதிக்கக்கூடிய தேதியாக இருக்க வேண்டுமென்றும்;

இந்த ஜன ஸபை விரும்புவதுமல்லாமல், இந்தத் தீர்மானத்தில் கண்ட அம்சங்களைக் குறிப்பிட்டு ஒரு மனு எழுதி இந்த ஜன சபையின் பேரால் காமன்ஸ் சபைக்குக் கொடுக்கும்படி தனது அக்ராஸனாதிபதியாகிய ஸர் வில்லியம் வெட்டர்பர்னைக் கேட்டுக் கொள்ளுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

லார்ட் ரேயின் ஆட்சி

பம்பாய் மாகாணத்தில் கவர்னராக இருந்து ஸமீபத்தில் இங்கிலாந்துக்குப் புறப்படப் போகிற லார்ட் ரே தம் ஆட்சியின்போது பாரத தேசத்தாரின் ஆசைகளிலும், யத்தனங்களிலும் காட்டிய அன்புக்கும் அனுதாபத்துக்கும் இம் மாகாணம் மாத்திரமே யன்றித் தேச முழுதும் நன்றி யுணர்ச்சி கொண்டிருத்தலை இந்த ஜன சபை தெரிவிக்கிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

சட்டசபைகளைப் புதுப்பித்தல்

இரண்டாந் தீர்மானத்தில் 1. சீட்டாளி, 2. பிரதிநிதி, 3. மாகாண சபை மெம்பர், 4. வைஸ்ராய் சபை மெம்பர் - இந் நால்வருக்கும் என்னென்ன யோக்யதைகள் இருக்க வேண்டும்; என்னென்ன யோசனை குறைகள் இருக்கக் கூடாதென்பதைக் குறிக்காமல் விட்டு விட்டபடியால், அதனை விஷயாலோசனைக் கமிட்டியார் முடிவு செய்து சார்லஸ் ப்ராட்லாவினிடம் அறிக்கை செய்து கொள்ளும்படிக்கும் அவர் காமன்ஸ் சபை முன்பு கொண்டு வரப்போகிற மசோதாவில் அந்த அம்சத்தைச் சேர்த்துக் கொள்ளும்படிக்கும் இந்த ஜன ஸபை ப்ரார்த்தனை செய்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

பொதுக் காரியதரிசி நியமனம்

நமது பொதுக் காரியதரிசியாக அடுத்த வருஷத்துக்கும் மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூமே வேலை பார்க்கும்படி இந்த ஜன சபை நியமிக்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

உத்யோகஸ்தர் கமிட்டிகள் நியமனம்

1. இந்த வருஷத்தில் ஜன சபைக்குப் பிரதிநிதிகளாக வந்தோரின் தொகை மிகுதியைக் கருதியும், முன் அனுபவத்தைக் கொண்டு யோசிக்குமிடத்தே, அவர்களுடைய தொகை இனி

வருஷந்தோறும் ஏறிக்கொண்டு போகுமென்று நினைக்க இடமுண்டாவதாலும், ஒவ்வொரு வட்டத்தினின்றும் வரும் பிரதிநிதிகளின் தொகை அந்த வட்டத்து மொத்த ஜனத்தொகையில் 10 லக்ஷத்துக்கு 5 பேர் வீதத்துக்கு மேலே போகக் கூடாதென்றும், ஒவ்வொரு வட்டத்து சாசுவதக் கமிட்டியும் தன் அதிகார வரம்புக்குள் தெரிந்தெடுக்க வேண்டிய தொகையைத் தன் பகுதிகளினிடையே யுக்தமானபடி பகுத்துக் கொள்ளலாமென்றும் இந்த ஜன ஸபை ஏற்பாடு செய்கிறது;

2. மிஸ்டர் ஹ்யூம் இங்கிலாந்துக்குப் புறப்பட்ட தேதிக்கப்பால், பண்டித அயோத்யாநாதர் பொதுக் காரியதரிசியாக நியமனம் பெறவும், சபைப் பணத்தில் 5000 ரூபாய் அவர் வசத்தில் உதவிக் காரியதரிசிகளின் சம்பளத்துக்கும், குமாஸ்தாக்கள் சம்பளத்துக்கும், தபால், தந்தி, அச்சுச் செலவுகளுக்கும் உபயோகிக்குமாறு கொடுக்கவும் வேண்டுமென்று இந்த ஸபை நிச்சயிக்கிறது;

3. ஜன ஸபையின் வடிவம், தொழில் என்பவற்றின் ஸம்பந்தமாக ஆரம்பத்தில் சென்னப் பட்டணத்திலே தாற்காலிகமாகச் செய்து கொள்ளப்பட்ட விதிகளையும், அப்போதப்போது சுற்றுக் கடிதங்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட சேர்க்கைகளையும் வருகிற வருஷத்தில் எல்லா ஜன சபைக் கணத்தாரும் முழுதும் ஆலோசனை செய்து வைத்திருந்து அடுத்த ஜன சபைக் கூட்டத்தில் முடிவான சட்டம் கட்டிவிட வேண்டுமென்று இந்த ஸபை தீர்மானிக்கிறது.

4. இங்கிலாந்தில் உள்ள நமது சபையின் கிளைக் காரிய ஸ்தலத்தின் காரியங்களை நடத்தவும் செலவுகளை நடத்தவும் ஒரு கமிட்டியாக ஸர் வில்லியம் வெட்டர்பர்ன், பார்லிமெண்ட் மெம்பர் கெய்ன், பார்.மெம். ப்ரைட் மக்ளோன், பார்.மெம். ஜெ.இ. எல்லிஸ், தாதாபாய் நவுரோஜி, ஜார்ஜ் யூல் இவர்களை நியமனம் செய்திருப்பதை இந்த ஜன ஸபை ஊர்ஜிதப்படுத்துவது மன்றி, அவர்கள் தமது கமிட்டியில் தமக்கிஷ்டமானால் இன்னும் ஆள் சேர்த்துக் கொள்ளவும் அனுமதி கொடுக்கிறது.

அவர்களும் லண்டனில் நமது கிளைக் காரியதரிசியாகிய வில்லியம் டிக்பியும் இந்தியாவுக்குச் செய்யும் உபகாரங்களின் பொருட்டாக இந்த ஜன சபை அவர்களுக்கு நன்றி செலுத்துகிறது.

5. ஜ்யார்ஜ் யூல், ஏ. ஓ. ஹ்யூம், ஆதாம், எர்ட்லி நார்ட்டன், ஜெகுப் ஹோலர்ட், பிரோஸ்ஷா மேத்தா, ஸுரேந்த்ரநாத பானர்ஜி, மனமோஹன கோஷ், ஷர்புதீன், முதோல்கர், உமேசசந்த்ர பானர்ஜி என்ற இவர்கள் இங்கிலாந்தில் போய் காங்கிரஸ் கேட்கும் ராஜரீகச் சீர்திருத்தங்களைப் பிரிட்டிஷ் பொது ஜனங்களின் முன்பு வற்புறுத்திக் கூற வேண்டுமென்று இந்த ஜன ஸபை கேட்டுக் கொள்ளுகிறது.

6. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் செலவிடும் பொருட்டாக ஜன சபையார் வரும் வருஷத்திற்கு 45,000 ரூபாய் சேகரிக்க வேண்டு மென்றும், வெவ்வேறு சாசுவதக் கமிட்டியார் தத்தம் பகுதிக்குள்ள தொகைகளைப் பொதுக் காரியதரிசிக்கு மூன்று மாதத்தில் பாதியும், மிச்சத்தை ஆறு மாதங்களிலும் அனுப்பி விட வேண்டுமென்றும் இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

ஆறாம் பாரத ஜன சபைக் கூட்டம் வங்காளத்தில் யாதேனுமொரு நகரத்தில் நடக்க வேண்டு மென்றும், இன்ன இடமென்பது பின்னே நிச்சயிக்கப்படு மென்றும் இந்த ஜன சபை ஏற்பாடு செய்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

நன்றி

நமது சபையை இவ் வருஷம் செவ்வனே நடத்தியதற் காகவும், நம் பொருட்டாகத் தமது சிரமங்களைப் பாராமல் இங்கிலாந்திலிருந்து இத்தனை தூரம் வந்ததின் பொருட்டாகவும் அக்ராஸனபதி ஸர் வில்லியம் வெட்டர்பர்னுக்கு இந்த ஜன ஸபை நன்றி செலுத்துகிறது.

ஐந்தாம் கூட்டத்துத் தீர்மானங்கள் முற்றிற்று.

இந்தக் கூட்டத்திற்குச் சார்லஸ் ப்ராட்லா வந்து பேசினார் என்பது மாத்திரமே யன்றி, இதில் மற்றொரு விசேஷம் யாதெனில் பாலகங்காதர திலகரும், கோபாலகிருஷ்ண கோகலேயும் முதல் முதல் காங்கிரஸ் முன்னே பேசியது இந்தக் கூட்டத்திலேதான்.

மதன்மோஹன் மாளவீயர், ஜீ. சுப்பிரமணிய அய்யர், அலிமஹமது பீம்ஜீ, சங்கரன் நாயர் முதலிய காங்கிரஸ் தலைவர்கள் பல வீரத்தனமான உபந்யாஸங்கள் புரிந்தனர்.

ஆயுதச் சட்டத்தை அறவே ஒழித்து, எல்லாரும் ஆயுதம் தரிக்க இடங்கொடுக்க வேண்டுமென்ற முன்னைத் தீர்மானம் இந்த வருஷக் கூட்டத்தில் மாறிப்போய், அனுமதி உத்தரவுகளை வழங்குவதில் சில சீர்திருத்தங்கள் செய்தால் போதுமென்று காங்கிரஸ் தனது கேள்வியைக் குறைத்திருப்பதும் கவனிக்கத் தகுந்த விஷயம்.

ஜன சபைச் செலவுக்கு 45,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டதற்கு அப்போதே கையில் 9000 ரூபாய் சேர்ந்ததுமன்றி, (அரை மணி நேரத்துக்குள்) 56,226 ரூ. பின்னிட்டுக் கொடுப்பதாக வாக்கு தத்தங்களும் செய்யப்பட்டன. இங்ஙனம் ஐந்தாங் கூட்டம் உபசார கணத்துக்கு நன்றி செலுத்திவிட்டுக் கலைந்தது.

ஐந்தாங் கூட்டத்தின் சரித்திரம் முற்றிற்று.

ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று.

❖

ஜன சபைச் சரித்திரம்

ஆறாம் அத்தியாயம்

ஆறாவது கூட்டம் – கல்கத்தா – 1890

கல்கத்தா நகரத்தில் திலோலி என்ற பூஞ்சோலையின் கண்ணே ஒரு பெரிய பந்தர் அலங்கரிக்கப்பட்டது. அதில், 1890 டிஸம்பர் மாதம் 26, 27, 29, 30 இந் நான்கு தேதிகளிலும் ஜன சபை கூடிற்று. 28ஆம் தேதி யன்று அப் பந்தரில் ஆசாரத் திருத்த சபையின் கூட்டம் நடந்தபடியால் அன்று காங்கிரஸ் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

எண்ணாயிரம் பேர் ஜன சபையின் கூட்டத்தில் சேர்ந்திருந்தோர். அவர்களில் 702 பேர் பிரதிநிதிகள். அந்தந்த வட்டத்து ஜனத்தொகையில் பத்து லக்ஷத்துக்கு ஐந்து பேர் வீதம் பிரதிநிதிகளாக வரலாமென்று சென்ற வருஷத்துப் பதின்மூன்றாந் தீர்மானத்தில் கண்டபடி நிறைவேற்ற ஏற்பாடு செய்து, அக் கணக்குப்படி 995 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்காமல், ஆயிரத்துக்குச் சற்று மேலான தொகை எடுத்தனர். அவர்களில் 702 பேர் மாத்திரமே ஸபைக்கு வந்தனர்.

இவ் வருஷத்து ஜன சபையின் 'உத்யோக அறிக்கை' சொல்லுகிறது:

> "இந்தியாவின் ஜனங்கள் விடுதலையுடன் பிறந்த ப்ரிடிஷ் குடிகள் என்று புஸ்தகங்கள் கூறினும், அதற்குரிய ராஜ்ய ஸ்வதந்த்ரங்கள் அனுபவத்தில் இங்கு காணோம்... வடமேற்கு முனையில் ராஜாங்கத்தார் சண்டை செலுத்தி வரும் ராஜ்ய தந்திரம் நாசத்துக்கிடமும் முறைமைக் கேடுமாகப் புலப்படுகிறது.

நாமே நமது சுயேச்சையால் நன்மைக்கும் தீமைக்கும் புடலாக ப்ரிடிஷாருடன் பந்தப்பட்டு நிற்கிறோம். ஆகவே, இந்த வெறுக்கத் தகுந்த ராஜ்ய தந்திரத்தைத் தொடர்ந்து நடத்தும் இங்கிலாந்தின் பாவம் இரட்டிக்கிறது. நமது ப்ரிட்டிஷ் ஸஹோதரர்கள் எப்போது கண் விழிப்பார்களோ?"

என்று ஜன ஸபைப் புஸ்தகம் கேட்கிறது.

"அவர்கள் எப்போது கண் விழிப்பார்களோ, அது மனுஷ்யருக்குத் தெரியாது, பகவானுக்குத்தான் தெரியும்" என்று ஸ்ரீமதி ஆனிபெஸன்ட் தான் எழுதிய காங்கிரஸ் சரித்திர நூலில் கூறுகிறார். இருபத்தாறாந் தேதி பிற்பகல் 2 மணிக்கு உபசார கணத் தலைவராகிய மனமோஹன கோஷ் உபசாரப் பத்திரிகை வாசித்தார்.

சபாநாயகர் உபந்யாஸம்

பின்னர் ஜன ஸபைக் கூட்டத்தின் சபாநாயகராகிய பிரோஸ்ஷா மேர்வான்ஜீ மேத்தா எழுந்து நின்று பின்வரும் உபந்யாஸம் செய்தார்:

சீமாட்டிகளே, கனவான்களே,

உங்களுடைய இவ் வருஷத்துப் பரியாலோசனைகளில் அக்ராஸனபதியாக வீற்றிருக்கும் மஹிமையை எனக்குத் தந்தது பற்றி மிகவும் உண்மையுடன் நன்றி செலுத்துகிறேன். நான் பார்ஸி யாதலால் என்னை ஸ்வதேசிகளுடன் சேர்த்துக் கணக்கிடக் கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள்.

இங்கிலாந்தில் ஆங்கிலரும், ஸக்ஸோனியரும், நொர்மாந்தியரும், தானியரும் பன்னிரண்டு நூறாண்டு ஒன்றுகூடி வாழ்ந்தமையாலே, இப்போது எல்லாரும் தம்மை ஆங்கிலேயரென்று சொல்லிக் கொள்ளவில்லையோ? அப்படி யிருக்கப் பார்ஸிகளாகிய எங்களுடைய முன்னோர் இந் நாட்டுக்கு வந்து பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலே கழிந்திருக்கவும், எங்களை ஸ்வதேசிக ளில்லாமல் அன்னியரென்று கூறத் தகுமோ? தாதாபாய் நவுரோஜி பார்ஸி யில்லையோ? அப்படி யிருந்தும் பாரத மாதாவுக்கு அவரைப்போலே மற்றொரு குமாரன் உழைத்திருக்கிறானோ?

இந்தியாவின் ராஜரீக அபிவிருத்தி

இந்தியாவின் ராஜரீக அபிவிருத்தியில் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை இந்த ஜன சபை குறிப்பிடுகிற தென்பதில் ஐயமில்லை. சென்ற பன்னிரண்டு மாஸங்களில் நடந்த முக்கிய ஸம்பவங்களை யெல்லாம் சுருக்கமாகக் கணிப்போம். லார்ட் க்ராஸ் கொண்டுவந்த இந்தியா சீர்திருத்த மசோதாவின் மீது நடந்த விவாதத்தின்போது லார்ட்ஸ் சபையில் வைஸ்ராயின் பின் வைஸ்ராயாக எழுந்து நமது ராஜ பக்திக்கு நல்ல ஸாக்ஷ்யம் கூறினர். மாஜி இந்தியா மந்திரி லார்ட் ரந்தோல்ப் சர்ச்சில் என்பவர் சில தினங்களின் முன்பு, நமது ஜன சபையைப் பற்றி மகிழ்ச்சி பாராட்டிப் பேசி யிருக்கிறார். எனவே நாம் மிதமீறின ஆசைகளை உடையோம் என்று கூறி நம்மைப் பிறர் பழித்து வந்த காலம் மாறிவிட்டது.

ஜனத்தலைவர்களாகிய நம்மைக் காட்டிலும் ஆங்கிலோ இந்திய உத்யோகஸ்தருக்கு இந்தியாவின் விவசாயிகளைப் பற்றி அதிக நெருங்கிய ஞானமுண்டென்று கூறுதல் முழுத் தவறு. ஹிந்து - மஹமதியர்க்குள்ளே விரோதமென்று காட்டி ஸ்வதேசீய ஒற்றுமையைக் கெடுத்து விடவேண்டுமென்று கருதுவோர் செய்யும் முயற்சிகளும் வீண் முயற்சிகளேயாம்.

வெற்றித் தொடக்கம்

நம்மைப் பிறர் நகைத்த காலமும், அசிரத்தை காட்டிய காலமும், பழிகூறிய காலமும் மாறிப்போய் நமக்கு ஜய காலம் ஸமீபித்திருக்கிறது. காங்க்ரஸ் தீர்மானங்களில் பெரும் பகுதி இன்னும் நிறைவேறவில்லை யென்பது வாஸ்தவந்தான். நீதி, நிர்வாஹ இலாகாக்களைப் பிரிவு படுத்த வேண்டுமென்ற ஜன சபைத் தீர்மானத்தை லார்ட் டபரின் மிகவும் அற்புதமான புத்திமதி யென்று வியந்து கூறினாரே யொழிய இன்னும் அது நிறைவேறிய பாடில்லை.

இங்கு நமது ஸபையில் வந்து வீற்றிருக்கும் ப்ரிட்டிஷ் பார்லிமென்ட் மெம்பர் மிஸ்டர் கெய்ன் நமது நாட்டு ஆப்காரி இலாகாச் சீர்திருத்த விஷயமாகச் செய்துவரும் உபகாரங்களுக்கு நாம் மிகவும் கடப்பாடுடையோம்.

மேலும் பார்லிமென்ட் ஸபையில் நாமாகச் சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுத்த ஸ்வதேசி ஒருவர் சென்றிருந்தால் நமக்கு எத்தனை நன்மை செய்யக் கூடுமோ, அத்தனை நன்மையும் செய்ய முயற்சி புரிந்து வரும் மிஸ்டர் சார்லஸ் ப்ராட்லாவுக்கு நாம் எண்ணிறந்த நன்றி செலுத்துகிறோம். சார்லஸ் ப்ராட்லா கொண்டு வந்த மசோதா சட்ட மாகாவிடினும், அதிலிருந்து யாதொரு பயனுமேற்படாது போகவில்லை. லார்ட்ஸ் (பிரபு) ஸபையில் லார்ட் க்ராஸ் இந்தியா சட்டஸபை மசோதா கொண்டு வந்தார். அதுவும் பயன்படவில்லை. எனிலும், இந்த விவாதத்தினிடையே லார்ட் ஸாலிஸ்பரி: "பிரதிநிதி யாட்சி கீழ்த்திசையின் பழைய ஸம்ப்ரதாயங்களுக்கும் தற்கால அறிவின் நிலைமைக்கும் பொருந்தாது" என்று கூறிய அஸம்பாவித வார்த்தையைப் புத்திமான்கள் அங்கீகாரம் செய்ய மாட்டார்கள்.

"முனிஸிப்பாலிடிகள் என்ற நகர ஸபைகளும் மற்றும் பலவிதமான ஸ்தல ஸ்வராஜ்ய அனுஷ்டானங்களும் கீழ்த்திசையில் உற்பத்தியாய் அநாதி காலந் தொட்டு வழங்கி வருகின்றன" என்று ஸிஷோம் ஆன்ஸ்தே என்ற ஆங்கிலேய பண்டிதர் சொல்லி யிருப்பதை இங்கெடுத்துக் காட்டத்தகும்.

லார்ட் க்ராஸ் தமது சட்டஸபை மசோதாவில் நியமன முறை சொல்லி யிருப்பதை மாற்றித் தெரிந்தெடுத்தல் முறைமையைப் புகுத்த வேண்டு மென்று ப்ராட்லா மிகவும் கஷ்டப்பட்டார். இந்த விஷயத்தில் இங்கிலாந்துக்கு நமது பிரதிநிதிகளாகச் சென்று நமக்குச் சீர்திருத்தங் கொடுப்பதன் அவஸரத்தை எடுத்துக்காட்டி உபந்யாஸம் புரிந்த நம்மவருக்கும் ஆங்கிலேயருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

ஆங்கிலோ இந்திய உத்யோகஸ்தர் மாத்திரமே நமக்கு விரோதமாக இருக்கிறார்கள். முன்பு மிஸ்டர் மெக்காலே சொன்னார்:

> "நம்முடைய பாரத ராஜ்யத்தின் எதிர்கால நிலை யென்னாகுமோ என்பது நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. பூலோக சரித்திரத்தில் முன் த்ருஷ்டாந்த மில்லாமல் ராஜரீக மாதிரியே ஒரு புதுமையாகச் சமைந்திருக்கும் இந்த அரசுக்கு என்ன கதி நேருமோ என்பதை ஊஹித்துக் கூறுதல் கஷ்டம்.

இதன் வளர்ச்சியும் அழிவும் எந்த விதிகளால் நிகழு மென்பதை இப்போது நாம் அறிந்துரைத்த லரிது. நம்முடைய ஆட்சி முறைமையால் இந்தியாவின் பொது அறிவு வளர்ச்சி பெற்று அதனால் பின்னே அம் முறையைக் கடந்து செல்லவும் கூடும்.

நமது நல்லாட்சியினால் நம்முடைய குடிகளுக்கு இதனிலும் நல்லதோ ராட்சிக்குத் திறமை உண்டாகவும் கூடும். ஐரோப்பிய அறிவிலே பயின்றதால், எதிர்காலத்தில் எப்போதேனும் இவர்கள் ஐரோப்பிய ராஜ்யானுஷ்டானங்கள் வேண்டுமென்று கேட்கவும் கூடும்.

அந்த நாள் என்றேனும் நிச்சயமாக வருமோ வாராதோ என்பதை நான் உறுதியாகக் கூறவல்லே னல்லேன். ஆனால், அப்படி யொரு நாள் வருவதை எவ்வகையினாலும் தடை புரியவும் தாமஸப் படுத்தவும் நான் முயற்சி செய்யமாட்டேன். அந் நாள் எப்போது வரினும், ஆங்கில சரித்திரத்தில் அது மிகவும் இறுமாப்புக்குரிய நாளாம்.

அடிமைத் தன்மை பூண்டு, மூட பக்திகளின் படுகுழிகளிலே விழுந்து கிடந்த ஒரு பெரிய ஜாதியாரைக் கண்டுபிடித்து, அவர்களை நேரே ஆட்சி புரிந்து, நாகரீக ஸ்வதந்திரங்களில் விருப்பமுடையராகவும், அவற்றை அனுபவிக்கத் திறமை யுடையராகவும் செய்தல் நமக்கென்று ஒரு ப்ரத்தியேகமான பெருங் கீர்த்தியாம்" என்றார்.

இங்ஙனம் மெக்காலே தீர்க்க தர்சனத்தால் நுட்பமாக நோக்கிக் கூறிய தினத்தின் உதயம் ஏற்கெனவே வானத்தடியில் தோன்றி விட்டது".... என்று பிரோஸ்ஷா மேத்தா பேசினார்.

இங்ஙனம் காங்கிரஸ் ஸபாநாயகர் பேசி முடிந்தவுடனே விஷய பரியாலோசனைக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டுப் பின் வழக்கம்போல் அன்றைக் கூட்டம் கலைந்தது.

மறுநாள் ஸபையில் முதல் தீர்மானத்தைக் குறித்துப் பேசுகையில் மதன்மோஹன மாளவிய பண்டிதர்: "யாதாயினும் ஒரு பெரிய உண்மையை நிலைநிறுத்திக் காட்ட வேண்டிய

கடமை பல ஸமயங்களில் ஒவ்வொரு தேசத்தாருக் குண்டாகிறது. ப்ரதிநிதி ராஜ்ய முறைமையைப் பரவச் செய்யும் கடமை இங்கிலாந்துக்குக் கொடுபட்டிருக்கிறது. அந் நாட்டார் அக் கடமையை எவ்வளவு தூரம் நன்றாக நிறைவேற்றி யிருக்கிறார்களெனிலோ, இப்போது அம் முறையைக் குற்றங் கூறும் மனிதனை உலகத்தார் பித்தனென்று கருதும் நிலைமை ஏற்பட்டு விட்டது என்று மிஸ்டர் க்ளாட்ஸ்டன் கூறியதை மேற்கோள் காட்டினார்.

அப்பால் தெரிந்தெடுக்கும் சீட்டாளிகளின் கூட்டத்தை மதப் பிரிவுகளின்படி வகுக்க வேண்டுமென்று சொல்வோரது கொள்கையைக் கண்டனம் புரிந்து பண்டித விஷ்ணு நாராயணதார் பேசுகையில் ஆக்பர் சக்ரவர்த்தியின் மேலான ராஜ்ய தந்திரத்தை எடுத்துக்காட்டினார்.

பின்பு பண்டித விஷ்ணு நாராயணதார் சொல்லுகிறார்:

> "மதப் பிரிவுகளைக் கவனியாமல் அரசு செலுத்திய ஆக்பரின் நீதியை இந்த ராஜாங்கத்தார் அனுஷ்டிக்கப் போகிறார்களா? அன்றி பரஸ்பர விரோதமான மதக் கொள்கைகள் ஒன்றுக்கொன்று பக்கத்திலிருப்பதே இந்தியாவின் நமது ராஜ்ய நிலைமைக்குரிய முக்ய பலங்களில் ஒன்றாகும்" என்று ஸர் ஜான் ஸ்த்ராச்சி சொல்லியபடி மேற்படி விரோதங்களை மேன்மேலும் அழுத்த வேண்டுமென்பது கருத்தா?"

என்று விஷ்ணு நாராயணதார் வினவுகிறார்.

சேனைகளைப் பற்றியும் ஆயுதச் சட்டத்தைப் பற்றியும் பேசுகையில் இவ் வருஷத்து ஜன ஸபையின் சொந்த அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது:

> "எவ்வளவோ கொடுங்கோன்மை வழக்கங்களில் கீர்த்தி பெற்றவர்களாகிய ருஷிய ராஜாங்கத்தார்கூட இந்த விஷயத்தில் ப்ரிட்டிஷாரைப்போல் பக்ஷபாதம் பண்ணமாட்டார்கள்.
>
> சிப்பாய்ச் சண்டைக்கு 25 வருஷங்களுக்கு முன்னேயே இந்தப் பரம மூட ராஜ்ய தந்திர லக்ஷணமாகிய ஆயுதச் சட்டம் விதிக்கப் பட்டிருந்தால் 1857-வருஷத்திலேயே இங்கு ப்ரிடிஷ்

ராஜ்யம் முற்றுப் பெற்றிருக்கும். அப்போது நமது ஜனங்கள் கையில் ஆயுதமிருந்தபடியால் அபாயமும் துக்கமும் நிறைந்த அக்காலத்தில் நம்மவர் ப்ரிடிஷாருக்குத் துணையாகச் சென்று கீழ்த்திசையில் ப்ரிடிஷ் ராஜ்யத்தைக் காப்பாற்றினர்" என்கிறது.

அப்பால் ஜன சபையில் முன்ஷீ ஸதர் உத்தீன் அஹ்மது என்பவர் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:

"பழைய சக்கரவர்த்திகள் ஜனங்களின் வீரத்திலும் உண்மையிலும் நம்பிக்கை யுடையவர்களாய், ஆயுதங்களை ஜனங்களிடமிருந்து பிடுங்காமல் ஜனங்களிடம் மிகுந்த ஸஹாயம் பெற்றனர். திமுர் வம்சத்தில் பிறந்த மொகலாய சக்கரவர்த்திகளை - அவர்களிலும் விசேஷமாக ஆக்பரை - ஆதிக்கத்தின் சிகரத்தில் ஏற்றி இந்த தேசத்து ஜனங்கள் தமது வாள் வலிமையாலே காத்தனர். கையிலே துப்பாக்கிகளும் சட்டைப் பையில் தோட்டாக்களும் வைத்துக் கொண்டு மஹமதிய ராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த ஜனங்கள் நீதி நாகரீக முதிர்ந்த ப்ரிட்டிஷ் ஜாதியை எதிர்த்துப் போர் செய்வார்களோ?... உயிருக்கும் உடைமைக்கும் ஆயுதங்களே தனிக் காப்பு. அவற்றைப் பறித்ததினின்றும் ஜனங்களுக்குண்டான சோகத்திற்கும், வருத்தத்துக்கும் எல்லையில்லை" என.

1890ஆம் வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய ஆறாம் ஜன சபைக் கூட்டத்தில் செய்த தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

"1861ஆம் வருஷத்துச் சட்டசபை விதியைத் திருத்தும் சட்டம்" என்ற பெயருடன் பார்லிமெண்ட் ஸபையில் சில தினங்களின் முன்னே சார்லஸ் ப்ராட்லா கொண்டு வந்த மசோதாவை இந்த ஜன ஸபை ஆலோசனை செய்து ஆமோதிப்பது மன்றி, மேற்படி மசோதா நிறைவேறினால் நாம் வேண்டிவரும் பாரத ராஜ்யத் திருத்தங்களில் தகுந்த அளவு கைகூடுமாகையால், அதைச் சட்டமாக்கும்படி பார்லிமெண்ட் ஸபையாரைப் பிரார்த்தனை செய்து கொள்வதுடன்;

ஸபாநாயகராகிய மிஸ்டர் பிரோஸ்ஷா மேத்தா மேற்கண்ட வேண்டுதலைக் காட்டி ஒரு விண்ணப்ப மெழுதி இந்த ஸபையின் பெயரால் அதைச் சார்லஸ் ப்ராட்லா மூலமாகப் பார்லிமெண்ட் ஸபையார் முன்பு கொடுப்பிக்கும்படி விரும்புகிறது.

2. இரண்டாம் தீர்மானம்:

பல திரட்டு

1. எவ்விடத்தும் ஒரே மனிதனுடைய வசத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்கள் சேர்ந்திராதபடி, மேற்படி இரண்டிலாகாக்களையும் முழுதும் பிரித்துவிட வேண்டும்.

2. ஜூரி விசாரணை இப்போது வழக்கத்தி லில்லாத பிரதேசங்களிலும் அதை வழக்கப்படுத்த வேண்டும்;

3. ஜூரிகள் செய்த கெடுதலைத் தீர்ப்புக்களை மாற்றலாமென்று முதல் முதல் 1872-ல் ஹைகோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நீக்கிவிட வேண்டும்;

4. சிறையோலை (வாரன்ட்) வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரணை செய்யாமல், ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்படைக்கும்படி கேட்க அதிகார முண்டென்பதாக ஒரு நிபந்தனை (கி. பு. கோட்) சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்;

5. இப்போது பாரத நாட்டில் போலீஸ் நிர்வாஹத்தின் மாதிரி மிகவும் அதிருப்திக்கிடமாக இருப்பதால், மிக அவஸரமாக அதில் வேர்த் திருத்தம் செய்ய வேண்டும்;

6. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபனம் செய்து, அவற்றில் நம்மவர் ராணுவ உத்யோகஸ்தராகக் கூடிய படிப்பும், பழக்கமும் ஏற்படுத்துவதுமன்றி, ஆபத்துக் காலங்களில் ராஜாங்கத்தாரைக் காப்பாற்றும்வண்ணம் நம்மவர் சேர்ந்த காப்புப் படையொன்று, வேண்டிய நிபந்தனைகளுடன் சமைக்க வேண்டும்;

7. பொதுவாக வருமானத் தீர்வை வஸூல் விஷயத்தில் - அதிலும் விசேஷமாக 1000 ரூபாய்க்குக் குறைந்த வரும்படிகளின் விஷயத்தில் - இப்போதுள்ள முறைமை மிகவும்

அதிருப்திக்கிடமாக இருப்பதால், 1000 ரூபாய்க்குக் குறைந்த வரும்படிகளுக்குத் தீர்வை கிடையா தென்று விதிக்க வேண்டும்.

8. கல்விக்குரிய பல கிளைகளிலும் ராஜாங்கச் செலவைக் குறைப்பதாகிய யோசனைகளை ஒழித்து மிகுதி செய்வதுடன், அக் கிளைகளில் மிகப் பிரதானமாகியவற்றுள் ஒன்றான தொழிற் கல்வியை அபிவிருத்தி செய்யும் பொருட்டாக நாட்டின் தற்காலத் தொழில் நிலையை ஆராய்ச்சி செய்யும் விசாரணைக் கூட்டமொன்று நியமிக்கவேண்டும்;

9. பாரத ராஜ்யத்தின் ராணுவச் செலவை மேன்மேலும் அதிகப்படுத்துவதை விட்டுக் குறைக்கத் தொடங்க வேண்டும்;

10. ஆட்சி உத்தியோகங்களுக்காக இப்போது இங்கிலாந்தில் மாத்திரம் நடத்தும் பரீக்ஷைகளை, இனிமேல் இந்தியாவுக்கு நியாயம் செலுத்த வேண்டுமென்ற கருத்திருந்தால், இங்கும் அங்கும் ஸம காலத்தில் நடத்த வேண்டும்;

11. இந்தியாவில் வாஸம் செய்வோர், வெளியிலிருந்து பார்க்க வந்தோர் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக, ஆயுதங்க ளுடைமை, ஆயுத தாரணம் ஸம்பந்தமான விதிகளை ப்ரயோகிக்கும்படியாகவும்;

காட்டு மிருகங்கள் இருந்து மனித உயிரையும், கால்நடைகளையும், பயிர்களையும் அழிக்கும் ப்ரதேசங்களில் ஆயுதங்களின் உடைமை, தாரண ஸம்பந்தமான அனுமதி யுத்தரவுகளைத் தாராளமாகவும் பொதுப்படையாகவும் வழங்குமாறும்; இவ் வுத்தரவுகளும் மேற்படி விதிகளின்படி கொடுக்கும் எல்லாவிதமான அனுமதி யுத்தரவுகளும் ஒரு தரம் கொடுத்தால் பிறகு மாற்றாமலும், மாகாண எல்லை முழுமைக்கும் பயன்படுமாறும், கெட்ட விதத்தில் உபயோகப்படுத்தியதாக ருஜுவானா லன்றி அவை மீட்கப்படாமலும், வருஷத்துக்கொரு முறை அல்லது இரு முறை புதுப்பித்தல் அவசியமில்லை யென்றும் விதி யுண்டாக்குமாறும்;

1878-ம் வருஷத்து 11ஆம் கட்டளையாகிய ஆயுதச் சட்டத்தின் கீழே ஏற்பட்டிருக்கும் விதிகளை மாற்றி யமைக்க வேண்டும் என முந்திய ஜன சபைகளில் செய்யப்பட்ட தீர்மானங்களை இந்த ஜன ஸபை மீளவும் ஊர்ஜிதப் படுத்துகிறது.

3. மூன்றாம் தீர்மானம்:

பார்லிமெண்டில் இந்தியா வரவு – செலவுக்
கணக்குச் சோதனை

பார்லிமென்ட் ஸபையில் இந்தியாவின் வரவு - செலவுத் திட்டத்தைக் கமிட்டியிடம் ஒப்புவிப்பதற்காக ஸபாநாயகர் நாற்காலியினின் றெழுமுன், இந்தியா ஜனங்களின் குறைகள் ஏதேனுமிருந்தால் மெம்பர்கள் அவற்றை எடுத்துக் கூறலாமென்பதாக முன் ஏற்பட்டிருந்த விதியை மறுபடியும் இந்தியா ஜனங்களின் நன்மையைக் கருதி வழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்றும்;

இந்தியா வரவு - செலவுக் கணக்கைப் பார்லிமென்ட் ஸபையார் பரியாலோசனை பண்ணும் தினம் அதனை முழுதும் வாதிக்க ஸாவகாசமான தினமாக இருக்கவேண்டுமென்றும்;

செய்யப்படுகிற இந்தத் தீர்மானத்தின் கருத்தைத் தழுவி நமது சபாநாயகர் இந்த சபையின் பெயரால் பார்லிமென்டுக்கு ஒரு விண்ணப்பம் கையெழுத்திட் டனுப்பும்படி இந்த ஜன சபை அதிகாரம் கொடுக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:

ஆப்காரிச் சீர்திருத்தம்

ஆப்காரி விஷயத்தில் நம்முடைய பழைய வேண்டுதல்களைக் கருதி ஏற்கெனவே, இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் செய்திருக்கும் காரியங்களை ஒப்புக்கொள்ளுகிறோ மெனிலும்;

அதாவது, போதைச் சாறுகளின்மீது இறக்குமதித் தீர்வைகள் விதித்திருப்பதையும், இந்தியாவில் வடிக்கப்பட்ட தானியச் சாறுகளின்மேல் வரி போட்டிருப்பதையும், வங்காள

கவர்ன்மெண்டார் வெளி வடிப்பு முறையை மாற்றி விட்டதையும், 1889-90-ம் வருஷத்தில் சென்னை கவர்ன்மெண்டார் 7000 சாராயக் கடைகளை மூடி யிருப்பதையும் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறோ மாயினும்;

1890 மார்ச்சு முதல் தேதி இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட அறிக்கையின் 103, 104, 105-ம் ப்ரகரணங்களில் ஆப்காரி விஷயத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட முறை முழுவதையும் - அதிலும் விசேஷமாக 103-ம் ப்ரகரணம் நான்காம் உட்பகுதியில் கூறியபடி, "அந்தந்த ஊர்களில் ஜனங்களுடைய கருத்தை அறிந்துகொண்டு இயன்ற வரை அதைத் தழுவியே நடக்க முயலவேண்டும்" என்ற விதியையும் - பரிபூர்ணமாக அனுஷ்டிக்கும்படி எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளையும் வற்புறுத்துமாறு இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன சபை அழுத்தமாக வேண்டிக் கொள்ளுகிறது.

5. ஐந்தாம் தீர்மானம்:

உப்பு வரியைக் குறைத்தல்

இந்தியாவின் பொருள் ஸ்திதி விருத்தி யடைந் திருப்பதையும், உப்பு வரியை ஸமீப காலத்தில் உயர்த்தியதற்கு ராஜாங்கத்தார் முகாந்தரமாகக் கூறிய நிலைமைகள் மாறிவிட்டதையும் உத்தேசித்து மேற்படி மிகுதி வரியை விரைவில் அழித்து விடவேண்டுமென்று செய்யப்படும் இந்தத் தீர்மானத்தைக் காட்டி நமது சபாநாயகர் ராஜ ப்ரதிநிதிக்கு ஒரு விஞ்ஞாபனம் செய்து கொள்ள வேண்டுமென்று இந்த ஜன சபை விரும்புகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

சாசுவத நிலவரித் திட்டம்

1862-ல் இந்தியா மந்திரி அனுப்பிய அறிக்கையிலும், அதிலுள்ள கொள்கைகளை ஊர்ஜிதப்படுத்தி மறுபடி 1865-ல் அவர் அனுப்பிய அறிக்கையிலும் சாசுவதத் திட்டம் வழக்கத்தி லில்லாத எல்லாப் பிரதேசங்களிலும் சிற்சில நிபந்தனைகள்

பூர்த்தி செய்யப்படுமாயின், அங்கு சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுத்தி விடலாமென்று வாக்களித்ததி னின்றும் நாடு முழுதும் அச் சீர்திருத்தத்தை ஆவலுடன் எதிர்பார்த் திருக்கிறபடியாலும்; தேசத்தின் பெரும் பகுதிகளில் மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் நெடு நாளுக்கு முந்தியே பூர்த்தியாய் விட்டபடியாலும்;

25 வருஷத்திலும் அதிகமான காலத்துக்கு முந்தியே இந்தியா மந்திரி தெளிவுறக் கூறியபடி ஸர்க்கார் நிலவரித் திட்டத்தில் உறுதிப்பாடும் சாசுவதத் தன்மையும் ஏற்படும்வண்ணம், இனிக் கால தாமஸம் செய்யாமல் சாசுவதத் திட்ட விவகாரத்தைக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்க ளென்பதை இந்த ஜன ஸபை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

7. ஏழாந் தீர்மானம்:

ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஜன சபையும்

கல்கத்தா வர்த்தமானப் பத்திரிகைகளில்,

> "காங்க்ரஸ் பந்தலில் பார்க்க வந்த பேர் உட்காரும் வளைவில் உட்கார அனுமதிச் சீட்டுக்கள் கல்கத்தாவில் வஸிக்கும் பல ராஜாங்க உத்யோகஸ்தருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்று வங்காளத்து ராஜாங்கத்தார் தம்முடைய காரியதரிசிகளுக்கும் தமக்குக் கீழ்ப்பட்ட எல்லா இலாகா அதிகாரிகளுக்கும் ஒரு சுற்றுத்தரவு பிறப்பித்திருப்பதில், இந்தியா கவர்ன்மெண்டாரின் ஆக்கினைகளின்படி ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் அப்படிப்பட்ட கூட்டங்களில் சாதாரணமாய் பார்த்திருக்கச் செல்வதுகூட உசிதமில்லை யென்றும், விவகாரங்களில் கலத்தலோ முழுதும் தடை செய்யப்பட்ட விஷயமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்"

என அதிகாரிகள் அனுப்பியதாகப் புலப்படும் செய்தி யொன்று தோன்றியதை வியப்புடன் படித்துப் பார்த்தும்; வங்காளத்து லெப்டினன்ட் கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து ஜன சபையின் உபசார கணத்துக் கார்யதர்சிக்கு வந்த (கடிதம்:)

பெல்லடீர்
24 டிஸம்பர் 1890

அன்புள்ள ஐயா,

நேற்று மாலை, தாங்கள் தயவுடன் எனது விலாஸத்துக்கு அனுப்பிய அனுமதிச் சீட்டுக்கள் ஏழையும் இதனுடன் திருப்பி யனுப்புகிறேன். லெப்டினனட் கவர்னரும் அவருடைய சிப்பந்திகளும் இந்தச் சீட்டுக்களை உபயோகப்படுத்த இடமில்லை. ஏனெனில், இந்த மாதிரிக் கூட்டங்களுக்கு ராஜாங்க உத்தியோகஸ்தர் போகக்கூடாதென்று இந்தியா கவர்ன்மெண்ட் உத்தரவுகள் ஸ்பஷ்டமாகத் தடை புரிகின்றன.

என இங்ஙனம் எழுதிவிட்ட கடிதத்தை யோசனை செய்தும், மேற்படி கடிதங்களில் ஸர்க்கார் வேலைக்காரர் ஜன சபைக் கூட்டத்தில் சாதாரணமாக வந்து பார்க்கவும் கூடாதென்று தடைசெய்திருப்பதாகச் சொல்லி யிருப்பதை ராஜப் பிரதிநிதியின் கவனத்துக்குக் கொண்டு வரும்படிக்கும், இந்தியா கவர்ன்மெண்ட் கட்டளையை இவ் விஷயத்தில் வங்காள கவர்ன்மெண்டார் நேரே பொருளுணர்ந்து கொண்டனரா என்பதை வணக்கத்துடன் விசாரிக்கும்படிக்கும் இந்த ஜன சபை தனது ஸபாநாயகருக்கு அதிகாரமளிக்கிறது.

8. எட்டாந் தீர்மானம்:

இங்கிலாந்தில் உழைத்தவருக்கு நன்றி

சென்ற வருஷத்தில் நம் பொருட்டாக மதிப்பிடற் கரிய வேலை செய்தது பற்றிச் சார்லஸ் ப்ராட்லாவுக்கும், ஜன சபையின் லண்டன் கிளை ஸ்தலத்தை நிர்வஹிப்பதில் தன்னை மறந்த ஆவலும் திறமையும் காட்டி உழைத்த ஸர் வில்லியம் வெடர்பர்ன், *W.S.* கெய்ன் ப்ரைட், மக்ளோன் (பார்லிமெண்ட் மெம்பர்), ஜெ. எல்லிஸ் (பார். மெம்.), தாதாபாய் நவுரோஜி என்பவருக்கும், இங்கிலாந்தில் நமது பிரதிநிதிகளாகச் சென்று தம்மீது சுமத்தப்பட்ட பாரமான கடமைகளை நிறைவேற்றிய ஸுரேந்திரநாத் பானர்ஜி, *R.N.* முதோல்கர், *W.C.* பானர்ஜி, எர்ட்லி நார்ட்டன், *A.O.* ஹ்யூம் என்பாருக்கும், அரிய தொழில் புரியும் லண்டன் கிளைக் கார்யதர்சி வில்லியம் டிக்பிக்கும்,

இங்கிலாந்தில் நமது பிரதிநிதிகளை அன்புடன் நல்வரவு கூறி, ஐம்பது பொதுக் கூட்டங்களிலும் அதனிலும் மிகப் பெருந் தொகையான மனைக் கூட்டங்களிலும் உபந்யாஸங்கள் செய்யக் கேட்ட ப்ரிட்டிஷ் மஹா ஜனங்களுக்கும் இந்த ஜன சபை மனப்பூர்வமான நன்றி தெரிவிக்கிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

கல்கத்தா உபசாரிகளுக்கு நன்றியுரை

திலோலிச் சோலையின் சொந்தக்காரரான குமார் தேவேந்த்ர மல்லிக் ஸஹோதரர்களுக்கும், பிரதிநிதிகள் தங்கும்படி தயவுடன் வீடுகள் கொடுத்துதவிய ஸர் ரமேசசந்த்ர மித்திரர், ஜானகிநாத ராயர், கோபீ மோஹன ராயர், ஹரேந்த்ரநாத ராயர், கிஷோரி மோஹன் ராய், ராம்நாத் கோஷ், ஜமேதார் காஸீராம் என்பாருக்கும் இந்த ஜன சபை உண்மையுடன் நன்றி செலுத்துகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

பாரத ஜன சபையின் ஏழாங் கூட்டம் 1891 டிஸம்பர் 26ஆம் தேதி யன்று சென்னை அல்லது நாகபுரத்தில் கூடவேண்டுமென்றும் இவ்விரண்டில் எந்த இடம் பொருந்து மென்பதைச் சென்னை, மத்ய மாகாண, பேரார் கணங்களும் உதவிப் பொதுக் காரியதர்சியும் கூடி ஆலோசனை பண்ணி முடிவு செய்ய வேண்டுமென்றும் இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

லண்டன் காங்க்ரஸ்

எல்லாம் நேரே நடைபெற்று வரின், 1892ஆம் வருஷத்தில் 100 பிரதிநிதிகளுக்குக் குறையாமல் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு காங்க்ரஸ் நடத்துதற்குரிய ஆரம்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென்றும், அந்தந்த வட்டத்திலிருந்து அனுப்பக்கூடிய பிரதிநிதிகளின் பெயர்களை எல்லா சாகுவதக் கமிட்டியாரும் அடுத்த கூட்டத்திற்கு அறிவிக்க வேண்டுமென்றும் இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

காங்கிரஸ் சாசுவத நிதி

இப்போது உதவிப் பொதுக் காரியதர்சியின் கைவசத்தில் உள்ளதும், ஸமீபத்தில் வந்து சேரக்கூடியதும் ஆகிய பணத்திலிருந்து 20000 ரூபாய் சாசுவத நிதியுடன் சேர்த்து வட்டிக்கு விடவேண்டுமென்றும்,

இந்த 1890-ம் ஆண்டில் சேர்ந்த தொகைகளில் மிச்சமுள்ளதை பாரத ஜனசபை பின் தற்கால அவஸரச் செலவுகளுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், 1891-ம் வருஷத்துச் சந்தாக்கள் வரத் தொடங்கிய வுடனே இவ் வருஷ மிச்சத்தை சாசுவத நிதியில் சேர்த்துவிட வேண்டுமென்றும் இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

செலவு

தனிக் கொடைகள் தவிரவும் 40000 ரூபாய் ஜன சபையின் ப்ரிட்டிஷ் கமிட்டியினது செலவுக்குப் பகுத்துக் கொடுக்க வேண்டுமென்றும், வெவ்வேறு வட்டத்தாரும் ஜில்லாவினரும் தத்தம் கமிட்டிகளில் ஏற்படுத்துகிறபடி சந்தாக்கள் செலுத்த வேண்டுமென்றும் இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

காங்கிரஸ் காரியதரிசிகள்

வரும் வருஷத்துப் பொதுக் காரியதர்சியாக A.O. ஹியூமையும், உதவிப் பொ. கா. ஆகப் பண்டித அயோத்யா நாதரையும் இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

இங்கிலாந்துக்குப் பிரதிநிதிகள்

ஜ்யார்ஜ் யூல், பிரோஸ்ஷா மேத்தா, W.C. பானர்ஜி, J. ஆதாம், மனமோஹன கோஷ், A.O. ஹ்யூம், காளிசரண் பானர்ஜி, தாதாபாய் நவுரோஜி, தாஜி அபாஜீ கரே

இவர்களையும் இன்னும் அந்தந்த வட்டத்து சாசுவத ஜன சபைக் கணத்தாரின் அனுமதிப்படி அக் கடமைக்கு முற்பட்டு வருவார் எல்லாரையும் - தனது கருத்துக்களை இங்கிலாந்தில் தெரிவித்து, தான் கேட்டு வரும் சீர்திருத்தங்களை ப்ரிட்டிஷ் ஜனங்களின் கவனத்தில் அழுந்துவிக்கும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

ஆறாம் அத்தியாயம் முற்றிற்று

❖

ஜன சபைச் சரித்திரம்

ஏழாம் அத்தியாயம்

1891-ம் வருஷத்தில் நாகபுரம் (நாக்பூர்) நகரத்தில் கூடிய ஜன சபையின் ஏழாங் கூட்டத்தின் சரித்திரம்:

1891 டிஸம்பர் 28, 29, 30-ம் தேதிகளில் நாக்பூரில் நமது ஜன சபை கூடிற்று. லால்பாக் என்ற தோட்டத்தில் அழகிய பந்தலில் 812 பிரதிநிதிகள் வந்து கூடினர். நாலாயிரம் நாற்காலிகளிலும் சரியாக ஜனங்கள் வந்து வீற்றிருந்தனர்.

நாக்பூர் முனிஸிப்பாலிடி அதிபராகிய C. நாராயண ஸ்வாமி நாயுடு உபசார கணத்திற்கு அதிபராய்ச் செய்த உபந்யாசத்தில் மத்ய மாகாணத்துத் தலைமைக் கமிஷனராகிய A.P. மாக்டோனல் என்பவர் ஜன சபை விஷயத்தில் தமக்கு எவ்விதமான விரோதமும் கிடையா தென்றும், எந்த ஸர்க்கார் உத்யோகஸ்தர் காங்க்ரஸ் சபைக்குப் போக விரும்பினாலும் தமக்கு யாதொரு ஆக்ஷேபமும் கிடையா தென்றும் சொல்லியதை எடுத்துக்காட்டினர்.

ஸ்ரீமான் அநந்தாசார்லு அக்ராஸனம் வஹித்துச் செய்த சபாநாயகர் உபந்யாஸத்தின் ஸாரம்

ஸ்ரீமான் P. அநந்தாசார்லு சொன்னதாவது:

நண்பர்களே! ஸ்வதேசிகளே!

இந்த ஸமயத்தில் என்னை சபாநாயக ஸ்தானத்தில் வைத்து கௌரவப்படுத்தியது பற்றி மிகவும் குளிர்ந்த மனதுடன் வாழ்த்துச் சொல்லுகிறேன். இதற்கு அயோத்யாநாதர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

அவர் பெருந் தன்மையினாலே சென்னைவாஸிகளில் யாரேனும் சபாநாயகராக இருக்க எண்ணித் தாம் விலகிவிட்டார். ஸர் சுப்பிரமணிய அய்யர் வந்திருக்க வேண்டும். அவர் தேசத்துக்கு எல்லா வகைகளிலும் ஸேவை செய்ய விரும்பியவராய், ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். ஆரம்பத்தில் இது சிலருக்கு வருந்தத்தக்க விஷயமாகத் தோன்றக்கூடும். அது சரி யன்று. வேறு பல வகைகளிலும் அவர் மேற்படி ஸ்தானத்திலிருந்தபடியே நமது கக்ஷிக்குப் பலவித உபகாரங்கள் செய்யக்கூடும்.

இறந்தவர்களுக்கு உபசார நினைப்பு

சார்லஸ் ப்ராட்லா இறந்து போனார். அவர் இருந்தால் நமக்குப் பல விதங்களில் உபகாரம் செய்திருப்பார். அவருக்கு நாம் சிலை நிறுத்தி இருக்க வேண்டும். இதுவரை அங்ஙனம் செய்யாமல் தாமஸமானது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆனால், இதனை நம்மீதே ஒரு வசைச் சொல்லாகப் பாராட்டுவோர் வார்த்தையை நான் கண்டனம் செய்வேன். ஏனென்றாலோ, நாட்டில் பஞ்சம் மிதமிஞ்சிப் போயிருக்கிறது. ஸர் டி. மாதவ ராயரும் செத்துப் போய்விட்டார். ராஜேந்த்ரலால் மித்திரரும் செத்துப் போனார். இவர் பெரிய வித்வான். இவருக்கு வந்த ராய்பஹதூர் பட்டமும், ராஜா பட்டமும் தகும். ஆனால், இவருக்கு தேச பக்தி முதலிய சற்குணங்களால் நேர்ந்த கீர்த்தி அதனினும் பெரிது.

ஜன சபை தேச ப்ரதிநிதித் தன்மை யுடையதுதானா?

ஆம். நாம் ஸ்வதேசப் பிரதிநிதித் தன்மை யுடையோம். அதில் சந்தேகமில்லை. ஒரே ராஜாங்கம். ஒரே விதமான கஷ்டங்கள் - ஒரே தேசம். எனவே நாம் எல்லாரும் ராஜரீக தத்துவத்தில் ஒன்றே யல்லோமோ?

காங்கிரஸ் சபையின் வெற்றிகள்

தேசத்திலே ஸ்வதேசீய உணர்ச்சியை நிலைநிறுத்தியது இந்த ஜன சபையே யன்றோ? இது மாத்திர மன்று. அதிகாரிகளின் செய்கைகளையும் இந்த ஜன சபை மிகவும் மாற்றி யிருக்கிறது.

நாம் சட்டந் தவறாத கூட்டத்தாரென்றும், சட்டப்படிக்குள்ள கருவிகளினாலே, சட்டத்துக் கிணங்கிய வழிகளிலே தொழில் செய்து வருகிறோ மென்றும் இந்தியா ராஜாங்கத்தார் அங்கீகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்ஙனம் நம்மைப் பற்றி ராஜாங்கத்தாருக்கு நல்லெண்ணம் ஏற்பட்டது மாத்திரமே யல்லாமல், வேறு சில வாஸ்தவமான அனுகூலங்களும் ஸாத்யமா யிருக்கின்றன. லார்ட் க்ராஸ் இந்தியா மசோதா கொண்டு வந்தது நம்முடைய வேண்டுகோளுக் கிணங்கி யன்றோ?

ராஜாங்க உத்தியோக விசாரணைக் கூட்டத்தார் செய்த தீர்மானங்களையும், அவற்றால் இந்தியன் உடம்பாட்டு உத்யோக வரிசைக்குரிய பரீக்ஷைக்கு அபேக்ஷகர்களாய் வருவோரின் வயதை உயர்த்திய செய்கையையும், இடம்பாடற்ற ராஜாங்க உத்யோகங்களில் ஆள் சேர்ப்பதை அதிகப்படுத்திய கார்யத்தையும் உத்தேசித்து வடமேற்கு மாகாணங்களில் தனியாக ஒரு சட்டசபை நியமித்ததையும் கருதுமிடத்து, நமது ஜன சபையால் நிகழ்ந்திருக்கும் உபகாரங்களை உணரலாம்.

அதன் பின்னே நாட்டிலுள்ள சட்டசபைகள் எல்லாவற்றிலும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் வகுப்பிலும் குணத்திலும் குறிப்பிடத் தகுந்த அபிவிருத்தி ஏற்பட்டதும் இந்த ஜன சபையால் நேர்ந்த உபகார மன்றோ! இவற்றை யெல்லாம் கருதி நாம் கர்வமடைய இடமில்லையோ?

ப்ரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு நெறி யுணர்த்துதல்

நமக்காக ப்ரிட்டிஷ் கிளைச் சங்கத்தார் செய்துவரும் மேன்மையான உபகாரங்கள் கணக்கிடத் தகுந்தன அல்ல. இவர்களின் கார்யதர்சியாகிய மிஸ்டர் டிக்பி ப்ரிட்டிஷ் ஜனங்களின் மனத்தை நமக்கனுகூலமாகத் திருப்புவதில் உழைத்த உழைப்புக்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் போதாது.

நமக்கு மிகவும் மித்திரராக இருந்த சார்லஸ் ப்ராட்லாவும் இறந்து போய்விட்டார். இனிமேல் நாம் மிகவும் பலமான கார்யங்கள் செய்து மேற்படியார் செய்த உபகாரங்களை ஸபலமாகச் செய்ய வேண்டும்.

லண்டன் நகரத்தில் காங்கிரஸ் கூடுதல்

நமது ப்ரிட்டிஷ் ஸஹகாரி கணத்தின் நன்காராய்ந்த புத்திமதியையும், இந்தியாவுக்குச் சார்பான பார்லிமெண்ட் மெம்பர்களின் சிபார்சையும் உத்தேசித்து நாம் லண்டன் நகரத்திலேயே நமது ஜன சபையின் கூட்டமொன்று நடத்த வேண்டுமென்பது போதருகின்றது.

நமது ஜன சபையைச் சேர்ந்த மெம்பர்களாய் இங்கிலாந்தில் நமக்குக் காளைபோலே உழைத்து நலம் புரிந்த மித்திரரும் அங்ஙனமே கூறுகிறார்கள். அங்கு போய் நாம் பாடுபடுவோமானால் நம்மை ராஜத் துரோகிகளென்று இங்கிருந்து கதை கட்டி அனுப்பும் ஆங்கிலேய அதிகாரிகளின் வார்த்தையை நாம் நேரே சென்று மறுத்து ப்ரிட்டிஷ் ஜனங்களை நமக்கனுகூலமாகச் செய்யலாம்.

எனவே லண்டனில் ஒரு கூட்டம் நடத்துதல் பரமாவசிய மென்பது போதருகின்றது. ஆனால், நம்மவரில் சில ஜாதியார் ஸமுத்திரத்தைக் கடந்து யாத்திரை செய்தால் ஜாதி பஹிஷ்காரம் செய்வ தென்ற வழக்க மிருத்தல் ஒரு பெரிய ஆக்ஷேபமாகிறது. ஸ்ம்ருதிகள் ஸமுத்ர யாத்ரையைத் தடுத்துச் சொல்லிய வார்த்தைகள் தபஸ்வியாகி ராஜரீகாதி ஸர்வ வ்யவஹாரங்களையும் த்யஜித்து நிற்கும் முனிகளுக்கு ஸாத்யப்படுமே யொழிய ஸாதாரண க்ருஹஸ்தனுக்கு ஸாத்யப்படாது.

நம்மவர்களில் சிலர் இந்த விஷயத்தில் ஸ்ம்ருதியின் நிரோதங்களை மீறிக் கடல் யாத்திரை செய்யத்தான் வேண்டும். ஜாதி பஹிஷ்காரம் நெடுங்காலம் நிலைத்து நிற்க மாட்டாது. அப்படியே சாசுவதமாக நின்றபோதிலும் காங்க்ரஸ் ஜாதி என்றொரு புது ஜாதி தோன்றிவிடும்.

பொது ஜனங்களுக்கு ஸ்வதேசீயப் பயிற்சி செய்வித்தல்

இங்கிலாந்துக்குப் பிரதிநிதிக ளனுப்பி இங்கிலாந்தி லுள்ளோருக்கு நமது கொள்கைகளைத் தெரிவித்தல் அவஸரமே யாயினும், அதைக் காட்டிலும் நமது தேசத்துப் பொது ஜனங்களின்

மனதில் ஜன சபையின் கொள்கையாகிய ஸ்வதேசீயக் கொள்கையைப் பதியும்படி செய்தல் அதிக அவஸர மென்பதை நாம் மறந்து விடலாகாது.

ஸமாதான முறைகளில் யுத்தம்

நமது மஹாராணியாகிய விக்டோரியா சக்ரவர்த்தினிக்கு நாம் செலுத்தும் விசுவாசத்தை நன்கு தெரிவிக்கும் பொருட்டு நாம் இஷ்டப்படி ஸ்வேச்சைக் காப்புப் படை சேர்த்து ப்ரிட்டிஷ் துவஜத்தின் கீழே போர் புரியும் ஸ்வதந்த்ரம் நமக்குக் கொடுக்கவில்லை. எனிலும் "போரில் வெற்றிகள் இருப்பதுபோலே ஸமாதானத்திலும் வெற்றிகள் உள" என்று ஆங்கிலப் பழமொழி கூறியது மெய்யன்றோ? நமது ஜன சபையின் மேடையில் அத்தகைய வெற்றிகள் வெல்லப்படும். நமக்கு இதுவரை நேர்ந்திருக்கும் வெற்றி சிறிதேயாயினும் அதனால் நாம் ஆசை யிழந்து போய்விடலாகாது. ஆங்கிலக் கவியாகிய பைரன் பாடினார்:

விடுதலைக்கென்றொரு காற்போர் தொடங்கி விட்டால்,

....

.... *அஃது*

மேன்மேலும் தோற்றாலும் இறுதியிலே வெல்லும்" என.

நாம் இந்தப் பெரு முயற்சியின் ஆரம்ப கர்த்தாக்கள். நன்றை எடுத்துக்காட்டுவதும், தீதைக் கண்டனம் செய்வதுமாகிய திருப்தி மாத்திரமே நமக்குளது. ஆனால், நம்முடைய கார்யங்களின் பயன்களைப் பின்னே வரப்போகும் தலைமுறையார் அனுபவிப்பார்கள். நமது ஜன சபைக்காகப் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்காளாய் உழைப்பவர்களுக்குப் பிரதி யுபகாரமாக அன்பு நினைப்புச் செலுத்துவார்கள். இப்படிப்பட்ட மனிதருக்கு ராஜாங்கத்தார் உயர்ந்த சம்பளம் அல்லது கௌரவம் தாராவிடினும் இவர்கள் 'பூர்வ ஸ்ருஷ்டி ஸ்வதந்தரத்தாலே மஹா ப்ரபுக்களாவார்கள்.' சட்டத்துக் கிணங்கிய, தர்மத்துக்கு விரோதமில்லாத உபாயங்களால் நமது பாரத ஜாதிக்கு ஐக்யமும் க்ஷேமமும் ஏற்படுத்த ஆரம்பம் செய்த கீர்த்தி அவர்களுக்குண்டு என்று சொன்னார்.

இந்தக் கூட்டத்தில் மூன்றாம் தீர்மானத்தை மிஸ்டர் ப்ரிங்கிள் கென்னடி பிரேரணை செய்தார். அப்போது அவர் செய்த பிரஸங்கத்தில் பின்வருமாறு கூறினார்:

"ஸமாதானமும், செட்டும், சீர்திருத்தமும் வேண்டும்.... எல்லையை 'சாஸ்த்ரோக்த'மாகத் திருத்துவதில் அதிகப் பணம் செலவிடுதல் பயன்படாது... பொக்கிஷம் நிறையப் பணமும், செழிப்பும் திருப்தியு முடைய ஜனங்களு மிருந்தால் அதுவே ஒரு தேசத்துக்குப் பெரிய காப்பாகு மென்று 1878ஆம் வருஷத்தில், இந்தியாவின்மீது ருஷியர் படையெடுத்து வருவாரென்ற பயமிருந்த காலத்தில் லார்ட் டெர்பி கூறியதை நாம் நினைப்பூட்டுகிறோம்... இந்த தேசத்தில் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு, வருஷாரம்ப முதல் வருஷாந்த பர்யந்தம் ஆஹாரக் குறைவு நிகழ்ந்து வருகிறது. இங்கு கூடியிருக்கும் நமக்குள்ள நித்ய அனுபவமான வயிறார உண்ணுதல் என்ற அனுபவம் அந்த லக்ஷலக்ஷமான ஜனங்களுக்கு ஆயுள் முழுதிலும் ஒரு நாள்கூடக் கிடையாது"

என்றார்.

பிறகு மேற்படி தீர்மானத்தை மிஸ்டர் முதோல்கர் அனுஸரித்துப் பேசுகையில் பின்வருமாறு சொன்னார்:

"கொடிய, மிகப் பரந்த, வளர்கின்ற வறுமை நாட்டிலே பாய்ந்திருக்கிறது. நானூறு லக்ஷம் ஜனங்களுக்கு ஆயுள் முழுதும் ஒரு நாள்கூடப் போதுமான உணவு கிடையாதென்று ஸர் வில்லியம் ஹன்டர் சொல்லுகிறார். விவசாயத்தில் உழைக்கும் ஜனத்தொகையில் ஒரு பகுதிக்கு எந்த வருஷத்திலும் ஒருவேளைகூட வயிற்றுக்கு முழு ஆஹாரம் கிடைப்பதில்லை யென்று நான் ஸம்சயமில்லாமல் பகர்வேன் என்று ஸர் சார்லஸ் எலியட் சொன்னார்.... மேலும் பஞ்சத்தினால் பன்னிரண்டு வருஷங்களில் நூற்றிருபது லக்ஷம் ஜனங்கள் மடிந்து போய் விட்டார்களென்று கணக்குகளினால் தெரிய வருகிறது.... ஒரு ஆங்கிலேயனுக்குச் சராசரி வருஷ வரும்படி ரூபா 570; ஒரு பாரத தேசத்தானுக்குச் சராசரி வருஷ வரவு ரூபா 27 (இருபத்தேழு) என்பதை ராஜாங்கத்தாரே அங்கீகாரம்

செய்திருக்கிறார்கள். இது சராசரி. சிலருக்கு அபரிமித வரும்படி. ஆகவே, விவசாயிக்குச் சராசரியைக் காட்டிலும் கீழே எத்தனை தூரம் குறையுமென்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள்" என்றார்.

பிறகு லாலா முரளீதர் எழுந்து உர்து பாஷையில் உபந்யாஸம் புரியலானார்:

"வறுமை என்ற பேய்ச்சிக்குப் பல குழந்தைப் பிசாசுக ளுண்டு. அவையாவன: கஷ்டம், துக்கம், இழிவு, பஞ்சம், கொள்ளை நோய், குற்றம் என்பனவாம்.

இந்தப் பிசாசுகள் நமது நாட்டில் நடனஞ் செய்வதற்கு ஜனங்கள், ராஜாங்கத்தார் என்ற இரு திறத்தாரும் காரணஸ்தரெனத் தகும். ஸ்வதேசிகளே, நீங்களும் மேற்படி பேய்களுடன் சேர்ந்துகொண்டு உங்கள் சொந்த ஸஹோதரரின் ஹ்ருதய ரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்து மகிழ்ச்சி யடைந்திருக்கிறீர்க ளென்று தோன்றுகிறது! (இங்ஙனம் முரளீதரர் பேசி வருகையில் சபையாரில் சிலர் "இல்லை", "இல்லை" என்று கத்தினார்கள்.)

அப்போது முரளீதரர் சொல்லுகிறார் (உர்து பாஷையில்):

ஆம். நீங்கள் அந்தப் பேய்களுடன் கூடிக் களிக்கிறீர்கள். இந்த ஐரோப்பிய ஸர லாந்தர்களும், தீபங்களும், ஐரோப்பாவில் செய்த நாற்காலி மேஜைகளும், சொகுஸூ துணிகளும், தொப்பிகளும், இங்கிலீஷ் சட்டைகளும், கழுத்துக் கட்டு வகையராக்களும், வெள்ளிப் பூண் வெளிநாட்டுப் பிரம்புகளும், உங்கள் வீட்டுப் படாடோபமான ஜோடிப்புக்களும் இவை யெல்லாம் பாரத நாட்டின் துக்கச் சின்னங்கள்; பாரதமாதாவினுடைய பசி யடையாளங்கள்.

நீங்கள் ஐரோப்பிய ஸாமான்களின் மீது செலவிடும் ஒவ்வொரு ரூபாயும், யோக்யமான கைத்தொழில் செய்து பிழைக்கக் கூடிய உங்கள் ஏழை ஸஹோதரருக்கு நஷ்டம். இப்போது அவர்களுக்கு ஜீவன வழி யில்லாமல் போய்விட்டது.

இந்தியாவில் ஐரோப்பிய ஸாமான்களைக் கொண்டு வந்து வெள்ளம்போல பரப்பி அதனால் தினே தினே நிச்சயமாக ஸ்வதேசீயக் கைத்தொழிலைக் கொன்றழித்து, இந்த அழிப்பைத் தூண்டும் பொருட்டு இறக்குமதித் தீர்வைகளை நீக்கி, செல்வர் செலுத்திய மூன்று கோடி ரூபாய்த் தீர்வை வரவை நஷ்டப்படுத்திக் கொண்டு, இந்த துஷ்ட நஷ்டத்தை ஈடுபடுத்தும் பொருட்டாக ஏழைகள் செலுத்திய உப்புவரியை உயர்த்தி, இந்தியாவில் புதிதாகத் தோன்றி யிருக்கும் ஒரே சிறு தொழிலாகிய யந்திர நெசவுத் தொழிலை, ஸாத்யப்பட்டால் கொல்லும் பொருட்டாக நம்மீது ஆலை விதிகளை அழுத்துவதாகிய - இப்படிப்பட்ட செய்கைக ளெல்லாம் சுத்தமான பரோபகாரத்தால் விளைந்த செயல்களென்று சிலர் கூறியதை நான் அறிவேன். அஃதெல்லாம் பரோபகாரந்தான்! ஆனால், அதினாலும் அதனுடன் வேறுசில காரணங்களாலும் உங்கள் ஸகோதரருக்குள் பசி பயனாக விளைந்திருக்கிறது.

முப்பது வருஷங்களுக்கு முன்பு கோதுமை ஒரு ரூபாய்க்கு 1½ மணங்கும், உளுந்து இரண்டு மணங்குமாக விற்றது. ஏனென்றால், அப்போது நம்முடைய தானியம் அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகவில்லை. இப்போது அதைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிக கிராக்கியாக விற்கிறது. எனவே ஏழைகளுக்குத் தம் வயிற்றை நிரப்புதல் ஆறு மடங்கு அதிகக் கஷ்டமாய் விட்டது. மேற்குறித்த நம்முடைய பரோபகாரிகள் நம்முடைய தானியக் களஞ்சியங்களை வற்றடிக்கும் பொருட்டாக 'விடுதலை வியாபாரக் கொள்கை' என்பதொரு கற்பனை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

விடுதலை வியாபாரம்! தேசத்தார்களுக்கிடையே யோக்ய நடையாம்! இந்த வஞ்சனைச் சொல்லை நான் பகைக்கிறேன். ஏழையாய் நிற்கும் பாரத தேசத்தாருக்கும் கொழுத்த முதலாளியாகிய இங்கிலாந்துக்கும் வியாபார விஷயத்தில் என்ன விதமான யோக்ய நடை இருக்கக்கூடும்! ஒரு பலவானாகிய மனுஷ்யனுக்கும் ஒரு பச்சைக் குழந்தைக்குமிடையே தர்ம யுத்தம் ஸாத்யமெனத் தகுமோ?

முயலுக்கும் மலைப்பாம்புக்கும் நடக்கிற சண்டையை ஸமான யுத்தமெனலாமோ? இஃதெல்லாம் அதி ஸூக்ஷ்மமான த்ரவ்ய சாஸ்த்ரப்படி சரிதான். ஆக்ஷேபமில்லை. ஆனால், மித்திரர்களே, ஞாபகத்தில் வைத்திருங்கள். இதுவும் உங்கள் ஸஹோதரரைப் பஞ்சத்தில் ஆழ்த்தும் காரணங்களிலே ஒன்றாம்.

இங்ஙனம் சுதேசீயக் கைத்தொழில்க ளெல்லாம் அழிந்து போனதில் நமது நல்ல ராஜாங்கத்தார் மிகவும் பரிதாபமடைந்தவர்களாய் மீளவும் நமது நாட்டுக்கு வேண்டிய ஸாமான்களை நம்மவரே தயார்செய்து கொள்ளுவதிலும், நமது நாட்டுத் தொழிலாளிகளுக்கு வேலை கண்டுபிடித்துக் கொடுப்பதிலும் மிகுந்த சிரத்தை யுடையவர்களாய், முப்பது கோடி ஜனத்தொகை யுள்ள தேசத்தில் பன்னிரண்டுக்கும் குறைந்த தொழிற் பாடசாலைகள் ஸ்தாபனஞ் செய்தனர் போலும்!.....

ஆக்பர் சக்ரவர்த்தியின் காலத்தில் நாட்டுக் கஜானா ஹிந்து மந்திரிகளின் வசம் கொடுக்கப்பட்டது. அந்த மந்திரிகள் எப்போதும் மிச்சம் காட்டிச் செலவுபோக நிறையப் பணம் வைத்திருந்தனர். எனினும் இக்காலத்தில் நம்முடைய தேசத்தார் தமது சொந்த நாட்டு வரவு செலவை நடத்த அதிகாரமின்றி நிற்கிறார்கள். இது மிகவும் வருத்தத்துக்கிடமான விஷயம்"

என்று லாலா முரளீதர் சொன்னார்.

பிறகு தீ. எ. வாச்சா எழுந்து ராணுவச் செலவின் மிகுதியைக் கண்டனம் புரிந்து பேசினார். பிரிட்டிஷ் இந்தியாவில் நிலத் தீர்வை இலாகாவின் செயல் முறைமையாலேயே விவசாயிகள் அழிந்து போகின்றன ரென்பதை இவர் எடுத்துக்காட்டினர்.

ராணுவச் செலவை மிகுதிப்படுத்தக் கூடாதென்ற தீர்மானத்தைக் குறித்துப் பேசியவர்களில் பாலகங்காதர திலகரும் ஒருவர். இருபத்தைந்து வருஷங்களுக்கப்பால் ருஷியர் படையெடுத்து வரப் போகிறார்களென் றஞ்சி இன்றைக்கு ஜனங்கள் பசியால் மாளும்படி தீர்வைகளை உயர்த்துதல் சரியில்லை யென்பதைத் திலகர் எடுத்து விளக்கினார்.

தீர்மானங்கள்

நாக்பூரில் *(1891)* நடைபெற்ற ஏழாம் ஜன சபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1. முதல் தீர்மானம்:

வருஷாந்தக் கூட்டம்

லண்டனில் நாம் ஒரு கூட்டம் கூடும் வரை நமது ஜன ஸபைக் கூட்டங்களை நிறுத்தி வைத்தல் உசிதமா? அன்றி நடத்துவோ மெனில் பிரதிநிதிகளின் தொகை, ஸ்தல நிர்ணயம் என்ற இரண்டு அம்சங்களிலும் எவ்விதமான நிபந்தனைகள் ஏற்பாடு செய்துகொண்டு நடத்துவோ மென்பதை ஆலோசனை செய்து இந்த மாஸம் 30ஆம் தேதிக்குள் அறிக்கை யிடும்படி ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும், அந்தக் கமிட்டியில் பின்னே கூறப்படுவோர் மெம்பர்களாக இருக்க வேண்டுமென்றும் இந்த ஜன சபை திட்டஞ் செய்கிறது.

கமிட்டி

உத்யோக மெம்பர்கள்
சபாநாயகர்
உபசார கணத் தலைவர்
பொதுக் கார்யதர்சி
ஜன சபையின் சாசுவத வக்கீல்கள்

இனி ஸாதாரண மெம்பர்கள்:

ஸுரேந்த்ரநாத பானர்ஜி
வீரராகவாசார்யர்
ஹபீஸ் அப்துல் ரஹீம்
கங்காப்ரஸாத வர்மா
ப்ரிங்கிள் கென்னடி
குருப்ரஸாத ஸேன்
தீ. எ. வாச்சா
M.B. ராம் ஜோஷி
ஹமீத் ஆலிகான்
விஷ்ணு மோரேசுவர பீடே

முரளீதரர்
முதோல்கர்
தேவராவ் விநாயகர்
கோபாலராவ் பீடே
வி. பினக்ருஷ்ண வஸூ
D.A. கரே
மதனமோஹன மாளவீயர்
ஸாளிக்ராம் ஸிங்
சங்கரன் நாயர்

2. இரண்டாந் தீர்மானம்:

சட்டசபைச் சீர்திருத்தம்

இந்த தேசத்துச் சட்டசபைகளில் இந்த தேசத்து ஜனங்களாலே தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகளின் மூலமாக ஜனவாக்குக்கு வலிமை ஏற்படுத்து மளவும் பாரத பூமிக்கு நல்ல, நியாயமான ஆட்சி ஏற்படா தென்று முந்திய ஜன சபைக் கூட்டங்களனைத்திலும் செய்த முடிவுகளை இங்கு மீளவும் வற்புறுத்துவதுடன், நமது நன்றிக்குப் பாத்திரராய் நம்மீது நல்லெண்ணம் செலுத்தி வரும் ப்ரிட்டிஷ், ஐரிஷ் மஹா ஜனங்கள் நியாயமும் அவஸரமுமான இந்தச் சீர்திருத்தத்தை நமக்குக் கொடுப்பதில் தாமஸம் நேராதபடி கவனிக்குமாறு மரியாதையுடன் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. *மூன்றாந் தீர்மானம்:*

இந்தியாவின் வறுமை மிகுதிப்படல்

நாட்டு ஜனத்தொகையில் 500 லக்ஷம் பேர் முழுப் பட்டினிக்கு மிகவும் ஸமீபத்திலிருப்பதாலும்; இவர் தொகை வருஷந்தோறும் மிகுதியுற்று வருவதனாலும்; ஒவ்வொரு பதிற்றாண்டிலும் பத்து லக்ஷக் கணக்கான ஜனங்கள் கேவலம் தின்னச் சோறின்றி மடிவதனாலும்;

இந்தத் துன்ப நிலைக்குக் காரணங்கள் எவை யெனிலோ:

1. அரசாட்சியிலும் நாட்டு வரவு செலவிலும் ஜனங்களுக்கு பாகமில்லாமல் விலக்கி வைத்திருத்தல்; (இதற்கு மருந்து இரண்டாந் தீர்மானத்தில் காண்க)

2. ராணுவத்துக்கும் குடியாட்சிக்கும் - விசேஷமாக ராணுவத்துக்கு - இப்போது அபரிமிதமான தொகை செலவிடப்படுதல்;

3. நிலவரி வசூலில் கண்மூடின அனுஷ்டானங்கள் அனுசரிக்கப் படுவதால் ஜனத்தொகையில் பத்தில் ஒன்பது பங்குக்கு ஜீவனாதாரமாகிய நாட்டு விவசாயத்தில் எவ்விதமான சீர்திருத்தமும் செய்தல் அஸாத்யமாகி விவசாயம் வரவரச் சீர்கெடுதல்;

இவையே காரணங்களாதலாலும்,

ராணுவ இலாகாவில் சாசுவத சேனையின் தொகையைத் தக்கபடி குறுக்கியும்;

இங்கிலாந்திலிருந்து அடிக்கடி இங்கு பட்டாளங் கொண்டுவந்து மாற்றிக் கொண்டு போவது நிமித்தமாக இங்கிலாந்தில் ஆள் சேர்க்கவும், இடம் பெயர்க்கவும் செலவு மிகுதியாவதையும் இந்நாட்டின் சீதோஷ்ண ஸ்திதிக்கு வழக்கப்படாத இளைஞரில் பெருந்தொகை மடிவதையுங் கருதி, இம் முறையை மாற்றி மறுபடி கனம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் காலத்தில் இருந்தபடி ஐரோப்பியத் துருப்புகளை இங்கு நீண்ட காலம் நிறுத்தி வைக்கும் முறையைத் தழுவியும்;

இப்போது பல வருஷங்களாக வடமேற்குத் திசையில் எல்லைக் காவல் என்ற வீண் முகாந்தரத்தைக் காட்டி அளவற்ற தொகை விரயம் செய்வதை நிறுத்தியும்;

உக்ராணம், பாசறைச் செலவு முதலிய இலாகாக்களில் கண்டிப்பான செட்டை ஏற்படுத்தியும்;

இனி நாட்டு நிர்வாகத்தில் பெரும் பொருள் செலவு செய்து வெளிநாடுகளினின்றும் உத்யோகஸ்தர் வரவழைப்பதை விட்டு, ஸ்வதேசிய உத்யோகஸ்தரை நியமித்தும்;

ராஜாங்கச் செலவைப் பெரிதும் குறைத்துவிட வேண்டுமென்றும்; சிறிது காலமாக 10 அல்லது 12 வருஷங்களுக்கொரு முறை அடிக்கடி நிலவரி மாறிக்கொண்டு போவதனால் நாட்டு விவசாயத் தொழிலை முதலாளிகளும்

தொழிலாளிகளும் அபிவிருத்தி செய்தல் அஸாத்யமாவதைக் கருதியும், பயிர்த்தொழிலின் அபிவிருத்தியை உத்தேசித்தும், முப்பது வருஷங்களுக்கு முந்தியே பிரிடிஷ் ராஜாங்கத்தார் வாக்குக் கொடுத்தபடி நிலவரியைச் சாசுவதமாகத் திட்டம் பண்ணுவதற்குரிய ஏற்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டு மென்றும்;

விவசாய வட்டிக் கிடங்குகள் (பாங்கிகள்) ஸ்தாபனம் செய்யவேண்டுமென்றும் முந்திய ஜன சபைக் கூட்டங்களில் செய்யப்பட்ட தீர்மானங்களை இங்கு மீளவும் ஊர்ஜிதப் படுத்துவதுடன்;

இப்போது இந் நாட்டிலுள்ள ஆட்சி முறை உண்மையில் நல்லெண்ணமுடையதும் ஆனால் நிச்சயமாகவே அதிருப்திக் கிடமான நடைகளுடையது மாதலால் இன்னும் உயிர்ச் சேதம் நேராதபடி மேற்படி சீர்திருத்தங்களை வலிந்து நிறைவேற்றித் தரும்படி இந்த ஜன சபை பிரிடிஷ், ஐரிஷ் மஹாஜனங்களை வேண்டிக்கொள்ளுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

ஆயுதச் சட்டமும் ராணுவப் படிப்பும்

1. 1898-ம் வருஷத்து 11-ம் கட்டளையாகிய ஆயுதச் சட்டத்தின்கீழ் ஏற்பட்டிருக்கும் விதிகளை ஜாதி, மத, வர்ண பேதங்க ளில்லாமல் இந்தியாவில் வஸிப்போர், வெளித்தேசங்களி லிருந்து யாத்திரைக்காக வந்திருப்போர் எல்லாருக்கும் ஆயுதம் வைத்திருக்கவும் தரிக்கவும் விதிக்கப்பட்ட விதிகள் பொதுவாகச் சமைத்தும், காட்டு மிருகங்கள் இருந்து மனித உயிர், கால்நடை, பயிர் எனுமிவற்றை அழிக்கும் ப்ரதேசங்களில் ஆயுத உடைமை தரித்தல் ஸம்பந்தமான அனுமதி உத்தரவுகளைத் தாராளமாகவும் பொதுப்படையாகவும் வழங்கியும்;

இவையும், அவ் விதிகளின்படி தரும் எல்லா அனுமதி உத்தரவுகளும் ஒரே தடவையாகக் கொடுத்துவிடும்படிக்கும், மாகாண எல்லை முழுமைக்கும் உபயோகமாகும்படிக்கும், கெட்ட விதத்தில் உபயோகப்படுத்தியதாக ருஜுவானா லன்றி

அவ் வுத்தரவுகளை மாற்றாமலும், ஒரு வருஷத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை உத்தரவுகளைப் புதுப்பிக்காமல் இருக்கும்படிக்கும் - (மேற்கூறப்பட்ட ஆயுதச் சட்ட விதிகளை) மாற்றவேண்டு மென்றும்;

2. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபனம் செய்து அவற்றில் சட்டத்தில் சொல்லியவண்ணம் இந்தியா குடிகளெனப்படுவோர் சென்று படிக்கவும், அவரவர் திறமைக்கும் பயிற்சிக்கும் தகுந்தவாறு ஸன்னது பெற்ற உத்தியோகஸ்தராகவோ, ஸன்னது பெறாத உத்யோகஸ்தராகவோ பாரத ஸேனையில் நியமனம் பெறுவதற்குரிய பழக்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும்;

3. நாட்டிலுள்ள யுத்தப் பிரியரான ஜாதியாரைத் திரட்டி உள்நாட்டுச் சேனை யொன்று சமைக்க வேண்டுமென்றும்;

4. இந்தியா ஜனங்களுக்குள்ளே, ப்ரித்தானியாவில் நடைபெறுவதுபோல், விஸ்தாரமான (வாலண்டீர்) ஸ்வேச்சைக் காப்புப் படை யொன்று ஏற்பாடு செய்யவேண்டு மென்றும்; முந்திய ஜன சபைக் கூட்டங்களில் கூறப்பட்ட அபிப்பிராயங்களுக் கிணங்கித் திறமை யுடைய, தகுந்த நாட்டுக் காவலை வேண்டித் தம்முடைய மனைகளையும், அரசையும் ஜனங்கள் காக்குந் திறமை பெறுமாறு, மேற்கூறப்பட்ட உபாயங்களை அனுஸரிக்கும்படி இந்த ஜன சபை பாரத ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

5. ஐந்தாம் தீர்மானம்:

ஸம காலப் பரீக்ஷைகள்

இந்த தேசத்தின் ஆட்சியில் ஸ்வதேசிகளை அதிகமாக நியமிப்பதற் கொருபடியாகவும், இந்தியா ஜனங்களுக்கு ஸாமான்ய நீதி செலுத்தக் கருதியும், நிர்வாஹ உத்யோகங்களின் எல்லாக் கிளைகளுக்கும் உரிய பரீக்ஷைகளை இப்போது இங்கிலாந்தில் மாத்திரம் நடத்தும் வழக்கத்தை மாற்றி இரண்டு தேசங்களிலும் ஸம காலத்தில் நடப்பிக்க வேண்டுமென்று முந்திய ஜன சபைக் கூட்டங்களில் செய்த தீர்மானத்தை இந்த ஜன ஸபை உறுதிப்படுத்துகிறது.

6. ஆறாம் தீர்மானம்:

உப்பு வரி, வருமான வரி, சுங்க நெறி

1. உப்பு வரியில் ஸமீபத்தில் உயர்த்தப்பட்ட அளவை மாத்திரமாவது குறைத்தல் அவசிய மென்றும்;

2. 500 ரூபா வரும்படிக்கு மேல் வருமானவரி போடுவதை விட்டு 1000 ரூபா வருமானத்துக்கு அதிகப்பட்டால் மாத்திரமே மேற்படி வரி விதிக்க வேண்டு மென்றும்;

3. 1890 மார்ச்சு 1ஆம் தேதி இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட ராஜாங்க அறிக்கையின் 103, 104, 105 ப்ரகரணங்களில் கண்ட சுங்க விதி முழுதையும் மாற்றாமல் அனுஸரிக்கும்படி மாகாண ஆட்சிகளை இந்தியா கவர்ன்மெண்டார் வற்புறுத்த வேண்டுமென்றும்;

4. எல்லா கிராமங்களிலும் சாராயக் கடை வைக்கும் விஷயத்தில் ஜனங்களுடைய இஷ்டத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தகுந்த சுலபமான வழி யொன்று கண்டுபிடித்து அதன்படி நடக்கவேண்டு மென்றும்; முந்திய ஜன சபைக் கூட்டங்களில் செய்ததுபோலவே இந்த ஜன சபை பலமான சிபார்சு செய்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

நீதி இலாகா, போலீஸ் இலாகா

நீதி இலாகாவிலும் போலீஸ் இலாகாவிலும் இப்போதுள்ள அதிருப்திக் கிடமான குறைகளை உத்தேசித்து,

1. நீதி, நிர்வாஹ அதிகாரங்கள் எவ்விடத்தும் ஒரே மனிதனிடம் சேர்ந்திராதபடி மேற்படி இரண்டு இலாக்காக்களையும் அறவே பிரிவு செய்துவிட வேண்டுமென்றும்

2. ஜூரி விசாரணை இப்போது வழக்கத்தில் இல்லாத ப்ரதேசங்களிலும் அதனை வழக்கத்தின் கீழே கொணர்தல் மிகவும் அவசியமென்றும்;

3. ஜூரிகளின் விடுதலைத் தீர்ப்புக்களை மாற்றலா மென்று முதல் முதல் 1892-ல் ஹைகோர்ட்டாருக்குக் கொடுபட்ட அதிகாரத்தை ரத்து செய்தல் அவசியமென்றும்;

4. சிறையோலை (வாரன்ட்) வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர், தம்மை மாஜிஸ்திரேட் விசாரியாமல் ஜில்லா கோர்ட்டுக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளலா மென்றொரு நிபந்தனை குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்க்க வேண்டு மென்றும்;

5. போலீஸ் இலாகாவில் சிப்பந்திகளின் தொகையைக் குறைத்தும், கீழ்த்தர உத்தியோகங்களுக்கு அவசியமான யோக்யதாம்சங்களின் அளவையும் சம்பளத்தையும் அதிகப்படுத்தியும், ஆள் சேர்ப்பதில் மிகவும் ஜாக்கிரதை செலுத்தியும், மேல்தர உத்தியோகங்களுக்கு இப்போதுள்ள நகரக் காவல் (போலீஸ்) துணைப் பொதுப் பரிசோதகர், மணியகாரர் (ஸூபரின்டென்டென்ட்) உதவி மணியகாரர் முதலியோரிட மிருப்பதைக் காட்டிலும் அதிக ஸாமர்த்தியங்களும், அதிக நாகரிக ஜனப் பழக்கமும், ராணுவ டம்பங்களில் குறைவுமுடைய புருஷர்களைத் தெரிந்தெடுத்தும் மேற்படி இலாகாவை வேரொடு சீர்திருத்த வேண்டு மென்றும் முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை இந்த ஸபை மீளவும் வற்புறுத்துகிறது.

8. எட்டாந் தீர்மானம்

கல்வி

கவர்ன்மெண்டார் சிந்திக்கிறபடி கல்வியின் எல்லாப் பிரிவுகளிலும் ராஜாங்கச் செலவைக் குறைத்தலாகிய யோசனையை ஒழித்துச் செலவை மிகுதிப்படுத்தல் அவஸரமென்றும், இவற்றுள் ப்ரதான வர்க்கத்தைச் சேர்ந்த தொழிற் கல்வியை அபிவிருத்தி செய்யும் பொருட்டாக, தேசத்தின் தற்காலத் தொழில் நிலைமையைப் பற்றி விசாரணை செய்யுமாறு (உத்தியோகஸ்தரும், மஹா ஜனப் பிரதிநிதிகளும்) கலப்பான விசாரணைக் கூட்ட மொன்று நியமித்தல் அவசியமென்றும் முந்திய கூட்டங்களில் முடிவுசெய்ததை இந்த ஜன ஸபை மீட்டுமொரு முறை ஊர்ஜிதப்படுத்துகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்

ஜெனரல் பூத் அனுப்பிய தந்தி

('ரக்ஷண்ய ஸேனை'யின் 'சேனாபதி'யாகிய) ஜெனரல் பூத் என்பவர் நமது ஜன ஸபைக் கனுப்பிய தந்தி பின்வருமாறு:

> "இந்தியாவில் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் பசியால் வருந்துவதை நான் ஜன சபையாருக்கு நினைப்பு மூட்ட உத்தரவு கொடுக்க வேண்டும். நிராதரவான இந்த ஜனக் கூட்டங்களை நாட்டிலுள்ள வெற்று நிலங்களில் குடியேற்றவும், இப்போது அவர்களுக்குக் கிடையாதனவாகிய சுகவாச ஸௌகர்யங்கள் அங்கே அவர்களுக்குக் கைகூடும்வண்ணம் அவர்களைப் பொருளுதவி செய்து ஸங்கப்படுத்தவும் யோசனை செய்யும்படி வேண்டுகிறேன்.
>
> ஜன ஸபையின் செயல்களை ஈசன் காக்க. மனுஷ்ய ஜாதியின் துக்க நிவாரணத்துக்கு நீங்கள் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும் அனுதாப முடையேன்"

என்ற தந்தியைப் படித்துப் பார்த்து, இதற்கு மறுமொழியாக நமது ஜன ஸபையிலிருந்து ஜெனரல் பூத்துக்கு,

> "தங்களுடைய அன்பார்ந்த தந்தியை இந்த ஜன ஸபை ஏற்றுக் கருதித் தம்மிடம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறது.
>
> ஐந்நூறு லக்ஷம் ஜனங்களுக்கு மேலே அறுநூறு லக்ஷம் வரை அரைப் பட்டினிப் பரம ஏழைகளாக இருப்போரின் நிலைமையை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடே இந்த ஜன ஸபை ஸ்தாபனம் செய்யப்பட்டது. அதை உள்நாட்டுத் தரிசு நிலக் குடியேற்ற ஸம்பந்தமான எவ்வித உபாயத்தாலும் சரியாக நிவர்த்தி செய்யமுடியாது. இந்த விஸ்தாரமான வறுமை நிலை தோன்றிய ஆதார காரணங்களை மாற்றுதலாலும், ஜனங்களின் அறிவு நிலையை உயர்த்துவதனாலுந்தான் வாஸ்தவ நிவர்த்தி ஏற்படக்கூடும்.
>
> இவ்விரண்டில் முதல் வழிக்கனுஸரணையான முக்கியச் சீர்திருத்தங்க ளெல்லாம் இந்த ஜன சபையின் படலத்தில் கண்டனவேயாம்.

இரண்டாம் வழியில் மாகாணந்தோறும், ஜில்லாதோறும் பல ஸங்கங்கள் மேன்மேலும் சிரத்தையுடன் பாடுபட்டு வருகின்றன. அந்தத் துறையில் பல பாதிரிகளும் உழைக்கிறார்கள்.

உங்களுடைய ரக்ஷண்ய ஸேனையும் பொது ஜனங்களின் நிலையை உயர்த்துவதில் பாடுபட்டு வருவது கருதி உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

நம்மிரு திறத்தாரின் முயற்சிகளும் இரண்டு வகைகளிலும் வெற்றி எய்துக. நமது ஸஹோதரரின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வோர் யாவருக்கும் பல மதஸ்தர் கூடிய இந்த ஜன சபை நெஞ்சார வாழ்த்துக் கூறுகிறது"

என்றொரு தந்தி அனுப்ப வேண்டுமென இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:

வருஷாந்தக் கூட்டம்

இவ் வருஷத்து முதல் தீர்மானத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை பின்வருமாறு:

"உங்கள் கமிட்டியாராகிய நாங்கள் எங்களாராய்ச்சிக்குக் காட்டின விஷயத்தை எங்களுக்குள்ளே யோசித்தும், விஷய பூர்வாலோசனைக் கமிட்டி மெம்பர்கள் பலரையும், வேறு பல பிரதிநிதிகளையும் கூடி ஆலோசனை செய்தும் பண்ணிய தீர்மானம் யாதெனில்: லண்டன் கூட்டம் முடிவு பெறும் வரை பாரத ஜன சபையின் வருஷாந்தக் கூட்டத்தை நிறுத்தி வைப்பது சரியில்லை.

இதுவரை ஜன ஸபைக் கூட்டங்களில் நிகழ்ச்சி பெற்று வந்த விதிகளின்படியே இனி மேலைக் கூட்டங்களும் நடைபெறக் கடவன" என்ற இவ் வறிக்கையின்படியே அவசியமான சீர்திருத்தங்க ளெல்லாம் கைகூடும் வரை இந்தியாவில் நமது வருஷாந்தக் கூட்டம் நடத்திவரக் கடவோமென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

காட்டிலாகா

காட்டு விதிகளின் அனுஷ்டான நெறியால் இந்தியா தீபகற்பத்து ஜனங்களுக்குள்ளே அபாயகரமான அதிருப்தி விளைந்திருப்பது கருதி, இவ் விஷயத்தைக் கருத்துடன் விசாரிக்க வேண்டுமென்றும், இவ் விதிகளின் கொடுமையைத் தணித்து இவற்றால் ஏழைகளுக்கு விளையும் ஹிம்ஸை குறையும்படி செய்யவேண்டு மென்றும் இந்தியா கவர்ன்மெண்டாரை மிகவும் பணிவுடனும் ஆத்திரத்துடனும் ப்ரார்த்திக்கக்கடவோமென்று இந்த ஜன ஸபை ஸங்கற்பம் செய்துகொள்ளுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

ஸர் வில்லியம் வெடர்பர்னுக்கும் ப்ரிட்டிஷ்
ஜன சபைக் கமிட்டிக்கும் நன்றி

சென்ற வருஷத்தில் ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியாரும் ஸர் வில்லியம் வெடர்பர்னும் இந்தியாவுக்குச் செய்த உபகாரங்களின் பொருட்டாக அவர்களுக்கு ஆழ்ந்த நன்றி செலுத்துவதுடன், இந்த ஜன ஸபையில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களில் மாத்திரமே யன்றி, இந்த ஜன ஸபையின் நோக்கத்திற்கு ஸம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைக் குறித்தும் அவர்களுக்கு எப்போதும் அனுப்பப்படுகிற எல்லா விஞ்ஞாபனங்களையும் சிரத்தையுடன் கவனித்துத் தமது உபகாரத்தின் எல்லையை விசாலப்படுத்திக் கொள்ளும்படி அவர்களை இந்த ஸபை வேண்டுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

மிஸஸ் ப்ராட்லா பானருக்கு அனுதாப வுரை

இந்தியாவின் நன்மைக்காக (காலஞ்சென்ற) சார்லஸ் ப்ராட்லா செய்த பேருபகாரங்களைக் கருதி அவர் விஷயத்தில் இந்த நாடு முழுதும் உள்ள நன்றி யுணர்வையும் அவருடைய அகால மரணத்தில் நிகழ்ந்திருக்கும் ஆழ்ந்த விஸ்தாரமான துக்கத்தையும் இந்த ஜன ஸபை எழுதி வைப்பதுமன்றி,

இந்தத் தீர்மானத்தின் ஒரு பிரதியை நமது ஸபாநாயகர் கையெழுத்திட்டு ப்ரிட்டிஷ் கமிட்டியின் மூலமாக (சார்லஸ் ப்ராட்லாவின் மகளாகிய) மிஸஸ் ப்ராட்லா பானருக்கு அனுப்பவேண்டு மென்று இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

தாதாபாய் நவுரோஜிக்கு முகமன்

இந்தியாவின் நன்மையின் பொருட்டு, சென்ற இருபத்தைந்து வருஷ காலத்துக்கு மேலாக தாதாபாய் நவுரோஜி செய்து வரும் பேருபகாரங்களைக் குறித்து நம்மவருக்குள்ள மதிப்பின் உயர்வையும், நன்றியறிவின் ஆழத்தையும் இங்கு பதிவு செய்வது மன்றி - அவரிடம் நமக்குள்ள அசையாத நம்பிக்கையைத் தெரிவிப்பது மன்றி - ஸமீபத்தில் நிகழப்போகிற இங்கிலீஷ் பார்லிமெண்ட் எலெக்ஷன்களில் ஸென்ட்ரல் பின்ஸ்பரிப் பிரதிநிதியாக அபேக்ஷித்து வெளிவந்திருக்கும் அவருக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று ப்ரார்த்திப்பதுடன் - காமன்ஸ் ஸபையில் ஸ்தானம் பெறும்வண்ணம் அவருக்கு ஸென்ட்ரல் பின்ஸ்பரியிலும் இங்கிலாந்திலுள்ள பிற இடங்களிலும் உதவி செய்திருப்போர், இனி உதவி செய்யப்போவோர் எல்லாருக்கும் இந்த ஜன ஸபை நெஞ்சார நன்றி யுரைக்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

லண்டன் காங்க்ரஸ் தள்ளிவைக்கப்பட்டது

1892ஆம் வருஷத்தில் இங்கிலாந்தில் நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாதபடி நமது ஜன ஸபையின் கூட்ட மொன்று (கால தேச வர்த்தமானங்கள் இணங்கி வந்தால்) நடத்தவேண்டுமென்று 1890-கல்கத்தா கூட்டத்தில் செய்த தீர்மானத்துக்கு அனுசரணையாகச் செய்த ஆரம்ப யத்தனங்களை இப்போது இங்கிலாந்தில் பொது எலெக்ஷன் நடக்கப்போவதை உத்தேசித்தும், ப்ரிடிஷ் கமிட்டியாரின் சிபார்சை அனுஸரித்தும் இதனுடன் நிறுத்திக்கொண்டு பொது எலெக்ஷனுக்குப் பிறகு தொடரவேண்டு மென இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியின் செலவு

தனி மனிதர் கொடைகளைத் தவிர 40000 ரூபாய் ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியின் செலவுக்குப் பகுத்து வைக்கப்படுமென்றும், பொதுக் காரியதரிசியின் கார்ய ஸ்தலத்து சிப்பந்திச் செலவுகளுக்கு ரூ. 6000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், கமிட்டியில் தீர்மானிக்குமாறு 1892-க்கு எல்லா வட்டத்தாரும் சந்தாக்கள் செலுத்தக் கடவரென்றும் இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

ஜன ஸபையின் பொதுக் கார்யதரிசிகள்

வரும் வருஷத்துக்குப் பொதுக் காரியதர்சியாகவும் உதவிப் பொதுக் கார்யதரிசியாகவும் முறையே ஏ. ஓ. ஹ்யூமையும், பண்டித அயோத்யாநாதரையும் மறுபடியும் இந்த ஜன ஸபை நியமனம் ஏற்பாடு செய்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

நமது ஜன ஸபையின் எட்டாங் கூட்டம் 1892ஆம் வருஷம் டிஸம்பர் 26ஆம் தேதியில் அலகபாத்தில் கூடவேண்டுமென்று இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

ஏழாவது ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றின.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

எட்டாம் அத்தியாயம்

1892 டிஸம்பர் 28-ல் அலகபாத்தில் கூடிய எட்டாவது ஜன சபைக் கூட்டத்தின் விசேஷங்கள்:

தர்பங்கா மஹாராஜா உதவிய லௌதர் மாளிகையிலும் அதன் சூழ்வுத் தோட்டத்திலும் எட்டாம் ஜன சபைக் கூட்டம் மேற்குறித்த தேதியில் கூடிற்று. 925 பிரதிநிதிகள் வந்தனர். 3500 நாற்காலிகளும் நிறைந்திருந்தன.

உபசார கணத்தின் தலைவராகிய பண்டித விசுவம்பர நாதர் உடம்பு சௌக்கிய மில்லாத நிலையில் செய்த உபந்யாஸம் சிறிதெனினும் சால நன்று. பிறகு உமேசசந்திர பானர்ஜி ஸபாநாயகராக வீற்றிருந்தார்.

சபாநாயகரின் உபந்யாஸம்

எட்டாம் ஜன ஸபைக் கூட்டத்து நாயகராகிய ஸ்ரீமான் உமேசசந்த்ர பானர்ஜி செய்த உபந்யாஸம் பின்வருமாறு:

> 1885ஆம் வருஷத்தில் பம்பாய் நகரத்தில் நமது ஜன ஸபையின் முதற் கூட்டம் கூடியபோது நானே அக்ராஸனம் வஹித்தேன். அப்போதும் இந்த டிஸம்பர் 28ஆம் தேதி யன்றுதான் கூட்டம் கூடிற்று. இந்த ஏழு வருஷங்களினிடையே இந்த ஸபையின் நோக்கங்கள் சிறிதளவு பலிதமடைந்திருக்கின்றன என்பதில் ஸந்தேக மில்லை. இந்த ஸபை உடைந்து போகாமல் மேன்மேலும் வெற்றியுடன் கார்யங்கள் செய்து வருவதைக் கண்டு சிலர் வியப்பெய்தி ஆலன் அக்டேவியன் ஹ்யூம் இதன் கார்யதர்சியாக இருக்கும் முகாந்தரத்தாலேதான் இது கைதேறி

நிற்கிறதென்றும், கேவலம் சுதேசிகளின் ப்ரயத்தனமாக இருந்தால் கைகூடி இராதென்றும் சொல்லுகிறார்கள். அந்த வார்த்தை உண்மை யன்று. ஏ. ஓ. ஹ்யூம் மஹான்; அவரால் நமது ஜன ஸபை மிக நன்மை யெய்திற்று. எனிலும் இவன், அவன், உவன் எனச் சுட்டிய சில மனிதரால் மாத்திரம் இந்த ஸபை நடைபெற்று வருவதாகக் கருதுதல் பெருந் தவறு. ப்ரிட்டிஷ் கல்வியாலும் ப்ரிட்டிஷ் ஸம்பந்தத்தாலும் இந்தப் பலன் சித்தியாயிற்று.

ஆசாரத் திருத்தமும் ராஜ்யத் திருத்தமும்

ஆசாரத் திருத்தங்களை விரும்பாதவர் ராஜ்யத் திருத்தங்களை விரும்பக் கூடாதென்று சொல்லுதல் பொறுக்க முடியாத மூடத்தனம். அவை யிரண்டுக்கும் எவ்வித ஸம்பந்தமும் கிடையாது. சில திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறேன்.

நீதி நிர்வாக இலாகாக்களைப் பிரிக்கவேண்டுமென்று நாம் கேட்கிறோம். இதற்கும் ஆசாரத் திருத்தத்துக்கும் என்ன ஸம்பந்தம்? சாசுவத நிலவரித் திட்டம், காட்டு விதிகளில் திருத்தம் - இவை முதலிய விவகாரங்களுக்கும் ஜன ஸமூஹ ஆசாரங்களுக்கும் என்ன தொந்தம்? நம் வீட்டு விதவைகளுக்கு மறுவிவாகம் செய்யாமலும், பிரதேசங்களைக் காட்டிலும் நமது கன்னிகைகளுக்கு அதிக பால்ய தசையில் விவாகம் செய்துகொண்டும், நாம் நம்முடைய நண்பர்களைப் பார்க்க வெளியே போகையில் நமது மனைவியரையும் பெண்களையும் உடனழைத்துச் செல்லாமலும் (நமது குமாரிகளை ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ் யூனிவர்ஸிடிகளில் படிப்புக்கனுப்பாமலும்) இருப்பதால் நமக்கு மேற்படி நீதி, நிர்வாஹப் பிரிவு முதலிய சீர்திருத்தங்கள் கொடுக்கக் கூடாதென்று சொல்லுதல் மடமை யன்றோ?

காலஞ்சென்றவர்களுக்கு நல்ல ஸ்மரணம்

பண்டித அயோத்யாநாதரும், ஜ்யார்ஜ் யூலும் இறந்து போயினர். அயோத்யாநாதர் நமது பொதுக் கார்யதரிசி என்ற பதவியிலும் வேறு பல வகைகளிலும் நமக்குக் கணக்கிடுதற்கரிதான பேருபகாரங்கள் செய்திருக்கிறார். ஜார்ஜ் யூலும் மறக்கத்தகாத

பெரு நன்மைகள் செய்திருக்கிறார். சென்னையிலிருந்து சேலம் ராமசாமி முதலியார் இறந்துபோன துக்கச் செய்தி வந்திருக்கிறது. அவர் நமக்காகப் பெருங் காளைபோலே உழைத்தார். அவர் முதிர்ந்த அறிவும் தீரமுமுடையவர். பின்னும் சென்னையிலே நமது ஜன சபைக்குத் தொண்டு புரிந்த நன் மக்களாகிய ஜீ. மஹாதேவ செட்டியும், ராமஸ்வாமி நாயுடுவும் இறந்துபோய் விட்டதாகத் தெரிகிறது. வங்காளத்தில் ப்ராணநாத பண்டிதரையும், அக்ஷய குமாரதாஸரையும் இழந்தது நமது ஜன ஸபைக்குப் பெரிய நஷ்டமாகக் கருதத் தகும்.

இறந்தவர்களின் குடும்பத்தாருடைய துக்கத்தை இந்த தேசப் பிரதிநிதிகளாகிய இந்த ஜன ஸபையார் பங்கிட்டுக் கொள்வதில் அவர்களுக்குச் சிறிதளவேனும் ஆறுதலுண்டாகுமென்று நம்புகிறோம்.

சட்டசபைச் சீர்திருத்தம்

லார்ட் க்ராஸ் கொண்டுவந்த இந்தியா சட்டசபைகளைப் பற்றிய மசோதா இரண்டு பார்லிமெண்டிலும் தேறி அதற்கு மஹாராஜாவின் அனுமதியும் கிடைத்து விட்டதென்பது நமக்கொரு ஸந்தோஷச் செய்தி. மேற்படி சட்டத்தை நடைபெறச் செய்தற்குரிய உபவிதிகள் இப்போது இந்தியா கவர்ன்மெண்டாரின் ஆலோசனையி லிருப்பதாக வைஸ்ராய் தமது யாத்திரையின்போது சென்னையில் செய்த ப்ரஸங்கத்திலிருந்து வெளியாகிறது. ஆனால், இந்த உபவிதிகளால் நமக்கு அந்தச் சட்டம் முழுநலந் தாராதவாறு தடுக்கும் பயன் ஏற்படுமென்று தோன்றுகிறது. இது மிகவும் பரிதாபத்துக்கிடமான விஷயம்.

காமன்ஸ் ஸபையில் தாதாபாய் நவுரோஜி

நமது மான்ய நாயகராகிய தாதாபாய் நவுரோஜி ஸென்ட்ரல் பின்ஸ்பரிக்கு மெம்பராகக் காமன்ஸ் சபையில் ஸ்தானம் பெற்றது நமக்குப் பேருவகை. இவர் பார்லிமெண்ட் சபையில் நமக்கும் ஸந்நதின்றி மெம்பரைப்போலே யாவர். ஆனால், பார்லிமென்ட் சபையில் நமக்கு ஓரிரண்டு மெம்பர்கள் வாஸ்தவத்திலேயே கொடுத்த போதிலும் நம்முடைய ஆசை தீரமாட்டாது.

நாம் கேட்பது பாரத தேசத்திலேயே ஜனங்களுக்கு உத்தரவாதம் சொல்ல வேண்டிய அரசாட்சி ஏற்படவேண்டு மென்பதன்றோ?

இந்தியாவின் அரசியல்

இப்போது இந்தியாவில் ஆட்சிபுரிவோர் தம்மை யன்றிப் புறத்தே பார்க்கும் உத்தரங் கூற வேண்டாதவர்களாக இருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் வெஸ்ட் மின்ஸ்டரில் இந்தியா மந்திரிக்கு ஜவாப்தாரி யென்பதையும் மேற்படி மந்திரி தன்னையும் ஒரு மெம்பராக உடைய மந்திரி சபைக்குப் பொறுப்பாளி யென்பதையும் நான் மறக்கவில்லை.

மேற்படி மந்திரி சபை காமன்ஸ் சபைக்கு ஜவாப்தாரி யென்பதையும் நானறிவேன். எனிலும் இந்த உத்தரவாதித் தன்மையின் அளவைக் கருதுமிடத்தே, நான் மேலே கூறியது அதிசயோக்தி யில்லை யென்பது தெளிவுபடும். மாஜி முதல் மந்திரி இந்தியா மந்திரியாக இருந்த காலத்தில் காண்பித்தது போன்ற திறமை யுடைய இந்தியா மந்திரி வாய்த்தால் நல்லதுதான். மற்றப்படி பொதுப்படையாக இந்தியா மந்திரி இந்தியா கவர்ன்மெண்டாரின் சொற்படி ஆகுவதே வழக்கமாக இருந்து வருகிறது. மந்திரி சபையோ விஸ்தாரணமான பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் கவலையில் முழுகிப்போயிருப்பதால், மந்திரி சபையார் இந்தியா விஷயங்களைக் கவனிக்க நேரமில்லாமல் இந்தியா மந்திரியின் இஷ்டப்படி விட்டுவிடுகிறார்கள். பார்லிமெண்ட் ஸபையிலே எப்போதும் பெரும் பகுதி மந்திரி சபை சொன்னபடிதான் கேட்கும்.

மேலும் இங்கிலாந்திலுள்ள கட்சிப் பிரதிகட்சிச் சண்டை களுடன் இந்தியா விஷயத்தைக்கொண்டு நுழைக்கக் கூடாதென்ற ஸங்கேதம் ஒன்று அந்த ஸபையிலுளது. ஆதலால் மந்திரிகளுக்கு மற்ற அம்சங்களில் எதிர்த்து வாதாடும் கக்ஷியார் இந்தியா விவகாரங்களை மந்திரி சபையாரின் இஷ்டப்படி விட்டுவிட்டு வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கிறார்கள். நமக்காகச் சிற்சில மெம்பர்கள் பேசத் தொடங்கினால் அவர்களைப் பெரும் பகுதியார் உபத்திரவக்காரராக நினைத்துப் புறக்கணிக்கிறார்கள்.

சட்டசபைச் சீர்திருத்தம்

சட்டசபைகளில் ஜனங்களின் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுத்தால் மாத்திரமே ஜனங்களுடைய உண்மையான எண்ணங்களும் குறைகளும் எவையென்று ராஜாங்கத்தார் தெரிந்துகொள்ள வழி ஏற்படும். இப்போது சட்டசபையில் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்ற விரும்பினால் அச் சட்டத்தைப் பற்றி ஒரு கார்யதரிசி எவரேனும் தமக்குப் பழக்கமான ஓரிரண்டு இந்திய கனவான்களைத் தனியே அழைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்கிறார். அவர்களோ பெரும்பாலும் மேற்படி கார்யதர்சியின் அபிப்பிராயங்களையே தமக்கு ஸம்மதமென்று சொல்லி விடுகிறார்கள். பிறகு சட்டம் நிறைவேறுகிறது. தேசத்து ஜனங்கள் அது சரியில்லை யென்று கூக்குரல் போடுகிறார்கள்.

அப்போது கவர்ன்மெண்டார் "ஹோ! நாங்கள் என்ன செய்வோம்? உங்களுடைய ஜனத் தலைவர்களையும் கலந்து யோசனை பண்ணினோம். அவர்கள் காட்டிய யோசனையின்படியே செய்திருக்கிறோம்" என்கிறார்கள்..... சட்டசபையில் நம்முடைய பிரதிநிதிகள் இருந்தால் இப்படி நடக்காது. நம் பிரதிநிதிகள் ராஜாங்கத்தாரிடம் அவர்களுடைய நெறிகளையும், அந் நெறிகளை அனுசரிக்கும் முகாந்தரங்களையும் குறித்து அப்போதப்போது கேள்விகள் போடுவார்கள். வைஸ்ராய் அல்லது கவர்னர் முதலிய பெரிய அதிகாரிகள் ஜனங்களிடம் நல்லெண்ண முடையவர்களாக இருந்தாலும் போதாது. சட்டத்தைச் செலுத்தும் கீழ் அதிகாரிகளின் கைவசத்திலேதான் ஜனங்களுடைய லாப நஷ்டங்கள் அகப்பட்டிருக்கின்றன. சட்டசபையில் நம்முடைய பிரதிநிதிகள் ஸ்தானம் பெற்றாலன்றி ராஜாங்கத்தார் ஜனங்களிடம் பொறுப்புடையோராக மாட்டார்கள்.

கல்வி

இந்த ஜன சபையார் கல்வி விஷயத்தில் ராஜாங்கச் செலவைக் குறைக்கலாகாதென்றும் மேன்மேலும் மிகுதிப்படுத்த வேண்டுமென்றும் பலமுறை வற்புறுத்திச் செய்த ப்ரார்த்தனை களுக்கு நேர் விரோதமாக இப்போது பம்பாய், வங்காளம் என்ற

இரண்டு மாகாணங்களிலும் உயர்தரப் படிப்புக்கு ஸர்க்கார் பணவுதவி செய்வதை நிறுத்திவிட்டமை கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம்.

ஆரம்பக் கல்விக்குப் பணம் செலவிடவேண்டி யிருப்பதால் உயர்தரக் கல்விக்குச் செலவிடும் பணத்தைக் குறைக்கும்படி நேரிட்டதென்று சொல்லுகிறார்கள். நான் ஆரம்பக் கல்வி அவசியமில்லை யென்று கருதவில்லை. ஆனால், தொழிற் கல்வியின் கிளைகள் உட்பட எல்லாவிதமான கல்விகளுக்கும் ஸர்க்கார் தூண்டுதல் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். ஆரம்பக் கல்வியை வளர்ப்போமென்று கூறி உயர்தரக் கல்வியை அழிக்க வழி தேடுவது சரியில்லை.

முடிவுரை

வங்காளத்திலே ஏழு ஜில்லாக்களில் பல முக்யமான வழக்குகளின் விஷயத்தில் ஜூரி விசாரணை இருந்ததை ராஜாங்கத்தார் எடுத்துவிட்டார்களென்று தெரிந்து தேச முழுதிலும் மிகவும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது. ஜூரி விசாரணை இப்போது வழக்கத்தின் கீழே இல்லாத ப்ரதேசங்களிலும் அதனை வ்ழக்கப்படுத்த வேண்டுமென்று நமது ஜன ஸபையில் பலமுறை வற்புறுத்தி யிருக்கவும், அதற்கு நேர் விரோதமாக, கவர்ன்மெண்டார் ஏற்கெனவே வழக்கத்தில் இருந்த இடங்களில்கூட அதனை அழித்தல் நாட்டில் மிகுந்த அதிருப்தி விளைவித்திருக்கிறது. ஆதலால் ஜூரி விசாரணையை நிறுத்திப் பிரசுரம் செய்த உத்தரவை உடனே ரத்து செய்துவிட வேண்டுமென்றும், நாடு முழுதிலும் ஜூரி விசாரணை ஏற்படுத்த வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஜூரி விசாரணை ஸம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விஷயத்தில் நம்மவர் கண்டனம் செய்வதை ஸர்க்கார் அதிகாரிகள் ஒரு பொருட்டாகக் கருதவேண்டிய அவசியமில்லை யென்றும், இதில் ஐரோப்பிய பிரஜைகளுக்கு எவ்விதமான பிரதிகூலமும் விளையாதென்றும், எனவே, இதில் ஐரோப்பியர் சேராதபடி இந்தியா தேசத்தார் மாத்திரமே, குழப்ப

முண்டாக்குகிறார்க ளாதலால் அதிகாரிகள் அந்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டியதில்லை யென்றும் கல்கத்தாவில் ராஜாங்கத்துக்குச் சார்பான ஒரு ஆங்கிலேயப் பத்திரிகை சொல்லுகிறது.

ஐரோப்பியர் நமது யத்தனங்களில் கலக்காதபடியால் நமது யத்தனங்கள் இகழ்ச்சிக் கிடமாகி விடுமா? முன்பு சில வருஷங்களுக்கு முந்தி ஜன சபையின் கிளர்ச்சி யெல்லாம் சில ஐரோப்பியர்களாலேயே தூண்டப்படுவதனாலும் சுதேசிகளால் இது ஸ்வப்ரயத்தனமாக நடத்தப்படாமையினாலும் இதைக் கவனிக்க வேண்டியதில்லை யென்று நம்முடைய எதிரிகள் சொன்னார்கள். இப்பொழுது தலைகீழாக மாற்றிச் சொல்லுகிறார்கள். இவர்களுடைய அபிப்பிராயங்களை எந்த மாகாணத்திலும் ராஜாங்கத்தார் அனுசரிக்கத் தக்கனவாகக் கொள்ள மாட்டார்க ளென்று நம்புகிறோம்.....

இங்கிலாந்தில் காங்க்ரஸ் கமிட்டியாகச் சேர்ந்து நமக்காகப் பாடுபடும் ஆங்கிலேயர்கள் தம்முடைய சொந்தச் செலவில் வேலை செய்வார்களென்று நாம் எதிர்பார்க்க முடியாதாகையால், அவர்களுக்கு நாம் மேன்மேலும் பணமனுப்பி ஆதரிக்க வேண்டும். கடைசி வரை உண்மையாக நின்றோமாயின், நாம் கேட்பதை யெல்லாம் ப்ரிட்டிஷ் ஜாதி கொடுக்கும்

என்று உமேசசந்த்ர பானர்ஜி உபந்யஸித்தார்.

அலஹபாத் (இலாஹாபாத்)தில் கூடிய 8ஆம் ஜன ஸபையில் "இந்தியா சட்டசபைகளின் சட்டத்தைக் குறித்த முதல் தீர்மானத்தை ராய்பஹதூர் அநந்தாசார்லு ப்ரேரணை செய்தார். அதனை அனுஸரித்துப் பேசுகையில் அவர் பாரத ஜனங்களுக்குப் பெயரளவாக மாத்திரமே யன்றி யதார்த்தமான பிரதிநிதி யாட்சி கொடுக்கப்படுமென்று தாம் எதிர்பார்த்திருப்பதாக இங்கிலிஷ் முதல் மந்திரி க்ளாட்ஸ்டன் கூறியதை எடுத்துரைத்தார்.

கோபாலகிருஷ்ண கோகலே உத்யோக விசாரணைக் கூட்டத்தைப் பற்றிய இரண்டாந் தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்.

> "நமக்கு வாக்குத் தத்தங்கள் கொடுத்துவிட்டதைப் பற்றி அதிகாரிகள் மனஸ்தாபப்படுவதுபோலே தோன்றுகிறது. இனி ஒருவேளை திடீரென்று அவர்கள் ஆதியில் மேற்படி வாக்குறுதிகள் செய்யும்போதே நிறைவேற்றக் கூடாதென்ற கருத்துடன் செய்ததாகக் கூறுவார்களாயின் அஃதெனக் கொரு வியப்பாகத் தோன்றாது"

என்று கோகலே சொன்னார்.

செலாவணி விஷயமான நான்காந் தீர்மானத்தைப் பிரேரேரித்து அதற்கனுஸரணையாகப் பேசுகையில் தீன்ஷா எதுல்ஜி வாச்சா,

> "இந்த ஸங்கட ஸமயத்தில் கவர்ன்மெண்டார் விரைவில் இவ் விஷயமான புதுச் சட்ட மொன்று செய்யப்போவதாக வதந்தி யுண்டாகிறது. அங்ஙனமாயின் இருளில் விளக்கின்றிக் குதிப்பது போல் எவ்விதமான செய்கையும் செய்து விடலாகாது. அதாவது இப்போதுள்ளவற்றைக் காட்டிலும் பெரிய தீமைகளை விளைவிக்கக் கூடிய சட்டமொன்றை பரபரப்பு மிஞ்சி ஏற்படுத்தி விடக்கூடாது"

என்றார்.

1873-ல் ஜெர்மானியார் வெள்ளியைச் செலாவணி யின்றிச் செய்ததினின்றும் விளைந்த பயன்களையும், "ஹோம் (உள் நாட்டுச்) செலவுகள்" எனப்படும் இங்கிலாந்துச் செலவுகளால் இந்தியாவுக் குண்டாகும் பெரிய நஷ்டங்களையும் 'ஷேர்மன்' சட்டத்தின் விளைவுகளையும், பணப் பிரமாணமாகப் பொன்னை வைத்திருப்பதால் நமது நாட்டுக்குண்டான நஷ்டங்களையும் விஸ்தாரமாக எடுத்துக் காட்டினார்....

தீர்மானங்கள்

இக் கூட்டத்தில் செய்த தீர்மானங்கள் பின்வருமாறு:

1. முதல் தீர்மானம்:

பிரதிநிதி ஆட்சி

ப்ரிட்டிஷ் பார்லிமென்ட் ஸபையாரால் சிறிது காலத்துக்குமுன் ஏற்படுத்தப்பட்ட "இந்தியா சட்டசபைகளின் சட்ட"த்தை ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளுவதுடன்,

மேற்படி சட்டத்துக்கு அப்போது இந்தியா உதவி மந்திரியாக இருந்தவரின் அனுமதியுடன் இப்போது முதல் மந்திரியாக இருப்பவர் சொல்லிய வியாக்கியானத்திலே. அதனால் பாரத ஜனங்களுக்கு யதார்த்தமான பிரதிநிதி யாட்சி கிடைக்குமென்று கூறினராயினும், அச் சட்டத்தில் ஜனங்களுக்குச் சட்டசபைப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கும் அதிகாரமுண்டென்று ஸ்பஷ்டமான பதங்களில் கூறப்படாதது கண்டு இந்த ஜன ஸபை மிகவும் வருந்துகிறது.

இந்தச் சட்டத்துக்கு இப்போது தயார் செய்யப்படும் உபவிதிகள் க்ளாட்ஸ்டன் காமன்ஸ் சபையில் சொல்லிய கருத்துக்கிணங்க, இந்த தேசத்ச⁻ருக்குத் தகுந்த நியாயம் கிடைக்கும்வண்ணமாகவே அமைக்கப்படுமென்று இந்த ஸபை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

மேலும் மற்ற சட்டங்களைப் போடுவதுபோல் இந்த உபவிதிகளையும் உறுதியாகு முன்பு ஸர்க்கார் கெஜட்டுகளில் பிரசுரம் செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்தனை செய்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

உத்தியோக விசாரணைக் கூட்டம்

உத்தியோக விசாரணைக் கூட்டத்தின் அறிக்கையின் மேலே, இந்தியா கவர்ன்மெண்டார் செய்த தீர்மானத்தைப் பற்றி இந்த ஜன ஸபை தனது ஆழ்ந்த மனஸ்தாபத்தைப் பதிந்து வைக்கிறது; ஏனெனில்,

1. விசாரணைக் கூட்டத்தாரின் சிபார்சுகளைப் பரிபூர்ணமாக நிறைவேற்றுவதானால் 1861ஆம் வருஷத்துக் கட்டளையின் அட்டவணையிலிருந்து பிரிக்கக் கருதிய உத்தியோகங்கள் ஸ்வதேசிகளுக்கென் றொரு தனி மண்டலமாக அமைந்திருக்கும். அதைவிட்டு கவர்ன்மெண்டார் தமது தீர்மானத்தில் மேற்படி உத்தியோகங்களை முழுதும் துண்டுபடுத்தி, 1870ஆம் வருஷத்துத் திட்டப்படி அவற்றுக்கு நியமனங்கள் செய்யப்படுமென்று வைத்திருக்கிறார்கள்;

2. "மாகாண வேலை" என்ற மண்டலத்துக்கு விசாரணைக் கூட்டத்தார் 108 நியமனங்கள் சிபாரிசு செய்திருக்க, கவர்ன்மெண்டார் 93 நியமனங்களே அதற்குக் காட்டியிருக்கிறார்கள்; அஸாம் மாகாணத்துக்குப் பகுத்து வைத்த தொகை குறிப்பிடவில்லை.

3. "ரெவின்யூ போர்ட்" (அரசிறைச் சங்கத்து) மெம்பர் ஸ்தானமும் வட்ட அதிகாரி (டிவிஷனல் கமிஷனர்) ஸ்தானமும் வங்காள முதலிய சில மாகாணங்களுக்கு சிபார்சு செய்யப்பட்டபடி கவர்ன்மெண்டார் நிறைவேற்றவில்லை.

4. "மாகாண வேலை" மண்டலத்தாருக்கு நியாயாதிபதி ஸ்தானங்களில் மூன்றிலொரு பங்கு சிபார்சு செய்யப்பட்டிருக்க, கவர்ன்மெண்டார் ஐந்திலொரு பங்குதான் சேர்த்திருக்கிறார்கள்.

மேலும், உத்தியோகப் பரீக்ஷைகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஸம காலத்தில் நடத்தினாலன்றி இந்த தேசத்தாருக்கு முழு நியாயம் ஏற்படாதென்ற தனது கொள்கையை இந்த ஜன ஸபை மீட்டுமொரு முறை தெளிவாகக் கூறுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

நீதி, நிர்வாகப் பிரிவு

ஒரே உத்தியோகஸ்தர் வசத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்கள் கலந்திருப்பதால் தேசத்து விளையும் பெருந் தீமையைக் கண்டு, இவ் விரண்டதிகாரங்களையும் அறவே பிரித்து விடுதல் மிகவும் அவஸரமென்ற தனது நிச்சயத்தை மீளவும் அறிவிப்பதுடன், இதனால் சில மாகாணங்களில் அதிகச் செலவு நேரினும் பொருட்டாக்காமல் தாமஸமின்றி கவர்ன்மெண்டார் மேற்படி பிரிவை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த ஜன ஸபை தெரிவிக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:

செலாவணி விஷயம்

செலாவணி விவகாரத்தில் நேரிட்டிருக்கும் அபிப்பிராய பேதங்களைக் கருதியும், அந்த விவகாரத்தின் முக்கியத் தன்மையைக் கருதியும், தேச நலத்துக்கு விரோதமான

மாறுதல் செலாவணியிலேனும் அளவைப் பணத்திலேனும் ஏற்படுத்தும்படி, அன்னிய ராஜாங்கத்தாரின் செய்கையால் கட்டாயம் நேர்ந்தா லொழிய, ப்ருஸல்ஸ் நகரத்து மஹாஸபையின் யோசனைகள் முடிவுபெறும் வரை, எவ்வித மாறுதலும் கவர்ன்மெண்டார் செய்யத் தகாதென்றும், தீர்மானமான செய்கை நடத்து முன்னே லார்ட் ஹெர்ஷல் கமிட்டியின் அபிப்பிராயங்களைப் பொது ஜனங்கள் ஆராய்ச்சி செய்யுமாறு பிரசுரப்படுத்த வேண்டுமென்றும் இந்த ஜன சபை தெரிவிக்கிறது.

5. ஐந்தாம் தீர்மானம்:

பல திரட்டு

1. உப்பு வரியைக் கடைசியாக ஏற்றின அளவாவது குறைக்கவும்;

2. ஐந்நூறுக்கு மேலென்பதை மாற்றி *1000* ரூபாய் வரும்படிக்கு மேலேதான் வருமான வரி விதிப்பதென்று வைக்கவும்:

3. 1890 மார்ச்சு மாதத்திய இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்த ராஜாங்க அறிக்கையின் *103, 104, 105* ப்ரகரணங்களில் காட்டிய சுங்க முறையைப் பரிபூர்ணமாக நிறைவேற்றும்படி மாகாண ஆட்சிகளை இந்தியா கவர்ன்மெண்டார் வற்புறுத்தவும்;

கிராமங்களில் சாராயக் கடைகள் வைக்கு முன்பு கிராமத்தாரின் இஷ்டத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கொரு சுலபமான வழி கண்டுபிடித்து நடத்தவும்;

4. சிறையோலை பிறப்பிவிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா கோர்ட்டாரின் முன்னே ஒப்புவிக்கும்படி கேட்க அதிகார முண்டென்று விசாரணை நீதிச் சட்டத்தில் ஒரு நிபந்தனை சேர்க்கவும்;

5. போலீஸ் இலாகாவில் கீழ்ஸ்தானங்களில் சிப்பந்திகளின் தொகையைக் குறைப்பதனாலும், சம்பளத்தையும் யோக்யதாம்சங்களையும் மிகுதிப்படுத்துவதனாலும், ஆள்

சேர்ப்பதில் மிகுந்த ஜாக்கிரதை செலுத்துவதனாலும், உயர்ந்த உத்யோகங்களில் இப்போதுள்ள உதவிப் பொதுப் பரிசோதகர், மணியகாரர், உதவி மணியகாரர் (டிப்டி ஸூபரின்டென்டென்ட்) முதலிய உத்யோகஸ்தர்களில் பெரும் பகுதியோரைக் காட்டிலும் அதிகத் திறமைகளும், நாட்டில் மதிப்புள்ள ஜன வகுப்புக்களுடன் அதிகப் பழக்கமும், ராணுவ டம்பங்களிலே குறைவு முடைய மனிதரை நியமிப்பதனாலும், அந்த இலாகாவை வேரோடு சீர்திருத்தமும்;

6. ஆயுதச் சட்டத்து விதிகளை மாற்றி, அவ்விதிகள் இந்நாட்டில் வசிப்போர், பார்க்க வந்தோர் - எல்லாருக்கும் ஜாதி மத வர்ண பேதங்களில்லாமல் பொருந்தும்படிக்கும்; காட்டு மிருகங்கள் வழக்கமாக மனித உயிர்களையும், கால்நடைகளையும், பயிரையும் அழிக்கும் இடங்களில் அனுமதி யுத்தரவுகள் தாராளமாகப் பிறப்பிவிக்கும்படிக்கும்;

புதுவிதிகளின்படி பிறப்பிவிக்கும் எல்லா அனுமதி யுத்தரவு (லைஸென்ஸ்)களும் ஒருவனுடைய ஆயுள் முழுமைக்கும் பயன்படும்படிக்கும், கெட்ட உபயோகம் ருஜுவானாலன்றி அவை மீட்கப் படாமலிருக்கும்படிக்கும், அவைகள் கொடுபடும் மாகாண எல்லை முழுதிலும் உபயோகமாகும்படிக்கும் ஏற்பாடு செய்யவும்;

7. பாரத நாட்டில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபனம் செய்து அவற்றில் நம்மவர் திறமைக்கும் யோக்யதாம்சங் களுக்கும் தக்கபடி முறையே ஸன்னது பெற்ற அல்லது பெறாத உத்தியோகஸ்தராக பாரத சேனையில் நியமனம் பெறுவதற்குரிய படிப்பும் பழக்கமும் ஏற்படுத்தவும்;

8. ராஜ்யத்திலுள்ள யுத்தப் பிரியரான ஜாதியாரைத் திரட்டி உள்நாட்டுச் சேனை யொன்று சமைக்கவும்;

9. ப்ரித்தானியாவில் இருப்பதுபோல் இங்கும் பாரத ஜனங்கள் சேர்ந்த ஸ்வேச்சைக் காப்புப் (வாலன்டீர்) படை யொன்று திரட்டவும்; - வேண்டுமென முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் செய்த தீர்மானங்களை இந்த ஜன ஸபை மீளவும் அழுத்தமாக உறுதி செய்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

ஜூரி விசாரணை

ஜூரி விசாரணை விஷயத்தில் கவர்ன்மெண்டாரின் ஸமீபகாலச் செய்கைகள் இந்த ஜன ஸபைக்கு மிகவும் அச்சந் தருகின்றன ஆதலாலும்;

விசேஷமாக, வங்காளம், அஸ்ஸாம் மாகாணங்களின் கவர்ன்மெண்டார் முக்கியமான குற்றங்களில் பெரும் பகுதிக்கு ஜூரி விசாரணை கிடையாதென்று திட்டஞ் செய்தது நமக்கு மிகவும் கலக்கந் தருகின்றது ஆதலாலும்;

அச் செய்கை அபிவிருத்திக்கு விரோதமாகவும், அதோமுகமாகவும், ஜனங்களுக்குப் பிரதிகூலமாகவும் உள்ளதென்று காட்டி இந்த ஜன ஸபை மிகவும் மரியாதையுடன், ஆனால் உறுதியுடன் கண்டனம் செய்வதுமன்றி;

இந்த வழியை இந்தியா கவர்ன்மெண்டாரேனும், தவறினால் இங்கிலாந்திலுள்ள கவர்ன்மெண்டாரேனும் மாற்றி விடவேண்டு மென்றும்;

பழைய ஜன ஸபைக் கூட்டங்களில் தீர்மானஞ் செய்தபடி ஜூரி விசாரணை இப்போது வழக்கத்தி லில்லாத இடங்களிலும் அதைப் பரவுமாறு செய்தால் மாத்திரமே, ப்ரிட்டிஷ் இந்தியாவில் (குற்ற விசாரணை நீதி நடைபெறும் அதிருப்திக் கிடமான மாதிரியை உத்தேசித்து) ஜனங்களுக்குக் காப்புண்டாகுமாதலால் அதனைப் பரவச் செய்ய வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

ராணுவச் செலவில் ஏற்றம்

இங்கிலாந்துக்கும் ஐரோப்பாவிலுள்ள வேறு பல பெரிய ராஜ்யங்களுக்கு முள்ள பரஸ்பர ஸம்பந்தங்களைக் கருதி, ஸாம்ராஜ்ய தந்திர மொன்றைப் பின்பற்றி, இந்தியாவின் இயற்கைக் காப்பெல்லைகளுக்குப் புறத்தே நடத்தும் ராணுவச் செயல்களாலேதான், பெரும் பகுதி 1885-86 வருஷ முதலாக, நாட்டு ராணுவச் செலவு ப்ரமாதமாக ஏறிப்போய் விட்டதென்ற

விஷயத்தை யோசனை பண்ணி, மேற்படி செலவில் சரியான பாகம் ப்ரிட்டிஷ் அரசிறையிலிருந்து கொடுக்க வேண்டு மென்றும், அதற்குத் தக்கபடி இந்தியா அரசிறையில் அந்தச் செலவைக் குறைத்துவிட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

கவர்ன்மெண்டும் உயர்தரப் படிப்பும்

தேசக் கல்வியின் தற்கால நிலையில் உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் பொருளுதவி செய்வதை எவ்வகையிலும் நீக்குதல் பெருந் தவறென்று மிகவும் அழுத்தமாகத் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுடன், முந்திய ஜன சபைக் கூட்டங்களில் கேட்டபடி, எல்லாவிதமான கல்விகளிலும் ராஜாங்கச் செலவை அதிகப்படுத்துதல் அவசிய மென்பதையும், கல்வித் துறைகளில் மிகப் பிரதானமாகியவற்றுள் ஒன்றாகிய தொழிற் கல்வியை வளர்க்கும் பொருட்டாக, நாட்டின் தற்காலத் தொழில் நிலையைக் குறித்து விசாரணை செய்யுமாறு கலப்பு விசாரணைக் கூட்டம் நியமித்தல் உசித மென்பதையும் இந்த ஜன ஸபை வற்புறுத்திக் கூறுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

இந்தியாவின் வறுமையும் பொருள் நிலைமைச் சீர்திருத்தங்களும்

1891ஆம் வருஷத்து மூன்றாந் தீர்மானத்தை இங்கு மீளவும் பலமாக உறுதி செய்வது மன்றி; தேசத்து ஜனத்தொகையில் ஐந்நூறு லக்ஷத்துக்குக் குறையாமல் எப்போதும் பஞ்ச ஸ்திதியில் வருந்துவதையும் ஒவ்வொரு பதிற்றாண்டிலும் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் பசியால் மாண்டு போவதையும் கருதி, ராஜாங்கச் செலவை அதிலும் முக்கியமாக ராணுவச் செலவை - மிகவும் குறைத்துவிட வேண்டுமென்றும்;

நிலத் தீர்வை அடிக்கடி - ஸமீபத்தில் 10, 12 வருஷங்களுக் கொரு முறை - மாறிக்கொண்டு வருவதனால் நாட்டு விவசாயத் தொழிலை முதலாளிகளும் தொழிலாளிகளும் அபிவிருத்தி செய்ய விரும்புதல் அஸாத்யமாவது மன்றி, அத் தொழில்

அபிவிருத்தியாகும்வண்ணம் முப்பது வருஷங்களுக்கு முந்தியே வாக்களித்தபடி, நிலத் தீர்வையில் உறுதியும் சாசுவதத் தன்மையும் ஏற்படத்தக்க திட்டங்கள் உடனே செய்யப்பட வேண்டுமென்றும்;

விவசாய பாங்கிகள் (வட்டிக் கிடங்குகள்) ஸ்தாபிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்வது மல்லாமல்; இப்போது நடைபெற்றுவரும் அரசாட்சி முறை நல்லெண்ணமுடைய தென்பதில் ஆக்ஷேபமில்லை யெனினும், அதனிடமுள்ள (அதிருப்தி விளைக்கும்) குறைவுகளால் தேசத்தில் நடைபெறும் உயிர்ச் சேதத்தைத் தொடரவிடாமல், முன்னும் இப்போதும் நாம் ஆத்திரத்துடன் ஆதரிக்கும் சீர்திருத்தங்களைக் கொடுக்குமாறு வற்புறுத்தும்படி இந்த ஜன ஸபை ப்ரித்தானிய, ஐரிஷ் ஜனங்களை ஆவலுடன் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

காட்டிலாக்காத் திருத்தம்

1891ஆம் வருஷத்து ஜன ஸபையின் 11ஆம் தீர்மானத்தை இங்கு முற்றிலும் அங்கீகாரம் செய்வதுடன்;

காட்டு விதிகளின் அனுஷ்டான முறையில் - முக்யமாக இந்தியா தீபகற்பத்தில் விளைந்திருக்கும் பலமான அதிருப்தியைக் கருதி - இந்தியா கவர்ன்மெண்டார் ஜாக்கிரதையுடன் ஆராய்ச்சி செய்யும்படிக்கும், அந்த இலாகாவின் கொடுமையைத் தணித்து அதனால் ஜனங்களுக்கு நேரும் உபத்திரவத்தைக் குறைக்கும்படிக்கும் மேற்படி தீர்மானத்திற் கண்ட ப்ரார்த்தனையை இந்த ஜன சபை மீளவும் வற்புறுத்துகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

உத்தியோக விசாரணைக் கூட்டத்தின் ஸம்பந்தமாக பார்லிமெண்ட் ஸபையாருக் கொரு விண்ணப்பம்

உமேசசந்திர பானர்ஜி, பிரோஸ்ஷா மேத்தா, ஸுரேந்தரநாத பானர்ஜீ, அநந்தாசார்லு இந் நால்வரும் ஒரு கணமாகக் கூடிக் கீழே காண்பித்த மாதிரியில் ஒரு விண்ணப்பம்

தயார் செய்து நமது ஸபையின் பெயரால் அதில் ஸபாநாயகர் கையெழுத்திட்டு, தாதாபாய் நவுரோஜிக் கனுப்பி, அவர் மூலமாகப் பார்லிமென்ட் ஸபையில் கொடுப்பிக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

விண்ணப்பம்

ப்ரிட்டிஷ், ஐரிஷ் ஜனங்களின் கனம் பொருந்திய ஸாமான்யப் பிரதிநிதிகள் கூடிய பார்லிமெண்ட் ஸபையாருக்கு 1892ஆம் வருஷம் டிஸம்பர் மாஸம் அலஹபாதில் நடைபெற்ற ஜன ஸபைக் கூட்டத்தின் சபாநாயகரும் அங்கத்தாருமாகிய நாங்கள் வணக்கத்துடன் செய்துகொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால்,

1. (எட்டாம் பாரத ஜன ஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தொரு தீர்மானத்துக் கிணங்க) இந்த தேச முழுதிலும் உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையின்மீது செய்யப் பட்டிருக்கும் உத்தரவுகளினால் மிகுந்த மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிற தென்பதை உங்களுடைய கனந்தங்கிய சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

2. ராஜாங்க உத்தியோகங்களில் பாரத தேசத்து ஜனங்களை அதிகத் தொகையிலும் உயர்ந்த படிகளிலும் நியமிக்க வேண்டுமென்ற வேண்டுதல்களுக்கு முழு நியாயம் செய்யக் கூடியதும், கூடிய வரை முடிவாக அனுஸரிக்கத்தக்க வழிகளைக் காட்டுவதுமாகிய யோசனை யொன்று தயார் செய்யும்படி இந்தியா கவர்ன்மெண்டார் உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரை வேண்டினர். ஆனால், அந்தக் கூட்டத்தாரின் காரியங்களின் முடிவிலே அவ்விரண்டு பயன்களும் நிறைவேறவில்லை. திட்ட உத்தியோக நியமனங்களை ஒழித்துவிட்டனர்.

1870-ம் வருஷத்துத் திட்டத்தில் ஜனங்களுக்குக் கொடுத்த வரத்தை முழுதும் அனுபவிக்க இடமேற்படவில்லை. விசாரணைக் கூட்டத்தை நியமிக்கும்போது செய்த உத்தரவினிடையே, "1870-ம் வருஷத்துத் திட்டம் மிக விசாலத் தன்மையும் உதார குணமும் உடையது. இதுவரை ஒப்பந்த உத்தியோக மண்டலத்துக்கு மாத்திரமே திறக்கப்பட்டிருந்த உத்தியோகம் எதுவும் இனி சுதேசிகளுக்குக் கிடைக்கக்கூடிய விதிகளை இந்தியா

கவர்ன்மெண்டாரும், இந்தியா மந்திரியும் சேர்ந்து, நிருபிக்கலாமென்று மேற்படி திட்டம் அதிகாரம் கொடுக்கிறது" என்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். ஆனால், ஏற்கெனவே சுதேசிகளுக்குக் கிடைக்கத்தக்கனவாக இருந்த உத்தியோகங்களின் தொகை இப்போது குறைவு பட்டிருப்பதே இந்த விசாரணைக் கூட்டத்தினால் விளைந்த பயனாகிவிட்டது.

3. உத்தியோகப் பரீக்ஷைகளை இந்தியாவிலும், இங்கிலாந்திலும் ஸம காலத்தில் நடத்துவதைக் குறித்தும் மேற்படி கூட்டத்தின் அறிக்கையிலாவது, கவர்ன்மெண்டாரின் மேலுத்தரவிலாவது சரியான திருப்தி தரக்கூடிய வார்த்தை யொன்றுமில்லை. விசாரணைக் கூட்டத்தாரின் முன்னே சொல்லப்பட்ட சாட்சியத்தில் முக்யாம்சம் ஸம காலப் பரீக்ஷைகளுக்குச் சார்பாகவே யிருந்தமையும், சாட்சிகளில் பெரும்பாலோர் இவற்றுக் கனுகூலமாகச் சொல்லியதும் இங்கு கவனிக்கத் தக்கன.

4. உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையின்மீது இந்தியா கவர்ன்மெண்டார் செய்திருக்கும் தீர்மானத்தால் நாடெங்கும் மிகுந்த அதிருப்தி பரவி யிருப்பதைக் கருதி இவ் விஷயத்தை நாங்கள் அதிக அவசரமாகப் பார்லிமெண்டார் முன்னே தெரிவிக்கும்படி நேரிட்டது. இந்த தேசத்து ராஜாங்க உத்தியோகங்களில் சுதேசிகளை நியமனம் செய்யும் விஷயத்தில் 1870ஆம் வருஷத்துக் கட்டளையைப் பரிபூர்ணமாக நிறைவேற்றும்படி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு உத்தரவு கொடுக்குமாறு பார்லிமெண்ட் சபையாரை இந்த ஜன சபை ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

பஞ்சாப் மாகாணத்துக் கொரு சட்டசபை

1885ஆம் வருஷத்தில் பம்பாயில் கூடிய ஜன ஸபையின் முதற் கூட்டத்தில் கேட்டபடி பஞ்சாப் மாகாணத்திற்கு ஒரு சட்டசபை ஸ்தாபனம் செய்தல் அந்த மாகாணத்தின் நல்லாட்சிக்கு இன்றியமையாத அவசியமென்றும், ஐக்கிய

மாகாணங்களில் சட்டசபை வைத்திருப்பதைக் கருதி தாமதம் செய்யாமல் பஞ்சாபுக்கும் சட்டசபை வைக்க வேண்டுமென்றும் இந்த ஜன சபை அபிப்பிராயப்படுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கணத்துக்கு நன்றி

ஸர் வில்லியம் வெட்டர்பர்னும் ப்ரிட்டிஷ் கணத்து மெம்பர்களும் சென்ற வருஷத்தில் இந்தியாவுக்குச் செய்த உபகாரங்களின் பொருட்டாக அவர்களுக்கு இந்த ஜன ஸபை மனமார நன்றி செலுத்துவது மன்றி, அவர்கள் நமது ப்ரிட்டிஷ் கணத்தைப் புதிதாகச் சமைத்திருப்பதையும், கணத்தின் கார்யஸ்தலத்திலும் "இந்தியா" பத்திரிகை விஷயத்திலும் செய்திருக்கும் புதிய ஏற்பாடுகளையும் இந்த ஜன ஸபை முழுதும் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறது;

மேலும் ப்ரிட்டிஷ் கணத்தின் கார்யதர்சியாக வில்லியம் டிக்பி இருந்தபோது நமக்கவர் செய்த உபகாரங்களைக் கருதி அவருக்கும் நன்றி கூறுகிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

வியபிசாரத்தை ஸர்க்கார்ச் சட்டம் அங்கீகரித்தல்

சிறிது காலத்துக்கு முன்பு இந்தியா கவர்ன்மெண்டார் செய்த சுத்திச் சட்ட விஷயத்தில் காமன்ஸ் ஸபையார் விழிப்புடனிருப்பது பற்றி அவர்களுக்கு இந்த ஜன ஸபை நன்றி செலுத்துவதுடன், இந்தியாவில் வியபிசாரத்துக்குத் தூண்டுதலாக ராஜாங்கத்தார் எவ்விதமான திட்டமும் செய்யத் தகாதென்று கண்டனம் செய்கிறது.

15. பதினைந்தாம் தீர்மானம்:

லண்டன் கூட்டம் தள்ளிவைக்கப்பட்டது

*1892*ஆம் வருஷத்தில் இங்கிலாந்தில் நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் (கால தேச வர்த்தமானங்கள் நேரே இருந்தால்) நமது ஜன சபையின் கூட்டமொன்று நடத்த வேண்டுமென்பதாக *1890*-ல் கல்கத்தா கூட்டத்தில்

செய்துகொண்ட தீர்மானப்படி தொடங்கி யிருக்கும் யத்தனங்களை இப்போது நிறுத்தி, 1893ஆம் வருஷத்துக் கூட்டம் கழிந்த பிறகு மேல் நடத்தலாமென்று இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

16. பதினாறாம் தீர்மானம்:

ஸென்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகளுக்கு நன்றி யுரை

காமன்ஸ் சபையில் தாதாபாய் நவுரோஜியைத் தம்முடைய பிரதிநிதியாக நியமித்தது பற்றி இந்தியா முழுமைக்கும் முகமாகிய இந்த ஜன ஸபை ஸென்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகளுக்கு நன்றி செலுத்துவதுடன், தாதாபாய் நவுரோஜி இந்த நாட்டிற்குச் செய்திருக்கும் உபகாரங்களைக் கருதி அவரிடம் தனக்குள்ள உயர்ந்த மதிப்பையும் ஆழ்ந்த நன்றியையும் அசையாத நம்பிக்கையையும் மீட்டும் அறிவிப்பதுமன்றி, அவரைக் காமன்ஸ் சபையில் இந்தியாவுக்கு மெம்பராகவே கருதுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

ஜன ஸபையின் சாசுவத நிதி

இப்போது கலைக்கப்போகிற நிலைமையிலிருக்கும் "புதிய கிழக்கு வட்டிக் கிடங்குக் கூட்டம்" என்ற பாங்கியில் போட்டிருக்கும் சாசுவத நிதிப் பொறுப்பாளிகள் அதிலிருந்து குறைந்த பக்ஷம் 500 பவுனாவது உடனே ப்ரிட்டிஷ் கமிட்டிக்கு அனுப்பிவிட்டு, அந்தச் செலவை சாசுவத ஜன ஸபைக் கமிட்டிகளின் சந்தாக்களால் ஈடுசெய்து கொள்ளும்படி இந்த ஜன ஸபை அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவு

ப்ரிட்டிஷ் கணத்தாரின் வேண்டுகோளுக் கிணங்கி, 2800 பவுனுக்குச் சமானமான தொகை 1892-93-ல் ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுக்குப் பகுத்துக் கொடுக்க வேண்டு மென்றும், அதற்காக இதுவரை வசூலான தொகையைக் கழித்துக் கொண்டு மிச்சத்தைச் சாசுவதக் கமிட்டியாருடன்

ஆலோசனை செய்து அதன்படி அவர்களிடம் பகுத்து வசூலிக்க வேண்டுமென்றும், இயன்ற வரை விரைவாக இங்கிலாந்துக்குப் பணம் அனுப்பவேண்டுமென்றும் இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

கார்யதரிசிகள்

வரும் வருஷத்துக்கு ஜன சபையின் பொதுக் காரியதரிசியாக ஏ. ஓ. ஹ்யூமையும், உதவிக் காரியதரிசியாக அநந்தாசார்லுவையும் இந்த ஜன ஸபை நியமனம் செய்கிறது.

20. இருபதாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

1893-ம் வருஷத்தில் கிறிஸ்மஸ் பண்டிகைக் கப்பால் பின்னிட்டுக் குறிக்கக் கூடிய தேதிகளில் அமிருதஸரஸ் நகரத்தில் பாரத ஜன சபையின் ஒன்பதாங் கூட்டம் நடக்கக் கடவதென்று இந்த ஜன சபை நிச்சயித்துக் கொள்ளுகிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

தர்பங்கா மஹாராஜாவுக்கு நன்றி

தமது மாளிகையையும் தோட்டத்தையும் இந்த ஜன சபைக் கூட்டத்திற்கிடமாக விட்டு வைத்தது பற்றி தர்பங்கா மஹாராஜாவுக்கு இந்த ஜன ஸபை நன்றி தெரிவிக்கிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

ஜன சபையின் சாசுவத நிதி

ஜன சபையின் சாசுவத நிதிப் பொறுப்பாளிகளில் ஒருவராக இருந்து காலஞ்சென்ற அயோத்யாநாதரின் ஸ்தானத்தில் பண்டித விசுவம்பரநாதர் நியமனம் செய்யப்பட்டிருப்பதை இந்த ஜன சபை ஊர்ஜிதப்படுத்துகிறது.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று

❖

ஜன சபையின் சரித்திரம்

ஒன்பதாம் அத்தியாயம்

ஒன்பதாம் ஜன ஸபைக் கூட்டம் லாஹோர் – 1893

நமது ஜன சபையின் ஒன்பதாங் கூட்டம் அமிர்தஸரஸ் நகரத்தில் நடத்த வேண்டுமென்று எட்டாங் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி நடக்கவில்லை. பஞ்சாப் மாகாணத்து ராஜதானியாகிய லாஹோர் (லவபுரி) நகரத்தில் கூடிற்று. 867 பிரதிநிதிகளும், சுமார் 4000 பேர் (மொத்த) சபையினரும் கூடினர். உபசார கணத் தலைவராகிய ஸர்தார் தயாளஸிங் மஜீத்தியாவின் உபந்யாஸத்தை அவர் வாத நோயால் வருந்தியபடியால் அவருக்குப் பிரதியாக லாலா ஹர்கிஷன் (ஹரிக்ருஷ்ண) லால் வாசித்தார்.

தாதாபாய் நவுரோஜி ஸபாநாயகராகத் தெரிந்தெடுக்கப் பட்டனர். ஏற்கெனவே பெரிய தேசாபிமானி யென்றும், ஜனத்தலைவ ரென்றும் புகழ்பெற்ற தாதாபாய் இந்த ஸமயம் புது கவுரவம் பெற்றுப் பார்லிமென்ட் ஸபையில் ஒரு மெம்பராகவும் இருந்தபடியால், நம்மவர் அவரை மிகவும் அன்புடன் வரவேற்று மகிழ்வெய்தினர்.

சபாநாயகரின் உபந்யாஸம்

அப்போது தாதாபாய் நவுரோஜி பேசிய பேச்சின் ஸாராம்சம் பின்வருமாறு:

ஆங்கிலேயர் தாம் யுத்தப் பிரியரான ஜாதியா ராகையால் தமக்கு தேசபக்தி, நீதி யபிமானம் முதலிய குணங்கள் இயற்கையிலேயே உண்டென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால், பஞ்சாபிகளும் அவர்களைப்போலவே ஆண்மை யுடைய ஜாதியா ரென்றும், எனிலும் மேற்படி ஆண்மையால் பஞ்சாபிகளுக்கு அற்பத்தனமான ஸ்வதேசத் துரோகம் முதலிய குணங்களே அமைந்திருக்கின்றன வென்றும், கதையில் ஒரு நாய் தானும் புல் தின்ன மாட்டாமல், தின்னக்கூடிய எருதையும் தின்ன வொட்டாமல் குலைத்ததுபோல், பஞ்சாபிகளாகிய நீங்கள் உயர்ந்த பரீக்ஷைகள் தேறமாட்டாதவர்களாக இருப்பது மாத்திரமே யன்றி ஸம காலப் பரீக்ஷைகள் இந்தியாவில் நடத்துவதே உங்களுக்கு ஸம்மதமில்லை யென்றும், இந்தியாவின் பொது அபிவிருத்திக்கே நீங்கள் விரோதிக ளென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அந்த வார்த்தை முழுத் தவ றென்பது நீங்கள் என்னை இந்த ஜன சபைத் தலைவனாக நியமித்ததிலிருந்து தெளிவாக ருஜுவாகிறது.

காசிநாத த்ரியம்பக தெலங்கர் இறந்துபோய் விட்டது பற்றி வருத்தப்படுகிறோம். அவருடைய ஸ்தானத்தில் மஹாதேவ கோவிந்த ரானடே நியமனம் பெற்றது பற்றி மகிழ்ச்சி யடைகிறோம்.

என்னைப் பார்லிமென்ட் மெம்பராகத் தெரிந்தெடுத்த ஸென்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகள் இந்த ஜன ஸபையினிடம் தமக்குள்ள அனுதாபத்தை உங்களிடம் தெரிவிக்கும்படி எனக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

நாம் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோதிகளில்லை யென்பதை அதிகாரிகளே அங்கீகாரம் செய்திருக்கின்றனர். தேசத்தில் உயர்ந்த மேதாவிகளும் நமது ஸபையில் கூடி யிருக்கின்றனர். நம்மை விரோதிகளாக்காமல் அனுகூலமாக வைத்துக்கொள்வதே ராஜாங்கத்துக்கு நல்லது.

ஸம காலப் பரீக்ஷைக்குச் சார்பாகச் சென்ற ஜூன் 2ஆம் தேதி பார்லிமென்ட் ஸபையில் செய்யப்பட்ட தீர்மானம் இத்தனை வருஷங்களாக நீங்கள் செய்த முயற்சிகளின் நற்பயனன்றோ?

[மேற்படி தீர்மானம் இந்த 1918-ம் வருஷம் வரையிலும் அனுஷ்டானத்துக் கொண்டுவர வழியில்லாமல் செத்தே போய்விட்டது.]

இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா உதவி மந்திரியாகிய ஜ்யார்ஜ் ரஸ்ஸல் ஆரம்பத்தில் எதிரிடையாகப் பேசினாராயினும், பின்னிட்டுச் சென்ற நாட்டுக் கணக்குச் சோதனையின்போது இத் தீர்மானத்தைப் பயன்படாமல் செய்ய வேண்டுமென்ற கொள்கை தமக்கில்லை யென்பதை அவர் தெளிவுறச் சொல்லி யிருக்கிறார்.....

தேச வைத்ய ஸ்தானங்களும், கல்வி யிலாகாவில் வைத்ய ஸ்தானங்களும் ராணுவ வைத்யர்களிடம் இருப்பது சரியில்லை. குடிவைத்ய மண்டலம் தனியாக ஏற்படுத்த வேண்டும்.

அதற்கும் இதர ஆட்சி உத்தியோகங்களில் நாம் எதிர்பார்த்திருப்பதுபோல் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலப் பரீக்ஷைகள் நடத்த வேண்டும். உயர்தரக் குடித்தச்சு ஸ்தானங்கள் ராணுவத் தச்சர் (என்ஜினீர்)களுக்குக் கொடுக்கப் படுவதும் சரியன்று.

இந்தியா விஷயங்களில் ப்ரிட்டிஷாரின் சிரத்தை

இந்தியா விஷயங்களில் ப்ரிட்டிஷாருக்குள்ள சிரத்தை அதிகப்பட்டு வருகிறது. எனக்குப் பார்லிமெண்டில் எல்லாக் கக்ஷியாரும் நல்வரவு கூறினர். நான் இங்கு புறப்பட்டு வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னே மிஸ்டர் டேவிட் (ஐரிஷ் கக்ஷித் தலைவரில் ஒருவர்) என்னை நோக்கி, "பார்லிமெண்ட் ஸபையில் அயர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற கொள்கை யுடைய மெம்பர்கள் அத்தனை பேரும் இந்தியா ஜனங்களுக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்க வேண்டுமென்பதில் உங்களுக்குச் சார்பாகவே நிற்கிறோ மென்பதை ஜன சபையில் உம்முடைய தோழரிடம் சொல்லும்" என்றார்...

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன், கெய்ன் முதலிய நண்பர்களின் முயற்சிகளால் இந்தியாவுக்கனுகூலமான பார்லிமெண்ட் கண மொன்று சமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அக்ராஸனாதிபதி ஸர் வில்லியம் வெட்டர்பர்ன். கார்யதர்சி ஹெர்பர்ட் ராபர்ட்ஸ். இந்தக் கமிட்டியில் இதுவரை சேர்ந்திருக்கும் மெம்பர்கள் கெய்ன், ஷ்வரன், வெட்டர்பர்ன், மக்ளோன், நவுரோஜி முதலிய பதினெட்டுப் பேர்.

சீர்திருத்தங்கள்

சட்டசபைச் சீர்திருத்தங்களின் விஷயத்தில் இப்போது செய்யப்பட்ட சட்டத்தை, அதற்கு மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொல்லிய வ்யாக்யானத்தின் கருத்துப்படி, உபவிதிகள் கூட்டி நிறைவேற்றி யிருந்தாலும் நமக்குத் திருப்தி உண்டாக இடமிராது. அதில் இப்போதுள்ள உபவிதிகளும் சேர்ந்து இந்த ஸபைகள் பெயர் மாத்திரம் தானேயன்றி ஜனங்களுக்கு இவற்றால் எவ்விதமான ஹிதமும் கிடையாமல் போய்விட்டது..... மேலும், இந்தியாவுக்கு நேராகவே பார்லிமென்ட் சபையில் ப்ரதிநிதிகள் நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் வறுமை

ஆனால், நீங்கள் விசாரணை செய்ய வேண்டிய விஷயங்கள் எல்லாவற்றிலும் அதிக முக்கியமானது பாரததேசத்தின் வறுமை விஷயம். இது பாரத ஜனங்களுக்கும் ப்ரித்தானிய ஆட்சிக்காரருக்கும் எதிர்காலத்தில் பெருந் தொல்லையாக விளையுமென்றஞ்சுகிறேன். இந்த மஹத்தான வறுமைக்கு இப்போதுள்ள உத்தியோகஸ்தரை நாம் பொறுப்பாளியாக்கவில்லை. இப்போதுள்ள முறைமையைப் பொறுப்பாளி என்கிறோம். இதை யுணராத அதிகாரிகள் பலர் நாம் தம்மைக் குறை கூறுவதாகத் தப்பெண்ணங் கொள்ளுகிறார்கள்.

ஆனால், முற்காலத்தில் லார்ட் லாரன்ஸ் போலவும் இப்போது சமீபத்தில் அரசிறை மந்திரிகளாக இருந்த லார்ட் க்ரோமர், ஸர் ஆக்லன்ட் கால்வின், ஸர் டேவிட் பார்பர் போலவும் பல புத்திமான்களான உத்தியோகஸ்தர் பாரத நாட்டின் கொடிய வறுமையை உணர்ந்து வெளிப்படக் கூறி யிருக்கிறார்கள். வருஷத்தில் ஒரு மனிதனுக்கு இந்நாட்டில் 20 ரூ. சராசரி வரவென்று நான் கணக்கிட்டேன்; 27 ரூ. சராசரி வரவென்று லார்ட் க்ரோமர் கணக்குச் சொல்லுகிறார். அங்ஙனம் அவர் கணக்கிட்டதற்குரிய ஆதாரங்களை உணர்த்தும்படி நான் லார்ட் க்ரோமரைக் கேட்டேன். அவர் உத்தரம் சொல்ல மறுத்து விட்டார்!

அப்படியே 27 ரூ. என்று வைத்துக் கொண்டாலும் அது எல்லாருக்கும் கிடைப்பதன்று. ஐரோப்பியத் தோட்டக்காரர், கைத்தொழில் முதலாளிகள், சுரங்கத் தலைவர் முதலிய ஐரோப்பியச் செல்வருக்கு வரும் வருமானமும் இந்தியாவின் வரவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதைக் கழிக்க வேண்டும். தேசத்தாரல்லாத உத்தியோகஸ்தரின் வரும்படிகளையும் அதில் கழிக்க வேண்டும். பின்னும் நமது தேசத்திலேயே செல்வமுடைய பகுதியாரின் அதிக வரவுகளையும் கழித்துப் பார்த்தால் ஏழைகளின் வருஷ வரும்படி எத்தனை பயங்கரமாகக் குறையும்?

நான் சொல்வதுபோல் 20 ரூ. என்று கணக்கிட்டாலும். அல்லது லார்ட் க்ரோமர் சொல்வதுபோல் 27 ரூபாய்க்கு மேலில்லை யென்று கணக்கிட்டாலும், இரண்டு வகையிலும் இது எத்தனை இழிவான நிலைமை பார்த்தீர்களா?

நூறு வருஷம் சுமக்கமாட்டாத செலவு செய்து ராஜ்யம் நடப்பித்தும் இந்த நிலையிலே இருக்கிறோம்! இது நீடித்து நிற்கத் தகுமா? ("தகாது", என்று சபையார் கூறினர்) "தொலையிலே இருந்து அன்னியர் ஆட்சி நடத்துவதனால் இந்தத் தீமைகள் விளைகின்றன" என்று ஸர் ஜான் ஷோர் சொல்லுகிறார்.

இந்தியாவின் கோடானு கோடி ஜனங்களை ஏழைகளாகவும் அடிமைகளாகவும் செய்து நாசமாக்கி ஆங்கிலேயர் அவர்களைக் கட்டிக் கொண்டு மூச்சு மூட்டுவதைக் காட்டிலும், அவர்களை விடுதலையும் செல்வமும் உடையவராக்கி அவர்களுடன் வியாபாரம் செய்வதனால் எத்தனையோ அதிக லாபம் ஆங்கிலேயருக் குண்டென்ற கருத்துடன் மக்காலேயும் பேசி யிருக்கிறார்.

மேலே கூறியபடி லார்ட் க்ரோமர் இந்த நாட்டு ஜனங்களுக்கு வருஷ மொன்றுக்குத் தலைக்குச் சராசரி ரூபாய் 27 என்று கணக்கிட்டது 1882ஆம் வருஷத்தில்.

அதே காலத்தில் இங்கிலாந்தில் சராசரி வருஷ வரும்படி ஒருவனுக்குப் பவுன் 33 (அதாவது 495 ரூபாய்); பிரான்ஸில் 345 ரூபா; ஐரோப்பாவிலுள்ள நாடுகளனைத்திலும் ஏழையாகிய துருக்கியில் 60 ரூபாய். இந்தியாவில் 27 ரூபாய்! இதற்கு வேறு

வியாக்கியானமும் வேண்டுமோ? மூடத்தனமாக நாமும் கவர்ன்மெண்டாரும் கண்ணை மூடிக்கொண்டு தூங்குவதில் பயனில்லை. இந்த வறுமையே நமக்கும் பெரிய விபத்து; அவர்களுக்கும் பெரிய விபத்து.

ராஜாங்கச் செலவு

மிகவும் பெரிய, மிகவும் செலவுக் கிடமான ஒரு ஐரோப்பிய ஸேனையும் ஐரோப்பிய உத்தியோக மண்டலமும் வைத்திருக்கிறோம். பாரத தேசம் தமது வசத்திலிருப்பதால் ஆங்கிலேயருக்கு அளவிறந்த லாபமும் பெருமையும் உளவென்றும், ஆதலால் பாரத தேசத்தின் ஆதிக்யத்தைத் தாம் கைவிடக் கூடாதென்றும் ஆங்கிலேய ராஜ தந்திரிகள் பலமுறை கூறி யிருக்கிறார்கள்.

அப்படி யிருக்கக் கீழ்த்திசையில் ஸாம்ராஜ்ய ஆட்சி யிருப்பதனால் கிடைக்கும் புகழும், லாபமும், மேன்மையும் இங்கிலாந்துக்கும், அந்த ஆட்சியைக் காப்பாற்றும் செலவு மாத்திரம் கடைசி தம்பிடி வரை இந்தியாவுக்கும் வேண்டுமென்று திட்டஞ் செய்தல் நீதியா?

அயர்லாந்தின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும்

ராஜாங்கச் செலவில் ஒரு பகுதி அயர்லாந்து தன் தகுதிக்குத் தக்கபடி செலுத்தும்படிக்கும், விசேஷச் செலவுகள் நேர்ந்தால் அவஸரத்துக் கிணங்கியவாறு தன் சக்திக்கியன்றது கொடுக்கும் படிக்கும், மற்றப்படி தன் வரவுகளை யெல்லாம் அயர்லாந்து தன் வசத்தில் வைத்துக் கொள்ளும்படிக்கும் விதி ஏற்பட்டிருக்கிறது. அயர்லாந்திலிருந்து உத்தியோகஸ்தர் பணத்தை வற்றடித்து வெளியே கொண்டு போவதில்லை. ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் லாபத்திலும் கீர்த்தியிலும் ஐரிஷ் ஜாதியாருக்குப் பங்குண்டு. ஐரிஷ்காரர் வைஸ்ராய்களாகலாம்; கவர்னர்களாகலாம்; ஸாம்ராஜ்யத்தில் ராணுவப் பதவி, ஆட்சி ஸ்தானம் எதுவும் அவர்கள் பெறலாம். பார்லிமென்ட் சபையில் அவர்களுடைய மெம்பர்கள் வீற்றிருக்கிறார்கள்.

பாரத தேசத்தாருக்கோ என்றால் அங்ஙனம் ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் லாபத்திலும் மஹிமையிலும் எவ்விதமான பங்கும் கிடையாது. நமது சொந்த நாட்டிலேகூடப் பெரிய பதவிகள் நமக்கில்லை. இங்கிருந்து பணம் அபரிமிதமாக வற்றடிக்கப்படுகிறது. இந்தியாவுக்கு பார்லிமென்ட் சபையில் ப்ரதிநிதி யில்லை.

இந்தியாவில் தீர்வை செலுத்துவோன் தலைமீதுள்ள சுமை

இங்கிலீஷ் ராணுவச் செலவுகளை நம்மீது சுமத்துதல் சரியில்லை யென்பதை லார்டு நார்த்ப்ருக், லார்ட் ரிப்பன் என்ற இரண்டு வைஸ்ராய்களும், ட்யூக் (ஆப்) ஆர்கில், லார்ட் க்ராஸ், லார்ட் கிம்பர்லி என்ற மூன்று இந்தியா மந்திரிகளும் லார்ட்ஸ் சபையில் சிறிது காலத்துக்கு முன்னே ஆதரித்துப் பேசினர். இந்தச் செலவுகளுக்கு நாம் பணங் கொடுப்பதை "அநியாயமாகவும், சட்ட விரோதமாகவும் இங்கிலாந்துக்கு இந்தியா இறுக்கும் தண்டம்" என்று ட்யூக் ஆப் ஆர்கில் சொல்லுகிறார். இருப்புப்பாதை முதலிய லாபகரமான தொழில்களை விலக்கிப் பார்த்தால் இந்தியாவின் மீதுள்ள நாட்டுக் கடன் ப்ரிட்டிஷ் அதிகாரத்தை ஆக்குவதற்கும் நிறுத்துவதற்கும் கொள்ளப்படுவது. இதற்கு இங்கிலாந்து கேவலம் ஜாமீனாவது கொடுக்க வேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்தது பயனின்றி முடிந்தது. இந்தியாவில் தங்கள் அதிகாரம் நீடித்திருக்குமென்பதில் ப்ரிட்டிஷாரே ஸந்தேஹப்படுவதாக இதனின்றும் இதர தேசத்தார் ஸம்சயிக்க இடமேற்படாதோ?

1870ஆம் வருஷத்தில் நமது வருஷச் செலவு 39,000,000 பவுனாக இருந்த காலத்திலேயே இந்தியா அளவுக்கு மிஞ்சிய பாரம் சுமக்கிறதென்று மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொன்னார். இப்போது அது 100க்கு 75 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது.

இதர விஷயங்கள்

நிர்வாஹ, நீதி இலாக்காக்களைப் பிரிவுபடுத்துதல் அவஸர மென்பதை அதிகாரிகள் அங்கீகாரம் செய்துகொண்டபடியே பிரித்து நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம்.....

வியபிசாரத்தை ராஜாங்கத்தார் ஆதரிப்பதைக் கண்டனம் செய்து காமன்ஸ் சபையார் செய்த தீர்மானத்தை இங்குள்ளோர் நிறைவேற்றா திருந்தனர். ஸ்டூவர்ட், ஸ்டான்ஸ் பீல்ட் என்ற பார்லிமெண்ட் மெம்பர்களும் மிஸஸ் பட்லரம்மாளும், வேறு சிலரும் விழிப்புடன் இவ் விஷயத்தைக் கவனித்துக் கொண்டு வந்தபடியால், அவர்களுடைய இடிப்பினால் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உத்தேசம் இப்போது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஏற்பட்டிருப்பது கண்டு ஸந்தோஷப் படுகிறேன். செலாவணி விஷயத்தைக் குறித்து என்னுடைய அபிப்பிராயங்கள் இன்ன வென்பதை நீங்கள் ஏற்கெனவே அறிவீர்கள். யூனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்கத்தார் "ஷேர்மான்" சட்டத்தை ரத்து செய்து விட்டதினின்றும், காலக்கிரமத்தில் செலாவணிக் குழப்பம் ஒருவிதமாகப் படியலாம். இங்கிலாந்தில் உபகாரச் சம்பளங்கள் பொன்னிலே கொடுக்கும்படி இங்கு ரூபாய்கள் அனுப்புவதிலுண்டாகும் நஷ்டத்தை எவ்வளவு செப்பிடு வித்தை ஜாலங்கள் பேசினாலும் நஷ்டமில்லை யென்று காட்டுதல் ஸாத்தியப்படாது. இங்கிலாந்தில் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கத்துக்குத் தக்கபடி நாம் அனுப்புந் தொகையில் ஏற்ற இறக்கங்க ளுண்டாகின்றன.

ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு உயர்ந்த பரிவர்த்தன ஈடுகொடுத்து ஏழைகளின் முதுகை ஒடிக்கும் சுமை இன்னும் பாரமாக்கப்பட்டது. அதனுடன் நிஷ்காரணமாக பாங்கிகளுக்கு 13,8000 பவுன் கொடுக்கிறார்கள்..... இதைப்போல் அநியாயம் இங்கிலாந்தில் நடக்குமா?

கவர்ன்மெண்டார் செய்த செலாவணி விதிகளால் யந்திரசாலைத் தலைவர்களின் தொழிலுக்குச் சில தடைகள் ஏற்பட்டால் அந்த நஷ்டத்துக்கு ஈடாக நாட்டு வரிப் பணத்தி லிருந்து தொகை யெடுத்து மேற்படி யந்திரசாலைத் தலைவரிடம் கொடுப்பது சரியா? அதுபோல் அவ்வித நஷ்ட ஈடு பாங்கிகளுக்குக் கொடுப்பது நியாயமாகுமா? பாங்கிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் லாபம் ஏற்பட்டிருந்த தென்று வைத்துக் கொள்வோம். அந்த லாபத்தைத் தீர்வை செலுத்தும் குடியானவருக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்களா?

செலாவணிக் கஷ்டங்களுக் கெல்லாம் மூலகாரணம், மேலே ஸர் ஜான் ஷோர் கூறியபடி "தொலையிலிருந்து அன்னியர் செய்யும் இயற்கைக்கு விரோதமான ஆட்சியின் தீய விளைவுகளே" யன்றி வேறல்ல. இந்தச் செலாவணிக் குழப்பத்தி லிருந்து புது வரி போட நேரிடும். கடன் யதேஷ்டமாக வாங்கிச் சுகமாகச் செலவு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

உப்புத் தீர்வையை அதிகப்படுத்துவார்களென்று தோன்றுகிறது. பருத்தித் தீர்வைகளை மறுபடி விதித்து உப்பு வரியைக் குறைத்து ஜனங்களுக்கு உபகாரம் செய்யும்படி அதிகாரிகளை வேண்டுகிறேன். இதனால் இந்தியாவின் பாரம் குறைந்துவிடுமென்று நான் கூறவில்லை. அந்த பாரம் சற்றே வலிய தோள்களைச் சாரும். லார்ட் ஸாலிஸ்பரி சொல்லியது போல் "இந்தியாவின் இரத்தத்தை வடித்தல் அவசியமென்று தீர்த்துவிட்டாலும், ஏற்கெனவே இரத்த நஷ்டத்தால் சோர்ந்துபோயிருக்கும் பகுதிகளில் கத்தியைப் போடாமல், போதிய அளவு உதிரமுள்ள அவயவங்களில் கத்தி போடுதலே விசேஷம்" என்பது மெய்யன்றோ? எல்லா பாரதவாஸிகளும் ஐக்கிய வுணர்ச்சியும் ஸஹோதர வுணர்ச்சியும் கொண்டு வாழ வேண்டும். ஹிந்து - மஹமதியர்களுக்குள்ளே எவ்விதமான சண்டைகளும் நேரிடக்கூடாது. கவர்ன்மெண்டார் பொதுவாக இருந்தால் அவர்களுக்கே நல்லது. நம்முடைய ஸம்மத மில்லாமல் ஆங்கிலேயரால் நம்மை ஆளமுடியாது.

லார்ட் ராபர்ட்ஸ் சொல்லுகிறார்: "பாரத ஸேனை எத்தனை வலிதும் நன்று சமைந்ததுமாக இருந்தாலும் அது யாதொரு பழுது மில்லாமல் ஸம்பூர்ணமாய் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகத் தொகை யுடையதாக இருப்பினும், ஜனங்களின் ஒற்றுமையும் திருப்தியுமே நமக்கு (எல்லா ஸேனைகளைக் காட்டிலும்) எப்போதும் பெரிய மூல பலமாகும்" என்கிறார்.

கடமை

நமது நாட்டுக்கு நாம் கடமை செலுத்த வேண்டிய வகை யாது? யஜ்நம் (வேள்வி) அதாவது பலி கொடுத்தல்; அஹத்தையும் பணத்தையும் காணிக்கை செலுத்த வேண்டும்.

இந்த பலிகள் பெரிதாகச் செய்தாலன்றிப் பெரிய காரியங்கள் ஸாதிக்க முடியாது. லண்டனில் நடக்கும் காங்கிரஸ் ஸம்பந்தமான முயற்சிகளுக்கு நாம் தக்கபடி பொருளுதவி செய்ய வேண்டும்.

"இந்தியா" பத்திரிகை மாஸ ஸஞ்சிகையாக இருப்பதை வாரப் பத்திரிகையாக மாற்றல் நல்லது. லண்டனில் காங்கிரஸ் கூட வேண்டும். நமது நியாயமான வேண்டுதல்களுக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இணங்குவார்களென்றே நம்பி யிருக்கிறேன்.

இக் கூட்டத்தில் வாச்சா, கோகலே, முதோல்கர், ஸுரேந்த்ரநாத் பானர்ஜி, கபர்தே, காளிசரண் பானர்ஜி முதலிய பல ப்ரமுகர் பல முக்யமான விஷயங்களைக் குறித்துப் பிரசங்கம் செய்தனர்.

இங்கிலாந்திற்கு உபகாரச் சம்பள ரூபமாகவும் இதரச் செலவுகள் ரூபமாகவும் இங்கிருந்து போகும் தொகை முன்பு வருஷம் தோறும் 70 லக்ஷம் பவுனாக இருந்தது முப்பது வருஷங்களில் வருஷத்துக்கு 160 லக்ஷம் பவுனாக ஏறிவிட்டதைக் கோகலே எடுத்துக்காட்டினார்.

இங்கிலீஷ் ராணுவச் செலவுகளுக்கு நாம் கொடுக்க வேண்டிய தொகை 20 லக்ஷம் பவுனாக இருந்தது. அப்போது 50 லக்ஷம் பவுனிலும் அதிகமாக ஏறி நின்றதையும் எடுத்துக் கூறினர்.

"ஜனங்களுடைய லாப நஷ்டங்களை அதிகாரிகள் துச்சமாகக் கருதுகிறார்க ளென்றும், "சென்ற ஒருசில வருஷங்களில் பசியினால் 20,000,000 ஜனங்கள் மடிந்து போய்விட்டன" ரென்றும், "40,000,000 ஜனங்கள் தினம் ஒருவேளை சோற்றுடன் கிடக்கிறார்க" ளென்றும், "இந்த 40,000,000 ஜனங்களின் மேல் இன்னும் அதிகத் தீர்வை போட்டு இவர்களுடைய அரிசியையும் உப்பையும் குறைத்து அந்தப் பணத்தால் பெரிய பெரிய சம்பளமுடைய ராஜாங்க உத்தியோகஸ்தர் இன்னும் அதிகச் சாராயமும் மாட்டுக் கறியும் வாங்கி உண்ணும்படி செய்தல் பெரிய வெட்கத்துக் கிடமான செய்தி" யென்றும், "நாம் பிறந்த நாடு

நமக்கும் சொந்தந்தா"னென்றும், "இதில் நாம் அடிமைகளைப் போல் வாழத் தகா" தென்றும் ஸுரேந்த்ரநாத பானர்ஜி எடுத்துக் காட்டினார்.

இந்தியாவின் தீராத பஞ்சத்தைப் பற்றிய ஏழாந் தீர்மானத்தை பிரேரணை செய்து அதற்கனுஸரணையாகப் பேசுகையில் பண்டித மதன்மோஹன் மாளவியர் பின்வருமாறு கூறினர்:

> "இந்தியா தேசத்தில் வறுமை அதிகப்பட்டு வருகிற தென்பதை ருஜுப்படுத்தி நாம் காட்டும் கணக்கை அங்கீகரிக்க மனமில்லாத பார்லிமென்ட் மெம்பர்கள் நேரே இந்த தேசத்துக்கு வந்து இங்கு கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பார்களாக! ஜனங்களின் பரிதாபகரமான கஷ்ட நிலை அவர்களுக்கு அப்போது நேர் நேராக விழிக்குத் தெரியும். சிப்பாய்ச் சண்டைக்கு முன்பு தேச மிருந்த நிலைமை எப்படி யென்பதை ஜனங்களிடம் விசாரித்திடுக. முந்தி யிருந்த நெசவுக்காரரின் கூட்டம் எங்கே போய்விட்டது?
>
> ஐரோப்பாவில் இங்கிலாந்து முதலிய பல தேசங்களுக்கு இங்கிருந்து வருஷந்தோறும் ஏராளமான ஸாமான்கள் அனுப்பிய தொழிலாளிகள் எங்கே? இப்போது இங்கே உட்கார்ந்திருப்போரில் சற்றுக்குறைய எல்லோருமே அன்ய வஸ்திரம் தரித்திருக்கிறீர்கள். நாட்டில் எந்த மூலைக்குப் போனாலும் அன்னிய ஸாமான்களே தென்படுகின்றன"

என்றார்.

தீர்மானங்கள்

லாஹோரில் (1893) கூடிய ஒன்பதாங் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருவனவாம்:

1. முதல் தீர்மானம்:

இந்தியா சட்டசபைகளின் சீர்திருத்தம்

*1892*ஆம் வருஷத்து பாரத ஸபைகளின் சட்டத்தை வழக்கப்படுத்துவதில் வைஸ்ராய் காண்பித்த உதார குணத்தின் பொருட்டாக வைஸ்ராய்க்கு மனப்பூர்வமாக நன்றி யுணர்த்துவது மன்றி,

மேற்படி சட்டத்தின் உட்கருத்தை அனுசரிக்க விரும்பினால் இந்தியா கவர்ன்மென்ட் விதிகளிலும் (முக்கியமாக பம்பாய் முதலான) மாகாண ஆட்சிகளின் அனுஷ்டானத்திலும் தக்க மாறுதல்கள் செய்ய வேண்டுமென்ற செய்தியையும், மிகவும் முக்கியமான மாகாணங்களில் ஒன்றாகிய பஞ்சாபுக்கு வைஸ்ராய் சட்டசபையிலும், மாகாண சபையிலும் பிரதிநிதி உரிமை ஏற்படாமல் இருக்கும் செய்தியையும் கண்டு இந்த ஜன ஸபை மிகுந்த வருத்தந் தெரிவிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

பஞ்சாபுக் கொரு சட்டசபை

1885-ல் பம்பாயில் கூடிய ஜன சபைக் கூட்டத்திலும் பிறகு பல கூட்டங்களிலும் செய்த தீர்மானங்களின் கருத்துக் கிணங்கி, பஞ்சாப் மாகாணத்தில் நல்ல ஆட்சி நடக்க வேண்டுமாயின் அங்கொரு சட்டசபை ஸ்தாபித்தல் மிகவும் அவசிய மென்றும்;

ஏற்கெனவே ஐக்கிய மாகாணங்களுக் கொரு சபை ஏற்பட்டு விட்டதைக் கருதி இனித் தாமஸ மில்லாமல் பஞ்சாபிலும் ஒரு சபை வைத்துவிட வேண்டுமென்றும் இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

பல திரட்டு

1. உப்பு வரியைக் கடைசியாக உயர்த்திய அளவாயினும் குறைத்து விடவும்;

2. வருமான வரி போடுவதற்குரிய வருமானத்தின் கீழளவை ரூ. 500 விருந்து ரூ. 1000 ஆக உயர்த்திவிடவும்;

3. 1890-மார்ச் இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட ராஜாங்க அறிக்கையின் 103, 104, 105 ப்ரகரணங்களில் கூறிய சுங்க விதிகளை முழுமையும் நிறைவேற்றும்படி மாகாண ஆட்சிகளை இந்தியா கவர்ன்மெண்டார் இடைவிடாமல் தூண்டுவதுமன்றி, கிராமத்தாரின் இஷ்டந் தெரிந்துகொண்ட பின்னரே சாராயக் கடை வைக்கும்படியான சுலபமான வழி யொன்று கண்டுபிடித்து நடத்தவும்;

4. சிறையோலை பிறப்பிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்புவிக்கும்படி கேட்க அதிகார முண்டென்ற நிபந்தனை யொன்றை விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்க்கவும்;

5. போலீஸ் இலாகாவில் கீழ்த்தரமான ஸ்தானங்களில் சிப்பந்திகளின் தொகையைக் குறைத்துச் சம்பளத்தையும் யோக்யதாம்சங்களையும் உயர்த்தி, ஆள் சேர்ப்பதில் மிகுந்த ஜாக்கிரதை செலுத்தியும், உயர்ந்த பதவிகளில் இப்போதுள்ள டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஸூபரின்டுகள், உதவி ஸூபரின்டுகள் என்பவரில் பெரும் பகுதியாரிடமுள்ளதைக் காட்டிலும் அதிகத் திறமையும், மதிப்புக்குரிய ஜனப் பகுதிகளிடம் அதிகப் பழக்கமும் ராணுவ டம்பங்களில் குறைவு முடைய கனவான்களை நியமித்தும் மேற்படி இலாகாவை வேருடன் சீர்திருத்தம் செய்யவும்;

6. ராணுவச் சட்டத்து விதிகள் இந்தியாவில் வசிப்போர், பார்க்க வந்தோர் எல்லோருக்கும் ஜாதி, மத, வர்ண பேதங்களில்லாமல் ஒரே மாதிரியாகப் பிரயோசனமாகும் - படிக்கும், காட்டு மிருகங்கள் வழக்கமாக மனித உயிர்களையும் கால்நடைகளையும், பயிர்களையும் அழிக்கும் இடங்களில் அனுமதி யுத்தரவு (லைஸென்ஸ்)கள் தாராளமாக வழங்கும் - படிக்கும், புது விதிகளின்படி கொடுக்கும் அனுமதி யுத்தரவுகள் ஒருவனுடைய வாணாள் முழுதும் பயன்படும்படிக்கும், தவறாக ஆயுதங்களை உபயோகப்படுத்தியதாக ருஜுவானாலன்றி, மற்றப்படி அவ் வுத்தரவுகளை மாற்றாதிருக்கும்படிக்கும், அவை பிறப்பிக்கப்படும் மாகாண எல்லை முழுமையிலும் உபயோகமாகும்படிக்கும் மேற்கூறிய ராணுவச் சட்ட விதிகளைத் திருத்தவும்;

7. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபனம் செய்து, அவற்றில் சட்டத்திற் கூறிய இலக்கணப்படி இந்தியா சுதேசிகளென்று சொல்லத் தகுந்தோர் பாரத ஸேனையில் தத்தம் திறமைக்கும் யோக்கியதைக்கும் தக்கபடி ஸந்நதுபெற்ற அல்லது பெறாத உத்தியோகஸ்தராக நியமனம் பெறுவதற்குரிய படிப்பும் பழக்கமும் கொடுக்கும்படி செய்யவும்;

8. இந்த ராஜ்யத்திலுள்ள யுத்தப் பிரியரான ஜாதியார்களைத் திரட்டி உள்நாட்டுப் படையொன்று சமைக்கவும்;

9. பிரித்தானியாவில் இருப்பதுபோல், பாரத ஜனங்களுக் கிடையிலும் ஸ்வேச்சைக் காப்புப் (வாலன்டீர்) படை முறைமை ஏற்பட உத்தரவு கொடுத்துத் தூண்டுதல் செய்யவும் வேண்டுமென்று முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் செய்யப்பட்ட தீர்மானங்களை அவசியம் நிறைவேற்றும்படி இந்த ஜன ஸபை வற்புறுத்துகிறது.

4. நான்காந் தீர்மானம்:

வைத்திய இலாகா

ஒவ்வொரு கிளையிலும் கல்வியைப் பிற பயன் கருதாமல் அதன் வளர்ச்சியாகிய பயன் ஒன்றை மாத்திரமே நாடித் தூண்டுதல் செய்யவேண்டுமென்பதாகிய ராஜாங்கத்தாரின் கல்விக் கொள்கை நிறைவேறும்படியாகவும், கிடைப்பவரில் உயர்ந்த மேதையுடையோர் - விசேஷமாக உள்நாட்டு மேதாவிகள் - வைத்தியத் தொழிலும், சாஸ்திரத் தொழிலும் திறக்கப்பெற்று அதனால் இந்தியாவில் நவீன சாஸ்திரப் பழக்கமுடைய வைத்தியக் கூட்டம் ஏற்படும்படியாகவும்; இந்த நாட்டில் பொது வைத்தியக் கல்வியும், சாஸ்திர ஞானமும், ஆராய்ச்சி முறைகளும் விருத்தி பெறக் கருதியும், ஆட்சிச் செலவில் செட்டை விரும்பியும்; இதர நாகரீக தேசங்களில் இருப்பதுபோல் இங்கும் வைத்திய மண்டலத்தை ராணுவ வைத்தியக் கூட்டத்தினின்று முழுதும் பிரித்து ஸ்வாதீனமாகச் செய்தல் தகுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

ஸம காலப் பரீக்ஷைகள்

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஸம காலப் பரீக்ஷைகள் நடத்தும் விஷயத்தில் காமன்ஸ் சபையார் நீதிக்கும் பாரபுத்திக்கும் ஒத்த தீர்மானஞ் செய்தது பற்றி அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது மன்றி, தமது தீர்மானத்தை உடனே

மூல நூலில் மூன்றாம் தீர்மானம் இடம் பெறவில்லை.

நிறைவேற்றும்படி இந்தியா மந்திரியையும், இந்தியா கவர்ன்மெண்டாரையும் வற்புறுத்துமாறு கனந்தங்கிய காமன்ஸ் சபையை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிவு படுத்தல்

இந்தியாவில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்திற்குப் பெரிய வடுவும், தேச முழுதிலும் எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் கணக்கிட முடியாத கொடுமை விளைவிப்பது மாகிய அனுஷ்டான மொன்றை மாற்ற வேண்டு மென்று பல வருஷங்களாக இந்தியா கவர்ன்மெண்டாரை வேண்டிப் பயன் பெறாமல், வேறு நிவர்த்திக்கு வழி தெரியாமல், நிராசையாய்;

ஒவ்வொரு மாகாணத்திலும் நீதி, நிர்வாஹ இலாக்காக்களை ராஜாங்கத்துக்குக் கூடிய வரை செலவு மிகுதிப்படாதபடி பிரிவு செய்தற்குரிய யோசனை தயார் செய்வதற்காக உடனே ஒரு கமிட்டி நியமிக்கும்படிக்கும், அந்தக் கமிட்டியில் பாதித் தொகைக்குக் குறையாமல், பல நீதி ஸ்தலப் பழக்கத்தாலும் அனுபவத்தாலும் இந்த விஷயத்தை ஆலோசிக்கக்கூடிய திறமை கொண்ட உத்தியோகஸ்த ரல்லாத சுதேசிகளாக இருக்கும்படிக்கும், மேற்படி யோசனைகளை இந்தியாவிலுள்ள பல மாகாண ஆட்சிகளின் அபிப்பிராய ஸஹிதமாக இந்தியா மந்திரி தயவுடன் குறிப்பிடும் ஸமீபத் தேதி யொன்றுக்குள்ளே அவருக்கு அனுப்பும்படிக்கும் உத்தரவு செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை இந்தியா மந்திரியைப் பிரார்த்தனை புரிகிறது.

7. ஏழாந் தீர்மானம்:

வியபிசாரமும் பட்டாளங்களில் தொத்து வியாதியும்

இந்தியாவிலுள்ள பட்டாளங்களில் வியபிசார விஷயமாகவும் தொத்து வியாதிகளின் ஸம்பந்தமாகவும் நடைபெறும் விதிகள், உத்தரவுகள், அனுஷ்டானங்களின் மீது இந்தியா ஆபீஸ் கமிட்டியின் பார்லிமெண்டைச் சேர்ந்த மெம்பர்கள் எழுதி யிருக்கும் அறிக்கையை ஆலோசனை செய்து பார்த்து,

1. மேற்படி அறிக்கையில் விவரிக்கப்படும் முறைமையும் அனுஷ்டானங்களும் அவற்றுக்கு ஸாதகமான சட்ட விதிகளும் 1888 ஜூன் மாதம் 5ஆம் தேதி யன்று காமன்ஸ் சபையார் செய்த தீர்மானத்தின் தெளிவான அர்த்தத்துக்கும் கொள்கைக்கும் விரோதமாக இருக்கின்றன என்றும்;

2. முறையாக நடந்துவரும் இந்தக் கெட்ட வழக்கங்களை மாற்றவேண்டுமானால், அவற்றை ஸ்பஷ்டமாகக் கண்டித்துச் சட்டம் செய்வதே சரியான வழியென்றும் மேற்படி பார்லிமெண்ட் கமிட்டி மெம்பர்கள் செய்த முடிவுகளை இந்த ஜன ஸபை அங்கீகாரம் செய்து கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

இந்தியாவில் வறுமையின் வளர்ச்சி

முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களை அங்கீகரித்து, வருஷந்தோறும் இந் நாட்டு ஜனங்களில் 500 லக்ஷம் பேருக்குக் குறையாமல் முழுப் பட்டினிக்கு மிகவும் ஸமீபத்தில் துன்ப வாழ்க்கை வாழ்கிறார்களென்றும், இவர்களின் தொகை வருஷந்தோறும் மிகுதிப்படுகிற தென்றும், ஒவ்வொரு பதிற்றாண்டிலும் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் பசியினால் மடிந்தே போகிறார்களென்றும் இந்த ஜன சபை உறுதி கூறுவதுடன், இந்த ஆபத்தான நிலைமையை நீக்குவதற்கு உடனே வழி செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

காட்டிலாகா

காட்டு விதிகளின் அனுஷ்டானத்தால் இந்தியா தீபகற்பத்திலும் (தென்னிந்தியாவிலும்) பஞ்சாபிலுள்ள சில மலைப் பிரதேசங்களிலும் உண்டா யிருக்கும் பலமான அதிருப்தியைக் கருதி இவ் விஷயத்தை ஜாக்கிரதையாக விசாரணை செய்யும்படிக்கும், காட்டிலாகா முறைமையின் கொடுமையைத் தணித்து அதனால் ஏழைகளுக்கேற்படும்

உபத்திரவத்தைக் குறைக்கும்படிக்கும் இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன ஸபை பணிவுடனும், ஆனால் மிகுந்த ஆவலுடனும் வேண்டுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

சாசுவத நிலவரித் திட்டம்

முப்பது வருஷங்களுக் கதிகமான காலத்துக்கு முந்தியே ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தார் வாக்குக் கொடுத்தபடி, நிலவரித் திட்டத்தில் சாசுவதத் தன்மையும் உறுதியும் இதுவரை ஏற்படாதிருக்கும் இடங்களில் அவற்றை ஏற்படுத்துதல் அவசியமென இந்தியா கவர்ன்மெண்டாரிடம் இந்த ஸபை முன்பு பல முறை வற்புறுத்திய சிபார்சை இங்கு மீட்டும் அழுத்தமாகத் தெரிவிப்பதுமன்றி;

வங்காளத்திலும் பேஹாரிலும் ஏற்கெனவே யுள்ள நிலவரித் திட்டத்தை கவர்ன்மெண்டார், நில அளவு (ஸர்வே) வரி முதலிய சில வரிகள் விஷயத்தில், கலைக்கத் தொடங்கி யிருப்பதினின்றும், சென்னை மாகாணத்தில் சாசுவதத் திட்டமுள்ள ஜமீன்களின் ஸந்நதில் சில நிபந்தனைகளை மாற்றத் தொடங்கியதினின்றும் மிகுந்த பயம் உண்டா யிருப்பதைக் கவனிக்கும்படி வேண்டுவது மல்லாமல், பொது ஜனங்களுக்கு சிரத்தையுடன் செய்யப்பட்ட வாக்குறுதிகளில் இங்ஙனம் எவ்வித வ்யாஜ்யத்தாலும் தலையிடுதல் தேசத்துக்கு விபத்தாக முடியுமென்பதைக் கருதி, சாசுவதத் திட்டத்துக்கும் அதன்படி பூஸ்திதி யுடையோருக்கும் விரோதமாக ராஜாங்கத்தார் செய்யும் பிற்போக்கான காரியங்க ளனைத்தையும் எல்லா ஸாத்ய வழிகளாலும் எதிர்க்கக் கடவோமென்று இந்த ஜன ஸபை ப்ரதிக்கினை செய்து கொள்ளுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

காணியாட்சியில் உறுதி

(1862, 1865 - வருஷங்களில் இந்தியா மந்திரியின் ராஜாங்க அறிக்கைகளில் சொல்லியவாறு) சாசுவத நிலவரித் திட்டம் இப்போது வழக்கத்திலில்லாத மாகாணங்களிலும் அதனை

ஏற்படுத்துவதாகச் செய்த வாக்குறுதிகளை இந்தியா கவர்ன்மெண்டார் நிறைவேற்றத் தவறி விட்டது மல்லாமல், 1882-லும், 1884-லும் ஒருவாறாகக் காணியாட்சியில் உறுதியுண்டாகுமாறும் தீர்வை யேற்றங்க ளேற்படாதவாறும், இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்தபடி இந்தியா மந்திரியும் ஒப்புக்கொண்ட முறைமையையும் இதுவரை அனுஷ்டானத் துக்குக் கொண்டு வாராமலிருப்பது பற்றி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் உபகாரம்

நாட்டுக் கல்வி இப்போதுள்ள நிலைமையைக் கருதுமிடத்தே, உயர்தரக் கல்விக்கு ராஜாங்கத்தார் செய்யும் உதவியை எவ்விதத்திலும் நிறுத்துதல் அநுசிதமாகுமென்று இந்த ஸபை அபிப்பிராயப்படுவது மல்லாமல், கல்வியின் எல்லாக் கிளைகளிலும் ராஜாங்கச் செலவை மிகுதிப்படுத்துதல் முக்கிய மென்பதையும், அக் கிளைகளில் மிகப் பிரதானமானவற்றுள் ஒன்றாகிய தொழிற் கல்வியை வளர்க்கும் பொருட்டு, நாட்டுக் கைத்தொழிலின் தற்கால நிலையை ஆராய்ச்சி செய்யும்படி ஒரு கலப்பு விசாரணைக் கூட்டம் நியமித்தல் அவசிய மென்பதையும் உறுதியாகக் கூறுவதுடன் தேச ஜனங்களின் எல்லா வகுப்புக்களிலும் வறுமை மிகுந்திருப்பதை எண்ணி எல்லா விதமான ஸர்க்கார் அல்லது முனிசிபல் (நகர சபைப்) பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் பிள்ளைகளின் தாய் தந்தையர் அல்லது பந்துக்களின் ஸ்திதிக்குத் தக்கபடி சம்பளங்க ளனைத்தையும் குறைக்க வேண்டு மென்றும், மிகவும் ஏழையான பிள்ளைகளுக்குச் சம்பளமே யில்லாதபடி செய்து விட வேண்டுமென்றும், இப்போது மாணாக்கர்களின் புத்திப் பயிற்சியாகிய ஒரே விஷயத்தில் மாத்திரம் மிதமிஞ்சிய கவனம் செலுத்தப்படுகிறதென்று பாரத தேச முழுதிலும் பொதுவாகப் பரவி யிருக்கும் கொள்கையை ஒட்டி, எல்லா வகைகளையும் தரங்களையும் சேர்ந்த பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் மாணாக்கர்களின் சரீரப் பயிற்சி

விஷயத்திலும் புத்திப் பயிற்சிக்கு ஸமானமான சிரத்தை யாயினும் செலுத்த வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்தனை செய்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

நீதி ஸ்தலத்தாரை நிர்வாஹ அதிகாரிகள் கண்டித்தல்

நீதி ஸ்தலத்தார்களின் தவறுகளை நிர்வாஹ அதிகாரிகள் கண்டிப்பது கடமையாகக் கூடிய பிரமேயங்களும் நேரலாமென்று இந்தியா மந்திரி சிறிது காலத்துக்கு முன் இந்தியா கவர்ன்மெண்டாருக் கனுப்பிய ஓலையில் சொல்லப்படுவது கண்டு இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது. ஏனெனில், நீதி ஸ்தலத்தாரின் ஸ்வாதீனத்தில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை அவ்விதக் கண்டனங்களால் குறைந்து விடக்கூடுமென்று இந்த ஸபை நம்புகிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

பாரத தேசத்துத் தங்கச்சாலைகளை அடைத்தல்

இந்தியாவிலுள்ள தங்கச்சாலைகளில் தனியாக வெள்ளி நாணயம் அடிக்கக் கூடாதென்று இந்தியா கவர்ன்மெண்டார் சிறிது காலத்திற்கு முன்பு பரபரப்பாகச் சட்டம் பிறப்பித்ததினின்றும், நாட்டு ஜனங்களுக்குக் கோணல் வழியில் மிகப் பாரமான வரையறை யற்ற தீர்வை விதிப்பது போன்ற பயன் விளைவதாலும், ஆலைத் தொழில் முதலிய சில முக்கியமான கைத்தொழில்களும் வியாபாரங்களும் மிகவும் குலைந்து நஷ்டப்பட்டு விட்டபடியாலும் (அங்ஙனம் சட்டம் செய்தது பற்றி) இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

பரிவர்த்தனை நஷ்ட ஈடு

இந்தியாவில் குடி ஸ்திரமாகாத ஐரோப்பிய, யூரேஷிய ஸர்க்கார் உத்தியோகஸ்தருக்குப் பரிவர்த்தன நஷ்ட ஈட்டு விஷயத்தில் வருஷமொன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலே செலவாதல் கருதியும், பாங்கிகளுக்கும்

அங்ஙனமே 138,000 பவுன் கொடுக்கப்படுவது கருதியும், தேசத்தின் பொருள் நிலை மிகவும் அதிருப்திக் கிடமாய்ப் புதிய தீர்வை விதிக்க நேருமோ என்ற பயத்தோடிருக்கும் ஸமயத்தில் அங்ஙனம் வீண் செலவு செய்தல் தவறென்று கூறி இந்த ஜன ஸபை பலமாகக் கண்டிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

கட்டாய வேலையும், கட்டாயப் படிச்செலவும்

பலாத்காரமாக ஜனங்களைக் கஷ்டப்படுத்தி உழைக்கச் செய்யும் "பேகார்" என்ற அனுஷ்டானமும், "ரஸத்" என்று சொல்லப்படும் பலாத்காரப் படிச்செலவு ஸாமான்கள் வாங்கும் முறைமையும் இந்தியா கவர்ன்மெண்டாரின் பல தீர்மானங்களை மீறி, இன்னும் இந்தியா முழுதிலும் வழக்கத்திலிருப்பதாலும், அவற்றை நீக்க இப்போதுள்ள குற்றச் சட்டத்தின் நிபந்தனைகள் போதாமையாலும், புதிய, ஸ்பஷ்டமான சட்டம் ஏற்படுத்தி மேற்படி அனுஷ்டானங்களை விட்டு விடும்படி இந்தியா கவர்ன்மெண்டாரைத் தூண்ட வேண்டுமென்று இந்த ஜன ஸபை நிச்சயித்துக் கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

லண்டன் சம்பளங்கள்

இந்தியாவின்மீது சுமத்தப்பட்டிருக்கும் லண்டன் சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென்று நாம் கேட்பதை பலமாக ஆமோதித்தது பற்றி லார்ட் நார்த்ப்ருக் என்பவருக்கு இந்த ஜன ஸபை நன்றி செலுத்துவதுடன், இந்த விஷயத்தில் ஒரு நியாயமான முடிவு செய்யும்படி காமன்ஸ் சபையார் தம்மில் சிலரை ஒரு கமிட்டியாக நியமிக்க வேண்டுமென்று வணக்கத்துடன் பிரார்த்தனை செய்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

பஞ்சாபுக் கொரு ஹைகோர்ட்

பஞ்சாப் மாகாணத்தில் நீதி பரிபாலனம் கிரமமாக நடைபெற வேண்டியதை உத்தேசித்து அங்குள்ள முக்கிய நீதி ஸ்தலத்தை (சீப் கோர்ட்டை) ஸன்னது பெற்ற ஹைகோர்ட்

ஸ்தானத்துக்கு உயர்த்தக் கூடிய காலம் வந்து விட்டதென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

ஸென்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகளுக்கு நன்றி

ஸென்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகள் நமது சபையினிடம் செலுத்தும் அனுதாபத்திற்காகவும், நெடுங்காலம் ஸென்ட்ரல் பின்ஸ்பரிக்கும் இந்தியாவுக்கும் காமன்ஸ் சபையில் பிரதிநிதியாக இருப்பாரென்று நாம் நம்புகிற ஸ்ரீ தாதாபாய் நவுரோஜியாகிய தமது மெம்பரின் உயர்ந்த ஸஹாயத்தை நமக்குக் கொடுத்திருப்பதற்காகவும் மேற்படி சீட்டாளிகளுக்கு இந்த ஜன ஸபை மிகச் சிறந்த நன்றி தெரிவிக்கிறது.

20. இருபதாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் காங்கிரஸ் கணத்தின் செலவு

ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுகளுக்காகவும், காங்கிரஸ் பத்திரிகையாகிய "இந்தியா"வின் செலவுக்காகவும் ரூ. 60,000 பகுத்து வைக்கவேண்டுமென்றும், இப்போதேனும் இனிக் கமிட்டியிலேனும் ஏற்பாடு செய்கிறபடி 1894 வருஷத்திற்கு ஜன ஸபையின் வெவ்வேறு வட்டத்தார் சந்தா செலுத்த வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானம் செய்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டிக்கு நன்றி

ஸர் வில்லியம் வெட்டர்பர்னும் ப்ரிட்டிஷ் ஜனசபைக் கணத்தாரும் சென்ற வருஷத்தில் இந்தியாவுக்குச் செய்த உபகாரங்களின் பொருட்டாக இந்த ஜன ஸபை அவர்களுக்கு மிகவும் மனப்பூர்வமான நன்றி தெரிவிக்கிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

பொதுக் கார்யதரிசி

வரும் வருஷத்தில் தனது பொதுக் கார்யதரிசியாக இருக்கும்படி மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூமை இந்த ஜன ஸபை மறுபடி நியமிக்கிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

அடுத்த ஜன ஸபைக் கூட்டம்

1894 கிறிஸ்மஸ் தினத்துக்கப்பால், பின்னே குறிப்பிடப்படும் தேதிகளில் பாரத ஜன சபையின் பத்தாங் கூட்டம் சென்னையில் நடத்த வேண்டு மென்று இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

ஒன்பதாம் அத்யாயம் முற்றிற்று

❖

ஜன ஸபையின் சரித்திரம்

பத்தாம் அத்யாயம்

1894-ம் வருஷத்தில் சென்னையில் நடந்த பத்தாம் ஜன ஸபைக் கூட்டத்தின் சரித்திரம்

முன்னர் ஐந்தாங் கூட்டத்தில் செய்த தீர்மான மொன்றில் ஒவ்வொரு வட்டத்தினின்றும் மொத்த ஜனத்தொகையில் பத்து லக்ஷத்துக்கு ஐந்து பேருக்கு மேல் ஜன சபைக்கு ப்ரதிநிதிகளாக வரக்கூடாதென்று விதிக்கப்பட்டது; அதன்படி ஆயிரத்துக்குச் சற்றே குறைந்த தொகைதான் பிரதிநிதிகளாக எடுக்க இடமுண்டு. ஆனால், மேற்படி விதியை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டு மென்ற முயற்சிகள் ஸரியாக எந்த வருஷத்திலுமே பலிக்கவில்லை. 1894-ல் சென்னையில் நடந்த ஜன ஸபைக் கூட்டத்திற்கு 1163 பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவர்களில் சென்னை மாகாணத்துப் பிரதிநிதிகளின் தொகை 947.

உபசார கணத் தலைவராகிய பி. ரங்கய்ய நாயுடு தமது ப்ரஸங்கத்தில்,

> "ஸ்தலத்தில் இல்லாது வெளி நாட்டில் இருந்து நடத்தப்படும் ஆட்சியினால் தேசத்துக்குப் பயங்கரமான பணச் செலவு நேருகிறது. வரை கடந்து வளர்ச்சி பெற்ற பட்டாளம் அரசிறையில் மூன்றிலொரு பங்கை உறிஞ்சிக் கொள்ளுகிறது. நம்மீது பலாத்காரமாகச் சுமத்தப்பட்ட போலி விடுதலை வியாபாரக் கொள்கைகள் நாட்டின் பழைய கைத்தொழில்களை அழித்து விட்டன.

ஆஹார ஸம்பார விருத்தியை ஜனத்தொகை மீறி வளர்ந்து விட்டது. வருஷத்துக்கு வருஷம் வறுமை மிகுதிப்பட்டு வருகிறது"

என்றார்.

"நாட்டுத் தான்யங்கள் வெளியேறுவதாலும் அநாவசியப் பயிர்கள் பிறநாட்டு வியாபாரிகளின் மாயச் செயல்களால் அவசியப் பயிர்களைப் பல இடங்களில் அழித்துவிட்டபடியாலும், பொறுப்பில்லாத ஆட்சியினால் விளையக் கூடிய பிற தீங்குகளாலும், ஆஹார ஸம்பார விருத்தியை ஜனத்தொகை மீறி வளரும்படி நேர்கிறது"

என்று சொன்னார்.

ஸபாநாயகரின் உபந்யாஸம்

ஆல்ப்ரெட் வெப் என்ற அயர்லாந்தியர் ஒருவர் இங்கிலாந்தில் காமன்ஸ் சபை மெம்பராக ஐரிஷ் ஸ்வராஜ்யக் கக்ஷியில் இருந்தார். அவரைச் சென்னைக் கூட்டத்தில் தலைமை வஹிக்கும்படி வரவழைத்திருந்தனர்.

அவர் செய்த உபந்யாஸம் பின்வருமாறு:

அமெரிக்காவில் நீகிரோ அடிமை முறைமைக்கு விரோதமாக நடத்திய தர்ம யுத்தத்தின் முழக்கத்தி னிடையே நான் வளர்ந்தேன். அந்த யுத்தத்தின் ஆரம்ப கர்த்தாவாகிய வில்லியம் லாய்டு காரிஸன் தனக்குச் சொல்லியதுபோலவே எனக்கும், "பூமண்டலமே எனது தேசம். மனித ஜாதியா ரெல்லாரும் என் சுதேசிகள்" எனிலும், எனது முதிர்ந்த பருவ முழுதும் எனது ஸ்வதேசமாகிய அயர்லாந்தின் க்ஷேமத்தை விருத்தி செய்வதற்கனுகூலமாகவே கழிந்து வருகிறது.

கீர்த்தி பெற்ற ஐரிஷ் தேசாபிமானியாகிய தானியல் ஒக்காநல் சொல்லியவாறு: "எனது சொந்தப் பசுந் தீவினுடன் மாத்திரமே என் அனுதாபங்கள் வரையறைப்படவில்லை. உலக முழுமையிலும் பிரஜா ஸ்வதந்த்ரமும் மத ஸ்வதந்த்ரமும் பரவ வேண்டு மென்பதே என் விருப்பம்."

கொடுங்கோன்மையும், பிறரை நசுக்குதலும் எங்கு நடந்தாலும் நான் அவற்றைப் பகைக்கிறேன். எனது சொந்த ராஜ்யத்தார் அவற்றை அனுஸரிக்கும்போது எனது கோபம் அதிகரிக்கிறது. ஏனெனில், அப்போது அவற்றின் அனுஸரணைக்கு நானும் ஒருவாறு ஜவாப்தாரி யாகிறேன்.

பிறருக்குக் கீழ்ப்பட்டு வாழ்வதன் துன்பத்தை நான் என் ஸ்வதேசத்திலே அனுபவித்திருக்கிறேன். ஐரிஷ் கக்ஷியைச் சேர்ந்த பார்லிமென்ட் மெம்பர்களில் நானொருவன். பார்லிமெண்டின் பாரத கணத்திலும் நான் சேர்ந்திருக்கிறேன். நான் கிறிஸ்து மதத்தில் சட்டத்துக் கிணங்கிய கொள்கைக்குப் புறம்பே நிற்போன். எனது முன்னோர் "க்லேக்கர்" (வெஸ்லியன்) கக்ஷியைச் சார்ந்து சிந்தனா ஸ்வதந்த்ரத்துக்கும் க்ரியா ஸ்வதந்த்ரத்துக்கும் பட்ட கஷ்டங்களை எண்ணி நான் இறுமாப் பெய்துகிறேன்.

நான் ப்ரோதஸ்தாந்த். என்னைக் கத்தோலிக்கச் சீட்டாளிகள் தெரிந்தெடுத்தனர். விடுதலையின் அபிவிருத்தியைத் தடுக்கும் பொருட்டாக இந்தியாவிலும் அயர்லாந்திலும் ஸுராஜ்ய விடுதலை யேற்பட்டால் மத விரோதங்கள் மிகுதிப்படுமென்று சொல்வோரின் பயங்கள் வீண் பயங்களென்பதற்கு நான் ஸாக்ஷி.

இந்த ஜன ஸபையின் ஸபாநாயக ஸ்தானம் பெற்றது எனக்குக் கிடைக்கக் கூடிய கவுரவங்க ளனைத்திலும் மேலானது....

பாரத ஜனம் (பாரத ஜாதி)

இனி மீண்டு செல்லுதல் ஸாத்யமில்லை. அபிவிருத்தியும் அறிவொளியும் வேண்டுமென்ற ஆவல் ஒரு தேசத்தாருக்கு மூண்டுவிட்டால் அவர்கள் விடுதலையை நோக்கிச் செல்லுதல் இன்றியமையாததாம். சென்ற ஐம்பது வருஷங்களாக இங்குள்ள ஆங்கிலோ இந்திய கவர்ன்மெண்டார் உங்களைக் கல்வி பயிலும்படிக்கும், ஒழுங்குபட்ட விடுதலையின் கொள்கைகளை உட்கொள்ளும்படிக்கும், பழைய வேற்றுமைகளை அழித்து விடும்படிக்கும், ஜாதி அஸூயைகளை உடைத்துவிடும்படிக்கும், ப்ரிட்டிஷ் குடிமைக்குத் தகுதியாய், தேசத்தின் பொது நலத்துக்காக

ஐக்கியப்படும்படிக்கும் தூண்டி வருகின்றனர். "பாரத தேசத்து ஜனங்களின் சரித்திரம்" என்ற ஸர் வில்லியம் ஹண்டர் எழுதிய நூலைத் திருப்பியபோது என் கவனத்தைக் கவர்ந்த முதலாவது வாக்கியம்: "இங்கிலிஷ் பாடசாலைகள் ஒரு தன் மதிப்புடைய ஜாதிக்கு வளர்ப்பிடங்களாக வேண்டும்" என்பது. அதாவது ஐக்கிய பாரத ஜாதிக்கு இப் பாடசாலைகள் காரண பூதங்களாக வேண்டுமென்றர்த்தம்..... நீங்கள் ஜாதீய ஒருமை பெற்றிருப்பதினின்றும் ஸாம்ராஜ்யத்தின் பலத்துக்கும் ஐக்கியத்துக்கும் ஊனமென்று தோன்றவில்லை.....

இந்தியாவின் வறுமை

இந்தியாவின் வறுமையை ஐரோப்பாவின் செல்வத்துடன் அதிலும் முக்கியமாக இங்கிலாந்தின் செல்வத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வியப்புக் கிடமாகும். ப்ரித்தானியாவையும் அயர்லாந்தையும் சேர்த்ததாகிய ஐக்கிய ராஜ்யத்தின் குடிகளில் ஒவ்வொருவனுக்கும் சராசரி வருஷ வரும்படி 33 பவுன் 14 ஷிலிங் என்று கணக்கிடப்படுகிறது.

இந்த வருஷம் கொடுத்த தம தறிக்கையில் மிஸ்டர் பௌலர் ப்ரிட்டிஷ் தேசத்துக் குடிகளின் மீதுள்ள தீர்வைப் பாரத்தைக் காட்டிலும் இந்தியாவின் பாரம் ஒப்பளவில் குறைவென்பதை எடுத்துக்காட்டினார்.

இந்தியா தேசத்தினரில் ஒவ்வொருவனுக்கும் சராசரி வருஷ வரும்படி 20 ரூபாய் முதல் 27 ரூபாய் வரை வெவ்வேறு வகையாகக் கணக்கிடப்படுகிறது. 20 ரூபாய் வரும்படியின் மீது 100க்கு 5 ஆக விதிக்கப்படும் தீர்வையானது 33 பவுன் (495 ரூபாய்) வரும்படியின் மீது 100க்கு 7½ ஆக விதிக்கப்படும் தீர்வையைக் காட்டிலும் அதிக பாரமென்பதை மிஸ்டர் பௌலர் மறந்து விட்டனர்.

யோக்கியமான நடையை வேண்டினால், இந்தியா மந்திரியின் கார்யஸ்தலச் செலவுகள், பட்டாளஞ் சேர்க்கும் கொட்டகைச் செலவுகள், பரிவர்த்தன நஷ்ட ஈடு போன்ற பெருஞ்செலவுகளை, இயற்கைப்படி, ப்ரிட்டிஷ் அரசிறையினின்றும் செலவிடுவதை

விட்டு, உங்கள் மீது சுமத்துவதற்கு நியாயம் காட்டவே முடியாது..... குடியேற்ற நாடுகளினின்றும் இதுபோலே ப்ரிட்டிஷார் பணந் தண்டவில்லை.

1840க்கும் 1888க்கும் இடையே யுள்ள வருஷங்களில் பிரித்தியானியாவின் வருஷாந்த மிச்சப் பணங்களின் மொத்தத் தொகை 110,000,000 பவுன் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதாவது நாளொன்றுக்கு 300,000 பவுனுக்கு மேலே யாகிறது. இவ்வளவு பணங்கள் சேர்த்து வைத்துக் கொண்டு பின்னும் ஏழைத் தேசத்தார்களிடம் பிசுனத் தன்மை காட்டுவோர் தர்மிஷ்டர்களாகக் கவனிக்கத் தக்கவர்க ளல்லர்.

1882-83-ல் இந்தியாவின் பட்டாளச் செலவு ரூ. 18,359,000 ஆயிற்று. ஆப்கானிஸ்தானத்தில் செலவு செய்த 17,000 ரூபாயும், எஜிப்து நாட்டுக்காகச் செலவிடப்பட்ட 1,308,000 ரூபாயும் மேற்படி தொகைக்குள் அடக்கம். இங்ஙனம் செலவு மிகுதிப்பட்டதினின்றும் விளைந்த அனுகூலங்களில் ப்ரிட்டிஷ் துருப்புக்களுக்கும் சுதேசித் துருப்புக்களுக்கும் ஸம பாகம் இல்லை. ஐரோப்பிய உத்தியோகஸ்தரின் இனாம் சம்பளம் (பென்ஷனை) 100-க்கு 37-ஆகவும், சுதேசி உத்யோகஸ்தரின் இனாம் சம்பளத்தை 100-க்கு 11 ஆகவும் உயர்த்தி யிருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் சிப்பாய்களில் சராசரி ஒருவனுக்குச் செய்யும் செலவை முன்னிலும் 100-க்கு 13 அதிகமாகவும், சுதேசி சிப்பாயின் செலவை 100-க்கு 4 குறைவாகவும் செய்திருக்கிறார்கள்.

பாரத தேசத்துக்கு வெளியே உங்கள் தீர்வைப் பணம் முன்பு 1882-ல் 17,369,000 ரூ. செலவாயிற்று. 1892-ல் அது 100-க்கு 31 அதிகமாய் 22,911,000 ரூ. ஆய்விட்டது. 1882-ல் அச் செலவு உங்கள் மொத்தச் செலவில் 100-ல் 23 பங்காக இருந்தது. 1892-ல் 100-ல் 25 பங்காய் விட்டது. இவ்விதமான பண வற்றுதலை எந்த தேசத்தாரும் நீடித்துத் தாங்குதல் ஸாத்தியமில்லை.

சட்ட ஸபைகளின் சீர்திருத்தம்

வைஸ்ராய் சபையிலும் மாகாண சபைகளிலும் உங்களுடைய பிரதிநிதிகளின் தொகை சரியான அளவிருக்க வேண்டுமென்பது முற்றிலும் நியாயம். அது மிகவும் அவசரம். ஆதலால் அவ்

விஷயத்தில் உங்களுடைய கவனம் அதிகமாகச் செல்லுதல் இயல்பேயாம். இந்தியா சபைகளின் சட்டத்தில் பார்லிமெண்டாரின் ப்ரத்யக்ஷமான கருத்துக்களை இங்குள்ள அதிகாரிகள் உபவிதிகள் போட்டுச் சிதைத்துவிட்டதை யெண்ணுமிடத்தே மிகுந்த மன வருத்தம் விளைகிறது.

விஸ்தாரமடைந்த புதிய சட்டஸபைகள் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு மாகாணத்திலும் குறை கூறி ஜனங்கள் வருந்துவதை நானறிவேன். ஜனப் பிரதிநிதிகளின் ஸ்தானப் பாகுபாடு மிகவும் அதிருப்திக் கிடமாக இருக்கிறதென்றும், சில கக்ஷிகளுக்கு அதிகப் பிரதிநிதிகள் இருக்க வேறுசில வகுப்பினருக்குப் பிரதிநிதிகளே இல்லாமல் செய்துவிட்டார்க ளென்றும் ஜனங்கள் முறையிடுகிறார்கள்.

மேற்படி மசோதாவைப் பற்றிய விவாதம் நடைபெற்ற காலத்தில் பார்லிமென்ட் ஸபையில் இரண்டு கக்ஷித் தலைவரும் ஸ்பஷ்டமாகத் தெரிவித்த கருத்துக்களுக்கும் இங்குள்ள ராஜாங்கத்தாரின் செய்கைக்கும் பொருத்தமில்லை. மிஸ்டர் க்ளாட்ஸ்டன் "பாரத ஜனங்கள் பெயரளவுக்கு மாத்திரமே யன்றி யதார்த்தமாகவே பிரதிநிதியாட்சி யுரிமை பெறுமாறு செய்யவேண்டும்" என்றார்.

லார்ட் ஸாலிஸ்பரியும் அதுபோலவே அழுத்தமாக "நாம் இக் காரியம் செய்தல் அவசியமென்று தீர்ந்துவிட்டால் அதனை நேரே செய்தல் தகும். நாம் தயார் செய்யும் கருவியானது யத்குச்சையாகச் (யதேச்சையாக) சமைந்த ஸபைகளுக்கும், சிற்சில வகுப்புக்களுக்கும் மாத்திரமே பிரதிநிதி யுரிமை கொடுக்கும் மாதிரியாக இராமல் பாரத தேசத்தின் ஜீவ சக்திகள் எல்லாவற்றிற்கும் ஒருங்கே கொடுப்பதாக இருத்தல் வேண்டும்" என்றார்.

இந்த வார்த்தைகள் எவ்வளவு தூரம் நிறைவேறத் தவறிவிட்டன பார்த்தீர்களா? சட்டத்தின் நோக்கங்களை நிர்வாஹ அதிகாரிகள் எவ்வளவு தூரம் தோற்கடிக்கலா மென்பதற்கு இது ஒரு தகுந்த திருஷ்டாந்த மன்றோ?

இதர விஷயங்கள்

நீதி, நிர்வாஹ இலாக்காக்களைப் பிரிவுபடுத்த வேண்டும். ஜூரி விசாரணை நாட்டில் பரவும்படி செய்யவும் வேண்டும். குற்றமில்லாத ஒற்றை மனிதன் தண்டனைப் படுவதைக் காட்டிலும் குற்றஞ் செய்த பலர் தண்டனைப் படாமல் தப்பி விடுதல் சிறந்த தென்பது இங்கிலீஷ் நீதியில் மிகப் புராதனமான வாக்கியம். குற்றச் சட்டத்தின் அனுஷ்டானத்தில் ஐரோப்பியர் விஷயத்தில் மிகுந்த பக்ஷபாதம் காண்பிக்கப்படுவதாகத் தெரிகிறது.

சிறிது காலத்திற்கு முன்பு கல்கத்தாவில் ராமகோபால ஸந்யால் பிரசுரம் செய்த புஸ்தக மொன்றில் பக்ஷபாதமான அநீதித் தீர்ப்புகளின் கோவை ஒன்று வரையப்பட்டிருக்கிறது.

பார்லிமெண்டில் எனக்கும் வேறு பல மெம்பர்களுக்கும் குண்டக்கல், டும்டும் வழக்குகளின் தீர்ப்பானது மிகவும் அநியாயமென்று புலப்பட்டது. இவ்வித அநீதியால் ப்ரிட்டிஷ் ஜாதியின் மதிப்புக்குக் குறைவு நேரிடும்.

அறிவில்லாத, அஸூயை கொண்ட பல ஐரோப்பியரால் இன்னும் உங்கள் ஜாதியினிடம் கொண்டிருக்கும் மிருகத்தனமான அவமதிப்பின் பயனாக அவ்வித அநீதி ஏற்படுகிறது. இவ்விதமான ஜாதி விரோதத்தை ஒழிப்பது கவர்ன்மெண்டாரின் முதற் கடமையாகும். மாஜிஸ்திரேட்டார், போலீஸாரின் திறமையைப் பரிசோதனை செய்வதற்கு அவர்களால் ஏற்படும் தண்டனை மிகுதியை, ராஜாங்கத்தார் அளவுகோலாகக் கொள்ளுகிறார்கள் என்ற ஸந்தேஹம்கூட ஜனங்களின் மனதில் ஜனிக்க இடந் தரக்கூடாது.

தெய்வத்தினிடம் நம்பிக்கை

இதனிடையே நாம் நமது வாழ்க்கையைத் துன்பப்படுத்திக் கொள்ளலாகாது. லௌகீக கார்யத்துக்கு நம்மைத் திறமையற்றவர்களாகச் செய்துகொள்ளக்கூடாது. மனுஷ்ய நீதி தவறுதலுக்குட்பட்ட நீதி. நமது சொந்த லாபங்களைப் பற்றிய ஆலோசனை ஏற்படும்போது நாம் எல்லாருமே தர்ம லக்ஷ்யத்தைத் தவற விடுதல் ஸஹஜம். பிறரிடத்தே நாம் காணும் குறைகள்

நம்மை உயர்ந்த நடைக்குத் தூண்டுக! உயர்ந்த லக்ஷ்யங்களும் விசாலமான தர்ம சிந்தையும் உதார குணமும், இனியும், என்றேனும், இந்த மண்ணுலகத்தில் எல்லா அதர்மங்களையும் அழித்து எல்லா துக்கங்களையும் நீக்க வல்லதும் கடவதுமாகிய பராசக்தியினிடத்தில் ஆழ்ந்த பக்தியும் நமக்கு விளைக.

இதர விஷயங்கள்

ஸம காலப் பரீக்ஷைகளின் விஷயமாக மிஸ்டர் பால் கொண்டு வந்த ப்ரேரணையை காமன்ஸ் சபையார் அங்கீகாரம் செய்தது பற்றியும், கவர்ன்மெண்டாரும் அதை உண்மை நடிப்புடன் ஒப்புக்கொண்டது பற்றியும் நாம் மிகவும் ஸந்தோஷ மடைந்திருந்தோம். பின்னிட்டு அதிகாரிகளின் போதனையைக் கேட்டு லிபரல் மந்திரிகள் அந்தத் தீர்மானத்தை ரத்து செய்திருப்பது கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம். இங்ஙனம் அடிக்கடி சலிப்பதால் ஜனங்களுக்குக் காமன்ஸ் சபையாரிடமுள்ள மதிப்புக் குறைந்துவிடக் கூடும்... இக்காலத்தில் ஜனங்களின் கல்விதான் கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டிய முதலாவது விஷயம். இந்தியாவில் ராணுவச் செலவை உத்தேசிக்கக் கல்விச் செலவு இத்தனை குறைந்த அளவாக இருப்பது துக்கத்துக்கிடமான விஷயம்.

குடி, வியபிசாரத் திட்டம், அபின்

கிறிஸ்துவர் என்று தம்மைச் சொல்லிக்கொள்வோர் வாழும் தேசமொன்றிலிருந்து வந்த நான் இங்கு குடி, வியபிசாரம், அபின் இந்த மூன்று விஷயங்களிலும் எங்கள் ராஜாங்கத்தார் நடந்து கொள்ளும் மாதிரியை நினைக்கும்போது உங்கள் முன்னே நிற்கக்கூட எனக்கு வெட்க முண்டாகிறது. கிறிஸ்துவர் பூமண்டல முழுமைக்கும் அன்பும் அறிவொளியும் தருவதாக நடிக்கிறார்கள். நீங்களும் எங்கள் ஜாதியாரும் ஒன்றுகூடியதில் என்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

உங்களால் எங்களுக்குத் தீங்கு நேர்ந்திருக்கிறதா? அல்லது உங்களுக்குத் தீங்கு நேரிட்டதா? இதற்கு மறுமொழி நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும். எங்களுடைய

நாகரீகத்தைக் கீழ்த்திசையினின்றும் ஆதியில் கிடைக்கப் பெற்றோம். அதற்குக் கைம்மாறாக நாங்கள் உங்களுக்குச் சில அனுகூலங்களும் செய்திருக்கிறோம். அதனுடன் மேற்குத் திசை நாகரீகத்தின் மிக இழிவான விளைவுகள் சிலவற்றையும் உங்களிடையே புகுத்திருக்கிறோம். பெரும் பகுதி எங்களால் புகுத்தப்பட்டதும் எங்களாலேயே மிகவும் விசாலமாகப் பரப்பப்பட்டதாகிய மதுபான மென்ற பெருந் தீங்கை நீங்கள் உங்களுடைய ஜன ஸபையின் வாதங்களினிடையே பலமுறை கண்டித்துப் பேசி யிருக்கிறீர்கள்.

இனி, ராணுவத்தில் ஐரோப்பிய சிப்பாய்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் வைப்பாட்டி பிடித்துக் கொடுக்கும் அனுஷ்டானத்தைக் குறித்து லார்டு க்ராஸ் 1887 ஜூலை-8ல் வைஸ்ராய்க்கு "அந்த முறைமைக்கு நியாயங் காட்டுதல் ஸாத்தியமில்லை யென்று தோன்றுகிறது. அதைக் கண்டித்தல் அவசியம்" என்றொரு தந்தி கொடுத்தார். அமெரிக்காவினின்று வந்த மிஸஸ் ஆந்த்ரூ, டாக்டர் காதரைன், புஷ் நெல் என்ற இரண்டு ஸ்த்ரீகளும் இவ் விஷயமான ஊழல்களை உலகமறியப் பிரசுரம் செய்தபோது அது உண்மையில்லை யென்று ஆரம்பத்தில் சொல்லிய ஸேனாபதி லார்ட் ராபர்ட்ஸ் பின்னிட்டுத் தாம் கூறியது தவறென்றும், அந்த ஸ்த்ரீகள் சொல்லியதே மெய்யென்றும் கண்டு அவர்களுக்கு மன்னிப்புக் கூறினார்.

இவ் விஷயத்தில் மேற்படி அமெரிக்கா ஸ்த்ரீகள் பிரவேசியாவிட்டால், அது உலகத்தில் யாருக்குமே தெரிந்திராது. ராணுவத் தலைவருக்கே தெரியாமலன்றோ அதிகாரிகள் அதை மறைத்து விட்டனர்! இந்தியாவின் ஆட்சி முறை நடக்கும் தவறு வழிக்கு இது எத்தனை பலமான த்ருஷ்டாந்தம் பார்த்தீர்களா?.... நாங்கள் (ப்ரிட்டிஷார்) எங்களுடைய லாபத்தை உத்தேசித்து அபினிப் பயிரை அபிவிருத்தி செய்தது மன்றி, அபினியைச் சீனத்தார் மீது பலாத்காரமாகச் சுமத்தினோம். இப்போது அந்தப் பாபத்தினின்றும் விலக விரும்பினால் அதன் பொருட்டு உங்களை நஷ்டப்படுத்துவது சரியில்லை யென்று தோன்றுகிறது.

முடிவுரை

> இந்தியாவைக் கொடுங்கோன்மையுடன் ஆளுவதினின்றும் இந்தக் கொடுங்கோன்மை முறை இங்கிலாந்திலும் தாவி இங்கிலாந்தின் ஆட்சியும் கொடுங்கோன்மையாகவே வந்து முடியும்..... உலகத்தின் பொது அபிவிருத்தியைக் கருதுமிடத்து நாம் அதைரியப்பட வேண்டாம்.
>
> உலக முழுதிலும் எல்லா ஜாதியாருக்குள்ளும் பரஸ்பரம் செலுத்த வேண்டிய கடமைகளைப் பற்றிய உணர்ச்சி முதிர்ந்து வருகிறது. மனிதனுடைய உயர்வுக்கு எல்லை கிடையாதென்பதை மனிதர் உணர்ந்து கொண்டனர்.
>
> உங்கள் தேசத்து ஞானிகளில் ஒருவர் மனுஷ்ய ஜீவனை ஒரு பக்ஷிக்கு நிகராகவும், அந்த ஜீவன் இவ்வுலகத்தில் வந்து குடியிருந்து வெளியேறுதல், அந்தப் பக்ஷி ஓரறைக்குள் சாளரத்தின் வழியே பாய்ந்து பின் வெளியேறுதலுக்கு நிகராகவும் வர்ணித்திருக்கிறார். எல்லைப்படாத உலகத்திலிருந்து வந்த ஜீவன் எல்லைப்பட்ட உலகத்தில் சில நாள் நின்று பெயர்கிறது. இந்த சொற்ப தினங்களில் நாம் செய்யக் கூடிய மிகச் சிறந்த தொழில் யாது? பிறருக்கும் உபகாரம் செய்வதே நாம் செய்யத் தகுந்த பெருந் தொழில். மனுஷ்ய ஜாதியாருக் கெல்லாம் பொதுவான உரிமைகளை நிலைநாட்டுவதே பரோபகாரங்களில் சிறந்தது

என்று மிஸ்டர் ஆல்ப்ரட் வெப் பேசி முடித்தார்.

மிஸ்டர் வெப் பேசி முடிந்தபின்பு காங்கிரஸ் நிதிக்கு ராமநாதபுரம் ராஜா 10000 ரூபாய் நன்கொடை அளித்ததாகக் கூறப்பட்டது. விஷய விசாரணைக் கமிட்டி உறுதி செய்யப்பட்டது. அத்துடன் வழக்கம்போல் முதல் நாட் கூட்டம் கலைந்துபோயிற்று.

மறுநாள் முதலாவது தீர்மானம் மிஸ்டர் வாச்சாவினால் பிரேரணை செய்யப்பட்டது. நூல், பஞ்சுத் துணிகளின் மீது சுங்கத் தீர்வை விதித்து பம்பாயில் புதிதாக ஏற்பட்ட ஆலைத் தொழில் முதலாளிகளுக்கு நஷ்டமும், லங்காஷைர் வியாபாரிகளுக்கு லாபமும் வருமாறு செய்வது பெரிய அநியாயமென்று வாச்சா சொன்னார்.

இந்தியாவின் வறுமையை நிவர்த்தி செய்வதன் ஸம்பந்தமான மூன்றாந் தீர்மானம் பார்லிமெண்ட் மெம்பராகிய ஸேமூர் கேய் என்பவரால் கொண்டுவரப்பட்டது. பார்லிமெண்ட் மெம்பர்களில் சிலர் இந்தியாவில் பொது ஜனங்களின் நிலைமையைக் குறித்து பார்லிமெண்ட் சபையில் ஒரு விசாரணை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள் என்பதாகவும், இந்தியா கவர்ன்மெண்டார், தங்கள் இரகசிய இலாகாவின் மூலமாக தயார்செய்து கொடுத்த சில தப்புக் கணக்குகளால் அம் முயற்சி பலிக்கவில்லை யென்றும் ஸேமுர் கேய் சொன்னார்.

மூன்றாம் நாள் இந்தியாவின் அரசிறையைப் பற்றி விசாரணை செய்யும் பொருட்டாக காமன்ஸ் சபையில் ஒரு விசேஷக் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று பிரார்த்தனை செய்வதாகிய ஐந்தாம் தீர்மானத்தைக் கொண்டு வந்த ராய்பகதூர் ஜம்புலிங்கம் முதலியார் அதனை ஆதரித்துப் பேசுகையில், இந்தியா கவர்ன்மெண்ட் அரசிறை மந்திரியான மிஸ்டர் வெஸ்ட்லான்ட் என்பவருடைய நியாய விரோதமான கொள்கைகளையும் ஸர் ரிச்சார்டு டெம்பிள் என்பவரின் மடமையையும் கண்டனஞ் செய்து, மேற்படி விசாரணை அவசியம் என்பதை மிகவும் ஸாமர்த்தியமாக நிலைநாட்டினர்.

பின்னர் அந்தத் தீர்மானத்தை அனுசரித்து மார்க(g)ன் (b)ப்ரெளன் பேசினபொழுது நிவர்த்திக்கும், ஓம் படைக்கும் என்று தீர்வை போட்டு வசூல் செய்த இருபத்தினாலு கோடி ரூபாயில் பதினாறு கோடி ரூபாய் மாத்திரமே அந்த விஷயத்தில் செலவு செய்துவிட்டு, மீதித் தொகையை வேறு விஷயங்களுக்குப் பயன்படுத்திக் கொண்ட பிழையை எடுத்துக்காட்டினார். பரிவர்த்தன நஷ்ட ஈடென்று ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்குத் தண்டல் கொடுத்தல் பெருங் குறையென்றும் பாசறை - உக்கிராண இலாகா மிகவும் ஈனத்தன்மையும் அயோக்கியத் தன்மையு முடையதென்றும் சொன்னார்.

மேலும் அவர் கான்ஸ்டான்டினோபிள் நகரத்தில் ஐரோப்பிய ஸ்திரீ புருஷர் கூடியாடும் களியாட்டம் ஒன்று நடத்துவதற்காகச் செலவு செய்யப்பட்ட 130,000 ரூபாயையும்

இந்தியா அரசிறையின் மீது சுமத்திவிட்டு, துருக்கி ஸுல்தானுடன் ஸ்நேஹம் பாராட்டுதல் இந்தியாவுக்கு க்ஷேமம் என்பதை அச் செய்கைக்கு முகாந்தரமாக எடுத்துக்காட்டிய அதிகாரிகள் அவ்விதமான களியாட்டங்கள் கிழக்குத் திசையாருக் கெல்லாம் - அவர்களிலும் விசேஷமாக மகம்மதியர்களுக்கு - மிகவும் வெறுப்பைத் தருகின்றன என்பதை அறியார் போலும்!

பின்பு அதே தீர்மானத்தைக் குறித்து ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் பேசுகையில் இந்திய ஆட்சியை மேலிருந்து நிர்த்தாரணஞ் செய்யவும் அதன் ஊழல்களைத் திருத்தவும் பொறுப்புள்ள அதிகாரிகள் யாருமே இல்லாது போய்விட்டபடியால் இந்தியாவுக்கு நேர்ந்த கஷ்டங்களை எடுத்துக்காட்டினார்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

பஞ்சுச் சரக்குகளின் மேல் சுங்கத் தீர்வை

1. பஞ்சுச் சாமான்களின் மீது சுங்கத் தீர்வை விதித்ததினின்றும் இந்த தேசத்திலே ஸமீப காலத்தில் தோன்றி, பால தசையிலிருக்கிற ஆலைத் தொழிலுக்குப் பலமான நஷ்டம் விளையு மாதலால் அச் செய்கை அநீதம் என்றும், அயுக்த மென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்பட்டு அச் செய்கையை வலிமையுடன் கண்டனம் செய்கிறது;

2. இந்தத் தீர்வை விதித்தபடியினால் "லங்காஷைர்" வியாபாரிகளுக்கு லாபம் உண்டாகும் பொருட்டாக பாரத தேசத்திற்கு நஷ்டம் விளைகிறது என்ற தனது நம்பிக்கையை உறுதியாகத் தெரிவிப்பதுடன் அவ்வாறு இந்தியா மந்திரி பாரத தேசத்தின் லாபங்களைக் கைவிட்டதைப் பற்றி இந்த ஜன சபை வருத்தப்படுகிறது;

3. அந்த சுங்க மசோதாவானது சட்டம் ஆய்விடுமானால் மேற்படி சட்டத்தின் பிரயோகத்தினின்றும் இருபதாம் இலக்கம் முதல் இருபத்து நான்காம் இலக்கம் வரையுள்ள நூல்களை விலக்கும் அதிகாரம் இந்தியா ராஜாங்கத்தாருக்குக் கொடுக்கப்

பட்டிருக்கும்வண்ணமே அவர்கள் தாமஸ மில்லாமல் இந்தியா மந்திரியிடம் அந்த அதிகாரத்தைச் செலுத்த உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த ஜன சபை விரும்புகிறது;

4. இந்தத் தீர்மானத்தை இந்தியா ராஜாங்கத்தாருக்கும் இந்தியா மந்திரிக்கும் தந்தி மூலமாகத் தெரிவிக்கும்படி இந்த ஜன சபை தனது ஸபாநாயகரை நியமிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

சாசுவத நிலவரித் திட்டம்

1. வங்காளத்திலும் பேஹாரிலும் ஏற்கெனவே யுள்ள சாசுவத நிலவரித் திட்டத்தில் தலையிட்டு நில அளவை வரி முதலிய சில வரிகளை ராஜாங்கத்தார் உயர்த்தி விட்டதினின்றும், ஜனங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பெரிய திகிலை இந்த ஜன சபை தெரிவிக்க விரும்புவதுடன் அதுபோலவே சென்னை மாகாணத்திலும் சாசுவத திட்டம் செய்யப்பெற்ற சில ஜமீன்களில் சந்நது நிபந்தனைகளை மாற்றியது தவறென்று கண்டிக்கிறது; மேலும், இங்ஙனம் ராஜாங்க வாக்குறுதிகளை பங்கம் செய்தல் தேசத்திற்குப் பெரிய விபத்தாக முடியுமாதலால் சாசுவத திட்டங்களுக்கும் அவற்றின்படி பூஸ்திதி பெற்றிருப்போருக்கும் விரோதமான பிற்போக்குச் செயல்கள் அனைத்தையும் ஸாத்யமான எல்லா வழிகளாலும் எதிர்க்கக் கடவோம் என்றும், இந்த விஷயமாகப் பார்லிமெென்ட் சபைக்கு விண்ணப்பம் செய்து கொள்ளக் கடவோம் என்றும் இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

2. 1862லும், 1865லும் இந்தியா மந்திரி தமது ராஜாங்க அறிக்கைகளில் தெரிவித்தபடி, சாசுவத நிலவரித் திட்டம் வழக்கத்தில் இல்லாத மாகாணங்களில் அதனை ஏற்படுத்துவ தாகச் சொல்லிய வாக்குறுதிகளை இந்தியா கவர்ன்மெண்டார் நிறைவேற்றத் தவறியிருப்பது மல்லாமல், 1882லும், 1884லும், இந்தியா கவர்ன்மெண்டார் பிரேரேபித்ததை இந்தியா மந்திரி ஆமோதித்தவண்ணம் சிற்சில விசேஷங்களுக்கு உட்பட்டு, காணியாட்சியில் உறுதியும், தீர்வை ஸ்திரமும், காட்டிய விதிகளையும் நிறைவேற்றாம விருப்பது பற்றி இந்த ஜன சபை மிகவும் வருத்தப்படுகிறது;

அறுபது வருஷங்களுக்குக் குறையாதபடி தக்கவாறு நீண்ட காலவளவு வரை நிலத் தீர்வையை உயர்த்துவதில்லை என்றும், காணியாட்சியில் உறுதி யுண்டு என்றும் ஒரு விதி செய்து, அதனால் நிலஸ்வான்தார்கள் தங்கள் நிலங்களைச் சீர்திருத்துவதின் பயன்களை முழுவதும் தாங்களே அனுபவிக்க இடம் தரவேண்டும் என்றும் இந்த ஜன சபை ராஜாங்கத்தாரைப் பிரார்த்தனை செய்துகொள்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

இந்தியாவின் வறுமை மிகுதிப்படுதல்

முந்திய ஜன சபைக் கூட்டங்களின் கருத்துக்களைத் தழுவி, ஜனத்தொகையில் 50 லக்ஷம் பேர் முழுப்பசிக்கு மிகவும் சமீபிக்கிற துன்ப வாழ்க்கை வாழ்கிறார்கள் என்றும், இந்தத் தொகை வருஷம் தோறும் மிகுதிப்பட்டு வருகிற தென்றும், ஒவ்வொரு பதிற்றாண்டுதோறும் மிகுதிப்பட்டு வருகிற தென்றும், ஒவ்வொரு பதிற்றாண்டிலும் பல பத்து லக்ஷம் ஜனங்கள் பசியால் மடிந்தே போகிறார்கள் என்றும் இந்த ஜன சபை உறுதி கூறுவதுடன், இந்த விபத்துக்கிடமான நிலைமையைச் சீர்படுத்துமாறு தக்ஷணமே ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதை இந்த ஜன சபை வணக்கத்துடன் மீளவும் வற்புறுத்திச் சொல்லுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

இந்தியா மந்திரியின் சபையை அழித்தல்

இந்தியா மந்திரி சபையின் தற்கால வடிவத்தை அழித்து விடுதலே மற்றெல்லாச் சீர்திருத்தங்களுக்கும் அவசியமான மூலாதாரம் என்றும் அதற்கு மாறாக காமன்ஸ் சபை மெம்பர்களில் சாசுவதக் கமிட்டி ஒன்றை நியமித்தல் தகும் என்றும் இந்த ஜன சபை கருதுகின்றது.

5. ஐந்தாந் தீர்மானம்:

திரவிய நிலை விசாரணைக் கமிட்டி

இந்தியாவின் பொருட் செலவைக் குறித்து விசாரணை நடத்தும் பொருட்டுப் பார்லிமெண்ட் மெம்பர்களில் சிலரைப்

பொறுக்கி யெடுத்த கமிட்டி யொன்று நியமிப்பதாகப் பிரித்தானிய கவர்ன்மெண்டார் வாக்களித்திருப்பதுபற்றி அவர்களுக்கு இந்த ஜன சபை நன்றி தெரிவிப்பதுடன்;

இங்ஙனம் சுருங்கிய வரையறைக்குள் நடத்தப்படும் விசாரணை போதாதென்றும், அந்த விசாரணையால் யாதேனும் பயன் உண்டாக வேண்டுமாயின், அந்த விசாரணையில் பாரத ஜனங்களின் மீது இப்போது சுமத்தி யிருக்கும் செலவுச் சுமையை அவர்களால் தாங்க முடியுமா என்ற விஷயத்தையும், இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்கு முள்ள திரவிய சம்பந்தங்களின் விஷயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்த ஜன சபை அபிப்பிராயப்படுகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஸம காலப் பரீக்ஷைகள்

1. ஸம காலப் பரீக்ஷைகளின் விஷயத்தில் இந்தியா ராஜாங்கத்தாரின் கொள்கைகளையே ஆதரித்து இந்தியா மந்திரி ஓலை யனுப்பி யிருப்பது கண்டு இந்த ஸபை மிகவும் ஏக்கமடைந்து, ஒப்பந்த உத்தியோகங்களில் ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறையாமல் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் நியமிக்கப்படுதல் அவசியமென்று சொல்வதினின்றும், ஜாதி பேதத்தால் பாரதவாஸிகள் கீழென்பதாகக் காட்டும் கொள்கையானது முன்னே *1833*ஆம் வருஷத்து ஸந்நதுச் சட்டத்துக்கும், *1858* நவம்பர் முதல் தேதி ப்ரசுரமான மஹாராணியின் ஸ்ரீமுகத்துக்கும் விரோதமாக இருப்பதால், இவற்றில் கண்ட கம்பீரமான வாக்குறுதிகளை இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் மறுத்துக் கூற முயலுதல் சரியில்லை யென்று வருத்தத்துடன் தெரிவிப்பதுமல்லாமல், இந்த ஜன ஸபை மேற்படி இந்தியா மந்திரியின் ஓலையை வணக்கத்துடனும் உறுதியுடனும் கண்டிக்கிறது.

2. மாகாண உத்தியோக மண்டலம் இப்போது சமைந்திருக்கும் மாதிரியில் ஜனங்களின் நியாயமான ஆசைகளின் வரம்பைத் தீண்டவில்லை யாதலால், அம்

மண்டலத்தின் படைப்பு இந்த விஷயத்துக்கு ஸரியான தீர்ப்பாகமாட்டாதென்றும், ஸம காலப் பரீக்ஷைகள் ஏற்படுத்தியதினின்றும் கீழ்உத்தியோக மண்டலத்திற்கு நஷ்டங்கள் ஏற்படமாட்டாவென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

3. தச்சு, காடு, தந்தி, உயர்தர நாடுகாவல் (போலீஸ்) இலாகாக்களுக்கேனும் ஸம காலப் பரீக்ஷைகள் ஏன் நடத்தக் கூடாதென்பதற்கு யாதொரு நியாயமும் காட்டப்படவில்லை; எனவே, காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தின் இந்த அம்சத்தைக் குறித்து இந்தியா மந்திரி, இந்தியா கவர்ன்மெண்டார், பற்பல மாகாண ராஜாங்கத்தார் எல்லாருடைய அறிக்கைகளும் பரிபூர்ண மௌனம் ஸாதிப்பதை நோக்கி இந்த ஜன ஸபை வருந்துகிறது.

4. 1893-ஜூன் 2-ம் தேதியன்று காமன்ஸ் ஸபையார் ஸம காலப் பரீக்ஷைகளைப் பற்றிச் செய்த தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றி, பாரத ஜனங்களுக்கு நியாயம் செய்விக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைப் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

***7.* ஏழாந் தீர்மானம்:**

உயர்தர நீதியிலாகா உத்தியோகங்கள்

இந்த தேசத்தில் உயர்தர நீதி உத்தியோகங்களுக்கு ஆள் சேர்க்கும் முறை மிகவும் அதிருப்திக்கிடமாக இருப்பதால், ஜில்லா ஜட்ஜ் பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் ஸரியான நீதி சாஸ்திரப் பயிற்சி அடைந்தவர்களாக இருக்க வேண்டுமென்றும்,

வங்காளம், வட மேற்கு மாகாணங்கள், பம்பாய், சென்னை இந்த மாகாணங்களில் உயர்தர நீதி உத்தியோகங்களும், மெதுவாக தேச முழுதிலுமுள்ள நீதி உத்தியோகங்களும் இப்போதைக் காட்டிலும் அதிகமாக வக்கீல்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை விரும்புகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

வைத்திய இலாகா உத்தியோகங்கள்

1. உயர்தரக் குடிவைத்திய உத்தியோக மண்டலத்தின் தற்கால அமைப்பு நியாயங் கூறத் தகாததும், தீங்கு விளைவிப்பதும் மிதமிஞ்சிய செலவுக் கிடமானதும் ஒழுங்கற்றதுமாக இருக்கிறதென்ற நம் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுடன், நாட்டில் பொது வைத்தியக் கல்வியின் லாபத்தைக் கருதியும், வைத்திய உத்தியோகமும் சாஸ்த்ரத் தொழிலும் அபிவிருத்தி அடைவதை நாடியும், அரசாட்சியில் செட்டு முறையை நாடியும் மற்ற நாடுகளில் இருப்பதுபோலவே இந்தியாவிலும் குடிவைத்திய மண்டலத்தை ராணுவ மண்டலத்தினின்றும் பிரித்து ஸ்வாதீனமாகச் செய்தற்குரிய காலம் வந்துவிட்டதென்றும் இந்த ஜன ஸபை விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறது.

2. மற்ற இலாகாக்களில் ஸமஸ்தானத்திலுள்ள உத்தியோகஸ்தருடன் ஒப்பிட்டு நோக்குமிடத்துக் கீழ்த்தர வைத்திய உத்தியோகஸ்தர் (உதவி ரண வைத்தியர், மருந்துச்சாலை குமாஸ்தா, ஹாஸ்பிடல் அஸிஸ்டண்ட்)களின் நிலைமை பரிதாபத்துக் கிடமாக இருப்பதால், இந்த விஷயத்தை முற்றிலும் ஆராய்ச்சி செய்து சீர்ப்படுத்த வேண்டுமென்றும், இதைக் குறித்து பஹிரங்கமாக விசாரணை செய்ய உத்தியோகஸ்தரும், அல்லாதாரும் கூடிய விசாரணைக் கமிட்டி யொன்று நியமிக்க வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

3. ரஸாயனப் பாகுபாட்டுக்காரரின் இலாகாவை ஸ்வாதீன சாஸ்த்ர இலாகாவாகப் பிரித்து நடத்த வேண்டுமென்று பாரத ராஜாங்கத்தார் விரும்பி யிருப்பதைக் கண்டு இந்த ஜன ஸபை திருப்தியடைவது மன்றி, உதவி ரஸாயன விபக்தாக்களின் பொறுப்பும் சிறப்புமுள்ள தொழிலை ராஜாங்கத்தார் புறக்கணிக்காமல் அவர்களை விசேஷ பண்டிதராக நடத்தும்படி (இந்த ஜன ஸபை) வேண்டுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

சட்டசபை விஷயங்கள்

1. பஞ்சாபில் ஒரு சட்டஸபை ஸ்தாபனம் செய்தல் அந்த மாகாணத்தின் நல்லாட்சிக்கு இன்றியமையாத அவஸர மாதலால், ஏற்கெனவே ஐக்கிய மாகாணங்களில் வைத்திருப்பதுபோலவே கால தாமஸ மில்லாமல் பஞ்சாபில் சட்டசபை வைக்கும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

2. 1892-சட்டசபைச் சட்டத்தின் கீழே இப்போது நடையிலுள்ள விதிகள் குறையுடையன வாதலால் அச் சட்டத்தை இன்னும் நேரே செலுத்தும்வண்ணமாக அவ்வம் மாகாணங்களின் நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் இணங்கியபடி புது விதிகள் செய்யுமாறு ராஜ ப்ரதிநிதியை இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

காலஞ்சென்ற மைஸூர் மஹாராஜாவின் ஞாபகார்த்தம்

மைஸூர் ராஜ குடும்பத்தாருக்கு ஸமீப காலத்தில் நேரிட்ட துக்கத்துக்காக அவர்களிடம் அனுதாபம் தெரிவிப்பதுடன், மைஸூர் ராஜா இறந்ததினின்றும் அவர் மிக்க அறிவு, திறமை, கருணைகளுடன் ஆண்ட ராஜ்யத்துக்கு மட்டுமே யன்றி, பாரத ஜனங்களின் ராஜரீகத் திறமைக்கு அவருடைய ஜனாதிக்யானுஸாரமாகிய ஆட்சி நல்ல திருஷ்டாந்த மாகையாலும், பின்பற்றத்தக்க முன்வழி யாதலாலும், நமது வருங்கால ஸ்வதந்த்ரங்களுக்கு அஃதோர் அறிகுறி யாகையாலும் - பாரத ஜனங்க ளெல்லோருக்கும் விளைந்த பெரு நஷ்டத்தை இந்த ஜன ஸபை அறிக்கை யிட்டுக் கொள்ளுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

ஜூரி விசாரணை

1. ஜில்லா நியாயஸ்தலத்தார் விசாரிக்கத் தகுந்த வழக்குகளில் இப்போது ஜூரி விசாரணை நடைபெறாத இடங்களிலும் அதனை நடைபெறச் செய்தற்குரிய காலம் வந்துவிட்ட தென்று இந்த ஜன ஸபை தெரிவிக்கிறது.

2. ஜூரிகளின் தீர்ப்புக்கு முடிவான ப்ரமாணம் இல்லையென்று ஜூரி விசாரணை விஷயத்தில் *1872*-ல் செய்யப்பட்ட புதிய மாறுதல் தேசத்துக்குத் தீங்கு விளைத்திருப்பதால் அவ் வருஷத்தில் முதல் முதல் ஹைகோர்ட்டாருக்கும் ஸெஷன்ஸ் கோர்ட்டாருக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை உடனே நீக்கிவிட வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

3. விடுதலைத் தீர்ப்புகளுக்கு மேல் நியாயம் (அப்பீல்) கேட்கும் அதிகாரம் இப்போது ராஜாங்கத்தாருக்கிருப்பதை நீக்கி விடுதல் மிகவும் விரும்பத்தகாத விஷயமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ இலாகாக்களைப் பிரித்தல்

தேச முழுதிலும் உள்ள எல்லா ஜனங்களுக்கும் கணக்கிடலரிய கொடுமை செய்யத் தக்கதும், ராஜ்ய பரிபாலனத்தின் பெருங் குறைகளில் ஒன்றுமாகிய இவ் விஷயத்திலுள்ள குறைவை நீக்கும்படி இந்திய ராஜாங்கத்தாரிடமும் இந்தியா மந்திரியிடமும் இந்த ஜன ஸபை பல வருஷங்களாகக் கேட்டு வந்தும் பயன் பெறாமல் முன் இரண்டு பாரத மந்திரிகள் (லா. க்ராஸ்; லா. கிம்பர்லி) மேற்படி தீங்கை ஒப்புக் கொண்டிருப்பது கண்டு சற்றே திருப்தி யடைவதுடன், ரமேசசந்த்ர தத், ம.மோ. கோஷ், மேத்தா - இம் மூவரும் காட்டியுள்ளபடி அந்தச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுதல் மிகவும் ஸுலபமென்று கூறி, ஆதலால் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு கமிட்டி உடனே நியமிக்க உத்தரவு செய்யும்படி இந்தியா கவர்ன்மெண்டாரைப் பிரார்த்தனை செய்வதுடன், மேற்படி கமிட்டியில் பாதிப் பேருக்குக் குறையாமல், பற்பல நியாஸ்தல கார்ய அனுபவத்தாலும் படிப்பாலும் அந்த விஷயத்தை ஆலோசிக்கத் திறமையுடைய சுதேசிகளாக இருக்க வேண்டு மென்றும், அந்தந்த மாகாணத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்களை ராஜாங்கத்துக்கு இயன்றளவு செலவு மிகாதபடி முழுதும் பிரிவு செய்தற்குரிய யோசனை யொன்றை மேற்படி கமிட்டியார் செய்ய,

அந்த யோசனைகளை மாகாண கவர்ன்மெண்டாரின் வ்யாக்யானங்களுடன் ப்ரசுரம் செய்விக்க வேண்டுமென்றும் இந்த ஜன சபை விரும்புகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

பஞ்சாபுக் கொரு ஹைகோர்ட்

பஞ்சாபில் நீதி பரிபாலனம் நேரே நடக்கும் பொருட்டாக அந்த மாகாணத்திலுள்ள முக்கிய நியாயஸ்தலத்தை ஸந்நது பெற்ற ஹைகோர்ட்டாக உயர்த்தக்கூடிய காலம் வந்து விட்ட தென்ற முன்னைக் கூட்டத்தின் கருத்தை இந்த ஜன ஸபை மீளவும் உறுதி செய்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

குடிபடை ஆட்சிச் செலவைக் குறைத்தல்

தேசத்தின் பொருட் குறை சில வருஷங்களாக மிகவும் கவலைக்கிடமாக இருப்பதால், படையாட்சியாளரின் செலவுகளையும், மற்றப் படைச் செலவுகளையும், லண்டன் செலவுகளையும், முடியாட்சிச் செலவையும் குறைப்பதே இப்போதுள்ள ஸ்திதிக்குத் தகுந்த மருந்தாகுமென்ற தனது ஸ்திரமான நம்பிக்கையை எடுத்துச் சொல்வது மல்லாமல், இவ் விஷயத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்யப் பார்லிமெண்டாரின் கமிட்டி யொன்று நியமிக்க எண்ணி யிருப்பதைக் கருதி, அந்தக் கமிட்டியாரின் முன்னே மேற்கண்டபடி செலவுகளைக் குறைப்பதே சரியென்பதை எடுத்துக்காட்டும் பொருட்டாக வெவ்வேறு மாகாணங்களிலுமுள்ள சாசுவதக் காங்கிரஸ் கமிட்டிகள் இயன்ற வரை தலைக்கொரு பிரதிநிதியேனும் யோக்கியராகத் தெரிந்தெடுத்து இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டு மென்று இந்த ஜன சபை விரும்புகிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் உதவிப் பணம்

உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் உதவியை எவ்வகையிலும் நிறுத்துதல் தேசக் கல்வியின் தற்கால நிலையில் அனுசித மென்று தெரிவிப்பதுடன், முந்திய ஜன ஸபைகளின் கருத்தைத்

தழுவிக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் ராஜாங்கச் செலவை மிகுதிப்படுத்துவதன் முக்கியத்தையும், தொழிற் பாட சாலைகளும் கலாசாலைகளும் நியமிப்பதன் அவசியத்தையும் இந்த ஜன சபை வற்புறுத்துகிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

பல திரட்டு

முந்தின ஜன ஸபைக் கூட்டங்களின் கருத்தைத் தழுவி,

i. உப்புத் தீர்வையைக் கடைசியாக உயர்த்திய அளவேனும் குறைத்து விடுக என்றும்.

2. வரவு வரி செலுத்துதற்குரிய வரவின் சிறுமையளவு 500 ரூ. ஆக இருப்பதை 1000 ரூ. ஆக உயர்த்தி விடுக என்றும்,

3. 1890 மார்ச் இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட ராஜாங்க அறிக்கையின் 103, 104, 105 பகுதிகளில் சொல்லியதை முழுதும் நிறைவேற்றுமாறு மாகாண ஆட்சியாளரை இந்தியா ஆட்சியாளர் இடைவிடாமல் வற்புறுத்துக; (சாராயக் கடைகள் வைக்கு முன்னே) கிராமத்து ஜனங்களின் இஷ்டந் தெரிந்து கொண்டு வைப்பதற்கு எளிய முறையொன்று கண்டுபிடித்து நடத்துக என்றும்,

4. சிறைச் சீட்டு (வாரன்ட்) பிறப்பிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப்பட்டோர் தம்மை மாஜிஸ்த்ரேட் விசாரணை செய்யாமல் ஜில்லா நியாய ஸ்தலத்தார் விசாரணை செய்யும்படி கேட்க அதிகார முண்டென்ற ஒரு நிபந்தனை குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்க்கப்படுக என்றும்,

5. நாடு காவல் (போலீஸ்) வட்டத்தில் கீழ்த்தர அதிகாரங்களில் ஆள் தொகையைக் குறைத்தும், சம்பளத்தையும் திறமை யளவையும் மிகுதியுறக் காட்டியும், ஆள் சேகரிப்பதில் இப்போதிலும் மிகுந்த கவனம் செலுத்தியும், உயர்ந்த உத்தியோகங்களில் இப்போதுள்ள உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஸூபரின்டுகள், உதவி ஸூபரின்டுகள் - இவர்களைக் காட்டிலும் உயர்ந்த திறமையும், மதிப்புக்குரிய ஜனப் பகுதிகளுடன் அதிகப்

பழக்கமும், ராணுவ டம்பங்களில் குறைவும் உடையோரை நியமித்தும் அந்த வட்டத்தின் பரிபாலனத்தை வேருடன் சீர்திருத்துக என்றும்,

6. ஆயுதச் சட்டத்தின் கீழே ஏற்பட்ட விதிகள் பாரத பூமியில் வஸிப்போர், காண வந்தோர் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படும் வண்ணமாகவும், காட்டு மிருகங்கள் இருந்து வழக்கமாக மனித உயிர்களையும், கால்நடைகளையும், பயிரையும் அழிக்கும் இடங்களில் அனுமதி யுத்தரவுகள் தாராளமாக வழங்குமாறும், புதிய விதிகளின்படி கொடுக்கும் உத்தரவுகள் அனைத்தும் ஒருவனுடைய ஆயுள் முழுமைக்கும் தவறாக வழங்கியது ருஜுப்பட்டா லன்றி, மீட்கப்படாதனவாய், அவை பிறக்கும் மாகாணங்களின் எல்லை முழுமைக்கும் உபயோகப்படுமாறும் அவ் விதிகளைச் சீர்திருத்துக என்றும்,

7. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து அவற்றில் சட்டப்படி பாரத ப்ரஜைகள் என்று சொல்லத் தக்கவர் தத்தம் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி பாரத ஸேனையில் ஸந்நது பெற்ற அல்லது பெறாத நியமனம் அடைவதற்குரிய படிப்பும் பழக்கமும் ஏற்படுத்துக என்றும்,

8. நாடு முழுதிலும் யுத்தப்பிரியரான ஜாதியார் சேரத்தக்க உட்படை யொன்று சமைத்திடுக என்றும்,

9. ப்ரித்தானியாவில் இருப்பதுபோல் பாரத ஜனங்களி னிடையே விஸ்தாரமான தொரு ஸ்வேச்சைக் காப்புப் (வாலன்டீர்) படை சமைக்க உத்தரவு கொடுத்து அதனை உத்ஸாஹப்படுத்துக என்றும்,

10. நாட்டின் அரசிறை தீராத முட்டுப்பாடாக இருக்கும் நிலையில் வருஷந்தோறும் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும்படி இந்நாட்டில் குடியேற்ற உரிமை பெறாத ஐரோப்பிய, யூரேஷியா ஸர்க்கார் உத்தியோகஸ்தருக்குப் பரிவர்த்தன ஈடுகொடுத்தல் தவறாதலால் அதனை நிறுத்திவிடுக என்றும்,

11. இந்தியா பட்டாளங்களில் வியபிசாரம், தொத்து வியாதி ஸம்பந்தமாக நிகழ்ச்சி பெற்று வரும் விதிகளையும் உத்தரவுகளையும் அனுஷ்டானங்களையும் குறித்து இந்தியா

மந்திரி ஸபைக் கணத்தின் பார்லிமெண்ட் மெம்பர்கள் எழுதிய அறிக்கையின் முடிவுகளை அங்கீகரித்து அதை நிறைவேற்றுக என்றும், - (அம் முடிவுகளாவன (1) அந்த அறிக்கையில் விஸ்தரித்துள்ள முறைமையும், நடைகளும் அவற்றுக்காதாரமான விதிகளும் 1888 ஜூன் 5ஆம் தேதியில் காமன்ஸ் சபையார் செய்த தீர்மானத்தின் தெளிந்த பொருளுக்கும் கருத்துக்கும் பொருந்தவில்லை யென்பதும்; (2) முறையாக நடைபெற்றுவரும் இக் கெட்ட அனுஷ்டானங்களை நீக்குவதற்கு ஸ்பஷ்டமாக புதிய சட்டம் செய்வதே ஸரியான வழி யென்பதும் ஆம்.) இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை வேண்டிக் கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளின் அதிகாரத்தைக் குறைத்தல்

1861ஆம் வருஷத்து 5ஆம் போலீஸ் சட்டத்தின் 15ஆம் பகுதியில் சில மாறுதல்களும் சேர்க்கைகளும் செய்வதினின்றும் தண்டப்போலீஸ் செலவிருத்தல், நஷ்ட ஈடு கொடுத்தல் என்ற அம்சங்களில் ஜில்லா மாஜிஸ்திரேட்டு களுக்குக் கொடுக்கக் கருதி யிருக்கும் அதிகாரங்கள் மிகவும் பொறுப்பற்றன, ஆபத்துக் கிடமாயின, அபூர்வத் தன்மை யுடையன என்ற தன் அபிப்பிராயத்தை பாரத ராஜாங்கத்தாரிடம் அறிவிக்கும்படி இந்த ஜன ஸபை தனது ஸபாநாயகரை நியமிக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

காட்டிலாகா

1894 அக்டோபர் 20 இந்தியா கெஜட்டில் ப்ரசுரமான 22 (6)ஆம் இலக்கத்துச் சுற்றுக் கட்டளை பிறப்பித்ததின் பொருட்டாக இந்த ஜன ஸபை இந்தியா ராஜாங்கத்தாருக்கு மனப்பூர்வமான நன்றி தெரிவிப்பதுடன், காடுகளின் பரிபாலன விஷயத்தில் அரசிறையின் லாபத்தைக் காட்டிலும் குடியானவர்களின் விவஸாய ஸௌகர்யங்களையும் அவஸரங்களையுமே பெரிதாகக் கருதுவ தென்ற நியாயம் அதில் பேசப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி யடைகிறது.

மேலும் மேற்படி தீர்மானங்களில் 3, 4 பகுதிகளின் கீழே காண்கிற காடுகளில் விறகு, மேய்ச்சல் தீவனம், வீடுகளுக்கும் உழவுக் கருவிகளுக்கும் சிறு மரம்; தின்னக் கூடிய விளைபொருள் என்னுமிவை எல்லாருக்கும் இனாமாக விட்டு விடவேண்டுமென்றும், யுக்தமானால் அளவு முதலியனவற்றை ராஜாங்கத்தார் தமக்குசிதமாகத் தோன்றுமாறு வரம்புறுத்திக் கொள்ளலாமென்றும், இப்போதுள்ள நிபந்தனைகளால் கஷ்டம் நேரும் இடங்களில் தற்காலக் காட்டெல்லைகளை மேற்கூறப்பட்ட தீர்மானத்தின் கருத்துப்படி சீர்திருத்த வேண்டுமென்றும், இப்போது வரம்பு கட்டிய எல்லைகளின் விஷயத்தில் மேற்படி இலாகாவின் கீழ்த்தர உத்தியோகஸ்தரால் குடியானவர் தம் குடியுரிமைகளை அனுபவிப்பதில் எவ்வித இடையூறும் தொல்லையும் நிகழாதவண்ணஞ் செய்ய வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

சுதேச ராஜ்யங்களில் பத்திரிகைகளின் வாயை அடக்கல்

1891 ஜூன் 25-ல் இந்தியா ராஜாங்கத்தார் அன்ய இலாகா உத்தரவொன்றிலே சுதேச ராஜ்யங்களில் ப்ரிட்டிஷ் பரிபாலனத்தின் கீழிருக்கும் எல்லைகளில் பத்திரிகைகளின் மூச்சைப் பிடிக்கும் விதி செய்யப்பட்டிருத்தல் பிற்போக்காகவும், கொடுங்கோன்மையாகவும், தீமையாகவும், ஆழ்ந்த ராஜ தந்திரத்துக்கும், ஜனங்களின் விடுதலைக்கும் விரோதமாகவும் இருப்பதனால், அதைப் பலமாக ஆக்ஷேபிப்பதுடன், அதைத் தாமஸமின்றி ஒழித்துவிடும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

20. இருபதாந் தீர்மானம்:

நீர் வரி

நீர் வரி விதிக்கும் விஷயத்தில் பாரத ராஜாங்கத்தாரின் முறைமை கொடுங்கோன்மையாக தீர்வையில் ஒரு புதுச் சலன ஹேதுவாகவும் இருப்பது கண்டு அச்சமெய்தி, அந்த வரி

விதிக்கு மிடத்தே நிலத்தில் பணம் செலவிட்டிருக்கும் நிலஸ்வான்தார்கள் முதலியவர்களின் உரிமைகளுக்குத் தீங்கில்லாமல் சில நியதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

தென் ஆப்பிரிகாவில் ஹிந்து தேசத்தாரின் கஷ்டங்கள்

தென் ஆப்பிரிக்காக் குடியேற்ற நாடுகளில் வாழும் ஹிந்து தேசத்தாரின் ப்ரார்த்தனைக் கிணங்கி, அவர்களுடைய வாக்குச் சீட்டுரிமையை நீக்கிவிட வேண்டுமென்பதாகக் குடியேற்ற ராஜாங்கத்தார் கொணர்ந்திருக்கும் மசோதாவைத் தள்ளி விடும்படி இந்த ஜன ஸபை ப்ரித்தானியா ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

கீழே குறிப்பிடப்பட்ட கனவான்கள் ஒரு கணமாகக் கூடி நம்முடைய 1, 2, 3, 6, 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21 தீர்மானங்களை லார்ட் எல்ஜின் முன்னே சென்று கொடுக்கும்படியாகவும், இதுபோலவே ஜன ஸபையின் ப்ரிட்டிஷ் கமிட்டியாரும் லண்டனில் இந்தியா மந்திரியைப் பார்வையிட ஒரு ப்ரதிநிதிக் கூட்டம் ஏற்படுத்தும்படியாகவும் இந்த ஜன ஸபை திட்டஞ் செய்கிறது.

ஸ்வதேசத்து கணம்

வங்காளம், பேஹார் மாகாணங்களிலிருந்து: தர்பங்கா மஹாராஜா, ரமேசசந்த்ர மித்தர், உமேசசந்த்ர பானர்ஜி, ஸுரேந்த்ரநாத் பானர்ஜி, ஜெ. கோஷால், ஸாளிக்ராம் ஸிங், ஹூரேருபுதீன், ஜ்யோதீந்த்ர நாத சௌதுரி, வைகுண்ட நாத் சேன்.

வடமேற்கு மாகாணங்களினின்றும்: ராஜ ராம்பால் ஸிங், சாரு சந்த்ர மித்தர்; அயோத்தியினின்றும்: ஷேக் ராஜா ஹுஸேன் கான், ஹமீத் அலிகான், கோகுல் சந்த்.

பஞ்சாபிலிருந்து: ஸர்தார் தயாளஸிங் மஜீத்தியா, காளீ ப்ரஸன்ன ராய், ஜஸ்ஸா வாலா, ஷேக் உமர் பக்ஷ், லாலா முரளீதர், பக்ஷீ ஜைஷீ ராம்.

பம்பாயிலிருந்து: பி.மே. மேத்தா;

மத்திய மாகாணங்களிலிருந்து: ஜீ. எம். சித்நாவிஸ், நாராயணஸ்வாமி நாயுடு.

புனாவிலிருந்து: வீ.எம். *(bh)*பீடே, எஸ்.பி. *(b)(bh)*பாட்டே, என்*(b)*பி. மூளே, பி.எல். நாக்பூர்கார்.

பேராரிலிருந்து: தேவராவ் விநாயக்

சென்னையிலிருந்து: கள்ளிக்கோட்டை மாநவிக்ரம ராஜா, அ. ஸபாபதி முதலியார், பி. அநந்தாசார்லு, ஜி. சுப்பிரமணிய அய்யர்.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டிச் செலவுகள்

ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுகளுக்காகவும், காங்க்ரஸ் பத்திரிகையாகிய 'இந்தியா'வின் செலவுக்காகவும் ரூ. 60,000 பகுத்து வைக்கும்படிக்கும், 1895ஆம் வருஷச் செலவுகளுக்கு இப்போதேனும், இனிக் கமிட்டியிலேனும் தீர்மானம் செய்கிறபடி வெவ்வேறு வட்டத்தாரும் சந்தா செலுத்தும் படிக்கும் இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டிக்கு நன்றி

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் முதலிய ப்ரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் இந்தியாவுக்குச் செய்த ஸேவைகளின் பொருட்டாக அவர்களுக்கு இந்த ஜன ஸபை ஆழ்ந்த நன்றி யுணர்ச்சி தெரிவிக்கிறது.

25. இருபத்தைந்தாந் தீர்மானம்:

பொதுக் கார்யதரிசி

வரும் வருஷத்தில் தனது பொதுக் கார்யதர்சியாக இந்த ஜன ஸபை மீளவும் ஏ.ஒ. ஹியூமையே நியமிக்கிறது.

26. இருபத்தாறாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

1895-ல் கிறிஸ்மஸ் தினத்துக்கப்பால், பின்னிட்டு நிச்சயிக்கப்படும் தேதியில், பாரத ஜன ஸபையின் பதினொன்றாங் கூட்டம் கூடுக என்று இந்த ஜன ஸபை நிச்சயித்துக் கொள்ளுகிறது.

27. இருபத்தேழாந் தீர்மானம்:

ஜன ஸபையின் ஆக்கம்

ஜன ஸபையின் வடிவத்தை நிர்ணயிக்கவும், ப்ரதிநிதிகளின் தொகை, தகுதிகள், ஸபை கூடும் ஸ்தலம் முதலிய விஷயங்களின் ஸம்பந்தமான விதி நியமங்களை வகுக்கவும் காலம் வந்துவிட்டதென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுவதுடன், இந்த நோக்கம் கைகூடுமாறு புனா சாசுவத கணத்தார் விதிகள் வரைந்து அவற்றை வெவ்வேறு சாசுவதக் கமிட்டியாருக்கு அனுப்பி, அவர்கள் அதன்மேல் அனுப்பும் அறிக்கைகளையும் உத்தேசிக்கப்பட்ட விதிகளையும் அவற்றின்மீது தன் அறிக்கையையும் அடுத்த ஜன ஸபையின் ஆலோசனைக்கு ஸமர்ப்பிக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

பத்தாம் ஜனசபையின் சரித்திரமும்

பத்தாம் அத்யாயமும் முற்றுப்பெற்றன

பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

இரண்டாம் பாகம்

சென்னை
சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
1920

 [விலை [illegible]

ஜன சபையின் சரித்திரம்

பதினொன்றாம் அத்தியாயம்

11ஆம் ஜன ஸபையின் கூட்டம்

பேஷ்வாக்களின் ராஜதானியாகிய புனா நகரத்தில் ஜன ஸபையின் பதினொன்றாங் கூட்டம் 1895 டிஸம்பர் 27, 28, 30 தேதிகளில் நடந்தது. 29ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை யாதலால் அன்று ஸபை நடைபெறவில்லை. 1584 பிரதிநிதிகள் வந்திருந்தனர். மற்ற ஸாமான்ய ஜனங்களும் பெருங் கூட்டமாகத் திரண்டனர்.

உபசார கணத் தலைவராகிய ராவ்பகதூர் V.M. பீடே என்பவர் மிகவும் வ்ருத்த தசை அடைந்து விட்டபடியால் அவருடைய ப்ரஸங்கத்தை அவர் ஸ்தானத்தில் கோபால க்ருஷ்ண கோகலே வாசித்தார். பாரத ஜாதி ஒன்றென்பதை நிலைநிறுத்துவதே ஜன ஸபையின் நோக்கம் என்று பீடே சொன்னார்.

பிறகு ஸ்ரீமான் ஸுரேந்த்ரநாத பானர்ஜி ஜன ஸபையின் அக்ராஸனபதியாக வீற்றிருந்தார்.

ஸபாநாயகர் ப்ரசங்கத்தின் ஸாரம்

அப்போது ஸ்ரீ ஸுரேந்த்ரநாத பானர்ஜி சொல்லுகிறார்:

ஸஹோதர ப்ரதிநிதிகளே, சீமாட்டிகளே, கனவான்களே,

என்னை ஜன ஸபையின் தலைவன் ஆக்கினீர்கள். இதனினும் உயர்ந்த பதவி வேறில்லை. ஆத்மாவைத் திருப்தி செய்வதற் கடுத்த கடமை ஸ்வதேசத்தாரைத் திருப்தி செய்தல்.

இந்த ஸ்தானத்திற்கு என்னை நியமித்தது கருதி உங்களுக்கு நன்றி சாற்றுகிறேன்.

ஆனால், பதவி எத்தனைக் கெத்தனை உயர்ந்ததோ அத்தனைக் கத்தனை கடமையும் பெரிதாகும். உங்களுடைய ஸபாநாயகன் எத்தனை பலஹீனமாக இருந்த போதிலும், அவனையும் இந்த ஜன ஸபையையும் ஒரு பெரிய சக்தி பின்னே நின்று காப்பாற்றுகிறது. அந்த சக்தி யாதெனிலோ நாடு முழுதிலும் கல்வி கற்ற மக்கள் அனைவரும் நமது ஸபையின் விஷயத்தில் செலுத்தும் நல்லெண்ணமேயாம்.

வங்காளத்தில் சில ஸ்திரீகள் ஜன ஸபையை ஒரு தெய்வமாகக் கொண்டு வணங்குகிறார்கள் என்ற செய்தியை ஓராங்கிலப் பத்திரிகையில் படித்தேன்.

இதனால் நம்முடைய ஜனங்கள் மூட பக்தி மிகுந்தவர்க ளென்றும், ஆதலால் பிரதிநிதி யாட்சிக்குத் தக்கவர்களில்லை யென்றும் அப் பத்ராதிபர் சொல்லுகிறார்.

நமது தேசத்தில் பெண்களுக்கும் பாமர ஜனங்களுக்கும் வாக்குச் சீட்டுரிமை கொடுக்க வேண்டு மென்று நாம் கேட்கவில்லை.

(மொழிபெயர்த்தவரின் குறிப்பு: இங்ஙனம் ஸுரேந்த்ர நாத பானர்ஜி 1895-ல் சொன்னார். இப்போது அவரே இங்ஙனம் சொல்ல மாட்டா ரென்று நம்புகிறோம். இங்கிலீஷ் படித்தவர்களில் சிலருக்கு மாத்திரம் ப்ரதிநிதி யுரிமை கொடுத்தால் போதுமென்பது அக் காலத்து நினைப்பு. இப்போது ஆண், பெண், கற்றோர், கல்லாதோர், ஏழைகள், செல்வர் எல்லாருக்கும் ப்ரதிநிதி யாட்சி கிடைக்கவேண்டு மென்பதே நமது தேசத் தலைவர்களின் நோக்கம்).

மேலே ஸுரேந்த்ரநாத பானர்ஜி சொல்லுகிறார்:

நமது ஜன ஸபையின் ஆரம்பத்தில் கஷ்டங்களும் விபத்துக்களும் அதிகப்பட்டிருந்த ஸமயத்தில் நம்மவருள்ளே ஒற்றுமை வலியுற்று நிற்றல் அவசியமாயிற்று. இப்போது பாலாரிஷ்டங்கள் நீங்கி நாம் சற்றே ஸௌக்ய நிலைமையை அடைந்திருக்கிறோம்.

இத்தருணத்தில் ஒற்றுமைத் தளைகள் நெகிழ்வது ஸஹஜம். ஆனால், அவை அங்ஙனம் நெகிழ்ச்சி பெறாதபடி நாம் ஜாக்ரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஆசாரத் திருத்தம்

ஆசாரத் திருத்த ஸம்பந்தமான சண்டைகளுக்கும் ஜன ஸபையின் நோக்கங்களுக்கும் யாதொரு தொந்தமும் கிடையாது. இவ் வருஷத்தில் புனாவில் இதைக் குறித்து நடந்த குழப்பங்க ளெல்லாம் நீதி - மஹாதேவ கோவிந்த ரானடேயின் செய்கையால் தணிந்து விட்டது பற்றி அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஸட்டஸபைத் திருத்தம்

சட்டஸபையைச் சற்றே விஸ்தாரப்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால், அதில் அதிகப் பயன் விளையவில்லை. ப்ரித்தானிய - ஐயர்லாந்து தீவுகளில் 4 கோடி ஜனங்களின் வ்யவஹாரங்களைக் கவனிக்க 670 பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

வங்காளத்திலோ 7 கோடி ஜனத் தொகைக்கு 7 பிரதிநிதிகள்! ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களையும் சேர்த்து ஜனப் பிரதிநிதிகளாகக் கணக்கிட்டால் 10 பேர்! அல்லது அந்தச் சட்டஸபை முழுமையும் எல்லாருமே ஜன ப்ரதிநிதிகள் என்று கணக்கிட்ட போதிலும், இருபது பேருக்கு மேல் ஆகவில்லை. சீட்டோ "உருட்சி முறை"யில் நடைபெறுகிறது. (அதாவது ஒரு வட்டத்தார் இந்த முறை சீட்டுப் போட்டால் அடுத்த முறை மற்றொரு வட்டத்தார் போட வேண்டு மென்ற முறை) ஆதலால் ஸபையில் முழு முழு ஜில்லாக்களுக்கே ப்ரதிநிதி யில்லாமல் போய்விடுகிறது. லார்ட் ஸாலிஸ்பரியும், க்ளாட்ஸ்டனும் இந் நாட்டாருக்கு மெய்யான ப்ரதிநிதி யுரிமை கிடைக்க வேண்டு மென்பதே தமது விருப்ப மென்று கூறிய வார்த்தைக்கும் இங்குற்ற அனுஷ்டானத்துக்கும் எவ்வளவு பேதம் ஏற்படுகிறது பார்த்தீர்களா?

மேலும் ஸபைகளில் மெம்பர்கள் கேள்வி கேட்கும் உரிமையை வரையறைப் படுத்த உத்தேசம் கொண்டிருக்கிறார்க ளென்று சில வதந்திகள் உலாவுகின்றன.

இங்ஙனம் வரையறைப் படுத்தக் கூடாது. அரசிறையின் விஷயத்தில் சட்டஸபையில் விவாதம் செய்வதுபோல் வெறும் பொய்க் கூத்து நடக்கிறது. ஜனப் பிரதிநிதிகளின் வாய்ச் சொல்லுக்கு யாதொரு மதிப்புமில்லை.

இந்தியாவின் பொருள் நிலை

1834ஆம் வருஷ முதல் 1894ஆம் வருஷம் வரை உள்ள 60 வருஷங்களில் பாரத நாட்டின் பொருள் நிலையின் சரித்திரத்தை ஸம்க்ஷேபமாகச் சொல்லுகிறேன். இந்தக் காலத்துள் 34 வருஷங்களில் அரசிறையில் குறை விழுந்தது. 83 கோடி ரூபாய் மொத்தக் குறைவாயிற்று. மற்ற 26 வருஷங்களில் மிச்சப் பணம் கையிருப்பாகச் சேர்ந்தது 42 கோடி ரூபாய். 83 கோடிக்கு 42 கோடி போனால் 41 கோடி ரூபாய் குறைவு பட்டது. இந்தக் குறைவுக்குக் கடன் வாங்கும்படி நேரிட்டது. கடனும் குறைவும் உடன் செல்லும் தோழிக எல்லவோ? அதாவது ராஜாங்கம் தான் வாங்கிய கடனை மீட்டும் இறுக்க முடியாத நிலைமைக்கு ஏற்கெனவே வந்து விடவில்லை யெனிலும் அந்தப் பாதையில் செல்லுகிறது.

ராணுவச் செலவை வளர்த்தல்

இவ்வாறு பரிதாபத்துக் கிடமான நிலையில் நமது ராஜாங்கத்தார் வந்து சேர்ந்ததன் முகாந்தரம் யாதெனில், பெரும் பகுதி அவர்கள் எல்லை நாட்டாரின் மீது படையெடுத்துச் செல்லும் செலவுகளே யாம். இனி, ரூபாயின் மதிப்புக் குறைந்திருப்பதையும் இந்த நிலைக்குரிய காரணங்களில் ஒன்றாகக் காட்டக் கூடும்.

அதனாலும் பல தீமைகள் விளைந்துதா னிருக்கின்றன. ஆனால், ராஜாங்கத்தாரின் தற்காலப் பண இடர்ப்பாடுகளுக்கு அதனை முழுக் காரணமாகவேனும் முக்ய காரணமாகவேனுங் காட்டுதல் தவறு.

ஸர் ஆக்லன்ட் கால்வின் ஸமீப காலத்தில் "நைன்டீந்த் ஸென்சரி" (பத்தொன்பதாம் நூற்றாண்டு) என்ற பத்திரிகையில் எழுதி யிருக்கும் வ்யாஸ மொன்றில் 1883 முதல் 1893ஆம் வருஷம் வரை பாரத ராஜ்யச் செலவு 11 கோடி ரூபாய் அதிகமாக

ஏறி யிருப்பதைக் குறித்துப் பேசுகையில் அதற்கு மூன்று காரணங்கள் காட்டுகிறார். அவற்றுள் ராணுவச் செலவே முக்ய மென்கிறார்.

சித்ரால் படை யெழுச்சி

இந்தியாவில் பொது ஜனங்களுக்கு ஞாபகக் குறை அதிகம். போன கோடையில் அந்தப் படை யெழுச்சி புறப்பட்ட காலத்தில் எல்லாச் செலவுகளும் கூடி மொத்தம் 15 லக்ஷ ரூபாய்க்கு மேலே போகா தென்று சொன்னார்கள். எனிலும், இதுவரை மேற்படி படை யெழுச்சிக்காக 2 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகி விட்டது. இன்னும் இவர்கள் சித்ராலைச் சேர்த்துக் கொள்ளப் புகுமிடத்தே எவ்வளவு மிகுதிச் செலவு நேருமோ அறிய மாட்டோம்.

ராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும். எல்லையை விசாலப்படுத்தும் முறையை நீக்க வேண்டும். லண்டன் செலவுகள் பெரிய பாரமாக மூண்டுவிட்டன. இன்னும் மிகுதியாய்க் கொண்டு வருகின்றன. 10 வருஷங்களில் அந்தச் செலவுகள் 100-ல் முப்பது பங்கு ஏறிப்போய் விட்டன. 1882-ல் 17,366,000 ரூபாயாக இருந்தது. 1892-ல் 22,911,000 ரூபாய் ஆகிவிட்டது.

லண்டனிலுள்ள இங்கிலீஷ் பொக்கசத்திலிருந்து கொடுக்க வேண்டிய பெருஞ் செலவுகள் பலவற்றை நமது தலைமீது சுமத்தி யிருக்கிறார்கள். லண்டனில் இந்தியா மந்திரி ஸபையின் கட்டடச் செலவு 5,00,000 பவுன் நாம் கொடுத்தோம். குடியேற்ற மந்திரியின் கார்யஸ்தலக் கட்டடத்துக்கு ப்ரித்தானிய ராஜாங்கத்தார் 1,00,000 பவுன் செலவிட்டார்கள்.

இந்தியா மந்திரியின் கார்யஸ்தலத்துக்கு 5,00,000 லக்ஷம் பவுன் ஆனதேன்? குடியேற்ற மந்திரியின் கார்யஸ்தலக் கட்டடத்துக்கு 1,00,000 பவுன் போதுமென்றதேன்? இந்தியா மந்திரியின் சிப்பந்திச் செலவு முதலியவற்றுக்கு வருஷத்தில் 2,30,000 பவுன் நாம் செலவிடுகிறோம். குடியேற்ற மந்திரியின் சம்பள முதலியனவோ குடியேற்ற நாட்டாரால் கொடுக்கப் படவில்லை.

பிரித்தானிய கவர்ன்மெண்டாரே அந்த இனத்தில் 41,000 பவுன் வருஷத்தில் செலவிடுகின்றனர். லண்டனிலுள்ள சீனத் தூதரின் செலவுக்கு நாம் வருஷந்தோறும் 12,500 பவுன் கொடுத்து வருகிறோம்.

லண்டனிலுள்ள பாரஸீகத் தூதரின் செலவுக்கு வருஷந்தோறும் 7,000 பவுன் நாமே கொடுக்கிறோம். அங்ஙனமே துருக்கிய அராபியாவில் இங்கிலாந்தின் ப்ரதிநிதிக்குச் செலவாகும் தொகையும், பாக்தாதில் உள்ள ஆங்கிலத் தூதருக்குச் செலவிடும் தொகையும் சேர்ந்து வருஷந் தோறும் 1,72,360 பவுன் நம்முடைய தலைமீது பொறுக்கிறது.

ஸாம்ராஜ்யப் போர்களில் இந்தியாவின் பங்கு

இங்கிலாந்தினுடைய யுத்தங்களுக்காக நம்மவர் முற்காலத்தில் மிகுந்த ரத்தத்தையும் பொருளையும் பலி கொடுத்திருக்கிறார்கள். அபிஸ்ஸீனியாப் படை யெடுப்பில் நம்முடைய ஜனங்கள் போய் உதிரஞ் சிந்தி மடிந்தனர். இந்தியாவின் அரசிறையிலிருந்து பணம் செலவிட்டனர். இவ்வாறு பல பல த்ருஷ்டாந்தங்கள் காண்பிக்கலாம்.

இந்தியாவின் வறுமை

1882-ல் லார்ட் க்ரோமர் (அப்போது அவருக்கு ஸர் எவெலின் பேரிங் என்று பெயர்) சில கணக்குகள் சொன்னார். அவற்றை இங்கு காட்டுகிறேன். ப்ரித்தானிய ஜனங்களில் சராசரி ஒவ்வொருவனுக்கும் வருஷ வரும்படி 33 பவுன். பிரான்ஸில் 23 பவுன். ஐரோப்பாவில் மிகவும் ஏழையான துருக்கியிலேகூட சராசரி வருஷ வரும்படி ஒவ்வொருவனுக்கு 4 பவுன். ருஷியாவில் 9 பவுன் என்று முல்ஹால் என்ற பண்டிதர் கணக்கிட்டுக் கூறுகிறார்.

இந்தியாவில் தலைக்கு வருஷ வரும்படி 27 ரூபாய்! (பவுன் அன்று ரூபாய். அதாவது 2 பவுன்கூட ஆகவில்லை) இங்கிலாந்து தேசத்தான் தனது 33 பவுன் வரும்படியின் மீது 100-க்கு 7 தீர்வை செலுத்துகிறான். பாரதவாஸியோ தனது ஒன்றே சொச்சம் பவுன் வரவின் மீது 100-க்கு 5 தீர்வை செலுத்துகிறான்.

இதனால் அன்றோ ஸர் வில்லியம் ஹன்டர் நம்முடைய ஜனங்களில் 4 கோடி பேருக்கு நாள்தோறும் ஒரேவேளைக்கு மேல் உணவு கிடைக்கவில்லை யென்று கூறினார். இதனாலே யன்றோ நாகரிக தேசங்களில் மனிதன் இனிப் பஞ்சம் நேர இடங் கொடுக்க மாட்டா னென்று பண்டித க்யுவியர் (Cuvier) கூறிய இந்த நவீன காலத்திலேகூட நமது தேசத்தில் அடிக்கடி வந்து லக்ஷக் கணக்கான ஜனங்களை வாரிக்கொண்டு செல்லும் பஞ்சங்கள் நிகழ்ச்சி பெறுகின்றன. க்யுவியர் சொல்லியது ஐரோப்பாவில் மெய்யே யன்றி நமது நாட்டில் மெய் யன்று. சென்ற நூற்றாண்டில் இந் நாட்டை ஒரு ஆங்கில வாக்கி "ஆசியாவின் பூஞ்சோலை" என்றும், "கீழ்த்திசையின் களஞ்சியம்" என்றும் வியந்து பேசினார். சென்ற ஒரு நூற்றாண்டுக்குள்ளே தான் இத்தனை தாழ்வான நிலைமைக்கு நாம் வந்து சேர்ந்து விட்டோம்.

"பயோனீர்" பத்திரிகை சொல்லுகிறது:

> "இந்தியாவில் பெருங் கூட்டங்களான ஜனங்கள் ஏழைகள்; மிகவும் ஏழைகள். நம்முடைய ஆட்சியோ செலவு மீறிய ஆட்சி. சித்ரால் சங்கடத்தைப்போல் அநாவசியமான வீண் யத்தனங்களில் அடிக்கடி பொருளை விழலாக்குகிறோம். வேறு பல இலாகாக்களின் செலவையும் சுருக்கினால் நல்லது" என்கிறது.

பல செய்திகள்

மேலும், மாஞ்செஸ்டர் வ்யாபாரிகளின் அனுகூலத்தை நாடி கவர்ன்மெண்டார் இந்தியாவில் புதிதாக முளை விட்டிருக்கும் யந்திர ஆலைத் தொழிலுக்குத் தீங்கான சுங்கத் தீர்வை விதித்திருப்பதை உடனே ரத்து செய்துவிட வேண்டும். மாஞ்செஸ்டருக்கு நன்மை விளையுமாறு பாரத ராஜாங்கத்தார் பாரத ஜனங்களுக்குத் தீமை செய்தல் அடாது.

இந் நாட்டில் ஸ்திரமாகக் குடியேறாத ஐரோப்பிய - யூரேஷிய உத்யோகஸ்தர்களுக்கு ராஜாங்கத்தார் பரிவர்த்தன நஷ்ட ஈடு கொடுப்பது தவறு. அதனை உடனே நிறுத்திவிட வேண்டும். ராஜாங்க உத்தியோகங்கள் பாரத பூமியின் மக்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

சிவாஜியும், ஹைதர் ஆலியும், ரணஜித ஸிங்கும்; மாதவ்ஜீ ஸிந்தியாவும் இக்காலத்தில் பிறந்திருந்தால் அவர்களுக்கு நமது நாட்டு ஸைந்நியத்தில் ஒரு சிறு ஸேனாபதி (கர்னல்) வேலைகூடக் கிடைத் திராது. ஒரு தளகர்த்தன் (காப்டின்) ஸ்தானங்கூடப் பெற்றிருக்க மாட்டார்கள்.

இங்ஙனம் ஒரு தேசத்தின் ஜனத் தொகை முழுதையும் ராணுவ விஷயத்தில் ஜாதி பிரஷ்டம் செய்வதி னின்றும் ஸாம்ராஜ்யத்தின் உறுதிக்கும் பலத்துக்கும் பெருமைக்கும் அனுகூலம் ஏற்படாது.

நியாயஸ்தலங்களில், குற்ற வழக்குகளில் பாரத மக்களும் ஐரோப்பியரும் வாதி, பிரதிவாதிகளாக நிற்குமிடத்தே பக்ஷபாத மற்ற நீதி கிடைக்கவில்லை.

வக்கீல்களுக்குக் கக்ஷிக்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தாரை ஒழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் வக்கீல் மசோதா கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அனுபவத்தில் இது மேற்படி கூட்டத்தாருக்குத் தீமை விளைக்காமல், ஜில்லா ஸ்தலங்களிலுள்ள வக்கீல்களுக்கே தீங்காக முடியுமென்று தோன்றுகிறது. இதனிலும் ஜூரி மசோதாவிலும் பலவிதமான ஆக்ஷேபங்களுக் கிடமுண்டாவதால் இவ் விரண்டு மசோதாக்களையும் சட்ட மாக்காமல் நிறுத்திவிட வேண்டும்.

பாரத நாட்டின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வழிகள் தேட வேண்டும். நீதி, நிர்வாக இலாகாக்களைப் பிரித்துவிட வேண்டும். ராஜாங்க உத்யோகங்களின் பொருட்டு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலப் பரீக்ஷைகள் நடத்துதல் தகும். இங்கிலாந்தினிடம் நம்பிக்கை செலுத்த வேண்டும். ஆனால், விடுதலையி னிடத்தே தீராத பக்தியை நாட்ட வேண்டும்.

என்று ஸுரேந்த்ரநாத பானர்ஜி தமது உபந்யாஸத்தை முடித்தார்.

இவ் வருஷத்துக் கூட்டத்தில் பின்னே காட்டுகிற முக்யமான செய்திகள் குறிக்கத்தக்கன.

எல்லைக்கு வெளி நாடுகளில் இங்கிலாந்து தனது ராஜ்ய விருத்திக்காகச் செய்யும் போர்களில் இந்தியாவிலிருந்து ஆள்பலம் கொண்டு போனால், செலவிலேனும் ஒரு பங்கு இங்கிலீஷ் பொக்கசத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டு மென்ற எட்டாந் தீர்மானத்தைப் பற்றிப் பேசுகையில் மிஸ்டர் *H.A.* வாடியா என்பவர்,

> "அந்தோ! ஆசியாவைப் பூமண்டலப் படத்தினின்றும் அழித்து விட்டனர். வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும் ஐரோப்பா வந்து ஆசியாவின் மேலே ஏறுகிறது. ருஷியாவும், ப்ரான்ஸூம் இங்கிலாந்தை பயமுறுத்த வேண்டுமானால் இந்தியாவிலே பயமுறுத்துகின்றன!"

என்று கூறி வருந்தினர்.

ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் இந்தக் கூட்டத்தில் வைத்ய இலாகாத் திருத்தத்தைப் பற்றிப் பேசுகையில் ஆங்கிலத்தில் பேசாதபடி மஹாராஷ்ட்ர பாஷையில் பேசினார்.

பீராரிலிருந்து வந்த பாண்டுரங்க பாபுஜி என்ற விவசாயி பீராரில் குடியானவர்களில் பலருக்கு வருஷ முழுதும் செலவு செய்ய ஏழெட்டு ரூபாய்க்கு மேல் கிடைக்காமல் அவர்கள் தத்தளிப்பதைக் குறித்துப் பேசினார்.

குற்றவாளியாகித் தண்டனைப்பட்டிருக்கும் கைதி ஒருவனுக்கு ராஜாங்கத்தார் வருஷத்தில் 40 அல்லது 50 ரூபாய் செலவிடுகிறார்க ளென்பதையும், யோக்யமான குடியானவனுக்கு வருஷத்தில் அதிலே ஐந்திலொரு பங்கு பணத்தைக் கொண்டு ஜீவிக்க நேர்கிற தென்பதையும் ஸ்ரீ பாபுஜி ஒப்பிட்டுக் காட்டினார்.

பின்பு பத்தொன்பதாந் தீர்மானத்தை ஒட்டிப் பேசுகையில் கோபால க்ருஷ்ண கோகலே பாரத தேசத்துக் குடியானவனைப் பின்வருமாறு வர்ணனை புரிந்தார்:

> "பட்டினி கிடந்து, வற்றிப் போய், சுருங்க லெடுத்து இந்தியக் குடியானவன் காலை முதல் மாலை வரை தனது சொற்ப உணவுக்காக உழைக்கிறான். அளவில்லாத பொறுமையும், சாந்தமும், ஸாதித்தலு முடையவனாய் தன்னை ஆளுவோரின்

ராஜ்ய ஸபையில் பிரதிநிதி யற்றவனாய், தெய்வமும் மனிதரும் தனது முதுகின் மீது சுமத்தும் பாரத்தை யெல்லாம் அவன் தணிவுடனே சுமக்கக் காத்திருக்கிறான்."

ராய் ஸங்கலனி என்ற ஸந்யாஸி ஒருவர் வந்து 23ஆம் தீர்மானத்தை அனுஸரித்துப் பேசினார். தாம் உலகத்தை யெல்லாம் துறந்து விடினும் மனுஷ்ய ஸேவையையும் தேச பக்தியையும் துறக்கவில்லை யென்று இந்த ஞானி கூறினர்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

ஜன சபையின் சமைப்பு

இந்த விஷயத்தில் சென்ற வருஷம் செய்த தீர்மானப்படி, புனா காங்க்ரஸ் கணத்தார், பாரத ஜன ஸபையின் ரூபத்தையும் தொழிலையும் குறித்து உத்தேசமாகச் செய்திருக்கும் விதிகளை, மேற்படி புனா கமிட்டியார் எல்லா சாசுவதக் கணங்களுக்கும் தெரிவித்து, அடுத்த கூட்டத்திற்குக் குறைந்த பக்ஷம் மூன்று மாஸங்களுக்கு முந்தியே பொதுக் கார்யதர்சிக்கும் சாசுவத வக்கீலுக்கும் அறிக்கை யிட ஏற்பாடு செய்யவேண்டு மென்று, இந்த ஜன சபை நியமிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

செலவு விசாரணைக் கூட்டம்

செலவுக்கு ஆதாரமான ராஜ்ய முறைமைகளையே (வேருடன்) சோதனை செய்வது மன்றி, உத்யோகஸ்தரும் ஆங்கிலோ இந்தியரு மல்லாத பிறரிடமிருந்து ஸாக்ஷ்யம் விசாரிப்பதற்குரிய ஸௌகர்யங்கள் ஏற்படுத்தி நடத்தினா லொழியச் செலவு விசாரணைக் கூட்டத்தார் நடத்தும் விசாரணையால் ஜனங்களுக்கும் திருப்தி யில்லாமல் ராஜாங்கத்துக்கும் பயன்படாமல் போய்விடு மென்றும், இந்தக் கூட்டத்தின் விசாரணைகளை பஹிரங்கமாக நடத்தினால் அதிகப் பயன்கள் விளையலா மென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

குடி, படை ஆட்சிகளின் செலவு

தேசத்தின் பொருள் நிலை முட்டுப்பாடாக இருப்பதைக் கருதி ராணுவ உத்தியோகஸ்தரின் சம்பளம் முதலிய பிற ராணுவச் செலவுகளையும், லண்டன் செலவுகளையும் குறைப்பதே இப்போதுள்ள ஸ்திதிக்கு ஒரே மருந்தா மென்றதன் உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது மன்றி;

இந்தியாவின் பொருட் கஷ்டத்துக்குப் பரிவர்த்தன நிலைமையைக் காட்டிலும் ராணுவச் செலவின் மிகையே முக்ய காரணமென்று பார்லிமென்ட் ஸபைக் கமிட்டியார் சொல்லிய கருத்தை இங்கிலாந்தில் அர்த்த சாஸ்த்ர பண்டிதர் அங்கீகாரம் செய்வது கண்டு இந்த ஜன ஸபை மகிழ்ச்சி கூறுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹப் பிரிவு

நீதி பரிபாலனத்தில், நீதி - நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிப்பதற்குரிய கார்யங்கள் செய்யும்படி இந்த ஜன ஸபை மீளவும் இந்தியா ராஜாங்கத்தாரையும், இந்தியா மந்திரியையும் ப்ரார்த்தனை செய்துகொள்ளுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

ஜூரி விசாரணை

இந்த தேசத்தில் ஜூரி விசாரணை விஷயத்தில் அடிக்கடி மாறுதல்கள் செய்வதையும், செய்வதாகப் பயமுறுத்துவதையும் கண்டு இந்த ஜன ஸபை அஞ்சுகிறது;

அங்ஙனம் எவ்வித மாறுதலும் செய்யும்படி ப்ரிடிஷ் இந்தியா ஜனத் தொகையில் எப் பகுதியாரும் விரும்பவில்லை யாதலால், இவ் விஷயமாக இப்போது வைஸ்ராய் ஸபையில் ஆலோசனை செய்யப்படும் மசோதாவை மேல் யோசனை யின்றி இப்படியே தள்ளிவிட வேண்டு மென்று

தெரிவித்துக் கொள்வதுடன், முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் செய்த தீர்மானங்களை மீளவும் உறுதி செய்து, இப்போது ஜூரி விசாரணை வழக்கத்தில் இல்லாத குற்றங்களுக்கும், ஜில்லாக்களுக்கும் அவற்றைப் பிரயோகம் செய்யவும், ஜூரிகளின் தீர்ப்புக்கள் முடிபுத் தன்மை யுடையனவாகச் செய்யவும் வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

ஸ்வதேச ராஜ்யங்களில்
பத்திரிகைகளின் மூச்சைப் பிடித்தல்

இந்தியா கவர்ன்மெண்டார் அன்ய இலாகாவில், *1891* ஜூன் 25-ல் ப்ரகரம் செய்த விளம்பர மொன்றில் ஸ்வதேச ராஜ்யங்களில், ப்ரிட்டிஷ் பரிபாலனத்தின் கீழே இருக்கும் எல்லைகளில், பத்திரிகைகளின் மூச்சைப் பிடிக்கும் விதி செய்யப்பட்டிருப்பது பிற்போக்காகவும், கொடுங் கோன்மையாகவும், தீமையாகவும், ஆழ்ந்த ராஜ தந்திரத்துக்கும், ஜனங்களின் விடுதலைக்கும் விரோதமாகவும் இருப்பதனால் அதை பலமாக ஆக்ஷேபித்து இன்னும் தாமஸம் பண்ணாமல் அந்த விதியை அழித்து விடும்படி இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

உத்யோக விசாரணைக் கூட்டமும்
ஸம காலப் பரீக்ஷைகளும்

முன்னைய ஜன ஸபைக் கூட்டங்களில் தீர்மானித்தபடியே, பொது உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் கார்யங்கள் தேச ஜனங்களுக்கு யாதொரு பயனும் உதவாமல் போய்விட்டது பற்றி, உத்யோகப் போட்டிப் பரீக்ஷைகளை ஸம காலமாக இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடத்துவதற் கனுகூலமாக *1893* ஜூன் மாஸத்தில் செய்த தீர்மானத்தை நிறைவேற்றினா லொழிய இந்த விஷயத்திற்குத் திருப்திகரமான முடிவேற்படா தென்று இந்த ஜன ஸபை அறிவிக்கிறது.

8. எட்டாந் தீர்மானம்:

எல்லைப் புறத்தே படையெடுத்துப் போதல்

இந்தியா ஆட்சிச் சட்டத்தில் 56-ம் பிரிவைப் பார்லிமெண்ட் ஸபையார் ஏற்படுத்திய காலத்தில் அவர்கள் கருதி யிருக்கக் கூடாதவண்ணமாக ப்ரிட்டிஷ் அதிகாரத்தை இந்தியாவின் வடகிழக்கு, வட மேற்குப் பக்கங்களில் நாட்டிற்குரிய எல்லைகளுக் கப்பால் நெடுந் தூரம் விசாலப்படுத்திக் கொண்டு செல்வதை உத்தேசித்து;

இந்தியாவின் அரசிறைப் பணத்தையும் படைகளையும் எல்லைக்குப் புறம்பே உபயோகப்படுத்து முன்பு பார்லிமெண்ட் ஸபையின் உத்தரவு அவசியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், இந்தியாவின் அவஸரங்களைக் கருதி அவ்விதமான படை யெழுச்சிகளின் செலவுகளை யெல்லாம் இங்கிலாந்தும் இந்தியாவும் தம்முள்ளே பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றும்,

அங்ஙனம் யாதானுமோ ருறுதிப்பாடு சேர்க்காவிடின் இந்தப் படை யெழுச்சிகளால் பாரத தேசம் நிராசைக் கிடமான பொருட் குழப்பத்தில் வீழ்ந்து விடுமென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

தென் ஆபிரிகாவில் பாரத தேசிகளின் கஷ்டங்கள்

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்மீது சுமத்த விரும்பும் கஷ்டங்களைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் பலமான ஆக்ஷேபந் தெரிவிப்பதுடன், ப்ரிட்டிஷ் ப்ரஜைகளின் அனுகூலங்களுக்கு இடையூறு நேரத் தக்க இடங்களி லெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டாரும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரும் செய்திருப்பதுபோலவே, இந்தியக் குடியேற்றத்தாருக்குச் சார்பாகப் பரிந்து பேசி நம்மவரை அவ்விரண்டு ராஜாங்கத்தாரும் காப்பாற்றுவார்க ளென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

விவசாயிகளின் கடனும் அரசிறை வசூலும்

ஒருவன் தன் நிலத்தை மற்றவனுக்கு உரிமை யாக்கும் ஸ்வதந்த்ரத்தைக் குறுக்கக் கூடிய எந்த விதியும் மிகவும் பிற்போக்காக இருக்குமென்பது மட்டுமே யன்றி, அதன் பிற்காலப் பயன்கள் அபிவிருத்திக்குத் தடையாகிக் குடியானவர்களை இப்போதைக் காட்டிலும் இன்னும் உதவி யற்றவர்களாகச் செய்துவிடு மென்றும்;

குடியானவர்களின் வறுமையானது ஒரு பகுதி அவர்களுடைய அறியாமையாலும், மற்றொரு பகுதி இந்தியாவிலே பல இடங்களில் விளைச்சல் அடிக்கடி மாறுபடு மென்பதை அறியாமல் ஸ்திரமான அரசிறைத் தீர்வையை மிகவும் நெருக்கி வாங்கும் முறைமையாலும் உண்டாகிற தென்றும்;

இதற்கு உண்மையான மருந்து பொதுக் கல்வியைப் பரவச் செய்தலும், சாசுவத நில வரித் திட்டம் வழக்கத்தி லில்லாத இடங்களில் அரசிறை வஸூல் முறைமையைச் சற்றே நெகிழ்த்து விடுதலுமே யாகுமென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

சட்டசபைகளில் கேள்வி கேட்கும் உரிமை

சட்டசபைகளில் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தாகிய கேள்வி கேட்கும் உரிமை பொதுப் படையாக நிதானத்துடன் உபயோகிக்கப்பட்டு வந்திருப்பது பற்றி இந்த ஜன ஸபை திருப்தி யடைவதுடன்;

இதனால் இங்கும் இங்கிலாந்திலும் உள்ள அதிகாரிகள் ஸந்தோஷந் தெரிவித்திருப்பதையும் எண்ணி;

கேள்விகள் போடு முன்னே அவற்றுக்குரிய காரணங்களை விளக்கிச் சிறிய முகவுரை சொல்லும் உரிமை ப்ரதிநிதிகளுக் கிருந்தால், அக் கேள்விகள் பயன் மிகுதியுறு மாதலால், அவ் வுரிமை கொடுக்குமாறு ராஜாங்கத்தாரை வற்புறுத்துகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

வைத்ய இலாகா

(1) தேசத்துக் குடி ராணுவ வைத்ய உத்யோகங்களின் ஸ்திதியில் சீர்திருத்தம் அவசிய மென்றும், அச் சீர்திருத்தம் இன்னின்ன வழிகளில் நடைபெற வேண்டு மென்றும் தான் கொண்டிருக்கும் கொள்கைகள் உயர்ந்த வைத்திய வட்டங்களில் வற்புறுத்தப்பட்டு வருவதைக் கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைவது மல்லாமல், பொது நலத்தையும் வைத்ய சாஸ்த்ரம், வைத்யத் தொழில் இவற்றின் அனுகூலத்தையும் கருதி, அரசாட்சியில் செட்டு முறையையும் விரும்பி ஒரே ராணுவ வைத்ய இலாகாதான் இருக்க வேண்டு மென்றும், அதில் ஐரோப்பியர் பட்டாளத்துக் கொன்றும், சுதேசித் துருப்புக்களுக்கு மற்றொன்றுமாக இரண்டு வகுப்புக்கள் இருக்க வேண்டு மென்றும், அவ்விரண்டும் ஒரே மாதிரியான வழிகளில் நடத்தப்பட வேண்டு மென்றும்; நாட்டுக் குடி வைத்ய உத்யோக மண்டலத்தைத் தனியான, ஸ்வாதீன முள்ள தொரு வைத்ய உத்யோக மண்டலமாக்கி, இப்போதுள்ள ராணுவ ஸம்பந்தத்தை அறுத்தெறிந்துவிட்டு, இந்தியாவிலும் பிற நாடுகளிலு முள்ள பஹிரங்க வைத்யர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்றும்; இதர அம்சங்கள் ஸமமாக இருந்தால் ஸ்வதேசத்தாருக்குக் கொடுப்பதே முறை யாகுமென்றும் இந்த ஜன ஸபை உறுதியாகக் கூறுகிறது.

(2) பின்னும் உதவிக் குடி ரண வைத்யர், ஆஸ்பத்திரி உத்யோகஸ்தர்களின் ஸ்தானங்களையும் அவஸரங்களையும் பஹிரங்கமாகத் தீர விசாரணை செய்தால்தான் நெடுங்காலமாக நடந்து வரும் அக்ரமங்களையும் அவற்றால் நிகழும் முறையீடுகளையும் தீர்க்க முடியு மென்பதை உறுதியாகக் கூறுவதுடன், ரஸாயனப் பாகுபாட் டதிகாரியின் இலாகாவைப் புதிதாக்கி கவர்ன்மெண்டார் ஸமீப காலத்தில் ப்ரசுரம் செய்த ஆலோசனையில் - அடிக்கடி நியாய மென்று அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கும் - உதவி ரஸாயன விபக்தாக்களின் வேண்டுதல்களை ராஜாங்கத்தார் மறந்து விட்டதாகக் காண்பதி னின்றும் இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

வக்கீல் சட்டத்தைத் திருத்தும் மசோதா

வக்கீல்களுக்குக் கக்ஷிக்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தை அழித்துவிட வேண்டு மென்ற கருத்துடன் ராஜாங்கத்தார் செய்யும் முயற்சி யாதாயினும் அதனிடம் பரிபூரண அனுதாபம் தெரிவிப்பது மன்றி, இப்போது வைஸ்ராய் சட்டஸபையின் ஆலோசனையில் உள்ள வக்கீல் சட்டத் திருத்த மசோதாவில் ஜில்லா நியாயாதிபதிகளும், அரசிறைக் கமிஷனர்களும், வக்கீல்களைத் தள்ளவும், மேற்படி சட்டத்தின் கீழே வரும் வழக்குகளில் தம்முடைய குற்றமின்மையை ருஜுப்படுத்தும் பாரத்தை, வக்கீல்களின்மீது சுமத்தவும் இடங் கொடுக்கும் விதிகள் போட்டிருப்பது கண்டு, இந்த ஜன ஸபை அஞ்சுகிறது;

மேலும் அந்த மசோதாவின் நிபந்தனைகள் வக்கீல்களின் ஸ்வாதீனத்தைக் குறைக்கும்படியாகவும், பொது ஜனங்களின் கண் முன்னே வக்கீல்களின் பதவியை இறக்கும்படியாகவும், ஆனால் வக்கீல்களுக்குக் கக்ஷிக்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தை அழிக்கத் தகாததாகவும், நீதியின் முடிவுகளை மேலேற்றத் தகாததாகவும் இருப்பதால் அதை நழுவ விட்டுவிட வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

வைஸ்ராய் சட்ட சபையில்
மத்ய மாகாணப் பிரதிநிதி நியமனம்

வைஸ்ராய் சட்டஸபையில் மத்ய மாகாணங்களுக்கு ப்ரதிநிதியாக ஒருவரை இந்தியா ராஜாங்கத்தார் இம் முறை நியமித்திருப்பதில் ஸ்தல ஸங்கங்களை அவ்வித நியமனத்துக்கு சிபார்சு பண்ணும்படி கேட்காமல் செய்து விட்டது பிற்போக்கான செய்கை யென்று கூறி பலமான கண்டனம் புரிவது மன்றி ஏற்கெனவே வங்காளம், சென்னை, பம்பாய், வடமேற்கு மாகாணங்களுக்குக் கொடுத்திருப்பது போன்ற

மூல நூலில் பதினான்காம் தீர்மானம் இடம் பெறவில்லை.

ப்ரதிநிதி யுரிமை மத்ய மாகாணங்களுக்கும் கொடுத்தற்குரிய ஏற்பாடுகளை உடனே ஆரம்பிக்கும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

பரிவர்த்தன நஷ்ட ஈடு

குடியேறாத, ஸர்க்கார் உத்யோகஸ்தரான ஐரோப்பிய யூரேஷியர்களுக்குப் பரிவர்த்தன ஈடுகொடுப்பதில் இப்போது வருஷச் செலவு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலே போவதனால், அந்த வழக்கத்தை நிறுத்திவிட வேண்டு மென்ற முந்திய இரண்டு வருஷங்களின் தீர்மானத்தை இந்த ஜன ஸபை மீளவும் வற்புறுத்துகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

மூன்றாம் வகுப்பு ரெயில்வே ப்ரயாணிகளின் கஷ்டங்கள்

மூன்றாம் வகுப்பு ரெயில்வே ப்ரயாணிகள் படும் கஷ்டங்களை அங்கீகாரம் செய்வது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு நன்றி தெரிவிப்பதுடன், ரெயில்வே வரும்படியில் பெரும் பகுதி மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளிட மிருந்து வருகிறபடியால் தாம் இவ் விஷயமாகச் செய்யும் தீர்மானங்களில் மேற்படி கஷ்டங்களை விரைவில் நீக்க ஏற்பாடு செய்வார்களென்ற நம்பிக்கையை இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

காட்டிலாகா

வெவ்வேறு மாகாண கவர்ன்மெண்டாருடைய விதிகளின் கீழே காட்டிலாகாவின் பரிபாலனம் கிராமத்து ஜனங்களைப் பல விதங்களில் காட்டிலாகாக் கீழ்த்தர உத்யோகஸ்தரின் கொடுமைக்கும் உபத்ரவத்துக்கும் உட்படுத்தித் தீங்கு விளைவிப்பதி னின்றும் தேச முழுமையிலும் மிகுந்த அதிருப்தி நேர்ந்திருப்பது கண்டும்;

1894ஆம் வருஷத்துத் தீர்மானத்தில் காடு காத்தல் அரசிறையை மிகுதிப் படுத்தும் பொருட்டன் றென்றும், குடியானவர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஸௌகர்யம் செய்யும் பொருட் டென்றும் கூறப்பட்டிருப்பது கருதியும்;

இப்போதுள்ள விதிகள் ஜன ஸௌகர்யத்தை அரசிறை வளர்ச்சி யென்ற நோக்கத்திற்குக் கீழ்ப்படுத்துவது பற்றியும்;

இந்தத் தீங்கை நிவர்த்தி செய்யும் பொருட்டாக மேற்படி விதிகளைத் திருத்துதல் அவசிய மென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

உப்பு வரியைக் குறைத்தல்

உப்பு வரியைக் கூடிய சீக்கிரத்தில் குறைப்பதாகச் சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் இந்தியா மந்திரி செய்த வாக்குறுதிக்காக இந்த ஜன ஸபை அவருக்கு நன்றி தெரிவிப்பதுடன்;

முந்திய ஜன ஸபைக் கூட்டங்களின் கருத்துக் கிணங்கி;

இந்த தேசத்தில் மிகவும் ஏழையான வகுப்பினருக்கு உப்புத் தீர்வையால் விளையும் பெருங் கஷ்டத்தை எடுத்துக்காட்டுவது மன்றி;

இக் கஷ்டத்தைக் கருதி ராஜாங்கத்தார் மேற்படி தீர்வையை அதன் 1888ஆம் வருஷத்தின் அளவுக்குக் கொண்டு வருதல் மிகவும் அவசிய மென்பதையும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

20. இருபதாந் தீர்மானம்:

உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் உதவிப் பணம்

நாட்டுக் கல்வியின் தற்கால நிலையில் உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் கொடுக்கும் உதவிப் பணத்தை எவ் வகையிலும் நிறுத்துதலும், ராஜாங்கத்தாரால் முழுமையாகவேனும் பகுதி யளவேனும் ஆதரிக்கப்படும் பாடசாலைகளின் சம்பளங்களை ஏற்றுதலும் அயுக்த மென்று பலமாகத் தெரிவிப்பதுடன்;

கல்வியின் எல்லாக் கிளைகளிலும் ராஜாங்கச் செலவை அதிகமாக்குதல் முக்ய மென்றும், தொழிற் பாடசாலைகளும் கலாசாலைகளும் ஸ்தாபித்தல் அவசிய மென்றும் உறுதியாக இந்த ஜன ஸபை கூறுகிறது.

21. இருபத் தென்றாந் தீர்மானம்:

நூலின்மீது சுங்கத் தீர்வை

20ஆம் இலக்கத்தின் கீழே யுள்ள இந்தியா தேசத்து நூல்களுக்குச் சுங்கத் தீர்வையை நீக்கியது பற்றி லாங்கஷைர் வ்யாபாரிகள் ஆக்ஷேபித்தல் சரி யில்லை யாதலாலும்;

இந்தியா ராஜாங்கத்தார் அரசிறையின் லாபத்தைக் கருதி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கும் உபாயத்தால் "விடுதலை வியாபார"க் கொள்கைகளுக்கு விரோத மில்லை யாதலாலும்;

அந்த உபாயத்தை உறுதியாகக் கைப்பற்றி நிற்பார்க ளென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

பல திரட்டு

1. வருமான வரி செலுத்துதற் குரிய வரும்படிச் சிற்றளவை ரூ. 500-லிருந்து ரூ. 1000-ஆக உயர்த்துதலும்;

2. 1890 மார்ச் இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட ராஜாங்க அறிக்கையின் 103, 104, 105 ப்ரகரணங்களில் கூறியபடி முழுதும் நிறைவேற்றுமாறு மாகாண ஆட்சிகளை இந்தியா ராஜாங்கத்தார் இடைவிடாமல் வற்புறுத்துதலும், எல்லாக் கிராமங்களிலும் ஜனங்களின் இஷ்டந் தெரிந்து கொண்ட பின்னரே சாராயக் கடைகள் வைப்பதற் குரிய சுலபமான முறை யொன்று கண்டுபிடித்து நடத்துதலும்;

3. சிறையோலை பிறப்பிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப் பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரிக்காமல் ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்புவிக்கும்படி கேட்க அதிகார முண்டென்ற நிபந்தனை யொன்றைக் குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்த்தலும்;

4. இந்தியாவின் ஏழைகளில் 500 லக்ஷம் பேர் முழுப் பசிக்கு மிகவும் ஸமீபித்த நிலையில் துன்ப வாழ்க்கை வாழ்வது கருதியும், இவர்களுடைய தொகை வருஷந்தோறும் மிகுதிப்படுதல் கருதியும், பதிற்றாண்டுதோறும் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் பசியால் மடிந்தே போவது கருதியும், இவர்களுடைய ஸ்திதியை அபிவிருத்தி செய்தற்குரிய ஏற்பாடுகளை உடனே தொடங்குதலும்;

5. ஆயுதச் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட விதிகள் இந்தியாவில் வஸிப்போர், தேசம் பார்க்க வந்தோர் எல்லாருக்கும் ஒரே வகையில் பிரயோகப்படும்வண்ணமாகவும்; காட்டு மிருகங்கள் இருந்து வழக்கமாக மனித உயிர்களையும், பயிர்களையும், கால்நடைகளையும் அழிக்கும் இடங்களில் அனுமதி உத்தரவுகள் தாராளமாக வழங்கும்படிக்கும்; சீர்திருத்தப்பட்ட விதிகளின்படி கொடுக்கும் உத்தரவுகள் ஒருவனுடைய ஆயுள் முழுமைக்கும் பயன்படும்படிக்கும்; கெட்ட உபயோகம் ருஜு ஆனாலன்றி அவற்றை மாற்றாதிருக்கும்படிக்கும்; அவை பிறப்பிக்கப்படும் மாகாண எல்லை முழுமைக்கும் உபயோகமாகும்படிக்கும் மேற்படி விதிகளை மாற்றுதலும்;

6. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து, அவற்றில் சட்டப்படி பாரத பிரஜைகள் எனத் தகுந்தோர், தத்தம் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி, பாரத சேனையில் ஸந்நது பெற்ற அல்லது பெறாத நியமனம் அடைவதற்குரிய படிப்பும் பழக்கமும் ஏற்படுத்துதலும்;

7. நாடு முற்றுமுள்ள யுத்தப் பிரியரான ஜாதியாரில் ஆள் திரட்டி உள்நாட்டுப் படை யொன்று சமைத்தலும்;

8. ப்ரித்தானியாவில் நடப்பதுபோல், இந்தியாவிலும் விஸ்தாரமான ஸ்வேச்சைக் காப்பு (வாலண்டீர்)ப் படை ஏற்படுத்த அனுமதி கொடுத்தலும், அதனைத் தூண்டுதலும்;

9. நன்கு வரையறையப்பட்ட சில கொள்கைகளால் நீர் வரியைத் திட்டப்படுத்தி நிலஸ்வான்கள் முதலாக நிலத்தில் பொருள் செலவிட்டிருப்போரின் உரிமைகளைக் காத்தலும்; மிகவும் அவசியமென்று முந்திய ஜன சபைக் கூட்டங்களில் தெரிவித்த அபிப்பிராயத்தை இந்த ஜன ஸபை மீட்டும் வற்புறுத்துகிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

பிரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்

பிரிட்டிஷ் கமிட்டி, காங்கிரஸ் பத்திரிகையாகிய 'இந்தியா', உதவிப் பொதுக் கார்யதர்சியின் கார்யாலயம், இவற்றின் செலவுகளுக்காக ரூபாய் 60,000 கொடுக்க வேண்டுமென்றும், இப்போதேனும் இனிக் கமிட்டியிலேனும் தீர்மானம் செய்கிறபடி 1896ஆம் வருஷத்துக்கு வெவ்வேறு வட்டத்தார் களும் சந்தா செலுத்த வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டிக்கு நன்றி

சென்ற வருஷத்தில் ஸர் வில்லியம் வெடர்பர்ன் முதலிய ப்ரிட்டிஷ் காங்க்ரஸ் கமிட்டி மெம்பர்கள் இந்தியாவுக்குச் செய்த நன்மைகளைக் கருதி அவர்களுக்கு இந்த ஜன ஸபை மிகவும் ஆழ்ந்த நன்றி தெரிவிக்கிறது.

25. இருபத்தைந்தாந் தீர்மானம்:

ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்

வருகிற வருஷத்தில் A.O. ஹ்யூம் நமது பொதுக் கார்ய தர்சியாகவும், தீ. எ. வாச்சா உதவிப் பொதுக் கார்யதர்சியாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

26. இருபத்தாறாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

1896 கிறிஸ்மஸ் தினத்துக் கப்பால் பிந்தி நிச்சயித்துக் கொள்ளப்படும் தேதிகளில் பாரத ஜன சபையின் பன்னிரண்டாங் கூட்டம் கல்கத்தாவில் நடைபெறக் கடவ தென்று இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

பதினொன்றாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

பன்னிரண்டாம் அத்யாயம்

பாரத ஜன ஸபையின் 12ஆம் கூட்டம் கல்கத்தாவில் 1896 டிஸம்பர் 28ஆம் தேதி முதல் நான்கு தினங்கள் நடைபெற்றது. 790 பிரதிநிதிகள் வந்திருந்தனர். உபசார கணத் தலைவராகிய ரமேசசந்த்ர மித்திரர் மிகவும் அஸௌக்யமாக இருந்தபடியால், ராஷ்விஹாரி கோஷ் ப்ரதிநிதிகளுக்கு நல்வரவு கூறினர். அப்பால் முஹம்மது ரஹிம்துல்லா ஸயானி ஜன ஸபையின் அக்ராஸனபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஸபாநாயகர் ப்ரசங்கம்

பன்னிரண்டாம் ஜன ஸபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் முஹம்மது ரஹிம்துல்லா செய்த உபந்யாஸத்தின் ஸாரம் பின்வருமாறு:

ஸ்வதேசிகளே,

என்னை இக் கூட்டத் தலைவனாக்கிய நன்றி மறத்தற்பாற் றன்று.

பூர்வ கதை

இதுவரை இந்த ஜன ஸபைத் தலைவராகி நடத்திய பெரியோர்களில் ஹிந்துக்கள், மஹமதியர், ஆங்கிலேயர், பார்ஸிகள் என்ற நான்கு ஜாதிகளுக்கும் ப்ரதிநிதிகள் உளர். அதனால் இந்த ஸபை ஒரு சிறு வகுப்பு அல்லது பகுதியின் கூட்ட மன்றென்றும் பாரத தேச முழுமைக்கும் பொது வென்றும் விளங்குகிறது.

இங்கு ஸபைத் தலைமை வஹிப்பதாகிய பெருமையை இது மட்டும் பெறாத வகுப்புக்கள் யூதரும், போர்த்துகேசியரும், யூரேஷியருமே யாம்.

இக் கூட்டங்கள் சிறியனவாதலாலும், இவற்றி னிடையே தக்க ப்ரதிநிதிகள் அகப்படாமையாலும் இங்ஙனம் நேர்ந்ததே யன்றி இவ் வகுப்பினரை விலக்கி வைக்க வேண்டுமென்ற எண்ணம் நமது ஜன ஸபைக் கிருப்பதாகக் கருதலாகாது. இந்தியாவில் பிறந்து இந்தியாவை ஸ்வதேச மென்போர் அனைவர்க்கும் இந்த ஸபை பொது உரிமை யாகும்.

சில மேற்கோள் வசனங்கள்

இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குக் கல்விப் பயிற்சி ஐரோப்பிய நெறியில் செய்வித்து, அவர்களை ஐரோப்பிய நாகரிகப்படி ராஜரீக ஆட்சியில் ஸம ஸ்வதந்த்ர முடையவர்களாகச் செய்துவிட வேண்டு மென்ற கருத்து ஏற்கெனவே பல ஆங்கிலேய ராஜதந்திரிகளால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு த்ருஷ்டாந்தமாகக் கீழே சில வசனங்களை மேற்கோள் காட்டுகிறேன்.

1787ஆம் வருஷத்தில் ஸர் ஜான் ஷோர் சொல்லியது:

"நமது பாரத ராஜ்யத்தி லுள்ள குடிகளின் கைத்தொழில் அபிவிருத்தி யடைந்திருப்பது மெய்யே. ஆனால், தூரத்தி லிருந்து அன்னியர் நடத்தும் ஆட்சியால் விளையும் தீமைகள் அந்த நலத்தைக் காட்டிலும் மிகவும் பெரியன."

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் பிறப்பித்த 1813ஆம் வருஷத்துக் கட்டளையில் பின்வருமாறு சொல்லப்படுகிறது:

"ப்ரிடிஷ் ராஜ்யத்தின் கீழுள்ள இந்தியா ஸ்வதேசிகளின் நன்மையையும் ஸந்தோஷத்தையும் கருதுவதே இங்கிலாந்தின் கடமை.

அவர்களுக்குள்ளே லௌகிகப் பயன்கள் தரக்கூடிய கல்வியும், மத ஒழுக்கங்களின் அபிவிருத்திக்குரிய கல்வியும் ஏற்படுத்த வேண்டும். எனவே, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப்

போய் தர்ம கைங்கர்யங்கள் செய்ய வேண்டுமென்ற நோக்க முடையவர்களுக்கு நாம் போதிய ஸௌகர்யங்கள் செய்துகொடுக்க வேண்டும்.

ஆனால், இங்ஙனம் செய்யு மிடத்தே சுதேசிகளுடன் ஐரோப்பியர் இன்னின்ன மாதிரிகளிலேதான் பழகலா மென்று வரையறுக்கும் அதிகாரம் மாகாண ராஜாங்கத்தாருக் கிருப்பது கெடாமலும் இந்தியா ஸ்வதேசிகள் தத்தம் மதக் கொள்கைகளை யதேச்சையாக அனுஸரிக்கலா மென்று இதுவரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் ப்ரிட்டிஷ் ராஜாங்கக் கருத்துக்கு ஹானி நேராமலும் கவனித்துக் கொள்ள வேண்டும்."

மேலும் மேற்படி கட்டளையின் 43ஆம் ப்ரகரணத்தில் மூன்று மாகாணங்களிலும் (பம்பாய், வங்காளம், சென்னை இவற்றில்) வாழும் ஸ்வதேசிகளின் கல்விக்காக ராஜாங்கத்தார் (வருஷந்தோறும்) 10,000 பவுன் செலவிட வேண்டுமென்று விதிக்கப்பட்டது.

பின்னர் 1815 அக்டோபர் 2ஆம் தேதி யன்று லார்ட் மாய்ரா பிறப்பித்த அறிக்கை யொன்றில் ஸ்வதேசிகளின் அறிவையும் ஒழுக்கத்தையும் மேன்மைப்படுத்தும்வண்ணமாக ஒரு பொதுக் கல்வி முறை ஏற்படுத்த வேண்டுமென்ற தமது கருத்தை வெளியிட்டார்.

இங்ஙனமே 1817-ல் லார்ட் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர் ஜெனரல்) ப்ரசுரித்த விளம்பர மொன்றில், தமது ராஜ்யாதிகாரத்தைக் குறைவு படுத்தாமல் காப்பாற்றும் பொருட்டாக நாட்டு ஜனங்களைக் கல்வியற்ற நிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் ஆங்கில ராஜாங்கத்தாருக்குக் கிடையாதென்று தெரிவித்தார்.

1823-ல் பின்ஸ்டன் சொல்லியது:

"ஜனத் தொகை அளவு மிஞ்சிப் போகும்படி செய்யும் பால்ய விவாஹங்களும், ஒருவன் தன் ஆயுள் முழுதும் பாடுபட்டுச் சேர்த்த திரவியத்தை யெல்லாம் கல்யாணக் காலங்களில் ஒரே யடியாகச் செலவிட்டுக் கொடுத்தலும், குடியானவர்கள் உதவியற்று

வட்டிக் கடன் கொடுப்போருக் கிரையாவதும், சுத்தமான உடைகளையும் மனைகளையும் விரும்பாதிருத்தலும், பின்னும் இவை போன்ற பிற தீமைகளும் ஒழிய வேண்டுமானால் அதற்கெல்லாம் கல்வியே தனி மருந்தாகும். தற்கொலை, சிசு ஹத்தி முதலிய கொடுஞ் செயல்களுக் காதாரமான மூட பக்திகளை யெல்லாம் அழிக்க வேண்டுமாயின், அறிவைப் பரப்புதல் ஒன்றே அதற்கு வழியாம்."

இனி 1828-ல் ஸர் ஜான் மால்கோம் பின்வருமாறு கூறினர்:

"இந்தியாவில் ஸ்வதேசிகளுக் கிடையே நமது கல்வியைப் பரவச் செய்தால் அதினின்றும் நாம் அரசாட்சி உத்யோகங்களில் ஒவ்வொரு பகுதியிலும் அவர்களை மேன்மேலும் சேர்த்துக் கொள்ள ஸௌகர்யம் ஏற்படும். இதனால் ஆட்சியில் செலவு குறையும்; குணம் விருத்தியாகும்; நம தாட்சியும் பத்ரமாக இருக்க இடமுண்டாகும். ஆனால், தக்க கல்வியுடைய சுவதேசிகளுக்கு உயர்ந்த பதவிகள் கொடுத்தாலொழிய இக் கல்வி நமக்கே ஆபத்தாக முடிந்துவிடும்."

1834-ல் லார்ட் மக்காலே சொன்னார்:

"பாரத ஜனங்கள் நமக்குக் கீழே கொடுங்கோ லரசுக் குட்பட்டு வாழ்வதைக் காட்டிலும் அவர்களுக்கு விடுதலையும் நல்லரசாட்சியும் கிடைத்தால் அதில் நமக்கே அதிக அனுகூலங்க ளேற்படும்.

அவர்கள் தமது ஸ்வதேசீய ராஜாக்களால் ஆளப்பட்டு இங்கிலீஷ் துணிகளை உடுத்துக் கொண்டும், இங்கிலீஷ் கத்திகளை உபயோகித்துக் கொண்டும் இருப்பார்களாயின் அதுவே நமக்குப் பெரிய லாபமாகும்.

அங்ஙன மின்றி, ஆங்கிலேயக் கலெக்டர்களுக்கும் மாஜிஸ்த்ரேட்களுக்கும் தாழ்ந்த ஸலாம் போடப் பழகியவர்களாய், ஆனால் இங்கிலீஷ் கைத்தொழிலின் அருமை தெரியாதபடி அத்தனை மூடர்களாகவேனும், அவற்றை விலை கொடுத்து வாங்கக்கூடாதபடி அத்தனை ஏழைகளாகவேனும் இருப்பார்க ளாயின் அதில் நமக்குத் தகுந்த லாபமில்லை."

ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் 1833ஆம் வருஷத்துக் கட்டளையில் பின்வருமாறு சொல்லப்படுகிறது:

"இந்தியாவிலுள்ள ஸ்வதேசிகளில் எவனும் ..... தனது மதம், பிறப்பிடம், குலம், நிறம் இவை காரணமாக அல்லது இவற்றுள் ஏதேனு மொன்று காரணமாக, நம்முடைய ஆட்சியில் எந்த ஸ்தானத்துக்கும், உத்யோகத்துக்கும், நியமனத்துக்கும் தகுதி யற்றவனாகக் கருதப்படமாட்டான்."

அப்பால் 1835ஆம் வருஷத்தில் கட்டுப்பாடின்றி வர்த்தமானப் பத்திரிகைகள் ப்ரசுரிக்கும் உரிமை இந் நாட்டோருக்குக் கொடுக்கப்பட்டது.

இங்கிலாந்தின் ப்ரதம மந்திரியான க்ளாட்ஸ்டன் சொல்லியது:

"பெருமை வாய்ந்த பாரத ஜனங்களின் ராஜரீக ஆசைகள் மேன்மேலும் வளர்ச்சி பெற்று வருவதை நாம் இகழ்ச்சி யுடனாவது, உதாசீனத்தோடாவது நடத்துதல் நமக்குத் தீமையாக முடியும்."

லார்ட் ராபர்ட்ஸ் (சேனாபதி) சொல்லியது:

"பாரத ஜனங்கள் ஒற்றுமையுடனும், திருப்தியுடனும் வாழும்படி செய்வதே நம் ஆட்சிக்கு முக்ய பலமாகும்."

1874ஆம் வருஷத்தில் லார்ட் நார்த்ப்ரூக் (வைஸ்ராய்) சொல்லியது:

"இந்தியாவை நமது லாபத்திற்காகவும், அனுகூலத்துக்காகவும் ஆளாமல் ஸ்வதேசிகளின் நன்மைக்காக ஆளுதல் நம்முடைய கடமை. இதனை நாம் எப்போதும் மறக்கக் கூடாது."

1892-ல் லார்ட் ரிப்பன் சொல்லியது:

"மஹாராணியின் விளம்பரம் ஓர் உடம்பா டன்று. அது ஒரு ராஜ தந்திரச் சூழ்ச்சியு மன்று. அஃது நம்முடைய ராஜ்யத்தின் மூல தர்மங்களைக் கூறுவது— நாம் அனைவரும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அதன் கருத்தை மறுத்துப் பேசுதல் நம்முடைய ராஜ்யத்தின் குணத்துக்கும், நமது தேசத்தின் கௌரவத்துக்கும் கேடாகும்."

1858ஆம் வருஷத்தில் மஹாராணி பிரசுரித்த விளம்பரம்

. ஸ்ரீமான் மகம்மது ரஹிம்துல்லா ஸயானி பின்னும் சொல்லுகிறார்:

மஹாராணியின் 1858-ம் வருஷத்து ஸ்ரீமுகத்தை பாரத ஜனங்கள் தமது ("மாக்நா கார்த்தா" மஹா சாஸனம்) என்று பாராட்டுகிறார்கள். இங்ஙனம் பாராட்டுதல் பொருந்தும்.

இந்த விளம்பரத்தில் தெய்வ சாக்ஷியாகச் செய்யப்பட்ட வாக்குறுதிகளை யெல்லாம் நிறைவேற்றும் பொருட்டாகவே நமது ஜன ஸபை மிகவும் ஊக்கத்துடன் முயற்சி செய்து வருகிறது.

இந்த வாக்குறுதிகளில் சில நிறைவேற்றப்படாமலும், சில பங்கமுற்றும் இருத்தல் நியாயமில்லை யென்றே நம்மை ஆள்வோரிடம் நாம் விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறோம்.

மேற்படி ஸ்ரீமுகத்தின் சில பகுதிகளை இங்கெடுத்துக் கூறுகிறேன்:

> "நம்முடைய மற்ற குடிகளுடன் நம்மைக் கட்டுப்படுத்தும் கடமைத் தளைகளாலேயே நாம் நமது பாரத ராஜ்யத்தின் குடிகளுடனும் கட்டுப்பட்டிருப்பதாகக் கருதுகிறோம்.
>
> ஸர்வ சக்தியுடைய ஈசன் கருணையால் நாம் அக் கடமைகளை விசுவாஸத்துடனும், மன உண்மையுடனும் நிறைவேற்றுவோம்.....
>
> மேலும் நம்முடைய குடிகள் எக் குலத்தின ராயினும் எந்த மதஸ்த ராயினும், எவ்விதமான உத்யோகங்களை வஹிப்பதற்குத் தகுந்த கல்வியும் திறமையும் அவர்களுக் குண்டோ, அவ்வித உத்யோகங்க ளெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்த வாக்குறுதிகளை உடனே நிறைவேற்ற வேண்டு மென்பதே நம்முடைய விருப்பமாகும்.

ஜன ஸபையும் மஹம்மதியரும்

இந்தியாவிலுள்ள மஹம்மதியர் எல்லாரும் - அல்லது சற்றேறக் குறைய எல்லாரும் - ஜன ஸபைக்கு விரோதிக ளென்று சிலர் கற்பனை பண்ணுகிறார்கள். இஃதுண்மை யன்று. பழைய அறியாமையையும் சோம்பரையும் துடைத்துவிட்டு மற்ற வகுப்பினருடன் கூடி ஜன ஸபையை ஆதரிக்கத்தக்க சிறு வகுப்பொன்று நாளுக்கு நாள் மிகுதிப்படும்.... இனி மஹம்மதியரில் ஜன ஸபைக்கு விரோதமாக இருக்கும் மிகச் சிறிய பகுதியாரின் கருத்துக்களை ஆராய்வோம்.

பூர்வத்தில் ஹிந்துக்கள் மஹம்மதியரின் ஆட்சிக் கடங்கியவராய் எல்லா அம்ஸங்களிலும் மஹம்மதியருக்குக் கீழ்ப்பட்டு வாழ்ந்தன ரென்றும், பின்னிட்டு ஆங்கில ராஜ்யம் வந்ததற்கப்பால், மஹம்மதியர் ஆங்கிலக் கல்வியைப் பெரிதும் புறக்கணிக்க ஹிந்துக்கள் அதில் மிகத் தேர்ச்சி பெற்று விட்டன ராதலால், ராஜாங்க உத்தியோகங்களில் ஹிந்துக்கள் ஏறவும், மஹமதியர்கள் தாழவும் நேர்ந்து விட்ட தென்றும், ஆதலால் ஹிந்துக்கள் ஸம்பந்தப்பட்ட எந்தக் கார்யத்திலும் மஹம்மதியர் சேர்ந்து நடத்துதல் மஹம்மதியரின் கவுரவத்துக்கு ஹானி யென்றும் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் இந்த ஜன ஸபை ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோத மென்றும், கொரானில் ராஜபக்தியே விசேஷ மென்று கூறி யிருப்பதால் இதில் மஹம்மதியர் சேரத் தகாதென்றும் சொல்லுகிறார்கள்.

பின்னுஞ் சிலர் இந்த ஜன ஸபையின் நோக்கங்கள் பகற் கனவுக ளென்றும், இவை கர்ம லோகத்தில் எப்போதும் பலிதமடைய மாட்டா வென்றும் கூறிப் பழிக்கிறார்கள்.

மற்றுஞ் சிலர் நமது ஜன ஸபை ஐரோப்பிய ஆட்சி முறையை விரும்புகிற தென்றும், பரீக்ஷைகளில் தேறினவருக்கு உத்தியோகங்கள் கொடுப்ப தென்ற ஐரோப்பிய ஸம்ப்ரதாயம் இந்த நாட்டுக்குப் பொருந்தா தென்றும், இங்கு வம்ச பரம்பரையைக் கருதிப் பூர்வ மஹம்மதிய அதிகாரிகளின் மக்களுக்கு உயர்ந்த ஸ்தானங்கள் கொடுப்பதே தகு மென்றும் சொல்லுகிறார்கள். இஃதெல்லாம் தவறு; அறியாமையால் சொல்லப்படுவது.

மஹம்மதியர்களாகிய நம்மவர்களில் பலர் முன்பு ஹிந்துக் களாக இருந்து மஹம்மதிய மார்க்கத்தில் சேர்ந்தவர்களே யன்றி வேறில்லை. அங்ஙன மின்றி வெளி நாட்டாரின் மக்களாக இருப்போரும் இங்கு பல காலமாகக் குடியேறி ஹிந்துக்களுடன் பழகி, ஒத்துழைத்து வந்திருக்கின்றனர். மேலும், ஹிந்துக்க ளாயினும் மஹம்மதியராயினும் எப்போது நாம் ஒரே தேசத்தில் பிறந்து, ஒரேவித லாப நஷ்டங்களை யுடையவரானோமோ அப்போதே நாம் அனைவரும் ஒரே கூட்டமென்பதில் ஸந்தேஹமில்லை .....

ஸ்ரீமான் மஹம்மது ஸயானி பின்னும் சொல்லுகிறார்:

பிரதிநிதி யாட்சி முறைமை மஹம்மதியரின் பூர்வ சரித்திரத்துக்குப் பொருந்தா தென்றும், கொடுங்கோ லரசரின் ஸ்வேச்சாதிகாரமே நமது குணத்துக்குப் பொருந்துமென்றும் சொல்வோர் நமது பழமையை நன்கு தெரிந்து கொள்ளாதவர்கள்.

பரிசுத்த நபி மஹம்மது (அலைகி வஸல்லம் அவர்கள்) தமக்கடுத்த காலிபு இன்னா ரென்பதைத் தாம் குறிப்பிடாமல் முஸ்லிம்கள் அத்தனை பேரும் கூடித் தமக் கிஷ்டமானவரை காலிபாகத் தெரிந்து கொள்ளும்படி செய்து விட்டுப் போனார்.

முஸ்லிம்களின் ஆட்சியானது ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவனும், ஜனங்களுக்கு உத்தரவாதியு மாகிய அரசன் வசத்தில் இருக்கத் தக்க தென்று பண்டிதர் அஹமது ரிஜா சொல்லுகிறார். ஜனப் பிரதிநிதிகளிடமும், உலேமாக்(வித்வான்) களிடமும் கலந்து அவர்களின் சொற்படியே அரசன் ஆட்சி நடத்த வேண்டு மென்பதுதான் முஸ்லிம் விதி.

மேலும் நபி மஹமது (அலைகி வஸல்லம்): "எல்லாவித ஜிஹாத் (தர்ம யுத்தங்)களைக் காட்டிலும் கொடுங்கோ லரசனை எதிர்த்துச் சொல்லும் நியாயச் சொல்லே மேலான தர்ம யுத்தமாகும்" என்று சொல்லி யிருக்கிறார்.

இதனை யெல்லாம் கருதி மஹம்மதியர் மேன்மேலும் ஜன சபையில் கூடி தேசப் பொது நலத்துக்குப் பாடுபடுவார்க ளென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அப்பால் ஸ்ரீமான் மஹமது ரஹிம்துல்லா ஸயானி சொல்லுகிறார்:

பாரத தேசத்தின் வறுமை

இங்கிலாந்தின் ஜனத் தொகையில் ஆள் ஒன்றுக்கு வருஷ வரவு சராசரி 33 பவுன்; இந்தியாவில் 27 ரூபாய்; அதாவது (ஒற்றை ரூபாய்க்கு 1 ஷிலிங் 4 பென்ஸ் என்ற கணக்குப்படி) 1 பவுன் 14 ஷிலிங் 6 பென்ஸ்! எனவே இங்கிலாந்தின் வரும்படியைக் காட்டிலும் நமது வரும்படி பத்தொன்பது மடங்கு குறைந்ததாகிறது.

இந்தியா மிகவும் ஏழையான நாடு. பாரதவாஸிகள் அன்றாடகம் கைக்கு வாய் ஜீவனம் நடத்துகிறார்கள். நம்மில் பெரும் பகுதியார் ஆண்டுதோறும் சோறின்றி மடிகின்றார்கள். பின்னும் பெரும் பகுதியாருக்கு நாள்தோறும் ஒருவேளைக்கு மேல் உணவு கிடைப்ப தில்லை. தீர்வைச் சுமை பொறுக்கத்தகாது. தீர்வை வசூல் செலவும், குடி, படை ஆட்சிகளின் செலவும் ஜனங்களுடைய சக்தியைக் கடந்து நெடுந் தூரம் மேலே ஏறிப் போய் விட்டது. இங்கு இன்னும் சில ஆங்கிலேய ராஜ தந்திரிகளின் வசனங்களை எடுத்துக் கூறுகிறேன்.

அவற்றை நீங்கள் கவனிப்பீர்களாயின், பயன் தராத செலவுகளை உடனே நிறுத்திவிடுதல் எவ்வளவு அவசிய மென்பதும், அன்னியர்களுக்குக் கொடுக்கப்படும் உத்தியோகங்களில் பெரும் பகுதியினின்றும் அவர்களை நீக்கி அவை நம்மவர்களுக்குக் கொடுக்கப்படுதல் எத்தனை முக்ய மென்பதும் தெளிவுற விளங்கும்.

1858ஆம் வருஷம் ஜூன் 14ஆம் தேதி பார்லிமெண்ட் (காமன்ஸ்) ஸபை முன்னே மிஸ்டர் ஜான் ப்ரைட் கூறியது:

> "இந்தியாவின் ஜனத்தொகையில் பெரும்பாலோராகிய பயிரிடுவோர் மிகுந்த ஏழ்மையிலும், சோர்விலும், துன்பத்திலும் வாழ்கிறார்கள்."

காமன்ஸ் ஸபை தெரிந்தெடுத்த கணத்தின் முன்பு லார்ட் லாரென்ஸ் கூறியது:

"பாரத ஜனங்களில் பெரும்பாலோருக்கு உணவே தட்டுகிறது. அவர்கள் அத்தனை கொடுமையான ஏழைகள்."

1877 டிஸம்பர் 11-ல் மாஞ்செஸ்டர் நகர மண்டபத்தில் ப்ரைட் சொல்லியது:

"இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இனி மேலே தீர்வை விதிக்க இடமில்லாதபடி தீர்வைச் சுமையை ஏற்றிவிட்டார்கள். இவ்வளவு தீர்வை விதித்தும் செலுத்த முடியாதபடி அபாரமான கடன் வாங்குகிறார்கள்."

மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொல்லுகிறார்:

"இந்தியாவின் செலவு - அதிலும் விசேஷமாக ராணுவச் செலவு - பயங்கரமாக இருக்கிறது."

லார்ட் ஸாலிஸ்பரி சொல்லுகிறார்:

''நாம் இந்தியாவின் இரத்தத்தைக் கறக்கும்படி நேர்ந்திருக்கிறது."

மேலும் லார்ட் ஸாலிஸ்பரி (இந்தியா மந்திரி) தமது 1875 ஏப்ரல் 29ஆம் தேதி அறிக்கையில் சொல்லுகிறார்:

"இந்தியாவின் அரசிறைப் பணத்தில் பெரிய தொகை இந் நாட்டிற்கு வந்து விடுகிறது. அதற்கு, எதிர்லாபம் யாதுமில்லை."

ஸர் ஜார்ஜ் வின்கேட் 1889-ல் பிரசுரம் செய்த "இந்தியாவுக்கும் நமக்குமுள்ள த்ரவ்ய ஸம்பந்தங்கள்" என்ற நூலில் பின்வருமாறு சொல்லுகிறார்:

"இந்தியாவின் தீர்வைப் பணத்தில் இங்கிலாந்திற்கு வந்து இங்கு செலவாகும் பகுதி இந்தியாவுக்கு வெறும் நஷ்டம்; அவர்களுக்கு அந்தப் பணம் முழுகியே போகிறது."

1869 மார்ச் 11ஆம் தேதி லார்ட்ஸ் ஸபையில் ட்யூக் ஆப் ஆர்கில் என்பவர் கூறியது:

"இந்தியாவின் விஷயத்தில் நாம் நமது கடமையைச் செலுத்தவில்லை. நம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை."

மேலே ரஹிம்துல்லா மஹமது ஸயானி சொல்லுகிறார்:

இந்த நிலையில் நாம் சட்டத்துக் கிணங்கிய முறைமைகளாலே சீர்திருத்தங்கள் கேட்பதுகூட ராஜத் துரோக மென்றும், வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பதே சிரேஷ்டமென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இவர்களுடைய உபதேசத்தை நாம் கவனிக்க வழியில்லை. இப்போது நடைபெறும் ஆட்சி முறையால் இந்த தேசத்தினின்றும் வருஷந்தோறும் நானூறு லக்ஷம் பவுன். ஒருகாசுகூடத் திரும்பி வாராமல் இங்கிலாந்தில் முழுகடிக்கப் படுகிறது! எனவே, நமது நாட்டில் அடிக்கடி பஞ்சங்கள் தோன்றுவ தொரு வியப்பாக மாட்டாது.

பஞ்சம்

இருபது வருஷங்களுக் கப்பால் மீண்டும் கொடிய பஞ்சம் வந்து தேசத்தில் பெரும் பகுதியைப் பற்றிக் கொண்டு விட்டது. பேஹாரிலும், வடமேற்கு மாகாணங்களிலும், பஞ்சாபிலும், மத்ய இந்தியாவில் சில பகுதிகளிலும், சென்னை, பம்பாய், மைஸூர் மாகாணங்களில் பல ஜில்லாக்களிலும் மழைக் குறைவினால் பஞ்சம் நேர்ந்து நாள்தோறும் உணவு தேடி ஜீவனம் செய்யும் வகுப்பினர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

வறுமையில் பெயர் வாங்கினவர்களாகிய குடியானவர்களே எல்லாரைக் காட்டிலும் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். அடுத்தபடி சிறு தொழிலாளிகள், தச்சர் முதலியவர்கள். அதற்கடுத்தபடி நாள்தோறும் ஒரணாக் கூலிகூடக் கிடைப்ப தருமையாக வேலை செய்யும் கூலிக்காரர். கவர்ன்மெண்டார் ஏதோ சிகிச்சைகள் செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள்.

ஆனால் 1877-78-ம் வருஷத்துப் பஞ்சத்தில் ஸர்க்கார் கணக்குப்படியே ஐம்பது லக்ஷம் ஜனங்களுக்குமேல் மடிந்து போய் விட்டார்க ளென்பதை நினைக்கும்போது, இவ் வருஷம் யாது நேருமோ என்ற நடுக்க முண்டாகிறது. நாட்டில் மிச்சத் தானியம் சிறிதளவேனும் சேகரித்து வைக்க இடமில்லாம விருப்பதே பஞ்சத்துக்குக் காரணம்.

உணவுத் தானியங்கள்

ப்ரிட்டிஷ் இந்தியாவில் இருபத்திரண்டு கோடி ஜனங்க ளிருப்பதாக ஸர்க்கார் கணக்கில் ஏற்படுகிறது. அவர்களில் நாள் ஒன்றுக்குத் தலைக்கு 1½ ராத்தல் வீதம் மொத்த உணவு 5.80 கோடி டன் தான்யம் வேண்டும். ஆனால், உணவுப் பயிர் செய்யப்படும் நிலத்தின் மொத்த அளவு 18.60 கோடி ஏக்கர். ஒரு ஏகருக்கு 3.1 டன் (694 ராத்தல்) சராசரி விளைகிறது.

எனவே உணவுப் பயிரின் மொத்த அளவு 5.76 கோடி டன்னுக்கு மேல் மதிப்பிட வழியில்லை. ஆதலால் இங்கு விளையும் தானியம், ஏற்கெனவே தேச ஜனங்களுக்குப் போதாது. நாலு லக்ஷம் டன் குறைவு படுகிறது. அதிலும் 25 லக்ஷம் டன் வருஷந்தோறும் நாட்டினின்றும், கடலுக் கப்பால் கடத்தப்பட்டுப் போகிறது. அதாவது ஒரு கோடி ஜனங்களுக்கு ஆஹாரம் குறைகிறது.

இந்த மதிப்பு அதிகாரிகள் கொடுத்திருக்கும் கணக்குப்படி ஏற்பட்டிருப்பதால் இது தவறாக இருக்க நியாமில்லை. எனவே, நமது தேசத்தின் ஆஹார ஸ்திதி எத்தனை பயங்கரமானது பார்த்தீர்களா?

காலஞ்சென்ற ஸர் ஜேம்ஸ்கோர்ட் இந்தியாவில் 10 தினங்களுக்குப் போதிய அளவுகூட மிச்சத் தானியம் கிடையாதென்று சொல்லுகிறார். அவர் இப்படிச் சொல்லியதன் பிறகு ஜனத் தொகை மிகவும் விருத்தியடைந் திருக்கிறது.

மேலும் உணவுக் குரிய தானியங்களின் பயிரைக் காட்டிலும் உணவுக் குதவாத தான்யப் பயிர்கள் அதி தீவிரமாக விருத்தி யடைந்து வருகின்றன. அதைக் கீழே காண்பிக்கப்படும் கணக்கி லிருந்து தெரிந்து கொள்ளலாம்.

	1880-81	1894-95	மிகுதி
	(கோடி ஏக்கர் கணக்கு)		(நூற்றுக்கு)
மொத்த உணவுப் பயிர்	16.62	18.62	12
மொத்தம் உணவுக்கு வேண்டாத பயிர்	2.15	3.90	81

நிலத் தீர்வை

நிலத் தீர்வையைத் தானியமாகக் கொடுப்பது (இனத் தீர்வை) நமது நாட்டில் முன்பு வழக்கமாக இருந்தது. அதை மாற்றி இந்த ராஜாங்கத்தார் பணத் தீர்வை வாங்குவதினின்றும் நமது நாட்டுக் குடியானவருக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது. முற்காலத்தில் பயிரில் 16 அணா மகசூல் விளைந்தால் அதற்குத் தக்கபடி தீர்வை செலுத்தப்படும். விளைவு விகிதம் 8 அணா ஆனால் தீர்வையும் அதற்குத் தக்கபடி குறையும்.

எனவே விளைவு குறைவுபட்ட காலங்களிலும் குடியானவருடைய ஆஹாரத்துக்குக் கஷ்ட மில்லாம லிருந்தது. வீட்டு வருஷச் செலவுக்கு தான்யம் எப்போதும் ஒரே அளவாகவும், ஸர்க்கார்த் தீர்வை மாத்திரம் விளைவுக்குத் தக்கபடி ஏறியிறங்கிக் கொண்டும் இருந்தது.

இப்போதோ ஸர்க்கார்த் தீர்வை என்றும் ஒரே படியாகவும், விளைவு குறையும்போது குடியானவருக்குப் பட்டினியாகவும் இருக்கிறது.

முடிவுரை

"குடி, படை ஆட்சிச் செலவு பொறுக்க முடியாததாக இருக்கும் காரணம் பற்றியே இந்த மாதிரி வறுமையும் அதினின்று கொடிய பஞ்சங்களும் தோன்றுகின்றன. இந்த அரசாட்சியின் ரூபத்தை மாற்றினா லன்றி இந்த வறுமை தீராது. சட்டஸபையில் வரவு செலவுக் கணக்கை நிச்சயப்படுத்துவதில் நம்மவருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை. திருத்தப் பிரரேபணை கொண்டு வந்து சபையை அபிப்பிராயப்படி பகுதிப் படுத்தும் அதிகாரம் நமக்குக் கொடுத்தல் இன்றியமையாதது. ஈசனருளால் நமது ஸபையின் கார்யங்கள் விக்னமின்றி நிறைவேறுக"

என்று மஹமது ஸயானி கூறி முடித்தனர்.

அக்கிராஸனாதிபதியின் பிரசங்கம் முற்றிற்று.

பன்னிரண்டாம் ஜன ஸபையில் நடைபெற்ற விசேஷங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

தென் ஆபிரிக்காவில் இந்தியர் படும் கஷ்டங்களை நீக்க வேண்டுமென்ற ஒன்பதாந் தீர்மானத்தைக் குறித்துப் பேசுகையில் ஸ்ரீ பரமேசுரம் பிள்ளை பின்வரும் விஷயங்களை எடுத்துக் கூறினார்:

"தென் ஆபிரிகாவில் நம்மவர் அனுமதிச் சீட்டில்லாமல் யாத்திரை செய்யக்கூடாது; இரவில் வீதிகளிலே நடக்கக் கூடாது; நகரங்களுக் கிடையே குடியிருக்கக் கூடாது; சேரிகளிலேதான் வஸிக்கலாம்; ரயில் வண்டிகளில் முதல், இரண்டாம் வகுப்புகளில் ஏறக்கூடாது. ட்ராம் வண்டிகளினின்றும் நம்மவரைத் துரத்துகிறார்கள். ஒற்றையடிப் பாதைகளினின்றும் நம்மவரைத் தள்ளுகிறார்கள்.

ஹோட்டல்களில் நம்மவர் பிரவேசிக்கக் கூடாது; ரஸ்தாக்களில் நாம் நடக்கக் கூடாது. நம்மீது காறி உமிழ் கிறார்கள்; நம்மைக் கண்டால் வைகிறார்கள்; சபிக்கிறார்கள்; சீத்காரம் பண்ணுகிறார்கள். மனிதனால் ஸகிக்க முடியாத அவமானங்களுக்கு நம்மை உட்படுத்துகிறார்கள்..... ராஜாங்கத்தாரால் நம்மைக் காப்பாற்ற முடியா தெனில் நம்மவர் இங்கேயே இருந்து, தீர்வைச் சுமையால் மூச்சு முட்டும் இந்த தேசத்தின் மிச்ச ஜனத்தொகையை ப்ளேக் நோய் அல்லது பஞ்சம் வந்து கருணையுடன் அழிக்க மடிதலே நன்று."

மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் விஷ்ணு நாராயண ஆப்தே பின்வருமாறு சொன்னார்:

"கீழ் நிலையில் இருக்கும் தேசத்தார்களை உயர் நிலைக்குக் கொண்டு வருதலே இங்கிலாந்தின் காரியமென்று சிலர் சொல்லுகிறார்கள். தென் ஆபிரிகாவில் நடக்கும் செய்திகளைப் பார்க்கையில், அந்த வார்த்தையை யாரும் நம்ப இடமில்லை."

பஞ்சத்தைக் குறித்து ஸுரேந்த்ரநாத பானர்ஜி பேசிய போது பஞ்சங்கள் தெய்வச் செயலால் நேர்கின்றன என்று மத்ய மாகாணத்தின் கமிஷனர் சொல்லியதை மறுத்து ராஜாங்கத் தாரின் பிழைகளால் நேர்கின்றன என்பதை எடுத்துக் காட்டினர். அவ் வருஷத்தில் பஞ்சம் மிகவும் கொடுமையாக இருந்தமையாலும், நாகபூர், கோலாபூர் முதலிய இடங்களில்

ஜனங்கள் கஷ்டம் பொறுக்க மாட்டாமல் கொள்ளையும், கலகமும் தொடங்கும்படி நேர்ந்தமையாலும் ஜன ஸபையார் பெருங் கவலையுடன் இவ் விஷயத்தை ஆராய்ச்சி செய்தனர்.

இந்தத் தீர்மானத்தைப் பத்துப் பிரதிநிதிகள் ஆதரித்துப் பேசினார்கள். இங்கிலாந்துக்கு இங்கிருந்து பணத்தை வற்றடித்துக் கொண்டு போகுதல், தீர்வை மிகுதி, செலவு மிகுதி, நாட்டுக் கைத்தொழில்களை அழித்தமை - இவற்றால் ஜனங்கள் ஸாதாரண காலங்களிலேயே அரைவயிற்றுச் சோற்றுக்கு மேலே அறியாதவர்களாய் மெலிந்து சக்தியின்றி யிருப்பதால் பஞ்சம், ப்ளேக் நேரிடுவது மன்றி, அவை நேரிடும்போது முழு சக்தியு மிழந்து ஸுலபமாக மடிந்து போகிறார்களென்றும், ராஜாங்கத்தாரின் பிழைகளாலேதான் இந்தப் பெருங் கேடு நிகழ்கிற தென்றும் மேற்படி பத்துப் பிரதிநிதிகளும் முறையிட்டனர்.

கேட்பார் யார்? ஜன ஸபையின் சொல்லை ராஜாங்கத்தார் துச்சமாகக் கருதினர்! அஸாம் தேயிலைத் தோட்டங்களில் ஐரோப்பியத் தோட்டக்காரர் நமது நாட்டுக் கூலிகளை மிருகங்களிலும் இழிவாக நடத்தும் அநியாயங்களுக்கு உபபலமான உள் நாட்டு இடம் பெயர்ப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தைக் குறித்து பேசுகையில் விபினசந்த்ர பாலர்:

> "அஸௌகர்யமான தூரப் பிரதேசங்களில் தோட்டக் காரருடைய கார்யம் நடப்பதற்கு அவ்வித தண்டனைச் சட்டம் அவசிய மென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட இடங்களில் போய் வாழும்படி கூலிக்காரரை பலாத்காரம் செய்யும் அதிகாரம் எவனுக்கும் கிடையாது"

என்றார்.

பின்பு அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ரஜனீகாந்த ஸர்க்கார்:

> "ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அடிமை முறையை ஒரத்தவர்களாக இருந்தும் இந்த மானங்கெட்ட சட்டத்தைச் சட்டப் புஸ்தகத்தில் சேர்த்தது எனக்கு வியப்புண்டாக்குகிறது. இதன்

> நிபந்தனைகள் மிருகத் தன்மை யுடையன. கூலிகள் இந்தச் சட்டத்துக்கு நடுங்குகிறார்கள். சிறிது காலத்துக்கு முன் ஒரு கூலிக்காரன் கூட்டத்துடன் ரயில்வே ஸ்தானத்துக்குப் போகும் வழியில் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு மடிந்தான்"

என்றார்.

நிலத் தீர்வையை அடிக்கடி உயர்த்தும் வழக்கத்தைக் கண்டனம் செய்வதான 17ஆம் தீர்மானத்தைப் ப்ரேரணை செய்து பேசிய ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய அய்யர்: "சாசுவத நிலவரித் திட்டத்தை நாடு முற்றிலும் வழக்கத்தின் கீழே கொண்டு வருவதாக வாக்குறுதி செய்தும், அவ் வாக்குறுதியை ராஜாங்கத்தார் இன்னும் நிறைவேற்றவில்லை" என்றனர்.

இந்த ஜன ஸபை முடிவுபெறும் தருணத்தில் ஸபாநாயகரான ஸ்ரீமான் மஹமது ரஹிம்துல்லா ஸயானிக்கு அவருடைய தேசபக்தியைக் கண்டு வியந்த சில மஹம்மதிய நண்பர்களால் ஒரு தங்க கடிகாரமும் சங்கிலியும் பரிசளிக்கப் பட்டன.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

மஹாராணி ஆட்சியில் அறுபதாண்டின் நிறைவு

கருணை தங்கிய மஹாராணி சக்ரவர்த்தினியின் ஆட்சி ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் மிகவும் நீண்டதும், மிக உபகாரமானதும், மனித ஸந்தோஷத்திலும், நாகரிகத்திலும் மிக முக்யமான அபிவிருத்திகளுடன் பிணைக்கப்பட்டது மாதலால், இந்த ஆட்சியில் அறுபதாண்டு முடிவு பெற்றமை கருதி அவருக்கு இந்த ஜன ஸபை வணக்கத்துடன் மகிழ்ச்சி தெரிவிக்கிறது.

மேலும் மஹாராணி இன்னும் நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்து இந் நாட்டை ஆளவேண்டுமென்று இந்த ஜன ஸபை ஆசைப்படுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

ப்ரித்தானிய ஜன ஸபைக் கமிட்டிக்கு நன்றி

இந்தியாவின் ராஜரீக அபிவிருத்திக்காக ஸர் வில்லியம் வெடர்பர்னும் ப்ரிட்டிஷ் கணத்தின் பிற ஸபிகர்களும் சுயநலங் கருதாமல் உழைத்து வருவது கருதி இந்த ஜன ஸபை மனப்பூர்வமான நன்றி தெரிவிப்பது மன்றி, மேற்படி கணத்தின் ப்ரதிநிதியாக இங்கு நமது ஸபைக்கு வந்திருக்கும் *W.S.* கெய்னுக்கு அன்புடன் நல்வரவு கூறுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்
காலஞ்சென்ற மனமோஹன் கோஷ் ஞாபகம்

நீதி பரிபாலனத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்கும் விஷயத்தில் இங்கும் இங்கிலாந்திலும் பொது ஜன அபிப்பிராயம் நமக்கு ஆதரவாக இருப்பது கண்டு இந்த ஜன ஸபை மகிழ்வது மன்றி;

மிக அவஸரமான இச் சீர்திருத்தத்தை விரைவில் நிறைவேற்றுமாறு செய்தற்குரிய காரியங்களை உடனே தொடங்கும்படி இந்தியா கவர்ன்மெண்டாரையும் இந்தியா மந்திரியையும் ப்ரார்த்திக்கிறது.

மேலும், இவ் விஷயத்தைப் பற்றி விசேஷ ஆராய்ச்சி செய்தவராகிய மனமோஹன் கோஷ் இறந்துவிட்டது பற்றி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

பாரத அரசிறையின் மாகாணப் பகுதிப் பாடுகள்

ராணுவச் சிலவு; இங்கும் இங்கிலாந்திலும் மேற்பார்வை; மேல் நியமம்; ராஜ்யக் கடனுக்கு வட்டி செலுத்துதல் - என்ற பகுதிகளைத் தவிர ஆட்சியின் மற்றெல்லாப் பகுதிகளுக்கும் மாகாண ஆட்சியார்களே பொறுப்பாளிகளாக ஏற்பட்டிருப்பதனால் மாகாணப் பகுதிப் பாடுகள் என்ற வகையில் மாகாண ஆட்சிகளுக்கு இப்போது கொடுக்கப்படும் தொகைகள் போதாவென்றும்;

(இவ் விஷயமாக) ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாகாண உடம்பாடு 1897-ல் புதுப்பிக்கப்படு மாதலால்,

அதை யொட்டி, அரசிறையின் தலைமை யதிகாரத்தைப் பங்கிடும் விஷயத்தில் இன்னும் ஓரடி முன்னே எடுத்து வைக்கக்கூடிய காலம் வந்துவிட்டதென்றும்;

(எங்ஙன மெனில்) வெவ்வேறு மாகாணங்களின் அரசிறைப் பரிபாலனப் பொறுப்பை முக்யமாக மாகாண ஆட்சியாரின் வசத்தில் விட்டு விடுதலாலும்,

இந்தியா ஆட்சியார் ஒவ்வொரு மாகாண ஆட்சியினிடமிருந்தும் வரையறுத்த, நியாயமான கொள்கை யொன்றின்படி விதிக்கப்படும் ஸ்திரமான தொகை யொன்று மாத்திரமே பெற்றுக்கொண்டு உடம்பாட்டுக் காலம் முடிவு பெறுமளவும் அதனை எவ்வகையிலும் மாற்றா திருப்பதனாலும் (அது செய்யத் தக்கது) என்றும்;

அங்ஙனம் செய்தால் மாத்திரமே வெவ்வேறு மாகாணங்களின் திருப்திகரமான ஆட்சியிலும் பொருட் பெருக்கத்திலும் உண்மையான அபிவிருத்தி விளைவதற்கு மிக அவசியமான அரசிறை நிச்சயமும்,

அதன் இயற்கை வளர்ச்சியால் நேரும் அனுகூலமும் மாகாண ராஜாங்கத்தாருக்குக் கிடைக்குமென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

உத்தியோக விசாரணைக் கூட்டமும் ஸம காலப் பரீக்ஷைகளும்

முந்திய ஜன ஸபைகளின் கருத்தைத் தழுவி;

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் ஆலோசனை களால் இந்த தேசத்து ஜனங்களுக்கு யாதொரு நற்பயனும் கிடைக்காமல் போனது பற்றி இந்த ஜன ஸபை ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பதுமன்றி;

1893-ம் வருஷம் ஜூன் மாதம் 2-ம் தேதி யன்று காமன்ஸ் (பார்லிமெண்ட்) ஸபையில் தீர்வை, வைத்தியம், காவல் (போலீஸ்), தச்சு, தந்தி, காடு, கணக்கு - என்ற (இலாகாக்களில்) பாரதக் குடியாட்சி உத்தியோகங்களில் நியமனங்களுக்காக நடத்தப்பெறும் போட்டிப் பரீக்ஷைகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நடத்துவதற் கனுகூலமாகச் செய்யப்பட்ட தீர்மானத்தை அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்தாலன்றி, இவ் விஷயத்துக்கு ஸரியான தீர்ப்பு வேறில்லை யென்ற தனது நிச்சயத்தை உணர்த்துகிறது.

பாரத ஜனங்களுக்கு நீதியாகவும், அவர்களுக்குச் செய்யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் மேற்படி காமன்ஸ் சபைத் தீர்மானத்தை விரைவில் ஊர்ஜிதப் படுத்தும்படி ப்ரித்தானிய ராஜாங்கத்தாரை இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

பாரதவாஸிகளும் உயர்தரக் கல்வி யிலாகா உத்தியோகங்களும்

சில தினங்களின் முன்னே இந்தியா மந்திரியின் அனுமதி பெற்றதாகிய கல்வி இலாகாத் திருத்த ஆலோசனையானது பாரத தேசத்தார்களில் இங்கிலாந்தில் கல்வி பயின்றோர் உட்பட யாருமே இனி - இதற்கு முன்பு தாம் ப்ரவேசிக்க அனுமதி பெற்றிருந்த - உயர்தரக் கல்வி உத்தியோகங்களில் புக இடமில்லாமல் செய்துவிட வேண்டுமென்ற கருத்துடையதாய் "இனிமேல் கல்வி இலாகாவில் உத்தியோகம் பெற விரும்பும் இந்தியா ஸ்வதேசிகள் வழக்கமாக இந்தியாவிலேயே நியமனம் பெறுவர்; அங்கும் மாகாண உத்யோக மண்டலத்தில் மாத்திரமே நியமிக்கப்படுவர்" என்று கூறும் தீர்மானம் அடங்கியதாக இருப்பதனால் அந்த ஆலோசனையை இந்த ஜன ஸபை கண்டனம் செய்கிறது.

கல்வி யிலாகாவின் உயர்ந்த வகுப்பில் பட்டம் பெற்ற பாரதவாஸிகளை நியமிப்பதற் குரிய ஸௌகர்யங்கள் ஏற்படும் வண்ணமாக அந்த ஆலோசனையைச் சீர்திருத்த வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

ஜூரி விசாரணையைப் பரவச் செய்தல்

ஜூரி விசாரணையில் தக்க பயன் விளைந்திருப்பதாக மேற்படி விஷயத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கூட்டத்தார் அபிப்பிராயம் கொடுத்திருப்பது கருதியும், கல்வி வளர்ந்து வருகிறபடியால் எல்லா பகுதிகளிலும் கல்வி கற்றோர் போதிய தொகை கிடைப்பது கருதியும் முன் ஜன ஸபைகளின் கொள்கைக் கிணங்கி, ஜூரி விசாரணை இப்போது அனுஷ்டானம் பெறாத ஜில்லாக்களிலும், அது பிரயோகப் படாத குற்றங்களின் விஷயத்திலும் அதை வழக்கப்படுத்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

உப்பு வரியைக் குறைத்தல்

இப்போதுள்ள உப்பு வரி விஹிதம் தேசத்தில் உள்ள ஏழை வகுப்பினருக்குப் பெருங் கஷ்டமாக மூண்டிருக்கிறதென்ற தன் கருத்தை இந்த ஜன ஸபை மீட்டும் அறிவித்துக் கொள்வதுடன், அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டாக அவ் வரியை 1868ஆம் வருஷத்தில் இருந்த மட்டத்துக்குக் குறைத்து விடுதல் அவசிய மென்பதையும் உணர்த்துகின்றது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்மீது சுமத்தப்பட்டிருக்கும் உரிமைக் குறைகளையும், அவர்களுக்கும் ஐரோப்பியக் குடியேற்றத்தார்களுக்கு மிடையே செய்யப் பட்டிருக்கும் அநியாயமான, அவமானத்துக் குரிய, பக்ஷபாதங்களையும் கருதி பலமான கண்டனம் செய்வதுடன்; பாரதக் குடியேற்றத்தாரின் அனுகூலங்களைக் காத்து அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் நிஷ்டூரங்களினின்றும் அவர்களை விடுவிக்கும்படி இந்த ஜன ஸபை ப்ரித்தானிய ராஜாங்கத்தாரையும் பாரத ராஜாங்கத்தாரையும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

குடி, படை வைத்ய உத்தியோக
மண்டலங்களின் சீர்திருத்தம்

1. தேசத்துக் குடி, படை வைத்திய உத்தியோகங்களின் விஷயத்தில் சீர்திருத்தம் அவசிய மென்றும், அஃது இன்னின்ன முறைகளில் நடைபெறவேண்டு மென்றும் தான் கொண்டிருக்கும் கொள்கைகள் உயர்ந்த வைத்திய, ராணுவ வட்டங்களில் வற்புறுத்தப்பட்டு வருவது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைகிறது.

மேலும் பொதுநலத்தையும் வைத்திய சாஸ்திரம், தொழில் இவற்றின் நலத்தையும் கருதி, அரசாட்சியில் செட்டு முறையையும் நாடி;

அ) ராணுவ வைத்ய இலாகாவை ஒரே இலாகாவாகச் செய்து, அதில் ஐரோப்பிய ஸேனைக்கு ஒன்றும், ஸ்வதேசியப் படைக்கு மற்றொன்றுமாக இரண்டு வகுப்புகள் சமைத்து அவ் விரண்டையும் ஒரேமாதிரியான வழிகளில் நடத்த வேண்டு மென்றும்;

ஆ) நாட்டுக் குடி வைத்திய உத்தியோக மண்டலத்தைத் தனியாக, ஸ்வாதீன முடைய வைத்திய உத்தியோக மண்டலமாக்கி, இப்போதுள்ள ராணுவத் தொடர்பை அறுத்தெறிந்து விட்டு, அம் மண்டலத்து ஸ்தானங்களை இந்தியா தேசத்தாரும் பிறருமாகிய பொது வைத்தியர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்றும்; மற்ற அம்சங்கள் ஸமமாக இருந்தால் ஸ்வதேசத்தாருக்குக் கொடுப்பதே தகுமென்றும் இந்த ஜன சபை மீட்டும் வற்புறுத்துகிறது.

2. குடி உதவி ரண வைத்தியர், ஔஷதசாலைக் கார்யஸ்தர்களின் பதவியையும் வேண்டுதல்களையும் பரிபூர்ணமாகவும் பஹிரங்கமாகவும் விசாரணை நடத்தி நெடுங்காலமாக (அவர்களின் விஷயத்தில்) நடைபெற்று வரும் ஒழுங்குத் தவறுகளையும் அவற்றால் தோன்றும் குறைபாடுகளையும் நீக்கவேண்டு மென்று இந்த ஜன ஸபை வற்புறுத்துகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

பல திரட்டு

முந்திய ஜன ஸபைகளின் கருத்தை அனுஸரித்து,

1. 1890ஆம் வருஷம் மார்ச் மாஸத்து இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட அறிக்கையின் 103, 104, 105 ப்ரகரணங்களில் கூறியபடி முழுதும் நிறைவேற்றுமாறு மாகாண ஆட்சிகளை இந்தியா கவர்ன்மெண்டார் இடைவிடாமல் வற்புறுத்துவது மன்றி, ஜனங்களின் இஷ்டம் தெரிந்துகொண்ட பின்னரே சாராயக் கடைகள் ஏற்படுத்துதற்குரிய ஸுலபமான வழி யொன்று கண்டுபிடித்து அதன்படி நடத்த வேண்டு மென்றும்;

2. சிறையோலை பிறப்பிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப் பட்டோர் தம்மை மாஜிஸ்ட்ரேட் விசாரிக்காமல் ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்புவிக்கும்படி கேட்கலாமென்ற நிபந்தனை யொன்று குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டு மென்றும்;

3. ஆயுதச் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட விதிகள் இந்தியாவில் வாஸஞ் செய்வோர், நாடு பார்க்க வந்தோர் எல்லோருக்கும் ஒரே விதமாக வழங்கப்படும்வண்ணமாகவும், காட்டு மிருகங்கள் இருந்து வழக்கமாக மனித உயிர்களையும், கால்நடைகளையும், பயிர்களையும் அழிக்கும் இடங்களில் அனுமதி உத்தரவுகள் (லைஸென்ஸ்) தாராளமாக வழங்கும் படிக்கும்; திருத்திய விதிகளின்படி கொடுக்கும் உத்தரவுக ளெல்லாம் ஒருவனுடைய ஆயுள் முழுமைக்கும் பயன்படும் படிக்கும்; அவை கெட்ட உபயோகம் ருஜுவானா லன்றி மாற்றப்படாமலும் தாம் பிறப்பிக்கப்படும் மாகாண எல்லை முழுதிலும் உபயோகமாகும்படிக்கும் அவ் விதிகளை மாற்றவேண்டு மென்றும்;

4. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து, (அவற்றில்) சட்டப்படி பாரத ப்ரஜைகள் என்று கூறத்தகுந்தோர் தத்தம் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி பாரத ஸேனையில் ஸன்னது பெற்ற அல்லது பெறாத உத்தியோகஸ்தராக நியமனம் அடைவதற்குரிய பழக்கமும் படிப்பும் கற்பிக்க வேண்டு மென்றும்;

5. ப்ரித்தானியாவில் நடைபெறுவதுபோல் பாரத ஜனங்களினிடையேயும் விஸ்தாரமான ஸ்வேச்சைக் காப்புப் படை யொன்று சமைக்க உத்தரவு கொடுத்துத் தூண்டுதல் செய்யவேண்டு மென்றும்;

6. இந்தியாவில் குடியேற்ற உறுதி பெறாத ஐரோப்பிய, யூரேஷிய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் பரிவர்த்தன நஷ்ட ஈட்டுத் தொகையை நிறுத்திவிட வேண்டுமென்றும்;

7. இந்தியா மந்திரியின் ஸபையை ஒழித்துவிட வேண்டுமென்றும்;

8. பஞ்சாப் மாகாணத்தில் ஒரு ஹைகோர்ட்டும், மாகாண சட்டஸபையும் ஸ்தாபிக்க வேண்டு மென்றும்;

9. இந்தியா கவர்ன்மென்ட் அன்ய இலாகாவின் 1891 ஜூன் 25ஆம் தேதி அறிக்கையின்படி ஸ்வதேச ராஜ்யங்களில் ப்ரிட்டிஷ் ஆட்சியின் கீழுள்ள ஸ்தலங்களில் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு விதித்திருக்கும் முறை பிற்போக்காகவும், அநியாயமாகவும், தீங்காகவும், தேர்ந்த ராஜ தந்திரத்துக்கும், ஜனங்களின் விடுதலைக்கும் விரோதமாகவும் இருப்பதால் அதை நீக்கிவிட வேண்டு மென்றும்

இந்த ஜன ஸபை ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

வறுமையும் பஞ்சமும்

இந்தியா முழுதிலும் கொடிய பஞ்சம் வந்து சூழ்ந்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை வ்யாகூலப்படுகிறது;

இதற்கும் ஸமீப வருஷங்களில் நடந்த மற்றப் பஞ்சங்களுக்கும் ஜனங்களின் பெரிய வறுமையே காரணம்; அந்த வறுமைக்குக் காரணம் யாதெனில் பல வருஷங்களாக இந்த நாட்டின் செல்வத்தை இங்கிலாந்துக்கு வற்றடித்துக் கொண்டு போவதும், மித மிஞ்சிய தீர்வை வஸூலும், தீர்வைத் திட்டமுமே யாம்; இவற்றின் காரணம் குடி, படை என்ற இரு வகை ஆட்சிகளிலும் ராஜாங்கத்தார் மட்டுமீறிப் பணஞ்

செலவிடுதல், இதனால் ஜனங்கள் மிகவும் ஏழைகளாய், பஞ்சம் தோன்றின மாத்திரத்தில் ராஜாங்கத்தார் உணவு கொடுத்தால் - அல்லது ஸாமான்ய ஜன ஸஹாயம் ஏற்பட்டால் அன்றி மடிதல் அவசியமாய் விடுகிறது; எனவே இந்த ஜன ஸபையின் அபிப்பிராயப்படி பஞ்சம் மீண்டும் மீண்டும் வாராம லிருப்பதற்கு ஒரே உபாயம் யாதெனில் செட்டு முறையை வற்புறுத்தி, ராஜ்யத்தின் பொருளாதாரங்களை நேரே கையாண்டு, பெரும்பாலும் நாசமாக்கப்பட்டிருக்கும் நாட்டுத் தொழில்களையும், கலைகளையும் மறுபடி வளர்த்து, நவீனக் கைத்தொழில்களையும் வழக்கப்படுத்தும் ராஜ தந்த்ர முறைமையே யாம்;

இதனிடையே இப்போது அனுஷ்டானத்தி லிருக்கும் பஞ்சச் சட்டத்து நிபந்தனைகள் சம்பளம், படி விஷயத்தில் போதாதனவாகவும், வேலை வாங்கும் விஷயத்தில் கொடியனவாகவும் இருப்பதால், மனித உயிர்களைக் காப்பதும், மனிதத் துன்பத்தைத் தணிப்பதும் ராஜாங்கத்தாரின் முக்யமான கடமை என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டுவது மன்றிப் பஞ்ச எதிர்காப்பு நிதிக்குத் தனிக் கணக்கு வைத்து அதன் புராதன நிலைக்குக் கொணர்வதுடன், அந்நிதியைப் பஞ்சத்தால் வருந்தும் ஜனங்களுக்கு உடனே நிவர்த்தி செய்விப்பதாகிய அதன் புராதன நோக்கத்திற்கு அதிகம் உபயோகிக்கும்படி இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது;

இந்த பயங்கரமான ஸந்தியில் இங்கிலாந்திலிருந்து ஸாமான்ய ஜன ஸஹாயம் இந் நாட்டிற்குள்ளே பெருகிவரக் காத்திருப்பது கருதியும், கஷ்டப்படுவோரின் பெரும் பகுதியார் ஸாமான்ய ஜன உதவியால் மாத்திரமே தீண்டத் தக்கோராக இருப்பது கருதியும் இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் அவ்வித உதவி இங்கு வாராதபடி தடுக்கும் முறைமையை பலமாகக் கண்டனம் செய்வதுமன்றி, இவ் விஷயத்தில் லார்ட் லிட்டனுடைய ஆட்சியின்போது நடந்த விபத்துக் கிடமான பிழையை இந்த ஸமயத்தில் மீட்டும் செய்யத் தகாதென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

சாசுவதத் திட்டம், விவசாய நிதிகள், வருமான வரி, தொழிற் கல்வி

பாரத தேசத்து ஏழை வகுப்பினரின் பரிதாப நிலையில் கவனம் செலுத்தும்படி இந்த ஜன ஸபை இந்தியா கவர்ன்மெண்டாரை மீளவும் வேண்டுவதுமன்றி, அவர்களில் முழுதாக நானூறு லக்ஷம் ஜனங்கள் ஸாதாரண வருஷங்களிலேயே முழுப் பசிக்கு மிகவும் ஸமீபத்தில் கஷ்ட வாழ்க்கை வாழ்வதாக உயர்ந்த அதிகாரிகளே கூறுவதனால், அவர்களுடைய நிலைமையைச் செம்மைப்படுத்துவதற்கு வேறு பல உபாயங்களினிடையே பின்வருவனவற்றையும் இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது.

1. இப்போது சாசுவத நிலவரித் திட்டம் வழங்காத இடங்களில் அதனை வழக்கப்படுத்துக; சாசுவத நிலவரித் திட்டத்தை இப்போது வழங்குதல் அயுக்த மென்று தோன்றக்கூடிய ப்ரதேசங்களில் குடியானவரின் ஜீவனத்துக்குப் போதிய மிச்சம் இருக்கும்படியாக, அதிக வரித் திட்டங்கள் போடாமல் தடைசெய்க;

2. விவசாய நிதிகள் (பாங்கிகள்) ஸ்தாபனம் செய்க; விவசாயக் கடன் சட்டத்தின் கீழே (குடியானவருக்குக்) கடன் கிடைப்பதில் அதிக ஸௌகர்யங்கள் செய்து தருக;

3. வருமான வரிச் சட்டத்தின்படி தீர்வைக்கிடமாகக்கூடிய வரும்படிச் சிற்றளவு ரூ. 500 லிருந்து ரூ. 1000 ஆக உயர்த்தி விடுக;

4. கைத்தொழிற் பாடசாலைகள் ஸ்தாபனம் செய்க; ஸ்வதேசீயக் கைத்தொழில்களை வளர்த்திடுக என.

14. பதினான்காந் தீர்மானம்:

பாரத ஸர்வ கலா ஸங்கங்களின் சீர்திருத்தம்

உயர்தரக் கல்விக்கும் பாரத ஜனங்களின் அறிவு தக்கபடி வளர்ச்சி பெறுதற்கும் இப்போது பரீக்ஷைகளால் மாத்திரமே உண்டாவதைக் காட்டிலும் அதிகமான ஸௌகர்யங்கள் செய்து கொடுத்தல் மிகவும் அவஸர மென்று கருதத்தக்க

காலம் வந்து விட்டபடியால் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஸர்வ கலா ஸங்கச் சமைப்புச் சட்டங்களை வேண்டியவாறு சீர்திருத்தி, உபாத்திமை (போதனைத்) தொழிலைச் சேர்த்தும் கல்வி யளவைப் பெருக்கியும் பொதுவாகத் தற்கால அவசியங்களுக்குப் பொருந்துமாறு செய்யவேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

உள்நாட்டுக் குடிப்பெயர்ப்புச் சட்டம்

இந்தியாவில் எல்லாப் பகுதிகளுக்கும் அஸாமுக்கும் போக்கு வரவு எளிதாகிவிட்டபடியால், 1893 ஏழாங் கட்டளையால் திருத்தப்பட்ட 1882 உள்நாட்டுக் குடிப்பெயர்ப்புச் சட்டத்தை ஒழித்துவிடுவதற்குரிய காலம் வந்துவிட்டதென்று இந்த ஜன சபை கருதுகிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

மாகாண நிர்வாஹ ஸபைகளில் ராணுவ மெம்பர்கள்

சென்னை, பம்பாய் கவர்னர் ஸ்தானங்களுக்கு இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தரை நியமனம் செய்யாமல் இங்கிலாந்திலிருந்து ராஜ தந்திரிகளை நியமிக்கும் முறை மிகவும் அறிவுடைய தென்பது கருதியும், அவசியமானபோது இவர்கள் "தீர்மான வாக்கு" சொல்லும்படி இவர்களுக்குச் சட்டத்தால் அனுமதி செய்யப்பட்டிருக்கும் அதிகாரத்தை இவர்கள் உபயோகிக்கும்வண்ணமாகவும், மேற்படி மாகாணங்களின் நிர்வாஹ ஆட்சி கவர்னராலும் இரண்டு மெம்பர்களாலும் நடைபெறும் அனுஷ்டானத்தை மாற்றி கவர்னருடன் மூன்று மெம்பர்களால் நடைபெறுமாறு செய்யவேண்டு மென்றும்;

இந்த மூன்று ஸபிகர் (மெம்பர்)களில் ஒருவர் பாரதக் குடியாட்சி உத்தியோக மண்டலத்தைச் சேராதவராக இருக்க வேண்டுமென்றும், புதிய செலவில்லாமல் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாக, அந்தந்த மாகாணங்களின் ஸேனாபதிகளையே (1893ஆம் வருஷத்துச் சென்னை, பம்பாய்

ஸைந்யங்களின் சட்டம் நிறைவேறு முன் இருந்தபடி) மெம்பர்களாக்கிவிட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

நிலவரித் திட்டம்

நிலவரித் திட்டத்தைச் சில வருஷங்களுக்கொரு முறை மாற்றுகிற முறைமை வழங்கும் மாகாணங்களில் இதுவரை நடந்ததிலும் அதிகச் சுருக்கமான கால இடைகளில் மாற்றி வருவதை பலமாகக் கண்டனம் செய்வது மன்றி, அத் திட்டம் ஒருமுறை ஏற்பட்டால் பிறகு (குறைந்த பக்ஷம் 60 வருஷங்களுக்குப் பின்) நீண்ட காலத்திற் கப்பாலேதான் மாற்றத் தகுமென்று இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

ஸ்வதேச ராஜாக்களைச் சிங்காதனத்தினின்று தள்ளுதல்

அக்கிரமமான ஆட்சி, கெட்ட நடை என்ற முகாந்தரங்களை யொட்டி இனி எந்த ஸ்வதேச ராஜாவையும் அதிபதியையும் சிங்காதனத்திலிருந்து தள்ளவேண்டுமாயின் மேற்படி ஸ்வதேச ராஜாக்களுக்கும், அதிபதிகளுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் ஒருங்கே த்ருப்தி தரக்கூடிய நீதி விசாரணைக்காரர் முன்னே விசாரித்து மேற்படி அக்கிரம ஆட்சி அல்லது கெட்ட நடை ருஜுவானாலன்றி அங்ஙனம் தள்ளக்கூடாதென்று இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

வைஸ்ராய் சட்டஸபையில் மத்ய மாகாண நியமனம்

வைஸ்ராய் சட்டஸபையில் மத்ய மாகாணங்களுக்குப் பிரதிநிதியாக ஒருவரைச் சென்ற வருஷம் இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்திருப்பதில், ஸ்தல ஸங்கங்களை அவ்வித நியமனத்துக்கு சிபார்சு செய்யும்படி கேட்காமல் நியமித்திருப்பது பிற்போக்கான செய்கை யென்று கூறி பலமான கண்டனம் புரிவது மன்றி, ஏற்கெனவே வங்காளம்,

சென்னை, பம்பாய், வடமேற்கு மாகாணங்களுக்குக் கொடுத்திருப்பது போன்ற ப்ரதிநிதி யுரிமை மத்ய மாகாணங்களுக்கும் கொடுத்தற்குரிய ஏற்பாடுகளை உடனே தொடங்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

20. இருபதாந் தீர்மானம்:

தின்ஷா எடல்ஜி வாச்சாவும் ராஜ விசாரணைக் கூட்டமும்

நாட்டுச் செலவு விஷயமாக ராஜ (நியமித) விசாரணைக் கூட்டத்தின் முன்பு ஸாக்ஷ்யம் சொல்லும் பொருட்டாக பம்பாய் மாகாண ஸபையார் ஜன ஸபையின் உதவிப் பொதுக் கார்யதர்சியாகிய தீ.எ. வாச்சாவை அனுப்புவது பற்றி இந்த ஜன ஸபை தனக்குள்ள திருப்தியைத் தெரிவித்துக் கொள்வது மன்றி, விசாரணைக் கிடமான விஷயங்களில் இந்த ஜன ஸபையின் கருத்துக்களை நேரே, தகுந்தபடியாக தீ.எ. வாச்சா எடுத்துச் சொல்லுவார் என்ற முழு நம்பிக்கை பூண்டிருக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

தாதாபாய் நவுரோஜியிடம் நம்பிக்கை

இந்தியா ஜனங்களுக்கு தாதாபாய் நவுரோஜி (பார்லிமெண்டில் சரியான) பிரதிநிதி யாவார் என்பதில் நமது குறைவற்ற முழு நம்பிக்கையை மீட்டும் தெரிவித்துக் கொள்வதுமன்றி, அவரை அவருடைய பழைய சீட்டுக் கிராமமாகிய ஸென்ட்ரல் பின்ஸ்பரியாரேனும் அல்லது லிபரல் (உதாரக்) கக்ஷியைச் சேர்ந்த வேறெந்தச் சீட்டுக் கிராமத்தாரேனும் மறுபடியும் (பார்லிமென்ட் மெம்பராகத்) தெரிந்தெடுப்பார்களென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்

ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியின் செலவுகளுக்காகவும் காங்க்ரஸ் பத்திரிகையாகிய "இந்தியா"வின் செலவுக்காகவும், உதவிப் பொதுக் கார்யதர்சியின் கார்யாலயத்துச் செலவுகளுக் காகவும் ரூ. 60,000 பகுத்து வைக்க வேண்டுமென்றும்,

1897ஆம் வருஷத்துக்கு இப்போ தாயினும், இனிக் கமிட்டியிலேனும் தீர்மானம் செய்கிறபடி வெவ்வேறு ஜன ஸபை வட்டத்தாரும் சந்தா செலுத்த வேண்டு மென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்

வரும் வருஷத்தில் ஏ. ஓ. ஹ்யூம் தனது பொதுக் கார்யதர்சியாகவும், தீ.எ. வாச்சா உதவிப் பொதுக் கார்யதர்சியாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை மீட்டும் நியமனம் செய்கிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

1896-ம் வருஷ கிறிஸ்மஸ் தினத்துக்கப்பால் பின்னிட்டு நிச்சயம் செய்துகொள்ளக் கூடிய தேதிகளில் பேரார் மாகாணத்தில் அமராவதி நகரத்தில் நமது பாரத ஜன ஸபையின் பதின்மூன்றாங் கூட்டம் நடைபெறக் கடவதென்று இந்த ஜன ஸபை தீர்மானம் செய்கிறது.

பன்னிரெண்டாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப் பெற்றன.

பன்னிரெண்டாம் அத்தியாயம் முற்றிற்று

❖

ஜன சபைச் சரித்திரம்

13ஆம் அத்யாயம்

பதின்மூன்றாம் ஜன ஸபையின் வர்த்தமானங்கள்

பேரார் மாகாணத்தில் அமராவதி நகரத்தில் பாரத ஜன ஸபையின் பதின்மூன்றாங் கூட்டம் 1897 டிசம்பர் 27, 28, 29 தேதிகளில் நடைபெற்றது. அவ் வருஷத்தில் நாடு முழுதிலும் கொடிய பஞ்சம் தோன்றி மிகவும் சேத முண்டாயிற்று. ஜனங்கள் பெரிய துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அப்படி யிருந்தும் ஜன ஸபைக்கு 692 பேர் வந்திருந்தனர்.

பிளேக் வியாதி ஸம்பந்தமான கல்லறை அதிகமாய், மஹமதியர்களின் ஜனானாக்களிலும், ஹிந்துக்களின் கோயில்களிலும் ஐரோப்பிய ஸோல்ஜர் (சிப்பாய்)கள் புகுந்து பல அக்கிரமங்கள் செய்தபடியால் ஜனங்களுக்குள்ளே பயம் அதிகமாயிற்று. அதினின்றும் ப்ளேக் விசாரணை ஸங்கத் தலைவராகிய ரான்ட் (Rand) என்பவரையும், அயெர்ஸ்ட் என்ற தளகர்த்தரையும் கொன்று விட்டதி னிமித்தமாக, அதிகாரிகள் ஜனங்களிடத்தில் அதிக ஸம்ஸயமும் பயமும் கொண்டவர்களாய் எப்படியேனும் ஜன ஸபை கூடாமல் தடுத்துவிட முயற்சி புரிந்தார்கள். ப்ளேக் நோய் பரவக் கூடுமென்ற பயத்தாலும் ஜன ஸபை கூடாம விருப்பது நன்றென அதிகாரிகள் கருதினர். எனிலும் ஸ்ரீமான் கணேச ஸ்ரீகிருஷ்ண கபர்தேயைத் தலைவராகக் கொண்ட உபசார கணத்தாரின் ஊக்கத்தாலும் அசையாத மன உறுதியாலும் தடுக்கக் கருதியவர்களின் நோக்கம் நிறைவேறாமல் ஜன ஸபை நன்கு நிறைவேறிற்று.

உபசார கணத் தலைவர் என்ற முறையில் கபர்தே செய்த உபந்யாஸத்தினிடையே பின்வருமாறு கூறினர்:

"நாடு முழுதும் பஞ்சம் வந்து பெருஞ் சேதம் விளைவித்து விட்டது. மேலும் இந்த துக்க மிகுந்த வருஷத்தில் "ப்ளேக்" (கொள்ளை நோய்) வந்து செய்த கொடுமை சொல்லுந் தரமன்று. பல நூற்றாண்டுகளாக இம்மாதிரி நோய் இந் நாட்டில் பார்த்தது கிடையாது. எல்லைச் சண்டை யொன்றில் அதிகாரிகள் வீணாக அளவற்ற திரவியத்தை அழித்து விட்டனர்.

இவற்றுடன் வெள்ளங்களும், பெரு நெருப்புக்களும், பூகம்பங்களும் கூடிப் பெருங் கேடு விளைத்து விட்டன..... இதனிடையே புனாவில் ராண்டும், அயெர்ஸ்டும் பரிதாபகரமாகக் கொலை யுண்டதினின்றும் அதிகாரிகள் ஸம்சய மிகுந்தவர்களாய் தேச முழுதிலும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரிய ரஹஸ்யச் சூழ்ச்சிக் கூட்டமிருப்பதாக வீண் கனவு கண்டு பத்திராதிபர்கள்மீது வழக்குத் தொடுத்துச் சிறைப் படுத்தினர். விசாரணை யில்லாமல் ஜனத் தலைவரை அடைத்து வைக்கலாயினர்.

குற்றச் சட்டத்தில் புது அம்சங்கள் சேர்க்க யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் கூடி யிருக்கிறோம்..... இவ்வளவுக் கிடையே நமக்கு 1858ஆம் வருஷத்தில் "மாக்நா கார்த்தா" (மஹா சாஸனம்) என்ற ஸ்ரீமுகம் பிறப்பித்த மஹாராணியின் ஆட்சியில் அறுபதாண்டு நிறைவு நடந்த தொன்றுதான் ஸந்தோஷப்படத் தக்க செய்தி" என்றனர்.

பிறகு ஜன ஸபையின் அக்ராஸனபதியாக ஸ்ரீமான் சங்கரன் நாயர் வீற்றிருந்தார்.

அக்ராஸனபதியின் உபந்யாஸத்தின் ஸாராம்சம்

ஸ்ரீ சங்கரன் நாயர் சொன்னார்:

திடீரென்று இவ் வருஷத்தில் ஆங்கிலக் கல்வி கற்ற வகுப்பினர் ராஜத் துரோகிக ளென்ற சத்தம் மறுபடி கிளம்பி விட்டது. ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் நமக்கு விளைந்திருக்கும் நன்மைகளை நாம் மனதார அங்கீகாரம் செய்து கொள்ளுகிறோம்.

இங்கிலீஷ் படிப்பினால் நம்முடைய புத்தி ஆங்கிலேய வழியில் மாறிவிட்டது. நாம் இப்போது ஆங்கிலேயரைப் போலவே யோசனை செய்கிறோம். ஆங்கிலேயரைப் போலவே வாழ்கிறோம். ஜனங்களில் எல்லோருக்கும் ஸம உரிமைகளும் ஸஹோதரத் தன்மையும் உண்டென்ற கொள்கை நமக்கு வழக்கமாய் விட்டது. ஜனங்களுக்கு அதிகாரம் கொடுத்து ஸ்வராஜ்யம் ஏற்படுத்து முன்னே இங்கிலாந்து தேசத்தில் நொர்மாந்தியர், ஸக்ஸோனியர் முதலிய வகுப்பினர் தீராத சண்டைகள் செய்து கொண்டு மிகவும் இழிவுடன் கிடந்த நிலைமையில் நமது நாடு இப்போ திருக்கிறது.

இந்த நிலைமை மாற வேண்டுமானால் நமக்கும் ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டும்... ராஜாங்கத் துரோகி யென்பதாக முற்காலத்தில் ஆங்கிலேயரால் கொலை யுண்ட பின் லண்டன் நகரத்து மதில் மீது தலையை மாத்திரம் கோத்து வைக்கப்பட்ட வாலேஸ் என்ற ஸ்கோத்துலாந்து தேசத்து வீரனையும், கோயிலில் இழிய கொலை புரிந்த ப்ரூஸ் என்ற ஸ்காட் ஜாதி இளவரசனையும், பின்னும் ஆங்கிலேய ராஜாங்கத்தாரால் ராஜத் துரோகிக ளென்று தூக்கிடப்பட்ட எம்மெட் முதலிய ஐர்லாந்து தேசத்து ஜனத்தலைவர்களையும் சிறிது காலத்துக்கு முன்பு மந்திரி சேம்பர்லேன் புகழ்ந்து பேசிய உபந்யாஸம் போன்ற விஷயங்களை இந்தியாவுக்குள் வர வொட்டாமல் செய்தல் சாத்யமன்று.

ஒரு மனிதனை அடிமையாக இருக்கும்படி ஆங்கில பாஷையில் தர்க்கித்தல் அஸாத்யம்... ஆங்கிலம் பேசும் ஜாதியார்களின் ஸமத்துவக் கூட்டத்தில் நம்மையும் சேர்க்க வேண்டும்.......... வெள்ளைக்காரப் படிப்பினால் நமது ஹிந்து மத ஜனாசார விஷயங்களிலேகூடப் பல முக்யமான சீர்திருத்தங்கள் நிகழ்ச்சி பெற்று வருகின்றன.

இன்னும் ஹிந்து மதத்தின் பிரிவுக் குணத்தை மாற்றவும், ஜாதி பேதங்களை ஒழிக்கவும், கீழ் ஜாதியார்களுக்குக் கல்விப் பயிற்சி ஏற்படுத்தவும், ஸ்த்ரீகளை ஆண்களுடன் ஸமத்துவம் பெறும்படி செய்யவும், எந்த மதத்திலும் பக்ஷபாத மில்லாமல் நாகரிகமும் அபிவிருத்தியும் விடுதலை யுணர்ச்சியும் நன்றெனக் கருது மிராஜாங்கம் வேண்டும்........

பாரத தேசத்தில் பஞ்சமும் வறுமையும்

பஞ்சத்தின்போது ப்ரித்தானியாவிலிருந்து கிடைத்த பேருதவிக்கு மனப்பூர்வமாக நன்றி செலுத்துகிறோம்..... இவ்விதப் பஞ்சங்களுக்கு மூல காரணம் பாரத தேசத்தின் கொடிய வறுமையே யாம். விவசாயத் தொழில்களுக்குப் பொதுப்படையாக அனுகூல மென்று காண்பிக்கப்படும் வருஷங்களிலேகூடச் சென்னை மாகாணத்தில் 280 லக்ஷம் ஜனத்தொகையில் 50 லக்ஷம் ஜனங்களுக்கு தான்ய மில்லை யென்று சென்னைத் தீர்வை வசூல் கார்ய ஸ்தலத்தார் (ரெவின்யூ போர்டார்) கணக்கிட்டனர். இது உண்மையாயின் ஜனங்களுக்குப் பிரதிகூலமான வருஷங்களில் ஆஹார நிலை எத்தனை கேடு கெட்டிருக்கு மென்பதை எளிதாக ஊகித்துக் கொள்ளலாம்.

நாம் ஸர்க்கார் கணக்கைக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. தேச முழுதும் மிகக் கொடிய வறுமையில் ஆழ்ந்து கிடப்பதை நாம் கண்ணைத் திறந்து நான்கு புறத்திலும் நோக்கினால் உடனே தெரிந்து கொள்ளலாம்—— தீர்வைத் திட்டத்தை சாசுவதமாகச் செய்தல் இதற்குத் தக்க மருந்தாகும்.

அங்ஙனம் செய்தால் விவசாயி அதிகப் பணம் செலவிட்டு அதிகம் உழைப்பதனா லுண்டாகும் லாபத்திலே தீர்வை யதிகாரி அதிகத் தீர்வை விதிப்பானென்ற அச்சம் நீங்கிவிடும்.

அப்போது மேன்மேலும் முதற் பணமும் தொழிலும் நில அபிவிருத்தியில் பிரயோகப்படும்......... சாசுவதத் திட்ட முறைமையே நல்லதென்று முன்னொரு காலத்தில் ராஜாங்கத்தார் தீர்மானம் செய்திருந்தனர்.

ஆனால், ஸமீப வருஷங்களில் ராணுவச் செலவு நெருக்கத்தால் தீர்வையை அபரிமிதமாக ஏற்றி வருகிறார்கள். இந்தியா முழுமைக்கும் உடனே சாசுவதத் திட்டம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தியாவுக்கு வெளியே இந்தியாவுக்கு யாதொரு லாபமுமில்லாமல் ஆங்கிலேயர் மேன்மேலும் பூமி பிடுங்கும் பொருட்டாகச் செய்யும் போர்களுக்கு இந்தியாவிலிருந்து பணம்

செலவிடும் முறைமை நியாயமன்று. அவ்விதமான போர்களின் செலவு முழுதையும் இங்கிலாந்தின் அரசிறையிலிருந்து செலவிடுதலே சரியாகும்.

ஆங்கிலேயர் மேல்ஜாதி யென்றும், நாம் கீழ்ஜாதி யென்றும், நம்மை அவர்கள் வாள் வலிமையால் ஆளுகிறார்களென்றும் நினைப்பதினாலேயே இத்தனை தீமையும் விளைகிறது. நாம் இந்தக் கொள்கையைப் பகைக்கிறோம். ஆயுதச் சட்டம் ஏற்படுத்தி ஐரோப்பியரும் யூரேஷியரும் இஷ்டப்படி ஆயுதந் தரிக்கலாமென்றும் நாம் மாத்திரம் அனுமதிச் சீட்டு (லைஸென்ஸ்) வாங்காமல் ஆயுதந் தரிக்கக் கூடாதென்றும் விதித்ததும் அந்தக் கொள்கையை ஒட்டியேயாம்..... இந்த நாட்டில் நம்மை இவர்கள் கீழ் ஜாதியாக நடத்துவதினின்றும், தென் ஆப்ரிக்கா முதலிய வெளித் தேசங்களில் வெள்ளையர் நமக்கு ஸமத்துவ உரிமைகள் இல்லையென்று கூறுவதற்கு இடமுண்டாகிறது..... இதனால் நமக்கு விளையும் அவமானங்களுக்கும் கஷ்டங்களுக்கும் எல்லை யில்லை. இதை நாம் இனி ஸஹிக்க மாட்டோம். பரிபூர்ண ஸமத்துவம் நமக்கு உடனே கொடுக்க வேண்டும்.

புனாவில் கலகம் நடந்த விவரம்

"பஞ்சத்தின் கொடுமை போதாதென்று இவ் வருஷத்தில் பம்பாய் மாகாணத்தில் கொள்ளை நோயும் வந்து புகுந்தது. இந்த பயங்கரமான நோய்க்கு இதுவரை யாதொரு மருந்தும் கண்டுபிடிக்கவில்லை. ப்ளேக் நோயை அடக்குவதற்காகப் புனாவில் ஐரோப்பிய சிப்பாய்கள் ஜனங்களை அனாவசிய அவமானங்களுக் குட்படுத்திக் கோயில்களையும், ஜனானாக்களையும் அசுத்தப்படுத்தலாயினர். ஜனங்களுக்குள்ளே மிகவும் சோகமுண்டாயிற்று. புனா ஸர்தார்களில் ஒருவராகிய ஸ்ரீ நாத்து என்பவர் இந்த அக்கிரமங்களைக் கண்டனம் செய்து ராஜாங்கத்தாருக்கு மனுப் போட்டார்.

ஒரு ஐரோப்பிய சிப்பாய் ஒரு ஹிந்து ஸ்த்ரீயை மானபங்கஞ் செய்ததாகத் தகுந்த ஸாக்ஷிகளுடன் நாத்து ருஜுப்படுத்தினார். இன்னும் ஸோல்ஜர்களால் ஜனங்களுக்கு எண்ணற்ற துன்பங்கள் விளைந்தன.

மஹராட்டா பத்திரிகை "இப்போது நகரத்தில் ஆட்சி புரியும் ப்ளேக் நோயின் பிரதிநிதிகளைக் காட்டிலும் மேற்படி நோய் எத்தனையோ மடங்கு கருணை யுடையது" என்றெழுதிற்று... கடைசியாக ப்ளேக் கமிட்டியின் அக்ராஸனபதியாகிய ராண்டு கொலை யுண்டார்.

ஆங்கிலப் பத்திரிகைகள் கூக்குரலிட்டன. ஐரோப்பியர் நடுங்கிப் போயினர். நாத்துவையும் அவருடைய ஸஹோதரரையும் பிடித்து விசாரணை யில்லாமல் சிறைப்படுத்தி விட்டார்கள்.

ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் மீதும் மஹாராஷ்ட்ர பாஷைப் பத்திராதிபர் வேறிருவர் மீதும் ராஜத் துரோக வழக்குத் தொடர்ந்தனர்.

திலகரின் விசாரணையில் ஜூரி 6 பேர் ஐரோப்பியராகவும் 3 பேர் இந்தியராகவும் நியமிக்கப்படவே திலகரை 6 ஐரோப்பியரும் குற்றவாளி யென்றும், 3 இந்தியர் குற்றவாளி இல்லை யென்றும் அபிப்பிராயங் கொடுத்தனர். ஜூரி விசாரணையில் முக்யமாக மஹாராஷ்ட்ர பாஷையில் நடத்தப்பட்ட "கேஸரி"ப் பத்திரிகையில் எழுதிய விஷயங்கள் குற்றமா இல்லையா வென்று கண்டுபிடிக்க வேண்டினால் அந்த பாஷை தெரிந்த ஸ்வதேசிகளை ஜூரிகளாக நியமிப்பதே சரியாக இருந்திருக்கும். திலகர் தண்டனை யடைந்தார்.

ஐரோப்பாவில் ராஜத் துரோகக் குற்றம் செய்தவர்களை ஸாமான்யக் குற்றவாளிகளைப்போல் நடத்தாமல் சற்றே மரியாதையுடன் நடத்துவது வழக்கம்.

இங்கே அப்படி யில்லை. திலகரை ஸாமான்யக் குற்றவாளிபோலவே நடத்தினர்......... எது நேர்ந்தாலும் நாம் நம்பிக்கை இழந்துவிடலாகாது. ஸ்வதேச பக்தியைக் கைவிடாம லிருந்தால் நமக்கு வெற்றி யுண்டாய் நமது நாடு அற்புதமான உயர்நிலை பெறும்"

என்று ஸ்ரீ சங்கரன் நாயர் பேசி முடித்தார். இவருடைய உபந்யாஸம் மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சக்தி யுடையதாகவும் விளங்கிற்று.

இவ் வருஷத்துக் கூட்டத்தில் நடந்த இதர முக்யமான செய்திகள்: 1818, 1819, 1827-ம் வருஷங்களின் கட்டளைகளின்படி ஸர்க்காருக்குள்ள விசேஷ அதிகாரங்களின் விஷயத்தைக் குறித்துப் பேசி, ஐந்து மாதங்களுக்கு மேலாகச் சிறைப்பட்டுக் கிடந்த நாத்து ஸஹோதரரை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்ட பன்னிரண்டாந் தீர்மானத்தை ஸுரேந்த்ரநாத் பானர்ஜி ப்ரேரேபணை செய்தார். அதை யொட்டிப் பேசுகையில் ஸ்ரீ பானர்ஜி பின்வருமாறு கூறினர்:

> "புனாவில் தண்டப் போலீஸ் வைத்தது தவறு. திலகரையும் புனாவில் வேறிரண்டு பத்திராதிபரையும் அடைத்து வைத்தல் அதனிலும் பெரிய தவறாகும். தனி மனுஷ்யனுக்குள்ள ஸ்வதந்திரத்தை நாம் எப்பாடு பட்டும் காத்துக் கொள்வோம். அங்ஙனம் இங்கு பிரதிக்கினை செய்து கொள்ளுகிறோம்"

என்றார்.

நாத்து ஸர்தார்களை அடைத்து வைத்த அநியாயத்தைக் குறித்துப் பேசுகையில் அனிபெஸன்ட் தனது ஜன ஸபைக் கதையில் ப்ரான்ஸ் தேசத்தில் ராஜ்யப் புரட்சி நடக்கு முன்னே மிகக் கொடிய அரசு செலுத்திய பூர்போன் ராஜவமிசத்தார் காலத்தில் "லேத்தர் தெகஷே" என்ற சிறைச் சீட்டுக்கள் விடுத்ததுபோல விசாரணை யின்றிக் குடிகளை அடைக்கும் மிருகத்தனமான வழக்கம் இன்றுவரை பாரத தேசத்தி லிருப்பதை எடுத்துக்காட்டுகிறார்.

17ஆம் தீர்மானம் பஞ்ச விசாரணைக் கூட்டத்தார் பஞ்ச நிவர்த்திக்குரிய வழிகளை ஆலோசிப்பது மட்டுமே யன்றி, பஞ்சம் அடிக்கடி தோன்றும் காரணங்களை ஆராய்ந்து தெளிந்து அவற்றைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற கருத்துடையது. இதை ஸ்ரீ ராமாநுஜுலு நாயுடு என்பவர் ப்ரேரணை செய்தார். சென்னை மாகாணத்தில் 1854, 65, 76, 77, 78, 91, 97 - இத்தனை வருஷங்களிலும் பஞ்சம் நேரிட்டதை எடுத்துக்காட்டி இங்ஙனம் அடுத்தடுத்துப் பஞ்சம் வருவதைத் தடுக்குமாறு ராஜாங்கத்தார் ஒன்றுமே செய்யவில்லை யென்பதை ராமானுஜுலு நாயுடு எடுத்துக் கூறினர்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

எல்லை நீதி

இந்தியா ராஜாங்கத்தார் இப்போது அனுஸரிக்கும் எல்லை முறைமை பொதுவாக ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் உயர்ந்த நலங்களுக்கும் விசேஷமாக இந்த தேசத்தின் அனுகூலங்களுக்கும் தீமையாக முடியும்;

ஏனெனில் இப்போதுள்ள ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் வரம்புகளுக் கப்பால் அடிக்கடி படையெடுத்துச் செல்வதனாலும் அதனின்றும் அருமையான உயிர்களுக்கும் தேசப் பணத்துக்கும் பெருஞ் சேதம் விளைவதாலுமேயாம் என்ற தமது ஆழ்ந்த, உண்மையுள்ள தீர்மானத்தை இந்த ஜன ஸபை அறிவிக்கிறது.

எனவே, இவ்வனம் வலியப் படையெடுக்கும் முறையை நிறுத்தி விடும்படிக்கும், அன்றி அப் படை யெழுச்சிகள் அவசியமென்று தோன்றினால், அவை ஸாம்ராஜ்யத்தின் பொது நோக்கங்களுக்காக நடைபெறுவன ஆதலின், அவற்றின் செலவில் பெரும் பகுதி ப்ரிட்டிஷ் அரசிறைப் பணத்தி லிருந்து கொடுக்கும்படிக்கும் இந்த ஜன ஸபை ப்ரித்தானிய தேசத்து மஹா ஜனங்களை வேண்டுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

எல்லைச் சண்டைச் செலவுக்கு ப்ரிட்டிஷ் கொடை

1. பஞ்சம், கொள்ளை நோய் என்ற விபத்துக்களால் இந்த நாட்டுப் பொருள் நிலை சிதைந்து போயிருப்பதனாலும், ஏற்கெனவே குறைவான நமது பொருளாதாரங்கள் இதனால் மேலும் குறைவு பட்டிருப்பதனாலும், வடமேற்கெல்லைக் கப்பால் நடத்தும் படை யெழுச்சித் தொழில்கள் ஸாம்ராஜ்ய முழுதையும் நன்மையுறக் காக்கும் நோக்கமுடையன ஆதலாலும், ப்ரித்தானியாவுக்கும் நமக்கு மிடையே ராணுவச் செலவுகளை என்ன முறையால் பங்கிட்டுக் கொள்வதென்ற விஷயத்தைப் பிந்தி நிச்சயம் செய்து கொள்ளினும், இப்போது

நடைபெறும் போர்ச் செலவுக்குத் தக்க தொகை கொடுக்கும்படி தயை செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரிட்டிஷ் பார்லிமெண்டை வேண்டுகிறது.

2. முதலிரண்டு தீர்மானங்களில் கண்ட ப்ரார்த்தனை அடங்கிய மனுவொன்றை இந்த ஜன ஸபையின் பெயரில் அக்ராஸனபதி கையெழுத்திட்டுப் பார்லிமென்ட் ஸபைக்கு அனுப்பும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

ஜன ஸபையின் ப்ரார்த்தனைகளும்
ராஜ(நியமித) விசாரணைக் கூட்டமும்

பாரத தேசச் செலவைப் பற்றிய ராஜ விசாரணைக் கூட்டத்தார் தம்முடைய விசாரணைகளைப் பொது ஜனங்களின் முன்னிலையில் நடத்துவதாகத் தீர்மானம் செய்திருப்பது பற்றி இந்த ஜன ஸபை மகிழ்ச்சி யடைகிறது.

மேலும் இந்தியா தேசத்தின் வழக்கை முழுதும் எடுத்துரைக்கும்படி கனந் தங்கிய விசாரணைக் கூட்டத்தார் ப்ரதிநிதித் தன்மை வாய்ந்த பாரத ஸாக்ஷிகளுக்கு ஸமயம் ஏற்படுத்திக் கொடுத்தது பற்றி நன்றி தெரிவிக்கிறது. மேலும் விசாரணைக் கிடமான மூன்று பகுதிகளின் விஷயத்திலும் ஜன ஸபையின் ப்ரார்த்தனை பின்வருமாறு:

1. இந்தியாவின் செலவை அடக்கியாளும் அம்சத்தில்:

(அ.) வைஸ்ராய் ஸபையில் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களை பாரத ஜனங்களுக்கு நேரான ப்ரதிநிதிகளாக்க வேண்டும்; திருத்தங்கள் ப்ரேரிக்கவும் அரசிறைத் திட்டத்தின் நியமனங்களை யொட்டி ஸபையைப் பிரிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

(ஆ.) வைஸ்ராய் சட்டஸபையிலும் மாகாண ஸபைகளிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் சிபார்சின்மீது இந்தியா மந்திரி ஸபையில் நல்ல அனுபவமும் பதவியுமுடைய பாரத ப்ரதிநிதிகளில் தக்க தொகை நியமிக்கப்பட வேண்டும்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

எல்லை நீதி

இந்தியா ராஜாங்கத்தார் இப்போது அனுஸரிக்கும் எல்லை முறைமை பொதுவாக ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் உயர்ந்த நலங்களுக்கும் விசேஷமாக இந்த தேசத்தின் அனுகூலங்களுக்கும் தீமையாக முடியும்;

ஏனெனில் இப்போதுள்ள ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் வரம்புகளுக் கப்பால் அடிக்கடி படையெடுத்துச் செல்வதனாலும் அதனின்றும் அருமையான உயிர்களுக்கும் தேசப் பணத்துக்கும் பெருஞ் சேதம் விளைவதாலுமேயாம் என்ற தமது ஆழ்ந்த, உண்மையுள்ள தீர்மானத்தை இந்த ஜன ஸபை அறிவிக்கிறது.

எனவே, இவ்வனம் வலியப் படையெடுக்கும் முறையை நிறுத்தி விடும்படிக்கும், அன்றி அப் படை யெழுச்சிகள் அவசியமென்று தோன்றினால், அவை ஸாம்ராஜ்யத்தின் பொது நோக்கங்களுக்காக நடைபெறுவன ஆதலின், அவற்றின் செலவில் பெரும் பகுதி ப்ரிட்டிஷ் அரசிறைப் பணத்திலிருந்து கொடுக்கும்படிக்கும் இந்த ஜன ஸபை ப்ரித்தானிய தேசத்து மஹா ஜனங்களை வேண்டுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

எல்லைச் சண்டைச் செலவுக்கு ப்ரிட்டிஷ் கொடை

1. பஞ்சம், கொள்ளை நோய் என்ற விபத்துக்களால் இந்த நாட்டுப் பொருள் நிலை சிதைந்து போயிருப்பதனாலும், ஏற்கெனவே குறைவான நமது பொருளாதாரங்கள் இதனால் மேலும் குறைவு பட்டிருப்பதனாலும், வடமேற்கெல்லைக் கப்பால் நடத்தும் படை யெழுச்சித் தொழில்கள் ஸாம்ராஜ்ய முழுதையும் நன்மையுறக் காக்கும் நோக்கமுடையன ஆதலாலும், ப்ரித்தானியாவுக்கும் நமக்கு மிடையே ராணுவச் செலவுகளை என்ன முறையால் பங்கிட்டுக் கொள்வதென்ற விஷயத்தைப் பிந்தி நிச்சயம் செய்து கொள்ளினும், இப்போது

நடைபெறும் போர்ச் செலவுக்குத் தக்க தொகை கொடுக்கும்படி தயை செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரிட்டிஷ் பார்லிமெண்டை வேண்டுகிறது.

2. முதலிரண்டு தீர்மானங்களில் கண்ட ப்ரார்த்தனை அடங்கிய மனுவொன்றை இந்த ஜன ஸபையின் பெயரில் அக்ராஸனபதி கையெழுத்திட்டுப் பார்லிமென்ட் ஸபைக்கு அனுப்பும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

ஜன ஸபையின் ப்ரார்த்தனைகளும்
ராஜ(நியமித) விசாரணைக் கூட்டமும்

பாரத தேசச் செலவைப் பற்றிய ராஜ விசாரணைக் கூட்டத்தார் தம்முடைய விசாரணைகளைப் பொது ஜனங்களின் முன்னிலையில் நடத்துவதாகத் தீர்மானம் செய்திருப்பது பற்றி இந்த ஜன ஸபை மகிழ்ச்சி யடைகிறது.

மேலும் இந்தியா தேசத்தின் வழக்கை முழுதும் எடுத்துரைக்கும்படி கனந் தங்கிய விசாரணைக் கூட்டத்தார் ப்ரதிநிதித் தன்மை வாய்ந்த பாரத ஸாக்ஷிகளுக்கு ஸமயம் ஏற்படுத்திக் கொடுத்தது பற்றி நன்றி தெரிவிக்கிறது. மேலும் விசாரணைக் கிடமான மூன்று பகுதிகளின் விஷயத்திலும் ஜன ஸபையின் ப்ரார்த்தனை பின்வருமாறு:

1. இந்தியாவின் செலவை அடக்கியாளும் அம்சத்தில்:

(அ.) வைஸ்ராய் ஸபையில் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களை பாரத ஜனங்களுக்கு நேரான ப்ரதிநிதிகளாக்க வேண்டும்; திருத்தங்கள் ப்ரேரிக்கவும் அரசிறைத் திட்டத்தின் நியமனங்களை யொட்டி ஸபையைப் பிரிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

(ஆ.) வைஸ்ராய் சட்டஸபையிலும் மாகாண ஸபைகளிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் சிபார்சின்மீது இந்தியா மந்திரி ஸபையில் நல்ல அனுபவமும் பதவியுமுடைய பாரத ப்ரதிநிதிகளில் தக்க தொகை நியமிக்கப்பட வேண்டும்.

(இ.) ஒவ்வொரு வருஷமும் இந்தியாவின் பொருள் நிலையைக் குறித்து விசாரணை செய்து அறிக்கை கொடுக்கும்படி காமன்ஸ் ஸபையின் விசேஷக் கமிட்டி யொன்று நியமிக்க வேண்டும்.

2. செலவு மிகுதி அம்சத்தில்: ராணுவச் செலவு முதலிய பயன் தராத செலவுகளைக் குறைத்துவிட வேண்டும். ஜனங்களின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் வளர்ப்பதில் அதிகத் தொகை செலவிட வேண்டும். உயர்தர உத்யோகங்களில் ஐரோப்பியரை நியமிக்காமல் இயன்ற வரை பாரதவாஸிகளை நியமிப்பதனால் அதிகப் பண மிச்சமும் ஆட்சியில் திறமை மிகுதியும் விளையும்.

3. செலவுப் பங்கீடுகளின் அம்சத்தில்: இந்தியாவுக்கும் ஸாம்ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளுக்கும் பொதுவான அனுகூலத்தைக் கருதிய செலவுகளில், இங்கிலாந்தின் அரசிறையினின்றும் சரியான பகுதி கொடுக்க வேண்டும். முக்யமாக இப்போது எல்லைக் கப்பால் நடைபெறும் போர்ச் செலவை ஸாம்ராஜ்யப் பொக்கஷத்திலிருந்து தர வேண்டும்.

மேலும் மேற்படி தீர்மானத்தில் ஒரு பிரதி கையெழுத்திட்டுக் காலதாமஸ மின்றி நம்முடைய ஸபாநாயகர் ராஜ (நியமித) விசாரணைக் கூட்டத்தின் அக்ராஸனபதிக்கு அனுப்ப வேண்டுமென்று இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:

பல திரட்டு

(i) பண்டைய ஜன ஸபைக் கூட்டங்களின் தீர்மானக் கருத்துக்களைத் தழுவி இந்த ஜன ஸபை கீழே கண்ட சீர்திருத்தங்கள் அவசியமென்று ராஜாங்கத்தாரிடம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

1. ஆப்காரித் திருத்தம் (10ஆம் ஜன ஸபைக் கூட்டம் 16ஆம் தீர்மானம் 3ஆம் பகுதியைக் காண்க.)

2. ஆயுதச் சட்டத்தைச் சீர்திருத்தம் செய்தல் (1894-10ஆம் கூட்டம் 16ஆம் தீர்மானம் 6ஆம் பகுதியைக் காண்க.)

3. ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்தல் (மேற்படி, மேற்படி 7ஆம் பகுதி காண்க)

4. பாரத தேசத்தில் ஸ்வேச்சைக் காப்புப் படை ஏற்படுத்துதல் (மேற்படி, மேற்படி 9ஆம் பகுதியைக் காண்க)

5. ஐரோப்பிய, யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரிவர்த்தன ஈடுகொடுப்பதை ஒழித்தல்.

6. இந்தியா மந்திரியின் ஸபையை ஒழித்து விடுதல்.

7. பஞ்சாபிற்கு ஒரு ஹைகோர்ட் ஸ்தாபனம் செய்தல்.

(ii) பின்னும் இந்த ஜன ஸபையானது முந்திய ஜன ஸபையின் கொள்கையை அனுஸரித்து:

1. கல்வி இலாகாவில் பக்ஷபாதங்கள் நடப்பதையும் (12ஆம் ஜன ஸபை (1896) கூட்டம் ஆறாந் தீர்மானத்தைக் காண்க)

2. உப்புத் தீர்வை மித மிஞ்சி ஏறிக் கிடப்பதையும் (12 - 1896 - 8ஆம் தீர்மானம்)

3. தென் ஆபிரிகாவில் நம்மவர்களுக்கு அநியாயங்கள் நடப்பதையும் (12 - 1896 - 9)

4. மத்ய மாகாணங்களின் ப்ரதிநிதியாக ஒருவரை வைஸ்ராய் ஸபையில் ஜனங்களின் அனுமதி யின்றி நியமித்திருப்பதையும் பலமாகக் கண்டனம் செய்கிறது.

(iii) தவிரவும், பின்வரும் சீர்திருத்தங்கள் அவசியம் செய்து திரவேண்டு மென்ற முந்திய ஜன ஸபைக் கூட்டங்களின் ப்ரார்த்தனைகளை இந்த ஜன ஸபை மீட்டும் பலமாக வற்புறுத்துகிறது. அவையாவன:

1. வைத்ய இலாகாத் திருத்தம் (12 - 1896 - 10ஆம் தீர்மானத்தைக் காண்க)

2. யூனிவர்ஸிடி (ஸர்வ கலா சங்கத்) திருத்தம் (12 - 1896 - 14ஆம் தீர்மானம்)

3. உள்நாட்டுக் குடியேற்றக் கட்டளை - 1892ஆம் வருஷத்து முதல் (I) கட்டளையை 1893ஆம் வருஷத்து ஏழாங் (VII) கட்டளையால் திருத்திய சட்டத்தை உடனே அழித்துவிட வேண்டும் (12 - 1896 - 15ஆம் தீர்மானம்)

4. தக்க விசாரணை யின்றி ஸ்வதேச ராஜாக்களைச் சிங்காதனத்தினின்றும் பெயர்க்கும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும். (12 - 1896 - 18ஆம் தீர்மானம்.)

5. நாடு முழுதிலும் ஜூரி விசாரணை ஏற்படுத்தி ஜூரித் தீர்ப்பைக் கடைசி சாசுவதமாகச் செய்துவிட வேண்டும். (12 - 1896 - 7)

5. ஐந்தாந் தீர்மானம்:

ஸம காலப் பரீக்ஷைகளும் உத்தியோக விசாரணைக் கூட்டமும்

(1896ஆம் வருஷத்தில் நடைபெற்ற 12ஆம் ஜன ஸபைக் கூட்டத்துத் தீர்மானங்களில் 5ஆம் தீர்மானத்தைக் காண்க.)

6. ஆறாந் தீர்மானம்:

ஸ்வதேச ராஜாக்களின் எல்லைக் குள்ளே பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

(ஸ்வதேச ராஜாக்களின் எல்லைக்குள் ப்ரிடிஷ் ராஜாங்கத்துக்குச் சொந்தமான இடங்களில் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போட்டிருக்கும் 1891 ஜூன் 25ஆம் தேதி இந்தியா ராஜாங்கத்து அறிக்கையை ஒழித்துவிட வேண்டும். 1895 - 11ஆம் ஜன ஸபைக் கூட்டம் 6ஆம் தீர்மானத்தைக் காண்க.)

7. ஏழாந் தீர்மானம்:

நிலவரித் திட்டம்

நிலவரித் திட்டத்தை அடிக்கடி மாற்றும் வழக்கம் நடைபெற்று வரும் மாகாணங்களில் அங்ஙனம் மாற்றுதற் குரிய கால வரையறையைச் சுருக்கியும் தீர்வைத் தொகையை அதிகப்படுத்தியும் ராஜாங்கத்தார் அனுஷ்டித்து வரும் முறைமையை இந்த ஜன ஸபை பலமாகக் கண்டனம் புரிவதுமன்றி, இந்த தேசத்தின் நன்மைகளை உத்தேசித்து அப்படிப்பட்ட மாகாணங்களில் நிலத் தீர்வையைச் சாசுவத மாகத் திட்டப்படுத்துதல் முற்றிலும் அவசியமென்ற தனது ஸ்திரமான நம்பிக்கையை அறிவிக்கிறது.

8. எட்டாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிவுபடுத்தல்

(1896-12ஆம் ஜன ஸபைக் கூட்டம் 3ஆம் தீர்மானத்தைக் காண்க.)

9. ஒன்பதாந் தீர்மானம்:

பஞ்ச விசாரணைக் கூட்டம்

இந்தியா ராஜாங்கத்தார் பஞ்ச விசாரணைக் கூட்டமொன்று நியமித்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை மகிழ்ச்சி தெரிவிப்பதுடன், அந்தக் கூட்டம் இவ் விஷயத்தை அற விசாரணை பண்ணுமென்ற நம்பிக்கை கொண்டிருக்கிறது;

மேலும் (1896ஆம் வருஷம் 12ஆம் ஜன ஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட 12ஆம் தீர்மானத்தில் முதல் ப்ரகரணத்தில் கூறிய) சீர்திருத்தங்களை நிறைவேற்றும்படி இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்றத்தாருக்கும் அமெரிக்காவுக்கும் நன்றி யுரை; பஞ்ச நிவர்த்திக்குப் பணம் அனுப்பிய உதவிக்காக

சிறிது காலத்துக்கு முன்னே இங்கு நடந்த பயங்கரமான பஞ்சத்தில் பத்து லக்ஷக் கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் கஷ்டப்பட்டதை நிவர்த்தி செய்வதற்கு தயவுடன் பண உதவி புரிந்த ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கும், ப்ரிட்டிஷ் குடியேற்றத்தா ருக்கும், அமெரிக்காவுக்கும் இந்த ஜன ஸபை நன்றி தெரிவிப்பதுடன், நமது நாட்டிலுள்ள ஆங்கிலேயரிலும் இந்தியரிலும், ஆணும் பெண்ணும் பலர் செய்த திரவிய ஸஹாய முதலிய ஸேவைகளை மிகவும் நன்கு மதித்துப் பாராட்டுகிறது.

மேலும் ஜன ஸபைக் கமிட்டிகள் தம்முள்ளே 1000 பவுன் சேகரித்து லண்டன் நகர ஸபைத் தலைவருக்கு அனுப்பி, லண்டனில் முக்யமான ஸ்தல மொன்றில் ஒரு ஞாபகச் சின்னம்

நிறுத்திக் கடந்த பஞ்சத்தின்போது பாரத நாட்டாருக்குச் செய்த உதவிக்கு நன்றி யுணர்ச்சி காட்டுவதை உலகறிய நாட்டும்படி கேட்டுக் கொள்ள வேண்டுமென்று இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

மாகாண நிர்வாக ஸபைகளின் அமைப்பு

சென்னை, பம்பாய் கவர்னர் ஸ்தானங்களுக்கு இங்கிலாந்தி லிருந்து ராஜதந்திரிகளை நியமிக்கும் முறை மிகவும் அறிவுடைய தாகையாலும், அவசியமானபோது தீர்மான வாக்குச் சொல்லும் உரிமை இந்த கவர்னர்களுக்குச் சட்டப்படி அனுமதி செய்யப்பட்டிருப்பதனை அவர்கள் உபயோகப் படுத்தும்வண்ணமாகவும்;

அம் மாகாணங்களில் இப்போது கவர்னரும் இரண்டு மெம்பரும் சேர்ந்து நிர்வாஹம் பண்ணும் முறையை மாற்றி, கவர்னரும் மூன்று மெம்பரும் சேர்ந்து பண்ணும்படி செய்ய வேண்டு மென்றும், அம் மூவரில் ஒருவர் பாரதக் குடியாட்சி மண்டலத்தைச் சேராதவராக இருக்க வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

தேச நிர்வாகக் கட்டளை

1818ஆம் வருஷத்து வங்காளத்து 3ஆம் கட்டளை, 1819 சென்னை 2ஆம் கட்டளை, 1827 பம்பாய் 25ஆம் கட்டளை - இவற்றால் கவர்ன்மென்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அஸாதாரணமான அதிகாரங்களை அவர்கள் நாட்டிலே ஸமாதானமும் அமைதியும் நடைபெறும் காலத்தில் வழங்குதல் நியாயமில்லை யென்று மரியாதையுடன் கண்டனம் செய்வது மன்றி, அந்த அதிகாரங்களை உபயோகிக்க வேண்டுமானால் ராஜாங்கத்தார் மிகவும் பரியாலோசனை செய்து அதி ஜாக்ரதையுடனும், பெரிய பொறுப்புணர்ச்சியுடனும் வேலை செய்வதற்குரிய வரம்புகள் கட்ட வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

1. எங்ஙனமெனில்: மேற்படி கட்டளைகளின் முகவுரையில் கூறப்பட்ட நிலைமை மேற்படி மாகாணத்திலேனும் அதனிடையே குறிப்பிட்ட யாதாயினுமொரு பகுதியிலேனும் இருப்பதாகவும், ஆதலால் அவசியமானபோது (மேற்படி சட்டங்களின்படி) தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த நிச்சயித்து விட்டதாகவும் மாகாண கவர்ன்மெண்டார் முதலாவது விளம்பரம் போட வேண்டும். அந்த அதிகாரங்களின்படி சிறைப்படுத்தப்பட்ட எவனையும் நியாயஸ்தலத்தில் விசாரணைக்குக் கொண்டு வாராமல் மூன்று மாஸத்துக்கு மேலே அடைத்து வைக்கக் கூடாது.

2. 1827ஆம் வருஷத்து பம்பாய் 25ஆம் கட்டளையின்கீழே நாத்து ஸர்தார்களை அடைத்த ராஜாங்கத்தால் பொறுப்பெண்ண மில்லாமல் செய்திருக்க மாட்டார்க ளென்று கருதினும், இவர்களைப் பிடித்துவைத்து இப்போது ஐந்து மாஸமாய் விட்டபடியால் ஜனங்களின் மனதில் அதினின்றும் விளைந்திருக்கும் அசாந்தியையும் திகிலையும் மாற்றும் பொருட்டாகவும் நீதியை உத்தேசித்தும், அவ்விரண்டு ஸர்தார்களையும் உடனே நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டு மென்றும் அவர்கள் மீது குற்றத்தை ருஜுப்படுத்தத் தகுந்த ஸாக்ஷ்யமில்லாவிடின் விடுதலை செய்துவிட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை விரும்புகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

ராஜாங்கத் துரோகச் சட்டம்

124 ஏ பிரிவுப்படி யுள்ள ராஜத் துரோகச் சட்டத்தில் சில மாறுதல்கள் செய்யக் கருதியிருப்பது கண்டு இந்த ஜன ஸபை மிகுந்த கவலையும் அச்சமும் எய்துகிறது; விடுதலைக்குச் சார்பான வழிகளில் அதை மாற்றுவதே செய்யத்தக்க காரியமென்றும், அதை இன்னும் நிர்ப்பந்தமாக்குவது நியாயமில்லை யென்றும் கருதுகிறது; இந்தியாவில் உள்ள ராஜத் துரோகச் சட்டத்தை இங்கிலாந்தின் சட்டத்தைப்போல் செய்துவிட வேண்டுமாயின், அதைக் கையாளும் முறைமை அங்கிருப்பதுபோலவே, இங்கும் அணை கட்டிக் காக்கப்பட வேண்டும். எங்ஙனமெனில், குற்றஞ் சாற்றப்பட்டவர்களை எப்போதும் ஜூரிகளாலேயே விசாரணை செய்ய வேண்டும்.

அந்த ஜூரியில் பாதித் தொகைக்குக் குறையாமல் குற்றஞ் சாற்றப்பட்டவரின் ஸ்வதேசிகளாக இருக்க வேண்டும். எல்லாரும் ஏகோபித்துச் செய்தாலொழிய ஜூரியின் தீர்ப்புச் செல்லாததாக்க வேண்டும். மேலும் ராஜத் துரோஹ வழக்குகளை இதுவரை ஜில்லா கோர்ட்டாரும் ஹைகோர்ட்டாரும் மாத்திரமே விசாரணை செய்யலா மென்பதை மாற்றி மாஜிஸ்த்ரேட்டுகளும் விசாரிக்கலாமென்று விதிக்கக் கருதுவதையும், ராஜத் துரோகத்தை ஒருவன் பரப்புவதாகத் தோன்றினால் அவனை ஜில்லா மாஜிஸ்திரேட் பன்னிரண்டு மாஸத்துக்கு நன்னடக்கை ஜாமீன் கேட்கலாமென்று விதிக்கக் கருதுவதையும் இந்த ஜன ஸபை பலமாகக் கண்டனம் செய்கிறது.

மேலும் வைஸ்ராய் ஸபையில் பாரத தேசத்துக் குற்றச் சட்டத்தின் 124 (ஏ) பிரிவைச் சட்டமாக்கிய காலத்தில் ஸர் ஜேம்ஸ் பீஜ், ஜேம்ஸ் ஸ்டீபென் கொடுத்த வாக்குறுதிகளி னின்றும் இப்போது சட்டத்தில் செய்யக் கருதி யிருக்கும் மாறுதல்கள் வேற்றுமைப்படுகின்றன வென்றும், இதனால் சொல் விடுதலைக்கும் அச்சு விடுதலைக்கும் தீர்க்க முடியாத தீங்கு விளையு மென்றும், அதினின்றும் தேசத்தின் அபிவிருத்தி தடைப்படுமென்றும், ஜனங்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய இடத்தில் கலக்க மேற்படுத்து மென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது. இந்தத் தீர்மானத்தில் ஒரு ப்ரதியை நமது ஸபாநாயகர் சட்டஸபைக்கு அனுப்ப வேண்டுமென்று இந்த ஜன ஸபை விதிக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

குற்ற விசாரணை மசோதா

இப்போது வைஸ்ராய் சட்டஸபையில் ஆலோசனையி லிருக்கும் 1897ஆம் வருஷத்துக் குற்ற விசாரணை நீதி மசோதா பிற்போக்குடையதாகவும், அபிவிருத்திக்கு எதிரிடையாகவும் இருப்பதாலும், அதனின்றும் போலீஸாருக்கு இப்போதுள்ள மித மிஞ்சிய அதிகாரங்கள் இன்னும் மிகுதிப்படு மாதலாலும் மாஜிஸ்த்ரேட்டுகளுக்கு இப்போதில்லாத புதிய ஸ்வேச்சாதிகாரம் ஏற்படு மாதலாலும், ஹைகோர்ட்டாரின்

அதிகாரம் குறைவுபடு மாதலாலும், இவை யனைத்திலும் குற்றஞ் சாற்றப் பட்டவர்களுக்குப் பெரிய கஷ்டங்கள் விளையு மாதலாலும் அம் மசோதாவை இந்த ஜன ஸபை கண்டனம் செய்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

பஞ்சாப் சட்டஸபைச் சீர்திருத்தம்

பஞ்சாபுக் கொரு சட்டஸபை அமைத்தது பற்றி ராஜாங்கத்தாருக்கு நன்றி செலுத்துவதுடன்; மற்ற மாகாணங்களில் ஸபிகருக்கும் ஜனங்களுக்கும் இருப்பது போலே, ஸபிகர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமையும், ஜனங்களுக்கு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும் உரிமையும் அம் மாகாணத்திற்கு இன்னும் அளிக்கப்படா திருப்பது பற்றி இந்த ஜன ஸபை வருத்தந் தெரிவிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

பேரார் மாகாண ஆட்சி

பேரார் மாகாணம் ப்ரிட்டிஷ் இந்தியாவின் பகுதி யில்லாவிடினும், இப்போது ப்ரிட்டிஷ் இந்தியாவின் மற்றப் பகுதிகளைப் போலவே அதுவும் ஸபையுடன் கூடிய வைஸ்ராயினாலேயே பரிபாலிக்கப்பட்டு வரவும், அந்த மாகாணத்துக்குச் சட்டம் செய்யும் முக்யமான தொழில் சட்டஸ்ஸபையினால் செய்யப்படாமல் நிர்வாஹ அதிகாரிகளால் செய்யப்படுவதினின்றும், அம் மாகாணத்தை வைஸ்ராயும் அவருடைய ஸபையாரும் பரிபாலிக்கும் வரை அம் மாகாணத்துக் குரிய எல்லாச் சட்டங்களும் சட்ட வலிமை யுடைய உத்தரவுகளும் ப்ரிட்டிஷ் இந்தியாவைப்போலவே வைஸ்ராய் சட்ட ஸபையால் செய்யப்பட வேண்டுமென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் பிரார்த்திக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

பஞ்ச விசாரணைக் கூட்டம்

இந்தியா ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட பஞ்ச விசாரணைக் கூட்டத்தின் விசாரணாம்சங்களினிடையே, மீட்டு

மீட்டும் பஞ்சங்கள் நிகழ்வதன் காரணங்களையும் அவற்றைத் தடுப்பதற்குரிய முன் எச்சரிக்கைகளையும் கூட்டி விசாரணை செய்யும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

தாதாபாய் நவுரோஜிக்கு நன்றி யுரை

பாரத ஜனங்களுக்கு ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி தக்க ப்ரதிநிதி யென்பதில் தனக்குள்ள வற்றாத முழு நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது மன்றி,

அவரைப் பழைய ஸென்ட்ரல் பின்ஸ்பரியேனும், லிபரல் (உதாரக்) கக்ஷியைச் சேர்ந்த வேறு சீட்டுக் கிராமமேனும் மீளவும் பார்லிமெண்ட் மெம்பராக நியமிக்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டிக்கும் ஸர் வில்லியம்
வெடர்பர்னுக்கும் நன்றி; செலவுத் தொகை

1. (1895 - 11ஆம் கூட்டம் 24ஆம் தீர்மானத்தைக் காண்க.)

2. ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகளுக்கும் ஜனஸபையின் கருவியாகிய "இந்தியா" பத்திரிகையின் செலவுக்கும் உதவிப் பொதுக் கார்யஸ்தரின் கார்யாலயச் செலவுக்கும் ரூ. 60,000 பகுத்து வைத்து, அதன் பொருட்டு 1898-ம் வருஷத்திற்கு இப்போதேனும் இனிக் கமிட்டியிலேனும் முடிவு செய்கிறபடி எல்லா வட்டத்தாரும் தத்தமக்குரிய சந்தாக்களைச் செலுத்த வேண்டு மென்று இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

20. இருபதாந் தீர்மானம்:

காரியதர்சிகளின் நியமனம்

வரும் வருஷத்துக்குப் பொதுக் கார்யதரிசியாக ஏ. ஓ. ஹ்யூமையும், உதவிப் பொதுக் கார்யதரிசியாக தீ.எ. வாச்சாவையும் இந்த ஜன ஸபை மறுபடி நியமனம் செய்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

1898 கிறிஸ்மஸ் நாளுக் கப்பால் பிற்பாடு குறிக்கப்படும் தேதியில் சென்ன பட்டணத்தில் பாரத ஜன ஸபையின் பதினான்காங் கூட்டம் நடைபெறுக வென்று இந்த ஜன ஸபை தீர்மானம் செய்கிறது.

பதிமூன்றாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றிற்று

பதிமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று

❖

ஜன சபைச் சரித்திரம்

14ஆம் அத்யாயம்

14ஆம் ஜன சபைக் கூட்டத்தின் விவரங்கள்

1898ஆம் வருஷம் டிஸம்பர் 29, 30, 31ஆம் தேதிகளில் பாரத ஜன ஸபையின் 14ஆம் கூட்டம் சென்ன பட்டணத்தில் நடைபெற்றது. 614 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஸ்ரீமான் ஆனந்தமோஹன வஸு அக்ராஸனாதிபதியாக வீற்றிருந்து பின்வரும் உபந்யாஸம் புரிந்தார்:

ஸபாநாயகர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்

ஸ்ரீ ஆனந்தமோஹன வஸு சொல்லுகிறார்:

இங்கிலாந்தின் விடுதலைக்காக உழைத்த கிறிஸ்தவ வீரன் - இங்கிலாந்துக்காக மட்டுமன்று; பல்கேரியா, க்ரீஸ் (கிரேக்கம்) அர்மீனியா, இத்தாலி என்ற நாடுகளனைத்திலும் நன்மை விளையும் பொருட்டுப் பாடுபட்ட - இங்கிலாந்தின் கீர்த்தி பெற்ற மந்திரி வில்லியம் ஈவார்ட் க்ளாட்ஸ்டோன் இறந்து போய்விட்டது பற்றி மிகவும் வருத்தப்படுகிறோம். இன்றைய தினம் லார்ட் கர்ஸன் பம்பாயில் வைஸ்ராயாக வந்திறங்கினார். அவருக்கு நல்வரவு சொல்லுகிறோம்.

சிறிது காலமாக நம்முடைய ஸ்வதந்த்ரங்களைக் குறைக்க வேண்டுமென்ற பரிதாபகரமான சிந்தனை யொன்று அதிகாரிகளின் உளத்தில் புகுந்திருப்பது கண்டு வருத்தமடைகிறேன். இது வரை இப்படி யில்லை. நமது ராஜரீக அபிவிருத்தி வேகமாக ஏறிக்கொண்டு போகாவிடினும் தொடர்ச்சி நழுவாம லிருந்தது.

இருபது வருஷங்களுக்கு முன்னே ஒரு பிற்போக்கான காரியம் செய்யப்பட்டது. அதாவது லார்ட் லிட்டன் காலத்தில் ஏற்பட்ட ஸ்வதேச பாஷைப் பத்திரிகைகளின் சட்டம். ஆனால், அதை விரைவில் ரத்து செய்து விட்டனர். இப்போது மறுபடியும் இரண்டு வருஷங்களாகப் பிற்போக்கு ஏற்பட்டு வருகிறது. சென்ற காலத்தில் மேதாவிகளும் உபகாரிகளும் ஏற்படுத்தின ராஜ்ய தந்த்ரத்தை இப்போது மாற்றுகிறார்கள்.

கல்வி யிலாகாவில் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களைப் போலவே ஸமான நியதிகளில் நம்மவரையும் நியமிப்பது வழக்கமாக இருந்தது. அப்பால் ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன்பு நம்மவர்களுடைய சம்பளம் குறைக்கப்பட்டது. எனிலும் உன்னத ஸ்தானங்களில் நம்மவர் நியமனம் பெறலாமென்ற விதி யிருந்தது.

பிறகு "வயிர உத்ஸவம்" (அதாவது மஹாராணியின் ஆட்சியில் அறுபதாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்) நடைபெற்ற 1896ஆம் வருஷத்தில் முதல் முதல் மேற்படி உந்நத ஸ்தானங்கள் சிலவற்றில் நம்மவர் சேரத் தகுதியில்லை யென்று கூறி, நம்மவரின் பதவியை இறக்கியது மன்றிச் சம்பளத்தைப் பின்னும் குறைத்து விட்டனர். அதே வருஷத்தில் ரூர்க்கி நகரத்திலுள்ள தச்சுத் தொழிற் கலாசாலையில் நம்மவர் சேரக்கூடாதென்று விதி போட்டனர்.

நாத்து ஸர்தார்களை அடைத்து விட்டனர். அவ்விருவரும் 18 மாஸங்களாக விசாரணை யின்றிச் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். இதே மாதிரியான செய்கைகள் ருஷியாவில் நடக்கும்போது ஆங்கிலேயர் இகழ்ச்சியுடன் நகைக்கிறார்கள். இவ்விதமான செய்கைகள் ராஜாங்கத்தாரால் செய்யப்படுவதினின்றும் அவனவன் உடம்பு அவனவனுக்குச் சொந்தமென்று முதற் சட்டத்துக்கு ஹானி நேரிட்டு ஜனங்களுக்குள் மிகுந்த திகில் உண்டாகிறது.

மேலும் புது ராஜத் துரோகச் சட்ட மொன்று கொண்டு வந்திருக்கிறார்கள். குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சில மாறுபாடுகள் செய்திருக்கிறார்கள். இவற்றால் நாட்டிலுள்ள வாக்கிகளும் பத்ராதிபரும் திருடர் போக்கிரிகளைப்போலே

நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும், போலீஸ் தலைவராகிய ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ராஜத் துரோக வழக்குகளை விசாரணை செய்யலாமென்றும் ஏற்பட்டது.

இன்னும் பின்னடையான சட்டங்கள் எத்தனையோ நிறைவேற்றி யிருக்கிறார்கள். இவற்றுள் கல்கத்தா முனிஸிபல் சட்ட மொன்றாம். கல்கத்தா நகர ஸபையார் தமது கடமைகளை மிகத் திறமையுடன் நடத்தி வந்தனர். ராஜதானி நகரத்து ஸபைக்கு இன்று அநியாயமாகச் செய்யப்படும் அவமானம் நாளை தேச முழுமைக்கும் செய்யப்படும். இதனால் ஸ்தல ஸ்வய ராஜ்யத்துக்கே பெரு விபத் துண்டாய்விடும்.

எல்லைப் புறத்தில் ஓயாமல் படை யெடுத்துச் சென்று அபரிமிதமான செல்வத்தை வாரி யிறைப்பதால் உள் நாட்டுச் சீர்திருத்தங்களுக்குப் பணமில்லாமல் போகிறது. நான் இங்கிலாந்தி லிருக்கும்போது எனக்கு ராஜரீகக் கிளர்ச்சிகளில் ஸம்பந்தப்படாத ஒரு கனவானிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது.

அதில் - "நீர் ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்கு மித்திரரா? அங்ஙனமாயின் அந்த ராஜாங்கத்தார் இந்தியாவில் நடத்தும் தற்கொலைக் கொப்பாகிய ராஜதந்திர முறையை மாற்ற முயற்சி செய்யும். நீர் அந்த ராஜ்யத்துக்கு சத்துருவா? அங்ஙனமாயின் இப்போது நடப்பது போலவே நடந்து அந்த ராஜ்யம் தானாகவே அழிக வென்றெண்ணி வாயை மூடிக் கொண்டிருந்து விடும்" என்று அவர் சொல்லுகிறார்.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்திற்கு நன்மையைக் கருதியே நானும் என் போன்றவர்களும் இங்ஙனம் கண்டித்துப் பேசுகிறோம்..... ஸ்ரீ ரமேசசந்திரர் ஸமீப காலத்தில் பின்வருமாறு கூறி யிருக்கிறார்: "சென்ற இரண்டு வருஷங்களில் ஜனங்களுக்கு ப்ரிட்டிஷ் ராஜ்யத்து நீதியிலும் யோக்யதையிலும் நம்பிக்கை கெட்டுப் போனதுபோல் இதுவரை எப்போதும் கெட்டுப் போயிருந்தது கிடையாது" என. ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு நான் கூறும் புத்தி பின்வருமாறு: "உங்களுக்கு இந்நாட்டில் பத்திரமும், கவுரவமும், நிலையான கீர்த்தியும் வேண்டுமாயின் ஜனங்களைப் பயமின்றி நம்புங்கள். விடுதலையின் வரம்புகளை அகற்றிக் கொண்டு செல்லுங்கள்.

ஜனங்களுக்குப் புது விலங்குகள் பூட்ட வழி தேடவேண்டாம். ஏற்கெனவே உள்ள விலங்குகளை உடைக்க வழி தேடுங்கள்" என்பதேயாம்.

பார்லிமென்ட் ஸபையில் இந்தியா நேராகப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். நமது ஜன ஸபை வருஷத்தில் ஒருமுறை கூடித் தீர்மானங்கள் செய்வது மட்டுமே யன்றி வருஷ முழுமையும் தொடர்ந்து தொழில் செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

என்று ஸ்ரீமான் ஆனந்தமோஹன வஸு கூறினர்.

பதினான்காம் ஜனஸபைக் கூட்டத்தில் நடைபெற்ற இதர முக்கிய விஷயங்கள்

ஜனப் பிரதிநிதிகள் எவ்வளவோ தடுத்துக் கூறியும் கேளாமல் வைஸ்ராய் சட்டஸபையில் நிறைவேற்றப்பட்ட ராஜத் துரோகச் சட்டத்தைக் கண்டனை புரிந்து செய்யப்பட்ட நான்காந் தீர்மானம் ஸ்ரீ ஜம்புலிங்க முதலியாரால் ப்ரேரேபணை செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென்று தேச முழுதிலும் பெரிய கிளர்ச்சி நடந்தது. மேற்படி தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையில் ஜம்புலிங்க முதலியார் ராஜத் துரோகச் சட்டங்களின் பூர்வ சரித்திரத்தை விரித்துக் கூறினார்:

"அந்தச் சட்டத்தில் "விரோதமும் இகழ்ச்சியும்" என்ற பதங்களையும் ராஜாங்கத்தார் சேர்த்திருப்பதினின்றும் ராஜாங்கத்தாருடைய எந்தச் செய்கைகளையும் நாம் கண்டிக்க வழியில்லாமல் போகிறது. எதைத் திருத்த வேண்டு மென்று நாம் சொன்ன போதிலும், அந்த விஷயத்தில் இப்போதுள்ள நிலைமை இகழ்ச்சி அல்லது பகைமைக் கிடமென்று நாம் கருதுவதாகத் தாங்கள் ஊஹிப்பதாக அவர்கள் சொல்லி நம்மைத் தண்டனை செய்து விடலா மன்றோ? மேலும் இந்திய ஸ்வதேசிக் குடிகள் (யூரேஷியரையும், ஆங்கிலோ இந்தியரையும் தவிர) வெளி நாடுகளில் பேசின வார்த்தைகளுக்கு இந்த நாட்டிற்குத் திரும்பி வந்தபின் தண்டனை யுண்டென்று திட்டஞ் செய்திருக்கிறார்கள்.

இதனாலும், நன்னடத்தை ஜாமீன் கேட்பதைப் பற்றிய நியமங்களாலும் தேச முழுமையிலும் ராஜாங்கத்தாரிடம் மிகவும் கோபமும், க்ஷாத்ரமும் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் புதிய வைஸ்ராய் முன்னிருந்தவர் செய்த இந்த அநியாயச் சட்டத்தை ரத்து செய்து விட வேண்டும்"

என்று ஜம்புலிங்க முதலியார் ப்ரார்த்தனை செய்தார்.

ஆறாந் தீர்மானம் சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுத்த வேண்டு மென்ற கருத்துடையது. இதனை ஸ்ரீ வெங்கடரத்நம் ப்ரேரேபணை செய்தார். கவர்ன்மெண்டார் நில விஷயமாகச் செய்த வாக்குறுதிப் பத்திரங்கள் கழிவுக் காயிதங்களுக்கு நிகராய் விட்டன வென்றும், ரயத்வாரிப் பட்டா நியமங்களி லிருந்த நல்ல அம்சங்களை யெல்லாம் மாற்றி விட்டார்க ளென்றும் வெங்கடரத்நம் கூறினர்.

பிறகு R.M. போடாஸ் என்பவர் இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:

"பம்பாய் மாகாணத்தில் சாசுவதத் திட்டமில்லாதபடியால் விளையும் அநியாயங்கள் பல. கோட் (ஜமீந்தார்)கள் கிராமங்களைக் கைவிட்டு விடுகின்றனர். ஏனெனில் அவர்களுக்குக் குடியானவர்களிடமிருந்து கிடைக்கும் வரிப் பணத்தைக் காட்டிலும் கவன்மென்டார் அவர்களிடம் அதிக வரி கேட்கிறார்கள். அவர்கள் எங்கிருந்து கொடுப்பார்கள்? எனவே அவர்கள் விட்டு விடும் கிராமங்களை கவர்ன்மெண்டார் இதுதான் ஸமய மென்று ஜப்தி பண்ணி விடுகிறார்கள்"

என்றார்.

ரஹஸ்யப் பத்திரிகைச் சோதனைக் கமிட்டிகள் நியமனம் செய்திருப்பதைக் கண்டித்துப் பேசிய 8ஆம் தீர்மானம் W.A. சேம்பர்ஸ் என்ற ஆங்கிலேயரால் ப்ரேரேபணை செய்யப்பட்டது.

"என்னுடைய தேசத்தாரால் ஆளப்படும் தேசமொன்றில் இவ்விதமான அனுஷ்டானம் நடைபெறுதல் எனக்குத் திகைப் புண்டாக்குகிறது"

என்று சேம்பர்ஸ் சொன்னார்.

பிறகு அத் தீர்மானத்தை ஸ்ரீ N.C. கெல்கார் ஆதரித்துப் பேசியபோது:

"பகைத்தற் கிடமான இந்த ரஹஸ்யச் சோதனை அனுஷ்டானத்தை நாம் மிகவும் கொதிப்புடன் கண்டனை செய்ய வேண்டும். இது பத்திரிகை ஸென்ஸார் என்பதாகக் கொடுங்கோல் நாடுகளிலுள்ள அனுஷ்டானத்தைச் சற்றே பெயர் மாற்றி வைத்திருப்பது தவிர வேறொன்று மில்லை. எனவே இந்த அனுஷ்டானம் இந்தியாவில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்கு ஆழ்ந்த அவமானமாகும்" என்றார்.

பன்னிரண்டாம் தீர்மானம் தென் ஆபிரிகாவில் நம்மவர் படும் கஷ்டங்களைக் குறித்தது. அதனை ஸ்ரீ பரமேசுரன் பிள்ளை பிரேரேபணை செய்தார்.

"காலம் ஏற ஏறத் தென் ஆபிரிகாவில் நம்மவர் படும் கஷ்டங்கள் மிகுதிப்பட்டு வரலாயின. 1894ஆம் வருஷத்தில் இந்தியர்களுக்கு நட்டாலில் இருந்த வாக்குச் சீட்டு ஸ்வதந்த்ரத்தைப் பிடுங்கி இந்தியாவிலுள்ள நம்மவரின் ஸ்திதிக்குக் கொணர்ந்து விட்டார்கள். ஆள்வரி போட்டு நம்மை அவமானப் படுத்தலாயினர்.

நம்மவர்களை ட்ரான்ஸ்வால் குடியரசு கவர்ன்மெண்டார் நகரங்களுக்கு வெளியே சேரிகளில் வாழும்படி செய்தனர். குப்பை, அசுத்தங்கள் கொண்டு கொட்டும் இடத்தில் அவற்றினிடையே நம்மவர் வாஸம் செய்யும்படி நேர்ந்திருக்கிறது. வேறு சில குடியேற்றங்களில் நாம் ஒற்றையடிப் பாதைகளில் நடக்கக்கூடாதென்றும், ரயில் வண்டி முதலிரண்டு வகுப்புக்களில் ஏறக்கூடாதென்றும், நாட்டுப் பொன் வைத்திருக்கக் கூடாதென்றும், இரவில் 9 மணிக்கப்பால் வெளியேறக் கூடாதென்றும், அனுமதிச் சீட்டில்லாமல் யாத்திரை செய்யக் கூடாதென்றும் விதி செய்திருக்கிறார்கள்.

லார்ட் எல்கின் (வைஸ்ராய்) நேட்டால் சட்டத்துக்கு ஸம்மதப்பட்டு விட்டார். பதினொரு வருஷங்களுக்கு முன்பு இந்தியா கவர்ன்மெண்டார் இந்தப் "பெரிய அநியாயத்துக்கு" ஒருபோதும் ஸம்மதப்பட மாட்டோ மென்று தெரிவித்தனர்.

லார்ட் எல்கின் அதை மீறி வேலை செய்து விட்டார். குடியேற்ற மந்திரியாகிய ஜோஸப் சேம்பர்லேன் இவ் விஷயத்தில் நமக்குதவி செய்து காப்பதாக வாக்குறுதி செய்தார். அதை நிறைவேற்றவில்லை. லார்ட் ஜ்யார்ஜ் ஹாமில்டன் நம்மவரைக் காட்டு ஜனங்களின் கூட்டமென்று சொன்னார்.

இவர் இந்தியா மந்திரி! எனவே இவரிடம் நாம் உதவி எதிர்பார்க்கவும் வழியில்லை"

என்று பரமேசுவரன் பிள்ளை கூறினர்.

பத்தாந் தீர்மானம் நாணய விஷயத்தைப் பற்றினது. இதை ஸ்ரீ வாச்சா ப்ரேரேபணை செய்தார். சண்டையாலும் கொள்ளை நோயாலும் பஞ்சத்தாலும் நாட்டில் அபரிமிதமான பணவற்றுதல் உண்டாயிருக்க, நாணயச் செலாவணி வேற்றுமைகளால் உண்டானதாக நினைத்தல் தவறென்று வாச்சா கூறினர். அந்தத் தவறுதலான எண்ணத்தால் 1893ஆம் வருஷத்துத் "திருத்திய நாணயச் சட்டம்" ஏற்படுத்தியதும் பரிவர்த்தனக் கிரயத்தை ஸ்திரமாக்க முயற்சிகள் செய்ததும் விழலென்பதை வாச்சா எடுத்துக்காட்டினார்.

ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது,

"தீர்வைகள் வெள்ளியில் விதிக்கப்படுவதனால், ரூபாய்க்கு ஏற்பட்ட பொய்க் கிரயத்தை உத்தேசித்துக் குடியானவன் தனது விளைவில் முன்னிலும் 100க்கு 60 மடங்கு அதிகமாக விற்றுத் தீர்வை கொடுக்கும்படி நேரிட்டிருக்கிறது.

ஆங்கிலேயர் கைம்முதற் பணம் இந்த தேசத்துக்கு மேன்மேலும் வருவதைச் சிலர் அனுகூலமாகக் கருதுகிறார்கள். அஃது அங்ஙனம் கருதத் தக்கதன்று. அதனால் இந் நாட்டி லிருந்து அதிகப் பணம் வற்றடிக்கப்படுகிறது. நமது தேசத்து முதல் போட்டு வியாபாரம் செய்வதில் ஏற்படும் லாபமே உண்மையான லாபமாகும்"

என்றார்.

இந்த ஜன ஸபைக் கூட்டத்தின் மூன்றாந் தினத்தன்று லார்ட் கர்ஸானிடமிருந்து காங்க்ரஸ் ஸபையாருடைய நல்வரவுக்கும் வாழ்த்துதலுக்கும் பிரதியாக நன்றி யுரைத் தந்தி வந்தது. அதில் அவர்:

> "இந்தியாவுக்கு நான் ஏதேனும் நன்மை செய்து விட்டுத்தான் போவேன். இங்கிலாந்துக்கு அடுத்தபடி இந்த தேசத்தினிடம் எனக்கு அன்புண்டு"

என்றனர்.

மிஸஸ் அனிபெஸன்ட் இந்தத் தந்தியைக் குறித்துத் தமது புத்தகத்தில் பேசுமிடத்தே:

> "இங்ஙனம் தந்தி கிடைத்த காலத்தில்; பின்னிட்டு 1905ஆம் வருஷத்தில், 'அவுரங்கஜீபுக்குப் பின்பு லார்ட் கர்ஸானுடைய ஆட்சியே இந்தியாவுக்குப் பெரிய கஷ்ட மென்று காங்க்ரஸ் ஸபாநாயகர் ஸ்தானத்தில் ஸ்ரீ கோகலே சொல்லும்படி நேருமென யாரால் எதிர்பார்த்திருக்க முடியும்?"

என்று கூறினார்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

வில்லியம் கிளாட்ஸ்டனின் மரணம்

நவீன ராஜ தந்திரிகளில் முதற்பட்டவரும் மனுஷ்ய ஜாதியின் உண்மை யுள்ள நண்பரும் ஆகிய வில்லியம் ஈவர்ட் க்ளாட்ஸ்டன் இறந்து விட்டதினின்று ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக்கும் நாகரீக உலக முழுமைக்கும் ஏற்பட்ட, நிவர்த்தி செய்யமுடியாத நஷ்டத்தைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தம் தெரிவிப்பது மன்றி, பாரத தேசத்தில் இப்பொழுதைக் காட்டிலும் அதிக உதாரமும் முன்னேற்றமு முடைய அரசியல் ஸ்தாபிக்கும் விஷயத்தில் அவர் காண்பித்த அனுதாபத்தின் பொருட்டுத் தனக்குள்ள நன்றி யுணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. மேலும் அவருடைய குமாரர் ஹெர்பர்ட் கிளாட்ஸ்டனுக்கு மேற்படி தீர்மானத்தின் ஒரு பிரதி அனுப்ப வேண்டுமென்று நிச்சயிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

தர்பங்கா மஹாராஜாவின் மரணம்

தர்பங்கா மஹாராஜா ஸ்ரீ லக்ஷ்மேசுவர ஸிங் பஹதூரின் துக்கத்துக் கிடமான அகால மரணத்தினின்றும் இந் நாட்டிற்கு விளைந்திருக்கும் பெரு நஷ்டத்தைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் வருந்துகிறது. பொது நலத்தில் அவருக்கிருந்த ஆவலையும் மேதையையும் இந்த ஜன சபை மிகவும் பாராட்டுகிறது. அவரால் நமது ஸபைக்குச் செய்யப்பட்ட உதார மிகுந்த வற்றாத உதவியை நினைத்து இந்த ஜன ஸபை நன்றி யுணர்ச்சி தெரிவிக்கிறது. காலஞ்சென்ற மஹாராஜாவின் ஸஹோதரராகிய மஹாராஜா ராமேசுவர ஸிங்குக்கு இந்தத் தீர்மானத்தின் ஒரு பிரதியை அனுப்ப வேண்டுமென்றும் இந்த ஸபை தீர்மானிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

லாஹோரில் ஸர்தார் தயாளஸிங்கின் மரணம்

லாஹோரில் ஸர்தார் தயாளஸிங் இறந்துவிட்டது நிமித்தமாகப் பஞ்சாப் மாகாணத்துக்கும், நாடு முழுமைக்கும் நேர்ந்த பெரு நஷ்டத்தை யெண்ணி, இந்த ஜன ஸ்பை தன் ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்துவது மன்றி, பாரத ஸ்வதேசிகளின் நிலைமையைச் செம்மைப்படுத்த வேண்டு மென்ற முற்போக்கான முயற்சிகள் அனைத்திற்கும் அவர் செய்த உதாரமான உதவியையும் அவருடைய பொது நல உணர்ச்சியையும் இந்த ஸபை மிகவும் உயர்வாகப் பாராட்டுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

ராஜத் துரோகச் சட்டம்

சென்ற ஜன ஸபைக் கூட்டத்தில் நாம் தடுத்துப் பேசியதையும், இன்னும் பல ஆங்கிலேய, இந்தியப் பெரிய மனிதர்களும் ஸபையார்களும் கண்டனம் செய்வதையும் பொருட்டாக்காமல் பாரதக் குற்றச் சட்டத்திலும், குற்ற விசாரணை நீதிச் சட்டத்திலும் போலீஸார்

மாஜிஸ்திரேட்டார்களின் அதிகாரங்களை மட்டு மீறி அதிகப் படுத்தும்படியாகவும், பத்திரிகை விடுதலையையும் பேச்சு விடுதலையையும் குறைக்கும்படியாகவும் சில மாறுதல்கள் செய்ய எண்ணி யிருந்ததை வைஸ்ராய் சட்டஸபையில் நிறைவேற்றி விட்டது கண்டு இந்த ஜன ஸபை வருத்தப்படுவது மன்றி, அம் மாறுதல்களை ரத்து செய்யும்படி வற்புறுத்துகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

லார்ட் கர்ஸானுக்கு நல்வரவு

லார்ட் கர்ஸானுக்கு இந்த ஜன ஸபை வணக்கத்துடன் நல்வரவு கூறுகிறது. அவர் பாரத ஜனங்களிடம் அன்புமிக்க வார்த்தைகள் சொல்லி யிருப்பது கண்டு நன்றி தெரிவிக்கிறது.

இந் நாட்டில் ப்ரிட்டிஷ் ஆட்சியின் உத்தம ஸம்ப்ரதாயங்களை அனுஸரித்து இவருடைய அதிகார காலத்தில் ஜனங்களிடம் நம்பிக்கையும் முன்னேற்றத்தில் நாட்டமுமுடைய ராஜ தந்திரம் கைக்கொள்ளப் படுமென்று நம்புகிறது.

இந்தத் தீர்மானத்தைப் பம்பாயில் லார்ட் கர்ஸானுக்குத் தந்தி மூலமாக அனுப்பும்படி ஸபாநாயகரை நியமிக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

நிலத் தீர்வைத் திட்டம்

(சாசுவத நிலத்தீர்வைத் திட்டம் வழங்காத ப்ரதேசங்களில் குறைந்த பக்ஷம் 60 வருஷங்களுக்குள்ளே தீர்வை உயர்த்துவதில்லை யென்றேனு மொரு விதி செய்ய வேண்டு மென்பது: சென்னை-1894-பத்தாம் ஜன ஸபைக் கூட்டம் இரண்டாந் தீர்மானத்தில் இரண்டாம் ப்ரகரணத்தைக் காண்க.)

7. ஏழாந் தீர்மானம்:

எல்லைச் சண்டைகள்

சென்ற சில வருஷங்களாக இந்தியா கவர்ன்மெண்டார் எல்லை யகற்சி செய்ய முயன்று வருதல் அவர்களுடைய சிறந்த நன்மைகளுக்கு விரோத மாகும்; ஏனெனில் அதனால் தேசத்தின்

இயற்கை வரம்புகளுக் கப்பால் படை யெழுச்சிகள் செய்ய நேர்ந்து இந்த நாட்டின் குடியாட்சிக்கும் பொருட் கஷ்டம் உண்டாகிறது.

இந்த முறைமையை வேருடன் மாற்றி முன்போலே தேசத்தின் சட்ட எல்லைக்குள் அடங்கி நிற்றல் என்ற ஒரே ஸாவதான முறைமைக்கு மீண்டு செல்லும் வரை, எல்லைத் தொந்தரைகள் நீங்கி விட்டன வென்றும், எல்லைச் சாதியார் நண்பர்களாய் விட்டன ரென்றும் ராஜாங்கத்தார் எத்தனை நம்பிக்கையாகச் சொன்னாலும் அவ் வுறுதிப்பாடுகள் பொருளாக மாட்டா.

திருஷ்டாந்தமாகச் சென்ற சில வாரங்களில் ஸ்லாத் பள்ளத்தாக்கில் நடந்த ஸம்பவங்களினின்றும் பெருந் தொகையான படைகளை ஆயத்தமாக வைத்துக் கொண்டிருக்கும்படி நேர்ந்திருக்கிறது.

இதினின்றும் நமது செலவுகள் இன்னும் மிகுதிப்படும். மேலும் இவ்விதமான படை யெழுச்சிகளின் செலவில் சரியான பங்கு ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்ற தனது ஆழ்ந்த கொள்கையை இந்த ஜன ஸபை மீளவும் அறிவித்துக் கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

ரஹஸ்யப் பத்திரிகைக் கமிட்டிகள்

இந்தியாவின் சில பகுதிகளில் ரஹஸ்யப் பத்திரிகைக் கமிட்டிகள் ஸ்தாபனம் செய்திருப்பது மிகவும் ஆக்ஷேபத்துக் கிடமாகுமென்றும், ப்ரிட்டிஷ் ஆட்சியின் உட்கொள்கைக்கு விரோதமாகுமென்றும் தனக்குள்ள பலமான அபிப்பிராயத்தை இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

ஸ்தல ஸ்வராஜ்யம்

வங்காளத்துச் சட்டஸபையில் கொண்டு வந்த கல்கத்தா முனிஸிபல் மசோதா; தக்க ஜனப் பிரதிநிதிகள் சேராமல் பம்பாய் நகர விருத்தி ஸங்கம் ஏற்படுத்திய செய்கை;

இன்னும் இவை போன்ற வேறு பல செயல்களால் ஸ்தல ஸ்வராஜ்ய விஷயத்தில் பிற்போக்கான முறைமையை ராஜாங்கத்தார் தொடங்கி யிருப்பதை வெளியுறக் கண்டு இந்த ஜன ஸபை ஆழ்ந்த அதிருப்தி தெரிவிக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹப் பிரிவு

(நீதி, நிர்வாஹ அதிகாரங்களை உடனே பிரிக்க வேண்டுமென்று மறுபடி வற்புறுத்துதல், 1897 அமராவதி 13ஆம் கூட்டம் 8ஆம் தீர்மானத்தைக் காண்க)

11. பதினொன்றாந் தீர்மானம்:

குடி, படை வைத்ய இலாகாவைச் செம்மைப்படுத்துதல்

1. (இந்தியா குடி வைத்ய இலாகாவைப் படை வைத்ய இலாகாவினின்றும் பிரித்துவிட வேண்டுமென்பது; 1894 சென்னை 10ஆம் கூட்டம் எட்டாம் தீர்மானம் முதல் ப்ரகரணத்தைக் காண்க.)

2. குடி உதவி ரண வைத்தியர் கூட்டத்தினின்றும் 19 பேரை கவர்ன்மெண்டார் குடி ரண வைத்யராக நியமிக்க வழி ஏற்படுத்தி யிருப்பது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைகிறது. எனிலும், "தணிந்த குடி வைத்ய உத்யோக மண்டலத்"தார் (குடி உதவி ரண வைத்யர்கள்) குடி மருந்துச்சாலை உதவி உத்யோகஸ்தர்களின் நிலைமையும் சம்பள அபிவிருத்தித் திட்டமும், மற்ற இலாகாக்களில் ஸமான உத்யோகஸ்தர்களின் நிலமை முதலியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதிருப்திக்கும் பரிதாபத்துக்கும் இடமாக இருப்பதனால் தணிந்த குடி வைத்ய இலாகாவின் தற்கால அமைப்பைப் பற்றி வெளிப்படையான விசாரணை நடத்தும் பொருட்டு உத்தியோகஸ்தரும், அல்லாதாரும் கலந்த விசாரணைக் கூட்ட மொன்று நியமிக்கும்படி இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

3. இந்த ஸம்பந்தத்தில், தமது வாழ்நாளின் கடைசி வருஷங்களை இந் நாட்டு வைத்ய இலாகாச் சீர்திருத்தத்தில் செலவிட்ட பம்பாய்வாஸி பண்டித *K.N.* பஹதூர்ஜீ

ஸமீபத்தில் அகால மரண மடைந்ததினின்றும் இந்த தேசத்துக்கும் இந்த ஜன ஸபைக்கும் நேர்ந்த நஷ்டத்துக்காக இந்த ஸபை வருத்தந் தெரிவிக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

தென் ஆப்ரிகாவில் பாரதக் குடியேற்றத்தாரின் குறைபாடுகள்

தென் ஆப்ரிகாவில் குடியேறி வாழும் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையே செய்யப்படும் அவமானத்துக் கிடமான அநியாயப் பக்ஷபாதங்களைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் துயரப்படுகிறது. சிறிது காலத்துக்கு முன்பு த்ரான்ஸ்வால் ஹைகோர்ட்டார் நம்மவர்களைச் சேரிகளிலே தான் வஸிக்க வேண்டு மென்று தீர்ப்புச் செய்தது அந்தப் பக்ஷபாதங்களுக் கொரு முக்ய திருஷ்டாந்தமாகக் காட்டத் தக்கது. எனவே, பாரதக் குடியேற்றத்தாருக் கேற்பட்டிருக்கும் உரிமைக் குறைகளினின்றும் அவர்களை மீட்டுக் காப்பாற்றும்படி பாரத ராஜாங்கத்தாரையும், ப்ரித்தானிய ராஜாங்கத்தாரையும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

செலாவணி விஷயம்

1. இங்கிலாந்தில் செலவு செய்யும் பொருட்டாக இங்கிருந்து பணத்தை வற்றடித்துக் கொண்டு போவதே பரிவர்த்தன நஷ்டத்துக்கு முக்ய காரணமாதலால், அந்த நஷ்டத்தைக் கட்டும் பொருட்டாக இன்னும் இன்னும் பெரு நஷ்டந் தோன்றும்படி நாணயத்தை மாற்றுதல், செலாவணியைக் குறுக்குதல் முதலிய க்ருத்ரிம உபாயங்களால் இன்னும் பாரத தேசத்துப் பொருளாதாரங்களில் அதிக முட்டுப்பாடும் நமது தேசத்து வியாபாரத்துக்கு அதிக நஷ்டமும் நேருமே யன்றி வேறு பயனிராதென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

2. உயர்ந்த பண்டிதர்கள் சொல்லி யிருக்கிறபடி அச் செலவில் தக்க பகுதியை இங்கிலாந்து பொறுப்பதே இந்த விஷயத்துக்கு உண்மையான நிவர்த்தியாகு மென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

3. ஸர் ஹென்ரி பௌவரை அக்ராஸனபதியாகக் கொண்டு நிகழும் செலாவணிக் கமிட்டியார் ஆராய்ச்சி செய்துவரும் விஷயத்தில் இந்தியாவின் கொள்கையை எடுத்துக் கூறும் பொருட்டாக ரமேசசந்த்ர தத்தரையும், மேர்வான்ஜீ ரஸ்தம்ஜீயையும் தவிர வேறு திறமையுள்ள பாரத ப்ரதிநிதிகளை ஸாக்ஷிகளாக அழைக்காதது பற்றி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

4. லண்டனிலுள்ள செலாவணி விசாரணைக் கூட்டத்தின் ஸபாநாயகராகிய ஸர் ஹென்ரி பௌவருக்கு இந்தத் தீர்மானத்தைத் தெரிவிக்கும்படி ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியின் தலைவராகிய ஸர் வில்லியம் வெடர்பர்னை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

சென்னை, பம்பாய் நிர்வாஹ சபைகளில் பாரதவாஸிகளைச் சேர்க்கவேண்டு மென்பது

சென்னை, பம்பாய் மாகாணங்களின் கவர்னர்களாக இங்குள்ள உத்யோகஸ்தர்களை நியமிக்காமல் இங்கிலாந்திலிருந்து ராஜ தந்திரிகளைத் தருவித்து நியமிக்கும் உபாயம் மிக அறிவுடைய தாதலால், அது நன்கு பயன்படுமாறு மேற்படி மாகாணங்களின் நிர்வாஹம் இப்போது கவர்னராலும் இரண்டு ஸபிகர்களாலும் நடைபெறுவதை மாற்றி கவர்னராலும் மூன்று ஸபிகர்களாலும் நடத்தப்பட வேண்டு மென்றும், அம் மூன்று ஸபிகர்களில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டு மென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

15. பதினைந்தாம் தீர்மானம்:

தேச நிர்வாஹ விதிகளை ரத்து செய்தல்

1818ஆம் வருஷத்து வங்காளத்து மூன்றாம் (III) கட்டளையையும், 1819 சென்னை இரண்டாம் (II) கட்டளையையும், 1827 பம்பாய் இருபத்தைந்தாம் (XXV) கட்டளையையும் ரத்து செய்து விடும்படி ராஜாங்கத்தாரை இந்த ஜன ஸபை வற்புறுத்துகிறது.

ஏனெனில், மஹாராணியின் அரசு மாத்திரமே யன்றிப் பொதுவாக எல்லா நாகரிக ராஜாங்கங்களின் அனுஷ்டானங்களுக்கும் நீதி யறிவுக்கும் அக் கட்டளைகளின் கொள்கையும் நியமங்களும் முழுதும் விரோதமாகவும் குடிகளின் ஸ்வதந்த்ரத்துக்கு ஸ்திரமான அபாயமாகவும் இருத்தலால்.

16. பதினாறாந் தீர்மானம்:

ஸம காலப் பரீக்ஷைகள்

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் முயற்சிகளால் இந்த நாட்டு ஜனங்களுக்கு எவ்வித நற்பயனு மின்றி அவை விழலாய் விட்டது கண்டு இந்த ஜன ஸபை தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறது.

1893 ஜூன் மாதத்திய காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தின்படி குடியாட்சி, வைத்யம், போலீஸ், தச்சு, தந்தி, காடு, கணக்கு என்ற பாரத பரிபாலன உத்தியோகங்களுக் கெல்லாம் போட்டிப் பரீக்ஷைகள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலமாக நடத்துவதே விரும்பத்தக்கது.

மேலும் தபால், உப்பு, ஆப்காரி, காட்டிலாகா உத்யோகங்களில் உயர்தர ஸ்தானங்களில் இந்தியரை நியமிக்கும் விஷயத்தில் உத்தியோக விசாரணைக் கூட்டத்தார் செய்திருக்கும் சிபார்சுகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை யென்பதை எடுத்துக்காட்டுவதுடன் மேற்படி உத்தியோகங் களில் எல்லாத் தரங்களிலும் கல்வி கற்ற இந்தியரை இன்னும் அதிகமாக நியமிக்க வேண்டுமென்று ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

(ஸ்வதேச ராஜ்யங்களில் ப்ரிட்டிஷ் ஆட்சிக்குட் பட்டிருக்கும் எல்லையில் பத்திரிகைகளின் வாயைக் கட்டும் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்பதை அமராவதி, 1897 - 13ஆம் ஜன ஸபைக் கூட்டத்தின் 6ஆம் தீர்மானத்தைக் காண்க)

18. பதினெட்டாந் தீர்மானம்:

தொழிற் கல்வி

இப்போது நடைபெற்று வரும் தொழிற் கல்வி முறைமை போதாததாகவும், அதிருப்திக் கிடமாகவும் இருப்பதால், தேசத்து ஜனங்களின் வறுமையையும் நாட்டுக் கைத்தொழில்களின் க்ஷீண நிலையையும் கருதித் தொழிற் கல்வி விஷயத்தில் அதிக விஸ்தாரமான, ஸத்துள்ள ஆலோசனை யொன்று தயார் செய்யும்படிக்கும், அது நன்றாகவும், வெற்றி பெறும்வண்ணமாகவும் இயலுமாறு அதிகப் பணம் பகுத்து வைக்கும்படிக்கும் ராஜாங்கத்தாரை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

ஜன ஸபையின் சமைப்பும் தொழிலும்

1. அந்தந்த வருஷத்தி னிடையே தத்தம் மாகாணங்களில் நடந்த தொழிலைப் பற்றி வருஷந்தோறும் ஜன ஸபையின் முன்னே அறிக்கை கொடுக்கும்படியான மத்ய கணங்கள் ஏற்பாடு செய்து அவற்றின் மூலமாகக் கார்யஸ்தர்கள் நியமித்து ஜன ஸபையின் நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய வழிகளைத் தேடும்படி எல்லா சாசுவத ஜன ஸபைக் கமிட்டிகளையும் இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

2. இந்தத் தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றும் பொருட்டு வேண்டிய காரியங்களை உடனே தொடங்கும்படி இந்த ஜன ஸபை சென்னை, பம்பாய், நாகபூர், அமராவதி, கல்கத்தா, அலஹபாத், லாஹோர் சாசுவதக் கமிட்டிகளை வேண்டுகிறது.

சென்ன பட்டணத்து ஜன ஸபை உபசார கணத்தாரால் சுற்றுக் கடிதமாக விடுக்கப்பட்ட அபேக்ஷா ரூபமான சமைப்புப் பத்திரிகையைப் பற்றி ஆலோசனை செய்து அடுத்த ஜன ஸபைக் கூட்டத்தின்கண்ணே வரையறையான யோசனை யொன்று கொண்டு ஸமர்ப்பிக்கும்படி பின்வரும் கனவான்களும், நமது ஸபாநாயகரும், பழைய ஜன ஸபைத் தலைவர்களில் இப்போது இந்தியாவில் வஸிப்போரும் கூடிய

கமிட்டி யொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும், அடுத்த கூட்டத்தில் இந்த விஷயமே முதலாவதாக வாதிக்கப்பட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

கமிட்டி

1. பாபு அசுவினி குமாரதத்தர், வங்காளம்
2. தீ. எ. வாச்சா, பம்பாய்
3. ஜோஷீராம், பஞ்சாப்
4. கங்காப்ரஸாத் வர்மா, அயோத்யா
5. பண்டித மதன்மோஹன் மாளவீயர்
6. ரகுநாத் பாண்டுரங்க கரந்தீகர், ஸதாரா
7. பாப்புராவ் தாதா, மத்ய மாகாணங்கள்
8. ஜீ. சுப்பிரமணிய அய்யர், சென்னை
9. R.N. முதோல்கார், பேரார் (கார்யதர்சி)

20. இருபதாந் தீர்மானம்:

பல திரட்டு

i) 1. (ஆப்காரித் திருத்தங்கள் : அமராவதி 1897-13-ம் கூட்டம், நான்காந் தீர்மானம் முதல் (1) ப்ரகரணம்)

2. (ஆயுதச் சட்டத் திருத்தம் : அமராவதி 1897-13-4 (2) ப்ரகரணம்)

3. (ராணுவக் கலாசாலைகள் : மேற்படி, மேற்படி, மேற்படி (3) ப்ரகரணம்)

4, (ஸ்வேச்சைப் படை : மேற்படி, மேற்படி, மேற்படி, மேற்படி (4) ப்ரகரணம்)

5. (பரிவர்த்தன நஷ்ட ஈடு : மேற்படி, மேற்படி, மேற்படி, மேற்படி (5) ப்ரகரணம்)

6. (இந்தியா மந்திரி ஸபையை ஒழித்தல் : மேற்படி, மேற்படி மேற்படி, மேற்படி (6) ப்ரகரணம்)

7. (பஞ்சாபுக்கு ஹைகோர்ட் ஏற்படுத்துதல் : மேற்படி, மேற்படி, மேற்படி, மேற்படி (7) ப்ரகரணம்)

இத் திருத்தங்கள் உடனே செய்யவேண்டுமென்று முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் உறுதி செய்யப்பட்ட தீர்மானங்களை இந்த ஜன ஸபை மீளவும் வற்புறுத்துகிறது.

ii) மேலும் முந்திய கூட்டங்களின் கருத்தை அனுஸரித்துப் பின்வரும் விஷயங்களில் இந்த ஜன ஸபை தனது பலமான கண்டனம் தெரிவிக்கிறது.

1. (கல்வி யிலாகாவில் நம்மைப் படி யிறக்கி வைத்திருக்கும் புது விதிகள் : அமராவதி 1897, 13ஆம் கூட்டம் 4ஆம் தீர்மானம் ii இரண்டாம் சாகை முதல் (1) ப்ரகரணம்)

2. (உப்புத் தீர்வை மிகுதியால் நேரும் கஷ்டம் : மேற்படி மேற்படி மேற்படி மேற்படி (2) ப்ரகரணம்)

3. (மத்ய மாகாணங்களில் சட்டஸபையில் பொது ஜனங்களைக் கலக்காமல் ப்ரதிநிதி ஏற்படுத்திய அக்கிரமம் : மேற்படி மேற்படி மேற்படி மேற்படி (4) ப்ரகரணம்)

iii) தவிரவும், பிற்கூறப்பட்ட சீர்திருத்தங்களை உடனே நிறைவேற்ற வேண்டுமென்ற முந்திய கூட்டங்களின் கருத்தை இந்த ஜன ஸபை மறுபடியும் உறுதியாக எடுத்துக்கூறுகிறது:

1. (ஸர்வ கலா ஸங்கத் திருத்தம் : அமராவதி 1897 – 13 – 4 – iii மூன்றாம் சாகை. இரண்டாம் (2) ப்ரகரணம்)

2. (உள்நாட்டுக் குடிப்பெயர்ப்புச் சட்டத் திருத்தம் : மேற்படி மேற்படி மேற்படி மேற்படி (3) ப்ரகரணம்)

3. (ஸ்வதேச ராஜாக்களை விசாரணை யின்றித் தள்ளக்கூடாது : மேற்படி (4) ப்ரகரணம்)

4. (ஜூரி விசாரணையை வளர்த்தல் : மேற்படி (5) பிரகரணம்.)

5. பாரத ஸ்வதேசிகள் குற்றஞ் சாற்றப்பட்டு ஹைகோர்ட்டுகளில் ஜூரிகளால் விசாரணை நடக்கையிலும், அஸெஸர்களின் உதவியுடன் நடக்கும் விசாரணைகளிலும் மேற்படி ஜூரிகள் அல்லது அஸெஸர்களில் பாதிப் பேருக்குக் குறையாமல் பாரத ஸ்வதேசிகளாக இருக்கவேண்டுமென்று குற்றஞ் சாற்றப்பட்டோர் கேட்டுக்கொள்ளத் தக்கபடியாக

குற்ற விசாரணை நீதிச் சட்டத்தை மாற்றுதல், இந்த தேசத்தாரின் நலத்தைக் கருதுமிடத்தே அவசியமாகிறதென இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

6. (காட்டிலாகா விதிகளில் சீர்திருத்தங்கள் செய்து கிராம ஜனங்களுக்குக் கீழ்உத்யோகஸ்தர்களால் நேரும் கொடுமைகளை நீக்கவேண்டு மென்பது : புனா 1895, 11ஆம் கூட்டம் 18-ம் தீர்மானத்தைக் காண்க)

7. வருமான வரிச்சட்டத்தின் கீழே தீர்வை விதிப்பதற்குரிய வரும்படிச் சிற்றளவை ரூ. 500 லிருந்து ரூ. 1000 ஆக உயர்த்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

பஞ்சாப் சட்டஸபை

(பஞ்சாப் சட்டஸபைத் திருத்தங்கள் : அமராவதி 1897 - 13ஆம் கூட்டம் 15ஆம் தீர்மானத்தைக் காண்க)

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

பேராருக்குச் சட்டஞ் செய்தல்

(பேரார் மாகாணத்துக்குச் சட்டம் நிர்வாஹ அதிகாரிகளால் செய்யப்படுவதை மாற்றி வைஸ்ராய் சட்டஸபையாரால் செய்யப்பட வேண்டு மென்பது : அமராவதி 1897 - 13ஆம் கூட்டம் 16ஆம் தீர்மானம்)

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

ப்ளேக் செலவு

ப்ளேக் நோய் பரவாமல் செய்யும் ஏற்பாடுகள் நாடு முழுமையின் பொது நலத்தைக் கருதிச் செய்யப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டிருப்பன.

ஆதலால் அவ்விஷயமாக விளையும் செலவுகளை ஸ்தல ஸங்கத்தார் மீது சுமத்தாமல் ராஜாங்கத்தார் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:

தாதாபாய் நவுரோஜியிடம் நம்பிக்கை

(அமராவதி 1897 - 13ஆம் கூட்டம் 18ஆம் தீர்மானம்)

25. இருபத்தைந்தாந் தீர்மானம்:

(ப்ரிட்டிஷ் கமிட்டிக்கு நன்றி, அதன் செலவுக்கும் "இந்தியா" பத்திரிகைச் செலவுக்கும் 2 பொதுக் காரியதர்சி செலவுக்கும் ரூ. *60,000* பகுத்துக் கொடுக்க வேண்டு மென்பது. அமராவதி *1897 - 13 - 19* இரண்டு ப்ரகரணங்களையும் காண்க)

26. இருபத்தாறாந் தீர்மானம்:

ஜன ஸபையின் காரியதர்சிகள்

(அமராவதி 1897 - 13 - 20)

27. இருபத்தேழாந் தீர்மானம்:

பாரத ஜன ஸபையின் *15*ஆம் கூட்டம் லக்நவ் நகரத்தில் *1899* கிறிஸ்மஸ் பண்டிகை தினத்துக்குப் பிறகு, பின்னே நிச்சயிக்கப்படும் தினங்களில் நடைபெறும்படி இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

பதினான்காம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன

பதினான்காம் அத்தியாம் முற்றிற்று

❖

ஜன ஸபையின் சரித்திரம்

பதினைந்தாம் அத்தியாயம்

15ஆம் ஜன சபைக் கூட்டம், லக்நவ்: 1899

கிறிஸ்மஸ் காலத்தில் நடந்தது. 740 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர். இவர்களில் 300 மகமதியர் உள்ளூர் (லக்நவ்) ப்ரதிநிதிகளாகவே வந்தனர்.

ஸபாநாயகர் உபந்யாஸச் சுருக்கம்

இந்தக் கூட்டத்தில் ஸ்ரீ ரமேசசந்த்ர தத்தர் அக்ராஸனம் வஹித்துச் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம் பின்வருமாறு:

இரண்டு வருஷங்களுக்கு முன்பு மஹாராணியின் ஆட்சியில் அறுபதாண்டு நிறைவுக் கொண்டாட்டம் நடந்தபோது நான் லண்டனில் இருந்தேன். ஆறு மைல் வட்டத்துக்கு மஹாராணியின் ஊர்கோலம் நடந்தது. வழியெல்லாம் ஆங்கிலேய ஜனங்கள் கூடி நின்று ஆர்ப்பரித்தனர். ஊர்கோலத்துடன் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளினின்றும் வந்த பரிவாரங்கள் செல்வதைக் காணுந்தோறும் ஜனங்கள் கரகோஷத்தாலும் வெற்றி யொலியினாலும் களிப்புக் காட்டினர். எனினும் வீரச் சாயலும், காம்பீர்யமும் சிறந்த பாரத ராஜாக்களின் படையைக் கண்ட மாத்திரத்தில் எழுந்த ஆரவாரம் வேறெதற்கும் எழவில்லை. பிற்பாடு இந்த விஷயத்தைக் குறித்து இங்கிலீஷ் பத்திராதிபர்களும் ராஜ தந்த்ரிகளும் வ்யாக்யானங்கள் புரிகையிலே மற்றக் குடியேற்ற நாடுக ளனைத்திலும் செல்வமும் செழிப்பும் குதிகொண்டு நிற்கையில் பாரத தேச மொன்றில் மாத்திரம் கொடிய பஞ்சம் நேர்ந்திருப்பதை எடுத்துக்காட்டி பாரத நாட்டில் நடைபெறும் ஆங்கில ராஜ்யத்தைப் பழித்துரைத்தனர்.

அந்த வருஷத்தில் நமக்குப் பஞ்சம் ஒரு விபத்து மாத்திரமன்று. எல்லைப்புறத்தில் சண்டை நடந்து கோடிக் கணக்கான திரவியமும் பல வீர உயிர்களும் நஷ்டமாயின. பிளேக் நோய் வந்தது. அது இன்னும் போகவில்லை. இந்த நாட்டிலேயே உலாவி வருகிறது. இதனிடையே கவர்ன்மெண்டாரும் பல உற்பாதங்களை விளைக்கலாயினர். அறுபது வருஷங்களாக நாம் அனுபவித்துவந்த பத்திரிகை ஸ்வதந்த்ரத்தைக் குறைத்துக் கொடுமையான சட்டங்கள் செய்யப்பட்டன. ராஜத் துரோகச் சட்டம் அறியாமையால் செய்யப்பட்டது. படிப்பைப் பரப்பினால் ராஜத் துரோகம் குறையு மென்பதை அறியாமல் படிப்பைப் பரப்பினால் ராஜத் துரோகம் அதிகப்படும் என்று சிலர் கருதுவா ராயினர். மேலும் கல்கத்தா முனிஸிபல் சட்டம் ஏற்படுத்தி ஸ்தல ஸ்வராஜ்யக் கொள்கையை அழித்தது மிகவும் வருத்தத்துக் கிடமான விஷயம்.

1899ஆம் வருஷத்துப் பஞ்சம்

கனவான்களே! மாதரசுகளே!

இவ் வருஷத்தில் மீளவும் நாடு முழுதிலும் கொடிய பஞ்சம் நிகழ்ச்சி பெற்று வருகிறது. இனியேனும் குடியானவர்களுடைய நிலைமையைக் கவனித்துத் திருத்துதற்குரிய பலமான ஏற்பாடுகள் செய்யாதிருந்தால் சரியன்று. ஏழைக் குடியானவர்களுக்கு இத்தனை வறுமையும், கடனும், கஷ்டமும் ஏற்பட்டது அவர்களுடைய குற்றத்தாலன்று.

ஜனத்தொகை மிகுதியால் இந் நாட்டில் வறுமை மிகுதியுற்று அதனால் பஞ்சங்கள் தோன்றுவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். இது பிழை.

இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் ஜனத்தொகை ஏறிச் செல்லும் வேகத்தில் இங்கேறவில்லை யென்பதை நீங்கள் அறிய வேண்டுமாயின், மாஜி பாரத ஜனன மரணக் கணக்குக் காரியஸ்தராகிய மிஸ்டர் பேன்ஸ் எழுதி, ஸமீப காலத்தில் லண்டனில் ப்ரசுரம் செய்திருக்கும் "ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்ய நூல் தொகுதி"யின் முதற் பாகத்தில் வாசித்துக் கொள்ளலாம்.

இந்தியா தேசத்துக் குடியானவரின் வறுமை சிலருடைய மிதமிஞ்சிய செலவினாலும், அறியாமையாலும், செட்டில்லாமை யாலும் உண்டாயிற் றென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால், நான் உயர்ந்த கவர்ன்மெண்ட் உத்யோகங்களில் என் ஆயுளில் சிறந்த பகுதி முழுதையும் செலவிட்டுக் குடியானவருடன் நெருங்கிப் பழகி யிருக்கிறேன். என் போன்றவர்கள் அனுபவத்தில் கண்டது யாதெனில், பூமியின் மீதுள்ள எல்லா நாட்டினரைக் காட்டிலும் நம்முடைய குடியானவரே செட்டும் சிக்கனமும், ஜாக்ரதையும் மிகுதியாக உடையவர்கள். குடியானவர்மீது குற்றமில்லை. ராஜாங்க முறைமையிலுள்ள தவறுதல்களால் பஞ்சம் உண்டாகிறது.

பஞ்சாப் நில மாற்றுதல் மசோதா

பஞ்சாப் குடியானவர்கள் தம் நிலத்தை விற்கவும் அடைமானம் வைக்கவும் கூடாதென்று தடுத்து அதனால் குடியானவர்களுடைய நிலம் காசுக்கடைச் செட்டிகளின் வசப்படாமல் காக்கலாமென்று கவர்ன்மெண்டார் யோசிக்கிறார்கள்.

இது ஸாத்யமில்லை. தான் பாடுபட்டுக் கிடைக்கும் விளைச்சலில் தன் ஆஹாரத்துக்கு வேண்டிய பகுதி குடியானவன் மிச்சம் வைக்கத் தகுந்த உபாயமொன்று கண்டுபிடித்து அதன் மூலமாக அவனுடைய நிலைமையைச் செம்மைப்படுத்த வேண்டுமே யல்லாது, அவனுடைய சொந்த நிலத்தை அவன் பிறருக்கு விற்கவும் அடைக்கவும் கூடாதென்று விதி செய்து அதனால் அவனுக்குள்ள ஒரே உடைமையாகிய பூஸ்திதிக்கு விலை மதிப்புக் குறையும்படி செய்வதினின்றும் அவனுடைய நிலைமை இன்னும் சீர்கெடுமே யன்றிச் சீர்திருந்தாது.

பஞ்சத்துக்கு உண்மையான காரணமும் நிவாரணமும்

குடியானவனுடைய ஏழ்மைக்கும் கடனுக்கும் மூலகாரணம் தீர்வைச் சுமையே யாம். ஸாதாரண வருஷங்களில் அவன் சிறிதேனும் மிச்சம் வைக்க வொட்டாதபடி தீர்வை வசூல் செய்து விடுவதனால் கெட்ட வருஷங்களில் அறுவடை குறையும்போது

அவன் கதி அதோகதியாய் விடுகிறது. பல்லாயிர வருஷங்களின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு பூர்விக ஹிந்து ஸம்ருதி கர்த்தாக்கள் பூமியின் விளைவில் ஆறிலொரு பங்கு அரசனுக்குக் கடமை செலுத்த வேண்டுமென்று விதித்தனர். தற்கால அனுபவத்திலும் அந்தப் பூர்வ விதியே சிறந்ததென்பது விளங்குகிறது.

வங்காளத்தில் சாசுவத நிலவரித் திட்டத்தாலும், 1859 - 1868, 1885 நிலச் சட்டங்களாலும், நிலத்தீர்வை மித மிஞ்சி ஏறாதபடி செய்யப்பட்டிருக்கும் ஜில்லாக்களில், குடியானவர்கள் ஜமீந்தார்களுக்குக் கொடுக்கும் கடமை ஆறிலொரு பங்குக்கு மேலே போகவில்லை. ஆதலால், வங்காளத்தில் இந்த நூற்றாண்டில் கொடுமையான பஞ்சங்களில்லை. 1874, 1897-ம் வருஷங்களில் பேஹாரில் நிகழ்ந்த பஞ்சங்களிலேகூட உயிர்ச்சேதம் மிகுதியாக ஏற்படவில்லை. வங்காளத்து விதியையே நாட்டின் மற்றப் பகுதிகளிலும் வைத்து, மற்ற மாகாணங்களிலும் மொத்த விளைவில் ஆறிலொரு பங்குக்கு மேலே கடமை வாங்குவதில்லை யென்று விதித்து விட்டால் பிறகு நாட்டிலெங்கும் பஞ்சமே தோன்றாது.

வடமேற்கு மாகாணங்கள்

வடமேற்கு மாகாணங்களில் சாசுவதத் திட்டம் ஏற்படவில்லை. ஒவ்வொரு முறையும் புதுத்திட்டம் செய்யும்போது ராஜாங்கத் தாருக்குச் செலுத்தவேண்டிய தீர்வைச் சுமை ஏறிக்கொண்டு போகிறது. எனிலும், இங்கு சராசரியாக மொத்த விளைவில் சுமார் நூற்றில் இருபது ஜமீந்தார்கள் கடமை வாங்குவதாகவும் அவர்களிடமிருந்து அதனிலும் பாதி கவர்ன்மெண்டாருக்குக் கிடைப்பதாகவும் ஸர் அந்தோணி மாக்டோனல் கணக்கிட்டுச் சொல்லி யிருக்கிறார்.

சென்னை ராஜதானி

சென்னை ராஜதானியின் நிலைமை மிகவும் பரிதாபத்துக் கிடமானது. அங்கு சாசுவதத் திட்டமில்லை. அங்கு குடியானவர்களிட மிருந்து கவர்ன்மெண்டார் நேரே தீர்வை

வசூல் செய்கிறார்கள். மொத்த விளைவில் பயிர்ச் செலவு போக மிஞ்சியதில் அரைப் பங்கு (சுமார்) வாங்குகிறார்கள். இதிலும் தீர்வைத் திட்டத்தை மாற்றும் போதெல்லாம் நிரந்தரமாகத் தீர்வையை உயர்த்திக்கொண்டே போனால், அந்த மாகாணத்தில் அடிக்கடி பஞ்சம் வாராமல் வேறென்ன வரும்?

பம்பாய், பஞ்சாப், மத்ய மாகாணங்கள்

பம்பாயிலும் ஏறக்குறையச் சென்னை ராஜதானிக்குள்ள விதியே வழங்கி வருகிறது. பஞ்சாபில் நிலவிதி ஒருவாறு வடமேற்கு மாகாணங்களைப் போலவே யிருக்கிறது.

மத்ய மாகாணங்களில் வழங்கும் நிலத் தீர்வை முறைக்கு மால்குஜாரி முறை என்று பெயர். (வங்காளத்தில் ஜமீந்தார் முறை யென்றும், அயோத்தியில் தாலுக்தார் முறை யென்றும், வடமேற்கிலும், சென்னையிலும் முறையே மஹால் வாரி, ரயத்வாரி முறை யென்றும் சொல்லப்படுவது போலென்க.) எல்லா முறைகளிலும் இந்த மால் குஜாரி முறை மிகவும் சீர்கெட்டது.

குடியானவரிடமிருந்து மால் குஜார் (ஜமீந்தார்)களுக்குக் கிடைக்கும் பகுதியில் 100-க்கு 72 பங்கு வரி யென்றும் தீர்வை யென்றும் ஸர்க்காருக்குப் போகிறது. குடியானவனுக்கு வயிற்றுக்குப் போதும்படியான தானியம் உறுதியாக மிஞ்சுமாறு தீர்வை வசூல் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யும் வரை பஞ்சங்கள் நேர்ந்து ஜனங்கள் அழிவது நிற்காது.

ராணுவச் செலவு; செலாவணி; தேசத்துக் கடன்

ராணுவச் செலவு மிகவும் அபாரமாகிவிட்டது. இந்தியாவின் அவசியங்களுக் கல்லாமல், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் ஸாம்ராஜ்ய முழுமைக்குள்ள அவசரங்களின் பொருட்டாக இந்தியாவில் பிரமாண்டமான ஸைந்யம் வைத்திருக்கிறார்கள். மேலும் 1860ஆம் வருஷத்துக் கப்பால் ப்ரித்தானியாவின் தேசக் கடன் 17½ கோடி பவுன் குறைந்திருக்கிறது. அதே காலத்தில் இந்தியாவின் தேசக் கடன் 10 கோடி பவுன் ஏறி யிருக்கிறது. இதற்கு நாம் செலுத்தும் வட்டியும் இங்கிலாந்துக்குத்தான் போகிறது.

செலாவணி விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கும் புதுமுறையினின்றும் குடியானவர்களுடைய கடன் அதிகப்பட்டு, அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களுக்கு மதிப்புக் குறையத் தக்கதாக இருக்கிறது. நமது நாட்டுக் கைத்தொழில்கள் இங்கிலீஷ் யந்திரத் தொழிலின் போட்டியினால் அழிந்து போய்விட்டன. அதனால் அத் தொழில்களை உயிர் மீட்டுக் காப்பதற்குரிய உபாயங்கள் செய்ய வேண்டும்.

நமது தேசத்தின் ஆட்சியில் நமக்கு அதிகாரமில்லாமல் இருக்கிறது. நமது நாட்டில் நம்மை அன்னியராக அன்னியர்கள் நடத்துகிறார்கள். மூவாயிர வருஷங்களாக நம்முடைய கிராமங்களில் ஸ்வராஜ்ய முறைமை நடைபெற்று வந்திருக்கிறது. இப்போது ஆங்கிலேயர் நம்மை ஸ்வராஜ்யத்துக்குத் தக்கவர்களில்லை யென்று சொல்லிப் போலீஸ் (காவலாட்களின்) மூலமாக ஆளுகிறார்கள். பஞ்சங்களும் உற்பாதங்களும் கஷ்டங்களுமில்லாமல் இந்த தேசத்தார் நேரே வாழ வேண்டுமானால் அதற்கு ஸ்வராஜ்யம் அவசியம்

என்று ரமேசசந்த்ர தத்தர் பேசினார்.

லக்நவ் 1899 – 15ஆம் ஜன சபைக் கூட்டத்தில் நடைபெற்ற வேறு விசேஷங்கள்:

நில உடைமை

நிலத் தீர்வையில் மாத்திரந்தான் ஸர்க்காருக்கு அதிகாரம் உண்டே யன்றி, நில உடைமையில் அதிகாரமில்லை யென்றும், ஸர்க்காருக்குக் கொடுக்கும் கடமை நிலத் தீர்வையையே யன்றிக் குடிவார மன்றென்றும் லாலா கன்னையா என்பவர் பஞ்சாப் நில மாற்றுதல் சட்டத்தைக் குறித்த இரண்டாந் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையிலே கூறினார்.

வருஷ வற்றுதல்

இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் மூன்று கோடிக்கு மேல் நான்கு கோடிப் பவுன் வரை இங்கிலாந்துக்கு வற்றடித்துக் கொண்டு போவதை நிறுத்தினா லொழிய இந்த நாட்டின் வறுமை தீராதென்று, பொன் நாணயத்தை அளவையாக்க

வேண்டுமென்ற யோசனையைக் கண்டித்துப் பேசும் நான்காந் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்கையில் தீ. எ. வாச்சா கூறினர்.

மேலும் ஸ்ரீ வாச்சா:

"ரூபாயின் அடையாள மதிப்பை ஏற்றி அதிலுள்ள வெள்ளியின் விலையைக் குறைத்து விட்டார்கள். முன்பு வெள்ளி விலை ஒரு தோலா ஒரு ரூபாயாக விற்றது. இப்போது ஒரு தோலா 10 அல்லது 11 அணாவுக்கு விற்கிறது. சொற்ப சொத்துடையவர்கள் தங்கள் மிச்சத்தை யெல்லாம் வெள்ளிப் பூண்களாக மாற்றி வைத்திருப்பவற்றுக்கு இப்போது மதிப்புக் குறைந்து போய்விடும்.

மேலும், வெளிநாட்டு வியாபாரிகள் முதற் பணம் கொண்டு வந்து இங்கு வியாபாரம் நடத்துவது நமக்கு நன்மையென்று கருதுதல் மடமை. அதனால் இங்கிருந்து பணம் கொள்ளைபோவது மிகுதிப்படும். இந்த நாட்டு முதல் வைத்து வியாபாரம் செய்வதே இந்த நாட்டுக்கு லாபந் தரக்கூடியது" என்றார்.

தீர்மானங்கள்

15ஆம் ஜன ஸபைக் கூட்டம் – லக்நவ் – 1899

1. முதல் தீர்மானம்:

நீதி, நிர்வாக அதிகாரங்களைப் பிரித்தல்

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நீதி பரிபாலனத்தில், நீதி நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்க வேண்டுமென்ற விஷயத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் பொது ஜன ஆதரவைக் கண்டு இந்த ஜன ஸபை த்ருப்தி யடைகிறது. மிகவும் அவசியமான இப் பிரிவை நிறைவேற்றும்படி லார்ட் ஹாப் ஹவ்ஸ், ஸர் ரிச்சர்ட் கார்த், ஸர் ரிச்சர்ட் கௌச், ஸர் சார்லஸ் ஸார்ஜண்ட், ஸர் வில்லியம் மார்க்பி, ஸர் ஜான் பட்பீயர், ஸர் ஜான் ஸ்காட், ஸர் ரோலன்ட் வில்ஸன், மிஸ்டர் ஹெர்பர்ட், ஜெ. ரெய்னாட்ஸ், ஸர் வில்லியம் வெடர்பர்ன் என்பவர்கள் இந்தியா மந்திரிக்கு விண்ணப்பம் கொடுத்திருப்பது பற்றி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறது.

இந்தியா கவர்ன்மெண்டார் தமது கவனத்துக்கு அனுப்புண்டிருக்கும் அம் மனுவைப் பற்றி யோசனை புரிந்து மிகவும் அவஸரமான இச் சீர்திருத்தத்தை விரைவில் நிறைவேற்றுதற்குரிய காரியங்கள் செய்யும்படி வேண்டுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

பஞ்சாப் நில மாற்றுதல் மசோதா

1. பஞ்சாபில் பயிரிடும் நிலத்தைப் பற்றிய சட்டத்தைத் திருத்தும் மசோதா வொன்று வைஸ்ராய் சட்டஸபையில் கொணர்ந்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது. அந்த மசோதாவில் வேண்டுகிறபடி நிலத்தை நிலஸ்வான்கள் விற்கவும் அடைக்கவும் கூடாதென்று கட்டுப்படுத்தினால்,

அ) விவசாயிகளுக்கும் ஜமீந்தார்களுக்கும் பொருள் மதிப்புக் குன்றும்;

ஆ) நிலத்தின்மீது மேன்மேலும் சுமத்தப்படும் ராஜாங்கத் தீர்வைகளுக்கு உத்தரம் சொல்ல வழியில்லாமல் போய் அவர்களுடைய ஏழ்மை மிகுதிப்படும்.

இந்த மசோதாவுக்கு எதிர்காலத்தில் மாத்திரமே யன்றி இறந்த காலத்தின்மீதும் ப்ரயோகம் உண்டென்று சொல்லும் நியமம் அநீதியும் அதர்மமு மாகுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

2. பின்வரும் வழியால் பயிரிடுவோருக்கு உண்மையான அனுகூலம் ஏற்படுத்தலா மென்று இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது. வரி வசூல் ஸர்க்கார் செய்யுமிடத்தே, விலைவாசி உயர்ந்தாலன்றி நிலத் தீர்வையை உயர்த்தக் கூடாதென்று 1882ஆம் வருஷத்தில் நிச்சயிக்கப்பட்ட விதியை அனுஷ்டிக்க வேண்டும். ஜமீந்தார்கள் வரி வசூல் செய்யுமிடத்தே, மட்டு மிஞ்சி வரி வசூல் செய்யாதபடி தடுக்கக்கூடிய நியம மொன் றேற்படுத்த வேண்டும்.

3. ஸபாநாயகர், ஜோஷீராம், N. குப்தர், வாச்சா, முன்ஷீ மாதவ லால், இக்பால் சங்கர் என்பவர்கள் கூடிய ஸமிதி யொன்று நியமித்து, அந்த மசோதாவிலுள்ள பல நியமங்களின்

தகாத குணத்தை எடுத்துக்காட்டி கவர்ன்மெண்டாருக்கு ஒரு விண்ணப்பம் கொடுக்கும்படி நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை தீர்மானஞ் செய்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் படையின் ஒரு பகுதிக்குள்ள செலவை இங்கிலாந்து பொறுக்க வேண்டு மென்பது

சட்டப்படி இந்தியாவுக்குள்ள எல்லைகளுக்குப் புறத்தே தொழில் செய்யும்படி ப்ரிட்டிஷ் துருப்புக்களைக் கொண்டு போதல் அபாயமில்லை யென்று கருதப்படுவதால், இந்தியாவில் இவ்வளவு பெரிய ஐரோப்பிய ஸைந்யம் வைத்திருப்பதன் செலவில் ஒரு பகுதியை இங்கிலாந்துப் பொக்கசத்தார் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புக்களில் 20,000-க்குள்ள செலவை ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து கொடுத்துவிடும் பக்ஷத்தில், ப்ரிட்டிஷ் துருப்புக்களை ஸாம்ராஜ்ய முழுமைக்கும் மூல பலமாக இந்தியாவில் வைத்திருப்பதிலே தனக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை யென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

4. நான்காந் தீர்மானம்:

செலாவணி விஷயம்

1. இங்கிலாந்தில் செலவிட இந்தியப் பொக்கசத்தினின்று மிக்க திரவியம் வற்றடித்துக்கொண்டு செல்வதே பரிவர்த்தனத்தால் நிகழும் நஷ்டத்துக்கு மூல காரண மாதலால், அந்த நஷ்டத்தை மீட்டக் கருதி செலாவணி ஸமிதியார் செய்த சிபார்சின்படி இந்தியாவில் பொன் அளவை புகுத்தது கண்டு இந்த ஜன ஸபை பரிதபிக்கிறது. இந்தப் புதிய சட்டத்தால் இந்தியா இருப்பதற்குரிய பொற் கடமை ஏறுமென்று இந்த ஸபை அபிப்பிராயப்படுகிறது.

2. கவர்ன்மெண்டாரால் அங்கிகரிக்கப்பட்ட தீர்மானத்தி னின்றும் ஏழை வகுப்பினரின் கடன் சுமை மிகுதிப்படு மென்றும், வெள்ளிப் பூண்களாக அவர்கள் சேர்த்து

வைத்திருக்கும் திரவியத்தின் விலை மதிப்புக் குறையு மென்றும் அதனால் அவர்களுடைய வரி, தீர்வைகளில் சுமை அதிகப்படு மென்றும் இந்த ஸபை கருதுகிறது.

3. மேலும் ஸர்க்கார் அங்கீகரித்திருக்கும் தீர்மானம் உள் நாட்டுத் தொழில்களுக்குத் தீங்கு விளைக்கு மென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

ராணுவக் குடி வைத்ய
இலாகாக்களைப் பிரித்தல்

ராணுவக் குடி, வைத்ய இலாகாக்கள் ஒன்று பட்டிருப்பதினின்றும் செலவு மிகுதியும், அஸௌகர்யமும், தேசத்தார் - ராஜாங்கத்தார் என்னும் இரு திறத்தாருக்கும் தீங்கும் விளைவதனால், அவ் விரண்டிலாகாக்களையும் பிரித்துக் குடி வைத்ய இலாகா வொன்று தனியாகச் சமைத்து, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பஹிரங்கமாக ஸம காலப் போட்டிப் பரீக்ஷகள் செய்வதினின்றும் அதற்கு உத்யோகஸ்தர் நியமனம் செய்யவேண்டுமென்று இந்த ஜன ஸபை பலமாக வற்புறுத்துகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

பத்திரிகைத் தந்திகளின் மசோதா

இப்போது வைஸ்ராய் சபையின் ஆலோசனையிலிருக்கும் "பத்திரிகைகளுக்கு வரும் வெளி நாட்டுத் தந்திகளைப் பற்றிய மசோதா"வின் கருத்து இதுவரை பயன்படத்தக்க அறிவையும் செய்திகளையும் கட்டுப்பாடின்றிப் பரவச் செய்யும் விஷயத்தில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அனுஸரித்து வரும் கொள்கைக்கு விரோத மென்றும், ப்ரிட்டிஷ் இந்தியாவில் (உத்தேசிக்கப்படும்) அந்தச் சட்டத்தை நிறைவேற்றுதற்குத் தக்க அவஸர மிருப்பதாகக் காட்டவில்லை யென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

7. ஏழாந் தீர்மானம்:

கல்கத்தா முனிஸிபல் சட்டம்

"கல்கத்தா நகர ஸபைச் சட்டத்தை" உறுதியாக்கியும் அதுபோலவே ஸ்தல ஸ்வராஜ்யத்துக்குப் பெருந் தீங்கான மசோதா வொன்றை பம்பாய் சட்டஸபையில் கொணர்ந்தும், ஸ்தல ஸ்வராஜ்யத்தைக் கவிழ்த்துவிடத் தக்க கொள்கை தமக்கிருப்பதாக ராஜாங்கத்தார் விளங்குவிப்பது கண்டு இந்த ஜன ஸபை அதிருப்தி கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

உபாத்தியாயர்களை ராஜாங்க விவகாரங்களில் கலக்கக் கூடாதென்று தடுத்தல்

பொதுக் கல்வி யிலாகாவின் மேலதிகாரி அல்லது பிற அதிகாரிகளிடம் அனுமதி பெறாமல், ஸர்க்கார் உதவி பெற்ற பாடசாலைகளின் கார்யஸ்தர்களும் உபாத்தியாயர்களும் ராஜாங்க ஸம்பந்தமான கிளர்ச்சிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் ஸம்பந்தப்படக் கூடாதென்ற விதிகள் ப்ரிட்டிஷ் குடிகளுக்குரிய உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாய், கல்வி முயற்சியில் திறமையும் செல்வாக்குமுடையவர்கள் சேராதபடி செய்து இந் நாட்டில் கல்வியைப் பரப்பும் பொருட்டாகக் குடிகள் உழைப்பதையும் ஸங்கங்கள் சேர்ப்பதையும் குறுக்கி விடுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது. ஆதலால் கல்வி விதி, ஸஹாயச் சட்டம் - இவற்றினின்றும் மேலே விவரிக்கப்பட்ட கருத்துடைய நியமங்களை எடுத்து விடுதற்குரிய ஏற்பாடு செய்யும்படி இந்த ஸபை சென்னை, பம்பாய் ராஜாங்கத்தார்களை வேண்டுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

ஆப்காரிச் சீர்திருத்தம்

சில்லரைச் சாராயக் கடைகளுக்கு அனுமதிச் சீட்டுகள் கொடுக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் கண்டிப்பான நியமங்கள் செய்யவேண்டு மென்றும், ஸ்தல வாஸிகளின்

கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் இந்தியாவில் எங்கும் மேற்படி கடைகள் வைக்கக் கூடாதென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

ஜன ஸபையின் நிர்மாணம்

பாரத ஜன ஸபையின் அமைப்பைக் குறித்து இந்த ஜன ஸபை பின்வரும் விதிகள் ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

1. பாரத ஜன ஸபையின் நோக்கம் யாதெனில், இந்நாட்டு ஜனங்களின் க்ஷேம லாபங்களைச் சட்டத்துக் கிணங்கிய வழிகளால் அபிவிருத்தி செய்தலே யாம்.

2. ஸாதாரணமாக ஜன ஸபை முந்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட இடத்திலும் காலத்திலும் கூடும். ஆனால், பின்னே சொல்லப்போகிற நியமங்களின்படி சமைக்கப்படும் பாரத ஜன ஸபைக் கமிட்டி (ஸமிதி)யார் அவசியம் நேர்ந்தால் ஜன ஸபைக் கூட்டத்தின் காலத்தையும் இடத்தையும் மாற்றலாம். மேலும், மேற்படி ஸமிதியார் அவஸரம் நேர்ந்தபோது தம்மால் நிச்சயிக்கப்படும் காலத்திலும் இடத்திலும் ஜன ஸபையின் விசேஷக் கூட்டம் கூடும்படி செய்யலாம்.

3. ஜன ஸபைக்கும் பிரதிநிதிகள் ராஜரீக ஸங்கத்தார்களாலும், மற்ற ஸபையார்களாலும், பொதுக்கூட்டங்களாலும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

4. ஜன ஸபையின் விவகாரங்கள் "பாரத ஜன ஸபைக் கமிட்டி" என்ற பெயர் கொண்ட தொரு ஸமிதியால் நடத்தப்படும். அந்த ஸமிதிக்கு ஜன ஸபையால் தெரிந்தெடுக்கப்பட்ட 45 ஸபிகர் உண்டு.

அவர்களில் 40 பேர் வெவ்வேறு மாகாண ஸமிதிகளாலும், அவை இல்லாத இடத்தில், ஜன ஸபைக் கூட்டத்திற்கு வந்திருக்கும் மாகாணப் பிரதிநிதிகளாலும் தெரிந்தெடுக்கப்படுவர்.

ஸமிதிக்கு ஸபிகர்கள் ஏற்படும் கணக்குப் பின்வருமாறு:

வங்காளம் - அஸாம் உட்பட - 8 ஸபிகர் (மெம்பர்)
பம்பாய் - ஸிந்த் உட்பட - 8 ஸபிகர்
சென்னை - ஸெகந்திராபாத் உட்பட - 8 ஸபிகர்
வடமேற்கு மாகாணங்கள் - அயோத்தி உள்பட - 6 ஸபிகர்
பஞ்சாப் - 4 ஸபிகர்
பேரார் - 3 ஸபிகர்
மத்ய மாகாணங்கள் - 3 ஸபிகர்

ஜன ஸபை ஸமிதியின் ஸபிகர்களுடைய உத்யோகக் காலம் ஜன ஸபையின் இரண்டு ஸாமான்யக் கூட்டங்களுக்கு இடையிலுள்ள காலமேயாம்.

5. பாரத ஜன ஸபை ஸமிதி தனக்கு ஸௌகர்யமாகத் தோன்றும் இடங்களில் வருஷத்துக்குக் குறைந்த பக்ஷம் மூன்று முறை கூடும். (அதாவது) ஜன ஸபைக் கூட்டம் முடிந்தவுடனே ஒரு முறை; பிறகு ஜூன் - அக்டோபர் மாஸங்களினிடையே ஸமிதியார் தீர்மானிக்கும் காலத்தில் ஒரு முறை; ஜன ஸபைக்கு முந்தி ஒரு முறை.

6. மேற்படி ஸமிதிக்கு ஒரு கௌரவக் கார்யதர்சியும், சம்பளம் வாங்கும் ஒரு உதவிக் கார்யதர்சியும், தக்க சிப்பந்திகளும் ஏற்படுத்தப்படுவர்; இவர்களுடைய செலவுக்கு வருஷத்தில் 5000 ரூபாய் விதிக்கப்படும். இந்தத் தொகையில் ஒரு பாதி முந்தின ஜன ஸபை கூடிய இடத்து உபசார ஸமிதியாராலும், மற்றொரு பாதி அடுத்த ஜன ஸபை கூடப்போகிற இடத்து உபசார ஸமிதியாராலும் தயார் செய்து கொடுக்கப்படும்.

7. மாகாண (ஜன ஸபை) ஸமிதிகள் பாரத நாட்டின் வெவ்வேறு மாகாணங்களின் தலைநகரங்களில் நடைபெறும். ராஜரீக ப்ரசாரமே இவற்றின் நோக்கம். பொதுப்படையாக ப்ரிட்டிஷ் ஆட்சியினிடம் நன்கு மதிப்பும், அவ்வாட்சியிலுள்ள குற்றங்களைச் சட்டத்துக் கிணங்கிய வழிகளால் நீக்குதலும் அந்த ப்ரசாரத்தின் இயல்பாம்.

இஃது ஜன ஸபையின் நோக்கங்களை முன்னேறச் செய்யும் பொருட்டாக மாகாண ஸமிதியாரால் சாசுவத ஸமிதிகள் ஸ்தாபனம் செய்வதாலும், மாகாண ஸபைகள் கூட்டுவதாலும், வேறு தமக்கு

உசிதமாகத் தோன்றும் வழிகளாலும் பாரத ஸமிதியைக் கலந்துகொண்டு நடத்தப்படும் மாகாண ஸமிதிகளே பாரத ஸமிதிக்குப் பொறுப்புள்ள கருவிகளாம். இவை தமது தொழிலைக் குறித்து பாரத ஸமிதிக்கு வருஷாந்த அறிக்கைகள் கொடுக்க வேண்டும்.

8. ஸபாநாயகரைத் தெரிந்தெடுத்தலும், தீர்மானங்கள் வரைதலும், இன்னும் ஜன ஸபையின் ஸம்பந்தமான எல்லாக் கார்யங்களும் பாரத ஸமிதியால் செய்யப்படும். மேலும் பாரத ஸமிதியே பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கவும், பேசுவோரை நியமிக்கவும், ஜன ஸபையின் விவகார நடையை நிச்சயிக்கவும் விதிகள் செய்து ஜன ஸபையின் அனுமதியின் மீது அவற்றை நிறைவேற்றும்.

9. மாகாண ஸமிதிகளில் ஸபிகர் நியமனம், விவகார நடை, இன்னும் அவற்றின் தொழில் ஸம்பந்தமான எல்லா விதிகளும் உபவிதிகளும் மாகாண ஸமிதியாராலேயே செய்யப்படும். ஆனால் பின்னிட்டு அவை பாரத ஜன ஸபை - ஸமிதியின் அனுமதிக் குட்பட வேண்டும்.

10. "பிரிட்டிஷ் காங்க்ரஸ் கமிட்டி" என்ற பெயருடைய ஸமிதி யொன்று இங்கிலாந்தில் நடத்தப்பெறும். அந்த நாட்டில் அது நமது ஜன ஸபையின் கார்யங்களைக் கவனிக்கும். இந்த ஸமிதியின் செலவுகளுக்கு வேண்டிய தொகை ஜன ஸபைத் தீர்மானத்தால் திட்டஞ் செய்யப்படும்.

அங்ஙனம் திட்டஞ் செய்த தொகையை பாரத ஸமிதியார் அப்போதைக் கப்போது தம்மால் நிச்சயிக்கப்படும் வழிகளால் தயார் செய்து கொடுக்க வேண்டும்.

11. ஜன ஸபையின் கார்யத்தை நடத்துவதற்கு சாசுவத நிதி சேர்க்கத் தனக்கு உசிதமாகத் தோன்றும் வழிகளில் பாரத ஸமிதி ஏற்பாடு செய்யும்.

அந்த நிதி இந்தியாவில் மாகாணத்துக் கொருவர் வீதமாக ஜன ஸபையால் நியமிக்கப்படும் ஏழு தர்மகர்த்தாக்களின் பெயரால் சேமிக்கப்படும்.

11. பதினொன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டியினிடம் நம்பிக்கை

பாரத ஜனங்களின் பொருட்டாக ப்ரிட்டிஷ் ஸமிதியார் செய்து வரும் உயர்ந்த கார்யங்களை இந்த ஜன ஸபை அங்கீகாரம் செய்கிறது. மேற்படி ஸமிதியில் உள்ள ஸர் வில்லியம் வெடர்பர்னிடத்திலும் மற்ற ஸபிகரிடத்திலும் குறைவு படாத நம்பிக்கை யுணர்த்துகிறது.

ப்ரிட்டிஷ் ஸமிதியின் செலவுகளுக்காகவும், ஜன ஸபைப் பத்திரிகையாகிய "இந்தியா"வின் செலவுக்காகவும் ரூ. 54,000 கொடுக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

நிர்வாஹ சபைகளில் பாரதவாஸிகளின் நியமனம்

(14-ம் கூட்டம் 1898; சென்னை; 14-ம் தீர்மானத்தைக் காண்க)

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

பஞ்சத்தைத் தடுக்கும் வழிகள்

பாரத ராஜாங்கத்தாராலும், மாகாண ராஜாங்கத்தார் களாலும் இப்போது வந்திருக்கும் பஞ்சத்தில் மனித உயிர்களைக் காப்பாற்றவும், கஷ்ட நிவர்த்தி செய்யவும் நடத்தப்பெறும் முயற்சிகளுக்காக இந்த ஜன ஸபை நன்றி செலுத்துகிறது.

ஆனால், குடியானவர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும், பஞ்சம் மீளவும் வாராதபடி தடுக்கவும் உண்மையான உபாயத்தை அனுஸரிக்கும்படி வற்புறுத்துகிறது.

அதாவது ஸர்க்கார்ச் செலவைக் குறைக்க வேண்டும்; நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்க வேண்டும்; நிலத் தீர்வையை மட்டுப்படுத்த வேண்டும் என்று இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

பல திரட்டு

(i) முந்திய ஜன ஸபைகளின் கருத்தைத் தழுவி இந்த ஸபை பின்வரும் சீர்திருத்தங்களைப் பலமாக ஆதரிக்கிறது:

1. ஆயுதச் சட்ட விதிகளைத் திருத்தல் (1897-4ஆம் தீர்மானம் - *i* ஆம் பகுதி 2-ம் கிளை)

2. ராணுவ கலாசாலைகள் ஸ்தாபித்தல் (மேற்படி - 3)

3. ஸ்வேச்சைக் காப்புப் படை சமைத்தல் (மேற்படி - 4)

4. ஐரோப்பிய - யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரிவர்த்தன நஷ்ட ஈடு கொடுப்பதை நிறுத்தி விடுதல் (மேற்படி - 5)

5. பஞ்சாபில் ஹைகோர்ட் நியமித்தல்

(ii) முந்திய ஜன ஸபைக் கூட்டங்களின் கருத்தைத் தழுவி இந்த ஸபை பின்வரும் செயல்களைக் கண்டிக்கிறது.

1. கல்வி யிலாகாப் புதிய விதிகள் (1897-4ஆம் தீர்மானம் *ii* ஆம் பகுதி 1 கிளை)

2. உப்பு வரி யேற்றம் (மேற்படி - 2 கிளை)

3. மத்ய மாகாணங்களுக்கு மேற்படி மாகாணத்து ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படாத ப்ரதிநிதி யொருவரை வைஸ்ராய் சபையில் சேர்த்தது. (மேற்படி - 4)

4. 1893ஆம் வருஷத்து 7ஆம் கட்டளையால் திருத்தப்பட்ட 1882-ம் வருஷத்து உள்நாட்டுக் குடிப்பெயர்ப்பு முதற் கட்டளையையும் இந்த ஸபை கண்டிக்கிறது.

(iii) மேலும் இந்த ஜன ஸபை முந்திய கூட்டங்களின் விருப்பத்தைத் தழுவிப் பின்வரும் நிச்சயங்களைத் தெரிவிக்கிறது.

1. ஜூரித் திருத்தம் (1897 அமராவதி 4-ம் தீர்மானம் *iii* ஆம் பகுதி 5ஆம் கிளை)

2. குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் ஜூரி விசாரணை விஷயமான திருத்தம். (1898 சென்னை) 20ஆம் தீர்மானம் - *iii* ஆம் பகுதி 5)

3. காட்டிலாகாத் திருத்தம் (மேற்படி - 6)

4. வருமான வரித் திருத்தம் (மேற்படி - 7)

5. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலத்தில் போட்டிப் பரீக்ஷைகள் நடத்தியே பாரதக் குடி யுத்யோகங்களுக்கு நியமனங்கள் செய்யவேண்டு மென்ற 1893 ஜூன் காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தை அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்தாலன்றி, பாரதக் குடி யுத்யோகங்களில் பாரதவாஸிகளை நியமிப்பதைப் பற்றிய விவகாரத்துக்குத் திருப்திகரமான தீர்ப் புண்டாகாதென்ற தனது நிச்சயத்தை இந்த ஸபை அறிவித்துக் கொள்ளுகிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

ஸ்வதேச ராஜ்யங்களில் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

(11ஆம் கூட்டம் புனா 1895 - 6ஆம் தீர்மானத்தைக் காண்க.)

16. பதினாறாந் தீர்மானம்:

தொழிற் கல்வி

இப்போது அனுஷ்டானத்தில் நடைபெறும் தொழிற் கல்வி முறை குறைவாகவும், அதிருப்திகரமாகவும் இருப்பதனால், ஜனங்களின் வறுமையையும் நாட்டுக் கைத்தொழில்களின் அழிவையும் கருதி, ராஜாங்கத்தார் இன்னும் விஸ்தாரமானதும், பயனுடையதும் ஆகிய தொழிற் கல்வி முறை ஏற்படுத்த வேண்டு மென்றும், அது நன்கு தொழில் செய்யுமாறு அதிகப் பணம் பகுத்து வைக்க வேண்டு மென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

உயர்தர சாஸ்த்ரக் கல்வியும், ஆராய்ச்சியும் அபிவிருத்தி யடையுமாறு ஸ்ரீமான் தாதா செய்த, தேசபக்தி சிறந்த, உதவமான கொடையைக் கருதி இந்த ஸபை நன்றி தெரிவிக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

பஞ்சாப் சட்டசபைத் திருத்தம்

(1897 - 15ஆம் தீர்மானத்தைக் காண்க.)

18. பதினெட்டாந் தீர்மானம்:

பேராருக்குச் சட்டஞ் செய்தல்

பேரார் மாகாணம் (ஸபையுடன் கூடிய) வைஸ்ராயின் ஆட்சிக் குட்பட்டிருக்கும் வரை, பேரார் மாகாணத்துக்குரிய எல்லாச் சட்டங்களும், சட்ட வலிமையுடைய உத்தரவுகளும் மற்ற ப்ரிட்டிஷ் இந்தியா மாகாணங்களுக்குச் செய்வது போல் வைஸ்ராய் சட்டசபையிலேயே செய்யப்பட வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

ப்ளேக் ஸம்பந்தமான செலவு

(1898 - 23ஆம் தீர்மானத்தைக் காண்க)

20. இருபதாந் தீர்மானம்:

தாதாபாய் நவுரோஜியிடம் நம்பிக்கை

(1898 - 24ஆம் தீர்மானப்படி)

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

காங்க்ரஸ் பொதுக் கார்யதர்சிகள்

(1898 - 26ஆம் தீர்மானப்படி)

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

இங்கிலாந்தில் ஒரு கிளைச் சங்கம்

ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியுடன் கலந்து இங்கிலாந்தில் இந்தியா விஷயங்களைப் பற்றிய அறிவைப் பரவச் செய்யும் பொருட்டாகப் பொதுக்கூட்டங்கள் ஏற்படுத்துமாறு ஒரு கிளைச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அதன் பொருட்டு நிதி சேகரிக்க வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

பதினைந்தாம் ஜன ஸபைக் கூட்டத்தின்
சரித்திரம் முற்றிற்று

பதினைந்தாம் அத்யாயம் முற்றிற்று

ஜன ஸபையின் சரித்திரம்

பதினாறாம் அத்யாயம்

16ஆம் ஜன ஸபையின் சரித்திரம்

1900ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் 27ஆம் தேதி முதல் மூன்று நாள் பாரத ஜன ஸபை லாஹோர் நகரத்தில் நடைபெற்றது. உபசார ஸமிதியின் அக்ராஸனபதி ஸ்ரீ காளி ப்ரஸந்ந ராயர். ஜன ஸபையின் ஸபாநாயகராக ஸ்ரீமான் என். ஜே. சந்தாவர்க்கார் வீற்றிருந்தனர்.

ஸபாநாயகர் ப்ரஸங்கத்தின் ஸாரம்

ஸ்ரீமான் சந்தாவர்க்கார் செய்த உபந்யாஸத்தின் ஸாரம் பின்வருமாறு:

ஸ்ரீமான் ராயரே, உபசார ஸமிதியோரே, ஸ்வதேசிகளே! என்னை இந்த கவுரவ ஸ்தானத்தில் ஏற்றியது பற்றி நெஞ்சார நன்றி செலுத்துகிறேன்.

1899ஆம் வருஷப் பஞ்சம்

சென்ற இரண்டு வருஷங்கள் அடுத்தடுத்து நடந்த பஞ்சத்தைப்போலே கொடுமையான பஞ்சம் இந்த தேசத்தில் எப்போதுமே நடந்தது கிடையாதென்று லார்ட் கர்ஸன் சொல்லுகிறார். பாரத ஜன ஸபையின் இரண்டாங் கூட்டம் கல்கத்தாவில் 1886ஆம் வருஷத்தில் நடந்தபோதே தேச ஜனங்களின் வறுமை பயங்கரமாக மிகுதிப்பட்டு வருவதை எடுத்துக்காட்டி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் பஞ்ச நிவர்த்திக்கு அதிகாரிகள் செய்து வரும் பிரயத்தனம் போதாது.

இந்தியாவின் வருஷ விளைவு மொத்தம் 400 கோடி ரூபாய் மதிப்பாகிற தென்றும், எனவே விவசாயிகளில் ஒவ்வொருவனுக்கும் வருஷ வரும்படி மொத்தம் ரூ. 20 தான் ஆகிறதென்றும் லார்ட் கர்ஸன் கணக்கிட்டுக் கூறினார். இதில் ஒன்றரை ரூபாய் நிலத் தீர்வைக்கும், இன்னும் ஒன்றரை ரூபாய் சில்லரைத் தீர்வைகளுக்கும் போய் விடுகிறது. ஆகவே விவசாயிக்கு வருஷ வரும்படி ரூ. 17க்கு மேலாகவில்லை. இத்தனை குறைந்த வரவுக்குள் ஜீவனம் செய்யும் குடியானவர்களை மித மிஞ்சிச் செலவு செய்வதனால் கெட்டுப் போனார்களென்று சில ஆங்கிலேயர் வாய்கூசாமல் சொல்லுகிறார்கள்.

நில வரி

குடியானவர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் செட்டிகளின் வசப்பட்டு நாச மடையாதபடி தக்ஷிணத்து விவசாயிகளின் நிவர்த்திச் சட்டமொன்று செய்யப்பட்டது. அதனால் குடியானவர்களுக்கு சொற்ப ஸௌகர்யமும் செட்டிகளுக்குக் கஷ்டமும் நேர்ந்ததே யன்றிப் பஞ்சம் தோன்றுவது நிற்கவில்லை. ஜனத்தொகை மித மிஞ்சி ஏறிக்கொண்டு போவதாலும் குடியானவர்கள் விவாகம் முதலிய விசேஷ காலங்களில் படாடோபமான செலவுகள் செய்வதனாலும் பஞ்சங்கள் வருவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் நமது நாட்டைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக வேகமாக ஜனத்தொகை ஏறிச் செல்லுகின்றது. விவாக முதலிய விசேஷ காலங்களில் செய்யப்படும் செலவு பெரும்பகுதி நகைகள் பண்ணுவதில் போகிறது. கஷ்டம் நேர்ந்தபோது இந்த நகைகள் உபயோகப் படாவோ? ஆங்கிலேயக் குடியானவர்களைக் காட்டிலும் நம்முடைய குடியானவர்கள் அதிகச் செட்டுள்ளவர்களென்பதற்கு பலமான ஆதாரங்கள் இருக்கின்றன.

பஞ்சாப் நிலப் பெயர்ப்புச் சட்டம்

ஸமீபத்தில் பஞ்சாபிலே நிலப் பெயர்ப்புச் சட்டமொன்று செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை மற்ற மாகாணங் களுக்கும் ஏற்படுத்தப் போவதாகக் கேள்விப்படுகிறோம்.

குடியானவர் தமது நிலங்களை விற்கவும் அடைக்கவும் பாத்தியமில்லாமல் செய்யவேண்டு மென்பதே இந்தச் சட்டத்தின் நோக்கம். இதனால் குடியானவ்வரை நிலத்துடன் கட்டிப்போடுவ தாகிய பயன் விளையுமே யன்றி அவர்களுடைய வறுமை தீராது. இதன் ஸம்பந்தமாக ஜெர்மானியக் கட்டுக் கதை யொன்று ஞாபகம் வருகிறது.

ஒரு குடியானவன் வீட்டில் பேய் குடி புகுந்ததாம். அந்தப் பேயைத் துரத்தும் பொருட்டாக அவன் தன் வீட்டிலே தீயைக் கொளுத்திவிட்டான். வீடு எரிந்து தணிந்தது. நாற்காலி முதலிய சில ஸாமான்கள் மிஞ்சின. அந்தப் பேய் மேற்படி ஸாமான்களின்மீது வந்து நின்றுகொண்டு: "இதோ பார்! நான் இன்னும் போகாம லிருக்கிறேன்" என்று சொல்லிற்றாம். அதுபோலவே கவர்ன்மெண்டார் செய்துவரும் சில்லரை உபாயங்களில் அழியாமல் குடியானவர்களின் வறுமையாகிய பேய் மிஞ்சி நிற்கிறது.

லார்ட் கர்ஸான் கேள்வி

'தேச முழுதிலும் 100க்கு 25 பங்கு நிலத் தீர்வையைக் குறைத்து விட்டால், பிறகு நாட்டில் பஞ்சமேனும் வறுமையேனும் மிஞ்சி யிராதென்று உங்களில் யாரேனும் உறுதி கூறமாட்டுவீர்களா?' என்று லார்ட் கர்ஸன் சென்னை மஹாஜன ஸபையாரை நோக்கிக் கேட்டார். அங்ஙனம் உறுதி கூறுதல் ஸாத்யமில்லை. ஆனால், கவர்ன்மெண்டார் புதிய திட்டத்தில் ஏற்றிய அளவு 100க்கு 25 பங்கு நிலத் தீர்வையைக் குறைவு படுத்தினால் அந்த மட்டுக்குப் பஞ்ச நிவர்த்திச் செலவு குறையுமென்பதில் ஸந்தேஹமில்லை.

தீர்வையை அடிக்கடி ஏற்றும் வழக்கம் குடியானவர்களுக்கு மிகுந்த பயத்தை விளைவிக்கிறது. த்ருஷ்டாந்தமாக, பம்பாய் மாகாணத்திலுள்ள கல்யாண் தாலுகாவில் தோட்டப் பயிர் குறைந்துவிட்டதாகச் சென்ற நிலவரித் திட்ட அறிக்கையிலே கூறப்பட்டது. இரண்டாம் மாசூல் இருப்பதாகக் காட்டினால் புதிய திட்டத்தில் தீர்வை ஏற்றப்படுமென்ற பயமே அங்ஙனம் தோட்டப் பயிர் குறைவு பட்டதன் காரணமென்று ஒரு நில அளவை உத்யோகஸ்தர் சொல்லி யிருக்கிறார்.

கைத்தொழில்கள்

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் ஜனத்தலைவர்களுக்கு அதிக சிரத்தை யில்லை யென்பதாக லார்ட் கர்ஸான் சொல்லுகிறார். இது ஒருவாறு மெய்தான். ஆனால், நம்முள்ளே கல்வி கற்ற பலர் கைத்தொழில் விஷயத்தில் இப்போது வரவர அதிக சிரத்தை காட்டி வருகிறார்கள்.

ஆனால், பம்பாய் யந்திரத் தொழிலின்மீது ராஜாங்கத்தார் சுங்கத் தீர்வை விதித்திருப்பதைப் பார்த்தால் ஐரோப்பியப் போட்டியை மீறி நமது நாட்டுக் கைத்தொழில்கள் பிழைக்கவேண்டு மென்ற எண்ணம் அவர்களுக்கில்லை யென்பது தெளிவாக விளங்குகிறது.

அரசாட்சிச் செலவு

மேலும் அரசாட்சிச் செலவு மிதமிஞ்சி நடைபெறுகிறது. 1883-84 வருஷத்துக்குப் பின் 1895-96 வரையுள்ள காலத்தில் ஜனத்தொகையின் விருத்தியளவைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக ஆட்சிச் செலவு மிகுதிப்பட்டிருக்கிறதென்று வெல்பி விசாரணைக் கூட்டத்தார் சொல்லி யிருக்கிறார்கள். இங்ஙனம் கொடுமையான பஞ்சத்தில் ஜனங்கள் கஷ்டப்படும்போது ஆட்சிச் செலவை மிகுதிப்படுத்திக் கொண்டு போதல் நியாயமா? எப்படியேனும் இப்போது நடைபெறும் ராஜாங்க முறையைச் சீர்திருத்த முயலுதல் இந்த ஜன ஸபையின் கடமை"

என்று சந்தாவர்க்கர் கூறினர்.

பதினாறாங் கூட்டத்தில் நடந்த வேறு விசேஷங்கள்:

பஞ்சங்களைப் பற்றிய இரண்டாந் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், ஜோஸப் பென்ஜமின் என்பவர் குஜராத்தில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட ஜில்லாக்களில் கலெக்டரும் கமிஷனரும் ஜனங்கள் தீர்வை செலுத்த சக்தியற்ற நிலைமையில் இருப்பதால் அவர்களிடம் தீர்வை வசூல் செய்யக் கூடாதென்று சொல்லி யிருக்கவும், அதை மீறித் தீர்வை வசூல் செய்ய முயல்வதை எடுத்துக் கூறினர்.

பஞ்சாபில் பஞ்சம் பிடித்த ஜில்லாக்களில் ஒன்றாகிய ஹிஸ்ஸார் ஜில்லாவினின்று வந்த ஸ்ரீ சூடாமணி என்பவர் ஜனங்கள் ஸாஹுகார்களிடமிருந்து கடன் வாங்கி நிலத் தீர்வை செலுத்துகிறார்களென்று ஸாக்ஷ்யம் கூறினர்.

மூன்றாந் தீர்மானம் ராணுவ ஸம்பந்தமானது. அதனை ஆதரித்துப் பேசுகையில் ஸர்தார் மான்ஸிங் பாரதப் படைகளின் வீரத் தன்மையைப் புகழ்ந்து பேசியது மன்றித் திர்ராவிலும், பர்மாவிலும் ஆங்கிலேயருக்காக நம்மவர்கள் போர் செய்வதை எடுத்துக் கூறி, "இந்த ஸமயத்திலேகூட நம்மவர் ஆங்கில ராஜ்யத்துக்காகச் சீனத்தில் இரத்தம் சிந்துகிறார்கள்" என்றார்.

பிறகு ஸர்தார் குருசரண் ஸிங் அத் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில், சிப்பாய்ச் சண்டையின்போது டில்லி நகரத்தில் ஆங்கிலேயர் பெருங் கஷ்ட தசையில் இருந்த ஸமயத்தில் ஸிக் ஜாதிப் போர்வீரர் ஆனி வெயிலில் 22 நாட்களில் 580 மைல் தூரம் நடந்து சென்று, ஆங்கிலேயரைக் காப்பாற்றின வியப்புக் குரிய செய்தியை எடுத்துக் கூறினர். அப்படி யிருந்தும் பின்னிட்டு ஸிக் ஜாதியாரை ஆங்கிலேயர் நம்பி ராணுவத்தில் உயர்ந்த பதவிகள் கொடுக்காமல் தாழ்ந்த படிகளில் வைத்திருப்பது பற்றி வியப்புப் பாராட்டினர்.

பாரதச் சுரங்கங்களின் மசோதாவைக் கண்டனம் புரிந்து பேசியதாகிய 24ஆம் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து பேசுகையில் நம்மவர் ராஜரீகக் கிளர்ச்சிகளை விட்டு விட்டுக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் கருத்துச் செலுத்தினாலன்றி முன்னுக்கு வர முடியாதென்று சொல்வோரின் வார்த்தையை ஸ்ரீமான் பூபேந்திரநாத வஸு சின்னா பின்னமாகக் கண்டித் தெறிந்தார்.

"குடிகளின் உணவுப் பொருளான சர்க்கரையின்மீது வரி விதித்து. அன்னிய வியாபாரிகளுக்கு லாபம் ஏற்படுத்த விரும்பும் ராஜாங்கம் இந்த தேசத்தில் இருப்பதுபோல் வேறெங்கேனும் உண்டா? உள் நாட்டு யந்திரசாலைகளை நஷ்டப்படுத்தி அழித்து அன்னிய வியாபாரிகள் லாப மடையுமாறு செய்யவேண்டு மென்ற கொள்கை யுடைய

ராஜ்யம் இங்கிருப்பதுபோல் உலகத்தில் வேறெந்த நாட்டிலேனும் உளதா? ராஜரீக விடுதலை யில்லாவிட்டால் கைத்தொழில் ஸம்பந்தமான முயற்சிகள் ஈடேற மாட்டா"

என்றார்.

தீர்மானங்கள்

16-ம் ஜன ஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1. முதல் தீர்மானம்:

ஜன ஸபை நிர்மாணத்தில் திருத்தம்

பாரத ஜன ஸபைக் கமிட்டியின் அமைப்பைப் பற்றிய 4ஆம் விதி (1899 லக்நவ் 10-ம் தீர்மானத்தைக் காண்க) பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமென்று இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது:

"ஜன ஸபையின் கார்யங்களை நிர்வஹிக்குமாறு பாரத ஜன ஸபைக் கமிட்டி யென்ற பெயர்கொண்ட ஸமிதி யொன்று நிருமிக்கப்படும். அதில் கீழே குறிப்பிட்ட உத்யோகஸ்த மெம்பர்களைத் தவிர இன்னும் ஜன ஸபையால் தெரிந்தெடுக்கப்பட்ட 45 மெம்பர்கள் இருப்பார்கள். அவர்களில் 40 பேர் வெவ்வேறு மாகாண ஸமிதியாராலும், மாகாண ஸமிதிகள் இல்லாத இடங்களில் ஜன ஸபைக்கு வந்து கூடிய வெவ்வேறு மாகாணப் பிரதிநிதிகளாலும் பின்வரும் கணக்குப்படி சிபார்சு செய்யப்படுவர்.

மாகாணம்	மெம்பர்கள்
வங்காளம் (அஸாம் உட்பட)	7
பம்பாய் (ஸிந்த் உட்பட)	7
மதராஸ்	7
வடமேற்கு மாகாணங்கள் (அயோத்தி உட்பட)	7
பஞ்சாப்	6
பேரார்	3
மத்ய மாகாணங்கள்	3

உத்யோக மெம்பர்களாவோர் ஜன ஸபையின் ஸபாநாயகர்; அடுத்த ஸபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸபாநாயகர் (தெரிந்தெடுத்த தேதி முதல்); ஜன ஸபையின் கார்யதரிசி; உதவிக் கார்யதர்சி; உபசார கணத்தின் அக்ராஸனாதிபதி; அதனால் நியமிக்கப்பட்ட அதன் கார்யதர்சி.

பாரத ஜன ஸபைக் கமிட்டியின் மெம்பர்களுடைய உத்தியோகக் காலம் ஜன ஸபையின் இரண்டு சாதாரணக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலமாகும்.

2. இரண்டாந் தீர்மானம்:

இந்தியாவின் பொருள் நிலையைக் குறித்து விசாரணை செய்ய ஒரு ஸமிதி

இந்தியாவில் அடிக்கடி பஞ்சங்கள் நேர்வதையும்; ஒரு முறை அறுவடை தவறின போதிலும், ஜனங்கள் தாங்க மாட்டாமல் சோர்வு மிகுதிப்பட்டு வருவதையும்; இதனால் மனிதருக்குக் கஷ்டமும் உயிர்ச்சேதமும் கால்நடைகளின் சேதமும், விவசாயத் தொழில்களில் சிதைவும் ஏற்படுவதையும் கருதி கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் இந்தியா ஜனங்களின் பொருள் நிலைமையைக் குறித்து விசாரணை நடப்பித்து (இந்த நிலைமைக்குத்) தகுந்த நிவாரணங்கள் கண்டுபிடித்து அவற்றை அனுஸரிக்க ஏற்பாடு செய்யும்படி இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

ராணுவ உத்யோகங்களும் ராணுவக் கலாசாலைகளும்

ஸாம்ராஜ்யத்தின் உதவிக்காக பாரதப் படைகள் உண்மையுடன் பாடுபட்டு வருவதை யெண்ணி, இந்த ஜன ஸபை பின்வரும் சீர்திருத்தங்கள் செய்யும்படி ராஜாங்கத்தாரை மீளவும் ப்ரார்த்திக்கிறது:

1. உயர்தர ராணுவ உத்யோகங்கள் அவர்களுக்குத் திறக்கப்பட வேண்டும்.

2. இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து அவற்றில் சட்டப்படி பாரத ஸ்வதேசிகளாவோருக்குக் கல்வியும் பாரத ஸேனையில் அவரவர் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி ஸன்னது பெற்ற அல்லது பெறாத உத்யோகஸ்தராக நியமனம் பெறத்தக்க பயிற்சியும் கொடுத்தல் வேண்டும்.

4. நான்காந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்

(லக்நவ் 1899 - 15ஆம் ஜன ஸபைக் கூட்டத்தின் முதல் தீர்மானப்படி)

5. ஐந்தாந் தீர்மானம்:

பாரத ஸ்வதேசிகளுக்கு உயர்தர உத்யோகங்கள்

போலீஸ் (காவல்) மராமத்து, ராஜாங்க ரயில், அபினி, சுங்கம், தந்தி, நில அளவை முதலிய இலாகாக்களில் உயர்தர உத்யோகங்களி னின்றும் பாரத ஸ்வதேசிகளை விலக்கி யிருப்பது கண்டு இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது. இந்த உத்யோகங்களின் விஷயத்தில் பாரத தேசத்தாரின் உரிமைகளுக்கு முழு நியாயம் செலுத்தப்பட வேண்டுமென்று இந்த ஸபை பிரார்த்திக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

இந்தியப் பட்டதாரிகளும் ஸர்வ கலா ஸங்கத்தில் ஸபிக பதவியும்

கல்கத்தா ஸர்வ கலா ஸங்கத்தில் பட்டதாரிகள் பட்டம் பெற்ற சில வருஷங்களுக்கப்பால் ஸபிகரைத் தெரிந்தெடுக்கலாமென்ற உரிமையை இப்போது விலக்கி வைத்திருப்பதையும் பஞ்சாப் ஸர்வ கலா ஸங்கத்து ஸெனேட் கணத்தார் ஸபிகர்களைத் தெரிந்தெடுக்கும் விஷயமாக மேற்படி ஸர்வ கலா ஸங்க நிர்மாணத்தில் கூறப்பட்ட விதிகள் நிறைவேற்றப்படாம லிருப்பதையும் கண்டு இந்த ஜன ஸபை பரிதாபப்படுகிறது. செம்மையான கல்வி முறைமையை வேண்டினால் பாரத ஸர்வ கலா ஸங்கங்களின் பட்டதாரிகள் அவற்றுக்கு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும் உரிமை வழக்கத்தில்

இல்லாத இடங்களில் அதனை ஏற்படுத்த வேண்டுமென்றும், உள்ள இடங்களில் அதை விசாலப்படுத்த வேண்டு மென்றும் இந்த ஸபை கருதுகிறது.

7. ஏழாந் தீர்மானம்:

லார்ட் கர்ஸானுக்கு நன்றி

பஞ்ச நிவர்த்தி விஷயத்தில் லார்ட் கர்ஸான் அனுஷ்டித்த முறைமையின் உதார குணத்தைக் கருதியும், ஐரோப்பிய சிப்பாய்கள் துப்பாக்கி சுட அனுமதி கொடுக்கும் விஷயமாக ஸமீபத்தில் அவர் செய்த உத்தரவுகள்; ரங்கூன், ஓகாரா வழக்குகளில் அவர் நடத்திய கார்யங்கள் - இவை போன்ற திருஷ்டாந்தங்களால் அவர் நீதியையும் ஒழுங்கையும் பரிபாலிப்பதில் காட்டிவரும் ஸ்திர நிச்சயத்தைக் கருதியும் இந்த ஜன ஸபை அவருக்கு நன்றி செலுத்துகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

தொழிற் கல்வி

(லக்நவ் 1899 - 15ஆம் கூட்டத்தின் 16ஆம் தீர்மானப்படி)

9. ஒன்பதாந் தீர்மானம்:

பேரார் மாகாணத்தின் ஆட்சி

(லக்நவ் 1899 - 15ஆம் கூட்டத்தின் 18ஆம் தீர்மானப்படி)

10. பத்தாந் தீர்மானம்:

பல திரட்டு

i) 1. ஆயுதச் சட்டத் திருத்தம் (அமராவதி 1897 - 13ஆம் கூட்டம் 4ஆம் தீர்மானம் 1 பகுதி (2)ஆம் கிளை)

2. ஸ்வேச்சைக் காப்புப் படை (அம. 1897- 13 - 4 - i - 4)

3. ஐரோப்பிய - யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரிவர்த்தன நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது. (அம 1897 - 13 - 4 - i - 5)

4. பஞ்சாப் மாகாணத்துக்கு ஹைகோர்ட் (அம-1897 - 13 - 4 - i - 7)

ii) 1. கல்வி யிலாகாத் திருத்தம் (கல்கத்தா 1896 - 12ஆம் கூட்டம் 6ஆம் தீர்மானத்தைக் காண்க.)

2. உப்பு வரியைக் குறைத்தல் (12ஆம் கூட்டம் 8-ம் தீர்மானத்தைக் காண்க)

3. வைஸ்ராய் ஸபையில் மத்ய மாகாணங்களுக்கு ஜனங்களால் நியமிக்கப்பட்ட ப்ரதிநிதி வேண்டு மென்பது (12ஆம் கூட்டம் 19ஆம் தீர்மானம்)

4. அஸாம் தொழிற் சட்டங்களின் திருத்தம் (12ஆம் கூட்டம் 15ஆம் தீர்மானம்)

iii) 1. ஜூரி விசாரணையைப் பரப்புதல் (கல்கத்தா - 1896 - 12ஆம் ஜன ஸபைக் கூட்டம் 7ஆம் தீர்மானம்)

2. ஜூரிகளில் பாதிப் பேர் ஸ்வதேசிகளாக இருக்கும்படி கேட்கும் உரிமை வேண்டுமென்பது (மதராஸ்-1898 - 14ஆம் ஜன ஸபைக் கூட்டத்தின் 20ஆம் தீர்மானம் iii (5))

3. காட்டிலாகாத் திருத்தம் (14ஆம் ஜன ஸபைக் கூட்டம்; 20ஆம் தீர்மானம் iii (6))

4. வருமான வரிச் சட்டத் திருத்தம் (புனா-1895 - 11ஆம் கூட்டம் 22ஆம் தீர்மானம் (1))

5. ஸம காலப் பரீக்ஷைகள் (லக்நவ்-1899 - 15ஆம் கூட்டம் 14ஆம் தீர்மானம் iii (5)

11. பதினொன்றாந் தீர்மானம்:

இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து கொடுக்கும் தொகை

இந்தியாவின் செலவு விஷயமாக ராஜ (நியமித) விசாரணைக் கூட்டத்தாரில் பெரும் பகுதியார் செய்த சிபார்சுகளின்படி ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து இந்தியாவின் பொக்கசத்திற்கு வருஷந்தோறும் 2,57,000 பவுன் கொடுப்பதாக வாக்களித்திருப்பதுபற்றி இந்த ஜன ஸபை நன்றி தெரிவிப்பதுடன் அவ் விசாரணைக் கூட்டத்தால் அங்கீகரிக்கப்படும் அளவேனும் இந்தியாவுக்கு நியாயம் செலுத்த விரும்பினால், இந்தக் கணக்கில் சென்ற

பல வருஷங்களாக இந்தியாவுக்குச் சேரவேண்டிய பாக்கிகளையும் கொடுத்துவிட வேண்டுமென்று இந்த ஜன ஸபை பார்லிமென்ட் ஸபையை வேண்டுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

கைத்தொழில், கல்வி விஷயங்களைப் பற்றி ஜன ஸபையின் உபஸமிதிகள்

தேசத்தின் கைத்தொழில் விஷயங்களையும் கல்வி விஷயங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்யவும் வாதிக்கவும் ஜன ஸபையின் ஒவ்வொரு வருஷாந்தக் கூட்டத்திலும் அரை நாளேனும் செலவிட வேண்டுமென்று பாரத ஜன ஸபை ஸமிதியார் இக் கூட்டத்தின் முன்னே செய்த சிபாரிசை இந்த ஜன ஸபை அங்கீகரிக்கிறது.

மேலும் வருஷந்தோறும் ஜன ஸபையினால் இரண்டு ஸமிதிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அவற்றுள் ஒன்று கல்வியைப் பற்றியும், மற்றொன்று கைத்தொழிலைப் பற்றியுமாக வேண்டுமென்றும்;

அந்த ஸமிதிகளின் நோக்கம் தேசத்தில் கல்வி விருத்தியும் கைத்தொழில் விருத்தியும் ஏற்படுதற்குரிய வழிகளை ஆராய்ச்சி பண்ணிக் கூறுதலும் அதற்குரிய உதவிகள் புரிதலுமே யாகுமென்றும், இரண்டு ஸமிதிகளுக்கும் வருஷந்தோறும் ஒரு கார்யதர்சி நியமிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஸமிதிகள் தம்மைத் தாமே மாகாண ஸமிதிகளாக வகுத்துக்கொள்ளவும் தம்முடைய ஸபிகளின் தொகையை மிகுதிப்படுத்திக் கொள்ளவும் அவற்றுக்கே அதிகார முண்டென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

லார்ட் கர்ஸானுக்கு மனு

கீழே குறிப்பிட்ட கனவான்கள் சேர்ந்த கூட்டம் வைஸ்ராய் லார்ட் கர்ஸானை நேரே கண்டு பின்வரும் மனுவைக் கொடுத்து வரும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

கணம்

பிரோஸ்ஷா மேத்தா, உமேசசந்த்ர பானர்ஜி, பி. அநந்தாசார்லு, ஸுரேந்த்ரநாத் பானர்ஜி, முன்ஷீ மாதவலால், R.N. முதோல்கார், ரஹிமதுல்லா மஹமது ஸயாநி, ஹர்கிஷன்லால்.

மனு

பிரபுவே, சென்ற டிஸம்பர் மாஸத்தில் லாஹோர் நகரில் நடந்த பாரத ஜன ஸபையின் 16ஆம் கூட்டத்தில் சேர்ந்த பிரதிநிதிகளின் சார்பாக, நாங்கள், நிர்வாஹ ஸபை கூடிய தங்களுடைய கவனத்துக்கு மேற்படி ஜன ஸபையில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு வருவது மன்றி விசேஷமாக இந் நாட்டார் மனதை நெடுங்காலமாக அலைத்து வரும் பின்னே கூறப்படுகிற விஷயங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவற்றுக்கு அனுகூலமான தீர்ப்பு விரைவிலே கிடைக்க வேண்டுமென்பது ஜன ஸபையின் கருத்தாம்.

1. நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல் மிகவும் விரும்பத் தக்கதென்ற விஷயம் இப்போது பொதுப்படையாக நன்கு அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தில் உத்யோகஸ்தர், அல்லாதார் என்னும் இரு திறத்தாரும் பலமான அபிப்பிராய ஒற்றுமை காட்டி யிருக்கிறார்கள். நாட்டின் ஆட்சியில் ஜனங்கள் மிக விரும்பும் இச் சீர்திருத்தத்தை ராஜாங்கத்தார் தயவுடன் விரைவில் நிறைவேற்றுவார்க ளென்று நம்புகிறோம்.

2. தேசத்தின் பெரும் பகுதியில் குடியானவர்களின் வறுமை மிகுதிப்பட்டு வருதலும், வறட்சியோ, பஞ்சமோ தோன்றியவுடனே ராஜாங்கத்தார் அல்லது ஸாமான்யர் செய்யும் தர்ம ஸஹாயம் இல்லாவிடின் அவர்கள் பிழைக்கத் திறமையின்றி யிருத்தலும் மற்றொரு ஸங்கடமான விவகாரம். ராஜாங்கத்தார் இவ் விஷயத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறார்க ளென்பது மனுதார்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, இக் கொடிய வறுமையைத் தணிக்கவும் விளைவு குறைவான வருஷங்களிலும், பஞ்ச வருஷங்களிலும் கஷ்டத்தை இன்னும் திறமையுடன் குடியானவர் தாங்கும்படி செய்யவும் தக்க மருந்தொன்று ராஜாங்கத்தாரால் கண்டு பிடிக்கப்படுமென்று நம்புகிறோம்.

3. ஸமீப பஞ்சங்களால் குடியானவர் வீழ்ந்திருக்கும் நிலையைக் கருதி, அவர்களுடைய வறுமை வளர்ச்சி ஸம்பந்தமான விசாரணை ஸ்வாதீனமான தொரு விசாரணை கூட்டத்தாரால் நடப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

14. பதினான்காம் தீர்மானம்:

பஞ்சாபைப் பொது விதி மாகாணமாக்குதல்

(பாரத ராஜ்ய நிர்மாணம்) பொது விதிக்குட்பட்ட மாகாணமாகப் பஞ்சாபை மாற்றுவதற் குரிய காலம் வந்துவிட்டதென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

இந்தியாவில் சாராய வியாபாரம்

லாஹிரி வஸ்துக்களின் உபயோகம், விசேஷமாக மதுபானம், இந் நாட்டில் மிகவும் விரைவாக அதிகப்பட்டு வருவதைக் கண்டு இந்த ஜன ஸபை மிகுந்த பயமும் வருத்தமும் அடைகிறது.

சாராயங்கள் எளிய விலைக்குக் கிடைப்பதே இதன் ஒரே காரணமாதலால், அமெரிகாவில் செய்த "மெய்ன் மதுச் சட்டம்", ஸர்வில்ப்ரிட் லாஸனுடைய "அனுமதி மசோதா", "ஸ்தலத்தார் இஷ்டச் சட்டம்" இவைபோன்ற சட்ட விதிகளை இந் நாட்டில் நிறைவேற்றும்படியாகவும், மருந்தாக உபயோகப்படாத லாஹிரி வஸ்துக்களின் மீது அதிகத் தீர்வை விதிக்கும்படியாகவும் இந்த ஸபை இந்தியா ராஜாங்கத்தாரை மிகவும் ஆவலுடன் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

இக் காரியங்களை ராஜாங்கத்தார் உடனே செய்யாவிட்டால், குடித்தல் வழக்கப்பட்டிருக்கும் வகுப்பினருக்குள்ளே அறம், பொருள், உடம்பு வலிமை மூன்றுக்கும் மேன்மேலும் அழிவு நிச்சயமாக நேருமென்ற தனது பலமான கொள்கையை இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்கிறது.

தொழிலாளிகளின் பெருங் கூட்டத்தை லாஹிரி வஸ்துக்கள் ஏற்கெனவே தீண்டி விட்டபடியால் இந்தியாவின் தொழில்களையும் கலைகளையும் வளர்க்க வேண்டுமென்று ராஜாங்கத்தார் கொண்டிருக்கும் நல்லெண்ணம் பலனின்றிப் போய்விடும்.

இவ் விஷயத்தை ஜன ஸபை மிகவும் முக்யமாகக் கருதுகிறது. இதற்கும் தேசத்தின் பொருள் விருத்திக்கும் நெருங்கிய தொடர்புளதென்று நம்புகிறது. ஆதலால் சாராயங்களை எளிய விலைக்கு விற்றல் முதலிய கார்யங்களை இந்த ஸபை பலமாகக் கண்டனம் செய்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

W.S. கெய்னுக்கு மகிழ்ச்சி யறிவித்தல்

W.S. கெய்ன் பார்லிமெண்ட் மெம்பர் ஸ்தானம் பெற்றிருப்பது பற்றி அவருக்கு இந்த ஜன ஸபை மனப்பூர்வமான மகிழ்ச்சி யுரை கூறுவதுமல்லாமல் அவர் பாரத ஜனங்களுக்கு உண்மையான நண்ப ரென்பதையும் நம்முடைய விசேஷ நலங்களைக் கருதி உழைப்பவ ரென்பதையும் கருதி அவரிடம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்

ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுகளுக்கும் "இந்தியா" பத்திரிகையின் செலவுக்கும் 30,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

தச்சிலாகா

பாரத மராமத் திலாகாவின் தச்சுக் கிளையில் "கூப்பர் மலைப் பள்ளிக்கூட"த்தின் மூலமாக நியமன மடையப் பயிற்சி பெறக்கூடிய இந்தியர்களின் தொகை வருஷத்தில் இரண்டு பேருக்கு மேலே போகக் கூடாதென்று விதிக்கும் புதிய

விதிகளை இந்த நாட்டாருக்கு நியாயம் செய்வது கருதி ஒழித்து விடவேண்டு மென்றும்; மஹாராணியின் குடிகள் எல்லோருக்கும் ஸமத்துவமாக அக் கலாசாலைகள் பயன்படவேண்டு மென்றும்; மேலும், ரூர்க்கி கலாசாலை ஸம்பந்தமான நியத உத்யோகங்களின் விஷயத்தில் இந்தியருக்கும், ஆங்கிலோ இந்தியருக்கு மிடையே செய்யப்படும் அநியாயமான பக்ஷபாதங்களை ஒழித்து விடவேண்டுமென்றும், தேசத்தின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மஹாராணியின் இந்தியக் குடிகளுக்கு அவ் வுத்தியோகங்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

லண்டனில் ஜன ஸபையின் பொருட்டாக
உழைப்போருக்கு நன்றி

இந்த தேசத்துக்கும் ஜன ஸபையின் முயற்சிக்கும் ஸர் வில்லியம் வெடர்பர்ன், தாதாபாய் நவுரோஜி, *A.O.* ஹ்யூம் என்போர் செய்துவரும் நன்மைகளின் பொருட்டாக இந்த ஜன ஸபை தனது மனப்பூர்வமான நன்கு மதிப்பையும் நன்றி யுணர்வையும் அறிவிப்பதுமல்லாமல் ஸர் வில்லியம் வெடர்பர்ன் பார்லிமென்ட் ஸபையினின்றும் விலகிவிட்டது பற்றி மிக வருத்தப்படுகிறது.

அந்த ஸபையில் அவர் இங்கிலாந்துக்கும் இந் நாட்டுக்கும் மிகவும் நன்கு மதித்தற்குரிய பெருங் கார்யங்கள் செய்தா ராகையால், பாரத ஜனங்களுக்கு அவர் அன்பால் இயற்றிய நற்செயல்களை இன்னும் தொடர்ந்து நடத்தும்வண்ணமாக அவர் விரைவில் பார்லிமென்ட் ஸபைக்குத் திரும்பி வருவாரென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

20. இருபதாந் தீர்மானம்:

தென் ஆபிரிகாவில் இந்தியரின் குறைகள்

தென் ஆபிரிகாவிலுள்ள ப்ரிட்டிஷ் இந்தியரின் குறைகளை இந்தியா மந்திரி, இந்தியா கவர்ன்மெண்டார்களின் கவனத்துக்கு இந்த ஸபை மீளவும் காட்டுகிறது. இப்போது

அந்தக் கண்டத்தின் எல்லைகள் மாறி இதுவரை போயர்க் குடியரசுகளாக இருந்த நாடுகள் இப்போது ப்ரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதால், இதுவரை அந் நாட்டினரின் ஸ்வாதீனத்தால் அங்கு மஹாராணியின் கவர்ன்மெண்டாரால் நிவர்த்தி செய்ய இடமில்லாமலிருந்த பாரதக் குடியேற்றத்தாரின் உரிமைக் குறைவுகள் இனி இரா வென்றும்;

வேறு பல சட்டங்களினிடையே விசேஷமாகக் "குடிபுகுவதைத் தடுக்கும் விதிகளாலும், வியாபாரிகளுக்கு அனுமதிச் சீட்டுகள் கொடுப்பதைப் பற்றிய சட்டத்தாலும்" நேரும் கஷ்டத்தை (மேற்படி சட்டங்கள் ப்ரிட்ஷ் ராஜ்ய நிர்மாணத்தின் மூலக் கொள்கைகளுக்கும், 1858ஆம் வருஷத்து மஹாராணியின் ஸ்ரீமுகத்துக்கும் தெளிவாக விரோத மாதலால் மேற்படி கஷ்டத்தை) முழுதும் நிவர்த்தி செய்யவேனும், தணிக்கவேனும் வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை விரும்புகிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

விவசாய உண்டிகளைப் பற்றிய
ஸமிதியில் பாரத ஸபிகர்

இந்தியாவில் விவசாய பாங்கிகள் ஏற்படுத்துவதன் ஸம்பந்தமாக ஸமீபத்தில் சமைக்கப்பட்ட கமிட்டியில் வெவ்வேறு மாகாணப் பிரதிநிதிகளான திறமைகொண்ட இந்திய மெம்பர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் சிபாரிசு செய்கிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:

பக்ஷீ ஜேஷீ ராம் மரணம்

பல வருஷங்களாக ஜன ஸபைக்கு மிகவும் உறுதியான பொறுப்பாளிகளில் ஒருவராக இருந்து தமது மாகாணத்தில் அதற்கு அரிய தொண்டுகள் செய்தவராகிய பக்ஷீ ஜேஷீ ராம் என்பவரின் மரணத்தால் நேர்ந்த நஷ்டத்தைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:

விவசாய நிலையும் சாசுவதத் திட்டமும்

விவசாயிகளின் க்ஷேமத்தையும் ஜீவனாதாரங்களையும் நிலத் தீர்வையின் தற்கால முறை எங்ஙனம் தீண்டுகிற தென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற கருத்துக் கொண்டிருப்பது பற்றி இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாருக்கு நன்றி தெரிவிக்கிறது.

அங்ஙனம் செய்யப்போகிற ஆராய்ச்சியில் தீர்வைத் திட்டத்தை அடிக்கடி மாற்றும் விஷயத்தையும், அதை சாசுவத மாக்குதல் அவசியமென்று ஜன ஸபை கருதுவதையும் சேர்த்து விசாரித்தல் தகும்.

மேலும், 1900 டிஸம்பர் 22ஆம் தேதி இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட இந்தியா கவர்ன்மென்டாரின் (நில வரி, விவசாய இலாகா) தீர்மானத்தில் 4ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி இவ் விஷயமாக மாகாண ராஜாங்கத்தாரிட மிருந்து கிடைக்கக் கூடிய அபிப்பிராயங்களை ப்ரசுரம் செய்யவேண்டும். அத் தீர்மானத்தின் நியமங்களின்படி அவ் விஷயத்தைக் குறித்து மேல் விசாரணை செய்தல் அவசியமா இல்லையா என்பதை முடிவு செய்யுமுன்னே ஜனங்கள் அதைப்பற்றித் தமக்குள்ள கருத்தை வெளியிட இடங் கொடுக்கவும் வேண்டுமென்று இந்த ஜன ஸபை விரும்புகிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:

பாரதச் சுரங்கங்களின் மசோதா

பாரதச் சுரங்கங்களின் மசோதாவில் தொழிலாளிகளை நியமிப்பதில் வரையறைகள் செய்யும் நியமங்களை அழித்து விடவேண்டுமென்றும், அதிலுள்ள தண்ட நியமங்கள் இன்னும் ஐந்து வருஷ காலம் அனுஷ்டானத்துக்கு வரக்கூடாதென்றும், இதனிடையே இச் சட்டத்தின்படி நியமனமடைய இளைஞர் பயிற்சி பெறும்வண்ணமாகத் தக்க ஸ்தலங்களில் சுரங்கத் தொழிற் பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

25. இருபத்தைந்தாந் தீர்மானம்:

1. ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்

வரும் வருஷத்துக்குப் பொதுக் கார்யதர்சியாக A.O. ஹ்யூமையும், உதவிப் பொதுக் கார்யதர்சியாக தீ. எ. வாச்சாவையும் இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

2. பாரத ஜன ஸபை ஸமிதி

1901-ம் வருஷத்துக்கு பாரத ஜன ஸபையின் ஸமிதியாராகப் பின்வரும் கனவான்களை இந்த ஸபை நியமிக்கிறது.

உத்யோக மெம்பர்கள்

1. உமேசசந்த்ர பானர்ஜி (1885 ஸபாநாயகர்)
2. தாதாபாய் நவுரோஜி (1886 ....)

   (1887ஆம் வருஷத்து ஸபாநாயகரான தியாப்ஜி பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜியாய் விட்டார்.

   1888ஆம் வருஷத்து ஸபாநாயகரான ஆல்ப்ரெட் (ஜார்ஜ்) யூல் இறந்து போனார்)
3. ஸர் வில்லியம் வெடர்பர்ன் (1889)
4. பிரோஸ்ஷா மேத்தா (1890)
5. பி. அநந்தாசார்லு (1891)

   (1892-ல் உமேசசந்த்ர பானர்ஜியும், 1893-ல் தாதாபாய் நவுரோஜியும் இரண்டா முறை ஸபாநாயகராயினர்)
6. ஆல்ப்ரெட் வெப் (1894)
7. ஸுரேந்த்ரநாத் பானர்ஜி (1895)
8. ரஹிமதுல்லா மஹமது ஸயானி (1896)
9. சங்கரன் நாயர் (1897)
10. ஆனந்தமோஹன போஸ் (1898)
11. ரமேசசந்த்ர தத்தர் (1899)

    N.G. சந்தாவர்க்கர் (1900) (பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜியாய் விட்டார்)

12. தீ. எ. வாச்சா (பொதுக் கார்யதர்சி)

13. ஆல்ப்ர்ட் நந்தி (உதவிக் கார்யதர்சி)

14, கல்கத்தா உபசார ஸமிதி ஸபாநாயகர்

15. கல்கத்தா கார்யதர்சி

16. 1901-ம் வருஷத்து ஸபைக்கு ஸபாநாயகராகத் தெரிந்தெடுக்கப்படுவோர்.

பொது ஜாப்தா

1. ஜே. கோஷால்
2. பண்டித விசுவாம்பர நாத்
3. R.N. முதோல்கார்
4. ஸி. விஜயராகவாசாரியார்
5. W.A. சேம்பர்ஸ்

பம்பாய்

1. ருஸ்தம் காமா
2. தாஜி அபாஜி கரே
3. C.H. ஸேதல்வாட்
4. கோபாலகிருஷ்ண கோகலே
5. பாலகங்காதர திலகர்
6. R.P. காண்டீகர்
7. தஹல்ராம் க்ஷேம்சந்த்

வங்காளம்

1. வைகுண்டநாத் ஸேன்
2. ஸாளிக்ராம் ஸிங்
3. அம்பிகாசரண் மஜூம்தார்
4. மதிலால் கோஷ்
5. யதீந்த்ரநாத் சௌதுரி
6. பூபேந்த்ரநாத் வஸூ
7. ப்ருதிவீச சந்த்ர ராய்

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்

1. முன்ஷி மாதவ் லால்
2. மதன்மோஹன் மாளவீயர்
3. விஷ்ணுநாராயண தார்
4. முன்ஷீ கங்காப்ரஸாத் வர்மா
5. S. ஸிம்ஹா
6. பண்டித ப்ருத்வீராத்
7. ஹபீஸ் அப்துல் ரஹீம்

சென்னை

1. பி. ரங்கய்யா நாயுடு
2. ஜீ. சுப்பிரமணிய அய்யர்
3. நவாப் ஸய்யது மஹமது பஹதூர்
4. பி. ராமசந்த்ர பிள்ளை
5. ரைரு நம்பியார்
6. பி. கேசவ பிள்ளை
7. ஜி. ஸ்ரீனிவாஸ ராவ்

பேரார்

1. M.V. ஜோஷி
2. தேவராவ் விநாயக்
3. கணேச ஸ்ரீகிருஷ்ண கபர்தே

மத்ய மாகாணங்கள்

1. பூப குட்வாடா
2. கிருஷ்ண ராவ் வாமந்
3. ராவ்ஜீ கோவிந்த்

பஞ்சாப்

1. பாபு காளிப்ரஸந்ந ராய்
2. லாலா ஹர்கிஷன்லால்
3. ஸாஹப் ஸுக தயாள்
4. லாலா லாஜ்பத்ராய்

5. லாலா தர்மதாஸ் ஸூரி
6. லாலா கன்னையலால்

3. பின்வரும் கனவான்கள் 1901ஆம் வருஷத்துக்குத் தொழில் ஸமிதியின் ஸபிகர்களாகவும், ஹர்கிஷன் லால் கார்யதர்சியாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

வங்காளம்

1. வைகுண்டநாத் ஸேன்
2. மன்மதநாத் ராய் சௌதுரி
3. புளின விஹாரி ஸர்க்கார்
4. ராதாரமண் கார்
5. ஜெ. சௌதுரி
6. பூபேந்த்ரநாத் வஸு
7. அக்ஷயகுமார் மைத்ரா
8. ககனேந்த்ரநாத் டாகோர்
9. மோஹினீ மோஹன் சக்ரவர்த்தி
10. அக்ஷயகுமார் மஜூம்தார்
11. காளீப்ரஸந்ந காவ்ய விசாரதர்
12. லளிதசந்த்ர ஸேன்
13. ப்ரமத கோவிந்த சௌதுரி
14. தாராபத பானர்ஜி

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்

1. பன்ஸீலால் ஸிங்
2. கங்காப்ரஸாத் வர்மா
3. எஸ். ஸிம்ஹர்
4. கே.பி. வாஸக்
5. விபின விஹாரி வஸு
6. மதன்மோஹன் மாளவீயர்

மத்ய மாகாணங்கள்

1. ராவ்ஜீ கோவிந்த்

பஞ்சாப்

1. ஹரிகிஷன் லால்
2. லாஜ்பத்ராய்
3. பாலக் ராம்
4. துவாரகா தாஸ்
5. காசீராம்
6. துனீசந்த்
7. லால்சந்த்
8. ப்ரபு தயாள்

பம்பாய்

1. பண்டித G. கஜர்
2. ஜெ.என். தாத்தா
3. தீ. எ. வாச்சா

சென்னை

1. ஸி. சங்கரன் நாயர்
2. ஜீ. சுப்பிரமணிய அய்யர்
3. பி. கேசவ பிள்ளை
4. அச்யுத மேனன்
5. டி ரங்காசாரி
6. பி. ரத்நஸபாபதி பிள்ளை
7. வி. வேங்கடரத்நம்

பேரார்

1. D.V. பாகவத்
2. R.N. முதோல்கார்
3. தேவராவ் விநாயக்
4. கணேச நாகேச

4. பின்வரும் கனவான்கள் 1901ஆம் வருஷத்துக் கல்வி ஸமிதியாராகவும், ஹர்கிஷன் லால் அதன் கார்யதர்சியாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

வங்காளம்

1. ஆனந்தமோஹன வஸு
2. ஸுரேந்த்ரநாத பானர்ஜி
3. நீலரத்ந ஸர்க்கார்
4. ஹேரம்ப சந்த்ர மைத்ரா
5. அசுவினிகுமார தத்
6. ப்யாரிலால் கோஷ்
7. ரகுநாத் தாஸ்
8. ப்ருத்வீசசந்த்ர ராய்
9. க்ருஷ்ணகுமார் மித்ரா
10. ச்யாம சரண்ராய்

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்

1. ஆ. நந்தி
2. மதனமோஹன மாளவீயர்
3. விஷ்ணுநாராயண தார்
4. ஜீ. எல். மைத்ரா
5. கங்காப்ரஸாத் வர்மா
6. ராமநந்த சாட்டர்ஜி
7. விபினவிஹாரி வஸு
8. K.P. வாஸக்
9. ஹரிராம் பாண்டே
10. தேஜ்பஹதூர் ஸப்ரே

பேரார்

1. M.V. ஜோஷி
2. R.N. முதோல்கார்
3. கணேச ஸ்ரீகிருஷ்ண கபர்தே
4. D.V. பாகவத்

பம்பாய்

1. கோபாலகிருஷ்ண கோகலே
2. சீமன்லால் H. ஸேதல் வாட்
3. ருஸ்தம் காமா
4. பாலகங்காதர திலகர்

பஞ்சாப்

1. ஹர்கிஷன் லால்
2. லாஜ்பத் ராய்
3. பாலக் ராம்
4. ஈசுவர தாஸ்
5. லால்சந்த்
6. ஷாதீலால்

மத்ய மாகாணங்கள்

1. S.B. கோகலே

சென்னை

1. பி. அநந்தாசார்லு
2. சேலம் விஜயராகவாசாரி
3. ஸி. ஜம்புலிங்க முதலியார்
4. ரைரு நம்பியார்
5. கருணாகர மேனன்
6. வி.ஸி. தேசிகாசார்யர்
7. எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார்

பதினாறாம் ஜன ஸபையின் சரித்திரம் முற்றிற்று

16ஆம் அத்யாயம் முற்றிற்று

ஜன ஸபையின் சரித்திரம்

பதினேழாம் அத்யாயம்

17ஆம் ஜன ஸபையின் சரித்திரம்

ஜன ஸபையின் பதினேழாங் கூட்டம் கல்கத்தாவில் பீடன் சதுரம் என்ற மைதானத்தில் நேர்த்தியான தோரணங்களாலும் மிகவும் அழகிய மின்னல் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் கூடிற்று. 896 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஸபாநாயகர் பந்தலுக்குள் புகுந்தவுடனே ஐம்பத்தெண்மர் இளைஞரும் மக்களும் சேர்ந்து ஸ்ரீமதி ஸரளாதேவி கோபால் இயற்றிய "ஹிந்துஸ்தான்" என்ற பாட்டைப் பாடினார்கள். சுமார் 400 "வாலண்டீர்"ப் பிள்ளைகள் பல்லவியை மட்டும் ஒத்துப் பாடினர்.

காது மிகவும் இன்புற்று ஸபையோர் களி மிஞ்சிப் போயினர். இந்த ஸரளாதேவி வங்காளத்தில் தேசபக்தி அனலைத் தூண்டிய மூல காரணமாக உழைத்தவர்களில் ஒருத்தியாவர்.

இவர் இடந்தோறும் போய் வங்காளிப் பிள்ளைகளுக்கு கஸ்ரத் பழகுவதே ஸந்த்யாவந்தனம் பண்ணுவதற்கு மேலான அல்லது ஸமமான தர்மமென்று கற்றுக் கொடுத்தார்.

இவரைக் காட்டிலும் அதிகக் காரணம் நிவேதிதா தேவி. இவர் ஆங்கில ஸ்த்ரீ. ஸ்வாமி விவேகாநந்தருடைய தலை சிஷ்யர். இவரே வங்காள ஸ்த்ரீகளுக்குள்ளே ஸ்வராஜ்ய தாகத்தை மிகுதியாக வளர்த்தார்.

ஸ்த்ரீகள் ஸ்வராஜ்யத்துக்கு அனுகூலமாகப் பாடுபடும் இடத்தில் புருஷரின் உழைப்பு மிகவும் கீர்த்திபெற்று விளங்கக் காண்கிறோம். இது நிற்க.

பதினேழாம் ஜன ஸபைக் கூட்டத்தில் உபசரணைத் தலைவராகிய நாத்தூர் மஹாராஜா பஹதூர் ஜகதிந்த் நாத்ராய் பஹதூரின் ப்ரஸங்கம் முடிந்தவுடனே தீன்ஷா எதுல்ஜீ வாச்சா ஸபாநாயக ஸ்தானத்தில் அமர்ந்தனர்.

ஸபாநாயகர் ப்ரஸங்கம்

தீன்ஷா எதுல்ஜீ வாச்சா செய்த ப்ரஸங்கத்துக்கு ஸ்ரீமதி ஆனி பெஸன்ட் செய்திருக்கும் ஸம்க்ஷேபம் பின்வருமாறு:

வாச்சா சொல்லுகிறார்: விக்டோரியா மஹாராணியார் இறந்தனர். அமெரிக்காவில் ஜனாதிபதி மாக்கின்லேயை ஓர் அராஜகக் கக்ஷியான் கொலை புரிந்துவிட்டான். மைசூர் திவான் சேஷாத்திரி அய்யர் காலஞ் சென்றுவிட்டார்.

சென்ற வருஷத்தில் நிகழ்ந்த இம் மரணங்கள் மிகவும் பரிதபித்தற் குரியன. விக்டோரியா மஹாராணி காலத்திலே நாகரிகத்துக்கு மிகவும் அனுகூலம். அமெரிக்கா தேசத்தார் நமக்குப் பஞ்சத்தில் உதவி பண்ணினார்கள். சேஷாத்திரி அய்யர் இங்கிலீஷ்காரரைவிட ராஜ தந்திரத் திறமையில் நம்மவர் குறைவில்லை யென்பதை நன்கு விளக்கினர்.

பஞ்சம்

பஞ்ச நிவர்த்தியில் ஏழைக் குடியானவர்களிடம் கடுமையான வேலை வாங்கிக் கொண்டு ராஜாங்கத்தார் கஞ்சி வார்ப்பது பெரும் தர்மமன்று. பஞ்ச நிவர்த்தியில் செலவிடும் பணம் குடியானவருக்கு இனாமன்று. குடியானவர்களிட மிருந்து தீர்வையாக வஸூலித்ததில் மிகவும் சொற்பமான பாகம். இதைச் சில ஆங்கிலேயர் மறந்துவிடுகிறார்கள். ஆண்டுதோறும் 47¼ கோடி ரூபாய் தீர்வை செலுத்தும் ஜனங்களே இப்போது பஞ்சத்தில் கஞ்சிக்குத் தவிக்கிறார்கள். அவர்களிடமிருந்து தண்டின பணத்தில் ஒரு சிறிதளவு அவர்கள் சாகப்போகிற தறுவாயில் திரும்பக் கொடுப்பதை யக்ஞமென்று சொல்லக் கூடாது.

பஞ்சத்தின் காரணங்கள் பல

முக்கியமான காரணம் இங்கிருந்து பணத்தை இங்கிலாந்துக்கு வற்றடித்துக் கொண்டு போவதேயாம்.

விவசாயிகளின் நிலைமையைப் பற்றித் தீர விசாரணை நடத்த வேண்டும். ரயில் பாதை அதிகமாவதைக் காட்டிலும் தீர்வைப் பணத்தை நீர்ப் பாய்ச்சல், கால்வாய் வெட்டுதல் விஷயத்தில் செலவிட்டால் குடியானவர்களுக்கு மிகுந்த நன்மை பிறக்கும். நீர்ப்பாசனத்தால் விளைவு மிகும்.

ரயில் விளைவைச் சிதறடிக்கும். ரயில் ஸம்பூர்ணானுகூல மன்று - அதாவது, நம்முடைய தேசத்தில் தற்கால ஆட்சி முறை ஸம்பந்தப்பட்ட வரை.

சில நிவாரணங்கள்

கடைசியாக விவசாய உண்டிகள் (பாங்கிகள்) அவசியமென்பதை ராஜாங்கத்தாரே அங்கீகரிக்கத் தொடங்கி யிருப்பது பற்றி சந்தோஷப்படுகிறோம். எகிப்து தேசத்தில் நடைபெறும் உண்டி முறைமையே இங்கும் தழுவத் தக்கதென்று தோன்றுகிறது.

நமது தேசத்திலிருந்து தான்யம் ஏற்றுமதி யாவதை நிறுத்திவிட வேண்டும். ஸாதாரண வருஷத்துக்கே சோற்றுக்குத் தட்டுகிறது. சாதாரண வருஷத்தில் அரைப் பட்டினி; கொஞ்சம் வறட்சி நேர்ந்தால் அதோ கதி!

தான்யத்தை நமது நாட்டில் மிச்சம் சேகரித்து வைத்திருந்தால் பஞ்சக் காலத்துக்குப் பயன்படும்.

ஜனங்களின் வறுமை மிகப் பரிதாபகரமானது. கவர்ன்மெண்டார் விவசாயிகளின் நிலைமையைப்பற்றி ஸம்பூர்ணமான கணக்குகளை வெளியிடக் கூசுகிறார்கள். ஆர்கிள் ப்ரபு சொல்லுகிறார்: "பாரத நாட்டுக் குடியானவர்போலே தீரா வறுமையும் மாறாத் துன்பமு முடைய இத்தனை பெருங் கூட்டம் ஐரோப்பாவில் எந்நாட்டிலு மில்லை" என.

க்ஷேமத்துக்கு வழி

30 கோடிக்கு மேல் நாற்பது கோடி ரூபாய் வரை இங்கிருந்து வருஷந்தோறும் கசக்கிப் பிழிந்துகொண்டு போவதை நிறுத்துவதே க்ஷேமம் பிறக்க வழியாம்.

ஆட்சி முறை

மூலத் தொல்லை யாதெனிலோ, இந்தியாவுக்கு விடுதலை யில்லை. ஆதலால் அதிகாரிகளை நம்மிஷ்டப்படி நியமிக்க இடமில்லை. விடுதலை யிருந்தால் எல்லாப் பெரிய உத்யோகங்களும் ஸ்வதேசிகளுக்கே கொடுப்போம். அதில் ஸந்தேகமில்லை. அவர்கள் இந்த நாட்டிலேயே குடியிருந்து இங்கேயே மடிவார்கள்.

இப்போதுள்ள ஆங்கிலேய அதிகாரிகள் இங்கிருந்து பணத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு இங்கிலாந்துக்குப் போய் அங்கே செலவிடுகிறார்கள்.

மத்ய ஆசியாவை ருஷியர் ஆட்சி புரிகிறார்கள் (1901-ல் சொன்னது) அங்கேகூட இப்படி உயர்தர உத்யோகங்களை யெல்லாம் ஸ்வதேசிகளுக்குக் கொடுக்காமல் ருஷியருக்குத்தான் கொடுப்பதென்ற ஸித்தாந்தம் கிடையாது.

ஆனால், இந் நாட்டில் ஐரோப்பிய உத்யோகஸ்தரின் மொத்தத் தொகை 17300 பேருக்குமேல் இல்லை யென்றும் இது மிகையாகா தென்றும் சிலர் சொல்லலாம்; மெய்தான்.

ஆனால், இந்த 17300 பேருக்கும் வருஷச் சம்பளம் 16 கோடி ரூபாய். இந்தியர்களுக்கு 2¾ கோடி ரூபாய்தான் சம்பளமாகிறது.

ப்ளாந்தாஜிநெத் ராஜவம்சத்தார் ஆங்கில பூமியை ஆளுகையில் உயர்தர உத்யோகங்க ளனைத்திலும் ப்ரான்ஸ் தேசத்தாரைக் கொண்டு நிரப்பிய காலத்தில் ஆங்கிலேயர் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தனரா? இப்போது நாமும் ஆங்கிலேயரும் பதவி மாற்றிக்கொள்ள ஸம்மதிப்பார்களா?

கைத்தொழிலபிவிருத்தி மாத்திரத்தால் நமது வறுமை தீராது

எந்த தேசத்தைக் காட்டிலும் இந்த தேசத்தில் ஆட்சிச் செலவு அதிகம். தீர்வை விதிப்பதிலும் அதனைச் செலவிடுவதிலும் இந்தியருக்கு வாக்குரிமை யில்லை. கைத்தொழிலபிவிருத்தி மெதுவாகவே இயலக் கூடியது. ஏனென்றால், நம்முடைய வறுமை கைத்தொழில் ஸம்பந்தமான காரணங்களை யன்றி - ராஜரீக ஸம்பந்தமான காரணங்களால் ஏற்பட்டது. நம்மை ஆள்வோரோ ஜான் மார்லி சொல்லியதுபோலே "ஸாம்ராஜ்யப் பைத்தியம் பிடித்தலைகிறார்கள்". இந்த ஸாம்ராஜ்யப் பேதைமை நீங்கி நம்மை ஆள்வோர் பழமைபோலே உதார (லிபரல்) கக்ஷிக் கொள்கைகளைக் கைப்பற்றிக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

நல்ல ஆட்சி வேண்டும்

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தால் நமக்குச் சில நன்மைகள் தோன்றி யிருப்பதை நான் மறுத்துரைக்கவில்லை. ஆனால், இதிலுள்ள களைகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு நாளடைவில் இந் நாட்டில் நல்ல ஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்பதே நமது நோக்கம்"

என்று வாச்சா சொன்னார்.

17ஆம் கூட்டத்தில் நடந்த வேறு சில விசேஷங்கள் பின்வருமாறு

பாரத தேசத்தின் வறுமை. தீராப் பல்லவியாகிய நமது தரித்திரத்தைக் குறித்த மூன்றாந் தீர்மானம் முதோல்கரால் சிபாரிசு செய்யப்பட்டது. அதில் பின்வரும் விஷயங்களைச் சொன்னார்:

"1901ஆம் வருஷத்து ஜன ஸங்க்யையில் 1891ஆம் வருஷத்துத் தொகையைக் காட்டிலும் ஐந்து மாகாணத்து ஜனத்தொகை குறைவு பட்டிருப்பதாக விளங்குகிறது. (இந்த நிலையில் ஜனத்தொகை அபரிமிதமாக ஏறுவதனால் பஞ்சமுண்டாவதாக ஆங்கிலேயப் பத்திராதிபர் கூறினர்!) ஸாதாரணமாக ஏற்படும் மரணக் கணக்கைக் காட்டிலும் பத்து லக்ஷம் பேர் அதிகமாகப் பஞ்சத்தில் மடிந்தனரென்று தெரிகிறது.

குடியானவர்களின் பரிதாபகரமான வீழ்ச்சி நிலைக்கு ராஜாங்கத்தாரின் தீர்வை வசூல் முறையே காரணமென்று 1874ஆம் வருஷத்து விசாரணைக் கூட்டத்தார் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுப்படையாக பேராரில் 100க்கு 30 பங்கு தீர்வை மிகுதிப்பட்டிருக்கிறது. மத்ய மாகாணத்தில் 100க்கு 100 முதல் 200 வரை ஏறியிருக்கிறது! வறுமை மிகுதிப்படுதல் இங்கொரு வியப்பெனக் கருதலாமோ? சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுத்துதலே இதற்கு நிவாரணம்"

என்றார்.

மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் ஜீ. வேங்கடரத்நம் பின்வரும் விஷயங்களை எடுத்துக் கூறினர்:

"நிலத் தீர்வை அடிக்கடி மாறாமல் ஸ்திரப்படுவதே ரயத்வாரி முறைமையின் மூல தர்மம்" என்று 1862-ல் சென்னை கவர்ன்மெண்டார் ஸந்தேஹமின்றி ஒப்புக்கொண்டார்கள். இதுபோலவே 1865, 67, 68-ம் வருஷங்களில் பலவிதமான வாக்குறுதிகள் செய்யப்பட்டன. கடைசியாக 1883-ல் இந்தியா மந்திரி 1862ஆம் வருஷத்துக் கொள்கையை மறுத்துப் பேசிவிட்டார்!"

என்றனர்.

ஸ்வராஜ்யம்

இந்தியாவில் *ப்ரிட்டிஷ் படைகளின் செலவைக் குறித்த 10ஆம் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் மிஸ்டர் ஸ்மெட்லி சொல்லியது:*

"ஐர்லாந்தினுடைய கஷ்டங்களுக்கும் இந்தியாவின் கஷ்டங்களுக்கும் ஸ்வராஜ்யம் ஒன்றே நிவாரணமாம். இளைஞர்களே, மன உறுதியுடன் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்று கேளுங்கள். சிறிய சிறிய வரங்கள் கேட்டு நீங்கள் தீர்மானங்கள் செய்வதைப் பார்க்கும்போது எனக்குப் பயம் உண்டாகிறது. உங்களை ஸ்வராஜ்யம் பெறாமல்

தடுக்கும் பொருட்டாக ராஜாங்கத்தார் இந்த வரங்களை மகிழ்ச்சியுடன் தந்துவிடக் கூடும். ஸ்வராஜ்யம் கேளுங்கள். கடவுள் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பார்"

என்றார்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

விக்டோரியா மஹாராணியின் மரணம்

(1) விக்டோரியா மஹாராணியின் மரணத்தால் தனக்கு விளைந்த ஆழ்ந்த துயரத்தையும், அதனால் இந்த ஸாம்ராஜ்யத்துக்கு நேர்ந்த தீர்க்க முடியாத நஷ்டத்தைப் பற்றிய தன் உணர்ச்சியையும் இந்த ஜன ஸபை அறிவித்துக் கொள்ளுவது மன்றி;

மஹாராணியின் ஸ்ரீமுகத்தாலும், அனுஷ்டானத்தாலும், செயல்களாலும் விளங்கியபடி அவருக்கு இந்த நாட்டு ஜனங்களின் க்ஷேமத்தைப்பற்றி இருந்த கவலையையும் அனுதாபத்தையும் இந்த ஜன ஸபை நினைத்து நன்றி தெரிவிக்கிறது.

எட்வர்டு ராஜாவுக்கு வணக்கம்

(2) மஹா கருணை பொருந்திய ஏழாம் எட்வர்டு ராஜாவுக்கு இந்த ஜன ஸபை தன் மதிப்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

மஹாராஜாவின் காருண்ய அரசியலின்போது விடுதலை முறைகள் வலிமை யுற, ஜன உரிமைகள் விரிவு பெற, மாஜி மஹாராணி விக்டோரியாவின் ஸ்ரீமுகத்தில் கூறிய வாக்குறுதிகள் நாளடைவில் நிறைவேறலாமென்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

நியாயாதிபதி ரானடேயின் மரணம்

(3) நியாயாதிபதி ரானடேயின் அகால மரணத்தால் தேசத்துக்கு நேர்ந்த பெரு நஷ்டத்தைப்பற்றிய தன் ஆழ்ந்த வருத்தத்தை இந்த ஜன ஸபை பதிவு செய்கிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியும் "இந்தியா" பத்திரிகையும்

(1) லண்டனில் ஒரு கமிட்டி தன்னுடன் ஒத்துழைப்பதும் தன் கருத்துக்களை ப்ரசாரம் செய்ய லண்டனில் ஒரு வாரப் பத்திரிகை நடைபெறுதலும் தன் கார்ய ஸித்திக்கு அவசியமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது. இப்போதுள்ளபடியே ப்ரிட்டிஷ் ஸமிதியும் அதனால் வெளிப்படும் "இந்தியா" பத்திரிகையும் தொடர்ந்து காக்கப்பட வேண்டுமென்றும், அச் செலவைப் பின்வரும் விஹிதப்படி கட்ட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை நிச்சயிக்கிறது.

(2) "இந்தியா" பத்திரிகையில் 4000 பிரதிகள் நாம் வாங்கிக் கொள்ள வேண்டும். வங்காளம் 1500 பிரதிகள்; சென்னை மாகாணம் 700 பிரதிகள்; ஐக்கிய மாகாணங்கள் 200 பிரதிகள்; அயோத்தி 50 பிரதிகள்; பஞ்சாப் 100 பிரதிகள்; பேராரும் மத்ய மாகாணங்களும் 450 பிரதிகள்; பம்பாய் 100 பிரதிகளாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். வருஷச் சந்தா 8 ரூபாய் விஹிதம்.

(3) பின் கூறப்படும் கனவான்கள் தம் பெயருடன் காணப்படும் வட்டங்களுக்குக் கார்யதர்சிகளாக நியமிக்கப்படுவதுமன்றி அவரவர் வட்டங்களுக்கு விதிக்கப்படும் 'இந்தியா'ப் பிரதிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைக்குத் தாமே ஜவாப்தாரிகளாவா ரென்றும், தொகையை முன் பணமாக இரண்டு அரை வருஷத் தவணைகளில் கட்டிவிட வேண்டுமென்றும் இந்த ஸபை நியமிக்கிறது.

வங்காளம்: ஸுரேந்த்ரநாத் பானர்ஜி, பூபேந்த்ரநாத வஸு, வைகுண்டநாத் ஸேன்.

பம்பாய்: பிரோஸ்ஷா மேத்தா, தீ.எ. வாச்சா, கோபால க்ருஷ்ண கோக்கலே.

மதராஸ்: ஸ்ரீநிவாச ராவ், விஜயராகவாசார்யர், ரைரு நம்பியார், ஜீ. சுப்பிரமணிய அய்யர்.

பேரார் - மத்ய மாகாணங்கள்: R.N. முதோல்கார்

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்: மதன்மோஹன் மாளவீயர், கங்காப்ரஸாத் வர்மா, பீரஸிம்ஹர், S. ஆல்ப்ரெட் நந்தி.

கான்பூர்: ப்ருத்வீநாத் பண்டித்

பஞ்சாப்: லாலா ஹர்கிஷன் லால்

(4) விசேஷ ப்ரதிநிதிக் கட்டணம்: பிரிட்டிஷ் கமிட்டி, "இந்தியா" பத்திரிகை - இவற்றின் செலவைக் கட்டுவதற்கு அவசியமான தொரு மிச்சத் தொகை சேகரிக்கும் பொருட்டாக 1902ஆம் வருஷ முதல் ஒவ்வொரு ப்ரதிநிதியும் இப்போது செலுத்தும் ப்ரதிநிதிக் கட்டணத்துடன் இன்னும் அதிகம் பத்து ரூபாய் செலுத்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

இந்தியாவின் வறுமையும் அதற்குச் சில நிவாரணங்களும்

(1) பாரத நாட்டில் எளிய ஜனங்களின் பரிதாபகரமான நிலைமையை ராஜாங்கத்தார் கவனிக்கும்படி இந்த ஸபை வேண்டுகிறது. பாரத ஜனங்களில் 400 லக்ஷம் பேர் ஸாதாரண வருஷங்களிலேயே முழுப் பசிக்கு மிகவும் அருகே துன்பத்தில் உழலுகிறார்கள் என்பதாக அதிகாரிகளின் வாக்குறுதியினாலேயே விளங்குகிறது.

அவர்களுடைய நிலையைச் செம்மைப்படுத்த வேண்டினால், பிற உபாயங்களுக்கிடையே பின்வருவன வற்றையும் தழுவத் தகுமென்று இந்த ஜன ஸபை காட்டுகிறது.

(2) சாசுவதத் திட்டம் இப்போது நடைபெறாத இடங்களில் அதை ஏற்படுத்தல்; அங்ஙனம் செய்ய ஸௌகர்யப்படாத இடங்களில் தீர்வை யேற்றங்களுக்கு வரையறை விதித்தல்; இவற்றாலே குடியானவர் வயிற்றுக்குப் போதிய தானியம் மிஞ்சும்படி செய்யலாம்.

மேலும் இப்போதைக் காட்டிலும் நீண்ட காலங்கள் எட்டி யெட்டி இந் நிலவரித் திட்டங்கள் புதுப்பிக்கப் படுமென்ற உறுதிமொழி தரவேண்டும்.

(3) விவசாய பாங்கிகள் ஸ்தாபிக்கவும், விவசாயக் கடன் சட்டத்தின்படி கடன் வாங்க அதிக ஸௌகர்யங்கள் செய்து தரவும் வேண்டும்.

(4) தேசத்தின் கிருஷித் தொழிலை வளர்ப்பதற் குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்; நமது நாட்டு ஜமீந்தார்களும் தேசத்தின் விவசாய அவஸரங்களில் அதிக கவனம் செலுத்தித் தம்மால் இயன்ற உபாயங்களைக் கைக்கொள்ளும்படி இந்த ஜன ஸபை போதிக்கிறது.

(5) வருமான வரிச் சட்டத்தின் கீழே தீர்வை வாங்குதற்குரிய வரவுச் சிற்றெல்லை 500 ரூபாயாக இருப்பதனை 1000 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

(6) பொது உத்யோகங்களில் இந் நாட்டினரை அதிகமாக நியமிப்பதனாலே தேசத்தின் பொருள் வற்றைப் பகுதியேனும் குறைக்க வேண்டும்.

4. நான்காந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ உத்யோகங்களைப் பிரித்தல்

தர்மத்துடனும் திறமையுடனும் நீதி பரிபாலனம் செய்ய வேண்டினால், நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல் அவசியமென்ற தன் நிச்சயக் கருத்தை இந்த ஜன ஸபை மீட்டு மொருமுறை தெரிவிக்கிறது.

இந்தியாவின் குற்றச் சட்ட முறையில் மிகப் பழக்கமுடையவர்களாகிய கீர்த்தி மிகுந்த லார்ட் ஹாப் ஹௌஸ், ஸர் ரிச்சர்ட் கார்த், ஸர் வில்லியம் மார்க்பி, ஸர் ஜேம்ஸ் ஜார்டைன், மிஸ்டர் ரெய்னால்ட்ஸ் முதலிய பெரிய ப்ராமாணிகர் இவ் விஷயத்தில் ஜன ஸபையின் கொள்கையை அங்கீகாரம் செய்திருக்கின்றனர்.

இந்த விவகாரம் இப்போது இந்தியா ராஜாங்கத்தாரின் ஆலோசனையி லிருப்பதாகத் தெரிகிறது. இங்கு குறிக்கப்படும் விதியின் நேர்மையைக் கருதியும் இவ் விஷயத்தில் பொதுஜன அபிப்பிராய ஒருமைப்பாட்டைக் கருதியும், முக்யமாக நீதி, நிர்வாஹ அதிகாரங்களின் கலப்பால் விளையும் பல நியாயச்

சேத திருஷ்டாந்தங்களைக் கருதியும், மிக அவஸரமான இச் சீர்திருத்தத்தை நிறைவேற்றும்படி இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

இதனை நிறைவேற்றாம லிருப்பதற்குக் காரணம் யாதெனில், வீண் கௌரவத்துக்கு நஷ்டம் ஏற்படுமென்றும், நிர்வாஹ ஆட்சியின் பலங் குறையுமென்றும் உண்டான பயம் சிறு பகுதியும், ஆட்சிச் செலவு மிகுமென்றே பயம் பெரும்பகுதியும் காரணம். அச் செலவு மிகுதியாகாது. எங்ஙனமாயினும் அதனை ஒரு பெருந் தடையாகக் கொள்ளத்தகாது.

5. ஐந்தாந் தீர்மானம்:

ப்ரீவி கௌன்ஸில் நீதி ஸமிதியில் இந்தியர்கள்

இந்தியாவிலிருந்து போகும் புனர் விசாரணை மனுக்கள் ஸம்பந்தப்பட்ட அளவில் "ப்ரீவி கௌன்ஸில்" நீதி ஸமிதியைப் பலப்படுத்த வேண்டுமாகையால், கீர்த்திபெற்ற இந்திய வக்கீல்களை அங்ஙனம் இந்தியாவிலிருந்து போகும் புனர் விசாரணை மனுக்களுக்குத் தீர்ப்புச் சொல்வதில் உதவிபுரியும்வண்ணமாக மேற்படி ஸமிதியில் நியமிக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் சிபார்சு செய்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்

தென் ஆபிரிகாவில் ப்ரிட்டிஷ் இந்தியக் குடியேற்றத்தார் உயிர் மிஞ்சி நிற்கப்படுங் கஷ்டங்களின் விஷயத்தில் இந்த ஜன ஸபை அனுதாபந் தெரிவிக்கிறது. அங்கு இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள் செய்யப்படுவதை ராஜ ப்ரதிநிதியின் கவனத்துக்குக் காண்பிக்கிறது. த்ரான்ஸ்வால், ஆரன்ஜ் நதிக் குடியேற்றங்களில் இந்தியர்களின் பதவி ஸம்பந்தமான ஆலோசனை குடியேற்ற மந்திரி செய்துவருமிடையே அக் குடியேற்றத்தார்களுக்கு நியாயமான ஏற்பாடு பண்ணிக்கொடுக்க தயவு செய்யும்படி வைஸ்ராயை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

போலீஸ் திருத்தம்

போலீஸ் சீர்திருத்த விஷயம் ராஜாங்கத்தாரின் ஆலோசனையிலிருந்து வருவதையும், வைஸ்ராய் தம் உத்யோகக் காலத்துக்குள் முடிவு செய்யக் கருதி யிருக்கும் பன்னிரண்டு விஷயங்களில் இதுவும் ஒன்றாமென்பதையும் தெரிந்து இந்த ஜன ஸபை திருப்தி யடைகிறது.

பின்கூறப்பட்ட வழிகளில் போலீஸ் திருத்தப்பட்டா லன்றித் திருப்திகரமான சீர்திருத்தம் ஏற்படாதென்றதன் கொள்கையை மீளவும் அறிவிக்கிறது.

(1) போலீஸ் உயர்தர உத்யோகங்கள் இப்போதைக் காட்டிலும் அதிகமாகச் சட்டப்படி பாரத ஸ்வதேசிகள் எனப்படுவோரில் ஆங்கிலங் கற்றவரால் நிரப்பப்படவேண்டும். இவர்கள் தம் கீழ் உத்யோகஸ்தர்களின் பாஷை, வழக்கம், நினைப்பு, வாழ்க்கை நெறிகளிலே பழக்கமுடையோ ராதலால் இப்போதைக் காட்டிலும் கீழ்த்தர உத்யோகஸ்தரின்மீது அதிகத் திறமையார்ந்த ஆட்சி செலுத்த வல்லோராவர்.

(2) போலீஸ் கீழ்த்தரப் பதவிகளின் சம்பளத்தையும் நம்பிக்கைகளையும் தக்கபடி அபிவிருத்தி செய்து அந்த இலாகாவைக் கல்வி கற்ற வகுப்பினருக்கு அதிக ருசிகரமாகச் செய்யவேண்டும். போலீஸ் கீழ்த்தர உத்யோகங்களில் ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியரை இன்னும் விஸ்தாரமாக நியமிப்பதுடன் அவர்களுடைய சம்பளத்தையும் எதிர்கால அபேக்ஷா பதவிகளையும் அதிகப்படுத்தினால், போலீஸ் இலாகா திறமையும் நாணயமும் உடையதா மென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

(3) போலீஸ் இலாகாவின் மாகாணக் கிளை உத்யோகங்களில் நியமனத்துக்காக இங்கிலாந்தில் நடைபெறும் போட்டிப் பரீக்ஷக்கு ப்ரிட்டிஷ் ஜாதியார் மாத்திரமே ஆஜராகலா மென்ற நியதியை மாற்றி அதை இந்தியர்களுக்கும் திறக்கவேண்டும்.

8. எட்டாந் தீர்மானம்:

பஞ்சம்

(1) ஸமீப காலத்தில் இந்தியா முழுதிலும் ஏறக்குறையக் கொடுமையான பஞ்சம் மீண்டு வந்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை துக்கப்படுவது மன்றி இந்தியாவில் பஞ்சங்களுக்குக் காரணம், பெரும் பகுதி,

ஒன்று: இந் நாட்டுத் தொழில்களும், சிற்பங்களும் அழிந்து விட்டபடியாலும் இங்கிருந்து ஓயாமல் செல்வத்தை வற்றடித்துக் கொண்டு போவதாலும் நேர்ந்த வறுமை.

மற்றொன்று: குடி, படை இரண்டிலாகாக்களிலும் ராஜாங்கத்தார் மிதமிஞ்சிப் பணம் செலவிடுவதால் நேர்ந்த நிலத் தீர்வை மிகுதியும், திட்ட மிகுதியும்.

இதனால் ஜனங்கள் மிக ஏழைகளாய்ப் பஞ்சம் வந்து தீண்டிய மாத்திரத்தில் உதவி யற்றுப்போய், ராஜாங்கத்தார் அல்லது செல்வரிடமிருந்து ஸகாயம் கிடைத்தாலன்றி மடிதல் அவசியமாகிறது.

இந்த ஜன ஸபையின் அபிப்பிராயப்படி பஞ்சம் மீட்டு மீட்டும் வாராமலிருப்பதற்கு உண்மையான மருந்து யாதெனில், சிக்கன முறையை வற்புறுத்தி, ராஜ்யத்தின் பொருளா - தாரங்களை நேரே கையாண்டு, நாட்டுப் பயிர்த் தொழிலை அபிவிருத்தி செய்து, உள்நாட்டுச் சிற்ப முறைகளையும் தொழில்களையும் உயிர் மீட்டுப் போஷிக்க வேண்டும்.

(2) எல்லாக் கக்ஷியாரிலும் கீர்த்திமான்கள் பலர் கூடி லண்டனில் ஒரு பஞ்ச நிவர்த்தி ஸங்கமும், லிவர்ப்பூரில் அதற்கு ஒரு கிளையும் சமைக்கப்பட்டிருப்பது கண்டு இந்த ஜன ஸபை ஸந்தோஷப்படுகிறது.

இந்தியாவில் பஞ்சத்தால் வருந்துவோரிடம் அந்த ஸங்கத்தாருக்குள்ள அனுதாபத்தைக் கருதியும் அவர்கள் தமது காரியத்தை மிகவும் பயனுறத் தக்கபடியாகச் செய்து வருவதைக் கருதியும் இந்த ஜன ஸபை அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

1. பொது உத்தியோக விசாரணைக் கூட்டமும்
ஸம காலப் பரீக்ஷைகளும்

பொது உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் தொழில்களினின்றும் எதிர்பார்த்த பயன்கள் விளையாமை கண்டு மறுபடியும் இந்த ஜன ஸபை தன் ஆழ்ந்த வருத்தத்தை அறிவிக்கிறது.

இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஏக காலத்தில் உத்யோகங்களுக்குப் பரீக்ஷை நடத்துவதற்கு அனுகூலமான 1893-ஜூன் 2ஆம் தேதி செய்யப்பட்ட காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தை நிறைவேற்றினா லன்றி அந்த விஷயத்துக்கு ஸரியான தீர்ப்புண்டாகாதென்ற தன் நிச்சயத்தை மீளவும் அறிவிக்கிறது.

2. இந்தியருக்கு உயர்தர உத்தியோகங்கள்

போலீஸ், சுங்கம், தந்தி, காடு, நில அளவை, அபினி முதலிய தணிந்த தரத்துக் குடியாட்சி உத்யோக இலாகாக்களில் உயர்ந்த பதவிகளிலே பாரத தேசத்தாரை அதிகமாக நியமிக்கும் விஷயத்தில், இப்போது கவர்ன்மெண்டாரின் அனுஷ்டானம் மேற்படி ஸ்தானங்களி னின்று நம்மவரை விலக்குவதாகவும் மஹாராணியின் ஸ்ரீமுக நியமங்களுக்கும் உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் சிபாரிசுகளுக்கும் விரோதமாகவும் இருப்பது கருதித் தனக்கு விளையும் ஆழ்ந்த வருத்தத்தை இந்த ஜன ஸபை அறிவித்துக்கொள்ள விரும்புகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

பாரத ராணுவச் செலவுக்கு ப்ரிட்டிஷ்
பொக்கசத்திலிருந்து ஸஹாயம்

ப்ரிட்டிஷ் படைகளில் பெரும் பகுதிகள் மிகவும் பத்திரத்துடன் தேச ஸமாதானத்துக்கு யாதோரிடருமின்றி, ப்ரிட்டிஷ் இந்தியாவின் சட்டப்படி யுள்ள எல்லைகளுக்கு வெளியே தொழில் செய்யும்படி செலுத்தப்பட்டு வருதலால்,

ஐரோப்பியப் படையை இப்போதுள்ள அளவில் இந்தியாவில் வைத்துப் பேணுதற்குள்ள செலவில் ஒரு பகுதி ப்ரிட்டிஷ் பொக்கசத்தினின்றும் பாரதவாஸிகளுக்கு ஈடுசெலுத்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

ப்ரிட்டிஷ் படைகளின் செலவில் ஒரு பகுதியை பாரதப் பொக்கசத்தினின்றும் ப்ரிட்டிஷ் பொக்கசத்துக்கு மாற்றுதல் இந்தியாவுக்குச் செலுத்த வேண்டிய திரவிய நீதியில் ஓரம்சமாகுமென்று இந்த ஸபை கருதுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

பாரத ப்ரபு குமாரர் படை

பாரத இளவரசர், பிரபு மக்களின் ப்ரதிநிதிகள் அடங்கிய ஸாமந்தர் படையொன்று சமைத்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை மெச்சுகிறது. ட்யூக் ஆவ் கன்னாட் சிபார்சு செய்தபடி ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபிப்பதில் வந்து முடிவுபெறக்கூடிய ராஜ தந்திரத்தில் இச் செய்கை முதற்படி யாகுமென இந்த ஜன ஸபை கருதுகிறது.

அக் கலாசாலைகளில் பாரத ஸ்வதேசிகள் பாரத ஸேனையில் ஸந்நது பெற்ற அல்லது பெறாத உத்யோகஸ்தராக நியமனம் பெறத்தக்க கல்வியும், பயிற்சியும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த ஸபை கருதுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

கல்வி விசாரணைக் கூட்டத்தில் இந்திய மெம்பர்கள்

கல்வி விஷயத்தின் எல்லாப் பகுதிகளையும் வைஸ்ராய் சிரத்தையுடனும், விழிப்புடனும் கவனித்து வருவது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி யடைகிறது.

இப்போது ஆலோசனையிலுள்ள கல்வி விசாரணைக் கூட்டத்தைச் சமைக்கையிலே அதில் ஸபிகராக இருக்கும்படி போதிய தொகை இந்திய கனவான்களை நியமித்து, அதில் இந்தியரின் க்ஷேமங்களுக்குப் பிரதிநிதிகள் ஊராக்கும்படி இந்த ஜன ஸபை வைஸ்ராயை வணக்கத்துடன் வேண்டுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

அஸாம் தொழிலாளிகளின் விஷயம்

அஸ்ஸாம் மாகாணத்தில் கூலித் தொழிலாளிகளின் விஷயத்தில் கவர்ன்மெண்டார் தெரிவிக்கும் உதார சிந்தனைகளின் பொருட்டு இந்த ஜன ஸபை நன்றி தெரிவிக்கிறது. ஆனால், அத் தொழிலாளிகளின் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொல்லிய வார்த்தையை இன்னும் நிறைவேற்றாதது பற்றி வருத்தப்படுகிறது. அங்ஙனம் செய்யும்படி ஏற்கெனவே அந்த மாகாணத்தில் ஆட்சி யதிகாரியும் பலமாக வற்புறுத்தி யிருக்கிறார். அதுவே கூலிக்காரருக்குச் செய்யவேண்டிய தெளிந்த நியாயம். அஸாமில் தொழிலாளிகளுக்குள்ள தண்டனைச் சட்டத்தை அறவே ஒழித்து விடுவதாக ராஜாங்கத்தார் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுதற்குரிய காலம் வந்து விட்டதென இந்த ஜன ஸபை கருதுகிறது.

14. பதினான்காந் தீர்மானம்:

ராணுவ வைத்ய இலாகாவையும் குடி வைத்ய இலாகாவையும் பிரித்தல்

1. பொதுஜன க்ஷேமத்தையும், வைத்ய சாஸ்த்ரம், வைத்யத் தொழில் இவற்றின் நலங்களையும், ஆட்சிச் செலவில் சிக்கனத்தையும் உத்தேசித்து,

i) ஒரு ராணுவ வைத்ய இலாகா ஏற்படுத்தி அதில் ஐரோப்பிய ஸேனைக் கொன்றும், இந்தியப் படைகளுக்கு மற்றொன்றுமாக இரண்டு கிளைகள் சமைத்து, அவ் விரண்டையும் ஒரேவித நியமங்களில் நடத்த வேண்டுமென்றும்;

ii) நாட்டுக் குடி வைத்ய இலாகாவைத் தனி ஸ்வாதீனமுள்ள வைத்ய இலாகாவாகச் சமைத்து, அதை இப்போதுள்ள ராணுவ ஸம்பந்தத்தினின்றும் அறவே பிரித்துவிட வேண்டுமென்றும், அதற்கு இந்தியாவிலும் பிற இடங்களிலுமுள்ள வைத்தியர் கூட்டத்தினின்றும் ஆள் சேர்க்கவேண்டு மென்றும், அதில் ஸ்வதேச பண்டிதரின் திறமையை விசேஷமாகப் பாராட்ட வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

குடி உதவி ரண வைத்தியர்; ஔஷதசாலை
உதவிக் கார்யஸ்தர் – இவர்களின் ஸ்தானம்

நெடுங்கால ஒழுங்குத் தவறுகளையும் அவற்றால் விளையும் குறைபாடுகளையும் நீக்கும் பொருட்டு உதவி ரண வைத்தியர், ஔஷதசாலை உதவிக் கார்யஸ்தர்களின் ஸ்தானங்களையும், வேண்டுதல்களையும் குறித்து ஸம்பூர்ணமாகவும் வெளிப்படையாகவும் விசாரணை நடத்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை மீட்டும் அழுத்திச் சொல்லுகிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:

பாரத விவசாய அபிவிருத்தி

(1) பாரத தேசத்தின் வெவ்வேறு மாகாணங்களில் உள்ள பெருந் திரளான ஜனங்கள் உயிர்பேண இடந் தருவது பயிர்த்தொழில் ஒன்றேயாதல் கருதியும், ப்ரிட்டிஷ் ஆட்சியின் மிதமிஞ்சிய செலவைக் கருதியும் கவர்ன்மெண்டார் விவசாய இலாகாவிலே தம்முடைய முக்யமான, பகுக்கப்படாத கவனத்தைச் செலுத்துமாறு கருணை செய்யவேண்டுமென்றும் அந்த அம்சத்தில் அமெரிகா, ருஷியா, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய பல தேசங்களை மிகவும் க்ஷேமம் பெறச் செய்திருக்கும் அபிவிருத்தி முறைகளை இந் நாட்டிலும் தழுவவேண்டு மென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

(2) பாரத விவசாயத்தின் நிலைமையைக் குறித்து விசாரணை நடத்தும் பொருட்டாக 1889-ல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பண்டித லோயல்கரின் சிபார்சுகளில் கவர்ன்மெண்டார் விசேஷ கவனம் செலுத்தி அவற்றை விரைவில் நிறைவேற்றும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

(3) தேச முழுதிலும் பல சோதனை விவசாயப் பண்ணைகள் ஸ்தாபனஞ் செய்யும்படிக்கும், இந்திய மாணாக்கர் பிற தேசங்களுக்குப் போய் அந்த தேசங்களில் நடைபெறும் விவசாய மூலங்களின் அபிவிருத்தி முறைகளைப் பயிற்சி செய்து கொள்ளுமாறு அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுக்கும்படிக்கும் ராஜாங்கத்தாரை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

இந்தியாவின் பொருள் நிலை

அடுத்த ஜன ஸபைக் கூட்டத்தில் பின்வருந் தீர்மானங்களைத் திருத்தங்கள் சேர்த்தோ சேர்க்காமலோ அங்கீகாரம் செய்தல் விரும்பத் தக்கதா என்பதைப் பற்றி அறிக்கையிடும்படி பின்வரும் கனவான்கள் ஒரு ஸமிதியாகச் சமையுமாறு இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

கனவான்களின் பெயர்

பாலகங்காதர திலகர், மதன்மோஹன் மாளவீயர், பூபேந்த்ரநாத் வஸு, ஜே. சௌதரி, ந. பாடக், ரானடே, கங்காப்ரஸாத் வர்மா, உமர்பக்ஷ், ஹரிகிஷன் லால்.

தீர்மானங்களாவன

1. பிற நாடுகளின் விளைச்சல், பகுத்தல்களிலே நடைபெறும் முறைகளைப் பற்றிய ஞானமில்லாமையே நமது தேசத்தின் பொருட் சோர்வுக்குப் பெரும்பாலுங் காரண மாதலால், சரியான கல்வியும் பிழையற்ற அறிவும் நம்முடைய ஜனங்களுக்குக் கிடைப்பதற்குரிய முறைகளை நமது தேசத்தார் தழுவுதல் தகுமென்று இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது.

2. கிராமங்களிலும் பட்டணங்களிலும் மாகாணங்களிலும் தேசத்திலும் முதற் பணமும் வியாபார நாணயமும் சேகரிப்பது நாம் தீர்க்கவேண்டிய முக்கிய விவகாரங்களில் ஒன்றாதலால், முதல் தொகை சேகரிப்பதில் நீடித்த, விசாலமான முயற்சிகள் செய்து நமது பொருள் நிலையின் அபிவிருத்திக்குள்ள பல கஷ்டங்களில் ஒன்றை நீக்குவதிலே கவனம் செலுத்தும்படி தேசத்தாரை இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

17. பதினேழாந் தீர்மானம்:

செலாவணிச் சட்டம்

1893ஆம் வருஷத்து செலாவணிச் சட்டத்தை ஏற்கனவே தான் கண்டனம் செய்திருப்பதை இந்த ஜன ஸபை மீளவும் உறுதிப்படுத்துகிறது. அச் சட்டத்தால் ரூபாயின் கிரயம்

நூற்றுக் கைம்பது க்ருத்ரிமமாக வளர்ந்துவிட்டது. அதனால் அந்த அளவுக்கு எல்லாத் தீர்வைகளும் மிகுதியாகும்படி நேர்ந்துவிட்டது. இந்த வளைவான, பார மிகுந்த தீர்வையினின்றும் கவர்ன்மெண்டாருக்கு அதிகப் பண மிச்சங்கள் ஏற்படுகின்றன.

இதுவும் பஞ்சங்களால் நேர்ந்த அபூர்வமான கஷ்ட சமயங்களில் நடைபெற்று வருகிறது. இதனால் விவசாயம், தோட்டப் பயிர், கைத்தொழில் என்ற பணத்தை விளைக்கும் ஸாதனங்களுக்குப் பெருந் தீங்கு விளைகிறது. தவிரவும், மேற்கூறிய சட்டத்தால் குடியானவர்களுக்குக் கஷ்ட காலங்களில் உயிர் மிஞ்சும் திறமை பயங்கரமாகக் குறைவுபட்டிருக்கிறது.

இதினின்றும் நாளடைவில் மிகப் பரிதாபகரமான பயன்கள் விளையக்கூடுமென்று இந்த ஜன ஸபை அபிப்ராயப்படுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

பாரதச் சுரங்கச் சட்டம்

இந்தியாவில் சுரங்கத் தொழில் விரைவில் விருத்தி யடைந்து வருவது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி யடைகிறது. இந்த தேசத்தில் உலோஹ மூலாதாரங்கள் ஏராளமாக இருப்பது கருதியும்; இதனால் இந் நாட்டில் கனியந்திர சாஸ்த்ர ஸம்பந்தமான பரிபூர்ண ஞானம் பெறுதற்குரிய ஸாதனங்கள் ஏறக்குறைய சூன்யமாக இருப்பது கருதியும்; ஸமீபத்தில் நிறைவேறிய சுரங்கச் சட்டம், அதாவது 1901ஆம் வருஷத்து ஏழாங் கட்டளையின் கருத்துப்படி பாரதச் சுரங்கங்க ளெல்லாம் கனித்தொழில் நிபுணர்களின் மேற்பார்வையின்கீழே இருத்தல் வேண்டுமென்பது கருதியும்; இங்கிலாந்திலுள்ள சுரங்க ராஜ பாடசாலை போலவும், ஜப்பானிலும் ஐரோப்பாவிலுமுள்ள சுரங்கத் தொழிற் கலாசாலைகள் போலவும் இந்தியாவிலும் தக்க ஸ்தலமொன்றில் ஒரு ராஜாங்கச் சுரங்க யந்திரத் தொழிற் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

பல திரட்டு

(i) 1. வருமான வரிச் சட்டத்தின்கீழ் வரி வசூல் செய்வதற்குரிய வரும்படியின் கீழெல்லையை 500 ரூபாயி லிருந்து 1000 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

2. ஆயுதச் சட்டத் திருத்தம்: (அமராவதி; 13ஆம் கூட்டம்; நான்காந் தீர்மானம்; (i) பகுதி 2ஆம் கிளையைக் காண்க.)

3. ஸ்வேச்சைக் காப்புப் படை சமைத்தல் (மேற்படி 4ஆம் கிளையைக் காண்க.)

4. ஐரோப்பிய - யூரேஷிய உத்யோகஸ்தருக்குக் கொடுக்கும் பரிவர்த்தன நஷ்ட ஈட்டை நிறுத்திவிடுதல் (மேற்படி 5ஆம் கிளை.)

5. பஞ்சாபில் ஒரு ஹைகோர்ட் ஸ்தாபித்தல்.

(ii) 1. கல்வி யிலாகாத் திருத்தம் (1896ஆம் வருஷம், கல்கத்தா, 12ஆம் ஜன ஸபைக் கூட்டத்தின் ஆறாம் தீர்மானத்தைக் காண்க.)

2. உப்புத் தீர்வையைக் குறைக்கும்படி (1896 கல்கத்தா 12ஆம் கூட்டம் 8ஆம் தீர்மானம்)

(iii) 1. தொழிற் கல்வியைப் பரப்புதல் (1898 சென்னை 14ஆம் கூட்டம் 18ஆம் தீர்மானம்)

2. ஜூரித் திருத்தம் (1896 கல்கத்தா 12ஆம் கூட்டம் 7ஆம் தீர்மானம்)

3. இதுவும் ஜூரித் திருத்தம் (1898 சென்னை 14ஆம் கூட்டம்; 20ஆம் தீர்மானம்; (iii)ஆம் பகுதி 5ஆம் கிளை)

4. காட்டிலாகாத் திருத்தம் (1898 சென்னை 14ஆம் கூட்டம் 20ஆம் தீர்மானம் (iii)ஆம் பகுதி 6ஆம் கிளை)

20. இருபதாந் தீர்மானம்:

ஜன ஸபையின் பொதுக் காரியதரிசிகள்

அடுத்த வருஷத்துக்குப் பொதுக் கார்யதர்சியாக A.O. ஹ்யூமையும், உதவிப் பொதுக் கார்யதர்சியாக தீ. எ. வாச்சாவையும் இந்த ஜன ஸபை மறுபடி நியமிக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:

அடுத்த ஜன ஸபைக் கூட்டம்

பாரத ஜன ஸபையின் 18ஆம் கூட்டம் 1902ஆம் வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கப்பால் பம்பாய் மாகாணத்தில் பின்னிட்டு நிச்சயித்துக்கொள்ள வேண்டிய தேதிகளில் கூடுமாறு இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

பதினேழாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

பதினெட்டாம் அத்தியாயம்

1902 ஆமதாபாத் பதினெட்டாங் கூட்டம்

பம்பாய் மாகாணத்தில் குஜராத் என்று சொல்லப்படும் கூர்ஜர நாட்டுத் தலைநகராகிய ஆமதாபாத்தில் 18ஆம் கூட்டம் 1902 டிசம்பர் 23-ல் கூடி அன்றும் 24, 26 தேதிகளிலும் நடைபெற்றது.

தொழிற்காட்சி மண்டபம்

சென்ற வருஷம் கல்கத்தாவில் நடைபெற்றதுபோல இவ் வருஷம் ஆமதாபாத்தில் ஒரு தொழிற்காட்சிப் பந்தர் சமைக்கப்பட்டது. அதனை காயக்வாட் மஹாராஜா திறந்து வைத்தார்.

ப்ரஸங்க நிலைமை

ஜன ஸபைக்கு 471 ப்ரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆமதாபாத் வட்டத்தினின்று வந்தோர். உபசார ஸமிதியின் ஸபாநாயகர் பெயர் அம்பாலால் தேசாய்.

அவர் ப்ரஸங்கம்

அம்பாலால் தேசாய் உபசார கணத் தலைவர் என்ற ஸ்தானத்தில் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:

> குஜராத்தானது வர்த்தகத்தையும் கைத்தொழிலையும் ஜீவனாதாரமாக உடைய மாகாணம். குஜராத்தில் ஸமீப காலத்தில் நடைபெற்ற பயங்கரமான இரண்டு பஞ்சங்களால் இம்

மாகாணத்தார் கண் திறந்து இந்த உத்பாதங்களின் காரணங்களை ஆராயத் தொடங்கி யிருக்கிறார்கள். ஒரு கோடியிலும் குறைந்த மொத்த ஜனத்தொகையில் 25 லக்ஷம் பேருக்குச் சற்றே குறைந்த தொகை மடிந்து போய்விட்டது. இதற்கு ப்ரதான காரணம் இந் நாட்டுச் செல்வத்தைப் பிற நாட்டுக்கு வற்றடித்துக்கொண்டு செல்லுதல். நம்முடைய ஜனங்களில் பலர் குடியேறிப் போயினர். நமது ராஜரீகத் தாழ் நிலையால் வர்த்தக நாசம் ஏற்படுகிறது. ஆதலால், வியாபாரிகளாகிய இம் மாகாணத்தார் ராஜரீகக் கிளர்ச்சியிலேயே கலத்தல் அவசியமாகிறது. நம்முடைய பஞ்சு யந்திரசாலைகளின் மீது அநியாயமான சுங்கத் தீர்வை விதித்துக் கொடுமை செய்கிறார்கள். ஆதலால், ராஜரீகக் கிளர்ச்சி பலமில்லாத இடத்தில் வியாபார முயற்சிகள் அதிக நஷ்டமடையு மென்பது எங்கள் புத்தியில் புலப்பட்டது. தீர்வை விஹிதங்களின் கடுமையால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். "நாம் ஏன் ஏழைகளாய் விட்டோம்" என்று எங்கும் ஜனங்கள் கேட்கத் தலைப்பட்டு விட்டார்கள்

என்று ஸ்ரீ அம்பாலால் தேசாய் சொன்னார்.

ஜன ஸபையின் ஸபாநாயகராகிய ஸ்ரீமான் ஸுரேந்த்ரநாத் பானர்ஜி செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்

அப்போது ஸ்ரீமான் பானர்ஜி ஜன ஸபையின் தலைவராய்ப் பின்வருவதை விரித்துக் கூறினர்:

ப்ரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் பொருள் நிலை மேன்மேலும் கீழ்மை யடைந்து வருகிறதென்று ஸ்ரீமான் டிக்பி சொல்லுகிறார்.

இது மெய்யா, இல்லையா? அதை முதலாவது ஆலோசனை பண்ணுவோம். பொருள் விஷயத்தின் ஆதாரத்தின் மீதேயே பாரத ராஜ்ய பரிபாலன விஷயம் முழுதும் சார்ந்து நிற்கிறது. தேசம் நாளுக்கு நாள் ஏழ்மை யடைந்து வருகிறதா இல்லையா என்பதை ஆராய்ச்சி செய்யும்பொருட்டு கவர்ன்மெண்டார் ஒரு விசாரணைக்கூட்டம் நியமிக்க வேண்டும்.

1880-81-ல், லார்ட் ரிப்பன் ஆட்சியின்போது ஒரு தரமும் பின்பு லார்ட் டபரின் காலத்தில் மற்றொரு தடவையும் இதைப் பற்றிய விசாரணைகள் நடைபெற்றன. ஆனால், அவ் விசாரணைகளில் செய்யப்பட்ட முடிவுகளை ராஜாங்கத்தார் வெளியிடாமல் மறைத்து வைத்து விட்டார்கள். அம் முடிவுகளால் ப்ரிட்டிஷ் ஆட்சியின் பயனாக நாட்டின் வறுமை நாளுக்கு நாள் மிகுதிப்படுகிறதென்ற கக்ஷி மெய்யென்று ருஜுவாகக் கூடும்; அல்லது பொய்யென்று ருஜுவாகக் கூடும். பொய்யென்று ருஜுப்படுத்தத் தக்கனவாயின், ராஜாங்கத்தார் தம்மீது நெடுங்காலமாக ஓயாமல் சொல்லப்படும் பழிச் சொல்லை நீக்கும் பொருட்டாக அவற்றை அவசியம் வெளியிட்டிருப்பார்கள். ஆதலால், இவர்கள் மறைத்து வைப்பதினின்றும் இவர்களுடைய ஆட்சியினால் வறுமை மிகுதிப்படுகிறதென்ற கக்ஷியே உண்மை யென்பது தெளிவாகப் புலப்படுகிறது.

பயங்கரமான பஞ்சங்கள் மீண்டு மீண்டு வருகின்றன. நாளுக்கு நாள் அவை அதிக பயங்கரமாக முதிர்ச்சி பெறுகின்றன. இவைபோன்ற பஞ்சங்கள் ஐரோப்பாவில் நடந்தால் அங்குள்ள ஜனங்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா பொறுத்திருப்பார்களா? பஞ்சங்களுக் கெல்லாம் வறுமையே மூல காரணம். ஸாதாரண வருஷங்களில் ஜனங்களுக்கு உணவுபோக ஏதேனும் மிச்சங் கண்டால் விளைவு தட்டினபோது வெளியே யிருந்துணவு தருவிக்கப் பணமிருக்கும்.

ஆனால், இந்த நாட்டில் ஸாதாரண வருஷங்களிலேகூட ஏறக்குறையப் பஞ்சம்போன்ற நிலையே இயன்று வருகிறது. சாதாரண வருஷங்களில் மூலாதாரம் மிஞ்சுவது கிடையாது. இந் நாட்டார் வறுமையின் அதல விதல பாதாளங்களில் வீழ்ந்து விட்டனர். கைக்கு வாய் ஜீவனம் பண்ணுகிறார்கள். எத்தனையோ நாள் ஒருவேளை உணவுடன் பசித்துக் கிடக்கிறார்கள். பஞ்சம் தோன்றின மாத்திரத்திலே ஆயிரக் கணக்காகவும் லக்ஷக் கணக்காகவும் மடியத் தொடங்குகிறார்கள். பஞ்சம் முற்ற முற்றப் பத்து லக்ஷக் கணக்காகவும் கோடிக் கணக்காகவும் மடிந்து போகிறார்கள். கவர்ன்மெண்டார் செய்யும் பஞ்ச நிவர்த்தி முயற்சிகளில் அதிகப் பயனில்லை.

நாட்டிலே தரித்திர நிலை மிகுதி யடைந்துகொண்டு வருகிறது. இதைக் குறைக்குமாறு பின்வரும் உபாயங்கள் ஆசரிக்கத்தக்கன.

1. நம்முடைய பழைய கைத்தொழில்களை மீட்டும் உயர்ப்பிக்க வேண்டும். புதிய கைத்தொழில்கள் ஏற்படுத்த வேண்டும்.

2. நில வரித் திட்டம் இப்போது மிதமிஞ்சி யிருப்பதை மிதப்படுத்த வேண்டும்.

3. ஏழைகளை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் இயல்புடைய தீர்வைகளை ஒழித்துவிட வேண்டும்.

4. இந்தியாவிலிருந்து ஆண்டாண்டுதோறும் பணத்தை வற்றடித்துக் கொண்டு போகும் அனுஷ்டானத்தை நிறுத்தி விடுதற்குரிய ராஜரீக முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

ஸுரேந்த்ரநாத் பானர்ஜி சொல்லுகிறார்:

விடுதலை

ஜனங்களின் இஷ்டப்படி தீர்வை வசூல் செய்து அதை ஜனங்களின் இஷ்டப்படி செலவிட வேண்டும். இல்லாவிடில் நாட்டின் வறுமை ஒழியாது.

ஒரு நாட் படும் சிரமத்தால் விடுதலையின் வெற்றிகள் எய்தலரிது. ஸ்வதந்த்ரக் கடவுள் உக்ரமானது, நெடுங்காலம் விடாத பூஜையை விரும்புவது.

இவற்றை யெல்லாம் பெரிய மேன்மை கொண்ட இந் நாட்டின் மக்களுக்கு நான் சொல்லவும் வேண்டுமோ? தர்மங்களுக் கெல்லாம், மதங்களுக் கெல்லாம் பாரத பூமியே ஜன்ம பூமி. இதிலே கீழ்த்திசையின் புண்ய பூமி இங்கேதான் ஞானதேவி முதல் முதல் தீபங் கொளுத்தினாள். இங்கேயே மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்பக் காலத்திலே மஹரிஷிகள் தேவநிலை வேண்டி மந்திரங்கள் பாடினர். நம்முடைய தர்மத்தினின்றே சீன, ஜப்பானிய நாடுகளின் மேலான தர்மங்கள் பிறந்தன. இந்த நாட்டுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கும்படி ராஜாங்கத்தாரை வேண்டுகிறோம்.

என்றார்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கு உபசாரம்

மஹா கருணை தங்கிய ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தியின் முடிசூட்டுக் கொண்டாட்டம் 1903 ஜனவரி 1-ந் தேதியன்று நடத்தப் போவதை உத்தேசித்து அவருக்கு இந்த ஜன ஸபை தனது தாழ்ந்த வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகிறது.

சக்ரவர்த்தியின் ஆட்சிக்காலம் ஜனங்களினிடையே ஸமாதானமும், க்ஷேமமும், திருப்தியும் பொருந்தியதாய், இந்த ஆட்சியில் காலஞ்சென்ற மஹாராணியின் ஸ்ரீமுகத்தில் கூறப்பட்டனவும், பாரத ஜனங்களுக்குச் சக்ரவர்த்தி விடுத்த ஸ்ரீமுகத்தில் மீட்டும் உறுதி செய்யப்பட்டனவுமாகிய வாக்குறுதிகள் வரிசையாக, ஆனால், ஸம்பூர்ணமாக நிறைவேற்றப்படு மென்று இந்த ஜன ஸபை மரியாதையுடன் நம்புகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

ரஹிமதுல்லா ஸயாநி; பி. ரங்கய்ய நாயுடு இருவரின் மரணம்

இந் நாட்டின் நன்மைக்காகப் பல வகைகளில் அருமையான உபகாரங்கள் செய்தவர்களாகிய பழைய ஸபாநாயகர் ரஹிமதுல்லா ஸயாநியும், பி. ரங்கய்ய நாயுடுவும் இறந்து போனது பற்றி இந்த ஜன ஸபை தன் பெரு வருத்தத்தை அறிவிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

இந்தியாவின் வறுமையும் அதற்குச் சில நிவாரணங்களும்

பாரத ஜனங்களின் கொடிய வறுமை விஷயத்தில் கவனம் செலுத்தும்படி இந்தியா கவர்ன்மெண்டாரை, இந்த ஜன ஸபை ஆவலுடன் வேண்டுகிறது. இவ் வறுமைக்குப் பெரும் பகுதி காரணங்களாவன; உள் நாட்டுத் தொழில்களுக்கும் கலைகளுக்கும் அழிவு நேர்ந்ததும்; பல வருஷங்களாக

இந் நாட்டின் செல்வம் வற்றடிக்கப்பட்டு வருவதும்; மித மிஞ்சிய தீர்வையும்; மிகைத் திட்டமுமேயாம். இவற்றால் வறுமை ஏறிப் பெருந்தொகைகளாகிய ஜனங்கள் பஞ்சந் தோன்றிய மாத்திரத்திலேயே ராஜாங்க உதவியை நாடும்படி நேருகிறது. இதற்குரிய வேறு பல நிவாரணங்களினிடையே பின்வருவனவற்றையும் இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது:

1. உள் நாட்டுக் கலைகளையும் தொழில்களையும் மீள உயிர் மீட்டு வளர்ப்பதற்கும் புதிய கைத்தொழில்கள் ஏற்படுத்துவதற்கும் ராஜாங்கத்தார் உதவி செய்து ஊக்கப்படுத்த வேண்டும்.

2. தேச முழுதிலும் கவர்ன்மெண்டார் தொழிற் பள்ளிக் கூடங்களும் கலாசாலைகளும் ஸ்தாபிக்க வேண்டும்.

3. சாசுவத நிலவரித் திட்ட முறைமையை அனுஸரிப்பதற்குப் பக்குவமான மாகாணங்களில், இவ் விஷயமாக இந்தியா மந்திரி தம்முடைய 1862, 1867ஆம் வருஷங்களின் அறிக்கைகளில் கூறிய நியமங்களின்படி, அம் முறைமையை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டும். சாசுவதத் திட்டத்தை இப்போது வழங்குதல் யுக்தமில்லை யென்று ராஜாங்கத்தாரின் மனதில் தோன்றக்கூடிய இடங்களில் மிகைத் தீர்வைத் திட்டங்களைக் குறைத்து அவற்றின்மீது நீதித் தடைகள் விதிக்க வேண்டும்.

4. ராஜாங்க உத்யோகங்களின் மேற்கிளைகளில் பாரத பூமியின் மக்களை அதிக விஸ்தாரமாக நியமித்து நாட்டின் பொருள் வற்றை ஒரு பகுதியேனும் நிறுத்த வேண்டும்.

5. கிராமங்களில் செம்மையாக நாணயத்தைச் சமைக்கும் பொருட்டாகவும், சொத்துடைய விவசாயிகளுக்கு எளிய வட்டியில் கடன் கிடைக்கும்படியாகவும் விவசாய உண்டிகள் (பாங்கிகள்) ஸ்தாபிக்க வேண்டும்.

4. நான்காந் தீர்மானம்:

இங்கிலாந்தில் இந்தியப் பஞ்ச நிவர்த்திச் சங்கம்

இந்தியாவின் திருஷ்டாந்த ரூபமான சில கிராமங்களை எடுத்துக்கொண்டு, அவற்றின் பொருள் நிலையை விவரமாகச்

சோதனை செய்யும்படி இங்கிலாந்திலுள்ள பஞ்ச நிவர்த்திச் சங்கத்தார் செய்து வரும் முயற்சிகளின் பொருட்டு இந்த ஜன ஸபை நன்றி பாராட்டுகிறது. சிலர் அஞ்சுகிறபடி அவ்வித விசாரணை ஜனங்களுக்கு நிஷ்டூர மாகாதென்றும், பாரத தேசத்துக் குடியானவனுடைய உண்மையான நிலைமையைப் பற்றிய ஞானம் ஏற்படுத்துவதில் அது மிகப் பயனுடைய தாகுமென்றும், அவ் விஷயத்தில் இப்போது நேரான நிவாரண முறைகளை வழங்கவொட்டாமல் தடுக்கும் பல விபரீத எண்ணங்களை நீக்குமென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

கொடிய பஞ்சங்க ளிரண்டை யடுத்து அவ்வித விசாரணை நடத்துதல் மிகவும் யுக்தமாகும்.

அதனால் ஒப்புநோக்குவதில் மிகப் பயன்படக்கூடிய திரவிய நிலையைக் குறித்த உண்மைகள் ராஜாங்கத்தாருக்குக் கிடைக்கும். இவ் விஷயத்தில் தமது தீர்மானத்தைப் புனராலோசனை செய்யும்படி இந்தியா மந்திரியை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

மேலும், இவ் விஷயத்தில் இதற்கு முன்பு நடந்த ராஜாங்க விசாரணைகளின் ஆராய்ச்சி முடிவுகளை முக்யமாக, ஏற்கெனவே சில பகுதி மாத்திரம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் லார்ட் டபரின் காலத்து விசாரணை முழுதையும் வெளியிடும்படி இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

தென் ஆப்பிரிக்காவில் இந்தியரின் குறைபாடுகள்

தென் ஆபிரிகாவில் இந்தியக் குடியேற்றத்தாருக்குள்ள ஆழ்ந்த குறைபாடுகளை இந்தியா கவர்ன்மெண்டார் கவனிக்கும்படி இந்த ஜன ஸபை மீட்டும் வற்புறுத்துகிறது. ப்ரிட்டிஷ் குடியேற்றத்தாரின் ஸாம்ராஜ்யக் கொள்கையி னின்றும் இந்தியருக்கு விரோதமான சட்டத்தில் பரிஹாரம் ஏற்பட வேண்டி யிருக்க, அதற்கு மாறாக அங்குள்ள சக்ரவர்த்தியின் ராஜ பக்தி சான்ற இந்திய ப்ரஜைகளின் மீது புதிய உரிமைக் குறைவுகளையும் கஷ்டங்களையும் சுமத்தக்

கூடியனவாக இருப்பது கண்டு இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது. அங்குள்ள பாரதக் குடியேற்றத்தாரின் ராஜ பக்தி ஸம்சயத்துக் கிடமற்றதாதலையும்; முன்பு சண்டை நடந்த காலத்தில் அவர்கள் செய்த உதவியையும் கருதித் தென் ஆபிரிகாவிலுள்ள இந்தியர்களை நியாயத்துடனும் உதாரத்துடனும் நடத்துவதற்குரிய உபாயங்களைத் தேடி நிறைவேற்றும்படி இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன ஸபை மிக ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

மேலும், இந்த விஷயத்தில், போயர் கவர்ன்மெண்டாரிட மிருந்து சிறிது காலத்து முன்பு வெல்லப்பட்ட நாடுகளில் குடியேறி இருக்கும் இந்தியர்களுக்கு விரோதமாக இப்போது ஊர்ஜிதத்திலுள்ள கட்டுப்பாடுகளின் கடினத் தன்மையை நெகிழ்த்து விடுவதற்குரிய ஏற்பாடுகள் விரைவிலே செய்யப்படுமென இந்தியா மந்திரி, தம்மை இதைக் குறித்துப் பார்வையிட வந்த ஒரு ப்ரதிநிதிக் கூட்டத்தாரிடம், சில தினங்களின் முன்னே வாக்குறுதி செய்தது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி யடைகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

செலாவணிச் சட்டம்

(கல்கத்தா 1901 - 17ஆம் கூட்டத்தின் 17ஆம் தீர்மானத்தைக் காண்க)

7. ஏழாந் தீர்மானம்:

ராணுவச் செலவைக் குறைத்தல்

கடந்த வருஷத்தினிடையே ப்ரிட்டிஷ் படைகளின் சம்பளத்தில் செய்யப்பட்ட மிகுதியால் பாரதத் தீர்வைகளின் மீது வருஷந்தோறும் சுமத்தப்படுவதாகிய 7,86,000 பவுன் ஆகிய சாசுவதச் சுமையைப் புதிதாக விதித்ததுபற்றி இந்த ஜன ஸபை மிகவும் பலமாக ஆக்ஷேபிக்கிறது. தேசத்திலுள்ள ப்ரிட்டிஷ் படைகளை மிகவும் விரைவில் அதிகப்படுத்தக்கூடுமென்று குறிப்பிட்டு இந்தியா மந்திரி சிறிது காலத்துக்கு முன் பேசி யிருப்பது கண்டு இந்த ஜன ஸபை திகிலடைகிறது.

சென்ற மூன்று வருஷங்களில் ப்ரிட்டிஷ் படைகள் எவ்விதமான அபாயமுமில்லாமலே தென் ஆபிரிகாவிலும் சீனத்திலும் போருக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதைக் கருதுமிடத்தே இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் ஸேனையை அதிகப்படுத்த வேண்டுமென்ற யோசனை இந்தியாவில் தீர்வை செலுத்துவோருக்கு வெளிப்படையாகவே பெரிய அநீதியாம். எனவே, அந்த யோசனையைக் கைவிட்டுவிட வேண்டும் அல்லது ப்ரிட்டிஷ் பொக்கசத்தின் செலவில் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது. இனி வைக்கக்கூடிய புது ப்ரிட்டிஷ் படைகளுக்கு மாத்திரமே யன்றி ஏற்கெனவே யுள்ள படையிலும் ஒரு பகுதிக்குரிய செலவை ப்ரிட்டிஷ் பொக்கசத்தார் பொறுத்தல் தகுமென்று இந்த ஸபை கருதுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

ஸர்வ கலா சங்கங்களைப் பற்றிய விசாரணைக் கூட்டத்தாரின் சிபார்சுகள்

ஸர்வ கலா ஸங்க விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையால், இரண்டாந்தரக் கலாசாலைகளையும் சட்ட வகுப்புக்களையும் ஒழித்துவிட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதன் ஸம்பந்தமாக மாகாண ராஜாங்கத்தார்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் சிறிது காலத்துக்குமுன் அனுப்பிய சுற்றுத் தரவின் பொருட்டாக இந்த ஜன ஸபை ஆழ்ந்த நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

விசாரணைக் கூட்டத்தாரின் சிபார்சுகளை அனுஸரிப்பதில் பொதுஜன அபிப்பிராயத்தைத் தக்கபடி கருதாமலிருந்து விடுவார்களோ என்ற பயத்தை இது ஒரு பகுதி தணித்து விட்டது. அத் தீர்மானங்கள் உயர்தரக் கல்வியின் பரவுதலைத் தடுத்தும், அதன் எல்லையைக் குறுக்கியும் ஸர்வ கலா ஸங்கங்களால் இப்போதனுபவிக்கப்பட்டு வரும் வரையறைப்பட்ட ஸ்வாதீனத்தையும் அழித்துவிடு மாதலால், அவற்றை அங்கீகாரம் செய்துகொள்வதினின்றும் சென்ற அரை நூற்றாண்டாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முறையாக அனுஸரித்து வரும் வழி மாறிப்போம். மேலும், அவ்

விசாரணைக் கூட்டத்தாரின் பின்வரும் கருத்துடைய தீர்மானங்களை இந்த ஜன ஸபை பலமாகக் கண்டிக்கிறது.

1. முதல்தரக் கலாசாலைகளாக உயர்த்தக்கூடியனவற்றைத் தவிர மற்றப்படி இப்போதுள்ள இரண்டாந்தரக் கலாசாலைகளை யெல்லாம் அழித்துவிடுவதும் புதிய இரண்டாந்தரக் கலாசாலைகளைப் பதிவு செய்யாமல் தடுப்பதும்.

2. வெவ்வேறு கலாசாலைகளிலும் சம்பளக் கீழெல்லை யளவை ஸிண்டிகேட் (ஸங்க நிர்வாஹ) ஸபையார் தீர்மானிக்க வேண்டுமென்பது.

3. இதுவரை வெவ்வேறு ஸர்வ கலா ஸங்கத்தார் வெவ்வேறு வழிகளில் அபிவிருத்தி பெற்று வந்திருப்பதைப் புறக்கணித்து நாடு முழுமையும் ஒரே மாதிரி இறுகலான கல்வி முறை ஏற்படுத்த வேண்டுமென்பது.

4. மாகாணத்துக் கொன்று வீதம் மத்யச் சட்டக் கலாசாலைகள் ஏற்படுத்திச் சட்டக் கல்வியை வரம்பிடல்.

5. பொதுக் கல்வி யதிகாரியின் உத்தரவின் மீதே யன்றி ஜனப் பள்ளிக்கூடங்கள் உயிர்த்திருக்க முடியாதபடி செய்து நடுத்தரக் கல்வியை யெல்லாம் ராஜாங்க அனுமதியைப் பொறுத்து நிற்கும்படி செய்தல்.

6. ஸர்வ கலா ஸங்கத்து "ஸெனேட்", "ஸிண்டிகேட்" (என்ற நியம, நிர்வாஹ) ஸபைகளை ஸர்க்கார் உத்யோகஸ்தரின் வசமாக்கி ஸர்வ கலா ஸங்கத்தையே ராஜாங்கத்தின் ஓர் இலாகாவாகச் செய்தல்.

9. ஒன்பதாந் தீர்மானம்:

ஸ்ரீமான் டாடாவின் பரிசோதனைக் கூடம்

ஸ்ரீமான் டாடா தம் உதார குணத்தால் ஸ்தாபனம் செய்ய விரும்பும் பரிசோதனைக் கூடத்துக்கு கவர்ன்மெண்டார் போதிய உதவி செய்யவேண்டுமென்று இந்த ஜன ஸபை கருதுகிறது. மேலும், தேசத்தில் வெவ்வேறு முக்கிய ஸ்தலங்களில் இதுபோன்ற பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டு மென்று இந்த ஜன ஸபை பலமாக அபிப்பிராயப்படுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:

போலீஸ் திருத்தம்

போலீஸ் விசாரணைக் கூட்டத்திலே அவ் விஷயத்தில் அனுபவமுள்ள இந்தியப் பிரதிநிதிகள் போதிய தொகை சேர்ந்திராமை பற்றியும் இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானத்திலும் அக்ராஸனாதிபதியின் ஆரம்ப உபந்யாஸத்திலும் குறிப்பிட்டபடி விசாரணைக் குரிய விஷயம் மிகவும் வரையறையப் பட்டிருப்பது பற்றியும் இந்த ஜன ஸபை தன் வருத்தத்தை அறிவிக்கிறது. மேலும், வேறு பல சிர்திருத்தங்களினிடையே பின்வருவனவற்றையும் நிறைவேற்றினா லன்றி போலீஸ் இலாகா திறமை யுடைய தாகாதென்ற தன் உறுதியான நம்பிக்கையை இந்த ஜன ஸபை தெரிவிக்கிறது.

1. போலீஸ் உயர்தர உத்யோகங்களில் தக்க கல்விப் பயிற்சி யுடையோரை நியமிக்க வேண்டும்.

2. போலீஸ் உயர்தர உத்யோகங்களில் கல்வி கற்ற இந்தியரை அதிகமாக நியமனம் செய்ய வேண்டும்.

3. இன்ஸ்பெக்டர், சூபரின்டுகளின் ஸ்தானம், சம்பள மிகுதி இவற்றை அதிகப்படுத்தி அந்த இலாகாவுக்குக் கல்வி கற்றவர் வரும்படி தூண்ட வேண்டும்.

4. ஜில்லா அதிகாரி ஒருவனே இப்போது போலீஸ் தலைவனாகவும், நீதித் தலைவனாகவும் இருப்பதை மாற்றி அவனுடைய நீதி யதிகாரங்களை நீக்கி, நீதி பரிபாலன சக்தி அவனுக் கில்லாமல் செய்துவிட வேண்டும்.

11. பதினொன்றாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ காரியங்களைப் பிரித்தல்

முந்திய ஜன ஸபைகளின் கருத்துக் கிணங்கிக் குற்ற நீதியின் பரிபாலனத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்கும் பொருட்டாக விரைவில் கார்யங்கள் தொடங்குமாறு இந்தியா மந்திரியையும் இந்தியா கவர்ன்மெண்டாரையும் இந்த

ஜன ஸபை ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது. இது விரும்பத்தக்க தென்பதை ராஜாங்கத்துக்குச் சார்பானவர்களே பலர் பலமுறை அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். நிர்வாஹ அதிகாரிகளின்மீது நீதி யதிகாரிகளுக்குள்ள நலத்துக்கும் சுத்தத்துக்கும் இடமான - அடக்க லதிகாரத்தைப் பிடுங்கி விடுதல் மட்டுமே யன்றி, நிர்வாஹ அதிகாரிகளுக்கு அதிக அதிகாரந் தருதல் ஸமீப காலச் சட்டத்தின் நோக்கமாக இருப்பது கண்டு இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

தேர்ந்த வக்கீல்களுக்கு நீதி இலாகா உத்யோகங்கள்

ஜில்லா நியாயாதிபதி, துணை நியாயாதிபதி, உதவி நியாயாதிபதி வேலைகளில் - எவ்வித விசேஷச் சட்டப் பயிற்சியு மின்றிப் பொறுப்பான வேலைகளைத் திருப்திகர மாய்ச் செய்ய முடியுமென்ற நம்பிக்கை கொள்ள முடியாமலும், இருக்கிற சிவிலியன்களை அதிகமாய் நியமிக்கும் தற்போதைய முறையானது, வெளி ஜில்லாக்களின் நீதி பரிபாலனம் திறமையாய் நடப்பதற்குப் பெருத்த இடையூறா யிருப்பதால், பயிற்சி பெற்ற வக்கீல்களை மேற்படி உத்தியோகங்களுக்கு நியமிக்க வேண்டுமென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

உப்பு வரி

13. உப்பின்மீது கடுமையாய் இப்போது வரி விதிக்கப்படுவதை காங்கிரஸ் பலமாய்க் கண்டிக்கின்றது. போதியவளவு உப்பு வாங்க முடியாமல் எண்ணிறந்த வியாதிகளுக்கு ஜனங்கள் உள்ளாகி வருவதாலும், வருஷா வருஷம் இந்தியா கவர்ன்மெண்டின் உப்பு வருமானம் ஜாஸ்தியாகி வருவதை யுத்தேசித்தும், உப்பு வரியை 1888க்கு முன் இருந்த விகிதத்துக்குக் குறைத்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்

14. பப்ளிக் சர்விஸ் கமிஷனுடைய சிபார்சுகளினால் அனுஷ்டானத்தில் இத் தேச ஜனங்களுக்கு எள்ளளவும் நன்மை யுண்டாகாமல் இருந்து வருவதைக் குறித்துக் காங்கிரஸ்

விசனிக்கிறது; சிவில், மெடிகல், போலீஸ், இஞ்சினீரிங், தந்தி, கணக்கு ஆகிய எல்லா இலாகா உத்தியோகங்களுக்கும் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சம கால போட்டிப் பரீட்சை வைப்பதற்குச் சாதகமாய் 1893-ம் வருஷம் ஜூன் 2-ந் தேதி காமன்ஸ் சபையில் செய்யப்பட்ட தீர்மானத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வந்தாலன்றி, திருப்தி யேற்படாது. இந்தியா கவர்ன்மெண்டின் தற்போதைய முறைப்படி இருந்துவருவதை காங்கிரஸ் கண்டிக்கின்றது.

ரெயில்வேயில் இந்தியர்கள்

15. ரயில்வே நிர்வாகமானது கவர்ன்மெண்டின் மராமத்து இலாகாவில் ஒரு முக்கியமான பிரிவா யிருந்தும், டிராபிக் இன்ஸ்பெக்டர்கள். ஜில்லா டிராபிக் சூப்ரிண்டுகள், அக்கௌண்டண்டுகள் முதலிய பெரிய உத்தியோகங்கள் இந்தியருக்குக் கொடுக்கப்படுவதே (யில்லை) யென்பதைக் கண்டு காங்கிரஸ் மிகவும் வருத்தப்படுகிறது. ரூபாய் 200 அதற்கு மேற்பட்ட சம்பளமும் ஐரோப்பியருக்குத்தான் கிடைக்கின்றது. இதன் பலனாக அனாவசியமான செலவுகள் அதிகரிக்கின்றன. வரி செலுத்துவோரின் தலையிலேயே அது வந்து விடிகிறது. இந்தியரின் பணத்தைக் கொண்டுதான் ஸ்டேட் ரயில்வேக்கள் போடப்பட்டிருக்கின்றன. இதர ரயில்வேக்களிலும் ஜனங்களின் மீது தான் பாரம் சுமத்தப்படுகிறது. ஆகையால், ஸ்டேட் ரயில்வே நிர்வாகம் நடப்பது சாத்தியமாகும்படி இந்தியரின் குறையைத் தீர்த்து, யோக்கியதை யுள்ள இந்தியருக்கு உயர்பதவிகள் ரயில்வேக்களில் அறிவிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

பருத்திச் சரக்குகளின் மீது வரி

16. விசை நாடாத் தறிகளால் இத் தேசத்திலேயே செய்யப்படும் பருத்தித் துணிகள் எவ்விதத்திலும் லங்காஷயர் சாமான்களோடு போட்டி போடவில்லை யாதலால், 100க்கு 3½ வீதம் அதன்மீது வரி விதிப்பதானது சுதேசிக் கைத்தொழிலுக்குப் பெருத்த இடையூறா யிருப்பதோடு, மகத்தான அநீதமென்று காங்கிரஸ் கருதுகின்றது; கூடிய சீக்கிரத்தில் வரியை எடுத்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் பிரார்த்திக்கின்றது.

வைத்திய இலாகா பிரிவினை

17. பொது ஜனங்களுடைய சௌகரியத்தையும், வைத்திய சாஸ்திர நிபுணர்களின் நன்மையையும் உத்தேசித்து ராணுவ வைத்திய சர்விஸ் என்ற உத்தியோக வர்க்கத்தையும் ஒன்றாயும் பொதுவாயும் செய்து, அதை இரண்டு கிளைகளாகப் பிரித்து, இந்தியத் துருப்புகளுக்கு இந்திய வைத்தியர்களாலே வைத்தியம் செய்யும்படி ஏற்பாடாக வேண்டுமென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

நிர்வாகம் செட்டாயும் திறமையாயும் நடக்க இது மிகவும் அனுகூலமா யிருக்கும். சிவில் மெடிகல் சர்விஸ் என்ற உத்தியோகஸ்தர் வித்தை ஒரு பிரத்தியேகமான ஊழியமாகச் செய்து, ராணுவ சம்பந்தமே பாராமற்படி செய்துவிட வேண்டியதோடு, இந்தியர்களைக் கூடிய வரையில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும். கீழ்த்தர வைத்திய உத்தியோகஸ்தர்கள் நிலைமையை அபிவிருத்தி செய்து குறைகளைத் தீர்த்து வைக்கும்படியும் காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

இந்தியருக்கு ராணுவப் பயிற்சி

"டேட் படை" என்ற உத்தியோகஸ்தர் படை யொன்று சிருஷ்டித்து, பெரிய வம்சத்தின் பிள்ளைகளுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்க லார்டு கர்ஸன் ஏற்பாடு செய்திருப்பதற்கு காங்கிரஸ் நன்றி பாராட்டுகிறது;

இதற்கு முன் நடந்த யுத்தங்களில் இந்தியத் துருப்புகள் அபூர்வமான வேலைகள் செய்திருப்பதாகக் கருதி, ராணுவத்தில் உயர் பதவிகள் இந்தியருக்கும் கொடுக்க வேண்டு மென்று காங்கிரஸ் வற்புறுத்துகிறது. ராணுவக் கல்லூரிகள் ஸ்தாபித்து இந்தியருக்கு ராணுவப் பயிற்சி செய்விக்க வேண்டியதும் அவசியமாகும்.

பிரீவி கவுன்ஸிலில் இந்தியரின் ஆயுதச் சட்டம் ஜூரி முறை முதலியன

முந்திய காங்கிரஸ்களில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானங்களையும் ஆமதாபாத் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளுகிறது:

1. இந்தியாவிலிருந்து போகும் அப்பீல்களை பைசல் செய்வதில் ப்ரீவி கவுன்சிலுக்கு உபயோகமா யிருக்கும் பொருட்டு. தக்க இந்திய வக்கீல்களை அச் சபைக்கு நியமிக்கக் காலம் வந்துள்ளது.

2. ஜாதி வகுப்பு பேதம் பாராட்டாமல் எல்லோருக்கும் ஆயுதம் வைத்துக்கொள்ளத் தாராளமாய் லைசன்ஸ் கிடைப்பது சாத்தியமாகும்படி ஆயுதச் சட்டம் திருத்தி யமைக்கப்பட வேண்டும்.

3. இங்கிலாந்தைப் போல் இந்தியாவிலும் வாலண்டியர்கள் சேர்க்க நாடெங்கும் முயற்சிக்க வேண்டும்.

4. பஞ்சாப்பில் ஒரு ஸப்-கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

5. இந்தியக் கல்வி இலாகாவிலுள்ள உயர்ந்த ஊழியத்திற்கு யோக்கியதை உயர்ந்த இந்தியரும் நியமிக்கப்படுவது சாத்தியமாகும்வண்ணம் வித்யா இலாகாவிற் மறு அமைப்புத் திட்டத்தில் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

6. ஜூரி விசாரணை முறையை எல்லா ஜில்லாக்களிலும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து. ஜூரி அபிப்பிராயத்தை அவசியம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் விதி செய்துவிட வேண்டும்.

7. கிரிமினல் கேசுகளில் எதிரிகள் இந்தியரா யிருந்தால். அக் கேஸ்களை விசாரிக்க நியமிக்கப்படும் ஜூரிகளில் பாதிப் பேராவது இந்தியரா யிருக்க வேண்டும். கி. பு.கோ. சட்ட புத்தகத்தையும் அவ்வாறே திருத்திவிட வேண்டும்.

பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி

காங்கிரஸ் மகா சபைக்கு லண்டனில் ஒரு கிளையும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி யொன்றும், காங்கிரஸின் கொள்கைகள் பரவச் செய்வதற்காக ஒரு பத்திரிகையும் அவசியமாதலால், லண்டனில் இப்போதிருக்கிற "இந்தியா" பத்திரிகையும் பிரிட்டிஷ் கமிட்டியும் இனிமேலும் நடத்திவர வேண்டுமென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

இந்தியாவுக்கு அப் பத்திரிகையில் 4 ஆயிரம் பிரதிகளாவது மொத்தத்தில் அனுப்பப்பட்டு, அதன் தொகை ஈடு செய்து கொள்ளப்பட வேண்டும். பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியார் இதுவரையில் செய்துள்ள வேலைக்கும் இவ் வருஷம் செய்த வேலைக்கும் காங்கிரஸ் நன்றி பாராட்டுகிறது.

பதினெட்டாம் ஜன சபையின் சரித்திரம்
முற்றுப் பெற்றது.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

பத்தொன்பதாம் அத்தியாயம்

1903 – சென்னை பத்தொன்பதாங் கூட்டம்

சென்னை தேனாம்பேட்டை (தேவநாயகன் பேட்டை) வஸந்தத் தோட்டத்தில் பாரத ஜன ஸபையின் பத்தொன்பதாங் கூட்டம் 1903 டிஸம்பர், 28, 29, 30 தேதிகளில் நடைபெற்றது. அதனுடன் இயல்பெற்ற தொழிற் காட்சியை 26-ம் தேதி யன்று மைஸூர் மஹாராஜா திறந்தனர். இந்த ஸபைக்கு முதல் முதலாக பர்மா ஜன ஸபை வட்டத்துப் பிரதிநிதி யொருவர் வந்திருந்தனர்.

இந்த வருஷத்துக் கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளின் மொத்தத் தொகை 538. நவாப் ஸய்யது மஹம்மது பஹதூர் உபசரணத் தலைவர். ஸபாநாயகர் லால்மோஹன் கோஷ் என்ற வயது முதிர்ந்த கல்கத்தா "பாரிஸ்டர்." இவர் இங்கிலாந்தில் காமன்ஸ் ஸபையில் ஸ்தானம் பெற முயன்று பயனடையாமல் இந்தியாவுக்கு வந்து வக்கீல் தொழிலில் பெருங் கீர்த்தி ஸம்பாதித்திருந்தார்.

ஸபாநாயகர் செய்த பிரஸங்கத்தின் ஸாரம்

ஸ்ரீமான் லால்மோஹன் கோஷ் சொல்லுகிறார்:

சில வருஷங்களாக நான் ராஜரீகக் கிளர்ச்சியில் ஸம்பந்தப் படாமல் விலகுகின்றேன். இதன் பொருட்டாகவே என்னை இந்த ஸபையில் ஸபாநாயகராக இருக்கும்படி வேண்டிக் கொள்ளும்போது பிரோஸ்ஷா மேத்தா எனக்கு "ராஜரீக யோகி" என்று பட்டஞ் சூட்டினார். அதாவது, ராஜாங்க விஷயம்

ஸம்பந்தப்பட்ட மட்டில் நான் ஒன்றும் செய்யாமல் சும்மா தூங்கிக் கொண்டிருந்தே னென்று அவர் கருதுகிறார். எனிலும் ராஜரீக விஷயங்களைப் பற்றி நான் யோசனை செய்யாம லிருக்கவில்லை.

இத்தனை காலமும் நான் பேச்சிலே செலவிட்டிருந்தால் எனக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அனுபவத்தைக் காட்டிலும் இப்போது நீண்ட காலத்துத் தனிமையான சிந்தனையால் மெல்ல மெல்லப் பக்குவ மடைந்திருக்கும் எனது ராஜரீகக் கொள்கைகள் தேசத்தாருக்கு அதிகப் பயன்படக் கூடுமென்று நினைக்கிறேன்.

(மொழிபெயர்த்தவர் குறிப்பு: ராஜரீகக் கிளர்ச்சியில் சேர்ந்து பழகி யிருந்தால் இவருடைய அனுபவம் இன்னும் அதிகப் பக்குவ மடைந்திருக்கு மென்பதில் ஆக்ஷேபமில்லை. பொது விஷயங்களில் கலக்காமல் விலகி யிருந்து ஆலோசனை செய்வோருக்கு ராஜாங்க ஞானம் அதிகமாக ஏற்படு மென்ற கொள்கை முழு உண்மை யன்று.)

லால்மோஹன் கோஷ் சொல்லுகிறார்:

தெய்வ அருள்

ப்ரிட்டிஷ் ஆட்சி பரவி வருதல் தெய்வத்தின் அருளென்றும், அதனால் தனக்கு நன்மை விளைந்திருப்பதாக ஒவ்வொருவனும் அங்கீகாரம் செய்ய வேண்டு மென்றும் லார்ட் கர்ஸன் அபிப்பிராயப்படுகிறார். ப்ரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் நாம் உண்மையான பக்தி செலுத்துகிறோம்.

எனிலும், ராஜாங்கத்தாரின் செய்கைகளைக் கண்டித்துப் பேசும் உரிமை நமக்குண்டென்பதில் ஐயமில்லை யாதலால் பின்வரும் கேள்வி கேட்கிறோம்.

பல வருஷங்களுக்கு முன்னே நம்முடைய உள் நாட்டுக் கைத்தொழில்களை யெல்லாம் நாசப்படுத்திய ப்ரிட்டிஷ் ராஜ நீதி, இப்போதுகூடச் சிறிது காலத்துக்கு முன் 'லிபரல்' கக்ஷியின் அதிகாரத்தின்போது வெட்க மின்றி நம்முடைய பஞ்சுத் துணிகளின் மீது சுங்கத் தீர்வை விதித்தது ப்ரிட்டிஷ் ராஜ நீதி. நமது தேசத்திலிருந்து சுமார் 200 லக்ஷம் பவுன் வற்றடித்துக் கொண்டு போவது ப்ரிட்டிஷ் ராஜ நீதி.

மேலும், நம்முடைய விவசாயிகளின் மீது அபாரமான தீர்வைகள் விதித்து, இந் நாட்டில் இதுவரை எக்காலத்திலும் இல்லாதபடி மிகக் கொடிய பஞ்சங்கள் இத்தனை அடிக்கடி தோன்றும்படி செய்தது ப்ரிட்டிஷ் ராஜ நீதி. இத்தகைய ராஜநீதி யொன்றை நமக்கு வகுத்துக் கொடுத்த தெய்வம் அருளினால் அங்ஙனம் செய்ததாகச் சொல்லுதல் நம்பத்தக்க வார்த்தை யன்று.

டில்லி தர்பார்

சென்ற வருஷத்தில் லார்ட் கர்ஸன் டில்லி தர்பார் நடத்தினார். அளவிறந்த பணம் சேதமாய் விட்டது. ஸ்வதேச ராஜாக்களுக்கு இதுவரை ப்ரிட்டிஷ் ஆட்சியின் கீழே எக்காலத்திலும் செய்யப்படாத அவமானங்கள் அப்போது செய்யப்பட்டன.

தர்பாருக்கு வந்த இந்தியர்கள் மீண்டும் தத்தம் ஊர்களுக்குச் செல்லும்போது தர்பாரில் தமக்கும் ஐரோப்பியருக்கு மிடையே செய்யப்பட்ட கொடிய பக்ஷபாதங்களை நினைத்து நினைத்து மனங் கொதித்துக் கொண்டு போயினர்.

ஸ்வராஜ்யம்

நமக்கு ஸ்வராஜ்யம் இல்லாம லிருப்பதே இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் காரணம். நம் இஷ்டப்படி மந்திரிகளை மாற்றும் அதிகாரம் நமக்கில்லை.

நாட்டிலே பஞ்சமும் கொள்ளை நோயும் பரவிக் கிடக்கையிலே இப்படி யொரு வீண் டம்பத்தில் பொருள் அளவின்றி நாசப்படுத்தும் ஆட்சி இங்கிலாந்திலேனும், பிரான்ஸிலேனும் அமெரிக்காவிலேனும் ஸாத்யப்படுமென்று நினைக்கிறீர்களா? தேச முழுதிலும் பத்திரிகைகளிலும் ப்ரஸங்க மேடைகளிலும் ஜனத் தலைவர்கள் அத்தனை பேரும் ஒரே முழக்கமாகத் தடுத்துக் கூறிய வார்த்தைகளை யெல்லாம் புறக்கணித்து அந்த வீண் கோலம் நடத்தப்பட்டது.

பிறர் பணத்தைக் கணக்குக் கேட்பார் யாருமில்லாத இடத்தில் வாரி வாரிச் செலவிடுதல் சுலபமன்றோ? இந்த தர்பாரில் வீண் டம்பங்களில் அழிந்த தொகையில் ஒரு பகுதியேனும் பஞ்ச

நிவர்த்தி விஷயத்தில் செலவிட்டிருந்தால் கோடிக்கணக்கான ஆணும் பெண்ணும் குழந்தைகளும் பசியால் சாகாமல் உயிர் தப்பி யிருப்பார்க ளன்றோ? ஆங்கிலேய ராஜ்யத்தால் நாட்டில் அராஜகக் குழப்பங்கள் நீங்கி சமாதானம் ஏற்பட்டது மெய்தான்.

(மொழிபெயர்த்தவர் குறிப்பு: உலகம் தொடங்கியது முதல் நேற்று ஆங்கிலேயர் இங்கே வியாபாரக் கூட்டத்தாராய்த் துணியும் கண்ணாடியும் சாராயமும் விற்க வந்த காலம் வரை எப்போதுமே இந்த நாட்டில் உட்கலகங்களும் போர்களும் நடந்துவந்ததாக அர்த்தமில்லை. ஆங்கிலேயர் முதலிய வெளிநாட்டார் இங்கு வந்து குடியேறிய பின்புதான் பெரும் பகுதி வெளி நாட்டாரின் சூழ்ச்சிகளால் உட்குழப்பங்கள் மிகுதிப்பட்டன. அதை நீக்கும்படி தேசத்தார் ஆங்கிலேயரின் ஆட்சியேற்பட இடங்கொடுத்தார்கள்.)

எனிலும், கோடிக்கணக்கான ஜனங்கள் பேரிலும் குழப்பத்திலும் மடிந்தால் நமக்கென்ன? பஞ்சத்திலும் பசியிலும் மடிந்தாலென்ன? இரண்டும் நமக்கொன்று போலவேயாம்.

ராணுவச் செலவு மிதமிஞ்சி நடந்து வருகிறது. உள் நாட்டில் கிரமமான நீதி நடக்கவில்லை. ஒரு இந்தியனை ஒரு ஐரோப்பியன் அடித்தால் அதற்கு நீதியில் பரிஹாரம் கிடைக்குமென்று நம்ப இடமில்லாம லிருக்கிறது. இதை பார்லிமெண்ட் ஸபையார் கவனிக்க வேண்டும்.

ரகஸ்யச் சிறையோலைகள்

ப்ரான்ஸ் தேசத்தில் ராஜாங்கப் புரட்சி நடக்குமுன்னே கொடுங்கோலரசு தலைதூக்கிக் கூத்தாடிக் கொண்டிருந்த காலத்தில் "லேத்தர் தே களே" (அதாவது - முத்திரை யோலைகள் - ஜனங்களை நீதி விசாரணை யில்லாமல் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அடைத்து வைக்க அனுமதி கொடுக்கும் ராஜாங்கச் சிறையோலைகள்) பிறப்பிக்கும் வழக்க மிருந்தது.

1789-ல் ப்ரான்ஸ் தேசத்தார் அவ் வழக்கத்தை ஒழித்து விட்டனர். இந்தியாவிலோ அவ் வழக்கம் புதிதாக 1818-ல் ஏற்படுத்தப்பட்டு இன்று வரை அனுஷ்டானத்திலிருந்து வருகிறது.

வேறு சில கொடுமைச் சட்டங்கள்

மேலும், மிகக் கொடிதான ராஜத் துரோகச் சட்ட மொன்று செய்து அதிகாரிகள் தேசாபிமானிகளைச் சிறைப்படுத்துகிறார்கள். அங்ஙனம் சிறைப்பட்ட தேசபக்தர்களில் ஒருவர் கல்கத்தா ஜன ஸபைக் கூட்டத்துக்கு வந்திருந்த காலத்தில் அவருக்கு ஜனங்கள் செய்த உபசாரத்தினின்றும் அவர் குற்றவாளி யில்லை யென்பதும், அநியாயமாகக் கொடுங்கோன்மைக் குட்படுத்தப்பட்ட தேசபக்த மஹாவீர னென்பதுமே ஜனங்களுடைய கருத்தாகு மென்பது தெற்றெனப் புலப்பட்டது.

நாகரீக தேசங்களி லெல்லாம் ஒருவன் மீது குற்றம் சாற்றினால் அதை ருஜுப்படுத்த வேண்டிய கடமை சாற்றுவோரைச் சேரும். அங்ஙனமில்லாது குற்றம் சாற்றப்பட்டவனே அக் குற்றம் நடைபெறவில்லை யென்பதை ருஜுப்படுத்த வேண்டுமென்றும், அவன் அதை ருஜுப்படுத்த முடியாவிட்டால் அக் குற்றத்தை நிலைநிறுத்த வேறு ஸாக்ஷியம் வேண்டியதில்லை யென்றும் கொள்ளுதல் மிருகத்தனம்.

இல்லாத அநாகரீகக் கொள்கை யுடைய உத்தியோக ரகஸ்யங்களின் மசோதா என்ப தொரு மசோதாவை நமக்கிடையே வெடிகுண்டு வீசுவதுபோல் லார்ட் கர்ஸன் வீசி யிருக்கிறார். கல்வி ஸ்தலங்களை உத்தியோகஸ்தருக்கு அடிமைப்படுத்தும்படி யான ஸர்வ கலா ஸங்க மசோதாவும் நமது பலமான ஆக்ஷேபத்துக் குரியதேயாம். சென்னை முனிசிபல் சட்டமும் வெறுத்தற் குரியது.

முடிவுரை

ஆரம்பக் கல்வியை நாடு முழுதிலும் இனாமாகவும் கட்டாய மாகவும் செய்துவிட வேண்டும். ஆங்கிலேயரின் வியாபார முறையில் அழிந்துபோன சுதேசக் கைத்தொழில்களை மீள உயர்ப்பித்து வளர்க்க வேண்டும். ஹிந்து மகம்மதியர்களுக் கிடையே இன்னும் பலமான ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும். ஆங்கிலேயர் எக்காலத்திலும் நமது சொந்த நாட்டின் ஆட்சியில் விடுதலைக்குரிய வழிகளை மேன்மேலும் நாடி வந்திருக்கிறார்கள்.

எனிலும் இந்தியாவில் அவர்களுடைய ஆட்சி விடுதலைக்குச் சார்பாக நடைபெறவில்லை யென்பதைக் காட்டி ஆங்கிலேயக் கவி யொருவர் பின்வருமாறு பாடுகிறார்:

"விடுதலையிற் பிறந்த ப்ரித்தானியர் தாம்
விரிகடல் கடந்துபோய்ப் பாரத நாட்டில்
விடுதலையும் அமைதியும் வெல்லுவித்தனரா?
இல்லை; யில்லை. உரோம நாட்டாரினும்
பேரவாக் கொண்டு ப்ரித்தானியர் தாம்
பாரத நாட்டிற்கு விடுதலை மறுத்தனர்
யூரோப்பாவின் கொடுஞ்செயற் கெல்லாம்
ஆங்கில நாடு வழிகாட்டிற்றே
குற்றச் சாதியார் கூடிச்செல்கையில்
ஆங்கிலநாடு தலைமை பூண்டதுவே"

இங்ஙனம் ஆங்கிலக் கவிராயரே பாடி யிருப்பினும் நாம் இங்கே ஆங்கிலேயர் அநாகரீகமாக நடந்து கொள்ளாமல் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பா ரென்றே நம்புகிறோம்

என்று லால்மோஹன் கோஷ் தம் உபந்நியாசத்தை முடித்தனர்.

19-ம் ஜன சபைக் கூட்டத்தில் நடந்த வேறு விசேஷங்கள்

இந்த ஸபையின் இரண்டாந் தீர்மானம் ராஜாங்க உத்யோகங்களில் உயர்ந்த படிகளினின்றும் ஸ்வதேசிகளை விலக்கி வைத்திருக்கும் அநியாயத்தைக் குறித்தது. இந்தத் தீர்மானத்தை தீன்ஷா எதுல்ஜீ வாச்சா ப்ரேரேபணை செய்து பேசுகையில் இந்த விஷயத்திலே ஸ்வதேசிகள் ஏறக்குறைய அடிமை நிலையிலிருப்பதை எடுத்துக்காட்டினார்.

அத் தீர்மானத்தை ஜீ. சுப்பிரமணிய அய்யர் ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:

"ஜப்பானில் இத்தோ ப்ரபு. ஒக்கூமா ப்ரபு முதலியவர்கள் அடைந்திருக்கும் உந்நத நிலைமையை நமது தேசத்தில் நாம் பெற இடமில்லாமல் போய்விட்டது.

> இந்தியாவை ஆளுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறையாமல் ஆங்கிலேயர் அவசியம் இருக்கவேண்டு மென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.
>
> இதன் பொருளென்ன? நமது நாட்டில் நாம் அடிமைகளாக வாழ்கிறோ மென்பதே இதன் பொருள்."

என்றார்.

உத்தியோக ரகஸ்யங்களின் மசோதாவைப் பற்றிய ஆறாம் தீர்மானத்தை ஸ்ரீ விஷ்ணு நாராயண தார் ப்ரேரேபணை செய்து பேசுகையில்,

> "இதுபோன்ற சட்டங்களால் ப்ரிட்டிஷ் ஆட்சி ருஷிய ஆட்சிக்கு ஸமமாகச் செய்யப்பட்டு வருகிறதென்று நாம் சொல்வதை லார்ட் கர்ஸன் ஆக்ஷேபித்துப் பேசுகிறார்.
>
> ஆனால் ருஷியச் சட்ட புஸ்தகத்திலே, சுத்தமான சட்டம் ஸம்பந்தப்பட்ட வரையில் ஜனங்களின் குடியுரிமைகளுக்கு இத்தனை பெருங் கேடு விளைவிக்கத் தகுந்த கொடுமைச் சட்டமில்லை யென்பது தெரியாதபடி ருஷிய ஆட்சி விஷயத்தில் லார்ட் கர்சன் அத்தனை தூரம் அறியாமை கொண்டிருப்பது பற்றி ஆச்சர்யப்படுகிறேன்"

என்றார்.

ஜன சபையின் பெரிய உபகாரிகளில் ஒருவராக இருந்த ராமநாதபுரம் ராஜா இறந்து போனதைக் குறித்து ஜன சபையில் வருத்தந் தெரிவிக்கப்பட்டதும், ஏ.ஒ. ஹ்யூம், தீ.எ. வாச்சா இவ்விருவருடன் துணைக் கார்யதர்சியாக கோபால க்ருஷ்ண கோகலே சேர்க்கப்பட்டதும் இவ் வருஷத்தில் குறிப்பிடத்தக்க வேறு விசேஷங்களாகும்.

தீர்மானங்கள்

1903 - சென்னை - 19-ம் ஜன சபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1. முதல் தீர்மானம்:

துக்கம்

ஆல்டெர்லி(யூர்) ஸ்டான்லி ப்ரபு என்பவரும், *W.S.* கெய்னும் இறந்து போனது நிமித்தமாக இந்தியாவுக்கு நேரிட்ட ஆழ்ந்த தீர்க்க முடியாத நஷ்டத்தைக் கருதி இந்த ஜன சபை வருத்தப்படுகிறது. அவர்கள் செய்த உபகாரங்களை இந் நாட்டார் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள்.

மேலும் ஜன சபைக்கு எப்போதும் விசேஷ உபகாரியாக விளங்கிய ராமநாதபுரத்து ராஜா இறந்து போனது பற்றி இந்த சபை துக்கப்படுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

ராஜாங்க உத்தியோகங்கள்

முந்திய ஜன சபைக் கூட்டங்களின் கருத்தைத் தழுவி இந்த ஜன சபையும் உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் வேலைகளால் இந்த தேசத்தாருக்கு யாதொரு நற் பயனுமில்லாமல் போனது பற்றி மிகவும் வருத்தப்படுகிறது.

ஸர்க்கார் உத்தியோகங்களில் உயர்ந்த ஸ்தானங்களில் இந்த தேசத்தாரை அதிகமாகவும் விரிவாகவும் நியமிக்க வேண்டுமென்ற பிரார்த்தனைக்கு அக் கூட்டத்தாரின் சிபார்சுகள் பரிபூரண நியாயம் செலுத்தவில்லை.

அப்படி யிருக்க, அவற்றைக்கூட ராஜாங்கத்தார் முழுதும் நிறைவேற்றவில்லை. (அந்த சிபாரிசுகள் செய்யப்பட்டபின்) இடைக்கிடையே ஸ்ருஷ்டி செய்யப்பட்ட புதிய உத்யோகங் களிலும் உப்பு, அபினி, போலீஸ், வைத்தியம், இந்தியா கவர்ன்மெண்டாரின் நில அளவை இலாகா, கவர்ன்மென்ட் தந்தி இலாகா, இந்தோ-ப்ரிட்டிஷ் தந்தி இலாகா, காசு முத்திரை, தபால் இலாகா, அன்ய இலாகா முதலிய விசேஷ இலாகாக்களிலும் இந்தியரை நியமிக்க வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றாம லிருப்பது கண்டு இந்த ஸபை வருந்துகிறது.

2. ரயில்வே பரிபாலனத்துக்குப் பொறுப்பாளிகளான இலாகா அதிபதிகள் முதலிய அதிகாரிகள் பொது உத்தியோகங்களிலும் ரயில்வே உத்தியோகங்களிலும் இந்தியர்கள் சேராதபடி ஸமீபத்தில் தடை செய்திருக்கும் முறைமை ராஜாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் விரோதமாகுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

3. ராஜாங்கத்தார் இப்போது நடத்தி வரும் உத்யோக நியமன முறையால் இந் நாட்டுக்கு நேரும் பொருள் வற்றுதலை நிறுத்தும் பொருட்டாகவும், ராஜ்ய பரிபாலனத்தில் செட்டு வழியை அனுஷ்டிக்கும் பொருட்டாகவும் எல்லா உத்தியோக இலாகாக்களிலும் ஸ்வதேசிகளைத் தாராளமாக நியமிக்கும் முறையை மிகவும் அவஸரமாகக் கைக்கொள்ளும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

நில வரித் திட்டம்

ஒவ்வொரு முறை புதுத் திட்டம் போடுகையிலும் நில வரி விஹிதத்தை உயர்த்தும் வழக்கத்தைக் கண்டு இந்த ஜன ஸபை மன நடுங்குகிறது.

இத்தனை மிகுதியாகவும் அடுத்தடுத்தும் தீர்வைத் திட்டத்தை உயர்த்துவதினின்றும் தேசத்து விவசாயிகளின் வறுமை மிகுதிப்படுவது மன்றி மாசூல் குறைவுகளும் பஞ்சங்களும் நேரும்போது அவற்றைத் தாங்கும் திறமை ஜனங்களுக்கு மேன்மேலும் குறைந்து வருகிறது.

ஆதலால், தேசத்தில் சாசுவதத் திட்டம் ஏற்படுத்துவதற்குப் பக்குவமாக இருக்கும் பகுதிகளில், 1862, 1867-ம் வருஷங்களில் இந்தியா மந்திரியின் அறிக்கைகளில் கூறியபடி, அதனை ஏற்படுத்த வேண்டுமென்றும், சாசுவதத் திட்டத்தை வழக்கப்படுத்த இன்னும் தகாதனவாக ராஜாங்கத்தாரால் கருதப்படும் ப்ரதேசங்களில் நீண்ட காலத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், மிகைத்திட்டங்கள் செய்யாதபடி நீதிச் சட்ட தடைகள் விதிக்க வேண்டு மென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:

ப்ரிடிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்களின் நிலைமை தென் ஆப்ரிகா, ஆஸ்த்ரேலியா முதலிய ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வஸிக்கும் இந்தியர்களுடைய கஷ்ட ஸ்திதியையும், குடியேற்ற ராஜாங்கத்தார்களால் அவர்களுக்குச் செய்யப்படும் நிஷ்டூரங்களையும், உரிமைக் குறைவுகளையும் இவற்றால் சக்ரவர்த்தியின் ப்ரஜைகளாகிய அவர்களுக்குள்ள பதவியிலும், ஸ்வதந்திரங்களிலும் ஏற்பட்டிருக்கும் இழிவையும் கருதி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

இந்தியர்களைக் கீழ் நிலையிலுள்ள அநாகரிக ஜாதியாரென்று அந் நாட்டினர் நடத்துவதை இந்த ஸபை கண்டிக்கிறது.

இந்தியர்கள் அந் நாடுகளிலே சென்று வாழ்வதால் அவற்றுக்கும் இந்தியாவுக்கும் விளைந்திருக்கும் பொருளனுகூலங்களையும், அந் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் தொழிற் பெருக்கத்தையும் யோசித்து இந்தியா கவர்ன்மெண்டார் சக்ரவர்த்தியின் ஐரோப்பிய ப்ரஜைகளுக் குள்ளது போலவே ப்ரிட்டிஷ் குடிமையினால் நம்மவர்களுக் குள்ள எல்லா உரிமைகளையும் ஸ்வதந்த்ரங்களையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும்.

இதன் பொருட்டு அவசியமானால், நேர்மையும், நியாயமும், மதிப்புமுள்ள நிபந்தனைகளுடனே யன்றி மற்றப்படி அந் நாட்டினர் இந்தியர்களைத் தருவிக்க முடியாதபடி செய்துவிட வேண்டும்.

சக்ரவர்த்தியின் குடிகள் எல்லாரையும் ஸமமாக நடத்த வேண்டுமென்ற கொள்கையின் உயர்ந்த முக்யத் தன்மையைக் கருதி எல்லா ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் இந்தியர்களுக்கு அந்த (ஸமான) பதவியை உறுதி செய்து கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யும்படி இந்த ஜன ஸபை ப்ரித்தானிய ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

ஸர்வ கலா ஸங்கங்களின் மசோதா

ராஜாங்கத்தாரின் கல்வி முறையைச் சீர்திருத்துவதற்கு ஆழ்ந்த மதியுடன் ஆலோசனை செய்யப்படும் எவ்வித ஏற்பாட்டையும் இந்த ஜன ஸபை நல்வரவு கூறி ஏற்குமெனிலும்; ஸர்வ கலா ஸங்க மசோதா சட்டமாய்விடின் ஸர்வ கலா ஸங்க விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையிலே சிபார்சு செய்யப்பட்டபடி, கல்வியின் பரவுதலைக் குறுக்கி, ஸர்வ கலா ஸங்கங்களின் திறமைக்கும் பயன்படு தன்மைக்கும் ஆதாரமாகிய ஸ்வாதீனத்தை அழித்து, அவற்றை ராஜாங்கத்தின் இலாகாக்களாகச் செய்து முடித்துவிடக் கூடுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

உயர்தரக் கல்வியின் தற்கால முறைமையிலுள்ள குறைவுகளை இந்த மசோதாவின் நியமங்கள் நீக்க மாட்டா வென்றும், கல்விக்கு அதிகப் பணம் பகுத்துக் கொடுத்தலும், உயர்ந்த பயிற்சி யுடைய உபாத்தியாயர்களின் மூலமாகக் கல்வி யளவில் அபிவிருத்தி ஏற்படுத்துதலும் மிக அவஸர மென்றும் இந்த ஜன ஸபை கருதுகிறது.

மேலும், பின்வரும் திருத்தங்கள் செய்யும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது:

1. ஒவ்வொரு ஸர்வ கலா ஸங்கத்துக்கும் தனித்தனியாக வெவ்வேறு சட்டம் சமைக்க வேண்டும்.

2. புராதன ஸர்வ கலா ஸங்கங்களின் விஷயத்தில் ஸாமான்ய ஸபிகர்களின் தொகை 200க்குக் குறையாமல் இருக்க வேண்டும். அவர்களில் குறைந்த பக்ஷம் 80 பேர் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். சாஸ்த்ர வகுப்புகளின் அங்கத்தாரால் 20 பேர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அலஹபாத்து, பஞ்சாப் ஸர்வ கலா ஸங்கங்களின் விஷயத்திலும் இதுபோலவே ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. ஸாமான்ய ஸபிகர்கள் இப்போதிருப்பதுபோலவே ஆயுள் முழுமைக்கும் உத்யோகம் வஹிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவொன்று முழுமையும் கூட்டத்துக்கு வரத் தவறுவோர் (ஸபிக ஸ்தானத்துக்குத் தகுதியற்றவராகச் செய்துவிட வேண்டும்)

4. நிர்வாஹ ஸபைகளில் இத்தனையிலொரு பங்கு கலாசாலைத் தலைவர் இருக்க வேண்டு மென்ற நியமத்தை ஒழித்துவிட வேண்டும்.

5. ஒரு சாஸ்த்ர இலாகாவில் பத்து வருஷ அனுபவமுடைய எல்லாப் பட்டதாரிகளும் வாக்குச் சீட்டுப் போடத்தக்கவர்களாகச் செய்ய வேண்டும்.

6. (ஸர்வ கலா ஸங்கத்தில்) பதிவுக்கு மனுக்கொடுக்கும் கலாசாலை, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருப்பனவும் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் வாஸ ஸ்தானங்கள் ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும், கலாசாலைகளை சாச்வதமாகக் காப்பதற்கு வழிசெய்ய வேண்டு மென்றும் வற்புறுத்தும் நியமத்தை அழித்துவிட வேண்டும்.

7. பதிவு செய்தல், பதிவினின்றும் நீக்குதல் என்ற விஷயங்களில் முடிவான தீர்மானம், இம் மசோதாப்படி ராஜாங்கத்தார் நேரே செய்வதென்ற முறையை விட்டு, இப்போதுள்ளபடியே, ராஜாங்கத்தாரின் அனுமதிக் குட்பட்டு ஸர்வ கலா ஸங்கத்தாரால் செய்யப்பட வேண்டும்.

8. ஸர்க்கார் கல்வி இலாகாவுடனேனும், ஸர்க்கார் உதவி பெற்ற அல்லது பெறாத எந்தக் கலாசாலையுடனேனும் ஸம்பந்தப் படாதவர்களாய், (ஸர்வ கலா ஸங்கத்து நிர்வாஹ ஸபையாரால்) விசேஷமாக நியமிக்கப்பட்ட மனிதர்களாலேயே கலாசாலைகளின் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

9. உபவிதிகளும், நியதிகளும் செய்யும் அதிகாரம் இப்போதுள்ளபடியே ராஜாங்கத்தாரின் அனுமதிக்குட்பட்டு நியம ஸபையாரால் வஹிக்கப்பட வேண்டும்.

6. ஆறாந் தீர்மானம்:

உத்யோக ரஹஸ்யங்களைக் குறித்த மசோதா

இப்போது வைஸ்ராய் சட்டசபையின் ஆலோசனையி விருக்கும் உத்யோக ரஹஸ்யங்களின் மசோதாவை இந்த ஜன ஸபை முற்றிலும் அஸம்மதத்துடன் கணிக்கிறது. (இந்த மசோதா) வேண்டப் படாதது; பொது நலத்துக்கு

விரோதமானது; தனி மனிதனுடைய ஸ்வதந்த்ரத்துக்கு அபாயமானது; பிற்போக்கான முறையைத் தழுவியது. ஆதலால் இதன் செய்கை கடற்படை, தரைப்படை ரஹஸ்யங்களை வெளியிடுவதைப் பற்றிய அளவுக்கு வரையறுக்கப்பட வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:

ராணுவச் செலவு

உள்நாட்டுப் பகைவரிட மிருந்தேனும், பக்கத்து நாடுகளினின்று படை யெடுத்து வரக்கூடிய போர்க் கூட்டத்தாரிட மிருந்தேனும் பாரத தேசத்தைப் பத்திரமாகக் காக்க வேண்டுமென்ற கருத்தின்றிப் (பொதுப் படையாகக்) கீழ்த் திசையில் பிரிட்டிஷ் அதிகாரத்தின் தலைமையைக் காக்கும் பொருட்டுக் கோட்டைகள் கட்டுவதற்கும், ஆயுதங்கள் சேகரிப்பதற்கும் இந்தியாவின் பணம் கோடிக் கணக்காகச் செலவிடப்பட்டு வருகிறது. இக் காரியங்கள் இந்தியாவின் எல்லைக்குப் புறம் நெடுந் தூரம் செல்லும் நோக்கத்தை யுடையன. இவற்றைத் தூண்டும் கொள்கை ஸாம்ராஜ்யக் கொள்கையாம். ஆதலால், ஸ்வதேசப் படை மட்டுமே யன்றி, ப்ரித்தானிய ஸைந்ய முழுதிலும் மூன்றிலொரு பங்கு தொகையுள்ள ப்ரிட்டிஷ் படையும் உட்பட்டதாகிய பாரத ஸேனையின் செலவுகள் மிதமிஞ்சின; அநியாயமாவன. இந்தியாவைப்போலவே இங்கிலாந்தின் ஸம்ரக்ஷணையின் கீழே இங்கிலாந்துக்குக் கடமைப்பட்டு வாழும் குடியேற்ற நாடுகள் சாம்ராஜ்யத்தின் ராணுவச் செலவுக்கு யாதோருதவியும் செய்யவில்லை யென்ற விஷயம் இங்கு கருதத்தக்கது.

2. ராணுவச் செலவில் ஒரு பகுதி ப்ரிட்டிஷ் பொக்கசத்தி லிருந்து கொடுக்க வேண்டும். (1901-கல்கத்தா-17ஆம் கூட்டம் 10ஆம் தீர்மானம்)

3. ப்ரிட்டிஷ் ஸைந்யத்துக்கு ஆள் சேர்ப்பதில் நேரும் அதிகச் செலவுக்காக 786000 பவுன் பாரத நாட்டுத் தீர்வைகளின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதனால் பாரத அனுகூலங்களுக்குக் கேடு விளையு மென்றும், இப்போது

ஆலோசனையிலுள்ள, ஆரம்ப தசையிலுள்ள பல அவஸரமான உள்நாட்டுத் திருத்தங்கள் தடைப்படு மென்றும் வைஸ்ராயும் அவருடைய ஸபையாரும் எதிர்த்துக் கூறியும் கவனியாமல் இக் காரியம் செய்யப்பட்டதை இந்த ஜன ஸபை பலமாகக் கண்டிக்கிறது.

4. இந்தியாவின் ராணுவச் செலவு அநியாயமாக மிதமிஞ்சி ஏறி யிருப்பதற்குப் பெரும் பகுதி 1859ஆம் வருஷத்து ராணுவக் கலப்பே மூல காரணமாக இருந்து வருவதால், அம் முறையை முற்றிலும் ஒழித்து விடுதற்குரிய காலம் வந்து விட்டதென்ற தன் உறுதியான கொள்கையை இந்த ஜன ஸபை மீட்டும் அறிவிக்கிறது.

8. எட்டாந் தீர்மானம்:

உப்புத் தீர்வையும் வருமான வரியும்

உப்புத் தீர்வையைக் குறைத்தும் வருமான வரி விதிக்கக்கூடிய வரும்படிச் சிற்றளவை உயர்த்தியும் ஏழைகளுக்குச் செய்யப்பட்ட பரிஹாரத்தின் பொருட்டாக இந்தியா ராஜாங்கத்தாருக்கு நன்றி செலுத்துவதுடன் உப்புத் தீர்வையை இன்னும் அதிகமாகக் குறைக்கும்படி இந்த ஜன ஸபை இந்தியா ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

வங்காளத்தை உடைத்தது

நெடுங்காலமாக உள்ளவும், ஜன ஒருமையாலும், சட்டத்தாலும், ஸமூஹ ஒருமையாலும், ஆட்சியாலும் ஏற்பட்ட ஸம்பந்தங்களால் நெருங்கிய ஒற்றுமை யுடையனவும் ஆகிய மாகாணப் பகுதிகளை உடைக்கும் இந்தியா ராஜாங்கத்தாரின் முறையைக் கண்டு இந்த ஜன ஸபை கலக்க மடைகிறது. வங்காளத்திலிருந்து டாக்கா, மைமென்ஸிங், சித்தகாங் ஜில்லாக்களையும், சோட்டா நாக்பூர் ஜில்லாவில் சில பகுதிகளையும் பிரித்த செயலையும், சென்னை மாகாணத்தி லிருந்து கஞ்சம் ஜில்லாவையும் கஞ்சம், விஜாகப்பட்டணம் ஜில்லாக்களிலுள்ள காப்பும் பிரதேசங்களையும் பிரிக்க வேண்டு மென்ற யோசனையையும் இந்த ஜன ஸபை கண்டிக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:

சென்னை நகர ஸபை (முனிஸிபல் மசோதா)

இப்போது சென்னை சட்டஸபையின் ஆலோசனையிலுள்ள சென்னை நகர ஸபை மசோதாவின் கொள்கை லார்ட் ரிப்பன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஸ்தல ஸ்வராஜ்யக் கொள்கைகளுக்குப் பொருந்தாதன என்று இந்த ஜன ஸபை அபிப்ராயப்படுகிறது. 24 ஸபிகளுக்குக் குறைந்த தொகை பிரதிநிதிகளாக இருந்தால் நகரத்தில் வரி செலுத்துவோரின் அனுகூலங்கள் தக்கபடி பாதுகாக்கப்பட மாட்டா என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறது. ஸங்கங்களுக்கும், ஸபைகளுக்கும் தெரிந்தெடுக்கும் உரிமை கொடுக்கும் பக்ஷத்தில், நகர சபைக் கார்யங்களில் நேரான ஸம்பந்த முடைய ஸங்கங்களுக்கும் ஸபைகளுக்கும் மாத்திரமே அவ் வுரிமை கொடுக்கப்பட வேண்டும். அவற்றின் தொகை மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டும். சென்னை ரயில்வே ஸங்கமும், துறைமுகக் காப்புச் சங்கமும் அவ் வுரிமை பெறத் தக்கன வல்ல. அவ்வித உரிமை கொடுப்பதாயின் வர்த்தகர் ஸபை, வியாபார ஸங்கம் முதலியவற்றுக்கே தருதல் வேண்டும்; இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

11. பதினொன்றாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு மெம்பர்கள்

வடக்கு டாம்பெத் கிராமத்துக்கு தாதாபாய் நவுரோஜி; வால்த்தாம் ஸ்டலவுக்கு *M.C.* பானர்ஜி; நாட்டின்ஹாமுக்கு ஸர் ஹென்ரி காட்டன்; ராக்ஸ்த*(B)*ர்க்*(G)* ஷைருக்கு ஸர். ஜான் ஜார்டை*(D)*ன்; - இவர்கள் மெம்பராக விரும்பி முற்பட்டிருப்பதை இந்த ஜன ஸபை மிக ஆவலுடன் ஆதரிக்கிறது. இந்தியா ஜனங்களின் நலத்தைக் கருதி மேலே கூறப்பட்டவர்களைப் பார்லிமெண்டுக்கு அனுப்பும்படி இந்த ஜன ஸபை மேற்படி கிராமங்களின் சீட்டாளிகளை வேண்டுகிறது. அவர்கள் மேற்படி கிராமத்தாருக்கு உண்மையான ஸேவை புரிவது மல்லாமல், ப்ரிட்டிஷ்

ஸாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இருப்பினும், ப்ரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு நேரே ப்ரதிநிதி யனுப்பும் உரிமை யற்ற (பாரத) தேசத்து ஜனங்களுக்கும் ஒருவாறு ப்ரதிநிதிகளாவர்.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:

ஐக்ய நாணய ஸங்கங்களின் மசோதா

வைஸ்ராய் சட்டஸபையில் ஐக்கிய நாணய ஸங்கங்களின் மசோதா வொன்று கொணர்ந்திருப்பது பற்றி இந்த ஜன ஸபை இந்தியா கவர்ன்மெண்டாருக்கு நன்றி தெரிவிக்கிறது. ராஜாங்கத்தார் கருதும் நோக்கங்கள் நிறைவேறத்தக்க வண்ணமாக அச் சட்டம் சமைக்கப்படுமென இந்த ஸபை நம்புகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம்:

பல திரட்டு

(1) முதல் (10) வரை; (1902-ஆமதாபாத்-18ஆம் கூட்டம் 19ஆம் தீர்மானம் (1) முதல் (10) வரை காண்க.)

(11) நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்துவிட வேண்டும். எவ்விடத்தும் அவ் விரண்டதிகாரங்களும் ஒரே உத்யோகஸ்தனிடம் சேர்ந்திருக்கக் கூடாது.

(12) இந்தியா ராஜாங்க உத்யோகங்களின் குடியாட்சி வகுப்புக்க ளனைத்திற்கு முரிய பரீக்ஷைக ளெல்லாம் இப்போது இங்கிலாந்தில் மாத்திரமே நடைபெறுவதை மாற்றி இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலத்தில் நடத்த வேண்டும்.

(13) இங்கிலாந்திலுள்ள பஞ்ச நிவர்த்தி ஸங்கத்தின் ஸபிகர்கள் இந்தியா மந்திரிக்குச் செய்த விண்ணப்பத்தில் வேண்டியபடி பாரதக் குடியானவரின் பொருள் நிலையைக் குறித்த விசாரணை யேற்படுத்த வேண்டும்.

14. பதினான்காந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் கமிட்டி

1. ப்ரிட்டிஷ் கமிட்டிக்கும், ஸர் வில்லியம் வெடர்பர்னுக்கும் நன்றி. *(1902-ஆமதாபாத்-18ஆம் கூட்டம் - 21ஆம் தீர்மானம்)*

2. ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுக்கு 10500 ரூபாய் பகுத்துக் கொடுக்க வேண்டும். இதற்காக வெவ்வேறு ஜன ஸபை வட்டத்தாரும் தத்தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் தொகை செலுத்த வேண்டும்.

3. தத்தம் பெயர்களுடன் காட்டப்பட்டிருக்கும் வட்டங்களுக்குப் பின்வரும் கனவான்கள் காரியதர்சிகளாய் அவ்வவ் வட்டங்கள் செலுத்த வேண்டிய தொகைக்குப் பொறுப்பு மேற்கொண்டு ஆறு மாதங்களுக் கொரு முறை இரண்டு தவணைகளில் முன்பணமாகத் தொகை செலுத்தும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது. (பெயர்கள் இங்கு குறிப்பிடவில்லை.)

15. பதினைந்தாந் தீர்மானம்:

பொதுக் கார்யதர்சிகள்

(1902-ஆமதாபாத்-18ஆம் கூட்டம்; 22ஆம் தீர்மானம்)

16. பதினாறாந் தீர்மானம்

அடுத்த கூட்டம்

பாரத ஜன சபையின் இருபதாங் கூட்டம் பம்பாயில் 1904 கிறிஸ்மஸ் தினத்துக் கப்பால் பின்னே நிச்சயிக்கப்படும் தேதியில் கூடுமாறு இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

பத்தொன்பதாம் ஜன சபையின் தீர்மானங்கள் முற்றுப் பெற்றன.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

❖

ஜன சபையின் சரித்திரம்

இருபதாம் அத்தியாயம்

1904 – பம்பாய் இருபதாங் கூட்டம்

பம்பாய் நகரத்தில் இளம்பிறை ஸ்தலம் என்ற மைதானத்தில் அழகிய தொரு பெரிய பந்தரின்கண்ணே, 1904 டிஸம்பர் 26, 27, 28 தேதிகளில் பாரத ஜன ஸபையின் இருபதாங் கூட்டம் நடைபெற்றது. லார்ட் கர்ஸனுடைய அநியாய ஆட்சியால் நாடு முழுமையும் ஜனங்களுக்குக் கோபம் மிஞ்சிப் போயிருந்தது.

ஜன ஸபையின் உத்யோக அறிக்கை சொல்லுகிறது:

> "ஜனங்களுடைய கோபம் அதிகமாய் விட்டது..... கொடுங் கோன்மைச் சட்டங்கள் தொடர்ச்சியாகப் பொழியப்பட்டன.... ஜனங்கள் மிக உக்ரத்துடன் எதிர்த்தும் பயன்படவில்லை.... எனவே 1904ஆம் வருஷத்துக் கூட்டம் மிகவும் முக்யமாகக் கணிக்கப்பட்டது."

1010 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர். இங்கிலாந்திலிருந்து ஜன ஸபைக்குத் தலைமை வஹிக்கும் பொருட்டாக ஸர் ஹென்ரி காட்டன் வந்தார். இவர் ஸர்க்கார் உத்யோகத்தில் பெரிய பதவிகள் வஹித்து உபகாரச் சம்பளம் பெற்று விலகிய பின்பு ஸ்வதேசியக் கக்ஷிக்குச் சார்பாய்ப் பல விதங்களில் உழைத்து வந்தவர். "புதிய இந்தியா" என்றொரு புஸ்தகம் எழுதி யிருக்கிறார். அதில் ஆங்கிலேய ஆட்சியின் தற்கால முறையிலுள்ள குற்றங் குறைகளை நன்றாக எடுத்துக்காட்டி, ஸ்வராஜ்யம் அவசிய மென்பதற்குரிய பல காரணங்களையும் தெளிவாக உணர்த்தி யிருக்கிறார்.

இவருடன் இங்கிலாந்திலிருந்து ப்ரிட்டிஷ் ஸமிதியின் தலைவராகிய ஸர் வில்லியம் வெடர்பர்னும், பார்லிமென்ட் மெம்பரான ஸாமுயூல் ஸ்மித்தும் வந்திருந்தனர்.

உபசார ஸமிதியின் தலைமை பிரோஸ்ஷா மேத்தாவினால் வாதிக்கப்பட்டது.

ஸபாநாயகராகிய ஸர் ஹென்ரி காட்டன் செய்த உபந்யாசத்தின் ஸாரம் பின்வருமாறு:

ஸர் ஹென்ரி காட்டன் சொன்னார்:

ஐர்லாந்து தேசத்தில் ராஜ்யத் திருத்தங்கள் ஏற்படுவதற்கு உள் நாட்டுக் கிளர்ச்சியே அஸ்திவாரம். ஆனால், அது மாத்திரம் தனியாகப் பயன்படவில்லை.

இங்கிலாந்திலும் ஐரிஷ் திருத்தத்துக்கு அனுகூலமான பெரிய கக்ஷி யொன்றேற்பட்டு 'லிபரல்' கக்ஷித் தலைவர் அவ் விஷயத்தில் சிரத்தை செலுத்தத் தொடங்கிய பின்னரே, ஐர்லாந்துக்குச் சில அனுகூலங்கள் கிடைத்தன. இந்தியாவுக்கும் அப்படியேதான் நடக்க வேண்டும். இங்கிலாந்தில் உங்களுக்கனுகூலமான கக்ஷி பலப்படுவதற்குரிய காரியங்கள் செய்தல் அவசரம்.

1850-ம் வருஷத்தில் மௌண்ட் ஸ்டுவர்ட் எல்பி(f)ன் ஸ்டோன் பின்வருமாறு கூறினர்:

"சிறு தொகை யுள்ள அன்னியர் தம்முடன் மதம், கொள்கை, ஆசாரம் அனைத்திலும் வேறுபட்ட ஜனங்கள் வாழும் பெரிய தேசமொன்றில் எல்லா ஆட்சி வகைகளிலும் தலைமை பூண்டிருத்தல் ஸாத்யப்படாது. இவ்வித ஆட்சி நீடித்து நிற்குமென் றெண்ண இடமில்லை"

யென்றார்.

இவ் வார்த்தைகள் உண்மை யென்பது ஒவ்வொரு விவேகிக்கும் எளிதில் விளங்கத் தக்க விஷயம். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள பந்தம் நெடுங்காலம் நீடித்திருக்கலாம். ஆனால், இப்போதுள்ள அதிகாரிகளின் ஆட்சிமுறை நிற்காது. லார்டு க்ரோமரும் இப்படியே சொல்லுகிறார்:

"கல்வி கற்ற இந்தியர்களின் உள்ளத்தில் நிகழும் மாறுதல்களுக்குத் தக்கபடி நம்முடைய அரசியலை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் நம்மாலே படைக்கப்பட்டு நாம் ஆளத் திறமில்லாது போன சக்திகளால் நம் அரசாட்சி சிதறடிக்கப்படும்"

என்றார்.

ஸ்வராஜ்யம்

பாரத வாசிகளே, மனஞ் சோர்ந்து விடாதீர். ராஜாங்கத்தார் செய்வதை யெல்லாம் எதிர்க்காமல் பொறுத்துக் கொண்டிருப்பதே தகுமென் றெண்ணி விடாதீர். கீழ்த் திசையிலுள்ள ஸ்வாதீன ஜாதியாருக்கு ஸமமான நிலை இந்தியருக்கும் கிடைக்க வேண்டும். குடியேற்ற நாடுகளுக் கெல்லாம் ஸ்வராஜ்யத்தையே மூல பந்தமாக இங்கிலாந்து கருதுகிறது. இந்தியாவுக்கும் அங்ஙனமே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டும்.

பரிபூரண ஸ்வாதீன முடைய நாடுகள் பல தம்முடைய பொது விருப்பங்களாலும் தன்னலத்தைக் கருதியும் ஒரு பெரிய மத்ய தேசத்துடன் பிணைப்பட்டு அதனால் தம்முன் உறவெய்தி நிற்பதே நமது ஸாம்ராஜ்யத்தின் கொள்கை. விடுதலை கொண்ட ஐக்ய நாடுகளின் தொகுப்பே பாரத தேசத்தின் ஆதர்சம், அமெரிகா ஐக்ய நாடுகள் (யுனைடெட் ஸ்டேட்ஸ்) இருப்பதுபோல் பாரத ஐக்ய நாடுகள் ஏற்பட வேண்டும். வருஷந்தோறும் இந் நாட்டினின்றும் ஆங்கிலேயர் மீளாத பெருந் தொகையை வற்றடித்துக் கொண்டு செல்லுகிறார்கள். அதிலிருந்தே இக் கொடிய வறுமை இந் நாட்டில் உண்டாயிற்று. தேசத்து கீழ் வியாபாரங்க ளெல்லாம் ஆங்கிலேய முதலாளிகளுக்கும் கீழ்பட்டுப் போயின.

முடிவுரை

ஐரோப்பிய உத்யோகஸ்தரை நீக்கி இந்திய உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டும். வங்காளத்தை இரண்டு துண்டாக வெட்டியது பெரும் பேதைமை. பெரிய அநீதி. தென் ஆப்ரிகாவில் இந்தியர் நடத்தப்பட்டு வரும் மாதிரியோ கொடிய மாதிரி. எதற்கும் நீங்கள்

அதைர்யப்பட வேண்டாம். மூச்சை இறுகக் கட்டி தைர்யத்துடனும் பக்தியுடனும் உழைப்பீர்களானால் ஸ்வராஜ்யம் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம்"

என்று ஸர் ஹென்ரி காட்டன் சொன்னார்.

இருபதாம் ஜன ஸபைக் கூட்டத்தில் நடந்த விசேஷச் செய்திகள்

ஆமதாபாதில் ப்ரசுரம் செய்யப்பட்டு வரும் "குஜாரத்தி" பத்திராதிபர் தேஸாய் என்பவர் தாம் ஜன ஸபைத் தொழிலுக்கென்று சேகரித்த ரூபாய் நாலாயிரத்தை (4000)யும் அழகிய வெள்ளித் தட்டொன்றையும் ஸர் ஹென்ரி காட்டனிடம் கொடுத்தார்.

இந்த ஸபையில் முதல் தீர்மானம் இந்தியர்களுக்கு அதிகமான ராஜாங்க உத்யோகங்கள் கொடுக்க வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்தது;

இதை ஸ்ரீமான் ஸுரேந்த்ரநாத் பானர்ஜி பிரேரணை செய்து பேசுமிடத்தே, "ஐரோப்பியருக்கு ஆசியக்காரர் இளைத்தவர்க ளென்று நினைக்கிறீர்களா? ஒருநாளுமில்லை. ஜப்பானை த்ருஷ்டாந்தமாகக் கவனியுங்கள்" என்றார்.

மேலும், அந்த நாட்களில் பெரிய அக்நித் தேசாபிமானியாகக் கருதப்பட்ட ஸுரேந்த்ரநாத் பானர்ஜீ "உயர்தர உத்யோகங்களில் 100க்கு 14 அல்லது 17 தான் நமக்குக் கிடைக்கின்றன. இவ்வளவுக்கும் தேசம் நம்முடையது. பணம் நமது. ஜனங்க ளெல்லாரும் நம்மவர்" என்று கூறிப் பரிதாபப்பட்டார்.

(மொழிபெயர்த்தவர் குறிப்பு: இன்று-1918ஆம் வருஷம் ஜூலை, 8-ந் தேதி திங்கட்கிழமை யன்று, நான் இந்தச் சரித்திரத்தில் இப் பகுதியிலுள்ள இவ் வரிகளை எழுதிக் கொண்டிருக்கையிலே ஆங்கிலேய ராஜாங்கத்தார் "மாண்டேகு – செம்ஸ்போர்ட்" சீர்திருத்த சிபார்சுகள் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகளைத் தேசத்தார் வெறுத்துத் தள்ளுவார்க ளென்பதில் ஸந்தேஹமில்லை. ஏனென்றால், இன்றுவரை நாம் மாத்திரமே யன்றி ஆனிபெஸான்ட்

முதலிய ஐரோப்பியப் பண்டிதரும் பெயர்கூடக் கேட்டிராத ஜெக்கோ - ஸ்ளவ், யுகோஸ்லாவ் முதலிய ஜாதியார்களுக்கும் பெல்ஜியம் தேசத்தாருக்கும் ஆபிரிகாவில் ஜெர்மானியரின் அன்ய ஆட்சியால் வருந்தும் பல நீகிரோப ஜாதியாருக்கும், பூமண்டல முழுமைக்குமே, ஸ்வராஜ்யம் ஸம்பாதித்துக் கொடுக்கும்வண்ணமாகவே இக் கொடிய கொடிய, கொடிய போர் நடைபெற்று வருகிறதென்று லாயிடு ஜ்யார்ஜ் முதலிய ப்ரிட்டிஷ் மந்திரிகளும், அமெரிக ஜனாதிபதி வில்ஸனும் திரும்பத் திரும்பத் திரும்பத் திசைகளெல்லாம் செவிடுபடும்படி ஓலமிட்டு வருகையிலே, பாரத தேசத்தார் இப் போரில் உயிர்களை லக்ஷக்கணக்காகச் சிந்தியும், பணத்தைக் கோடிக் கணக்காக வாரிக் கொடுத்தும் செய்து வரும் பேருபகாரங்களுக்குக் கைம்மாறாக இந்த ஈனத்தனமான சிபார்சுகள் செய்ய முற்பட்ட மந்த்ரி மாண்டேகுவின் சித்த வற்றுதலை நினைத்து வருத்தப்படுகிறோம்.

இந்த தரித்ர சிபார்சுகளை ப்ரகடனம் செய்வதற்கு முன்னாகவே ஜனங்களிடம் அவற்றைத் தூக்கிப் பேசி ஆதரிப்பதாக ஆங்கிலேயரிடம் வாக்குக் கொடுத்து விட்டதாகக் கூறப்படும் மிதவாதிகளின் கூட்டத்தில் இப்போது அக்ர கண்யராக சோபிக்கும் ஸுரேந்தர்நாத் பானர்ஜி பண்டை நாட்களில் ஸ்வராஜ்ய விஷயத்தில் காட்டிய தாகத்தை யோசனை பண்ணும்போது தேச பக்தியை, மரண ஸமீபமான காலத்தில் தளர விடுவோருடைய பேதமையைக் கருதி என்னுள்ளம் மிக வருந்துகிறது. இது நிற்க.)

மேற்படி 1904 இருபதாங் கூட்டத்து முதல் தீர்மானத்தை ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய அய்யர் ஆதரித்துப் பேசினார். அப்போதவர்:

"இந்தியர்களின் நிலைமை 1833-ல் இருந்ததைக் காட்டிலும் இப்போது மிகக் கேடெய்தி விட்டது. மஹாராணி கொடுத்த வாக்குறுதிகளை லார்ட் லிட்டன் குடில தந்திரங்களால் பங்கப்படுத்தினார். லார்ட் கர்ஸனோ 1858ஆம் வருஷத்தில் மஹாராணி விளம்பரத்தில் சொல்லப்பட்ட ஆட்சி முறையும், கொள்கைகளும் ப்ரிட்டிஷ் ஆட்சி முறைக்கும்

கொள்கைகளுக்கும் பொருந்தியன அல்லவென்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். நமக்குச் சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்வதந்த்ரங்கள் நாம் எவ்வகையாலும் காக்கவேண்டும், அங்ஙனம் காக்குமிடத்து இங்கிலாந்து மாத்திரமே யன்றி உலகத்திலுள்ள தேசத்தாரனைவருமே பாரத நாடு விடுதலை பெறுதல் அவசிய மென்று கூறும்படி வேலை செய்ய வேண்டும்"

என்றார்.

ஸ்ரீ அப்துல் காஸிம் என்பவர் ஜன ஸபையின் விஷயத்தில் ஹிந்து - மஹமதியர்களுக்குள்ளே பரிபூர்ணமான ஐக்ய உணர்ச்சியுள தென்பதை விளக்கிக் கூறினார்.

இரண்டாந் தீர்மானம் கல்வி ஸம்பந்தமானதும் இந்தியாவில் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை யுடையது. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுமிடத்தே கரந்தீகர் என்பவர் பின்வருமாறு கூறினார்:

"ஜப்பான் காட்டிய வழியை நாம் பின்தொடர்ந்து செல்ல வேண்டும்; ஜனங்களுக்கு விவசாய சாஸ்த்ர பயிற்சி தருதல் மிகவும் அவசியம். அயர்லாந்தின் கைத்தொழில்களை ஆங்கில வியாபாரிகளின் நலத்தைக் கருதிக் கொலை செய்து விட்டதுபோலவே இந்தியாவின் கைத்தொழில்களையும் ஆங்கிலேயர் கொன்று விட்டார்கள்"

என்றார்.

முன்காலத்து ஸ்வதேசி ராஜாக்கள் இனாம் கல்வி கொடுத்து ஜனங்களைக் காப்பாற்றினார்க ளென்ற விஷயத்தை டாக்டர் H.S. கௌர் என்பவர் எடுத்துக்காட்டி இக்காலத்தில் ஆங்கிலேய அதிகாரிகள் ஜனங்களுக்குள்ளே உயர்ந்த ரகக் கல்வி பரவாமல் தடுப்பதற்குரிய வழிகள் செய்து வருவதைக் கண்டனம் புரிந்தார்.

ஜனங்களின் பரிதாபகரமான வறுமையைப் பற்றிய மூன்றாந் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து பேசுகையிலே R.N. முதோல்கார்:

> "ப்ரிட்டிஷார் வரும்போது இந்நாட்டில் அராஜகமும் துஷ்ட ஆட்சியும் இருந்தன வென்பது மெய்தான். எனிலும் இப்போதிருப்பது போன்ற வறுமை கிடையாது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரும் பின் ஏற்பட்ட கவர்ன்மெண்டாரும் ஒருங்கே தடைத் தீர்வைகளால் நாட்டுக் கைத்தொழில்களை நாசம் பண்ணி விட்டார்கள். எனவே ஜனங்களுக்கு விவசாயமே முக்யத் தொழிலாயிற்று. கைத்தொழில் செய்து வந்த கூட்டத்தா ரெல்லாரும் நிலத்தின்மீது போய் வீழ்தல் அவசியமாய் விட்டது"

என்றார்.

தென் ஆப்ரிகாவில் நம்மவருக்குச் செய்யப்படும் அவமானங்களையும் கொடுமைகளையும் குறித்து அங்கிருந்து வந்த மதன்ஜித் என்பவரும், பருச்சா என்பவரும் தமது சொந்த அநுபவங்களைக் காட்டிப் பேசினர். (ஐந்தாந் தீர்மானத்தைக் காண்க.) போயர் யுத்தத்தின்போது அங்கு குடி ரணவைத்யராகச் சென்றிருந்த பண்டித முன்ஜேயுக் அவ் விஷயத்தை ஆதரித்துப் பேசினார்.

பத்தாம் தீர்மானம் எல்லைப் புறத்தே படையெடுத்துச் செல்வதையும்; விசேஷமாகத் திபெத்து விவகாரங்களையும் குறித்தது.

அதை ஸ்ரீமான் N.A. வாடியா ஆதரித்துப் பேசினார். அப்போதவர்:

> "ஆங்கிலேயரின் கால் படாதபடி திபெத்து நாட்டின் சுவாதீனத்தைக் காக்கும் பொருட்டாக அந் நாட்டு விவசாயிகள் மகா தீர்த்துடன் போர் புரிந்தனர்.
>
> அவர்களுடைய பரிசுத்தமான ஸ்வதேச பக்தியும் ஸ்வதந்த்ராபிமானமும், அபாயத்தில் இகழ்ச்சியும், மரணத்தில் நிர்பயமும், புராதன, நவீன சரித்திரங்களில் புகழ்ச்சி செய்யப்பட்ட வேறெந்த வீர ஜாதியாருக்கும் பிறபட்டதன்று"

என்றார்.

தீர்மானங்கள்

1. முதல் தீர்மானம்:

ராஜாங்க உத்தியோகங்களில் இந்தியரை நியமித்தல்

ராஜாங்க உத்தியோகங்களில் உயர்தரப் பதவிகளில் இந்தியர்களை நியமிக்கும் விஷயத்தைக் குறித்து 1904 மே 24-ந் தேதி தீர்மானத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் கூறி யிருக்கும் கொள்கைகளும் ராஜ்ய நீதியும், 1833ஆம் வருஷத்து பார்லிமெண்ட் சட்டத்திலும், 1858ஆம் வருஷத்து மஹாராணி ஸ்ரீமுகத்திலும் சொல்லப்பட்ட வழிகள் முரண்பட்டனவென்று இந்த ஜன சபை அபிப்ராயப்படுகிறது.

இந்த தேசத்து ஜனங்களுக்கு மஹாராணி ப்ரமாண பூர்வமாகச் செய்த வாக்குறுதிகளை வ்யாக்யாநத்தால் அழித்துப் பேசி, ராஜரீக விசாரணைக் கூட்டத்தாரால் விஷய முழுதையும் ஜாக்கிரதையுடன் ஆராய்ச்சி செய்த பின்பு நிச்சயிக்கப்பட்ட ஏற்பாடுகளினின்று நழுவிவிட (லார்ட் கர்ஸன்) செய்த யத்தனத்தை இந்த ஜன ஸபை மரியாதையுடன், ஆனால் அழுத்தத்துடன் கண்டிக்கிறது.

2. ராஜாங்க உத்தியோகத்தின் மேற் கிளைகளில் இந்தியரை அதிக விஸ்தாரமாக நியமிப்பதே இப்போது பொருள் நிலையிலும் ஆட்சி முறையிலுமுள்ள தீங்குக்கெல்லாம் உண்மையான மருந்தென்று இந்த ஜன சபை அபிப்ராயப் படுகிறது.

இந்தியாவில் உத்தியோகங்கள் வஹிப்பதற்குரிய போட்டிப் பரீட்சைகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலத்தில் நடத்துவதற்கனுகூலமாக 1893 ஜூன் 2-ந் தேதி காமன்ஸ் (பார்லிமெண்ட்) ஸபையில் செய்யப்பட்ட தீர்மானத்தை உடனே நிறைவேற்ற வேண்டுமென்ற முந்திய கூட்டங்களின் கருத்தை இந்த ஸபை மீட்டும் வற்புறுத்துகிறது.

பாரதக் குடியாட்சி உத்தியோக மண்டலத்தைப் புதிதாகச் சமைப்பதே இந்த விவகாரத்துக்கு ஒரே திருப்திகரமான தீர்ப்பென்றும், அம் மண்டலத்தை அதிகார விபாக முறைப்படி மாற்றிச் சமைக்க வேண்டுமென்றும், இதனிடையே அதன்

நீதியதிகாரங்களை ஒரு பகுதி சட்டப் பயிற்சி யுடையோருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் தனக்குள்ள உறுதியான கொள்கையை இந்த ஜன ஸபை மீட்டும் பதிவு செய்கிறது.

3. இந்தியாவில் பெரும்பான்மையான மாகாணங்களில் மாகாண உத்தியோகங்களுக்குரிய போட்டிப் பரீட்சையை ஒழித்து விட்டதுபற்றி இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது. கவர்ன்மெண்டார் தாமே நியமிப்பதென்ற முறைமை இந் நாட்டின் விசேஷ நிலைமைகளால் அதிகாரிகளின் தயவை யனுசரித்து மாத்திரமே நடைபெறும் நியமன முறையாக இழந்து விடுமென்ற விஷயம் பூர்வானுபவத்தால் நன்கு ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் தகுதியற்ற மனிதர் உத்தியோகம் பெற நேர்ந்து ஆட்சி யொழுங்கு கெடுகிறது.

மேலும், இதனின்றும் இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் வஹிக்கும் திறமையில்லை யென்ற அநியாயமான பழிச்சொல்லுக்கிட முண்டாகிறது. ஆதலால் மாகாண உத்தியோகங்களுக்குரிய போட்டிப் பரீக்ஷைகளை ஒழித்து விட்ட இடங்களி லெல்லாம் அவற்றைத் திரும்ப உயர்ப்பிக்கும்படி இந்த ஜன ஸபை இந்தியா கவர்ன்மெண்டாரை மரியாதையுடன் வற்புறுத்துகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:

1. கல்வி – தொழிற் கல்வியும், பொதுக் கல்வியும்

இந்தியா கவர்ன்மெண்டாரின் சென்ற மார்ச்சு மாதத் தீர்மானத்தில் ஆரம்பக் கல்விக்கு அதிகப் பணம் செலவிடுவதாக வாக்களித்திருப்பது கொண்டும், அன்ய தேசங்களில் போய்த் தொழிற் கலைகளும் கைத்தொழில்களும் பயின்று வரும்படி பத்துப் பேருக்கு உபகாரச் சம்பளங்கள் ஏற்பாடு செய்திருப்பது கருதியும் அவர்களுக்கு இந்த ஜன ஸபை நன்றி தெரிவிக்கிறது. ஆயினும் உயர்தரக் கல்வி விஷயத்தில் கவர்ன்மெண்டார் அனுசரித்து வரும் பிற்போக்கான வழியைப் பற்றிச் சென்ற வருஷத்தில் செய்யப்பட்ட கண்டனையை இந்த ஜன ஸபை மீண்டும்

வற்புறுத்துகிறது. இம் முறையால் ஸர்வ கலா சங்கங்களின் பரிபாலன கணங்கள் உத்யோகஸ்தரின் வசமாய்விடும். ஸர்வ கலா ஸங்கக் கல்வியின் எல்லை பொதுவாக வரையறைப்படும்.

இப்போது ஆண்டுதோறும் ராஜாங்கத்தாருக்குப் பெருந் தொகைகள் மிச்சப்படுவதைக் கருதிப் பொதுப் பணத்தினின்றும் கல்விச் செலவுக்கு எப்போதைக் காட்டிலும் அதிகத் தொகை பகுத்துக் கொடுத்தல் ராஜாங்கத்தாரின் தெளிந்த கடமை யென்ற தன் அழுத்தமான கொள்கையை இந்த ஜன ஸபை மீண்டும் தெரிவிக்கிறது. எங்ஙனமெனில், பொது ஜனங்களிடையே ஆரம்பக் கல்வியை அதிக விஸ்தாரமாகப் பரப்பவேண்டும். கல்வியை இனாமாகவும் கட்டாயமாகவும் செய்ய வழி தொடங்க வேண்டும்.

2. கைத்தொழிற் பயிற்சியிலும் சாஸ்த்ரோக்தமான விவசாயத்திலும் பயிற்சி செய்வித்தற் குரிய தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. ஸர்க்கார் கலாசாலைகளையும் உயர்தரப் பாடசாலை - களையும் உண்மையாக திருஷ்டாந்த ஸ்தாபனங்களாக்கும் பொருட்டாக அவற்றில் தக்க ஆட்களை நியமித்து நல்ல தயாரிப்புகள் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. ஸம்பூர்ணமான தயாரிப்புடன் நாட்டில் மத்ய (ஸ்தல மொன்றில்) ஸர்வ கர்ம வித்யாசாலை குறைந்த பக்ஷம் ஒன்றேனும் ஸ்தாபிக்க வேண்டும். வெவ்வேறு மாகாணங்களிலும் சிறிய கைத்தொழிற் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த ஸபை கருதுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:

பொருள் நிலைமை

இந்த நாட்டு ஜனங்களின் பரிதாபகரமான வறுமைக்குப் பெரும்பான்மை காரணங்களாவன: பல வருஷங்களாக இந்த நாட்டிலிருந்து செல்வத்தை வற்றடித்துக் கொண்டு போவதும்; உள்நாட்டுக் கலைகளும் கைத்தொழில்களும் அழிவுற்றதும்; மித மிஞ்சிய நிலத்தீர்வைத் திட்டமும்; ஆட்சி முறையின் அளவு கடந்த செலவுமே யாகுமென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

அதற்குரிய பிற நிவாரணங்களினிடையே பின்வருவன வற்றையும் இந்த ஜன ஸபை சிபார்சு செய்கிறது:

1. முன் தீர்மானத்தில் குறிப்பிட்டபடி கவர்ன்மெண்டார் கல்விக்கு அதிக ஸஹாயம் செய்ய வேண்டும்.

2. சாசுவதத் திட்டம் ஏற்படுத்த வேண்டும். (1902 ஆமதாபாத் - 18ஆம் கூட்டம் 3ஆம் தீர்மானம்; (3) கிளை)

3. ராஜாங்க உத்யோகங்களின் உயர்தரக் கிளைகளில் அதிகத் தொகையுள்ள இந்தியர்களை நியமிக்க வேண்டும்.

4. நான்காந் தீர்மானம்:

விவசாயிகளின் கடன்பட்ட நிலை

இந்த நாட்டு விவசாயிகள் பயங்கரமாகக் கடனில் முழுகி யிருப்பதையும், பஞ்சம் தோன்றிய மாத்திரத்திலே அவர்களில் பெரும் பகுதியோர் ராஜாங்க உதவியை நாடுதல் அவசியமாதலையும் கருதி இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள சில கிராமங்களை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்கொண்டு, அவற்றின் ஸ்திதியைக் குறித்து ராஜாங்கத்தார் ஜாக்ரதையான விசாரணை நடத்தவேண்டு மென்று லண்டனிலுள்ள பஞ்சச் சங்கத்தார் சொல்லிய யோசனையை இந்த ஜன ஸபை மீண்டும் ஆதரிக்கிறது.

5. ஐந்தாந் தீர்மானம்:

குடியேற்ற நாடுகளில் இந்தியர்

1. ஆஸ்த்ரேலியாவுக்குப் போகும் இந்தியரின் விஷயத்தில் ஆஸ்த்ரேலிய கவர்ன்மெண்டார் (முந்திய) நிபந்தனைகளில் (சிலவற்றை) நெகிழ்ச்சி (செய்து) கட்டளை பிறப்பித்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி யடைகிறது. எனிலும் சக்ரவர்த்தியின் குடியேற்ற நாடுகளில் சக்ரவர்த்தியின் ப்ரஜைகளாகிய இந்தியர் கஷ்டமான நிபந்தனைகளுக் குட்படுத்தப்படுவதையும், ப்ரிட்டிஷ் குடிமைக்குரிய ஸாமான்ய உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுவதையுங் கண்டு இந்த ஸபை ஆழ்ந்த வருத்த மடைகிறது.

2. விசேஷமாக, த்ரான்ஸ்வாலில் முன்னிருந்த போயர் கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு விரோதமாகச் செய்த சட்டங்கள் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அதிகக் கொடிய ரூபத்தில் வற்புறுத்தப்படு மென்று பயமுறுத்துவதை இந்த ஜன ஸபை மிகவும் அழுத்தமாகக் கண்டனம் செய்கிறது.

சக்ரவர்த்தியின் இந்தியக் குடிகளைப் போயர்க் குடியரசு ராஜாங்கத்தார் அநியாயமாக நடத்திய செய்கை ஸமீபத்தில் நடந்த போயர் சண்டைக்கு ஒரு காரணமென்று முரசடிக்கப்பட்டதையும், தென் ஆப்ரிகாவிலுள்ள இந்தியக் குடியேற்றத்தாரின் (ஸர்வ) ஸம்மதமான ராஜ பக்தியையும், சண்டையின்போது அவர்கள் செய்த உதவியையும் கருதி அந்த "மகுட"க் குடியேற்ற நாட்டில் குடியேறி வாழும் இந்தியர்களை நியாயமாகவும் ஸமமாகவும் நடத்தும்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டார் வற்புறுத்த வேண்டுமென்று இந்த ஜன ஸபை ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

3. இந்த ஸம்பந்தத்தில், பாரதக் குடியேற்றத்தாரின் அனுகூலங்களுக்குச் சார்பாக இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் உறுதி கொண்டு நிற்பது பற்றி அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றி செலுத்துவதுடன், த்ருப்திகரமான தீர்ப்புக் கிடைக்கும் வரை அவர்கள் தம்முடைய யத்தனங்களை நெகிழ விட மாட்டார்களென்று இந்த ஜன ஸபை உண்மையுடன் நம்புகிறது.

6. ஆறாந் தீர்மானம்:

ஜெ. என். தாத்தா, வில்லியம் டிக்பி (Digby)
இவ் விருவரின் மரணம்

ஜெ. என். தாத்தா இறந்துபோனது பற்றி இந்த ஜன ஸபை தன் ஆழ்ந்த துயரத்தைப் பதிவு செய்கிறது. பாரத நாட்டின் தொழிலபிவிருத்திக்காக அவர் செய்த பெரிய உதவிகளையும், அவருடைய நாகரிக மிகுந்த லோகோபகார சிந்தனையையும் தேசாபிமானத்தையும் இந் நாட்டினர் எக்காலத்திலும் நன்றி யறிவுடன் நினைத்திருப்பார்கள்.

வில்லியம் டிக்பி (*Digby*) இறந்த விட்டது பற்றியும் இந்த ஜன ஸபை தன் ஆழ்ந்த துயரத்தைப் பதிவு செய்கிறது. இவர் மரணத்தால் பாரத ஜனங்கள் தமது கக்ஷியில் உண்மையான பக்தி கொண்ட வக்கீ லொருவரை இழந்து விட்டனர்.

7. ஏழாந் தீர்மானம்:

இந்தியா மந்திரியின் சம்பளம்

லண்டனிலுள்ள இந்தியா மந்திரியின் கார்யஸ்தலச் செலவை இந் நாட்டுத் தீர்வையின்மீது சுமத்தும் அநீதியை இந்த ஜன ஸபை கண்டிக்கிறது.

குடியேற்ற மந்திரியின் கார்யஸ்தலச் செலவில் ஒரு பகுதியேனும் குடியேற்ற நாடுகளைச் சாரவில்லை. இந்தியா மந்திரியின் சம்பள முழுதையும் இங்கிலாந்தின் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:

ஸர்க்கார்த் தீர்வைப் பணத்தில் மிச்சத் தொகைகள்

1. சென்ற ஆறு வருஷங்களில் சர்க்காருக்கு மீட்டு மீட்டும் பெருந் தொகைகள் மிச்சப்பட்டு வருகின்றன. இவை மொத்தம் சுமார் 200 லக்ஷம் பவுன் ஆகின்றன. ஜனங்களின் செல்வ மிகுதியால் இவை உண்டாயின அல்ல. அதற்கு மாறாக நாட்டின் தீர்வை மட்டம் அவசியத்துக்கு மேலே மிகவும் உயர்ந்திருப்பதைக் குறிப்பிடுகின்றன. எங்ஙனமெனில், ரூபாயின் க்ருத்ரிம மதிப்பாலும், அதினின்றும் இந்தியா ராஜாங்கத்தார் இங்கிலாந்துக் கனுப்பும் தொகைகளில் வருஷத்துக்கு முந்நூறு அல்லது நானூறு லக்ஷம் பவுன் மிச்சப்படுவதனாலுமே முழுதும் அல்லது பெரும்பாலும் மேற்படி மிச்சத் தொகைகள் ஸாத்யமாகின்றன.

2. ராஜாங்கத்தாரின் செலாவணி முறைமையால் அதிகக் கஷ்ட மடைந்திருக்கும் வகுப்பினருக்கு உதவி செய்யும் பொருட்டாகவும், வருஷந்தோறும் பெரிய மிச்சங்கள் ஏற்படுவதினின்றும் கவர்ன்மென்டாருக்குச் செலவை

அதிகப்படுத்த வேண்டு மென்ற இச்சை யுண்டாகக் கூடியதைத் தடுக்கும் பொருட்டாகவும் இந்த ஜன ஸபை பின்வரும் உபாயங்களைப் பலமாக வற்புறுத்துகிறது:

(1) உப்புத் தீர்வையை இன்னுங் குறைக்க வேண்டும்.

(2) விவசாயிகள் தொடர்ச்சியாகப் பல வருஷங்கள் பஞ்சத்தில் வருந்தும் மாகாணங்களில் ராஜாங்கத்தார் விதிக்கும் நிலத் தீர்வையைக் குறைத்துவிட வேண்டும்.

(3) பஞ்சுச் சரக்குகளின் மீதுள்ள சுங்கத் தீர்வைகளை ஒழித்துவிட வேண்டும்.

(4) அவ்விதமாகக் குறைக்கும் வரை மிச்சத் தொகைகளில் ஒரு பகுதியை சாஸ்த்ர, விவசாய, கைத்தொழிற் கல்விகளை அபிவிருத்தி செய்தல்; வைத்ய ஸௌகர்யங்களை மிகுதிப்படுத்தல் முதலிய ஜனங்களுக்கு பெரு நன்மை தரக்கூடிய வழிகளில் உபயோகப்படுத்த வேண்டு மென்றும்; மீதியைப் பஞ்சத்தாலும் வருஷந்தோறும் மீண்டு வரும் 'ப்ளேக்' நோயாலும் மிகுந்த பண முடைப்பட்டுப் போயிருக்கும் ஸ்தல ஸங்கத்தாரும் நகர ஸபையாரும் அவஸரமான சுகாதாரத் திருத்த முறைகளைக் கைக்கொள்ளும்படியாகவும் உள்நாட்டு யாத்திரைக் குரிய ஸௌகர்யங்களை அபிவிருத்தி செய்யும்படியாகவும் உதவி செய்வதில் விநியோகப்படுத்த வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை வற்புறுத்துகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:

இந்தியர்களுக்குப் பார்லிமெண்டிலும் இந்தியச் சட்டஸபைகளிலும் ப்ரதிநிதிகள்

இந் நாட்டினர் தந் தேச ஆட்சியிலும் விவகாரங்களை மேல் நடத்துவதிலும் அதிக வாக்குரிமை பெறும்படி செய்வதற்குரிய காலம் வந்து விட்டதென்று இந்த ஜன ஸபை கருதுகிறது. எங்ஙனமெனில்;

1. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்தினின்றும் குறைந்த பக்ஷம் ப்ரிட்டிஷ் "காமன்ஸ்" ஸபைக்கு இரண்டு ப்ரதிநிதிகள் அனுப்பும் ஸ்வதந்த்ரம் கொடுக்க வேண்டும்.

2. வைஸ்ராய் சட்டசபையையும், மாகாண சட்ட ஸபைகளையும் விசாலமாக்கி அவற்றிலுள்ள உத்தியோகஸ்த ரல்லாத அங்கத்தாரின் தொகையை அதிகப்படுத்தி, அவற்றின் விசாரணைக்கு வரும் பண விவகாரங்க ளனைத்திலும் ஸபையை வகுக்கும் அதிகாரம் அவர்களுக்குத் தர வேண்டும். அந்தந்த ராஜாங்கத் தலைவருக்குத் "திரஸ்கார சக்தி" கொடுக்கலாம்.

3. லண்டனிலுள்ள இந்தியா மந்திரி ஸபையிலும் இந்தியா கவர்ன்மெண்டார், பம்பாய், மதராஸ் கவர்ன்மெண்டாரின் நிர்வாஹ ஸபைகளிலும் அங்கத்தாராக இந்திய ப்ரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இவர்கள் சட்டஸபைகளின் தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகளால் குறிக்கப்பட வேண்டும்.

10. பத்தாந் தீர்மானம்:

திபெத் விவகாரங்களும் வெளிநாடுகளின்மீது படை யெடுத்தலும்

வெளிநாட்டார் படை கொண்டு வருவதை எதிர்த்தடிக்க நேர்ந்தாலன்றி மற்றப்படி பார்லிமெண்டாரின் பூர்வானுமதி யின்றி இந்தியாவின் தீர்வைப் பணத்தை இந்தியாவின் சட்ட எல்லைகளுக்குப் புறம்பே செலவிடக் கூடாதென்ற 1858-ம் வருஷச் சட்டத்தின் கருத்தை, ஸமீப காலத்தில் நடைபெற்ற திபெத் படையெழுச்சி விஷயத்திலே அதிகாரிகள் பங்கப்படுத்தி விட்டனர்.

கேட்கும் செலவுக்கு அனுமதி கொடாதிருத்தல் பார்லிமெண்ட் ஸபையாருக்கு ஸாத்யப்படாமற் போகுந் தருணம் வரை கவர்ன்மெண்டார் அதனை ராஜரீகத் தூதுக் கூட்டம் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

இதனால் சட்டப்படி இந்தியாவின் தீர்வைப் பணத்துக்குள்ள காவலை அநியாயமாக பேதித்து விட்டனர். ஸாம்ராஜ்யக் கொள்கையை ஓங்கச் செய்யுமாறு நடைபெற்ற இப் படை யெழுச்சிச் செலவில் ஒரு பகுதிகூட ஸாம்ராஜ்யப் பொக்கசத்தினின்றும் கொடுக்க முடியாதென்று காமன்ஸ் ஸபையார் மறுத்துவிட்டது பற்றி இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது. மேலும், இந்த அநீதியை ஜன ஸபை

பலமாகக் கண்டனஞ் செய்வதற்கு விசேஷ காரணம் யாதெனில், திபெத் படை யெழுச்சியானது பொதுவாகப் பிற நாடுகளின் மீது படை யெடுத்துச் செல்வதாகிய கொள்கையில் ஓரம்ச மாத்திரமே யென்ற பயமேயாம். இதனுடன் ஆப்கனிஸ் - தானத்துக்கும் பாரஸீகத்துக்கும் செல்லும் தூதுகளை சேர்த்துக் கணிக்கும்போது இந்தியா அன்னிய தேசச் சிக்கல்களில் அகப்பட்டு விடுமென்ற பயம் விளைகிறது. இதனால் பாரதத் தீர்வையின் மீது சுமக்கமுடியாத பாரமேற்படும். கடைசியாக இது தேசத்தின் சிறந்த நலங்களுக்குப் பெருங் கேடாக முடியுமென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:

போலீஸ் திருத்தம்

போலீஸ் விசாரணைக் கூட்டத்தின் அறிக்கை ப்ரசுரமாய் இப்போது இரண்டு வருஷங்களாயின. அதன் சில பகுதிகள் உத்யோக ரஹஸ்யச் சட்டத்தின் அதிகார வரம்புக்குட்படாத பத்திரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி யிருந்தும் அந்த அறிக்கையை ராஜாங்கத்தார் பொது ஜனங்களுக்குத் தெரியாமல் மூடி வைத்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை ஆழ்ந்த வருத்தப்படுகிறது.

இந்த தேசத்துப் போலீஸ் படையை முற்றிலும் சீர்திருத்துதல் மிகுந்த அவஸரமாதல் கருதியும்; இவ் விவகாரத்தை திருப்திகரமாக முடிவு செய்வதில் பொது ஜனங்கள் பெரிதும் சம்பந்தப்பட்டிருப்பது கருதியும்; அதிகாரிகள் சீர்திருத்த யோசனை தயார் செய்யத் தொடங்கு முன்னாகவே பொது ஜனங்கள் தம்முடைய கருத்துக்களை வெளியிடும்படி ஏராளமான ஸமய மேற்படுத்திக் கொடுத்தல் வெளிப்படையாக அவசியமாதல் கருதியும்; (கடைசியாக) இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் அவ் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்து முடிந்த பிறகு ஜனங்கள் சொல்லும் ஆக்ஷேபமெல்லாம் விழலாகு மென்பது கருதியும்; இன்னும் அதிகத் தாமஸ மில்லாமல் விசாரணைக் கூட்டத்தின் அறிக்கையை பிரசுரம் செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

12. பன்னிரெண்டாம் தீர்மானம்:

ராணுவச் செலவு

1. தேசத்தின் ராணுவச் செலவில் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கனத்த மிகுதிகள் ஏற்பட்டு வருவது கண்டு இந்த ஜன ஸபை மிகுந்த திகிலடைகிறது. இப்போதுள்ள ராணுவச் செலவு இந்தியாவினால் பொறுக்கும் திறமன்று.

2. ராணுவச் செலவு ஸம்பந்தமாக இந்தியாவின் தீர்வைப் பணத்தின் மீது இன்னும் அதிகச் சுமைகள் ஏற்ற வேண்டுமென்ற புதிய யோசனைக ளனைத்தும் இந்த ஜன ஸபைக்கு மனக் கலக்கந் தருகின்றன. லார்ட் கிச்சனர் யோசனை செய்யும் படைத் திருத்தச் செலவை இந்தியாவின் பொக்கசத்தின்மீது சார்த்துதலை இந்த ஸபை பலமாகக் கண்டிக்கிறது.

3. பாரத ராணுவச் செலவில் ஒரு பகுதியை (ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து) கொடுக்கும்படி பார்லிமெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டு மென்பது. 1903-சென்னை-19ஆம் கூட்டம்; 7ஆம் தீர்மானம்.

13. பதிமூன்றாந் தீர்மானம்:

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்

1902-ஆமதாபாத்-18ஆம் கூட்டம்-12ஆம் தீர்மானம்

14. பதினான்காந் தீர்மானம்:

வங்காள விபாகம்

வங்காளத்தைப் பிளப்பது ஸம்பந்தமான எவ்வித ஆலோசனைகளையும் இந்த ஜன ஸபை அழுத்தமாகக் கண்டிக்கிறது.

வங்காளி ஜாதியைத் துண்டுகளாகப் பிளப்பதினின்றும் அதன் ஸமாஜிக, ஞான, திரவிய அபிவிருத்திக்கும் பலமான தீங்கு நேருமாதலாலும், அம் மாகாணத்தார் நெடுங்காலமாக அனுபவித்து வரும் பலவிதமான சட்ட ஸ்வதந்தரங்கள், உரிமைகள் முதலியன நஷ்டப்படுமாதலாலும் இந்தியாவில்

தீர்வை செலுத்துவோரால் தாங்க முடியாத, பெருஞ் செலவை இந்நாட்டின் மீது சுமத்துமாதலாலும் அந்த யோசனையைக் கண்டு ஜனங்கள் பேரச்சங் கொள்ளுகின்றனர்.

வங்காள விபாகம் அவசிய மென்பதற்கு எவ்விதமான காரணமும் காட்டப்படவில்லை. எனிலும் அம் மாகாணத்தைச் செம்மையாக ஆள்வதற்கு இப்போது சமைப்புற்றிருக்கும் ஆட்சி முறை போதாதென்று கருதப்படுமாயின் அதற்கு நிவாரணம் ஜில்லாக்களை வகுப்பதினின்றும் ஏற்படாது.

ஆட்சி வடிவத்தில் ஆழ்ந்த மாறுதல்கள் செய்ய வேண்டும். திருஷ்டாந்தமாக பம்பாய், சென்னை மாகாணங்களைப்போலே வங்காளத்துச் சின்ன கவர்னர் ஸ்தானத்தை நிர்வாஹ ஸபை சஹிதமான கவர்னர் ஸ்தானமாக மாற்றத் தகும்.

15. பதினைந்தாம் தீர்மானம்:

இங்கிலாந்துக்குத் தூதுவிடுதல்

இங்கிலாந்தில் "பெருஞ் சீட்டு" (நாடு முழுமையிலும் பொதுவாகப் பார்லிமெண்ட் ஸபைக்கு ப்ரதிநிதிகள் தெரிந்தெடுத்தல் - பொது எலெக்ஷன்) மிகவும் நெருங்கி வருவது கருதியும், இத்தருணத்தில் இந்தியாவின் வேண்டுதல்களை அங்குள்ள சீட்டாளிகள், அபேக்ஷகர் ஜனத் தலைவர்களுக்குக் கூறுதல் மிகவும் முக்கிய மாதலாலும், இந் நோக்கம் நிறைவேறுமாறு பெருஞ் சீட்டு நடைபெறுவதற்கு முன்னேயும், நடைபெறுங் காலத்திலும் இங்கிலாந்தில் இருக்கும்படி வெவ்வேறு மாகாணத்தாரால் நியமிக்கப்பட்ட நம்புதற்குரிய அனுபவஸ்தரான ப்ரதிநிதிகளை ஜன ஸபை அனுப்பவேண்டுமென்றும், இந்தத் தூதுக்கு வேண்டிய செலவுகளுக்காக ரூ. 30,000க்குக் குறையாத நிதி சேகரிக்க வேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:

பார்லிமெண்ட் தெரிந்தெடுப்பில் இந்தியாவுக் கனுகூலமான மெம்பர்கள்.

(1903-சென்னை-19ஆம் கூட்டம்-11ஆம் தீர்மானத்தில் உமேசசந்திர பானர்ஜியின் பெயரைக் கழித்துவிட்டுப் படிக்க)

17. பதினேழாந் தீர்மானம்:

ப்ரிட்டிஷ் ஸமிதிக்கு நன்றி

1. 1903-சென்னை-19ஆம் கூட்டம்-14ஆம் தீர்மானம்

2. ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுக்காக 700 பவுன் கொடுக்க வேண்டுமென்றும், அதன் பொருட்டாக ஜன சபையின் வெவ்வேறு வட்டத்தாரும் தத்தமக்குப் பகுத்துக் காட்டி தொகை செலுத்த வேண்டு மென்றும் இந்த ஜன சபை தீர்மானிக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:

ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்

வரும் வருஷத்துக்கு ஜன சபையின் பொதுக் கார்யதரிசியாக ஏ. ஓ. ஹ்யூமையும், துணைக் கார்யதர்சிகளாக தீ. எ. வாச்சாவையும், கோ. கி. கோகலேயையும் இந்த ஜன சபை மீட்டும் நியமிக்கிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:

ஜன ஸபையின் நிர்மாணம்

ஜன சபையின் நிர்மாண விஷயத்தைக் குறித்துப் பின்வரும் கனவான்கள் சேர்ந்த ஸமிதியார் அறிக்கை தயார் செய்யும்படி இந்த ஜன சபை நியமிக்கிறது (பெயர்கள் இங்கு குறிப்பிடவில்லை)

20. இருபதாந் தீர்மானம்:

அடுத்த கூட்டம்

பாரத ஜனசபையின் இருபத்தொன்றாந் கூட்டம் 1905 கிறிஸ்மஸ் நாளுக்கப்பால் பின்னே நிச்சயிக்கப்படும் தேதியில் காசிநகரத்தில் கூடவேண்டுமென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

21. உபசார ஸமிதிக்கும் அதற்கும் பல வகைகளில் உதவி புரிந்தோருக்கும் நன்றி.


22. அக்ராஸனபதிக்கு நன்றி.

அப்பால் அக்ராஸனபதியின் முடிவுரை.

இருபதாம் ஜன சபையின் சரித்திரம் முற்றிற்று.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

❖



பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

நல்ல - பழைய நூல்கள் பொது மக்களைச் சென்றடைய வழி செய்யும் பொருட்டு, தமிழக அரசு அறிமுகப்படுத்தி யுள்ள மறு பதிப்புத் திட்டத்தின்கீழ் வெளிவரும் நூல் பாரத ஜன சபை (காங்கிரஸ் மகாசபை சரித்திரம்) ஆகும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலிருந்து நூலின் இரு தொகுதிகளைப் பெற்று, இந் நூல் மறு பதிப்பாகப் பிரசுரம் செய்யப் படுகின்றது.

நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட காங்கிரஸ் சரித்திரத்தைப் புதுச்சேரியில் வாழ்ந்துவந்த பாரதியார் இனிய தமிழில் தெளிவாகவும், சுருக்கமாகவும் பாரத ஜன சபை என்ற தலைப்பில் எழுதி மொழிபெயர்த்து வழங்கினார். முதல் பதிப்பைச் சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு பிரசுரம் செய்தது.

இந்த நூலில் முதல் இருபது வருடங்களுக்கான காங்கிரஸ் சபையின் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது.

காங்கிரஸ் சபை எப்படி உருவானது, அந்தச் சபையின் இலட்சியங்கள் யாவை என்பனவற்றை விளக்கும் ஆவண நூல் இதுவாகும்.

ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்